பதினெட்டு புராணச்சுருக்கம்



நான்காம் பாகம்

மாம்பலம் குருகுல வெளியீடு

श्रीः

॥ श्रीमुखं ॥

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकर भगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटि पीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्र शेखरेन्द्र सरस्वती श्रीपादैः
अग्नियूर् यज्व वरिष्ठपुत्राय
श्री. श्रीवत्स सोमदेवशर्मणे क्रियते नारायणस्मृतिः ।

நம் எல்லோருக்கும் இஹ பர மேன்மைகளுக்கான ஸாதனங்களைப் போதிப்பவை புராணங்களே. அவைகளில் பொதிந்திருக்கும் உயர்ந்த கதைகளையும் தத்வங்களையும் ஸம்ஸ்கிருதபாஷை அறியாதவர்களும் உணர்ந்துகொள்ளும் படியாகத் தாங்கள் பதினெண்புராணச் சுருக்கமென்னும் தலைப்பில் கொஞ்சம் கொஞ்சமாய் நூல்களை வெளியிட்டுக் கொண்டு வருவதில் தற்போது **நான்காவது பாகம்** வெளிவந்திருப்பதை அறிந்து **மிகவும் ஸந்தோஷிக்கிறோம்.**

இக்கிரந்தத்தில் வராஹபுராணம், ஸ்காந்தபுராணம் இவைகளின் கதாபாகங்கள் சுருக்கமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. திதிகளின் மகிமை, முருகனுடைய சரித்ரம் முதலிய உத்தமமான விஷயங்கள் **அழகான தமிழ் நடையில்** வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

ஆஸ்திகர்கள் எல்லோரும் இவ்வுயர்ந்த கிரந்தத்தைப் படித்தும் கேட்டும் இதில் சொல்லப்பட்டுள்ள தர்மதத்வங்களை உணர்ந்து அனுஷ்டித்தும் ஸகல விதமான ச்ரேயஸ்களையும் அடைவார்களாக.

விஜய யாத்ராஸ்தானம்,
ஸ்ரீ காஞ்சிக்ஷேத்ரம்.
துர்முக பௌஷ பகுள ஏகாதசி.

நாராயண ஸ்ம்ருதி:

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்

4-வது பாக பதிப்புரை.

பகவான் வேதவ்யாஸர், பகவத்பாத பரமாசார்யாள், ஆஸ்திக்யம் நிறைந்த நமது சந்தாதாரர் ஆகியவர்களின் அநுக்ரஹத்தாலும், அன்பு ததும்பும் ஆதரவாலும் நான்காவது பாகமும் பூர்த்தியானது. கடக்க முடியாத கடலை முக்கால் பங்கு கடந்தாய் விட்டது. இதில் அதர்ம அரசாங்கத் தலைவரான கலிமகாராஜன் ப்ரதிபந்தக மெனும் தனது திருவிளையாடல்களைச் செய்து களித்தார். ஆயினும் தர்மதேவனின் ஸேனாதிபதிகளான முற்கூறிய மூவரும் முன்னே நின்று அறப்போரில் வெற்றிகண்டனர். ஆனால் வெற்றிகாண சிறிது தாமதமானது.

யதோ தர்ம: தத: கிருஷ்ண: யத: கிருஷ்ண: ததோ ஜய: || தர்மம் உள்ள விடத்தில் கண்ணனும், கண்ணனுள்ள விடத்தில் வெற்றியும் திண்ணமென்றார் வேதவியாஸர்.

நாளுக்கு நாள் நிமிஷத்திற்கு நிமிஷம் அரவத்தின் நஞ்சேபோல் அதர்மம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த பதினெண்புராண க்ஞாந யக்ஞத்தில் அதைப் பல வடிவமாகப் பார்க்கிறோம். எனினும் கிருஷ்ணும்சமான கிருஷ்ணத்வைபாயனரின் திருவடியையே சிக்கெனப் பிடித்தேன் என இதில் ஈடுபட்டோம்—ஈடுபடுகிறோம். கரை கண்ணுக்குத் தெரியும் நிலையில் இருக்கிறது. கடலைக் கடந்தவர் கால்வாயைக் கடப்பது எளிது எனினும் அங்குதான் கஷ்டம் ஏற்படும். அதை உங்கள் ஆதரவால் அகற்றலாம். கஷ்டத்திற் காளாக்காமல் காக்கக் கருணாமூர்த்தியான கடவுளை வேண்டுகிறோம்.

தர்ம வீரர்களின் தந தியாகத்தை வேண்டி பத்ரிகை மூலமாகவும் கடித மூலமாகவும் பிரார்த்தித்த போது காமதேனு வெனத்தகும் இரண்டொருவரே சிறந்த பதிலளித்தனர். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பக்தியால் அன்னவரைப் போலவே எவ்வளவு முறை எத்தினைபேர் என்ன நிர்பந்தம் செய்தாலும் தளராத மநத்துடனும் வாடாத வதநத்துடனும் சலிக்காமல் உதவி புரியும் ஸ்ரீ பி. ஜி. பால் கம்பெனி, காமகோடி கோசஸ்

தாநம் தலைவர் ஸ்ரீ குருபக்த சிகாமணி ஸ்ரீ நீலகண்டய்யர் உயர் குணத்தைக் கொண்டாடாமல் இருக்க முடியவில்லை.

ஸ்ரீ மடத்திற்கு நம்மாலும் ஆயாஸம் வேண்டாமென அங்கு பொருள் உதவி வேண்டாதது போல் இவருக்கும் ஆயாஸம் அளிக்கக்கூடா தென்றே நினைத் திருந்தோம். எனினும் ஸ்ரீ ஜகத்குருவின் படத்தைப் பலவகையாக அச்சிடும் அவரால்தான் இந்நூல் அழகுபடும் என அவர் களை நிர்பந்திக்க நேர்ந்தது. 3, 4, 5 ஆகிய மூன்று பாகங்களை அலங்கரிக்கும் ஸ்ரீ பரம ஆசார்ய படம் இவர் அன்பளிப்பே யாம். சில பாகங்களை அச்சிட பேபரும் தந்த அவர் உதவியை என்றும் மறப்பதற்கில்லை. நன்றி பல. வேதோக்தமான ஆசீர்வாதம் பல.

சந்தா தொகையை 20 ரூபாய் ஆக்கியதால் 20 ரூ. அளித்தவர் நன்கொடை அளித்ததாக வெளியிடவில்லை, 25 ரூபாய் அளித்தவர் சந்தாவிற்குமேல் 5 ரூபாய் அளித் தவர் ஆவர். ஆதலால் இம்முறை நன்கொடையாளர் பெயரையும் வெளியிடவில்லை. ஆனால் அவர்களது பெயர்களை எமது உள்ளப் புத்தகத்திலே நன்றியெனும் அழியா பொன் மை கொண்டு பொன்னெழுத்தால் எழுது கிறோம்.

இதற்கும் ஸ்ரீ முகமளித்து அருள் புரிந்த ஸ்ரீ ஜகத் குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய திருவடிகளில் ஸாஷ்டாங்க வந்தநங்களைப் பக்தி சிரத்தையுடன் ஸமர்ப்பிக்கிறோம்.

அருமையான சொற்களால் இத்தொண்டில் உத்ஸாகப் படுத்தியவர்களுக்கும், தன ஸஹாயம் செய்தவர்களுக்கும் மற்றும் பலவகையிலும் உதவி செய்துவரும் தீக்ஷாமங் கலம் சிரஞ்சீவி தீ. ரா. கணபதிக்கும், பலகடுமையான உத்தியோகத்திற் கிடையே நமக்கு வாக்களித்தபடி பல சந்தாதாரர்களைச் சேர்த்து கணிசமாகப் பொருள் தேடித் தரும் டில்லி நண்பர் ஸ்ரீமான்களான ஸ்ரீநிவாஸய்யர், S. சுந்தரேசபந்த் முதலியவர்களுக்கும் நன்றியுடன் பூர்ண ஆசிர்வாதமும் செய்கிறோம்.

பாம்பே பெங்களூர் திருச்சியிலிருந்து பலசந்தாதாரர் களைச் சேர்த்து உதவும் ஸ்ரீமான்கள் K. வைத்யநாதன்,

S. ராமச்சந்திரன், சங்கர நாராயணன், நமது பத்திரிகை காரியதரிசி சிரஞ்சீவி ந. சுப்ரமண்யன் ஆகியவர்களின் உதவி சிறந்தது. மறப்பதற்கில்லை. நன்றியுடன் ஆசீர்வாதமும் உரியதாகும்.

<u>முக்யமான குறிப்பு:</u> நேயர்களில் பலர் உப புராணங்களையும் சுருக்கமாக இதேபோல் வெளியிடவேண்டுமென எழுதும் கடிதம் நித்யம் வருகிறது. சிரமத்தை நோக்கும் பொழுது அதில் உத்ஸாஹம் உண்டாகவில்லை. ஆயினும் கடமையெனக் கருதி இதைப் "**புராணவாணி**" என்ற மாதப்பத்ரிகையாக 48 பக்கங்களில் இதில் விட்டுப் போன ஸ்காந்த கதைகள், துலா காவேரீ மஹிமை, உப புராணமிவைகளுடன் நமது வைதிக தர்ம வர்த்தனியில் வெளிவராத பல விஷயங்களையும் சேர்த்து வெளியிடலாமாஎன ஒரு உத்தேசம். அல்லது நமது பத்ரிகையிலேயே பக்கங்களை அதிகமாக்கி இதைப் பூர்த்தி செய்யலாமா? என்றும் யோசிக்கிறோம். இறைவன் அருள்படி நடக்கட்டும். விரும்புகிறவர் உடனே எழுதவும்.

எதிர்பார்த்த இடங்களில் ஸஹாயம் இல்லாததாலும் 18 புராணச்சுருக்கச் சந்தா நிறைய சேராததாலும் தயை செய்து சந்தாதாரர் மநமுவந்து அன்புடன் இந்த சிறந்த தர்மத்திற்கு **முடிந்தவரை ஒன்று இரண்டு ரூபாயாவது உதவவேண்டுகிறோம்.**

சாந்தாச்ரமம், குருகுலம்,
மாம்பலம், சென்னை-17.
13—2—57.

இங்ஙனம்,
ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா,
18-புராண ப்ரசாரகர்.

அரிய சில அபிப்ராயங்கள்.

1. **இந்தியன் எக்ஸ்ப்ரஸ் :** நமது ஹிந்து தர்மம் எனும் ரத்நங்கள் நிறைந்தபொக்கிஷம் பதினெண் புராணச் சுருக்கம். இதன் ஆசிரியர் சிலவற்றையே நமக்கு மாதிரி யாகக் கொடுத்திருக்கிருர். இதே நமக்கு மிக அபூர்வ மாகவும் ருசியாகவும் ஆச்சர்யகரமாகவும் இருக்கிறது. அசல் நூல் எவ்வளவு சிறந்ததாக இருக்கு மென்பதை இதிலிருந்து அறியலாம். சிவ ஸஹஸ்ரநாமம் மிக அரி யது. இதில் அதைச் சேர்த்து மிக மதிப்புள்ளதாகச் செய்திருக்கிருர் ஆசிரியர்.

2. **டாக்டர் V. K. வெங்கடேசன்**, சென்னை : நமது மதக் கருத்தை வெளியிடும் பதிநான்கு வித்யைகளையும் எல்லா தேசிய பாஷைகளிலும் வெளியிடவேண்டும். இத் தகைய தர்மத் தொண்டில் பரந்த மநப்பான்மையுடன் ஈடு பட ஸ்ரீ சர்மா முன்வந்தது நமது மதத்தின் பாக்யமே. புராணத்தின் மூலமாகவே மற்றவைகளைக் கற்க வேண்டும். இங்ஙனமே இந்துமத அடிப்படையான 14 வித்யைகளையும் வெளியிட போதிய தநம் சக்தி நீண்ட ஆயுள் அன்பர் ஸஹாயம் இவைகளை ஸர்வேச்வரன் இவருக்கு அளிப்பாராக.

3. **உதவி மந்திரிகள் நா. சீனிவாஸன் & S. சுந்த ரேச பந்த்**, டில்லி : மூன்ரும் பாகம் மற்ற இரண்டு களை விட மிகவும் நன்ருக இருக்கிறது. இத்தகைய உத்தம தர்மத்தொண்டு செய்யும் தங்களுக்கு பதில் உதவி செய்ய எவரால் இயலும்? தமிழறிந்த ஆஸ்திக உலகம் தங்களுக்குக் கடமைப் பட்டிருக்கிறது.

4. ஸ்ரீ **S. சங்கரநாராயணன்**, திருச்சி: ஆக்நேய புராணத்தில் கூறிய கீதாஸாரம் என்ற சுலோகங்களை விரைவில் வெளியிடுங்கள்.

5. ஸ்ரீ **R. பாலசுப்ரமண்யன்**, அட்வகேட், சிட்லட்கே: புராணங்களை வெளியிடும் தங்களைத் தர்சிக்கும் பாக்யம்

கிடைக்கவில்லை. தங்கள் பிரசுரங்கள் ஒவ்வொன்றும் மிகவும் க்ஞானத்தை உண்டுபண்ணுகின்றன. இதற்காக வந்தநம்.

6. ஸ்ரீ K. S. **ராமநாராயணன்**, பாம்பே : தங்கள் புராணச் சுருக்கத்திற்கு எவ்வளவு விலை அளித்தாலும் தகும். இந்த அமிருதத்தைப் பருக மிக ஆவலுள்ளவனாக இருக்கிறேன். இது என்னைப் பலவகையில் முன்னுக்குக் கொண்டுவந்தது. வந்தனம் பல.

7. ஸ்ரீ **டி. ஆர். சேஷன்**, கலினா : புராணச் சுருக்கம் படிப்பதற்கு மிக ரஸமாகவும் அழகாகவு மிருக்கிறது. ஒவ்வொரு ஆஸ்திகரும் படித்து அதன் கருத்துணர்ந்து அநுஷ்டித்தால் நன்மை பெறுவர்.

8. ஸ்ரீ N. **சுந்தரேசன்**, பொள்ளாச்சி: இதுவரை வெளிவராத அநேக ரஹஸ்ய தர்மங்களையும், நீதிகளையும் தெரிந்து பயன் பல அடைந்துவருகிறேன்.

அட்டவணை.

ஸ்ரீ வராஹ புராணம் 13—110.

விஷயம்.	பக்கம்.
ஸ்ரீ வராஹபுராண மூலக்ரந்த அநுக்ரமணிகா	13—30
ஸ்ரீ வராஹபுராண அவதாரிகை	31—32
நாரதர் சுவேதத்வீப வர்ணனை	33
வேதபுருஷர்களே மும்மூர்த்திகள்	34
அச்வசிரஸ் கபிலர் ஜைகீஷவ்யர்	35
ஸ்வதர்மத்தினல் முக்தி	36
வஸு விஷ்ணுஸ்துதியால் முக்தி பெற்றது	37
தர்மவ்யாதரும் மதங்கரும்	37
துர்ஜய சரிதம், கௌரங்க முனிவர் செய்த விருந்து	39
ஸரமா சரிதம்	41
ஸர்வ தேவர்களிலும் சிறந்தவர் யார்	42
பிரதமையில் அக்நி விரதம், அச்விநீ துவிதீயாவிரதம்	43
கௌரீ திருதீயா விரதம்	44
விநாயக சதுர்த்தீ விரதம், நாக பஞ்சமீ ...	44
ஷஷ்டீ விரதம், ஸப்தமீ சூர்ய விரதம்	45
அஷ்டமீ சக்தி விரதம், நவமீ துர்க்கா விரதம்	45
தசமீ கன்னிகை விரதம், ஏகாதசீ குபேர விரதம்	46
துவாதசீ விஷ்ணு விரதம், திரயோதசி தர்ம விரதம்	46
சதுர்தசி ருத்ரவிரதம், அமாவாஸ்யை பித்ருவிரதம்	47
பௌர்ணமீ ஸோமவிரதம்	47
மனேபாவத்தினல் பலஸித்தி மற்றதால் அல்ல	48
வேலைக்காரி ராணியானள்	49
அகஸ்த்ய கீதை	50
நல்ல பதியை அளிக்கும் துவாதசி விரதம்	52
அநரண்ய சரிதம்	53
ருத்ர கீதை	54
மும்மூர்த்திகளும் ஒருவரே	56
ஏழு துவீபங்களும் அரசர்களும், பாரத வர்ஷம்	57
திரிசக்தியும் மஹிஷாசூரனும்	58
ரௌத்ரி விரதம்	60
கபால மோசனம	61

புராண கதையும் தத்துவமும் 63
கபிலாதானம் 64
18-புராண நாம படன பலன் 65
அன்னதானத்தின் மேன்மை, சுவேதன் கதை 65
தர்ம கேள்விகளும், பதிலும் 66
கோகாமுக மஹிமை, 32 அபராதங்கள் 68
சிவன் சுடுகாட்டில் இருப்பதேன் 70
ஸோம சர்மா மாயையை தர்சித்தல் 71
குப்ஜாம்ரக க்ஷேத்ரம் 74
தாம்ப்ரம் உண்டான சரிதம் 75
வராஹ தீர்த்த மஹிமை 75
கானபலன், சண்டாளனும் பிரம்மராக்ஷஸனும் 76
பிரம்மராக்ஷஸின் முற்பிறவி 78
ஸ்த்ரீ புருஷ தர்மம் 79
நந்தியும் சாளக்ராமமும் 80
ப்ரயாகமும் திரிவேணியும் 82
கஜேந்திரமோக்ஷம் 82
நேபாளம் ஹரிஹர க்ஷேத்ரம் 84
குருக்ஷேத்ரமும் ஹ்ரிஷீகேசமும் 85
ஹ்ரிஷீகேசம் என்பதன் பொருள் 86
பசும்பாலால் அபிஷேகம் செய்வதேன் 87
துவாரஹா மாஹாத்மியம் 88
மதுரை மஹிமை 89
அக்ரூர தீர்த்தம், மதுரை பிரதக்ஷிண பலன் 90
சக்ரதீர்த்த கல்பக்ராம மஹிமை 91
கபில வராஹ தீர்த்தம் 93
சதுஸ் ஸமுத்ரகூப மஹிமை 94
மதுராபுரி ஹரிஹரஸ்வரூபமானது 95
கோகர்ண சரிதம் 96
பிரேத உடல் அகலும் வழி 102
கிருஷ்ண கங்கா பிரபாவம் 103
விக்ரஹ பிரதிஷ்டை 104
வீட்டு பூஜையில் கவனிக்கவேண்டியவை 105
எத்தகையவரை சிராத்தத்திற்கு வரிப்பது 106
மதுபர்க்க மஹிமை, நாசிகேத சரிதம் 107
கற்பின் மஹிமையும் பாதுகாதி தானமும் 109
வராஹ புராண சிரவண படந பலன் 110

உத்தர ஸ்காந்தம் 111—172.

உத்தர ஸ்காந்த மூலக்ரந்த அனுக்ரமணிகா 111—137
உத்தர தக்ஷிண ஸ்காந்த அவதாரிகை ....138—144
கடோத்கசனும் காமகடங்கடையும் 145
வைஷ்ணவ கண்டம்—அரிய சில விஷயங்கள் 155
பாகவத மகிமை 159
பிரும்ம கண்டம்-அரிய சில விஷயங்கள் 160
சிவயோகி அல்லது பத்ராயு சரிதம் 161
அரிய உபதேசங்கள் 163
சிவலீலையும் அருளும் 166
காசீ கண்டம்—விசேஷ விஷயங்கள் 168
அவந்தி கண்டம்—அரிய விஷயங்கள் ... 169
நாகர கண்டம்—அரிய விசேஷங்கள் 169
பிரபாஸ கண்டம்—அரிய விஷயங்கள் 171

ஸ்ரீ தக்ஷிண ஸ்காந்தம் 173—250.

ஸ்ரீ தக்ஷிண ஸ்காந்த மூலக்ரந்த அனுக்ரமணிகா 173—176
குமார சம்பவம் ... ...177—190
குமார லீலை 190
விச்வரூப தரிசனம் 192
ஸேனாதிபதி பட்டாபிஷேகம் 192
ஆடு வாஹனமானது 193
பிரும்மனுக்கு சிக்ஷை 194
தாரக வதம், கிரௌஞ்சனைப் பிளத்தல் 196
ஆஸுர காண்டம் 200
சூராதிகள் வரம் பெறல் 201
சூராதி திக்விஜயம் 202
காவேரி வருகை 205
அகஸ்தியர் மஹிமை 206
விஷ்ணு லிங்கமானார் 206
வீரமாகேந்திரகாண்டம் வீரபாகு தூதனுக செல்லல் 207
யுத்த காண்டம் 211
தேவகாண்டம்—தேவயானை விவாஹம் 221
வள்ளி கல்யாணம் 223
குஹ விரதம் செய்தவர், காமனுக்கு சாபம் 226
திருவாலூரில் ஸோமாஸ்கந்தர் பிரதிஷ்டை ... 227

தக்ஷகாண்டம் 227
பெண்மூலமாக ஸிருஷ்டி, சந்திர சாபமகலல் 228
சங்கம் தாக்ஷாயணியானது, தாக்ஷாயணி விவாஹம் 229
ஜாலந்தர வதம் 234
கஜமுக அவதாரம், தக்ஷயாக நாசம் 236
உபதேச காண்டம் 238
சூரபத்மாதிகளின் முற்பிறவி 239
அஜாமுகியின் பூர்வ ஜன்மா.... 240
விபூதி ருத்ராக்ஷ மகிமை 241
புஜபலனும் பஸ்மாவும், ருத்ராக்ஷ மகிமை 242
பஞ்சாக்ஷரீ மகிமை 243
ஸன்யாஸமும் பஞ்சாக்ஷரியும் 244
சிவநாம மகிமை, சிவ விரதங்கள் 245
சிவ கைங்கர்ய புண்ணியம், சிவபக்த லக்ஷணம் 246
சிவ கைங்கர்ய பலன் 247
முற்கலர் எருமையாகி நற்கதி பெற்றது 247
வியாஸர் தீர்மானம் 248
சைவஸித்தாந்தம், இருபத்தைந்து மூர்த்திகள் 249

ஸ்ரீ வாமந புராணம் 251—306.

ஸ்ரீ வாமந புராண மூலக்ரந்த அனுக்ரமணிகா 251--252
வாமந புராண அவதாரிகை, ஸ்லோகம் ....253—254
வாலி சுக்ரீவர் முற்பிறவி 256
தக்ஷயக்ஞம் 257
சிவலிங்கம் 259
பிரஹ்லாத யுத்தம் 260
அந்தகன் 261
தர்மமும் ஸுகேசியும், கர்ம விபாகம் 262
ஆச்ரம தர்மம் 264
ஸுகேசியும் சூர்யனும் 265
தேவர் உறங்கும் காலம், காத்யாயநீ 266
குருக்ஷேத்ர முண்டானது 268
வாமநாவதாரம் 270
தீர்த்த மகிமை 273
லிங்க பூஜை 276
ஸ்தாணு தீர்த்தம் 277
வேநன் அந்தகாசுரநானுன் .... 278.

பார்வதி பரிணயம் 279
விநாயகர் அவதாரம் 282
சண்டமுண்ட வதம் 283
குமார ஜநநம் 285
கேதாரம் 291
முராஸுர வதம் 292
எது நரகம் 293
புத்ரர், சிஷ்யர் இதன் பொருள் 294
துவாதச தளம், பாபமகல அபிஷேகம் 295
அந்தகன் பிறப்பு 297
துந்துபந்தனம், இரண்டாவது வாமநர் 299
நக்ஷத்ர பூருஷ பூஜா 300
உபமன்யு 301
சிவனளித்த சக்ரம், விஷ்ணு ரக்ஷா 302
கோசகார புத்ரன் 303
தானம் 305
புஸ்தக விலை விபரபட்டியல் ... .307—308

13. ஸ்ரீ வராஹ புராணம்.

ஸ்ரீ வராஹ மூர்த்தி.

மாம்பலம் குருகுல வெளியீடு.

ஸ்ரீ வராஹ புராண

மூலக்ரந்த அநுக்ர மணிகா.

[பாம்பே வேங்கடேச்வரா ஸ்டீம் ப்ரஸ் பிரசுரித்ததில் 218 அத்யாயமுள்ளது. பூர்ணமாகவில்லை.]

1 *மங்களம். அநுக்ர மணிகா அத்யாயம். பூதேவி வராஹ மூர்த்தியைக் கேட்பது. சிறித்த அவரது வயிற்றில் ஸித்தர் ருத்ரர் மஹர்ஷி முதலியவர்களைக் காணுதல்.*

2 *ஸ்ருஷ்டி. ஸ்திதி. யுகாதி மஹிமை. புராண லக்ஷணம். ஸாத்விக ஸ்ருஷ்டி. தமோ, மோஹ. மஹாமோஹ, தாமிஸ்ர, அந்த தாமிஸ்ர எனும் அவித்யையின் உத்பத்தி. பசுமுதலிய திர்யக் ஸ்ரோதஸ். தேவர் முதலிய ஊர்த்வ ரேதஸ். மநுஷ்யர் முதலிய அதோ ரேதஸ் முதலிய ஸ்ருஷ்டி. மறுபடி 6 வகை ஸ்ருஷ்டி. ருத்ரர் மரீசி முதலியவர், தக்ஷ கன்யகை மூலமாக தேவ தானவ கந்தர்வ ஸர்ப்ப பக்ஷிகள் ஸ்ருஷ்டி. ஏகாதச ருத்ரர் உண்டாதல். யுக மஹிமை. பிரய விரதனிடம் நாரதர் தான் கண்ட ஆச்சரியத்தைக் கூறுதல். கந்யா ரூபமான ஸாவித்ரியைத் தரிசித்தல். ஸாவித்ரி நாரதருக்கு வேதம் அளித்தல்.*

3 *பிரயவிரதருக்கு நாரதர் தனது முற்பிறவியைக் கூறல். பிரும்ம பாரஸ்தவம். நாராயணனைத் தர்சித்து வரம் பெறல்.*

4 *விஷ்ணு ஸர்வவியாபகன். 8 மூர்த்திகள் உள்ளவன். பிரய விரத மோக்ஷம். அச்வ சிரஸ் சரிதம். அச்வ மேதத்தில் கபிலரும் ஜைகீஷவ்யரும் வருதல். அவர்கள் கருடனுகவும் விஷ்ணுவாகவும் மாறுதல். மறுபடியும் சேஷசாயி காக்ஷி அளித்தல்.*

5 கர்மாவினுல் உண்டாகும் மோக்ஷம். ரைப்யவஸு பிருஹஸ்பதி ஸம்வாதம். பிராம்மண வேட ஸம்வாதம். அச்வ சிரஸ் அரண்யம் செல்லுதல். யஞ்ஞ நாராயண ஸ்துதி. அரசன் முக்தி.

6 வஸு எனும் ராஜரிஷி செய்த பாரஸ்துதி. அவர் உடலிலிருந்து கிளம்பிய வேடன் தனது முற்பிறவி பற்றி கூறல். ஸ்துதியால் வஸுவின் முக்தி.

7 தவத்தாலும் கதாதர ஸ்துதியாலும் உத்தமலோகம். ரைப்யர் கயை செல்லுதல். அங்கே ஸநத்குமாரர் வருதல். கயை மஹிமையால் விசாலராஜனது தந்தை முக்தி பெறல். கதாதர ஸ்துதி. விஷ்ணு பிரத்யக்ஷமாதல். ரைப்யர் முக்தி.

8 தர்மவியாதன் மாதங்கருக்குப் பெண்ணளித்தல். கோதுமை ஜீவஹிம்ஸை இல்லாத உணவென மாதங்கர். அதில் வேடன் ஜீவனைக் காட்டுதல். வேடன் புருஷோத்தம க்ஷேத்ரம் சென்று விஷ்ணு ஸ்துதி. வரம். முக்தி.

9 மத்ஸ்யாவதாரம். பூமி சந்த்ர ஸூர்யர். 4 வர்ணம் முதலிய ஸ்ருஷ்டி. ராத்ரி முடிந்தபின் மத்ஸ்யம். ஜலத்தில் இறங்கல். ஜலம் செய்த ஸ்துதி. கூடஸ்த புருஷனிடமிருந்து ஸ்ருஷ்டி ஸ்திதி லயம்.

10 ஆத்ரேயர் அருளால் ஸுப்ரதிகரிடமிருந்து துர்ஜயனும் ஸுத்யும்நனும் உண்டாதல். துர்ஜயனிடம் ராஜ்யத்தை அளித்து ஸுப்ரதிகன் சித்ரகூடம் செல்லுதல். துர்ஜயன் சக்ரனை ஜயிக்கக் கிளம்புதல். அவனைக் கொல்ல மேருவைத் தாண்டி சக்ரன் பூர்வ தேசம் வருதல். ஹேத்ரு ப்ரஹேத்ருக்கள் ஸுகேசி மிச்ரகேசிகளை மணந்து பிரபவ ஸுதர்சநர் உண்டாதல். கௌரமுகாச்ரமம்.

11 கௌரமுகர் விஷ்ணுவைத் துதித்தல். நாராயணன் பிரத்யக்ஷமாகி ஒரு மணி தருதல். அதனுல் செல்வம் செழித்தல். அரசருக்கு விருந்தளித்தல். அரசன் மணியை அபஹரிக்க முயற்சி. மணியிலிருந்து தோன்றிய வீரர்களுடன் சண்டை. கௌரமுகர்

சிந்தை. விஷ்ணு சக்ரம் ஸேனைகளைக் கொல்லுதல். அதுமுதல் அது நைமிசாரண்ய மெனப்படும் என்று விஷ்ணு மறைதல்.

12 சித்ரகூடம் சென்று துர்ஜயன் ராமனைத் துதித்து முக்தி பெறல்.

13 சிராத்த கல்பம். கௌரமுகர் ப்ரபாஸமெனும் ஸோம தீர்த்தம் சென்று மார்க்கண்டேயரை வணங்கி பித்ரு கணம்பற்றி கேட்பது. பித்ருகண ஸ்ருஷ்டி. சிராத்த காலம். ரஹஸ்ய, அபர, சிரார்த்த காலம். தீர்த்த சிராத்தம். பித்ரு கீதம்.

14 சிராத்த நிமந்த்ரணத்திற்குத் தக்கவர். தகாதவர். எத்தனை பிராம்மணரை வரிப்பது? இடம். அச்சமயம் வந்த அதிதி பூஜை. ஹோம போஜந விதி. அபிச்ரவணம். விகிரான்னம். பிண்ட தாநம். வைச்வ தேவம்.

15 கௌரமுகர் தசாவதார ஸ்துதியால் முக்திபெறுதல். முன் நூறு ஜன்மாவைக் கேட்டு பித்ருக்களைப் பூஜித்து தசாவதார ஸ்துதி கூறி மோக்ஷமடைதல்.

16 ஸரமா சரிதம். தூர்வாஸரளித்த சாபத்தைச் சக்ரன் காசியில் அகற்றல். துர்ஜயனிறந்ததைக் கேட்டு வித்யுத் ஸுவித்யுத் என்பவர் தேவர்களிடம் செல்லுதல். பிருஹஸ்பதி கூறியபடி தேவர் கோமேதயாகம் செய்தல். சுக்ரர் சொற்படி அஸுரர் கோவை அபஹரித்தல். மருத்துக்களால் அதை அறிந்து ஸரமையுடன் சென்று சக்ரன் தைத்யரை ஜயித்து கவாமயநம் செய்தல். இதன் சிரவண பலன்.

17 மஹாதபஸ் சரிதம். ச்ருதகீர்த்தி புத்ரன் பிரஜாபாலன், வேட்டையாடி ஆச்ரமம்செல்லுதல். மோக்ஷம் பற்றிக் கேட்பது. நானே சிறந்தவன் என தேவர் வாதாட விஷ்ணுவே உயர்ந்தவரெனக் கூறி மோக்ஷ மார்க்கம் கூறுதல்.

18 பஞ்சமஹா பூதம். வைச்வாநரர் உண்டாவது.

19 அக்நியின் மேன்மை. அவருக்கு பிரதமா திதியை அளித்தல். அன்று ஹோமம் செய்தால் பித்ருக்களுக்கு ஆநந்தம். அன்று உபவாஸ பலன். அக்நி விரதம் பிரதமையில்.

20 அச்விநிகள் உத்பத்தி. மரீசி வம்சத்தில் மார்த்தாண்டன் தோன்றுதல். த்வஷ்டா பெண்ணை அளித்தல். ஸூர்யன் உஷ்ணத்தை ஸஹிக்காத அவள் குதிரை ரூபமெடுத்தல். அவளிடம் அச்விநீ தேவர் உண்டாதல். அவர்கள் கூறிய பிரும்ம பாரம்ய ஸ்தோத்ரம். வரதாநம். த்விதீயா திதி தாநம். அதில் உபவாஸ ச்ரவண பலன். துவதீயை அச்வநீ விரதம்.

21 கௌரியின் உத்பத்தி. படைக்கும் சக்தியைப் பெற ருத்ரன் நீரில் முழுகுதல். தக்ஷன் மூலம் தேவர் உண்டாதல். தக்ஷ யக்ஞம். அதற்கு விக்நம். ஜலத்திலிருந்து வந்த ருத்ரன் அன்யர் ஸிருஷ்டியைக்கண்டு கோபித்தல். அவர் காதிலிருந்து பூதப்ரேத பிசாசங்கள் உண்டாதல். அவர்களுடன் தக்ஷயக்ஞம் சென்று போர் புரிதல். தேவர்களது அங்கங்களைச் சேதித்தல். சிவ விஷ்ணு யுத்தம். நாராயணாஸ்த்ர பாசுபதாஸ்த்ரங்களின் யுத்தம். பிரும்மா ஹரிஹரர்களைத் துதித்து ருத்ரனுக்கு யக்ஞபாக மளித்தல். தேவர் ருத்ரனைத் துதித்தல். தாக்ஷாயணியை அளித்தல்.

22 கௌரீ விவாஹம். தவம் செய்த இமயமலைக்குப் பெண்ணாகப் பிறத்தல். பார்வதீ தபஸ். கிழ பிராம்மண ரூபியாய் பார்வதியிடம் செல்லுதல். முதலையிடமிருந்து தன்னை விடுவிக்கும்படி கூறுதல். பார்வதீ விவாஹம். திருதீயா திதியில் பார்வதி அவதரித்தல். திருதியையில் விவாஹம் ஆதலால் அன்று உப்பில்லாமல் உபவாஸ மிருக்கவேண்டும். திருதீயையில் கௌரீ விரதம்.

23 கணபதி அவதாரம். தேவர் கைலாசம் வருதல். பரமேஷ்டியின் சிறிப்பிலிருந்து குழந்தை உண்டாதல். எல்லோரையும் மோஹிக்கும்படிச் செய்த அவருக்கு யானைத் தலையாகும்படிச் சாபம். தலையை அசைக்கும் அவரிடமிருந்து பல விநாயகர் தோன்றுதல்.

அவர்களுக்குப் பெயரிடல். யாகாதிகளில் அவருக்குப் பூஜை. தேவர் கணபதியைத் துதித்தல். இவை சதுர்த்தியில் உண்டானதால் அன்று எள்ளை மாத்ரம் சாப்பிட்டு உபவாஸமிருத்தல். சதுர்த்தியில் விநாயக விரதம்.

24 ஸர்போத்பத்தி கச்யப்பருக்குக் கத்ரூமூலம். அநந்த வாஸுகி முதலிய ஸர்ப்பங்கள் உண்டாகுதல். நாக வம்ச பரம்பரை. மநிதர்களைக் கடித்தல். பிரும்மா ஸர்பங்களுக்குச் சாபமளித்தல். அநுக்ரஹம் செய்தல். அது பஞ்சமி திநம். பலன். நாகபஞ்சமி விரதம்.

25 கார்த்திகேயாவதாரம். தேவாஸுர யுத்தம். ஹிரண்ய கசிபு ஸேனையை வெல்ல முடியாமை. ஆங்கிரஸர் கூறியபடி ஸேநாபதியை உண்டுபண்ண பிரும்மா முதலியவர் கைலாஸம் சென்று சிவனைத் துதித்தது. சக்தியைக் கொண்டு குமாரனைப் படைத்து ஸேநாபதியாக்குதல். ஷஷ்டீ விரதம். புத்ரபலனுண்டாதல்.

26 ஆதித்ய உத்பத்தி. பல பெயருண்டாகக் காரணம். அவருக்குள்ளே உள்ள தேவர் ஸ்துதி. ஸப்தமியில் ஸூர்யன் மூர்த்தியை அங்கீகரித்தல். ஸப்தமி விரதம். பலன்.

27 அஷ்ட மாத்ருக்கள். அந்தகனிடம் பயந்த தேவர் சிவனைச் சரணமடைதல். அந்தக சிவ யுத்தம். தேவாஸுர யுத்தம். நாராயணன் வருதல். சிவ ஜ்வாலை. தேவி உத்பத்தி. மாத்ருகா கணம். அந்தக ரத்தத்தைப் பாநம் செய்தல். அஸுர ஸேனை நாசம்.

28 துர்க்கை இந்திரனைக் கொல்ல ஸிந்துத்வீப ராஜன் தவம். மநுஷ்ய ரூபத்துடன் வந்த வேத்ரவதியிடம் வேத்ராஸுர உத்பத்தி. அவன் பிரும்மாதி தேவரை ஜயித்தது. அவனைக் கொல்ல சிந்திக்கும் பொழுது பிரும்மாவினிடமிருந்து தேவீ தோன்றி வேத்ரனைக் கொல்லுதல். பிரும்மா கூறியபடி தேவி ஹிமாலயம் செல்லுதல். நவமீ விரதம்.

29 குகனின் பிரஜைகளை எப்படித் தரிப்பது என்று பிரும்மா யோசிக்கும்பொழுது அவர் காதுகளிலிருந்து

பத்து கன்யகைகளுண்டானது. பத்து திக்பாலர்களுக்கும் அவர்களை அளித்தல். தசமீ திதி தாநம். விரதம்.

30 ஸ்ருஷ்டிக்க விரும்பிய பிரும்மாவின் முகத்திலிருந்து வாயு உண்டாதல். சுக்காங்கல்லை எரிக்கும் வாயுவைத் தடுத்தல். உருவமெடுத்த வாயுவுக்கு ஏகாதசி திதியை அளித்தல். ஏகாதசீ விரத பலன்.

31 கர்மகாண்டத்தைச் செய்ய விரும்பிய நாராயணனிடமிருந்து விஷ்ணு உண்டாதல். அவருக்கு நாமகரணம் பிரஜாபாலநம். பல ஆயுதமளித்தல். த்வாதசி விரதம்.

32 பிரும்மாவின் வலது பாகத்திலிருந்து விருப ரூபமான தர்மம் உண்டாதல். கிருதம் முதலிய யுகங்களிலும் பிராம்மணர் முதலிய வர்ணங்களிலு மிருத்தல். சந்த்ரன் தர்மத்தைப் பரிஹஸித்தது. சந்த்ரனுக்காகத் தேவாஸுர யுத்தம். பிரும்மா கூறியபடி தர்மத்தை ஸந்தோஷப்படுத்தல். திரயோதசீ திதி தாநம். தர்ம விரதம்.

33 பிரும்மாவின் கோபத்திலிருந்து ருத்ரன் உண்டாதல். அவரிடமிருந்து பிசாசம் முதலியன தோன்றுதல். சதுர்தசீ திதியை அவருக்களித்தல். சதுர்தசீ விரதம்.

34 பிரும்மாவிடமிருந்து பித்ருக்கள் உண்டானது. அவர்களின் பெயரும் இடமும். அமாவாஸ்யையில் பித்ரு சிராத்தம்.

35 ஸ்திதி ரஹஸ்யம். தக்ஷசாபம். க்ஷயம். லோக ஹிதத்திற்காகக் கடலைக் கடைதல். சந்த்ரன் உண்டாதல். பௌர்ணமீ விரதம்.

36 ப்ராசீந இதிஹாஸம். மணிஜா என்ற அரச வம்சம். கோவிந்த ஸ்துதி.

37 பக்த வ்ரதம். ஆருணிமுநிவர் மர உறியைத் திருட வந்த வேடன் அசைவற்று நிற்பது. புலிவாயிலிருந்து பிராம்மணனைக் காற்றல். அஷ்டாக்ஷரியைக் கேட்டு புலியின் முக்தி. புலியின் முற்பிறவி. பிராம்மணன் முக்தி மார்க்கம் கூறல்.

38 வேடனது தபஸ். தூர்வாஸருக்கு பிக்ஷை ஆகாயத்தி லிருந்து வருதல். தேவிகா நதி தீர்த்தம் தருதல். தூர் வாஸர் அவனுக்கு வேதாதிகளைப்பெற வரந்தரல்.

39 மத்ஸ்ய த்வாதசீ. ஸத்ய தபஸ். தூர்வாஸ ஸம்வாதம். கர்ம காண்டம். தசமீ முதல் துவாதசீ வரை விரத நியமாசாரம். பிராம்மண போஜநம்.

40 கூர்மத்வாதசி விரதம். பௌஷ சுக்ல த்வாதசிவிரதம்.

41 வராஹ த்வாதசி மாகசுக்ல த்வாதசி விரதம். வீர தன்வ சரிதம். மான்ரூபமுள்ள பிராமணரைக் கொல்லு தல். வராஹ த்வாதசியால் பிரும்மஹத்தி அகலுதல்.

42 நரசிம்ம த்வாதசி விரதம். பால்குந சுக்ல த்வாதசீ. வத்ஸராஜன் இதனால் ஸ்வராஜ்ய மடைதல்.

43 வாமந த்வாதசீ விரதம். 44 பரசுராம த்வாதசீ. வீர ஸேநன் யாக்ஞ்ய வல்க்யர் கூறியபடி இதைச்செய்து நளனைப் பெறுதல்.

45 ராம த்வாதசி விரதம். ஜ்யேஷ்ட சுக்ல த்வாதசி.

46 கிருஷ்ண த்வாதசீ விரதம். வஸுதேவருக்குக் கிருஷ் ணான் இதனால் உண்டாதல்.

47 புத்தத்வாதசீ விரதம். சிராவண சுக்லத்வாதசீ. இந்த விரதத்தால் நிருகராஜனைக் கொல்லவந்த வேடர் அரசன் உடலிலிருந்து வந்த தேவியால் கொல்லப்படு தல். இதனால் க்ஞானம் உண்டாதல்.

48 கல்கி த்வாதசீ விரதம். பாத்ரபத சுக்ல த்வாதசி. விசாலராஜன் நரநாராயணர் கூறியபடி இதைச் செய்து செல்வம் முதலிய பாக்யம் பெறுதல்.

49 பத்மநாப த்வாதசீ விரதம். ஆச்விந சுக்ல த்வாதசீ. அகஸ்த்யர் பத்ராச்வனுக்கு உபதேசித்தல்.

50 தரணீ விரதம். கார்த்திகையில் அப்ஜபூஜை.

51 (18 அத்யா) அகஸ்த்ய கீதை. ஸத்ய தபஸ். பத்ராச் வன் வீடு வந்த அகஸ்த்யர் சொற்படி செய்து முக்தி பெறல்.

52–53 மோக்ஷ தர்மம். பசுபால சரிதம்.

54 உத்தம பதி கிடைக்க விரதம். நாரதர் அப்ஸரஸ்ஸுகளுக்குக் கூறிய வஸந்த சுக்ல த்வாதசீ விரதம்.

55 சுப விரதம். மார்க்க சீர்ஷ அமாவாஸ்யை. பிரும்ம வாதி அரசன் இதனால் புத்ரனைப் பெறல். விஷ்ணு கூனனாக வந்து மோக்ஷ மளித்தல்.

56 தன்ய விரதம். மார்க்க சீர்ஷ ப்ரதிபத். விஷ்ணு அக்நி பூஜை.

57 கார்திக கிருஷ்ண த்விதியை. காந்தி விரதம். நியமம்.

58 பால்குந சுக்ல த்விதியை. ஸௌபாக்ய விரதம். லக்ஷ்மீ நாராயண உமாமஹேச பூஜை. விரதத்தில் புஜிக்கத்தக்க பொருள்.

59 சாதுர் மாஸ்யம். பால்குந சுக்ல சதுர்த்தி. விக்ந ஹர விரதம்.

60 கார்திக சுக்ல பஞ்சமீ. சாந்தி விரதம். அநந்தசாயி பூஜை.

61-62 பௌஷ கிருஷ்ணாஷ்டமி. காம விரதம். ஸேநாநீ ரூப விஷ்ணு பூஜை. மாநஸ ஸரஸ்ஸிலிருந்து தாமரை புஷ்பமெடுத்த அநரண்யனுக்குக் குஷ்டம். வஸிஷ்டர் சொற்படி இந்த விரதம் செய்து நோயகலல்.

63 பாத்ரபத கிருஷ்ணாஷ்டமீ புத்ர ப்ராப்தி விரதம்.

64 ஆச்வயுஜ சுக்ல நவமி. சௌர்ய விரதம். துர்கா தேவீ பூஜை.

65 கார்திக சுக்ல நவமீ. ஸார்வ பௌம விரதம். திக் ப்ரார்த்தனை.

66 நாரத புராணார்த்த பாஞ்சராத்ரம். நாரதருக்கு பாஞ்சாராத்ர மஹிமை கூறல்.

67 விஷ்ணு ஆச்சர்யம். 68 இதிஹாஸம். வர்ணஸங்கரம்

69 நாராயணாச் சர்யம். ஒரு தவஸி இலாவிரதத்தில் தவம் செய்யும்போது அகஸ்த்யர் வருதல். ஹுங்காரத்தால் உண்டான கன்யகைகள் விருந்தளித்தல்.

மற்ருேர் ஹுங்காரத்தால் கோடிக்கணக்கான பெண்கள் தோன்றுதல். அகஸ்த்யர் ஏழு கடலையும் காணுதல்.

70 4 யுகங்கள். அகஸ்த்யர் விஷ்ணுவை நாடி யாகம் செய்ய மும்மூர்த்திகளு மங்கு தோன்றுதல். யாரைப் பூஜிப்பதெனச் சிந்திக்க மூவரும் ஒருவரே. கிருதயுகத்தில் நாராயணனையே பூஜிக்க வேண்டும் என்ருர். சிவன் பாசுபத சாஸ்திரம் அமைத்தல்.

71 ருத்ரனது ஹ்ருதயத்தில் அகஸ்த்யர் சிவனைத் தர்சித்தல். சதசிருங்கத்தில் கௌதமர் வாஸம். துர்பிக்ஷ காலத்தில் முனிவர்கள் தீர்த்த யாத்ரை சென்று கௌதமாச்ரமத்தில் வஸித்தல். முனிவர், கோஹத்தி செய்தார் கௌதமர் என்று கபடமாகக் கூறிக்கிளம்புதல். பாஷண்டராகும்படிச் சபித்தல். கலியில் பாபிகளான அவர்களைக் காக்க சிவன் விச்வாஸ ஸம்ஹிதை என்பதை இயற்றல்.

72 பிரகிருதி புருஷ நிர்ணயம். மூவர் வேள்வி.

73 பிரும்மா கூறியபடி சிவன் உலகைப் படைக்க நீரில் மூழ்கி அங்குஷ்டமாத்ரனை புருஷனையும் 12 ஆதித்யர்களையும் காணல். விஷ்ணு வரமளித்தல்.

74 ஸ்வாயம்புவ மநுவின் புத்ரர். பிரியவ்ரத சரிதம். 7 புத்ரர்களுக்கு 7 த்வீபங்களை அளித்தல்.

75 ஜம்புத்வீபம். பர்வதங்கள். கண்டங்கள். அவைகளின் அளவு. மேரு மலை. அதனருகிலுள்ள இடங்கள். மநோவதி எனும் பிரும்ம ஸபை.

76 8 திக்பாலர்களது நகரங்கள். அமராவதியின் சிறப்பு.

77 மந்தரமலை, கந்தமாதநமலை, தாம்ராபமலை, வித்யாதர நகரம் ஒவ்வொரு மலையிலும் உள்ள த்வீபவிருக்ஷம், நதி முதலியவைகளின் விரிவுரை.

78 மந்தரம் முதல் 4 மலைகள். அருணோதா முதலிய ஸரஸ். அருகிலுள்ள மலைகள்.

79 மேருத்ரோணி, ஸ்ரீ ஸரோபில்வம். அதன் அளவு. ஸுகாநந்தீ ஸரஸ். தாலவநம்.

80 சுக்ல பூமி. உதும்பர வநம். இந்த்ரா சாபம். புருஷ ஸ்தலீ. கபிஞ்ஜல மலை.

81 ஆங்காங்கு தேவர்களது ஸ்தாநம். குஞ்ஜரத்தில் தாநவர். வஜ்ரகத்தில் ராக்ஷஸர். மஹா நீலத்தில் கின்னரர். வேணுமதியில் வித்யாதரர். குஞ்ஜரத்தில் பசுபதி. வஸுதாரத்தில் விருஷபத்வஜர். கஜபர் வதத்தில் பகவதீ. த்ரிகூடத்தில் பிரும்மா.

82 நதிகளின் விஷயம். ஐராவதத்தால் அலைக்கப்பட்ட ஆகாச கங்கை, மேருமீது விழுதல். 60 யோஜனை தூரம் ஆகாசத்தில் விழுவதால் 4 கிளைகளாகப் பிரிதல்.

83 7 குல பர்வதங்கள். ஆங்குள்ள தேசங்களின் பெயர்.

84 மேருவுக்கருகிலுள்ள வர்ஷங்கள். ரம்யக ஹிரண்மய உத்தரகுரு. அங்கு வஸ்த்ரம் ஆபரணம் முதலிய வைகளைத் தரும் மரங்கள். பத்ராகரகண்டம். ஆங் குள்ளவர்.

85 ஒன்பது கண்டமுள்ள பாரத வர்ஷம். பெரிய சிறிய மலைகள். நதிகள். ஜம்பூத்வீப ப்ரமாணம்.

86 சாகத்வீபம். 7 குலாசலங்கள். 7 நதிகள்.

87 குசத்வீபம். 88 கிரௌஞ்சத்வீபம்.

89 கிரௌஞ்சத்வீபம். புஷ்கர கண்டத்தில் மாநஸ பர்வதம்.

90 அந்தகாஸுர வதத்திற்காக மும்மூர்த்திகள் ஒன்று சேர்ந்து மும்மூர்த்தி வடிவமான தேவியை உண்டு பண்ணுதல்.

91 ஸரஸ்வதீவர்ணநம். பிரும்மா ஸரஸ்வதியைத்துதித்தல்.

92 வைஷ்ணவி மஹிமை. மந்த்ரமலையில் தேவீ தபஸ். குமாரிகள் உண்டாதல். நாரதர் மஹிஷாஸுரனிடம் தேவிபற்றி கூறல்.

93 மஹிஷாஸுரன் மந்திரியுடன் யோசனை. தூதனை அநுப்பல்.

94 தேவாஸுர யுத்தம். தோற்ற தேவர் பிரும்மாவிடம் செல்லல்.

95 மஹிஷன் உத்பத்தி. 10 ஆயிரமாண்டுகள் மஹிஷனுடன் தேவி யுத்தம். மஹிஷாஸுர வதம்.

96 திரிசக்தி ரஹஸ்யத்தில் ரௌத்ரீ விரதம். குரு அஸுரனை ரௌத்ரீ கொல்லுதல். ருத்ரன் செய்த ஸ்துதி.

97 ருத்ர மஹிமை. கபால என்ற சப்தத்தால் கோபம் கொண்ட சிவன் பிரும்மன் தலையைக் கிள்ளுதல். கரத்தில் ஒட்டிய கபாலம் காசியில் விழுதல்.

98 ஸத்ய தபஸ். விரல்களிலிருந்து விபூதிவிழுதல். இந்திரனும் விஷ்ணுவும் வரமளித்தல். முக்தி.

99 திலதேநு தாநம். ஏகாதசி மஹிமை. விநீதாச்வன் சரிதம். அந்நதாந மஹிமை. திலதேநு விதி.

100 ஜலதேநு. 101 ரஸதேனு. 102 குடதேனு. 103 சர்க்கராதேநு. 104 மதுதேநு. 105 க்ஷீரதேநு. 106 ததிதேநு. 107 வெண்ணைதேநு. 108 உப்புதேநு. 109 பஞ்சுதேநு. 110 தான்யதேநு. 111 கபில தேநு அதன் லக்ஷணம்.

112 இரு புறமும் முகமுள்ள கோதாநம். ஸ்வர்ண கலச தாநம். சூத்ரனிடமிருந்து கபிலே பசு தாநம் வாங்கக்கூடாது. கபிலே பூமி ரூபம். சுவேதன் கபிலா தாநத்தால் முக்திபெறல். புராணங்களின் எண்ணிக்கை.

113 கல்பமுடிவில் ரஸாதலம் சென்ற பூமி விஷ்ணுவைத் துதிப்பது.

114 வராஹாவதாரம். யோக விஷயமான கேள்வி.

115 பல தர்மங்கள் உண்டாதல். ப்ரதி த்வாதசியிலும் வராஹ பூஜை. நான்கு வர்ணங்களுக்கும் பகவானது கட்டளை வடிவமான தர்மம்.

116 ஸுக துக்கங்களைத் தரக்கூடிய கர்மாக்கள்.

117 32 வித அபராதங்கள். கர்மாவில் சிறந்த கர்மா.

118 தேவோபசார விதி. 119 போஜந நியமங்கள்.

120 மூன்று வேளை ஸந்த்யா உபஸ்தாநம்.

121 பக்தர்களின் லக்ஷணம். ப்ரஸன்னரின் தர்மம்.

122 கோகாமுக மஹிமை. சகராஜனின் முற்பிறவி. சில் லீக அகஸ்த்யர்களின் ஸித்தி. க்ஷேத்ரமஹிமை.

123 புஷ்பகந்த மஹிமை. கார்த்திக சுத்தத்வாதசியில் பிரபோதிநீ. துவாதசீ விரதம். கந்தபத்ரமளித்தல்.

124 பால்குந சுக்ல த்வாதசியில் ஹரிபூஜை. ரிதுகர்மா.

125 மாயாசக்ரம். ஸோமசர்மாவிற்குக் காட்டிய மாயா சக்ரம்.

126 குப்ஜாம்ரகத்தில் ரைப்யரின் தவம். பகவான் தீர்த்த மஹிமை கூறியது. குமுதாகர தீர்த்தம். மாயா தீர்த்தம். ஸர்வ தீர்த்தம். பூர்ணமுக, கரவீர, அக்நி, வாயு, ஸப்தஸாமுத்ரக தீர்த்தங்கள். பாம்புகீரி கதை.

127 தீக்ஷா ஸூத்ரம். தீக்ஷிதன் விடத்தக்கதும் தகாததும்.

128 கங்கதாஞ்ஜந தர்சநம். மூன்றுவர்ண தீக்ஷை. நான்கு வர்ணங்களுக்கும் நான்கு வகை குடை ஸ்நாநாதி.

129 ஸந்த்யா. ஹரிபூஜை. தாம்ப்ர உத்பத்தி.

130 ராஜான்னத்தை உண்டால் பிராயச்சித்தம்.

131 பல் குச்சிக்கு எந்த மரம் சிறந்தது ?

132 பிணத்தைத் தொட்டால் பிராயச்சித்தம். சவம் ரஜஸ்வலை இவர்களைத் தொட்டால் பிராயச்சித்தம்.

133 பூஜாகாலத்தில் அபாநவாயு ஜலமலம் வெளியானால் பிராயச்சித்தம்.

134 பூஜாகாலத்தில் செய்த அபசாரத்திற்கு பிராயச்சித்தம். மௌனத்தை விட்டால் பிராயச்சித்தம். கறுப்பு வஸ்த்ரத்தை அணிந்து பூஜித்தால் பிராயச்சித்தம். பூஜாகாலத்தில் கோபம் வந்தால் பிராயச்சித்தம்.

135 தகாத பொருளால் பூஜித்தால் பிராயச்சித்தம். சிவப்பு வஸ்த்ரமணிதல். இருட்டில் ஸ்வாமி தர்சநம்

தோய்க்காத வஸ்த்ரமணிதல், நாய் பார்த்ததைப் புஜித்தல் முதலியவைகளுக்குப் பிராயச்சித்தம்.

136 தீபத்தைத்தொடல். சுடுகாடுபோய் ஸ்நாநம்செய்யாமல் பூஜை. புதிய அன்னத்தைப் பகவானுக்களிக்காமல் உண்பது. சந்தநம் புஷ்பம் தூப தீப மில்லாமல் பூஜிப்பது. பாதுகை அணிந்து பகவானைத் தர்சித்தல். உண்டபின் பூஜிப்பது முதலிய தோஷங்களுக்குப் பிராயச்சித்தம்.

137 கழுகு நரி கதை. சக்ர ஸோம தீர்த்த மஹிமை.

138 கஞ்ஜரீட சரிதம். விளையாட்டுக் குழந்தைகள் அந்த உடலைக் கங்கையில் போட அது நற்கதி பெற்றது.

139 கோமய பலன். சாணியால் மெழுகுவது. மெழுகுவது இவைகளின் பயன். காநபலன். சண்டாள சரிதம். ஸத்ய மஹிமை. ஒரு காந பலனை அளித்ததால் பிரும்மரக்ஷஸ் தேவன் எதிரில் தாண்டவமாடி நற்கதி பெறல்.

140 கோகாமுக மஹிமை. விஷ்ணு தாரா துங்க கூடம். தேநுபர தீர்த்தம். தர்மோத்பவ பாப ப்ரமோசந யமவ்யஸந மாதங்க மத்ஸ்ய சிலா முதலிய தீர்த்தங்கள்.

141 பதரிகாச்ரம மஹிமை. பிரும்ம கண்டம். அக்நி ஸத்யபதம். விஷ்ணு ஆச்ரமம். சதுஸ்ரோதஸ்வேத தார துவாதசாதித்ய குண்டம். பஞ்சசிரம். ஸோமாபிஷேகம். ஊர்வசீ குண்டம்.

142 பகவானிடம் மநம் வைப்பது. ஸ்த்ரீஸங்க காலம். ஸங்கமானபின் ஸ்நாநம். காலத்தில் ஸங்கமில்லாவிடில் பாபம். ஸன்யாஸம்.

143 மந்தார தீர்த்தம். ப்ராபணமலை. ஸ்நாநகுண்டம். வைகுண்டகாரண தீர்த்தம். ஸோமஸ்ரோதஸ் குஹ்ய தீர்த்தம்.

144 ஸோமேச்வரம் முதலிய முக்தி க்ஷேத்ரம். ரேவையின் தபஸ். அவளிடம் சிவன் புத்திரனானது. ரேவா கண்டம் என பெயர். கண்டகீ தபஸ். ஸாளக்

கிராம ரூபமாக அங்கு விஷ்ணு வஸித்தல். பாண கங்கா. நர்தநாசலம். ராவணதபஸ். ஜயவிஜயர் பரஸ்பர சாபத்தால் யானை முதலைகளாகி சாப மோசநம். ஹம்ஸ தீர்த்தம்.

145 ஸாலங்காயநர் தவம் நந்திகேச்வரர் உத்பத்தி. பில்வப்ரப க்ஷேத்ரம். சக்ரஸ்வாமி தீர்த்தம். விஷ்ணுபதம். அக்நிப்ரபம். தேவப்ரபம். வித்யாதரம். கந்தர்வம். ச்வேதகங்கா. ஸித்தாச்ரமம். த்ரிசூல கங்கா.

146 ஹ்ருஷீகேச மஹிமை. ருருதீர்த்த கதை. தேவதத்தன் தவத்தை இந்த்ரன் கெடுத்தல் ப்ருகுதுங்கத்தில் தவம். சிவன் வரமளித்தல். ருருவின் பிறப்பு. தபஸ். ருருக்ஷேத்ரம்.

147 கோநிஷ்க்ரமணம். சிவதேஜஸ்ஸால் ஆச்ரமம் எரிந்தது. ஔர்வர் சிவனைச் சபித்தது. விஷ்ணு கோக்ஷீர ஸ்நாநத்தால் சிவதாபத்தை அகற்றுதல். பஞ்சக்ரோச தீர்த்தம்.

148 பஞ்சாருமா தீர்த்தம். பிருகு குண்ட, மணிகுண்ட தூதபாபம் முதலிய தீர்த்தங்கள்.

149 துவாரகா மஹிமை. தூர்வாசர் யாதவரைச்சபித்தல். பஞ்சாப் ஸரஸ்தீர்த்தம். சதசாகை ஆலமரம். ப்ரபாஸம். பஞ்சபிண்டம் ஸங்கமநம். ஹம்ஸ குண்டம். கதம்பம். சக்ரம். ரைவதகம். விஷ்ணு ஸங்க்ரமணம்.

150 ஸாநந்தூர மஹிமை. ராமகிருஹம். ராமஸரஸ். பிரும்ம ஸரஸ். ஸங்கமந, சக்ர ஸரஸ், சூர்பாஸக ஜடாகுண்டம்.

151 லோஹார்கலமஹிமை. பஞ்சஸரஸ். நாரத வஸிஷ்ட பஞ்ச, ஸப்தர்ஷி, சரபங்க, அக்நி வைச்வாநர கார்த்திகேய, உமாமஹேச்வர, பிரும்ம முதலிய குண்டங்கள்.

152 மதுரை மஹிமை, அவிச்ராந்த, பிரயாக, கநகலதிந்துக, ஸௌர்யரிஷி, கோடி, வாயு முதலியதீர்த்தங்கள்.

153 நவக, ஸம்யமந, நிஷாதாதி தீர்த்தம். குந்தகாம்யக வகுல, பத்ர, காதிர, மஹா, லோஹஜங்கம் பண்டாரீ பிருந்தா முதலிய வநங்கள்.

154 யமுனை பீவரீ சரிதம், தாரா பதநம். நாக கண்டா ப்ரணம். ஸோம மாநஸ, விக்நராஜ, கோடி முதலிய தீர்த்தங்கள், சிவக்ஷேத்ரம்.

155 அக்ரூர தீர்த்தம். ஸுதன்வ சரிதம்.

156 மதுரை உண்டாதல். ஆதித்ய ஸ்தாபநம்.

157 மலயார்ஜுந தீர்த்த, பாண்டஹ்ரத விரஸ்தல, குசஸ்தல, புஷ்பஸ்தல, ஸப்த ஸாமுத்ரக, வஸுபத்ர, பால்குந, விருஷ, பாஞ்சந, தால வநம், ப்ரஸந்ந ஸலிலம் முதலிய குண்டங்கள்.

158 மதுரா தீர்த்தம். முசுகுந்த க்ஷேத்ரம்.

159–160 மதுரா பிரதக்ஷிணம் பலன். பிரதக்ஷிணபலன்.

161 துவாதச வநயாத்ரா. 162 சக்ர தீர்த்த கதை.

163 கபிலாமஹிமை, வைகுண்டதீர்த்தம். பிரும்மஹத்தி அகலல். ராவணன் வராஹமூர்த்தியைக் கொண்டு வருதல். ராமனதை அயோத்திக்குக் கொண்டுவருதல். சத்ருக்நன் மதுரையில் பிரதிஷ்டை செய்தல்.

164 அந்நகூடம். கோவர்த்தநம். ஸுவர்ணேந்த்ரம், புண்டரீக, அப்ஸரஸ், கதம்ப, அரிஷ்ட, ராதா மோக்ஷராஜ, இந்த்ரத்வஜ முதலிய குண்டங்கள்.

165 பிராம்மண மஹிமை. மதுரையில் பிரேதமோக்ஷம்.

166 அஸிகுண்ட மஹிமை. உத்பத்தி.

167 விச்ராந்தி மஹிமை. ராக்ஷஸமோக்ஷம்.

168 மதுரையை ரக்ஷிக்கும் சிவனைத் தர்சித்தல், பலன்.

169 கருட சரிதம்.

170 வஸுகர்ணன் வைச்யனின் புத்ரன். புத்திரனுக்காக கோகர்ணத்தில் விரதம். கோகர்ணனெனும் புத்ரன் உண்டாதல். வேடன் இவன் பொருளைக் கவருதல். குஹையிலுள்ள கிளி முற்பிறவி சரிதம் கூறுதல்.

171 கிளியுடன் மதுரைசென்று பொருள்தேட கிளியுடன் கப்பலில் புறப்படல். கப்பல் கவருதல். கிளியின் பிரார்த்தனையால் ஜடாயு வந்து வேறு த்வீபத்தில் கொண்டுவிடல். கோகர்ணன் தந்தையிடம் கிளியை அனுப்பல்.

172 தேவியின் அருளால் கோகர்ணன் மதுரை வருதல்.

173 பெரிய கார்யங்களைச் செய்து கோகர்ணன் முக்தி பெறல்.

174 மஹா பிராம்மண கதை. தீர்த்த யாத்ரை, பிரேத ஸம்வாதம். பிரேதஜன்ம காரணம். ஆஹாரம். வாமந தேவபூஜை. பிரேத ஜன்மா அகலுதல்.

175–176 கிருஷ்ண கங்கா காலஞ்ஜர மஹிமை. ஸுப்ர மண்ய சரிதம்.

177 நாரதர் சொற்படி ஸபைக்குவந்த ஸ்திரீகள் ஸாம்ப னைக்கண்டு மோஹமடைதல். கிருஷ்ணன் சாப மளித்தல். நாரதர் ஸூர்யனைப் பூஜிக்கும்படி உப தேசித்தல். ஸாம்பன் ஸூர்யனைப் பிரதிஷ்டை செய் தல். ஸாம்பபுரமென பெயர் வழங்கல்.

178 மார்கசீஷ த்வாதசியில் சத்ருக்ந சரிதம் கேட்பது.

179 32 அபசாரங்களுக்கு மதுரையில் பிராயச்சித்த ரூபமான தீர்த்தங்கள்.

180 சந்த்ரஸேந சரிதம். துருவ தீர்த்தம். சிராத்தத்தின் முக்யத்வம், ஸத்பாத்ர தாநம்.

181 இலுப்பை மரத்தால் தேவ விக்ரஹம் அதன்பலன்.

182–186 சிலை, மண், தாம்ப்ரம், வெண்கலம், வெள்ளி, இவைகளால் விக்ரகப்ரதிஷ்டை, பூஜை பயன்.

187 ஸ்ருஷ்டி. பித்ரு யக்ஞம். நிமியின் புத்ரசோகத்தை அகற்ற நாரதர் உபதேசம். ஆத்ரேயர் கூறிய பித்ரு யக்ஞம். இறந்தவனுக்கு உத்தரகிரியை.

188 பிண்டம். சிராத்தம் உண்டானவகை. 13 நாள்வரை கர்மா. குடை முதலிய தாநம்.

189 பிரேதத்திற்காக வரித்தவர். அந்த தோஷம் அகல உபவாஸம். வயிற்றில் அந்த அன்னமிருந்தால் நரகம். மேதா திதி சரிதம்.

190 சிராத்த காலத்தில் பார்க்கத்தகாதவர். அவர்களைப் பார்த்தால் சிராத்தம், ராக்ஷஸர்களையே அடையும். முதல் சிராத்தம் அக்நியிலேயே ஹோமமாக செய்ய வேண்டும். தகாதவர்களுக்கு அன்னமிட்டால் பித்ருக்களின் துக்கம். திட்டு அன்னத்தை உண்பவருக்கு ப்ராயச்சித்தம்.

191 மதுபர்க்கம் உண்டான வகை.

192 எல்லா வகையான சாந்திகள். சாந்தி மதுபர்க்கம்.

193 நசிகேத சரிதம். யமன் வீடுசென்று வாதம்புரிதல்.

194 நசிகேதஸ் தந்தையிடம் வந்தது. யமலோகவிஷயங் கூறல்.

195 பாபிகளின் யாதனை. மஹரிஷிகளின் கேள்விகள்.

196 யம நகரம். புஷ்போதக நதி. பலவகைச்செழிப்பு.

197 புண்ய சீலர் செல்லும் வழி. பாபிகளின்வழி. கூஷ்மாண்ட ராக்ஷஸர்களின் ஹிம்ஸை.

198–199 யாதனை. யமன் நசிகேதனுக்கு அதிதிபூஜை. நசிகேதன் யமனைத் துதித்தல். யாதனைகளைக் காண்பித்தல். பாபிகளைக் காணல்.

200 வைதரணீ நதி, ஸஹகாரவனம், யமன் அடுப்பு. சூலம் மலை. சிருங்கார வனம், திருடர்களின் யாதனை.

201 ராக்ஷஸ கிங்கர யுத்தம்.

202 நரக யாதனை. கர்ம விபாகம். சித்ரகுப்தன் கூறிய படி பலவித யாதனைகளை அளித்தல்.

203 எது எது பாபம்? அதற்கு எது எது சிக்ஷை?

204 பலவகை ரூபங்களுடன் யமதூதர்களை அனுப்புதல்.

205–206 புண்யசீலர்களுக்குச் சுபமான இடந்தருவது.

207 யம நாரத ஸம்வாதம். நரகத்திற்குப் போகாமலிருக்கும் வழி. தபஸ் நியமம் விரதம் தானமிவைகளின் பலன்.

208 நிமிபுத்ர மிதி என்பவரின் மனைவியான ரூபவதியின் கற்பு. வெய்யிலால் வாடிவிழுந்த ரூபவதியின் க்ரூரமான பார்வை. ஸூர்யன் பூமியில் விழுதல்.

209 கற்பரசிகளின் கடமை.

210 பிரும்மா பாபத்தை அகற்றக் கூறும் வழி.

211 ஏகாதசீ மஹிமை. தசாவதார பூஜை. பலன்.

212 ஸம்ஸார சக்ர கதை, யமலோகத்தைக் கேட்டு முனிவர் ஆச்சர்யம்.

213 முஞ்ஜவத் நகரத்தில் நந்தி தபஸ். சிவன் ஸாரூப்ய முக்தி தருதல்.

214 நந்திகேச்வரருக்கு வரம் தந்ததைக் கேட்டு பயந்து பிரும்மாதி தேவர் வருகை. நந்தி வரம் பெற்றவகை கூறல்.

215 கோகர்ணம். தேவர் சிவனைத் தேடுதல். சிவன் ஆகாசத்திலிருந்து சைலேச்வர மஹிமை கூறல். மிருகசிருங்கோதகம் பஞ்சநதம் வாக்மதி கோரக்ஷகம் உமாஸ்தநகுண்டம் ஸுந்தாரிகா முதலிய தீர்த்தங்கள். கோகர்ணம் என பெயர்வந்த காரணம்?

216 சிருங்கேச்வரத்தில் ராவணன் தபஸ். தக்ஷிண கோகர்ணமுண்டாதல்.

217 பூமி வராஹத்துடன் பேசியதைக் கேட்பதால் உண்டாகும் பயன்.

218 புராண படந பலன். அநுக்ரமணிகா.

வராஹபுராண அநுக்ர மணிகா முற்றிற்று.

ஸ்ரீ வராஹ புராண

அவதாரிகை.

மஹா புராணங்களில் இது பனிரண்டாவதாகும். வராஹ ரூபமெடுத்தபோது பகவான் பூதேவிக்குக் கூறியதால் இதற்கு வராஹ புராணம் என்ற பெயர் தோன்றிற்று. இங்ஙனம் தசாவதாரங்களில் மத்ஸ்ய கூர்ம வாமனர் என்ற பெயர்களாலும் தனித்தனி மஹாபுராணங்கள் உண்டு. நரஸிம்மன் பெயரால் ஏற்பட்ட புராணம் உப புராணத்தைச் சார்ந்தது.

"உத்ருதாஸி வராஹேண" என்ற யஜுர்வேதத்தால் வராஹாவதாரம் ஸூசிப்பிக்கப்படுகிறது. பூதேவி மஹாவிஷ்ணுவின் மனைவி. அவள் தேவதா வடிவமாக வைகுண்டத்தில் வஸிக்கிறாள். அவளது ஸ்தூல சரீரத்திற்குத் தீங்கிழைத்தான் ஹிரண்யன். அவனைக் கொன்று பூமியை நிலைநிறுத்தினார் வராஹ மூர்த்தி, பூமியைக் கொண்டு வந்ததால் பூவராஹமூர்த்தி எனப் பெயருண்டானது. அவரது ரோமங்களிலிருந்து எள்ளு தர்ப்பம் யக்ஞத்திற்கு வேண்டிய பொருள்கள் உண்டானதால் யக்ஞ வராஹ மூர்த்தி என்றும் பெயர் உண்டானது.

வராஹ என்பது தற்காலத்தில் காணப்படும் வராஹமல்ல. ஆதிவராஹமூர்த்தி ஒத்தக் கொம்புடனிருந்ததாக ரிக்வேதம் கூறுகிறது. அவர் தூக்கியதால் மண் பவித்ரமானது. அந்த மண்ணைத் தடவிக்கொண்டு ஸ்நாநம் செய்யவேண்டும். உபநிஷத்தில் நான்குமந்த்ரங்கள் மிருத்திகையை நமது பாபத்தைப் போக்கிச் சுத்தமாக்கும்படி வேண்டுகின்றன. வராஹத்தால் தோண்டப்பட்ட மண்ணை ஆதாநத்தில் சுத்த வஸ்துவாகக் கூறி பயன்படுத்துகிறது சிரௌத ஸூத்ரம். பூவராஹமூர்த்தி என சில வகுப்பார் பெயர் வைத்துக்கொள்வதைத் தென்னாட்டில் காணலாம்.

வராஹத்தால் பூதேவிக்கு உபதேசிக்கப்பட்ட இது பூர்ணமாகக் கிடைக்கவில்லை. கிடைத்ததை மாத்ரம் பாம்பே ஸ்ரீ வேங்கடேச்வரா ஸ்டீம் ப்ரஸ் அச்சிட்டது. அதைத்தழுவியே சுருக்கம் எழுதுகிறேம். 218 அத்யாயங்களிருக்கின்றன. முதலில் பிரதமை முதல் பௌர்ணமிவரை ஒவ்வொரு திதியில் உண்டான விரதங்களை வர்ணிக்கிறார். எந்த காரணத்தினுல் குறித்த விரதத்தைக் கொண்டாடுகிறேம் என காரணத்தையும் அதை விளக்கும் கதையையும் 63 அத்யாயங்களால் கூறுகிறது. விஷ்ணுவின் முகமாக சிவ பெருமையை விளக்குகிறது இப் புராணம். வராஹமூர்த்தியே முதலில் சிராத்தம் பிண்டதானம் இவைகளை ஆரம்பித்ததால் இதில் சிராத்த விஷயம் விரிவாக இருப்பது ஸஹஜம். புராணத்திற் குரிய மற்ற ஸகல விஷயங்களுமிதில் அடங்கி இருக்கின்றன. **தேவாபசாரங்களை** விரிவாக வர்ணிக்கிறது இப் புராணம். **அகஸ்த்ய கீதா** என்பது 50 வது முதல் 68 அத்யாயம் வரை 18 அத்யாயமுள்ளது. மிக ரஸமானது. நல்ல பதியைப் பெற வஸந்த சுக்ல துவாதசியில் ஒரு விரதம் சொல்கிறார். விரதங்களும் சிவமஹிமையும் இதில் அதிக இடம் பெறுகின்றன. பாகவதம் போல் பற்பல ஸ்தோத்ரங்கள் நிறைந்த புராணமிது.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா,

ஆசிரியர்.

13. ஸ்ரீ வராஹ புராணம்.

नमस्तस्मै वराहाय – लीलया उद्धरते महीम् ।
खुरमध्य गतो यस्य – मेरुः घणघणायते ॥

லீலையாக பூமியைத் தூக்கிவந்தபோது அவரது குளம்பின் நடுவில் உள்ள மேருமலை மணி அடிப்பதுபோல் கணகண என சப்தம் செய்தது. அந்த வராஹமூர்த்திக்கு நமஸ்காரம்.

ஒவ்வொரு கல்பத்திலும் வராஹாவதாரம் செய்து கடலிலிருந்து என்னைத் தூக்கிவருகிறீர். தசாவதாரம் செய்து உலகைக் காக்கிறீர். உமது நிஜ உருவை யான் அறியேன். எப்படி உலகைப் படைத்துப் பரிபாலித்து உம்மிடம் ஒடுக்கிக்கொள்கிறீர்? உம்மை எப்படி ஆராதிப்பது? யார் ஆராதித்து என்ன நன்மை பெற்றார்? முதலியவைகளை விரிவாகக் கூறவேண்டும், என பூதேவி வராஹமூர்த்தியைவேண்ட பகவான் கூறினார். பகவானைப் பூதேவி வணங்கும் வகையில் வராஹ கவசம் என்று கூறத் தக்கபடி நமஸ்காரத்துடன் இந்த இந்த பெயருள்ள பகவான் இந்த இந்த அவயவத்தைக் காக்கட்டும் எனக் கூறுகிறாள்.

நாரதர் சுவேதத்வீப வர்ணனை.

முதல் கல்பத்தில் ஸ்வாயம்புவமநுவின் புத்ரரான பிரியவ்ரதன் ஏழு புத்ரர்களுக்கும் ஏழு த்விபங்களைக் கொடுத்து விசாலா எனும் நதிதீரத்தில் தவம் செய்தான். நாரதர் அங்குவர அன்று அவர் கண்ட ஆச்சர்யத்தைக் கூறும்படி வேண்டினான். ராஜன் "இன்று சுவேத துவிபம் சென்றேன். ஆங்கு ஒரு ஸரஸ்ஸையும் அதனருகே

அழகிய ஒரு கன்னிகையையும் கண்டேன். நீ யார் என்று நான் கேட்க, அவள் சிறிது நேரம் பேசாதிருந்தாள். அச் சமயம் நான் கற்ற ஸகல வேதசாஸ்த்ரங்களும் புராணுகமங்களும் யோகமும் மறந்துவிட்டன. நான் யார் என்பதே எனக்குத்தெரியவில்லை. முன் வாஸனையால்போலும் அவள் திருவடியே சரணம் என விழுந்தேன். எழுந்து அந்த கன்யகையைக் கண்டேன். அவளது ஹிருதயத்தில் ஒரு அழகிய புருஷனிருந்தான். அவனுடைய ஹிருதயத்தில் மற்றொரு புருஷனைக் கண்டேன். அவனது ஹிருதயத்தில் மூன்றுவது புருஷனையும் கண்டு ஆச்சர்ய மடைந்தேன். கன்னிகையின் திருவடியை வணங்கி அம்மா! நீ யார்? அந்த மூன்று புருஷர்கள் யார்? நான் கற்ற வேத சாஸ்த்ரங்கள் மறக்கக் காரண மென்ன? என்று வினவினேன். புன்னகையுடன் அப் பெண் கூறினுள்: நாரதரே! நான் சாவித்ரீ! என்னை நீ நன்கு அறியாததால் நீ கற்ற வேதசாஸ்த்ரங்கள் மறந்தன.

வேத புருஷர்களே மும்மூர்த்திகள்.

நான் ஸகல வேதங்களுக்கும் தாய். எனது ஹிருதயத்தில் ஒரு புருஷனைக் கண்டாயல்லவா? அவர்தான் ரிக்வேதம். நாராயணுக இருந்து அதை உச்சரித்தவுடனே ஸகல பாபங்களையும் அகற்றுகிறுர். அவருடைய ஹிருதயத்தில் மற்றொரு புருஷனைக்கண்டாயே அவர்தான் யஜுர்வேதம். பிரும்மாவாக இருந்து ஸகல கர்மாக்களையும் செய்விக்கிறுர். அவருக்குள் மூன்றுவது புருஷனைக் கண்டாயே அவர் ஸாமவேத ரூபியான பரமசிவன். அவரை நினைத்தவுடன் ஸகல பாபங்களும் நாசமாகும். இந்த வேதஸரஸ்ஸில் முழுகி ஸகல வேத சாஸ்த்ரங்களையும் பெறுவாய் என்றுள் அந்த கன்னிகை.

வேத ஸரஸ்ஸில் மூழ்கினேன். எனது பற்பல பிறவிகளைக் கண்டேன். இதற்கு முன் பிறவியில் ஸாரஸ்வதமெனும் புஷ்கரதீர்த்தக்கரையில் யக்ஞங்களால் தேவர்களை ஆராதித்தேன். சிராத்தத்தால் பித்ருக்களைப் பூஜித்தேன். தநதான்யாதிகளால் மநிதரை அர்ச்சித்தேன். மும்மூர்த்தி ஸ்வரூபியான விஷ்ணுவை பிரும்மபாரமயம்

என்ற ஸ்தோத்தரத்தால் ஆராதித்தேன். பகவான் ப்ரத்யக்ஷமாக வந்து தேவமயமான சரீரத்தைப் பெறுவாய்! நார என்றால் ஜலம். அதை நீ பித்ருக்களுக்கு ஓயாமல் கொடுத்ததால் நாரத என்ற பெயரைப் பெறுவாய் என்று கூறி மறைந்தார் என்ற ஆச்சர்யத்தைக் கூறினார் நாரதர் பிரயவிரதனுக்கு.

பரம்பராணும் என்று துவக்கும் பத்து சுலோகங்கள் மும்மூர்த்திகளையும் ஸமமாகப் போற்றுகின்றன. அதே பிரும்ம பாரமய ஸ்தோத்ரமாம்.

பத்து அவதாரங்களில் சிலவிடத்தில் பலராமனையும் அவதாரமாகக் கூறுவர். வராஹமூர்த்தி அதற்குப் பதிலாக புத்தனை அவதாரமாகக் கூறுகிறார்.

மத்ஸ்ய: கூர்ம: வராஹ: ச நரஸிம்மோத வாமந: |
ராமோ ராம: ச க்ருஷ்ண:ச புத்த: கல்கிதி தேதச ||

அச்வ சிரஸ் கபிலர் ஜைகீஷவ்யர்.

பகவானை எப்படி ஆராதிப்பது? என்பதற்கு இவர்கள் மூலமாகப் பதில் கூறுகிறார் பகவான். அச்வ-சிரஸ் என்ற அரசன் அச்வமேதயாகம் செய்து முடித்தான். கபிலரும் ஜைகீஷவ்யரும் அங்குவர, அவர்களை நன்கு உபசரித்து, நாராயணன் எங்கிருக்கிறான்? எப்படி அவரை ஆராதிப்பது? என்று கேட்டான். நாங்களே விஷ்ணு! ஸ்வதர்மத்தினால் பகவானை ஆராதி என்றார்கள். அரசனுக்கு அது விளங்கவில்லை. உடனே இருவரும் சேர்ந்து சேஷசயந விஷ்ணுவாகவும் கருடாரூடனாகவும் காக்ஷி அளித்தார்கள். அப்பொழுதும் அரசன் உண்மையறியாமல் விழித்தான். ஜலத்தில் படுத்திருக்கும் விஷ்ணு அவர் நாபிக்கமலத்திலிருந்து சதுர்முகன் அருகில் ருத்ரனுமாகக் காக்ஷி அளித்தார்கள்.

மஹரிஷிகளே! நீங்கள் யோக மாயையால் இப்படி காக்ஷி அளிக்கின்றீர்கள்! ஸர்வவ்யாபீ பகவான்! உள்ளும் புறமும் வியாபித்திருக்கிறான் என்று வேதம் கூறுகிறதே என்றான் அரசன். அடுத்த நிமிஷத்தில் அரண்மனையில் மூட்டைப்பூச்சி, கொசு, பேன், வண்டு, பக்ஷிகள்

பாம்புகள், பசு, யானை, ஸிம்மம், கரடி, புலி, புழு முதலியவைகள் கோடிகோடியாக கால்வைக்க இடமின்றி சூழ்ந்தன. ஆச்சர்யமடைந்த அரசன் மஹர்ஷே! இஃதென்ன? என்று பயந்து கேட்டான். அரசே! வியாபகனல்லவா விஷ்ணு! என்றாய். அவர் இந்த பிராணிகள் எல்லாவற்றினிடமும் இருக்கிறார். உன்னுடலிலும், உனது ஸேவகரிடமும் இருக்கிறார் விஷ்ணு. நல்ல உடலைப் பூஜி. துஷ்டரை சிக்ஷி. செவ்வனே உனது தர்மத்தைச் செய். அதே அவனது ஆராதநமாகும் என்றார்கள்.

ஸ்வ கர்மணா தம் அப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:

ஸ்வதர்மத்தினால் முக்தி.

ஆத்ரேய கோத்ரத்தில் பிறந்த ஸம்யமநன் என்ற பிராம்மணன் தர்மாரண்யத்தில் ஒரு நதியில் ஸ்நாநம் செய்யச் சென்றான். அங்கு விதுரதன் எனும் வேடன் ஆங்குள்ள மான்களை அடிக்க ஆரம்பித்தான். இதைக் கண்டு கருணைகொண்ட முனிவர், "அப்பா! கொல்லாதே! மஹா பாபம்; நற்கதி உண்டாகாது உனக்கு," என்றார். வேடன் கூறினான், மஹர்ஷே! நான் பிராணி ஹிம்ஸை செய்யவில்லை, பரமாத்மா பூதங்களுடன் விளையாடுகிறார். நான் என்ற அஹங்காரத்தை விட்டு ஸ்வஜாதி தர்மத்தை விடாமல் பசிக்கு உணவை ஏற்றால் அது ஹிம்ஸையாகாது, நற்கதிதானே உண்டாகும் என்று கூறி இரும்பு வலையின்கீழ் அக்நியை மூட்டி ஊதினான். அந்த சந்துகள் வழியாக ஜ்வாலைகள் வெளிக்கிளம்பின. மஹர்ஷே! ஒரு ஜ்வாலையைப் பிடித்து ரக்ஷியும் என்றான் வேடன். ரிஷி ஒரு ஜ்வாலையைக் காக்க நினைத்தார். வேடன் அடியிலுள்ள தீயை ஜலத்தாலவித்தான். ஐயா! அந்த ஜ்வாலையைக் கொடும் என்றான் வேடன். பிராம்மணன் ஜ்வாலையைத் தேடி ஏமார்ந்தான். இதன் தத்துவத்தைக் கூறென ரிஷிவேண்ட வேடன் கூறினான். பிராணிகள் ஜ்வாலைபோலாகும். அக்நி ஆத்மாவாகும். ஆத்மா மூல ஸ்தாநம். அது அழிந்தால்தான் பிராணிகள் அழியும். ஆத்மாவுக்கு அழிவில்லை. உடலுக்கே அழிவுண்டு. அவரவருக்கு விதிக்கப்பட்ட கடமையைச் செய்தால் அது ஹிம்ஸையாகாது. யாகத்தில் வேதியன் ஆட்டைப் பயன்படுத்துவது ஹிம்ஸையில்லை. நான் என் தர்மத்தைச்

செய்வது ஹிம்ஸையில்லை என்றான் வேடன். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரிபொழிந்தது. வேடனைத் திவ்யவிமானம் வந்து அழைத்துச் சென்றது.

வஸு விஷ்ணு ஸ்துதியால் முக்திபெற்றது.

காச்மீரதேச அரசனான வஸு என்பவன் மநுநீதி தவராமல் குடிகளை ரக்ஷித்து புத்ரனிடம் ராஜ்யதை அளித்து வனம்சென்றான். அங்கு தவம்செய்து புண்டரீகராக்ஷனைத் துதித்தான். இவ்வரசனது உடலிலிருந்து ஒரு பயங்கரமான வேடன் கிளம்பி ராஜன்! நான் தங்களுக்கு என்ன செய்யவேண்டும்? என்றான். அரசனவனை நோக்கி நீ யார் என்று கேட்க, அரசே! தாங்கள் முற்பிறவியில் ஜநஸ்தாநத்தில் வேட்டையாடினபோது ஒரு மானைக் கொன்றீர். அது ஒரு பிராம்மண உடலெடுத்து இறந்தது. அறியாமல் பிரும்மஹத்தி செய்ததை நினைத்து வருந்தி ஒரு துவாதசி விரதமிருந்து கோதாநம் செய்தீர். அதனால் ஒரு கல்பம்வரை வைகுண்டத்திலிருந்தீர். அதுவரை அந்த பிரும்மஹத்தி உமது உடலிலிருந்தது.

காச்மீரத்தில் இந்த ராஜ உடலெடுத்து பல யக்ஞங்களைச் செய்தீர். இன்று வரை உமது ரோம கூபத்திலிருந்து உம்மைக் கொல்ல முயற்சித்துக் கொண்டிருந்தது அது. இன்று நீர் வநம்வந்து விஷ்ணு ஸ்துதி செய்ததால் பிரும்மஹத்தி மாறி வேடனாக வெளிவந்தது. அதே நான் என்று வேடன் கூறியவுடன் அரசனுக்கு வைகுண்டத்திலிருந்து விமாநம் வந்தது. அரசன் வேடனைக் கண்டு ஸந்தோஷித்து அடுத்த பிறவியில் நீ தர்மவியாதனாகப் பிறந்து நற்கதி அடைவாய் எனக்கூறி வைகுண்டஞ் சென்றார்.

தர்மவ்யாதரும் மதங்கரும்.

வஸுவின் உடலிலிருந்துண்டான வேடன் தர்மவ்யாதனாகப் பிறந்தான். மிதிலாபுரியில் தனது ஜாதிக்கேற்ற ஆசாரத்தைச் செய்துவந்தான். அர்ஜுநன், அர்ஜுநகா என்ற ஒரு புத்ரனும் புத்ரியும் அவனுக்குப் பிறந்தார்கள். அழகிய இப்பெண்ணை யாருக்கு அளிப்பதென யோசித்து மதங்கரெனும் மஹரிஷியின் புத்ரனுக்கு அளித்தான். [முன் யுகத்தில் கடையிலிருந்தும் கன்யா ரத்நத்தைக்

கொள்ளலாம் என்றபடி தாழ்ந்தவரிட மிருந்தும் பெண் ணைக் கொள்வர். அவர்களது தவத்தால் அப்பெண்ணும் சுத்தமாவாள். அவளது சேர்க்கையால் முனிவர் அசுத்த மாவதில்லை. பெரியோர்களது ஆசாரத்தில் நல்லதையே கைக்கொள்ள வேண்டும் என சாஸ்த்ரம் கூறுகிறது. ரிஷிகளே வேடஸ்த்ரீயை மணந்ததால் நாமும் நீசஸ்த்ரீயை மணக்கலாமெனக் கருதக் கூடாது.]

அர்ஜுநகா புருஷன் வீட்டில் வாழும்போது அவளது மாமியார் அடிக்கடி ஜீவஹிம்ஸை செய்யும் குலத்தில் பிறந்த உனக்கேது தவம்? பதி பணிவிடை ஏது? என திட்டுவாள். இதை அர்ஜுநகா தன் தந்தையிடம் கூறி அழுதாள். தர்மவியாதன் மதங்கருடைய ஆச்ரமத் திற்கு வந்தான். முனிவர் வரவேற்று என்ன வேண்டு மென்று கேட்க ஜீவனில்லாத ஆஹாரத்தை விரும்பி வந்தேன் என்ருன். ஜீவஹிம்ஸை இல்லாத கோதுமை அந்நமே நமது வீட்டில் இருக்கிறது. நீர் புஜிக்கலாம் என் ருர் மதங்கர். ஆனால் அந்த கோதுமையைக் கொண்டு வாரும் பார்க்கலாமென்ருன் வியாதன்.

ஒரு முறத்தில் கோதுமையைக்கொண்டுவர அதைப் பார்த்து வேடன் உண்ணமலே திரும்பினன். மதங்கர் ஏன் உண்ணமல் செல்கிறீரென கேட்க. மஹர்ஷே! எனது குடும்பத்திற்காக ஒரு நாளைக்கு ஒரு மிருகத்தைக் கொல்கிறேன். நீங்களோ கோடி ஜீவர்களைக் கொல் கிறீர்களே! இங்கு நித்யமான பித்ரு சிராத்தமில்லை. அதிதி பூஜை இல்லை. "ஜீவஹிம்ஸை செய்பவர் பெண் நீ உனக்கேது தவம்" என்கிருள் உமது மனைவி. இனி உலகில் மாமியாரிடம் மருமகளுக்கும் அன்பு இல்லா மல் போகும் என சபித்துவிட்டுச் சென்ருர். வீட்டிற்கு வந்து புத்ரனிடம் குடும்பத்தை ஒப்படைத்துவிட்டு புருஷோத்தம க்ஷேத்ரம் சென்று பகவானைத் துதித்துத் தனது வம்சத்தவர் அனைவரும் பக்தியிலீடுபட வேண்டும் என வரம்பெற்று ஸத்கதி அடைந்தான் தர்மவியாதன்.

தோஷமுள்ளதாயினும் ஸ்வதர்மத்தை விடாதே.

सहजं कर्म भूपेन्द्र सदोषमपि न त्यजेत् ।

பகவானே ஸாத்விக ராஜஸ தாமஸ ரூபி.

துர்ஜய சரிதம்.

கிருத யுகத்தில் ஸுப்ரதிகன் என ஓர் அரசனிருந்தான். வித்யுத் பிரபா காந்திமதீ என்ற இருமனைவிகளுடன் புத்ர பாக்யம் பெற சித்ரகூடத்திலுள்ள ஆத்ரேயரிடம் சென்றான். அரசன் அவரிடம் விக்ஞாபனம் செய்து கொண்டிருக்கும்பொழுது, மஹேந்த்ரன் சதுரங்க ஸேனையுடன் ஐராவதத்திலேறி பவனிவந்தான். மஹரிஷியைக்கண்டும் மரியாதை செய்யாமல் சென்றான். இது நல்லோருக்குத்தகாத செயல். மூவுலகங்களுக்கும் பதியான இவன் தர்மத்தையும் ஆசாரத்தையும் கற்பிப்பதை விட்டு தானே தர்மத்தைமீறினன். ஆதலால் ராஜ்யத்தை இழப்பான் என சபித்தார். ஸுப்ரதிகனுக்கு இந்திரனைப்போன்ற புத்ரன் பிறப்பான். அவன் க்ரூரனாக இருப்பான். இந்திரனையும் ஜயிப்பான் என அருள் புரிந்தார். அங்ஙனமே மூத்தவளிடம் துர்ஜயன் என்பவனும், இளையவளிடம் ஸுத்யும்நன் என்றவனும் பிறந்தார்கள். துர்ஜயன் அகண்ட பூமண்டலத்தையும் ஜயித்து கந்தர்வர் வித்யாதரர் கின்னரர் கிம்புருஷர் முதலியவர்களை ஜயித்தான். இந்திரன் இவன்மீது படை எடுத்து வந்து தோல்வியுற்றான். வித்யுத் ஸுரவித்யுத் என்ற அஸுர ஸஹோதரர்கள்வர அவர்களைத் துவார பாலகர்களாகச் செய்து குபேரவநம் சென்றான்.

ஆங்கு முநிவேஷத்துடனிருந்த ஹேத்ரு பிரஹேத்ரு என்ற ஸ்வாயம்புவ மநுவின் புத்ரர்களைக் கண்டான் துர்ஜயன். நாங்கள் இந்திரனைப் போரில் முறியடித்தோம். தோற்ற சக்ரனது பிரார்த்தனைக்கிணங்கி நாராயணன் போரிட்டு எங்கள் சேனைகளைக்கொன்று எங்களை மாத்திரம் விட்டுவிட்டார். இவர்கள் எங்களது கன்னிகைகள். அவர்களை மணந்துகொள் என்றார்கள். துர்ஜயன் அவர்களை மணந்து பிரபவன் ஸுதர்சநன் என்ற இரு புத்ரர்களைப் பெற்றான்.

கௌரங்கமுநிவர் செய்த விருந்து.

ஒரு ஸமயம் துர்ஜயன் ஐந்து அக்ஷௌஹிணி ஸேனைகளுடன் வநம்சென்றான். அங்கே அழகிய ஆச்ரமத்தைக்

கண்டு தலைவரான கௌரங்க முநிவரை வணங்கி ஆசிர்வாதம் பெற்றான். முநிவர் உண்ணும் ஸமயத்தில் வந்த அரசன் தானளிக்கும் விருந்தை ஏற்கவேண்டுமென்றார். இவர் என்ன செய்யப்போகிறார் என்று பரிஹாஸமாக அதை ஏற்றான் மன்னன். முநிவர் கங்கையில் இறங்கி விஷ்ணுவைத் துதித்தார். ஏற்கனவே இவர் செய்த தவம் அளவற்றது. பகவான் அவர் எதிரில் தோன்ற, ப்ரபோ! ஏழையான யான் உமது பலத்தினால் அரசனை விருந்துக்கழைத்தேன். நான் தொட்டாலும் பார்த்தாலும் நினைத்தாலும் அருகிலுள்ள செடி கொடிகளெல்லாம் நால்வகை அருசுவை உணவாக வேண்டும் என பிரார்த்தித்தார். ஒரு திவ்ய சிந்தாமணியைத்தந்து இதனால் உன் விருப்பம் பூர்ணமாகுமென்றார் விஷ்ணு.

ஐந்து அக்ஷௌஹணீ ஸேனைக்கும் அவரவருக்கு ஏற்றபடி அத்புதமான தனிவீடு அமைத்து பக்ஷ்ய போஜ்யங்களுடன் இதுவரை அரசன் கண்டிராத அரிய உணவை அளித்தார் முநிவர். அப்ஸரஸ்கள் வந்து ஆடினர். கந்தர்வர் காநம் செய்தனர். • நவக்ரஹம் முதலிய தேவதைகள் வந்து சபையை அலங்கரித்தனர். ஒரே ஆநந்த வெள்ளம்! இதுவரைக் கண்டிராத காக்ஷி! ஸகல இந்திரியங்களும் மநதும் ஆநந்தப் பரவசமாயின. விண்ணுலகோ? வைகுண்டமோ? என எண்ணினர். காலையில் எழுந்தவுடன் அரண்மனை போன்ற வீடுகள் தேவ ஸ்திரீபோன்ற கிங்கரிகள். அமிருத ஓடை பக்ஷ்யமலை எல்லாம் மறைந்தன. மன்னன் சிந்திக்கலானான். ஆஹா! இது இந்த்ரஜாலமா? கனவா? இல்லை! இல்லை!! முநிவரின் மஹிமையே இது! விலை மதிக்க முடியாத ஆடை ஆபரணங்கள் எங்கே சென்றன? எங்கிருந்து வந்தன!

ஆஹா! உண்மை விளங்கிற்று. அந்த சிந்தாமணியல்லவா அவர் சிந்தித்த பொருளைத் தந்தது! விரோசந! முநிவரிடம் அந்த மணியை நமக்களிக்கும்படி கேள்! என மந்திரியை அனுப்பினான். "பிராம்மணர் யாசிப்பவர். க்ஷத்திரியர் அளிப்பவர். துர்ஜய ராஜன் யாசிப்பது அழகோ? இது வரத்தால் வந்த மணி. கொடுக்கவோ விற்கவோ எனக்கு அதிகாரமில்லை" என்றார் கௌரங்கர். இதைக்கேட்ட அரசன் பலாத்காரமாக கொண்டுவரும்படி

நிலன் எனும் ஸேனைத்தலைவனை ஏவினான். அவன் ஆச்ரமத்தில் நுழைவதற்குள் மணியிலிருந்து பதினைந்து அக்ஷௌஹிணீ ஸேனையும் ஸேநாபதியும் கிளம்பினார்கள். மிக பயங்கரமான போர் நிகழ்ந்தது. இந்திரனையும் ஜயித்தவன் துர்ஜயன்! முநிவரின் அருளால் பிறந்தவன். முநிவரைக் காக்கவந்த ஸேனைகளை ஒரு முகூர்த்தத்தில் அடித்து வெற்றி பெற்றான். ரிஷி ஆச்சர்யமடைந்தார்.

கௌரங்கர் பகவானை வேண்ட தனது சக்ரத்தினால் ஒரு நிமிஷத்தில் ஸேனைகளுடன் துர்ஜயனைச் சார்ந்த அரக்கர்களைக் கொன்றார். **நிமிஷத்தில் கொன்றதால்** அவ்விடம் **நைமிஷாரண்யமானது**. அங்கு விஷ்ணுவின் அருளால் பல்லாயிரம் ரிஷிகள் விடு பெற்று வஸித்தனர். மணியிலிருந்து உண்டான வீரர்கள் மணிஜர் என்ற அரசர்களானார்கள். துர்ஜயன் மஹாவிஷ்ணுவின் பெருமையை உணர்ந்து, சித்ரகூடம் சென்று ஸ்ரீராமனை தியானம் செய்து துதித்து முக்தியடைந்தார். கௌரங்கர் தனதாச்ரமத்திற்கு வந்த மார்க்கண்டேயரிடம் விரதத்த தர்மத்தை விரிவாகக்கேட்டு தசாவதார ஸ்தோத்ரம் செய்து முக்தி பெற்றார்.

ஸரமா சரிதம்.

துர்ஜயனது புத்ரர்களான வித்யுத் ஸுவித்யுத் என்ற இருவரும் இந்திரனிடம் போர் புரியக் கிளம்பினார்கள். இந்திரன் குரு சொற்படி கோமேதம் எனும் யாகத்தைச் செய்ய ஆரம்பித்தான். பசுக்களைக்காக்க ஸரமா எனும் நாயை ஏவினான். சுக்ரர் கூறியபடி அஸுரர் தேவ பசுக்களைத் தூக்கிச்சென்றனர். அந்த பசுக்கள் சென்ற வழியே மோப்பம் பிடித்துக்கொண்டு சென்றது நாய். அஸுரர் பசுவின் பாலைக் கறந்து நாய்க்கு அளித்து, தேவர்களிடம் பசுக்களைக்காட்டாதே என்றார்கள். ஸரமை சக்ரனிடம் சென்று அஸுரர் தன்னைக் கட்டிப்போட்டதாகவும் தான் தப்பித்து வந்ததாகவும் கூறிற்று. மருத்துக்களை அனுப்ப அவர்கள் ரஹஸ்யமாக நாயின் பின் சென்றனர். பசுக்களைக் காணுமல் இந்திரன் அவைகள் எங்கே என்று கேட்க ஸரமா எனக்குத் தெரியாதென கூறிற்று. கோபங்கொண்ட சக்ரன் அதைக் காலால் உதைத்தான்.

பாலைக் கக்கிக்கொண்டே ஓடிற்று ஸரமை. அந்த வழியைப் பின்தொடர்ந்து ஸேனையுடன் சென்றான் இந்திரன். அஸுரஸேனை பசுக்களைச் சூழ்ந்து காப்பதைக் கண்டு அவர்களைக் கொன்று பசுக்களை மீட்டு வந்து கோமேதம் செய்து முடித்தான். அதனால் அமரர் பலம் அதிகரித்தது. போருக்குச் சென்று அசுரர்களை வென்றான் சக்ரன் அவர்கள் பயந்து ஓடிக் கடலில் பதுங்கிக்கொண்டார்கள்.

ஸர்வ தேவர்களிலும் சிறந்தவர் யார் ?

சிந்தாமணியின் மூலமாக உண்டான மணிஜ என்ற ராஜ பரம்பரையில் ப்ரஜாபாலன் என்றோர் அரசனிருந்தான். வேட்டையாட வநஞ்சென்ற வேந்தன் மஹா தபஸ் என்ற முநிவரைத் தர்சித்தான். ஸம்ஸாரக் கடலைக்கடக்க தோணி எது என வினவினான். ஸகல தேவர்களிலும் சிறந்தவரான பகவானைப் பூஜிப்பது தியாகம் செய்வது ஹோமம் செய்வது முதலிய தோணிகளால் பிறப்பு இறப்பெனும் பெருங்கடலைத் தாண்டலாம் என்றார். தேவரில் சிறந்தவர் யார் என அரசன் வினவ முநிவர் அதை விளக்க ஒரு கதை கூறினார்.

விஷ்ணுவினிடமிருந்தே ஸகல தேவர்களும் உண்டானார்கள் என்று வேதம் கூறுகிறது. பரமனால் படைக்கப்பட்ட தேவர் ஹிரண்ய கர்ப்பனது உடலில் அமர்ந்தனர். அந்த தேவரனைவர்க்கும் கர்வம் உண்டானது. அதனால் நானே சிறந்தவன் நானே யோக்யன் என்று வாதமிட்டுக் கொண்டிருந்தனர். அக்நி எழுந்தார். நானே இந்த ஹிரண்ய கர்ப்பர் உடலை ரக்ஷிப்பவன். ஆதலால் என்னை எல்லோரும் அர்ச்சிக்கவேண்டும். நானில்லையேல் இவ்வுடல் அழியும் பாருங்கள்! என்றுகூறி வெளிக் கிளம்பிற்று. உடல் அழியவில்லை. பிராணரூபான வடிவமான அச்விநீ தேவர் தாங்களில்லாவிடில் உடல் நாசமாகுமென கிளம்பினர். அப்பொழுதும் உடல் நாசமாகவில்லை. களைத்திருந்தது.

இப்படியே வாக்ரூபமான கௌரீ, ஆகாசவடிவமான கணபதி, சரீர தாதுக்கள், அஹங்கார வடிவரான ஸ்கந்தன், கண் வடிவரான ஆதித்யன், காமம் முதலிய

மாத்ருகணங்கள், திக்தேவதைகள், மநஸ் வடிவமான விஷ்ணு, தர்மம் எனும் பிரகிருதி, மஹத் எனும் சிவன் பித்ருக்கள் ஆகிய அனைவரும் உடலைவிட்டு மேலே சென்றார்கள். இனி வெளிக்கிளம்ப எவருமில்லை. ஆனால் உடல் அழியவில்லை. எல்லோரும் சேர்ந்து யார் இதைக் காப்பவன் என்று யோசித்து பதினாறு கலைகளுடன் கூடிய ஒரு புருஷன் காக்கிறான் என உணர்ந்தனர். அவரே விஷ்ணு. அவரே சிறந்தவர் என அவரை எல்லோரும் பூஜித்தனர். ஆதலால் அவரையே பூஜி என மஹா தபஸ் பிரஜா பாலனுக்குரைத்தார். இங்கு கூறிய தேவர்களே பதினைந்து திதிகளானார்கள். அவர்களது விரதமே கூறப்படுகிறது.

பிரதமையில் அக்நி விரதம்.

பிரும்மாவின் கோபத்திலிருந்து அக்நி உண்டானது. அது முதல் திதியாகும். பிரதமையை அக்நிக்களித்து பிரதிபத் என்ற நிநத்திலுண்டான நீ ஸகல தேவர்களுக்கும் பிராதிபதிகமாவாய் என்றார்கள். ஒரு சப்தத்தின் முதல்பதம் பிராதிபதிகமாகும். அதன்மேல்தான் மற்ற பிரத்யயங்கள் தோன்றும். இது வியாகரண சாஸ்திர கொள்கை. அதேபோல் அக்நியை முதலாகக் கொண்டுதான் ஔபாஸநம் ஸீமந்தம் உபநயநம் முதலிய கர்மாக்கள் நடக்கின்றன. அன்று அக்நியில் ஹவிஸ்ஸை ஹோமம் செய்தால் மநுஷ்யாள் பித்ருக்கள் தேவர் அஸுரர் அனைவரும் ஆநந்தமடைவர்.

அச்விநீ துவிதீயா விரதம்.

பிராணபாநர் என்ற தேவர்கள் குதிரை வடிவமான ஸம்க்ஞாதேவியிடம் ஸூர்யனால் உண்டுபண்ணப்பட்டார்கள். அந்த நாள் துவதியையானதால் அந்தத்திதியை அவருக்கு அளித்தார் பிரும்மா. அன்று விரதமிருந்து பூஜித்தால் நோய்வராது. அழகும் செல்வமும் உண்டாகும். இவர்கள் சியவந முநிவர் பத்நியான ஸுகன்யயைப் பரீக்ஷித்ததும், சர்யாதியின் யாகத்தில் இந்திரனுடன் ஸமமாக ஸோமபாநம் செய்ததும் துவிதியையாம்!

கௌரீ திருதீயா விரதம்.

பிரும்மா ஸதியை ருத்ரனுக்கு அளித்தது திருதியை. தக்ஷன் பெண்ணுகப்பிறந்தது திருதீயை. உடலைவிட்டது திருதியை. பார்வதியாகத்தோன்றியதும் சிவனை மணந்ததும் திருதீயை திதி. ஆதலால் உப்பில்லாமலிருந்து தேவீ விரதம் செய்யவேண்டும்.

விநாயக சதுர்த்தீ விரதம்.

அஸத்துக்கள் செய்யும் கர்மாவிற்கு விக்நத்தை உண்டுபண்ண ஒரு தேவனைப் படைக்கவேண்டுமென தேவர் ஈச்வரனை வேண்டினர் பார்வதியைப் பரமசிவன் நோக்க ஆகாயத்திலிருந்து விக்ந ராஜர் தோன்றினர், மிக அழகாகத் தோன்றிய அவரிடம் ஸகதேவ ஸ்திரீகளும் மோஹங்கொண்டனர். சிவன் அவருக்கு யானை முகமும் தொந்தி வயிறும் உண்டாகும்படி செய்தார். உடனே அவர் உடலை அசைக்க ஆயிரக் கணக்கான கணங்கள் தோன்றின. அனைவர்க்கும் இவரைத் தலைவருகச்செய்தார் சிவன். இவை எல்லாம் சதுர்த்தியிலேயே நேர்ந்ததால் விநாயகரை நாடி அன்று விரதமிருக்க வேண்டும்.

நாகபஞ்சமீ.

அநந்தன் வாஸுகி முதலியவருண்டானது பஞ்சமீ. அவர்கள் ஸந்ததி பிராணிகளைக் கடிக்க ஆரம்பிக்க தாய் சாபத்தால் பிரும்மா ஸர்ப்பயாகத்தில் மாள்வீர் என சபித்தார். எங்களைத் துஷ்ட பிராணியாக படைத்தது நீரே. நீரே சாபமளித்தால் என் செய்வோம்? என்றனர் ஸர்ப்பங்கள். காருட மந்த்ரம் ஒஷதி சதாசாரமுள்ளவர் ஆகியவர்களைக் கடிக்காதீர்கள். பூமியை விட்டு பாதாளம் செல்லுங்கள் என்று கூறினர். நாகங்கள் பிறந்ததினமும் சர்ப்பயாகம் நின்ற தினமும் பஞ்சமீ திதி ஆனதால் சர்ப்பங்களுக்கு மிக பிரியமானது. பஞ்சமீ அன்று நாகங்களுக்கு பூஜை செய்து புற்றில் பால் வார்த்தால் சர்ப்பபயம் நீங்குவதுடன் புத்ரஸந்தானமும் உண்டாகும்.

ஷஷ்டீ விரதம்.

ஹிரண்யாக்ஷன் விப்ரசித்தி முதலிய அசுரர்கள் தேவர்களைப்போரில் முறியடித்ததால் தங்களுக்கு ஒரு ஸேனாதிபதி இருந்தால் தான் வெற்றி உண்டாகுமெனக் கருதி தேவர்கள் சிவனைச் சரணமடைந்தார்கள். சிவன் அகங்கார தத்துவத்தினால் சுப்பிரமண்யனைப் படைத்து அவரைச்சேனாதிபதியாகச் செய்தார். சிவன் கோழியை யும் சாக விசாக என்ற இருவரையும் படைத்து விளை யாடுவதற்காக அவருக்களித்தார். அவருக்கு அபிஷேகம் செய்த நாள் ஷஷ்டி ஆனதால் ஷஷ்டி விரதம் இருக்க வேண்டும்.

ஸப்தமீ சூர்ய விரதம்.

இறைவனது ஞானசக்தி சூர்யனாகத் தோன்றியது. அதிகமான அவருடைய மண்டலத்தைச் சாணை பிடித்த நாளும் ஸப்தமியே. அன்று விரதமிருந்து சூர்யனை உபாஸித்தால் நோயற்ற வாழ்வும் குறைவற்றசெல்வமும் உண்டாகும்.

அஷ்டமீ சக்தி விரதம்.

அந்தகன் முதலிய அசுரர்கள் தேவர்களை ஹிம்ஸித்த தால் அவர்களைக் கொல்ல சிவன் வீரபத்ரனைத் தோன்றி னார். யானை உருவெடுத்து வந்த அந்தகனை சிம்ஹ உருவ மெடுத்துக்கொன்று அத்தோலை உடுத்திக்கொண்டார். சிவனது உக்ரரூபத்திற்கேற்ற ருத்ராணியும், மாஹேச்வரீ, வைஷ்ணவீ, கௌமாரீ, வாராஹீ, முதலிய எட்டு தேவி களும் தோன்றினார்கள். அவர்களையும் நாடி அஷ்டமீ விரதமிருப்பது ஸகல பாக்கியங்களையும் அளிக்கும்.

நவமீ துர்க்கா விரதம்.

சிந்துத்வீபன் என்பவன் வேத்ரவதியை மணந்து இந்திரனைச் சிக்ஷிக்கத்தக்கவேத்ரனை உண்டுபண்ணினான். சுக்ரர் கூறியபடி அவன் தவம் செய்து புருஷர்களால் தனக்கு மரணம் இல்லை என்று வரம் பெற்றான். அவ் வசுரன் தேவர்களையும், பிராம்மணர்களையும் தாக்க அனை வரும் ஒன்றுகூடி காயத்ரீ வடிவமான தேவியை வேண்டி னார்கள். தேவி எட்டுகைகளுடன் பற்பல ஆயுதங்களைத்

தாங்கி வேத்ராசுரனுடன் போர் புரிந்து அவனைக்கொன்ருள். அவள் தோன்றிய நவமியன்று விரதமிருந்து துர்கையைப் பூஜித்தால் சத்ருக்கள் அழிவதுடன் ஸகல பாக்யங்களும் உண்டாகும்.

தசமீ கன்னிகை விரதம்.

பிரம்மா உலகம் படைப்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது அவருடைய காதுகளிலிருந்து பத்து கன்னிகைகள் உண்டானுர்கள். அவர்கள் தங்களுக்கு இடத்தையும், பதியையும், அளிக்கவேண்டுமென்றுபிரார்த்திக்க பிரம்மா திக்பாலகர்களைப்படைத்து அவர்களுக்கு மணம் செய்வித்தார். ஆதலால் தசமியன்று விரதமிருந்தால் அஷ்டதிக் பாலகர்களுடைய அருளால் ஸகலவிதமான ஸெளபாக்யங்களும் உண்டாகும்.

ஏகாதசீ குபேர விரதம்.

பிரம்மா வாயுவைக்கொண்டு குபேரனைப்படைத்து தேவர்களுடைய ஸகல பொருள்களையும், நிதிகளையும் காக்கும்படி குபேரனுக்குக்கட்டளையிட்டார். அன்றுஅவரை அர்ச்சித்தால் செல்வம் உண்டாகும்.

துவாதசீ விஷ்ணு விரதம்.

பரமாத்மா உலகைப்படைக்க பிரம்மனையும், பரிபாலிக்க மஹாவிஷ்ணுவையும் படைத்தார். விஷ்ணுவிற்கு சகலவிதமான சக்திகளையும் யோக நித்ரையையும் பாதாளத்தில் அனந்தனுய் இருத்தலையும் அக்ஞானத்தை ஜயிக்க சங்கத்தையும் காலசக்ரவடிவமான சக்ரத்தையும் மஹாலக்ஷ்மியையும் அளித்தார். அவர் தோன்றிய துவாதசியில் விரதமிருப்பவர் செல்வம், கீர்த்தி, அறிவு, முக்தி முதலியவைகளைப் பெறுவர்.

திரயோதசி தர்ம விரதம்.

பகவானுடைய வலது புறத்திலிருந்து திவ்யாலங்காரத்துடன் ஓர் புருஷன் தோன்றினுன். நீ ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு வர்ணத்திலும் ஒவ்வொரு வகையாக இருந்து குடிகளைக் காப்பாற்றிவா என்ருர். அவர்

தோன்றியது திரயோதசி ஆதலின் அன்று விரதமிருப்போர் பாபமகன்று தர்ம பலனைப்பெறுவர். அவர் தவம் செய்த இடம் தர்மாரண்யம் எனப்படும். தர்மதேவருக்குப் பாயஸ நிவேதனம் செய்து தானமளிப்பது மிக சந்தோஷகரமானது.

சதுர்தசி ருத்ர விரதம்.

உலகைப்படைக்க கருதிய பிரம்மத்தினிடமிருந்து ருத்ரர் உண்டானார். அவருக்கு உலகை ஒடுக்கிக்கொள்ள சக்தியையும் சகல வேத சாஸ்திரங்களைப் படைக்கும் சக்தியையும் சதுர்தசி திதியையுமளித்தார். அவரைக் காலையில் எழுந்து நினைத்தாலும் பூஜித்தாலும் ஸகல பாபங்களுமகன்று ஆனந்தமடைவார்கள்.

அமாவாஸ்யை பித்ரு விரதம்.

பரப்ரம்மத்தினிட மிருந்து தன்மாத்ரைகள் புகை வர்ணமுள்ள உருவத்துடன் கிளம்பினார்கள். பிறந்த உடன் தேவருடன் ஸோமபானம் செய்வோம் என்று மேலே கிளம்பினார்கள். அவர்களைப் பார்த்து பரமாத்மா நீங்கள் பித்ருக்கள். ஊர்த்வ முகமுள்ளவர்கள். நாந்தி முக பித்ருக்கள் தென் திக்கையும் அவர்கள் தோன்றிய தினமாகிய அமாவாஸ்யையும் அவர்களுக் களித்தார். அன்று உபவாஸத்துடன் தர்ப்பத்தில் எள்ளு ஜலத்தினால் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்வோர்களுக்கு ஸந்தானமும் உண்டாகும். ஞானமும், முக்தியுமுண்டாகும்.

பௌர்ணமீ ஸோம விரதம்.

பிரம்மாவினுடைய மானஸிக புத்ரரான அத்திரியினிடமிருந்து தோன்றியவர் சந்திரன். தக்ஷனுடைய இருபத்தேழு பெண்களை மணந்து ரோஹிணியிடம் மாத்திரம் அதிக அன்பு பாராட்டினான். தக்ஷன் அவரைச் சபிக்க ஸ்வரூபத்தை இழந்தான். பாற்கடலைக் கடைந்தபொழுது அங்கிருந்து தோன்றிய சந்திரனுக்கு ஒஷதிகளுக்குத் தலைவனாய் இருந்தலையும் பௌர்ணமியையும் அளித்தார் பிரும்மா. அவரை அன்று ஆராதித்தால், அழகையும், தனதான்யாதிகளையும் பெறலாம்.

மனோபாவத்தினால் பலஸித்தி, மற்றதால் அல்ல.

பிரம்ம புத்ரரான ஆருணியெனும் முனிவர் உக்ரமாகத் தவம் புரிந்தார். ஒரு வேடன் அவரைக் கொன்று மரவுரியைக் கவரக் கருதினான். முனிவர் பயந்து நாராயணனை மனதினால் தியானம் செய்தார். முனிவரைக் கண்டவுடன் அவன் அவரைக் கொல்ல மனமில்லாமல் அவரைப்போலவே தானும் தவம்செய்து நற்கதி பெறக் கருதினான். உபதேசம் செய்யும்படி அவரை வேண்டினான். பல பிரம்மஹத்திகளைச் செய்த வேடனுடன் பேசவும் விருப்பமில்லாமல் அவர் மௌனியாய் இருந்தார். பசியுள்ள ஒரு புலி அவர்மேல் பாய்ந்தது. ஒரே பாணத்தினால் வேடனதைக் கொன்று தள்ளினான். பிராம்மணன் அதையறிந்து "நமோ நாராயணாய" என்றான். இதைக் கேட்டுக்கொண்டே இறந்த புலி உடலிலிருந்து திவ்ய புருஷன் கிளம்பினான். முனிவரை உமதருளால் வைகுண்டம் செல்கிறேன் நமஸ்காரம் என்று கூறினான். நீயார் என்றவர் கேழ்க்க "முற்பிறவியில் நான் தீர்க்கபாகு என்ற வேதியன். வேத சாஸ்திரம் அறிந்தவன். மற்ற பிராம்மணர்களால் எனக்கென்ன ஆகவேண்டும்? என்று கர்வத்துடன் பேசினேன். என்னைப் புலியாகும்படியும் இறக்கும் பொழுது ஹரி நாமாவைக் கேட்டு நற்கதி பெறுவாய்" என்றும் அவர்கள் கூறினார்கள் என்று கூறி அவர் வைகுண்டம் சென்றபின், ஆருணி தன்னைக் காத்த வேடனை நோக்கி உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டார். வேடன் நாராயணன் திருவடியை அடையும் வழியைக் கூறும் என்று கேழ்க்க அவனுக்கு "கணந்நம் சாப்பிடாதே, பொய் கூறாதே என உபதேசித்து" ஆருணி மறைந்தார். வேடன் நாரணன் நாமாவைக் கூறி கடும்தவம் புரிய ஆரம்பித்தான். பசித்தபொழுது இலைகளை உண்ண ஆரம்பித்தான். இது கணந்நம் என்று ஓர் சொல் கூற, அதை விட்டு உலர்ந்த இலைகளை உண்ண ஆரம்பித்தான். இதுவும் கணந்நம் என்ற சொல்லைக்கேட்டு சுத்த உபவாஸத்துடன் தவம் செய்தான். ஒரு நாள் தற்செயலாக துர்வாஸமுனி அவனருகே வந்தார். உக்ரமான அவன் தவத்தைக்கண்டு ஆச்சர்யமடைந்தார்.

வேடன் அவருக்கேற்றபடி பூஜைசெய்து கந்தமூலங்களை அளித்தான். அவனைப் பரீக்ஷிக்கக் கருதி முனிவர் கோதுமையால் ஆகிய அன்னத்தை உன்னைத் தேடிவந்த எனக்கு அளி என்றார். "ஆ!" என்செய்வது? அரிய விருந்தினருக் கேற்ற உணவு அளிக்க இயலவில்லையே! என்று வருந்தினன். உடனே ஆகாயத்திலிருந்து ஒரு சுவர்ண பாத்திரம் அவன் கையில் வந்து விழுந்தது. மஹரிஷே! அருகில் உள்ள நகரம் சென்று பிக்ஷைவாங்கி உமக்கு வேண்டிய அன்ன மளிக்கிறேன். சற்று இருங்கள் என்று இயம்பினன்.

அருகிலுள்ள மரங்களிலிருந்து கோதுமை அன்னம் வந்து விழுந்து பாத்திரத்தை நிரப்பியது. அதை முனிவரிடம் அளித்து கால்கழுவி உண்ணுங்கள் என்றான். முனிவர் விதிப்படி என் காலை அலம்பி அன்னமிடு என்றார். நான் வேடன்! பிரம்மஹத்தி செய்த மாபாபி! மந்திரமும் ஒன்றும் அறியேன்! என் செய்வேன்? என்று ஏங்கி குரு பாதங்களை வணங்கி அருகிலுள்ள தேவிகாநதியை முனிவர் பாதத்தினருகே வரும்படி வேண்டினன். அங்ஙனமே நதி வர முனிவர் கால் அலம்பி அதை உட்கொண்டார். எலும்பும் தோலுமாக இருக்கும் வேடனைப் பார்த்து ஆறு அங்கங்களுடன் வேதமும் பிரம்மவித்யையும் உனக்குப் பிரத்யக்ஷமாகட்டும். ஸத்யதபஸ் என்ற ரிஷியாக ஆவாய் என்றார். வேடனான நான் வேதத்தை எப்படிக் கூறுவது? என்று அவன் கேழ்க்க, தவத்தினால் வேட உடல் அகன்று முனி உடல் பெற்றாய். எல்லாம் உனக்குத் தோன்றும் என்று கூறிச் சென்றார்.

தனத்தினால் வேள்வியையோ, ஜபம், ஹோமம் முதலியவைகளையோ செய்யாவிடினும் மனதில் எண்ணம் நல்லதாக இருந்ததால் வேடனும் முனிவன் ஆனான்.

வேலைக்காரி ராணியானாள்.

பத்ராச்வன் என்ற அரசன் காந்திமதி என்ற மனைவியுடன் அகஸ்த்தியரை வரவேற்று பூஜைசெய்து தனது அரண்மனையில் ஏழு நாளாவது தங்கும்படி வேண்டினான். அகஸ்த்தியர் அரசனது தர்மத்தையும் ஒப்பில்லாத போக பாக்கியத்தையும் கண்டு ராணியினிடம் முதல் நாள்,

ஜகந்நாத நல்லது! நல்லது! என்றார். அதன் கருத்தை ராணியோ, அரசனோ, மந்திரியோ, புரோஹிதரோ ஒருவருமறியவில்லை. இரண்டாவது நாள் ராணியை நோக்கி உலகம் ஏமாந்ததே! ஏமாந்ததே!! என்றார். மூன்றாவது நாள் மூட உலகம் இதை அறியவில்லையே! என்றார். நான்காவது நாள் இருகரங்களையும் மேலே தூக்கி ஸாது ஸாது ஜகந்நாத! ஸ்திரீ! சூத்ர! அரசே! வைச்ய! பிரஹ்லாத துருவ ஆகிய இவர் ஸாது ஸாது! என்று கூறி மற்ற நாட்களில் கூத்தாடினார். இதன் கருத்தை உணராத அரசனும் மனைவியும் முனிவரடி பணிந்து அதை விளக்கும்படிக் கூறினார்கள். இந்த ராணி முற்பிறவியில் ஒரு வைச்யனது வீட்டில் வேலைக்காரியாய் இருந்தாள். நீ அவளது புருஷனை ஹரிதத்தன். வைச்யன் புரட்டாசி துவாதசியில் நியமத்துடன் விஷ்ணு ஆலயம் சென்று பகவானை அர்ச்சித்தான். ஆலய தீபத்தைக் காக்கும்படி உங்களை ஏவினான். இருவரும் இரவெல்லாம் கண்விழித்து அதைக் காப்பாற்றினீர்கள். அந்த புண்யத்தினால் வேலைக்காரி ராணியாகவும் நீ அரசனாகவும் ஆனீர்கள்.

'பிறருடைய வேலையைச் செய்வதற்காகவே உங்களுக்கு இந்த பதவியென்றால் சொந்த பொருளைக் கொண்டு உபசரிப்பவருக்கு எந்த பாக்யம் உண்டாகுமெனக் கூறவேண்டுமோ? வேலைக்காரர்களுக்கும் பெரும் பதவியளித்த இறைவன் பெருமையை முதல்நாள் கூறினேன். வேலைக்காரி ராணி ஆனதால் அவளையும் கொண்டாடினேன். ஒருநாள் செய்த புண்யத்திற்கு இந்த பலனையளித்த இறைவனை உலகம் அறியவில்லையே என்று மூடன் என்றேன். வைச்யனுக்கு பணிவிடை செய்த ஸ்திரீயும் சூத்ரனும் நற்கதியை அடைந்தார்கள். அசுரனாகப் பிறந்தும் பிரஹ்லாதன் விஷ்ணுவைச் சரணமடைந்ததால் ஐந்து வயதான துருவன் பகவானை அடைந்ததால் அவர்களையும் ஸாது என்றேன். அந்த வைச்யன் உபாஸித்த பத்மநாப துவாதசியை நீயும் ஆராதி என்று கூறிமறைந்தார்.

அகஸ்த்ய கீதை.

அகஸ்த்யர் பத்ராச்வனுக்கு உபதேசித்தது அகஸ்த்ய கீதை எனப்படும். பகவத் கீதைபோல் இதுவும் பதி

னெட்டு அத்தியாயங்களுள்ளது. தத்துவங்களையெல்லாம் கதை ரூபமாக விளக்குவதே இங்கு விசேஷமானது. எதனுல் ஸம்ஸார துன்பம் அகலும்? என்று கேழ்க்க, கதை ரூபமாக விளக்குகிருர் அகஸ்த்யர். பசுபாலன் எனும் அரசன் பசுக்களை ரக்ஷித்துக்கொண்டு கிழக்கு ஸமுத்ரத்தினருகே சென்ருன். ஸமுத்ரக்கரையில் பாம்புகள் நிறைந்த வனத்தையும் சில மரங்களையும் காமவஹா என்ற நதியையும் அங்கு மிங்கும் திரியும் ஐந்து பிரதான புருஷர்களையும் அழகிய ஸ்த்ரீயைத் தரிக்கும் ஒரு புருஷனையும் கண்டான். அவனுடைய உதடு மூன்றுவர்ண முள்ளதாக இருந்தது. அரசனைக்கண்டு அனைவரும் பயந்து ஒன்ருகச் சேர்ந்தார்கள். அந்த ஸர்ப்பங்களாலும் திருடர்களாலும் சூழப்பட்ட அரசன் என்ன செய்வது என்று எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது மூன்று வர்ணமுள்ள மற்ருெரு புருஷன் அருகே வந்து நீ எங்கே செல்கிருய்? என்று கேட்டான். அங்கிருந்த ஸ்த்ரீ அரசனைத் தடுத்தாள். ஒரு வீரன் அஞ்சாதே என்று கூறினுன். மற்றும் சில புருஷர்கள் ஆயுதங்களைத் தாங்கி அரசனிடம் புகுந்தார்கள்,

அரசனது வீடு ஜலம், காற்று, தீ இவைகளால் சூழப்பட்டு விஸ்தாரமாக இருந்தது. புருஷன் அரசனிடம் சென்று நான் புத்திரன் இல்லாதவன், என்ன செய்ய வேண்டும்? நாங்கள் அனைவரும் உன்னைக் கட்ட விரும்புகின்ருேம். நாங்கள் தோல்வி அடைந்தால் உம்மிடம் லயமாவோம். ஒருவன் புத்திரன் ஆனுல் எல்லோரிடத்திலும் புத்திரன் உண்டாவான். புத்திரன் எனக்கும் மற்றவர்களுக்கும் கர்த்தாவாக ஆவான். நான் சுக துக்கப்பற்றில்லாதவன் என்று கூறி அரசன் ஒருவனைப் புத்திரனுகச் செய்தான். மற்றவர்களால் விடுவிக்கப்பட்ட அவன் அவர்களுடன் ரமித்துக்கொண்டிருந்தான்.

இப்படி வேதாந்த தத்துவத்தை அதிநுட்பமாக பல புராணங்களில் வர்ணிக்கிருர் புராண கர்த்தா. ஆனுல் இக்கதைகள் சில இடங்களில் ரசமாக இருப்பதில்லை. கதையின் கருத்து: பசுபாலன் என்பது பரமாத்ம ஸ்வரூபம். கிழக்கு சமுத்ரம் என்பது முதல் ஸ்ருஷ்டியான ஜலம். பாம்பு, மரம், நதி என்பவை பிராணிகள் பூர்வ

வாஸனையுடன் பிரகிருதியினிடம் லயமான நிலை. ஐந்து பிரதான புருஷர் என்பவர் ஐந்து மகாபூதங்கள். ஸ்த்ரீயோடு கூடிய புருஷன் பிரகிருதி புருஷனாகும். அவனது உதடு மூன்று வர்ணமுள்ளது என்பது ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களாம். பரமாத்மாவின் ஆணையினால் எல்லாம் ஒன்று சேர்ந்து பிரம்ம, விஷ்ணு ருத்ரர்கள் உண்டானார்கள். ஆங்குள்ள ஸ்த்ரீ மாயையாகும். அவள் ஜீவராசிகள் பரப்ரம்மத்தை அடையாதபடி தடுக்கின்றாள். காம, க்ரோத, லோப முதலிய துர்குணங்கள் திருடர் ஆவார்கள். ஆயுதங்களுடன் அவர்கள் அரசனிடம் நுழைந்தது விஷயங்களுடன் ஜீவனை அண்டியதாகும். அரசன் வீடு என்பது ஐந்து பூதங்களாலாகிய ஸ்தூல சரீரம். முதல் ஜீவன் பரமனிடம் சென்று நான் சிருஷ்டி சக்தி இல்லாதவன், நான் எப்படி படைக்கவேண்டும்? ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு உம்மைத்தழுவ விரும்புகின்றேன். பிரபஞ்ச விஷயத்தில் பற்றற்று இருந்தால் வேதாந்த மார்க்கத்தைக் கைக்கொண்டு தங்களிடம் இரண்டற ஒன்றாகக் கலந்து இன்பமனுபவிப்போம். பிரம்மா பத்னியுடன் சேர்ந்து ஸிருஷ்டி கர்மத்தை ஆரம்பித்தால் நாங்கள் ஒன்றுசேர்ந்து உலகில் அதை விருத்தி செய்வோம். புதல்வர்கள் இல்லறத்தில் ஈடுபட்டு பெற்றோருக்கு மறுமைக் கடன்களைச் செய்வதுடன் புத்திரர்களைப் பெற்றெடுத்து பித்ருக்கடனிலிருந்து விடுபடுவார். புருஷன் மாயா சம்பந்தமில்லாமல் தாமரை இலையிலுள்ள நீர் போல் இருக்கின்றான். இப்படி கூறிய புருஷன் ஹிரண்யகற்பனை படைத்தான். தான் ஒன்றிலும் பற்றில்லாவிடினும் ஒவ்வொருவரிடமும் அந்தராத்மாவாக இருந்து ரமிக்கின்றான் பரமாத்மா.

நல்லபதியை அளிக்கும் துவாதசி விரதம்.

அப்ஸரஸ்ஸுகள் நாரத முனிவரைப் பார்த்து நாராயயணனையே நாங்கள் பதியாக அடைய என்ன உபாயம்? எனக்கேட்டனர். பெரியோரை எதைக் கேட்டாலும் நமஸ்காரம் செய்து கேட்கவேண்டும். நீங்கள் அப்படிச் செய்யவில்லை. ஆயினும் நாராயணன் நாமத்தை கூறியதால் உங்களுக்கு தத்துவத்தைக் கூறுகின்றேன். அஷ்டாவக்ரர் மூலமாக நமஸ்காரம் செய்யாததின் பயனை

அனுபவிப்பீர்கள். வஸந்த ருது சுக்லபக்ஷ துவாதசியில் உபவாஸமிருந்து விஷ்ணுவைப் பூஜிக்கவேண்டும். சிவந்த புஷ்பங்களால் ஒரு மண்டலத்தை அமைத்து அதனிடையில் "நமோ பவாய" என்பது முதலிய வாக்யங்களைக் கூறி விஷ்ணுவின் உடலைக் கல்பிக்கவேண்டும். இரவில் கண்விழித்து விஷ்ணுவைப் பதினாறு உபசாரங்களால் உபசரிக்கவேண்டும். கரும்புரசத்தை நிவேதனம்செய்து பிராம்மணர்களுக்களித்து மிகுதியைப் புசிக்கவேண்டும். என்று கூறி நாரதர் மறைந்தார். அப்ஸரஸ்ஸுகள் அப்படி அனுஷ்டானம் செய்ய அருகிலுள்ள ஸரஸ்ஸுக்குச் சென்றூர்கள். ஜலத்தில் தவம் செய்துகொண்டிருந்த அஷ்டாவக்ரர் எனும் முனிவருடைய உடலிலுள்ள எட்டு கோணல்களைக்கண்டு நகைத்தார்கள். குருவான நாரதரையும் என்னையும் அவமதித்ததால், கிருஷ்ணனே உங்களுக்கு விரத மகிமையால் கணவன் ஆனாலும் பிறகு இடையர்கள் உங்களைக் கொள்ளையடித்துக் கற்பையும் அழிப்பார்கள் என்று சாபம் கொடுத்தார்.

கிருஷ்ணவதாரத்தில் இவர்கள் கிருஷ்ணனைப்பதியாக அடைந்தனர். பகவான் வைகுண்டம்சென்ற பிறகு அர்ச்சுனன் இவர்களைத் துவாரகையைவிட்டு வேறிடம் அழைத்துச் சென்றான். அச்சமயம் முனிசாபத்தினால் இவர்களை இடையர்கள் கொள்ளையடித்துக்கற்பையும் அழித்தார்கள்.

பெரியோரை நமஸ்கரித்தபின்பே தான் வேண்டியதைக் கூறும்படி கேழ்க்கவேண்டும். ஸாதுக்களை அவமதித்த மனைவிகளைக்கூட பகவான் காப்பாற்றாமல் சிக்ஷைக்கு ஆளாக்கினார்.

சுபவிருதம், தன்யவிருதம், காந்தன் விருதம், அவிக்ந விருதம், காம விருதம், ஆரோக்ய விருதம், புத்ரப்ராப்தி விருதம், முதலிய அபூர்வ விருதங்களைக் கூறினார். விஷ்ணுவினிடம் சுப்ரமண்யனை ஆவாஹனம் செய்து பூஜை செய்யும்படியாகக்கூறியது ஒரு அரிய விஷயம்.

அநரண்ய சரிதம்.

அநரண்யன் எனும் சக்ரவர்த்தி ஒரு சமயம் மானஸ, ஸரஸ் சென்றார். அங்கு ஒரு அழகிய தாமரையைக் கண்டார். அதன் இடையில் கட்டைவிரல் அளவுள்ள ஒரு

புருஷன் சிவந்த வஸ்த்ரங்களை அணிந்திருக்கக் கண்டார். அரசன் தனது சாரதியை அழைத்து அந்த புஷ்பத்தைப் பறித்துவா அதை யான் தலையில் தரித்துக் கொண்டால் எல்லோரும் என்னைக் கொண்டாடுவார்கள் என்ருன். அப்படியே சாரதி அதைப் பறிக்க ஆரம்பிக்கும் பொழுது ஹூம் என்ற சப்தம் தோன்றிற்று. அதனால் பயந்து விழுந்து இறந்தான் அவன். அந்த சப்தத்தால் சக்ரவர்த்தியும் குஷ்ட நோய்க்கு ஆளானன். அரசன் துயரம் கொண்டு குருவான வசிஷ்டரை எதனால் இங்ஙனம் தோன்றிற்று? எதனால் இது அகலும்? என்று வேண்டினன்.

அரசே! அத்தாமரை பிரம்மோத்பவம் என்ற பெயருள்ளது. அதைத் தரிசித்து அந்த புண்ய தீர்த்தத்தில் முழுகினல் ஸர்வ பாபங்களும் அகலும். தாமரையிலுள்ள கட்டைவிரல் அளவுள்ள புருஷன் பிரம்மா. அவரை வணங்காமல் அந்த தாமரையை அபஹரிக்க முயன்றதால் சாரதியும்இறந்தான். நீயும் நோய்வாய்ப் பட்டாய். **ஆரோக்ய விரதமென்பதை** ஸப்தமியில் ஆரம்பித்து ஓர் ஆண்டு செய்து வந்தால் அந்நோய் அகலும் என்ருர். நோயிற்கொடிய பெரும் வியாதியையே அகற்றக்கூடிய ஆரோக்ய விரதம் மற்ற நோய்களைப் போக்கடிக்கும் எனக்கூறவும் வேண்டுமோ? ஸார்வ பௌமவ்ருதம் முதலியவைகளைக்கூறி அகஸ்த்ய கீதையை முடிக்கிருர்.

ருத்ர கீதை.

ருத்ரன் கூறுவதாக இருபது அத்யாயங்களில் ஏழு த்வீபங்களையும் அவைகளில் உள்ள வர்ஷங்களையும், கண்டங்களையும், குலபர்வதங்களையும், நதிகளையும், விரிவாக வர்ணிக்கிருர். அதில் சிவன் நாராயணனுடைய பெருமையை விரிவாக வர்ணிக்கிருர். நாராயணனே சிறந்த தேவன். யாகங்களால் அவனையே பூஜிக்கின்ருேம். - அவரே பிரம்ம, விஷ்ணு, ருத்ரர்களாகி உலகைப் படைத்து பரிபாலித்து தனக்குள் சேர்த்துக் கொள்கிருர் என்று கூறி அகஸ்தியர் முதலிய மஹரிஷிகளுக்கு தனது ஸ்வரூபத்தைக் காண்பிக்கின்ருர். அவர் உடலில் பிரம்மாவும், அவர் ஹ்ருதயத்தில் மிகப் பிரகாசமான நாராயணனையும் கண்டார்கள். யாகத்தில் செய்யும் ஹோமத்தை நாங்கள் மூவருமே உண்ணுகின்ருேம் என்ருர்.

பாஷண்ட சாஸ்த்ரம் எதனுல் உண்டாயிற்று? என ருத்ரன் கூறினுர். தண்டகாரண்யத்தில் கௌதமமுனிவர் பிரம்மாவை நாடி கடும் தவம் புரிந்தார். அவர் யாது வரம் வேண்டும் என்று கேழ்க்க நான் உள்ள இடத்தில் அபரிமிதமாக தான்யங்கள் விளேயவேண்டும். விருந்தி னருக்கு நான் எப்பொழுதும் அறுசுவை அன்னம் அளிக்க வேண்டும் என்று வரம் கேட்டார். அங்ஙனமே வரம் பெற்று சதசிருங்கம் எனுமிடத்தில் ஆச்ரமம் அமைத்தார்.

அன்றன்று காலேயில் முளேக்கும் பயிர் பகலில் யதேஷ்டமான தான்யத்தைத் தரும். அதைக்கொண்டு விருந்தினருக்கு அன்னமிட்டுக் கொண்டிருந்தார். ஒரு சமயம் உலகில் மழையின்றி துர்பிக்ஷம் தோன்ற முனிவர் அனேவரும் கௌதமரது ஆச்ரமம் செழிப்பாகயிருக்கிறது என்று கேட்டு சிஷ்யர்களுடன் அங்குவந்து குவிந்தனர். கௌதமரும் அன்புடன் அர்ச்சித்து வந்தார். துர்பிக்ஷம் அகன்று உலகம் செழித்தபொழுது முனிவர்களின் தலேவ ரான மாரீசர் கௌதமபுத்ரரான சாண்டில்யனே அழைத்து நாங்கள் எங்களாச்ரமம் செல்கின்ருேம். உனது தந்தை யிடம் கூருமல் செல்வது தர்மம் அல்ல என்ருர். மற்ற மகரிஷிகள் நமக்கு அன்னமளித்ததால் நம்மை விலேக்கு வாங்கி விட்டாரா? அவரிடம் உத்திரவு பெற்றுதான் செல்ல வேண்டுமா? நாம் அவருக்கு அடிமைகளா? என்று வெகுண்டு மாயையினுல் ஒரு பசுவைப்படைத்து கௌதமரது சாலேக்கு அனுப்பினுர்கள், கௌதமர் அதை ஓட்ட அதன்மீது ஜலத்தைத் தெளித்தார். உடனே அது கீழே விழுந்து இறந்தது.

இதைக்கண்டு எல்லோரும் விரைந்து கௌதமரிடம் சொல்லாமல் போகவே ஏன் விரைந்து செல்லுகிறீர்கள்? சிலநாள் இங்கு தங்கல் ஆகாதோ? என்று வேண்டினுர். பசுவைக் கொன்றவரிடம் பேசவும் கூடாது என்று எல்லோரும் கிளம்ப, தெறியாமல் நேர்ந்த இதற்கு பிராயச் சித்தம் கூறுங்கள் என்ருர் முனிவர். முடியாத ஒன்றை பிராயச்சித்தமாக கூறவேண்டும் என்று கருதி பிரும்ம லோகத்திலுள்ள கங்கையைக் கொண்டுவா என்று கூறி ஞர்கள்.

கௌதமர் தவம் செய்ய பரமசிவன் தன் ஜடையில் ஒரு பாகத்தையும் கங்கையையும் சதசிருங்கத்திற்கு அனுப்பினார். இதைக்கண்டு ஸப்த ரிஷிகளும் ஆச்சர்யமடைந்து போற்றினர். ஜலம்பட்டவுடன் பசுவும் எழுந்து ஓடிற்று! தேவர்கள் மஹரிஷிகள் செய்த அதர்மத்தை இவரிடம் கூறியவுடன் கோபங்கொண்ட கௌதமர் அவர்களை வீணே ஜடையையும், விபூதியையும் தரிப்பவரும் வேதவிருதம் இல்லாதவரான பாஷண்டிகளாகவும் ஆகும்படி சபித்தார். ஸப்தரிஷிகள், இவர்கள் எப்பொழுதும் பாஷண்டர்களாக இருக்கவேண்டாம். கலியில் பாஷண்டிகளாக பிறக்கட்டும். இங்குவந்த கங்கை கோதாவரி என்று பெயர் பெறட்டும். கோதாவரீ தீரத்தில் கோதானம் செய்பவர் ஸ்வர்க்கம் செல்வர் என்றார்கள்.

கௌதம சாபம் பெற்றவர்கள் வேதவிருதம் இல்லாவிடினும் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றி நற்கதி அடையட்டும் என்று லக்ஷம் சுலோகமுள்ள **நிச்வாஸ, ஸம்ஹிதா** என்ற நூலைச் சிவன் இயற்றினார். ஸ்திரீலோலர்களாகவும், வேத சாஸ்திரங்களை விட்டு தனதிஷ்டப்படி விபூதி, ருத்ராக்ஷம், ஜடை இவைகளை ஏந்தி ஒருவகை நாஸ்திகர்களாக ஆனாலும் அவர்கள் விபூதி ருத்ராக்ஷ மஹிமையால் மறுயுகத்தில் நற்கதி அடைவார்கள்.

மும்மூர்த்திகளும் ஒருவரே.

ஒரு சமயம் பிரம்மா என்னையும் ருத்ரனையும் நாராயணனையும் தோத்திரம் செய்வார். விஷ்ணு என்னையும் நான்முகனையும் துதிப்பார். ஒரு சமயம் அவ்விருவர்களையும் நான் துதிப்பேன். இதனால் ஒருவர் தாழ்ந்தவர் என எண்ணக்கூடாது. நாங்கள் மூவரும் ஒருவரேயானாலும், குணத்தையும் கார்யத்தையும் கொண்டு வெவ்வேறு உருவம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். சிவனைத்துதித்து விஷ்ணுவை நிந்திப்பவனும், விஷ்ணுவைத் துதித்து என்னை நிந்திப்பவனும் நற்கதி பெறமாட்டான். நற்கர்மங்களைச் செய்து நல்லவருடன் ஸஹவாஸம் செய்பவர்களுக்கே துவேஷபுத்தியில்லாமால் மூவரும் ஒருவரே என்ற ஸமபுத்தி உண்டாகும் என்றார் ருத்ரன்.

ஏழு துவீபங்களும் அரசர்களும்.

ஜம்பூதுவீபத்தை ஆக்நீத்ரரும் சாக துவீபத்தை மேதாதிதியும் க்ரௌஞ்ச துவீபத்தை ஜ்யோதிஷ்மானும், சால்மலி துவீபத்தை கோமேதேச்வரனும் ப்லக்ஷ துவீபத்தை வபுஷ்மானும் புஷ்கர துவீபத்தை ஸவனனும் குச துவீபத்தை துயுதிமானும் ஆண்டார்கள். இவர்களுடைய ஸந்ததி பெருகி பற்பல சிறிய துவீபங்களை அமைத்து அரசாட்சி புரிந்தனர். ஒவ்வொரு துவீபத்திலும் ஒன்பது வர்ஷங்களும் மலைகளும் நதிகளும் அமைந்திருக்கின்றன. ஜம்பூதுவீபத்திலுள்ள மேருமலை அஷ்டதிக்பாலகர்களுக்கும் மற்றுமுள்ள தேவர்களுக்கும் வந்து தங்கி வசிக்கும் இடமாகும். அந்தந்த திக்கில் அவரவர்களுக்கேற்ற இராஜதானி அமைந்துள்ளது. அமராவதி என்பது கிழக்கேயுள்ள இந்திரன் நகரமாம். தேஜோவதி என்பது அக்னி மூலையில் உள்ள அக்னியின் நகரமாம். ஸம்யமநீ என்பது தெற்கேயுள்ள யமபுரியாம். கிருஷ்ணாவதி என்பது நிருருதி மூலையிலுள்ள நிருருதி நகரமாம். சுத்தவதி என்பது மேற்கேயுள்ள வருணன் நகரமாம். கந்தவதி என்பது வாயு மூலையில் உள்ள வாயுவின் பட்டிணமாம். மஹோதயா என்பது குபேரன் நகரமாம். மனோகரா என்பது ஈசானமூலையில் உள்ள ஈசானனது நகரமாம்.

புராணங்களில் உள்ளவை உண்மையானவை அல்ல என்ற எண்ணமகன்று தற்சமயம் நவக்ரஹமுள்ள இடத்தைக்காண முயற்சி நடைபெற்று வருகின்றது. விஞ்ஞான கருவிகளைக்கொண்டு பெரும் முயற்சி செய்தும் பரிபூர்ணமான வெற்றி பெற்றபாடில்லை. விஞ்ஞானத்திற்கு மேலான சுஞ்ஞானத்தைக்கொண்டு முனிவர் கண்டு கூறிய இந்த துவீபங்களை கண்டறியும் நாள் எந்நாளோ?

பாரத வர்ஷம்.

ஜம்பூதுவீபத்தில் உள்ள நவவர்ஷங்களில் முக்கியமானது பாரதவர்ஷம். அதில் இந்த்ர, கசேரு, தாம்ப்ரவர்ண, கபஸ்தி, நாகத்வீப, ஸௌம்ய, கந்தர்வ, வாருண, பரத என்ற ஒன்பது கண்டங்கள் உள்ளன. நாம் உள்ள இடமே பரதகண்டமாகும். இங்கு மஹேந்த்ர, மலய, ஸஹ்ய

சுக்திமான், ருக்ஷ, விந்த்ய, பாரியாத்ர என்ற ஏழு குல பர்வதங்கள் இருக்கின்றன, மற்றும் பல மலைகள் இருந்தாலும் பூமியைக்காக்க அதிகாரி புருஷர்போல் இந்த பர்வதங்களமைந்திருக்கின்றன. மற்ற சிறிய பற்பல மலைகளிலும் ஆரியர்களும், மிலேச்சர்களும் வசிக்கின்ருர்கள். ஹிமயமலையிலிருந்து கங்கா, சிந்து, ஸரஸ்வதி, சதத்ரு முதலிய பத்தொன்பது நதிகள் உண்டாயின. பாரியாத்ரா என்ற மலையிலிருந்து வேதவதி, சர்மண்வதி முதலிய பத்து நதிகள் தோன்றின. ரிக்ஷ மலையிலிருந்து நர்மதா, தமஸா, விரஜா முதலிய பத்தொன்பது நதிகள் உண்டாயின. விந்த்ய மலையிலிருந்து பயோஷ்ணீ, குமுத்வதி, சுபா முதலிய பதின்மூன்று நதிகள் தோன்றின. ஸஹ்ய மலையிலிருந்து, கோதாவரீ, காவேரி முதலிய ஒன்பது நதிகள் தோன்றின. தாம்பரபர்ணி சதமாலா முதலிய நான்கு நதிகள் மலயமலையிலிருந்து தோன்றின.

இது போன்ற விஷயங்களைக்கூறி ருத்ரகீதையை இருபது அத்யாயங்களில் பூர்த்தி செய்கிருர்.

திரிசக்தியும் மஹிஷாசுரனும்.

அந்தகன் மஹிஷன் முதலிய அசுரர்கள் தவம்செய்து நீண்ட ஆயுளையும் ஒப்பற்ற பலத்தையும் பெண்ணைத் தவிர மற்றவர்களால் மரணமில்லை என்ற வரத்தையும் பெற்று முவ்வுலகையும் நாசம்செய்து வந்தனர். இதைத் தேவர்கள் மும்மூர்த்திகளிடமும் முறையிட, இம்மூவரும் நீண்ட நேரம் யோசித்து தங்களது ஞானக்கண்ணை ஒன்ருெடொன்று சேரும்படிச் செய்தனர். அதிலிருந்து மூன்று வர்ணமுள்ள பிராம்மீ, வைஷ்ணவீ, சாம்பவி என்ற மூன்று கன்னிகைகள் தோன்றி தனித்தனியே தவம்செய்தனர். மும்மூர்த்திகளுடைய வேண்டுகோளுக்கிணங்கி மறுபடியும் அவர்கள் ஒன்ருகச் சேர்ந்தபொழுது துர்க்கா, லக்ஷ்மி, ஸரஸ்வதி, திரிசக்தி, திரிகலாதேவீ, என்ற பெயர்களைப்பெற்ருர்கள். கௌமாரீ விருதத்தைக் கைகொண்ட தேவியை பிரம்மாதி தேவர்களும், தேவஸ்திரீகளும் பூஜை செய்தார்கள். நாரதர் அங்கு வந்து தேவியைத் தரிசித்து இவள் மூலமாக மஹிஷனை மாய்த்து முவ்வுலகிற்கும் நன்மை செய்யவேண்டுமெனக்கருதினுர்.

தேவியை வணங்கி இந்திர பதவியில் உள்ள மஹிஷா சுரனிடம் சென்று மந்த்ரமலையில் உள்ள திரிலோக சுந்தரியான பெண்ணே! உனக்கேற்ற மஹிஷி! என்று கூறி மறைந்தார்.

மஹிஷன் எட்டு மந்திரிகளைக்கூட்டி அவள் யார்? அவளை மணப்பது நன்மையா? தீமையா? அவளை எப்படிமணப்பது? என்று யோசித்தான். பிரகசன் எனும் மந்திரிஅவள் பராசக்தி, குருபத்னி, தேவபத்னி, ராஜபத்னி முதலியவர்களைக் கண்ணாலும் காணலாகாது, அவர்களை ஏற்ருல் பற்பல தீமைகள் உண்டாம் என்ருன். விகசன் எனும் மந்திரி அவள் விவாஹமாகாதவள், என்றைக்கா வது ஒரு நாள் ஒரு புருஷனை மணக்கத்தான் வேண்டும். ஆதலால் வித்யுத் ப்ரபன் என்ற தூதனை அவளிடம் அனுப்பி விஷயத்தையறிந்து முடிவு செய்வோம். அவள் இணங்கி வராவிடில் பலாத்காரமாக தூக்கிவரலா மென்ருன்.

இதற்குள் அவளை முன்னிட்டு தேவர்கள் போருக்கு வருகிருர்கள் என்பதை உணர்ந்து மஹிஷனும் தனது ஸேனைகளையும் தயார் செய்தான். மஹிஷ ஸேனை முன் சென்றது. காலன் முதலிய பதிஞேறு ஸேனைத் தலைவர்கள் சூழ யானைமீதமர்ந்து மஹிஷனும் கிளம்பி ஞன். வித்யுத்ப்ரபன் தேவியினிடம் சென்று வணங்கி, சுபார்ச்வனது மகன் சிந்துத்விபன். அவன் மாஹிஷ்மதியில் தவம் செய்யும் பொழுது விப்ரசித்தி யின் பெண்ணை மாஹிஷ்மதி என்பவள் அங்குசென்ருள். அந்த ஆச்ரமத்தின் அழகைப்பார்த்து ஆங்குள்ள முனி வரைப் பயமுறுத்தி தான் அவ்விடத்தைப் பிடித்துக் கொள்ள கருதிஞள். எருமை உருவமெடுத்து அவரிடம் சென்று பயங்கரமாக, கத்திஞள். ஞானக்கண்ணுல் அறிந்த மஹரிஷி அவளை எருமையாகவே ஆகும்படிச் சபித்தார். அவள் காலில் விழுந்துவேண்ட, ஒரு புதல் வனைப் பெற்றெடுத்த பின் சாபம் அகலும் என்ருர். அவள் நர்மதாதிரம் சென்றபொழுது ஸிந்து துவிபர் என்ற முனிவர் இந்துமதி என்ற கன்னிகையைக்கண்டு தவத்தை இழந்தார்.

அச்சமயம் மாஹிஷ்மதி அவர் அருகே சென்று அவரது நிழல் விழ்ந்த நீரைப்பருகினுள். அதனுல் கர்ப்பிணியாகி மஹிஷன் என்ற அசுரேந்திரனைப்பெற்று சாபத்திலிருந்து விடுபட்டாள். அத்தகைய மஹிஷன் இந்திரபதவியில் அமர்ந்து இந்திரனும் அவனுக்குத் தொண்டுசெய்ய ஒப்பற்ற வீரனுகவிளங்குகிருன். அவன் உன்னை மணக்க விரும்புவதால் அவனை நீ ஏற்று இன்பம் பெறுவாய் என்ருன். இதைக்கேட்டு அட்டகாசத்துடன் சிரித்தாள். அவளது உடலில் தூதன் மூவ்வுலகையும் கண்டு ஆச்சர்யமடைந்தான். அவளது தோழி ஜயா என்பவள் நாங்களனைவரும் கன்யாவிருதம் கொண்டவர்கள். ஆதலின் விரைவில் இவ்விடத்தை விட்டுச் செல் என்ருள்.

தேவியின் சக்திகளும் மஹிஷன் ஸேனைகளும் கை கலந்து மிகபயங்கரமாக யுத்தம் செய்தார்கள். அசுர ஸேனையில் பலர் மாண்டனர். கோபங்கொண்ட மஹிஷன் தேவியினிடம் போருக்கு வந்தான். தேவி இருபதுகைகளையும் கரங்களில் ஆயுதங்களையும் ஏந்தி சிம்மவாஹனத்தின் மீதேறி ருத்ரனை நினைத்தாள். அவரது அருளால் மஹிஷனைத் தவிற மற்ற எல்லோரையும் ஒரே நிமிஷத்தில் கொன்ருள். மஹிஷன் பற்பல உருவங்கள் எடுத்து பத்தாயிரம் ஆண்டுவரை போர் புரிந்தான். தேவி சதச்ருங்கமலையில் அவனைக் கிழே தள்ளி காலால்மிதித்து அவன் தலையை வெட்டினுள். அதிலிருந்து கிளம்பிய மஹிஷாஸுரனது ஜீவன் ஸ்வர்க்கம் சென்றது. தேவர் பூமாரிப் பெய்து தேவியைத் துதித்தனர்.

ரௌத்ரி விருதம்.

ருரு எனும் அசுரன் கடலின் இடையே நகரம் அமைத்துக்கொண்டு தேவர்களைப் பீடித்து வந்தான். தேவர்கள் தோல்வியுற்று நீல என்ற மலையில் உள்ள தேவியைச் சரணமடைந்தார்கள். காளராத்ரி எனும் தேவீ ருருவின் வேலையை நினைத்து சிரித்தாள். அங்கிருந்து எண்ணிறந்த சக்தி கணங்கள் தோன்றின. தேவி ருருவின் ஸேனைகளை அழித்து ருருவிடம் யுத்தத்திற்கு வந்தாள். அவன் மாயையினுல் தேவர்களைத் தூங்கும்படிச்செய்து தேவியுடன் போர் புரிந்தான். தேவி அவனது சர்மாவையும்

தலையையும் அடித்து இரண்டு கூறுகத்தள்ளினுள். சர்ம முண்டங்களைப் பிரித்ததால் சாமுண்டீ என்னும் ரௌத்ரீ, ஸம்ஹாரிணி, காலராத்ரீ என்றும் பல பெயர்களைப் பெற்ருள். அவளிடமிருந்து உண்டான பயங்கரமான சக்தி கணங்கள் பசிக்கு உணவு அளிக்கும்படி தேவியை வேண்ட தேவி ருத்ரனைப் பிரார்த்தித்தாள். ருத்ரன் அவர்களுக்கு சிற்சில இடங்களைக் காட்டினுர்.

கர்ப்பிணியான ஸ்திரீ, அன்ய ஸ்திரீயின் வஸ்த்ரத்தையணிந்தாலும் பரபுருஷனது வஸ்த்ரத்தை தொட்டாலும் அவர்களது உடலில் புகுந்து ரத்தத்தை புசிக்கலாம். பிரஸவித்த இடத்தில் அநாசாரம் ஏற்பட்டால் குழந்தை தாய் இருவர்களின் இரத்தத்தையும் பருகலாம். வீடு, வயல், குளம், நதிக்கரை, உத்யானம், முதலிய இடங்களில் இருந்து அங்கு வரும் அநாசாரமுள்ளவர்களின் உடலில் உள்ளே புகுந்து ரத்தத்தைப் பருகலாம். அன்யனிடம் மனதைவைத்து அழுதுக்கொண்டிருக்கின்ற பெண்களிடம் புகுந்து ரத்தத்தைப் பருகலாம் என்ருர். வைஷ்ணவசக்திகள் பதினெட்டு பிராம்மி சக்திகள் எண்ணிறந்தன. சாமுண்டா சக்திகள் ஒன்பது கோடி. இத்தனை சக்திகளுக்கும் ருத்ரகணங்கள் பதியாக அமைந்தன.

கபால மோசனம்.

பிரம்மா ஒருகல்பத்தில் ருத்ரனைத் தனக்குக் குழந்தையாக வரும்படி வேண்டினுர். அக்குழந்தையைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு கபாலின், ருத்ர, பவ, வேடனுகத் தோன்றியவனே! என்று லாலனை செய்யும் பொழுது ருத்ரன் இடதுகை நகத்தினுல் பிரம்மாவின் ஐந்தாவது சிரஸ்ஸைக் கிள்ளினுர். அவரது தலை கையை விட்டு அகலாமலிருந்தது. கபாலி என்று அழைத்ததால் உமது மண்டை ஓட்டைத் தாங்கி காபாலி யானேன் என்று கூறி, ஒவ்வொரு இடமாகச்சென்று அந்த கபாலம் கீழே விழும்படி முயற்சித்தார். பனிரண்டு ஆண்டுகள் பிராயச்சித்தம் செய்துகொள்பவர் போல் ஆங்காங்கு திரிந்து முடிவில் காசிக்கு வந்தார். அவ்விடத்தில் அது கீழே விழுந்தது. இதனுல் அங்கு கபால மோசன தீர்த்தம் என்ற பெயர் உண்டானது.

ஒவ்வொரு கல்பத்திலும் சதுர்முகன் செய்யும் குற்றத்திற்குச் சிக்ஷையளிக்க அவர் தலையைக் கிள்ளுவதும் அதனல் கபாலி என்ற பெயர் தோன்றுவதும் ஸஹஜம். சிவன் பிரம்மஹத்தி விரதத்தைச் செய்வதுபோல் பன்னிரண்டு ஆண்டுகள் அந்த கபாலத்துடன் தீர்த்த யாத்திரை செய்வார். நித்யசுத்தனை அவருக்குப் பிரம்மஹத்தி முதலிய பாபங்கள் ஏற்படாது. அன்றியுமவர் பிரம்மாவினுடைய ஒரு தலையைக் கிள்ளினரே யன்றி அவரைக் கொல்லவில்லை. ஆயினும் தான் இப்படிச் செய்து காண்பித்தாவது மஹா பாபமான பிரம்மஹத்தி உலகில் தோன்ருமலிருக்கும் என்று இப்படிச் செய்தார். இதைச் செய்தவர் துரீய சிவனுமல்ல மும்மூர்த்திகளுள் தோன்றிய ருத்ரனும் அல்ல. ருத்ரருடைய அம்சத்தினல் தோன்றிய வீரபத்ரரே கபாலியானர்.

எது உண்மை ?

ஸத்யதபஸ் ஒருநாள் அக்னி ஹோத்திரத்திற்காக, கட்டையை வெட்டினர்; அச்சமயம் அறியாமல் தனது இடது கைவிரல் ஒன்றை வெட்டிவிட்டார். அங்கிருந்து ரத்தம் வராமல் வாஸனையான விபூதி வந்தது. மறுபடியும் அவ்விரல் ஒன்ருகச் சேர்ந்தது. இதைக் கண்டிருந்த ஒரு கின்னரன் இந்திரனிடம் சென்று இந்த ஆச்சர்யத்தைக் கூறினன். அவர் மஹாவிஷ்ணுவிடம் கூற இருவரும் ஒன்று சேர்ந்து ஸத்யதபஸ்ஸின் ஆச்ரமத்திற்கு வந்தார்கள். இந்திரன் வேடனுகவும் விஷ்ணு பன்றியாகவும் உருவமெடுத்து வேடன் பன்றியை அடித்துக்கொண்டு இவர் எதிரே வந்தான். பன்றி அடிபட்டு ஓடுவதையும் அதைத் தொடர்ந்து வரும் வேடனையும் கண்டார் ஸத்யதபஸ்.

வேடன் அவரைப் பார்த்து ஐயா ! இங்கு பன்றி வந்ததா ? அதைக் கொன்று வெகுநாள் அன்னமில்லாமல் இருக்கும் எனது மனைவி மைந்தர்களைக் காக்கவேணும். உண்மையைக் கூறும் என்ருன். முனிவர் உண்மையைக் கூறினல் பன்றியைக் கொல்வான். அப் பாபத்தில் தனக்கும் பங்கு உண்டாகும். பன்றியைக் காணவில்லை என்று கூறினல் பொய்சொன்ன பாபத்திற்கு ஆளாவோம். என்

செய்வது? வேடனே! பன்றி வந்ததா? இல்லையா? என்பதைக் காண்பது கண். இல்லை அல்லது பார்த்தேன் என்று கூறுவது வாய். கண்ணோ பேசாது. வாயோ பார்க்காது. இந்நிலையில் பார்த்தேன், இல்லை என்று எப்படி கூறுவது? என்று அழகாகப் பதில் கூறினார். அதைக் கேட்டு சந்தோஷமடைந்த வேடன் இந்திரனாகவும் பன்றி விஷ்ணுவாகவும் தோன்றி உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார்கள். ஸத்யதபஸ் ஒரு பிராம்மணன் மற்றொரு பிராம்மணனை ஒரு மாதம் பூஜை செய்துவந்தால் அவனது பாபங்கள் எல்லாம் அகலட்டும். ஒரு நாள் பூஜை செய்தால் ஒரு மாதம் செய்த பாபம் அகலட்டும் என்றார். அதையளித்து விரைவில் நீ முக்தி பெறுவாய் என்று கூறி மறைந்தனர். தேவீ பாகவதத்தில் இதுபோன்ற கதை உளது.

முனிவர் தீர்த்த யாத்திரைக்குச் சென்று வரும் பொழுது ஆருணி எனும் தனது குருவைச் சந்தித்தார். அவர் சித்தி பெற்ற சிஷ்யனைக் கொண்டாடி இருவரும் நாராயணனை தியானம் செய்து முக்திபெற்றார்கள்.

புராண கதையும் தத்துவமும்.

மிகக்கடினமான வேதத்தின் கருத்தைக் கதை மூலம் விளக்கவந்தது இதிஹாஸமும் புராணமுமாம். சந்தேகம் வரக்கூடிய இடங்களில் அறைகுறையாகப் படிப்பவர்கள் விபரீதமான பொருளைக் கூறக்கூடும் என்று வேதம் அஞ்சுகிறது. அவ்வச்சத்தை நீக்க இதிஹாஸ புராணங்கள் தத்வார்த்தங்களை விளக்கத் தோன்றின. பாமரர்களுக்குக் கதைகளின் மூலமாக சில வேதார்த்தங்களைக் கூறும். நடுத்தரமானவர்களுக்கு அக் கதைகளில் உள்ள நீதி மூலமாக வேத தத்துவத்தை விளக்கும். உயர்ந்தவர்களுக்கு வேதாந்த தத்துவத்தை விளக்கும். இதை மஹிஷாசுரன் கதை மூலம் விளக்குகிறார் புராணமுனி. தேவியின் சக்தி ஞான சக்தி. அதே காயத்ரீ வடிவமாக இருந்து உலகைக் காக்கின்றது என்ற தத்துவத்தை மஹிஷாசுரமர்த்தினியின் கதை மூலமாக விளக்குகிறது. பலமுள்ளதால் பிறர் பொருளைக் கவருவதும் தகாதவர்களை மனைவியாக நினைப்பதும் அநீதி என்ற நீதியையும் விளக்குகிறது. ஞானிகளுக்கு அக்ஞானவடிவமானவன் மஹிஷன்.

அக்ஞானம் பல தீங்குகளைச் செய்யும். அக்ஞானமுள்ளவன் தானும் கெட்டு பிறரையும் கெடுப்பான். அக்ஞானத்தை நீக்கவல்லது பிரம்ம வித்யையே என சிறந்த தத்துவத்தைக் கூறுகிறது.

अथवा ज्ञानशक्तिः सा महिषः अज्ञानमूर्तिमान् ।
अज्ञानं ज्ञान नश्यं तु भवतीति न संशयः॥

கபிலா தானம்.

ஜல தேனு, இக்ஷுரஸ தேனு, குட—வெல்ல தேனு, சர்க்கரா தேனு, மது தேனு, பஞ்சக்ஷீர தேனு, ததிதேனு, நவநீத தேனு, லவண தேனு, கார்ப்பாஸ தேனு, தான்ய தேனு முதலிய தானங்களைக் கூறி அவைகளின் மஹிமையை விளக்க உதாஹரணமும் கூறினர். கபிலா தேனுவின் தானமஹிமையை மிக விரிவாக வர்ணிக்கிறார். முற்கூறியவைகளைப் பசுபோல் அமைத்து தானம் செய்யச் சொன்னார். இங்கு நேராக ப்ரத்யக்ஷ தேனுவின் மஹிமை கூறப்படுகின்றது. கோதானம் செய்பவர் விஷ்ணுலோகம் செல்வர். பசுவின் கழுத்திலும் தலையிலும் சமஸ்த புண்ய தீர்த்தங்கள் இருக்கின்றன. ஆதலால் காலையில் எழுந்து கோவின் கழுத்தைச் சொரிந்து நமஸ்காரம் செய்தால் முப்பது வருஷங்கள் செய்த பாபம் அகலுகின்றன. கோவைப் பிரதக்ஷணம் செய்தால் பூப்ரதக்ஷிணம் செய்த பலன் உண்டாகும். ஒரு பிரதக்ஷிணம் செய்தால் ஒரு ஜன்மாவில் செய்த பாபமகலும். கோமூத்ரத்தை உடலில் தெளித்துக்கொண்டால் கங்கையில் ஸ்நானம் செய்த பலன் உண்டாகும். பசுவைச் சொரிவதும், காப்பதும் நூறு கோதானத்திற்குச் சமமானது. பசியுள்ள பசுவிற்குப் புல்லும் ஜலமும் அளித்தால் கோமேத பலனைப் பெறுவர்.

கபிலா என்பது பதினொரு வகைப்பட்டதாம். சுவர்ண வர்ணம் போன்றது, மஞ்சள்வர்ணம் போன்றது, சிவந்த கண் உள்ளது, வெல்ல நிறம்போன்றது, பலவகை வர்ணமுள்ளது, வெளுப்பும் சிவப்பும் மாத்திரம் கலந்தது, வெண்மையும் ஸ்வர்ண வர்ணமும் கலந்துள்ளது, கருப்பும் பிங்கல வ்ர்ணமும் சேர்ந்தது, சிவப்பானது, வால் மாத்திரம் பிங்கல வர்ணமானது, வெண்மையான குளம்பு

உள்ளது. யாகத்திற்காக, கபிலா பிரம்மாவினுல் படைக்கப்பட்டது. பசு பிரஸவிக்கும் தருவாயில் பசுவின் முகம் ஒரு புறம் கன்றின் முகம் ஒருபுறம் இருப்பதால் த்விமுகீ எனப்படும். அச்சமயம் அதைத் தானம் செய்தால் கோதானம், பூதானம் செய்த இரண்டின் பலனையும் பெறலாம். அப் பசுவின் உடலில் எத்தனை ரோமங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு ஆண்டு காலம் வரை பிரம்ம லோகத்தைப் பெறுவான்.

18 புராண நாம படன பலன்.

கார்த்திகை மாதம் துவாதசி தினத்தில் பதினெண் புராணங்களுடைய பெயருள்ள பின்வரும் சுலோகத்தை எழுதி பூஜித்து நியமத்துடன் படித்தால் ஸத்புத்திரனை உண்டுபண்ணும் அது.

ब्राह्मं पाद्मं वैष्णवं च शैवं भागवतं तथा ।
तथान्यं नारदीयं च – मार्कण्डेयं च सप्तमम् ॥
आग्नेयमष्टमं प्रोक्तं – भविष्यं नवमं,तथा ।
दशमं ब्रह्मवैवर्तं – लैङ्गमेकादशं स्मृतम् ॥
वाराहं द्वादशं प्रोक्तं – स्कान्दं चापि त्रयोदशम् ॥
चतुर्दशं वामनकं – कौर्म्मं पञ्चदशं स्मृतम् ।
मात्स्यं च गारुडं चैव – ब्रह्माण्डं च ततः परं ॥

ப்ராஹ்மம் பாத்மம் வைஷ்ணவம் ச-சைவம் பாகவதம்ததா
ததாந்யம் நாரதீயம் ச-மார்கண்டேயம் ச ஸப்தமம் |
ஆக்னேய மஷ்டமம் ப்ரோக்தம்-பவிஷ்யம் நவமம் ததா |
தசமம் ப்ரம்ம வைவர்த்தம்-லிங்க மேகாதசம் ஸ்மிருதம் ||
வாராஹம் த்வாதசம் ப்ரோக்தம்-ஸ்காந்தம் சாபித்ரயோதசம் |
சதுர்தசம் வாமனகம்-கௌர்மம் பஞ்சதசம் ஸ்மிருதம் |
மாத்ஸ்யம் ச காருடம் சைவ ப்ரம்மாண்டஞ் ச தத: பரம் ||

அன்னதானத்தின் மேன்மை. சுவேதன் கதை.

இலாவிருத வர்ஷத்தில் சுவேதன் என்ற ஓர் அரசன் இருந்தான். வஸிஷ்டரை அணுகி ஸகல தானங்களையும் செய்ய அனுமதி கேட்டான். அவர் அவைகளுடன் அன்ன தானமும் செய்துவா. அது சிறந்த தானம் என்றார்.

அரசன் அன்னமளித்தால் விரைவில் அது மலமாகமாறு கிறது என்று அன்ன தானம் செய்யாமல் மற்றெல்லா தானங்களேயும் செய்து வந்தான். அரசன் இறந்த பின் புண்ய லோகம் சென்ருன். ஆங்கு ஸகல விதமான போக பாக்கியங்களேப் பெற்ருன். ஆனல் பசி தாகத்திஞல் வருந்திஞன். தேவதூதர்கள் அவனே அவனது உடல் எரிக்கப்பட்ட சுவேதமலேயின் அருகே கொண்டு விட்டு ஆங்குள்ள அவனது எலும்பையே உண் ணும்படிக் கூறிஞர்கள். பசியாற்ற அதில் உணவு இல்லா விடினும், நாக்கில் பட்டு நீர் சுரந்ததால் சிறிது தாகமகன் றது. அன்றன்றும் இங்ஙனம் நடந்து வந்தது. தற்செய லாக வந்த வசிஷ்டர் அதைக் கண்டார். அவரைப் பார்த்து வணங்கி பசி தாஹம் அகல என்ன செய்வது? என்று கேழ்க்க, வசிஷ்டர் கூறிஞர்: உனது பசிதீர ஒரே உபாய முண்டு.

முன் கல்பத்தில் **விநீதாச்வன்** என்ற ஓர் அரசனிருந் தான். பற்பல யாகங்களேச் செய்தானவன். எண்ணிறந்த தானங்களேச் செய்தான். உன்னேப்போல் அவனும் அன்னதானம் அற்பமெனக் கருதி அதை மாத்திரம் செய்யவில்லே. அவன் பிரும்மலோகம் சென்றும் பசி தாஹங்கள் அவனே வாட்டின. நில பர்வதத்தினருகே கங்கை ஜலத்தில் உனது உடல் தோன்றும். அதைக் கத்தியால் வெட்டிச் சாப்பிடு என்ருர் பிரம்மா. அங்குவந்து அன்றன்றும் தன் உடலேயேவெட்டிப் புசித்து வந்தான். தெய்வச் செயலாக அங்கு வந்த தனது புரோ ஹிதரை வணங்கி இத்துன்பம் அகல யாதுவழி என்ருன். அவர் திலதேனு, ஜலதேனு, நெய்தேனு, கரும்புச்சார் தேனு என்ற இவைகளேத் தானம் செய்தால் பசி தாஹம் அகலும் என்ருர். அவனது புதல்வன் செய்து அவன் பசி தாஹத்தை அகற்றிஞன். உனது புத்திரனும் செய்தால் உனது பசிதாக மகலும் என்று கூறி அங்ஙனமே செய் வித்து அவனது பசி தாகத்தை அகற்றிஞர்.

தர்ம கேள்விகளும் பதிலும்.

பகவானே வணங்கி பூதேவி கர்மா, பக்தி, ஞானம், யோகம், விக்ரஹத்தின் அளவு, விருதங்கள், புண்ய

பாபங்கள், இடையில் விருதத்தை விட்டவனின்கதி, க்ஷேத்ரங்கள், நாம கீர்த்தன பலன், தானம், சுகம் உண்டாகும் வழி, துக்கம் உண்டாகக் காரணம் முதலிய விஷயங்களை விரிவாகக் கேழ்க்கின்ருள். பகவானும் விஸ்தாரமாக பதில் அளிக்கின்ருர். புராணங்களில் ஸாரமிது.

ஒருவன் செய்த நல்வினை தீவினைகள் முன்னமே செய்து அனுபவிக்கும் வினைப்பயன்கள் ஆன பிறகு தொடர்ந்து பலனைத் தரும். நூற்றுக்கணக்கான பசுக்களிடையே உள்ள தன் தாயிடம் கன்று செல்வதுபோல், கர்மா எத்தனைப் பிறவி எடுத்தாலும் விடாமல் தொடர்ந்து வந்து பலனைத் தரும். தேவராயினும் முனிவராயினும் அவரவர் செய்த வினையை அனுபவித்தே தீரவேண்டும். கர்மாக்களில் யாகமே சிறந்த கர்மா.

ஒரு மூர்த்தியை மனதினல் நினைத்து நாமாவை நாக்கினல் கூறி உடலால் அவரை மலர்கொண்டு அர்ச்சிப்பது பக்தியாகும். மனம் ஒருமைப்பட்டு இறைவன் திருவடியை அடைவதே சிறந்த பக்தி. இறைவனிடம் வைக்கும் அன்பே பக்தியாகும். ஐம்புலன்களை அடக்கி உலக இன்பத்தில் பற்றைவிட்டு ஆன்ம ஸ்வரூபத்தை விசாரிப்பதே ஞானமாம். யம நியமம் முதலிய எட்டு அங்கங்களைக் கைக்கொண்டு சித்தத்தை அடக்கி இறைவனைச் சேருவது யோகமாம். அவரவர் ஜாதி குலத்திற்கேற்றபடி, சாலக்ராமம், பாணம் முதலியவைகளை அர்ச்சிப்பதே சிறந்தது. தாதுக்களால் விக்ரஹம் அமைத்து வீட்டில் பூஜிப்பதானல் அவரவர் கைமுஷ்டிக்கு மேல் அதிக உயரமாக இருக்கலாகாது விக்ரஹம். பற்பல விரதங்கள் கூறப்படினும் ஏகாதசீ, ஜன்மாஷ்டமி, ஸ்ரீராம நவமி, சதுர்த்தி, ஷஷ்டி, பிரதோஷம் இவைகள் மிகமிக முக்யமானவை. நியமமில்லாதவர் விரதபலனை பெறமாட்டார். முக்கரணங்களாலும் பிறர்க்கு உதவுவதே பெரும் புண்யம். முக்கரணங்களாலும் தீங்கு இழைப்பது பாபமாம். விரதத்தை ஆரம்பித்து அதைப் பூர்த்தி செய்யாமல் விட்டால் மறுபிறவியில் நோய்கள் உண்டாகும். ஆதலால் அப்படி இறந்தவர்களது நெருங்கிய பந்துக்கள் அதை முடிக்கவேண்டும். ஜீவர்களது நன்மையை நாடி ஈச்வரன் ஆங்காங்கு அர்ச்சாவடிவமாக கோயில்கொண்

டிருக்கிறார். அங்கு வசிப்பதும், பூஜிப்பதும், இறப்பதும் பெரும் புண்ணியமாம். ஓயாமல் அல்லும் பகலும் பகவன் நாமாவைக் கூறிவந்தால் அது பிராணன் போகும் ஸமயத்தில் நினைவுக்கு வந்து நற்கதியைத் தரும். எல்லாவற்றிலும் இதே மிகமிக சுலபமானவழி. நல்ல காலத்தில் நல்ல பாத்திரத்தில் நற்பொருளைத் தருவது தானம் எனப்படும். தானத்தால் பற்பல சுகமுண்டாகும்.

கோகாமுக மஹிமை.

கேதாரம்போல் கோகாமுகம் என்ற இடமும் ஆங்குள்ள தீர்த்தமும் மிகச் சிறந்தது. அங்கே இருந்தாலும் இறந்தாலும் அந்த ஜலத்தில் எலும்பு அல்லது உடல் பட்டாலும் நற்கதி கிடைக்கும். ஓர் சம்படவன் ஒரு குட்டையில் ஜலம் குறைந்தபோது மீன்களைப் பிடித்தான். ஒரு பெரிய மீனைக் கழுகு மூக்கினால் கொத்திப் பறந்து சென்றது. இடையில் அது கோகாஜலத்தில் விழுந்தது. அதனால் அந்த மீன் ஒரு ராஜகுமாரனைப் பிறந்தது. அதே போல் மத்ஸ்யத்தைக் கூடையில் வைத்துச் செல்லும் பொழுது அதை மூக்கால் கொத்திய ஒரு பக்ஷியைச் சம்படவன் வில்லால் அடித்துத் தள்ள, அது கோகாமுகத்தில் விழுந்து ராஜகன்னிகையாகப் பிறந்தாள். இவ்விருவர்களும் விவாஹம் செய்துகொண்டார்கள். நந்தவர்த்தனன் என்ற அவன் மனைவிக்கு ஒரு ஸமயம் ஓயாத தலைநோய் உண்டாயிற்று. அதற்கு ராஜ வைத்யர்கள் எவ்வளவு சிகிச்சை செய்தும் நோய் அகலவில்லை. அரசகுமாரனும் அவளும் தாய் தந்தையர்களை வணங்கி உத்தரவு பெற்று கோகாமுகம் வந்தார்கள். அரசன் இரவில் ஆங்குள்ள எலும்பு ஒன்றைக் காட்டி இது எனது எலும்பு. அதே போல் அருகில் உள்ளது உனது எலும்பு. இந்த க்ஷேத்ர மகிமையால் இருவரும் ராஜ பிறவி பெற்றோம். ஆனால் பக்ஷி ஜன்மாவிற் குறிய பாபத்தை அதன் முன்பிறவியில் செய்தோம். ஆகையால் அதை அனுபவிக்கின்றோம். அந்த தீர்த்த ஸ்நானத்தினால் இதுவும் அகலும் என்று இருவரும் அங்கு ஸ்நாநம் செய்து சுகமடைந்தார்கள்.

32 அபராதங்கள்.

இவைகளை நீக்கி அவரவர் வர்ண ஆச்ரம தர்மங்களை ஒழுங்காக அனுஷ்டித்து வந்தால் நற்கதி பெறலாம்.

1. ஆபத்தில்லாத காலத்தில் பிறருடைய அன்னத்தை உட்கொள்வது. பிறருடைய பொருளை நிவேதனம் செய்வது. 2. நடக்கும் தர்மத்திற்கு விக்னத்தைச் செய்து. பகவானை ஆராதிப்பதும், பிறருக்குத் தீங்கு உண்டாக்க பகவானைப் பூஜிப்பதும். 3. ஸ்த்ரீ புருஷ ஸங்கமம் ஆனபிறகு விதிப்படி சுத்திசெய்துகொள்ளாமல் பகவத் தரிசனம் செய்வதும் ஸந்த்யை செய்வதும். 4. ரஜஸ்வலைகளின் அருகில் சென்றோ அவர்களைத் தீண்டியோ அவர்களுடன் பேசியோ, ஸ்நானம் செய்யாமல் வந்து என்னைத் தரிசிக்கும் அபராதத்தை யான் சிறிதும் பொறுக்கமாட்டேன். 5. சாவு தீட்டுள்ளவன் என்னைப் பூஜிப்பதும், தீட்டுள்ளவனைத் தீண்டி முழுகாமல் என்னைப் பூஜிப்பது அல்லது தரிசிப்பதும். 6. பிணத்தைப் பார்த்துவிட்டு ஸ்நானம் செய்யாமல் மூர்த்தியைத் தொடுவதும் ஆலயம் செல்வதும். 7. பூஜாகாலத்தில் இடையில் எழுந்துசென்று மலஜலம் கழித்து ஸ்நாநம் செய்யாமல், விட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்துப் பூஜை செய்வதை க்ஷமிக்கமாட்டேன். 8. கறுப்பு வஸ்த்ரத்தை உடுத்திக்கொண்டு பூஜைசெய்வது. 9. பூஜை காலத்திலும் ஆலயத்திலும் பிறருடன் பேசுவது. 10. விதிப்படி ஸ்நாநம், புண்ட்ரம் முதலியவைகள் இல்லாமல் அர்ச்சிப்பதும் கர்மா செய்வதும். 11. கோபத்துடன் பூஜிப்பதும் கர்மாக்களைச் செய்வதும் கோவில் செல்வதும். 12. சாஸ்த்ர விதியை மீறி புண்யம் செய்வதாக நினைத்து எதையேனும் பூஜிப்பது.

13. புருஷர் சிவந்த வஸ்த்ரத்தை அணிவது. 14. இருட்டில் பகவானைத் தர்சிப்பதும் பூஜிப்பதும். 15. கறுப்பு வஸ்த்ரமணிந்து பணிவிடை செய்வது. 16. தோய்த்து உலர்த்தாத வஸ்த்ரமணிவது.

17. இறைவனுக்கு நிவேதனம் செய்யாமல் உண்பது. 18. மத்ஸ்யம் முதலிய மாம்ஸங்களைப் புசித்து கோவிலுக்குச் செல்வது. (பழக்கமாக மாம்ஸம் சாப்பிடுகிறவர்களைப் பற்றியது.) 19. நிஷித்தமான வெங்காயம் உள்ளி முதலியவைகளை உட்கொள்வது. 20. தீபத்தை தீபத்திரியை எண்ணெயைத் தொட்டு ஸ்நாநம் செய்யாமல் ஸ்வாமியைத்தொழுவது 21. சுடுகாடு சென்ற தினத்தில்

ஆலயம் செல்வது. 22. புண்ணாக்கைத் தின்ற நாளில் பகவானை அர்ச்சிப்பது. 23. பன்றியின் மாம்சத்தைத் தின்று கோவில் செல்வது. 24. சுராபானம் செய்வது. 25. குசும்பசாகத்தை உண்பது. 26. பிறர்வீட்டில் புசித்திருந்து அவர் தூண்டுதலால் ஆலயம் செல்வது. 27. புதிய பொருள்களைப் பகவானுக் களிக்காமல் உண்பது. 28. காலில் பாதுகை அணிந்து செல்வதும் கால் அலம்பாமல் செல்வதும் அபசாரம். 29. கை கால்களைப் பிடித்த பிறகு ஸ்நாநம் செய்யாமல் ஆலயம் செல்வது. 30. அஜீர்ணத்துடன் என்னிடம் வருவது. 31. சந்தநம் தூபம் புஷ்பம் முதலியவைகள் இல்லாமல் பூஜை செய்வது. 32. வாத்யகோஷமில்லாமல் ஆலயங்களில் அர்ச்சிப்பது, மணி இல்லாமல் வீட்டில் பூஜிப்பது அபராதம்.

அந்த அபசாரங்களை விளக்கி அவைகளைப்பரிஹரிக்கத் தக்க பிராயச்சித்தங்களையும் மிக விரிவாக வர்ணிக்கிறார். வாத்யகோஷமும் மணியுமில்லாமல் பூஜித்தால் மறுபிறவியில் செவிடனாவான். தீபம் இல்லாமல் அர்ச்சித்தாலும் இருட்டில் ஸ்வாமியைத் தரிசித்தாலும் குருடனாகப் பிறப்பான். செறுப்பை அணிந்து கோவிலுக்குச் சென்றால் செறுப்பைத் தைக்கும் சக்கிலியாகப் பிறப்பான். சந்தனம் புஷ்பம் தூபம் முதலியவைகளில்லாமல் அர்ச்சித்தால் ப்ரேதமாகவும் ராக்ஷஸனாகவுமாவான். தீபத்தைக் கையால் தொட்டு ஸ்நானம் செய்யாமல் பூஜித்தால் அறுபது ஆண்டுகள் குஷ்டத்தினால் பீடிக்கப்படுவான்.

சிவன் சுடுகாட்டில் இருப்பதேன்?

சுடுகாட்டிற்குச் சென்ற தினத்தில் ஆலயம் சென்றால் பாபம் என்றீர். சிவன் சுடுகாட்டிலேயே இருப்பதன் காரணமென்ன? பரமசிவன் முப்புரத்தை எரித்தபொழுது ஆங்குள்ள குழந்தைகள் பெண்கள் கிழவர்கள் முதலிய அனைவருமிறந்ததால் அவர்கள் பிசாசுகளானார்கள். குற்றமற்ற அந்த ஜீவர்கள் நன்மை யடையுமாறு தான் அவர்களது கபாலங்களை மாலையாகத் தரித்து பிசாசங்களுக்கேற்ற காலமான ப்ரதோஷகாலத்தில் அவர்கள் சந்தோஷமடையவும் அவர்களால் பிறர்க்கு தீங்கில்லமால் இருக்கும்

பொருட்டும் சிவன் அங்கு தாண்டவமாடுகிருர். உலகெலாம் பிரளய காலத்தில் ருத்ரனது மூன்ருவது கண்ணிஞல் கொளுத்தப்படுகிறது. எரிந்து சாம்பலான ஸகல ஜீவராசிகளும் அவரிடம் லயமாகின்றன. ஆதலால் உலகெலாம் ஸ்மசானமேயாம். காசிக்ஷேத்ரம், மஹா ஸ்மசானம் என அழைக்கப்படுகின்றது. நித்ய சுத்தனுக அக்னி வடிவனுகவும் ஸர்வ வ்யாபியாகவுமுள்ள சிவனுக்கு சுத்தமேது? அசுத்தமேது? சாஸ்த்ரங்கள் மனுஷ்யர்களுக்காகவே ஏற்பட்டதால் மனிதர்களைக் கொளுத்தும் சுடுகாடு பூதப்ரேத பிசாசங்களின் இடமானதாலும் நாய் கழுகு சண்டாளன் முதலிய அசுத்த ஜீவர்கள் சூழ்ந்திருப்பதாலும் அங்கு சென்றவர் ஸ்நாநம் செய்தாலும் அன்றுமாத்ரம் அசுத்தராவர்.

ஸோமசர்மா மாயையைத் தரிசித்தல்.

மாயையை எனக்குக் காண்பிக்கவேண்டும் என்று பூதேவி கேழ்க்க பகவான் கூறினுர்: ப்ரியே! அதை மாத்திரம் கேழ்க்காதே! அது மிகக் கஷ்டத்தைத் தரும். நிலம் ஜல மில்லாமல் இருப்பது, சந்த்ரன் கலைகளை இழந்து மறுபடி பெறுவது, குளிர்காலத்தில் உஷ்ணமாகவும், வெய்யில் காலத்தில் கிணற்று ஜலம் சீதளமாயும் இருப்பது, உதயகிரியில் தோன்றி அஸ்தகிரியில் ஆதித்யன் மறைவது, சுக்லமும் சோணிதமும் சேர்ந்து கர்ப்பமாவது, ஜீவன் கருவில் முற்பிறவியின் அறிவைப்பெற்று பிறந்தவுடன் அதை இழப்பது, நாம் உண்ணும் உணவு மலமாகி மறுபடி பசி எடுப்பது, மேகத்திலிருந்து மழை பெய்வது, இறப்பது நிச்சயமாயினும் அதை மறப்பது, தன் உள்ளேயுள்ள இறைவனை மறந்து உடலே நான் என்பது முதலியவைகள் எனது மாயையாகும். ஒரே விதையால் பல கிளைகளை உண்டுபண்ணுகிறேன். சுப மாயையால் உலகை ஒடுக்குகிறேன். பித்ரு மாயையால் புத்ரனை அளிக்கிறேன். இத்தகைய மாயையைக் காண்பதால் கஷ்டத்திற்கு ஆளாவாய் என்று கூறியும் பூதேவி நிர்ப்பந்தம் செய்ததால் ஸோமசர்மா மாயையால் பட்ட துன்பத்தை வர்ணிக்கிருர் வராஹமூர்த்தி.

ஸோமசர்மா என்பவர் பல்லாண்டு பல வகையாக என்னைப் பூஜித்து மாயையைத் தரிசிக்க வரம் தாரும்

என்றார். அதனால் உனக்கு ஆவது என்ன? உனக்கு அது வேண்டாம். மற்ற எவ்வரம் கேட்டாலும் தருகின்றேன் என்றேன். ஸ்வர்க்கமோ, போக மோக்ஷங்களோ வேண்டேன். மாயையைத்தான் தர்சிக்க வேண்டும் என்று பிடிவாதம்செய்தாரவர். ஆனால் குப்ஜாம்ரம் என்ற விடத்தில் கங்கையில் மூழ்கி எழுந்திரு. மாயையைக் காண்பாய் என்றேன். முனிவர் அங்ஙனமே சென்று மூழ்கினார். எழுந்தவுடன் ஓர் வேட ஸ்த்ரீயின் கருவில் பெண்ணானார். கருவில் உள்ளபோது நான் என்ன பாபத்தினால் இந்த இடுக்கில் சிக்கினேன்? முன்னூறு எலும்புகளும், ஒன்பது வாயற்படிகளும், ஜலமலமும், ரத்தமும், மாம்சமும், வாதமும், சிலேஷ்மமும் நிறைந்த துற்நாற்றக் குட்டையில் ஏன் மூழ்கினேன்? வேட ஸ்த்ரீயான நான் எங்கே? கங்கா ஜல மெங்கே? விஷ்ணு எங்கே? வெளி வந்தபின் விஷ்ணுவினருளால் இறப்பு பிறப்பெனும்பெரும் கடலைக் கடப்பேன் என எண்ணினார். கன்னிகையாகப் பிறந்து வளர்ந்து ஒரு புருஷனையும் மணந்தார். பற்பல புத்ரன் புத்ரிகளையும் பெற்றார். ஜாதிக்கேற்றபடி உண்ணத் தகாத பல மாம்சங்களை உண்டார். கள் அருந்தினார். தகாதவரிடமும் சேர்ந்தார். இங்ஙனம் ஐம்பது வருஷ காலம் வேடன் வீட்டிலிருந்தார். தற்செயலாக பானையை எடுத்துக்கொண்டு கங்கையில் முழுக வந்தார். முழுகி எழுந்தவுடன் முனிவரான தான் கரையில் வைத்திருந்த த்ரிதண்டத்தையும் கமண்டலுவையும் கண்டார். அதனால், தான் வேட ஸ்த்ரீயல்ல என்று நினைவிற்கு வந்தது. அச்சமயம் தகாததை உண்டு, குடித்து, செய்த பற்பல பாபங்களை எண்ணி எண்ணி வருந்தினார்.

அச்சமயம் மூன்று புத்திரர்களையும், மூன்று பெண்களையும் அழைத்துக்கொண்டு வேடன் தன் மனைவியைத் தேடித்திரிந்து அங்குவந்தான். கரைமீது இருந்த பானையையும் புடவையையும் கண்டு கங்கையில் விழுந்து இறந்தனளோ? நான் செய்த குற்றத்தை நினைத்து நீரில் உயிரை மாய்த்தனளோ? குழந்தைகளை எவ்வாறு காப்பேன்? பசி தாகம் என்று புலம்புகிறார்களே! என்று பலவாறு புலம்பினான். இதைக் கேட்டிருந்த முனிவர், வேடா! எப்படி இறந்தால் என்ன? உன் மனைவி இனித் திரும்பாள்! இப்பொழுது குழந்தைகளை அழைத்து

வீடு சென்று காப்பாற்று என்றார். ஐயா! உமது சொற்களால் ஆறுதலடைந்தேன். எங்களை விட்டுப் பிரிந்த அருமை மனைவியின் கதிதான் என்ன? என்று கேட்க; வெட்கத்துடன் முனிவர் கூறினார்: அவளை நினைத்து அழாதே! நான் தான் உனது மனைவியாக இருந்தவள். கங்கையில் மூழ்கி ரிஷியானேன்! என்றார். இதைக்கேட்டு ஆச்சர்ய மடைந்த வேடன், மஹரிஷே! இது என்ன ஆச்சர்யம்! கங்கையில் மூழ்கிய பெண் முனிவரானது எப்படி? எல்லோரு மங்ஙனமா? என் மனைவிக்கு மாத்திரம் இந்த கதியா? என்று கேட்க; முனிவர், அப்பா! இதுதான் மாயை! பகவான் கூறியும் கேளாமல் மாயா தரிசனம் செய்யவேணுமென யான் விரும்பின பயனிது! நான் முனிவராயிருந்து பகவான் சொன்னபடி இங்கு மூழ்கியதைத்தான் கண்டேன்! நான் மூழ்கும்போது கரையில் வைத்திருந்த தண்ட கமண்டலு நான் முனிவன் என்பதை ஞாபகப்படுத்தின என்று கூறும்பொழுதுவேடனும் குழந்தைகளும் திடீரென மறைந்தனர். மஹர்ஷிகள் காலையில் ஸ்நானத்திற்கு இறங்கிய நீ மாத்யான்னிக காலம்வரை எங்கு இருந்தாய்? என்று கேட்டார்கள். இடையில் ஐம்பது வருஷங்கள் சென்றன. முனிவர்களோ இப்படிக் கேட்கின்றனர்! இதன் உண்மை என்ன? என்று முனிவர் யோசிக்கும்பொழுது, நான் எதிரே தோன்றினேன். அவர் என் திருவடியில் விழுந்து ப்ரபோ! இது என்ன அநியாயம்! நான் வேடன் மனைவியாக ஆகி பல குழந்தைகளைப் பெற்றேன்! முனிவருக் கேற்காத பாபங்களைச் செய்தேன்! ஏன் இங்ஙனம் நேர்ந்தது? என்று வேண்ட; நான் கூறினேன், சோமசர்மன்! ஸ்வர்க்கம் வைகுண்டம் முதலிய அனைத்தையும் விட்டு மாயா தரிசனம் வேண்டுமென்று கேட்டதால் இந்த துன்பத்திற்கு ஆளானாய். நீ முற்பிறவியில் எனது பக்தர்களை வணங்காத தோஷத்தினால் இந்த பாபங்களைச்செய்ய நேர்ந்தது. என்னைத் தரிசிக்க விரும்புகிறவர்கள் வேதியர்களை வணங்கி பூஜிக்கவேண்டும். எனது தரிசனத்தினால் அவரது பாபங்களை அகற்றி அவருக்கு நற்கதி தருவேன் என்று கூறினேன். அத்தகைய கொடிய மாயையை நீ ஏன் விரும்புகிறாய்? என்றார். பதினேழாவது யுகத்தில் குப்ஜாம்ரக தீர்த்தத்தில் ரைப்யர் என்ற மகரிஷி கடும் தவம்

புரிந்து ப்ரத்யக்ஷமாய் வந்த என்னைத் தீர்த்த மகிமையைக் கூறும்படி வேண்டினர்.

குப்ஜாம்ரக க்ஷேத்ரம்.

குப்ஜாம்ரக க்ஷேத்ரத்தில் எனதாலயத்தில் நிர்மால்யங்கள் சேர்ந்த இடத்தில் ஒரு பாம்பு வசித்துவந்தது. அதனருகில் உள்ள ஒரு புதரிலிருந்து கீரி ஒன்று வந்து இப்பாம்போடு யுத்தம் செய்தது. முடிவில் இரண்டும் இறக்க, பாம்பு ப்ராக்ஜோதிஷ அரசனின் பெண்ணகப் பிறந்தது. கீரியோ கோசலாதிபதியின் புத்ரனகப் பிறந்தது. தெய்வச்செயலாக அப்பிறவியில் இருவரும் தம்பதிகள் ஆனர்கள். மிக அன்புடன் எழுபத்தேழு ஆண்டுகள் அன்பு குறையாமல் இருவரும் வாழ்ந்தார்கள். அரசகுமாரன் பாம்பைக் கண்ட விடங்களெல்லாம் அடித்துத் கொன்று வந்தான். மனைவி பலமுறை தடுத்தும் அவனதை நிறுத்தவில்லை. ஒரு நாள் அவர்களெதிரில் ஓடிவரும் கீரியை ராஜகுமாரி அரசன் தடுத்தும் கேளாமல் கொன்ருள். அரசகுமாரன் பலமுறை யான் கூறியும் அரண்மனையில் மங்களகரமாக நடமாடிய கீரியை ஏன் கொன்ருய்? என கடிந்தான். நான் பன்முறை வேண்டியும் தாங்கள் ஸர்ப்பத்தை அடித்தது என்ன நீதி என்ருள். விஷத்தைக் கக்கும் பாம்பைக் கொல்வது நியாயம். ஒருவருக்கும் தீங்கிழைக்காமல் பாம்பைக் கொன்று நன்மையைத் தரும் கீரியைக் கொன்றது மிகவும் தவறு என்று அரசன் கோபித்துக் கொண்டான். அன்றுமுதல் ஒருவருடன் ஒருவர் பேசுவதுமில்லை. காண்பதுமில்லை.

இதையறிந்த கோசலராஜன் புத்திரனை அழைத்து இங்ஙனம் இருப்பது அழகல்ல! இதற்குக் காரணம் என்ன? என்று வினவினன். ராஜகுமாரன் நடந்த விஷயத்தைக் கூற இது சரியான காரணமல்ல! உண்மையைக் கூறு என்று கேழ்க்க, தந்தையே என்னுடன் குப்ஜாம்ரகம் வந்தால் உண்மை வெளியாகும். யான் அங்கிருந்து திரும்பப்போவதில்லை யாதலால் தம்பிக்கு அபிஷேகம் செய்துவாருங்கள் என்ருன். அங்ஙனமே அனைவரும் அங்கு சென்ருர்கள். அரசன் ஸ்நேஹ பங்கத்திற்கு காரணம் என்னவென்று கேட்டார். அரசகுமாரன்

ஆங்குள்ள நிர்மால்ய இடத்தையும், கிரி இருந்த இடத்தையும் காண்பித்து, தான் கிரியாய் இருந்ததையும் தன் மனைவி பாம்பாய் இருந்ததையும் கூறி பகவானது நிர்மால்யத்தை அணுகவிடாமல் தன்னைத் தடுத்த ஸர்ப்பத்தைத் தான் கொன்றதாகவும் தாங்களே அந்த க்ஷேத்ர மகிமையால் ராஜப்பிறவியை எடுத்ததாகவும் கூறினான். அதன் மகிமையை உணர்ந்த கோசல ராஜனும் அவர்களும் துவாதசியில் விரதம் செய்து அங்கு முக்தி அடைந்தார்கள்.

சிறந்ததான தாம்ப்ரம் உண்டான சரிதம்.

ஒவ்வொருவருக்கும் தீக்ஷையைக் கூறி பகவானைப் பூஜிக்கவேண்டிய முறையையும் அதற்கு வேண்டிய பாத்திரங்களில் தாம்ப்ர பாத்திரமே சிறந்தது என்றும் வர்ணிக்கிறார்.

குடாகேசன் எனும் அசுரன், அசுர ஜாதியில் பிறந்திருந்தும் என்னை நாடிப் பல்லாண்டு தவம் செய்தான். யான் ப்ரத்யக்ஷமாகி யாது வரம் வேண்டும்? என்று கேழ்க்க, ஒப்பற்ற பலத்தையும், நீண்டநாள் வாழ்வையும் முடிவில் எனது சக்ரத்தினால் மரணத்தையும் தனது தாதுக்கள் தாம்ப்ரம், ஸ்வர்ணம் முதலிய தாதுக்களாக ஆக வேண்டும் என்றும் முக்யமான மேதஸ் என்ற தாதுவினால் தாம்ப்ரம் உண்டாக வேண்டும், அது எனது பூஜைக்குச் சிறந்ததாக எல்லோராலும் ஏற்கப்பட வேண்டும் என்றும் வேண்டினான். அங்ஙனமே யான் வரமளிக்க பல்லாண்டு அவனிந்திரனாகி தேவர்களையும் வேதியர்களையும் ஹிம்ஸித்தான். அவர்களைக் காக்க இவனைச் சக்ரத்தினால் கொன்றேன். அவன் கோரியபடி அவனது உடலிலிருந்து தாம்ப்ரம் ஸ்வர்ணம் வெள்ளி, பித்தளை, ஈயம், அரக்கு முதலியவைகள் தோன்றின. மற்ற தாதுக்களில் தாம்ப்ரமே ஸ்வர்ணத்தைவிட சிறந்ததாம். பகவான் பக்த பராதீநன்.

வராஹ தீர்த்த மகிமை.

த்ரேதா யுகத்தில் பிரம்மதத்தன் எனும் அரசனது புத்திரரான சோமதத்தன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். ஆங்கு ஒரு நரியின்மீது பாணத்தைத் தொடுத்தான்.

அது துள்ளி வராஹ தீர்த்தத்தில் விழுந்தது. அதே ஸமயத்தில் ஆலமரத்தில் இருந்த ஓர் கழுகை வேடன் அடிக்க அதுவும் அதே தீர்த்தத்தில் விழுந்தது. நரி காஞ்சி ராஜனது பெண்ணுகப் பிறந்தது. கழுகோ களிங்கராஜ னது புத்திரனுகப் பிறந்தது. தெய்வச்செயலாக இவ்விரு வர்க்கும் மணம் நேர்ந்தது. ஒரு சமயம் ஸர்வாங்க சுந்தரி என்ற அவள் கணவனிடத்தில் ஒரு விக்ஞாபனம் செய்து கொண்டாள். ஒருவரும் அறியாமல் நான் ஏகாந்தமாக தூங்க வேண்டும். தூங்குமிடத்தில் எவரும் வரலாகாது என்று கேட்டாள். அரசன் அங்ஙனமே உத்தரவு அளித்தான். நீண்டநாள் சென்றபின் அரசன் தான் ஒரு விருதத்தை செய்யக்கருதி மனைவி இல்லாமல் அதைச் செய்யலாகா தென அவளை எழுப்ப மனைவி படுத்திருந்த இடத்திற்குச் சென்றான். அச்சமயம் அவள் எழுந்து உட்கார்ந்து நான் ஓயாத் தலைவலியை அனுபவிக்கின்றேனே! என்னைப் புருஷனும் கவனிக்கவில்லை! எப்பொழுது எனது வேதனை தீரும்? எப்பொழுது யான் வராஹதீர்த்தம் செல்வேன்? என்று அழுவதைக் கேட்டான். அருகில் சென்று மனைவி யுடன் வராஹ தீர்த்தம் சென்றான். இங்கு ராஜநீதி மிக விஸ்தாரமாகக் கூறப்படுகிறது.

நான் நரியாக இருந்த பொழுது சோம தத்த அரசன் பாணத்தினுல் அடித்தான். இந்த தீர்த்தத்தில் விழுந்த தால் நான் இராஜ குமாரியாகப் பிறந்தேன். அரசன் அடித்த அடியால் இன்னும் தலைவலி என்னைவிட்டு அகல வில்லை. அரசனும் தனது முற்பிறவியை உணர்ந்து நானும் கழுகாக இருந்து அடிபட்டு அந்த தீர்த்தத்தில் விழுந்ததால் இந்த ராஜபதவியை பெற்றேன் என்று கூறி இருவரும் அந்த தீர்த்தத்தில் மூழ்கி வைகுண்டம் சென்றனர்.

கானபலன். சண்டாளனும் பிரம்ம ராக்ஷஸனும்.

ஒரு சண்டாளன் முற்பிறவியின் வாசனையினுல் ஒவ்வொரு நாளும் வெகு தூரத்திற்கப்பால் உள்ள ஓர் ஆலயம் சென்று எல்லோரும் உறங்கிய பிறகு வீணையை மீட்டி பகவன் நாமாவைப் பாடுவான். இங்ஙனம் பல ஆண்டுகள் பாடிவர ஒரு சுக்ல ஏகாதசியில் பாடச்சென் ருன். அங்கு ஓர் பிரம்ம ரக்ஷஸ் இவனது வழியை

மறைத்து அவனைக்கொன்று தின்ன ஆரம்பித்தது. பகவன் நாம கீர்த்தன புண்யத்தால் பிரம்ம ரக்ஷஸ்ஸைக்கண்டு அஞ்சாமல் என்னை உண்பது ஞாயமா? என்று தைர்யமாகக் கேட்டான். அது இறைவனால் எனக்களிக்கப்பட்ட உணவான மனிதரைக் கொல்வதில் என்ன குற்றம்? என்றது. ஆனால் இன்று யான் வழக்கப்படி ஆலயம் சென்று பகவன் நாமாவைப்பாடிவந்த பிறகு என்னை நீ புசிக்கலாம் என்றான். பிரம்ம ரக்ஷஸ், மூட! என்னை ஏமாற்றப் பார்க்கின்றாய்! தனக்கு மரணம் நேரும் என்று தெரிந்து எவரேனும் திரும்பி வருவனா? உன்னை விட மாட்டேன் என்று கூற சண்டாளன் பதில் உரைத்தான். நீர் கூறுவது உண்மை! அதிலும் பாப பிறவியான சண்டாளனை நம்பாதது நியாயமே! ஆயினும் எனது ஸத்யத்தைக்கேட்டு என்னை நம்பிவிடு. ஸத்யத்தினால் உலகம் நிற்கின்றது. கன்னிகைகள், பிராம்மணர், அரசர் முதலியவர்கள் ஸத்யத்தினாலேயே ஜயிக்கின்றார்கள்.

காலையில் யான் வராவிடின் ஷஷ்டி, அஷ்டமி, அமாவாஸ்யை முதலிய தினங்களில் கூட பிராதஸ்நானம் செய்யாதவர்கள் எந்த நரகத்தை அடைவார்களோ அந்த கதியை அடைகிறேன். குருபத்நீ, ராஜபத்நீ இவர்களின் கற்பை அழித்தவன், பொய் கூறுபவன், பிரும்மஹத்தி செய்தவன், ஸுராபானம் செய்தவன் பிறர் பொருளைத் திருடுபவன், விரதத்தை ஆரம்பித்து முடிக்காதவன், முதலியவர்கள் செல்லும் நரகத்தை அனுபவிக்கிறேன் என்றான் சண்டாளன்.

இதைக்கேட்ட பிரம்ம ரக்ஷஸ் தர்மத்தைக்கேட்ட புண்யத்தினாலும் நாம கீர்த்தனம் செய்தவனது சேர்க்கையாலும், போய் காலையில் வா என்று கூறிற்று. சண்டாளன் வழக்கப்படி இரவெலாம் கண்விழித்து காலையில் "நமோநாராயணாய" என்றுகூறி பிரம்ம ரக்ஷஸ்ஸிடம் வந்தான். வழியில் ஒருவன் நீ ஏன் அங்கு செல்கின்றாய்? பிரம்ம ரக்ஷஸ் உன்னை கொல்லுமே அங்கு போகாதே என்றான். சண்டாளன் நான் சத்தியம் செய்து வந்திருக்கிறேன். அங்கு சென்று உடலை அதற்கு அளிப்பது நியாயமென்றான். வந்தவன் அப்பா நீ சொல்வது

நியாயமாயினும் உயிரைக்காக்க பொய் கூறுவது பொய் யாகாது! அறியாயா? என்றுகூற, நான் ஸத்யம் தவரமாட் டேன். எனது உடலைவிட ஸத்யமே சிறந்தது. உடல் இங்கு அழியும். ஸத்யம் எங்கும் எப்பொழுதும் அழியாது என்று கூறி பிரம்ம ரக்ஷஸ்ஸிடம் வந்தான் அவன்.

இதோ வந்து விட்டேன்! சிறிது தாமதம் ஆனதற்கு மன்னிக்கவேண்டும். சூடான எனது ரத்தத்தைப் பருகி உனது பசியை ஆற்றிக்கொள் என்று பஞ்சமன் கூறி ஞன். இதைக்கேட்டு ஆச்சர்யமடைந்த பிரம்ம ரக்ஷஸ் உனது ஸத்யத்தையும் தர்மத்தையும் கண்டு சந்தோஷ மடைந்தேன். சாஸ்த்ரம் அறியாத உனக்கு எப்படி இந்த புத்தி உண்டானதென்று கேட்டது.

சண்டாளன்: சாஸ்த்ரம் அறியாவிடினும் எல்லோரும் ஸத்யமே கூறவேண்டுமென்பது பொதுவான தர்மம் அல்லவா? பிரம்மரக்ஷஸ்: உனது சொல்லைக்கேட்டு சந்தோஷம் அடைந்தேன். இரவில் கண்விழித்து பகவன் நாம கீர்த்தனம் செய்த புண்யத்தையாவது கொடு. உன் உயிரைக் காக்கலாம். சண்டாளன்: என்னைச் சாப்பிடு கிறேன் என்றுகூறிவிட்டு நாம கீர்த்தன புண்யத்தை கேட்பது என்ன நியாயம்? பிரம்ம ரக்ஷஸ்: அதிருக்கட் டும். ஒரு யாமம்வரை பாடிய புண்யத்தையாவது கொடு. மனைவி மக்களோடு வாழலாம் நீ.

சண்டாளன்: கானபலனைத் தரமாட்டேன். உமது விருப்பப்படி எனது உடலை உண்ணலாம் பொய்கூறி வாழ்வதிலும் மெய்கூறி இறப்பதுமேல்.

பிரம்ம ரக்ஷஸ்: ஒரு கானத்தின் புண்யத்தையாவது எனக்கு கொடு.

சண்டாளன்: ஆச்சர்யம், ஐயா! நீர் பிறவி ராக்ஷஸ னல்ல, எந்த பாபத்திஞல் பிரம்ம ராக்ஷஸஞக ஆனீர்! என்று கேழ்க்க அது முற்பிறவியின் விஷயங்களைக் கூறியது.

பிரம்ம ரக்ஷஸின் முற்பிறவி.

நான் சோமசர்மா என்ற பிராம்மணன். வேதம் சாஸ்த் ரம் பிரயோகம் ஸூத்ரம் முதலியவைகளையும் அறியாமல்

யாகம் செய்து வைத்தேன். லோபத்திலும் மோஹத்திலும் விதியை மீறி பல தவறுகளுடன் பலருக்கு பல யாகம் செய்து வைத்தேன். ஒரு சமயம் எனது வயிற்றில் சூலநோய் உண்டாகி யாகம் பூர்த்தியாவதற்குள் இறந்தேன். அதனால் பல நரகங்களை அனுபவித்து அந்த பாபத்தினால் இந்த கோரமான பிரம்ம ராக்ஷஸப் பிறவியைப்பெற்றேன். மாபாபம் செய்த என்னைக் கானபுண்யத்தினால் கரை யேற்றிவை என வேண்டிற்று. இதைக் கேட்டு மனம் இரங்கி கானபுண்யத்தின் பலனை அறிந்த சண்டாளன் அங்ஙனமே ஒரு கான புண்யத்தை அதற்கு தானம் செய்ய, அதனால் பிரம்ம ராக்ஷஸப்பிறவி அகன்று இருவரும் வைகுண்டம் சென்றார்கள்.

ஸ்த்ரீ புருஷ தர்மம்.

பெண்கள் ரஜஸ்வலா தோஷமென்ற நாட்களில் தேவ பூஜை, நாமஜபம் முதலியவைகளை எப்படிச் செய்வது? பிரம்மஹத்தி விரதத்தை அந்நாட்களில் கைக்கொள்வதால் உடலாலும் வாக்கினாலும் யாதொரு தேவ கார்யத்தையும் மனுஷ்ய கார்யத்தையும் செய்யக் கூடாது. அப்படி மீறி செய்வதால் நரகம் வருவதுடன், சரீரத்தில் ஆரோக்யம் குறைந்து பிறக்கும் குழந்தைகள் துர்பலமாகவும் அங்க ஹீனமுள்ளவர்களாகவும் பிறப்பார்கள். ஆனால் மனதினால் பகவானை நினைப்பது குற்றமல்ல. நான் செய்கிறேன் என்ற எண்ணத்தைவிட்டு இறைவன் ஆணை என்று கருதி செய்யும் கர்மாவினால் ஜீவனுக்குத் துன்பம் தோன்றாது. ஒவ்வொரு நிமிஷத்திலும் என்னையே நினைத்திருப்பவர் நற்கதி அடைவர்.

ருதுவான மூன்று நாட்களில் ஸ்த்ரீ புருஷ ஸங்கத்தை மனதினாலும் நினைக்கக் கூடாது. அச்சமயம் ஸங்கமம் நேர்ந்தால் இவர்களுக்கும் இவர்களின் பித்ருக்களுக்கும் பிறக்கும் குழந்தைகளுக்கும் பற்பல துன்பங்கள் தோன்றும். ஐந்தாவது நாள் முதல் பதினாறு நாள்வரை கர்ப்பாதான காலமாம். அக்காலத்தில் நிஷித்தமான நாட்களை விலக்கி தர்மத்தை நாடி ஒருமுறை ஸங்கமம் அவசியமாம். அந்த நியமத்தோடிருப்பவர் பிரும்மசாரி எனப்படுவர். அச்சமயம் மோஹத்தினாலோ, கோபத்தினாலோ, கர்ப்பாதானம் செய்யாதவர் சிசுஹத்தி

செய்த பாபத்திற்கு ஆளாவர். எத்தனையோ தாய்களையும் தந்தைகளையும் மக்களையும் பெற்ற மானிடப் பிறவி பிறப்பு இறப்பெனும் சுழலில் அகப்பட்டு சுற்றுகின்றது. அதிலிருந்து விடுபட்டு பூர்ணமான சுகத்தைப்பெற ஆணும் பெண்ணும் அவரவர்க்கு ஏற்பட்ட கடமையைத் தவறாமல் செய்யவேண்டும். மனிதருடைய நன்மையை நாடி வேதசாஸ்த்ரங்கள் தோன்றின. அவைகளை மதியாமல் தன்னிஷ்டப்படி நடப்பவர் மறுபிறவியில் மிருகமாகப் பிறப்பர். ஆணும் பெண்ணும் மனம் ஒத்து கோபதாபமின்றி இல்லறத்தை நன்கு நடத்தவேண்டும். பதியின் மனம் நோகும்படி நடக்கும் பெண் ஸதியல்ல. ஸதியைக் கண்ணீர் வடிக்கும்படிச் செய்பவன் பதியல்ல. பெண்களனைவரும் பராசக்தியின் அம்சம், புருஷர் அனைவரும் ஈசன் அம்சம் என்றும் இருவரும் கருதவேண்டும். இங்ஙனம் இருவரும் தெய்வபாவனையுடன் வீட்டிற்குத் தலைவன் தான் அல்ல என்று கருதி இல்லறத்தைச் செவ்வனே நடத்தினால் லக்ஷ்மிகடாக்ஷம் உண்டாகும். வீட்டுக்காரி வீட்டுக்காரன் அகமுடையாள் அகமுடையான் என்பது முன்னோர் வழக்கம்.

நந்தியும் சாளக்ராமமும்.

சாலங்காயனர் என்ற ரிஷி விஷ்ணுவையே ஆராதித்து புத்திரன் பெறவேண்டும் என லோஹார்களம் என்ற இடத்தில் பல்லாண்டு தவம் புரிந்தார். அங்கு என்னைக் காணாமல் பல இடங்களில் தேடினார். அங்கு நானும் சிவனும் ஒன்றாக இருக்கின்றோம் சாலக்கிராமம் மலையில் சிலா ரூபமாக இருக்கின்ற என்னையும், லிங்க வடிவமான மலையாக இருக்கின்ற சிவனையும் அவர் அறியவில்லை. அந்த மலையிலுள்ள கற்கள் சக்ர அடையாளமுள்ளதாக இருக்கும். அதில் நான் வசிக்கின்றேன். லிங்கவடிவமான கற்களில் சிவன் இருக்கின்றார். சிவநாபம் என்றும் சக்ர நாபம் என்றும் அழைக்கப்படுகின்றோம். அங்குள்ள மலை சோமேச்வரன் என்று அழைக்கப்படும். சோமேச்வரமலையில் சோமன் எனும் சந்திரன் த்ரியம்பக மூர்த்தியை உபாசித்தான். என்னுடைய ஜலமயமான சரீரம் ரேவா என்ற நதியாக தோன்றிற்று. பெண் வடிவமான ரேவை என்னை நாடித் தவம் செய்து என்னைப் போன்ற புத்திரன் வேண்டும் என்று அவள் வேண்ட

நதிவடிவமான உன் இடையில் ஸாலக்ராமவடிவமான புத்திரனாக இருக்கின்றேன். நானும் சிவனும் ஒன்றே. இங்கு தவம் செய்யும் சாலங்காயன முனிவருக்கு ஒரு புத்திரனைத் தரவேண்டும். அவர் தாயின் வயிற்றில் பிறவாப் புதல்வனைக் கேழ்க்கிறார். நீ என்னையே புத்திரனாகக் கேட்கிறாய். நான் உன்னிடம் தோன்றி அவரிடம் சேருகின்றேன் என்றார்.

[வராஹமூர்த்தி விஷ்ணுவின் அவதாரம் ஆனதால் நாராயணனைப்பற்றி கூறும்பொழுது சிலசமயம் நான் என்றே கூறுகின்றார். சில சமயம் நாராயணன் என்றும் வர்ணிக்கின்றார் என்பது கவனிக்கத் தக்கது.]

சோமேசத்திற்குத் தெற்கே இராவணன் தனது பாணத்தினால் மலையைப் பிளந்த இடம் பாணகங்கை என அழைக்கப் படுகிறது. சோமேசத்திற்குக் கிழக்கே இராவணனது தபோவனமாகும். அவன் சாமகானத்துடன் சிவனுக்கு பிரியமான நர்த்தனமும் செய்தான். அந்த இடம் நர்த்தநாசலமெனப்படும். அங்கே சாலங்காயனமுனிவர் பகவானை தியானம் செய்து கோண்டிருந்தார். பகவான் ரேவைக்கு வரம் அளித்தபடி சாலக்கிராம சிலைகளுக்கிடையேயிருந்து சங்க, சக்ர, கதாபாணியாகத் தோன்றி சாலங்காயனரது வலதுபுறத்தில் நின்றேன். சாலங்காயனர் அவரைப் பார்க்கும்பொழுது சூலபாணியாக மூன்றுகண்ணுள்ளனாகவும் தோன்றினேன். அவர் மஹாவிஷ்ணுவே புதல்வனாகப் போகிறார் என்று எண்ணி பேசாமல் நின்றார். நந்திவடிவான நான் முனிவரே எழுந்திரும். உமது வலது பாகத்திலிருந்து உமக்குப் புத்திரனாகத் தோன்றிய என்னைப் பாரும். நீர் விஷ்ணுவை ஆராதித்தாலும், விஷ்ணுவும் சிவனும் ஒன்றே யாதலால் சிவசின்னம் பொருந்திய புத்திரன் ஆனேன் என்றார். அவரைத் தழுவி முத்தமிட்டு தன்னை ஆநந்தப்படுத்தியதால் நந்தி எனப் பெயர் வைத்தார். ஆயினும் விஷ்ணுவைத் தரிசிக்கும் வரை நான் இங்கு தங்குவேன் என தங்கினார். அதனிடையில் தனது ஆச்ரமத்திற்கு நந்தியை அனுப்பி சிஷ்யனான ஆமுஷ்யாணனையும் பசுக்களையும் அழைத்துவரும்படிக் கூறினார். அவர் பசுக்களுடனும், சிஷ்யனுடனும் வந்துசேர்ந்தார்.

ப்ராயகமும், த்ரிவேணியும்.

யாகத்தைவிடச் சிறந்தது ஆனதால் ப்ரயாகம் என்றும் தீர்த்தங்களுள் சிறந்ததானதால் தீர்த்தராஜன் என்றும் கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்ற மூன்று நதிகளும் பின்னல்கால்போல் அமைந்ததால் வேணீதானம் செய்யுமிடம் ஆதலாலும் த்ரிவேணீ என்றும் அழைக்கப்படும். அங்கு சிவன் சூலடங்கேச்வரன் என்றும் விஷ்ணு பிந்து மாதவர் என்றும் அழைக்கப்படுவர். அங்கு லோக நன்மைக்காக விஷ்ணு கடுந் தவம் புரிந்தார். அவரது தவத்தின் ஜ்வாலை உலகங்களையும் கொளுத்தியது. தேவரனைவரும் சிவனிடம் முறையிட்டனர். சிவன் எதற்காகத் தவம் செய்கிறீர்? என்று கேழ்க்க லோக நன்மையை நாடியே தவம் செய்கிறேன். உம்மிடமிருந்து வரம்பெற வேண்டும் என்றும் எண்ணினேன் என்றார். அவருள்ளத்தை அறிந்த சிவன் இன்றுமுதல் இது முக்தி க்ஷேத்ரமெனப் படும். உம்மைத் தரிசித்தவர் முக்தி பெறுவது ஸத்யம். உமது கழுத்து வேர்வையினால் உண்டான நதி கண்டகீ என்ற பெயரைப் பெறும். இங்கு நான், நீர், பிரம்மா ஆகிய மூவரும் நம்மைச் சார்ந்த முப்பத்து முக்கோடி தேவர்களும் ஸகல யாகங்களும் இங்குவசிக்கட்டும். கண்டகியில் கார்த்திகைமாதம் பூர்ணமாக ஸ்நானம் செய்கின்றவர் பாபம் அகன்று முக்தி பெறுவர். ஸ்மரித்தாலும், தரிசித்தாலும், தொட்டாலும் இது பாபத்தை நீக்கும். தேவிகா கண்டகீ நதியுடன் சேரும் இடத்தில் பிரம்மபுத்ரா என்பதும் சேர்ந்து இது ஒரு த்ரிவேணி ஆகும்.

இங்கு புலஸ்த்யர், புலகர் என்பவர்கள் தவம் செய்தார்கள். அங்கு உடலை விடுபவரும், ஸ்நானம் செய்பவரும், வேணியைத் தந்து பித்ருக்களையும், பகவானையும் ஆராதிப்பவரும் வைகுண்டம் அடைவர்.

கஜேந்திர மோக்ஷம்.

வேதநிதி என்ற மஹரிஷியின் புதல்வர்கள் ஜய விஜயர் என்பவர்கள். மறுபிறவியில் த்ருணபிந்து என்பவரது புத்திரர்களாகத் தோன்றினர்கள். இருவரும் வேத வேதாங்கங்களில் கரைகண்டவர். யாகம் செய்துவைப்பதில் மிக சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். விஷ்ணு பக்தியில்

ஈடுபட்டவர்கள். இவர்கள் செய்துவைக்கும் யாகத்தில் பகவானும் தேவதைகளும் நேராக வந்து ஹவிஸ்ஸைப் பெறுவர். திருஷ்டிதோஷத்தினால் இருவரும் துர்குண முள்ளவர்களாக ஆனார்கள். இவர்களது கீர்த்தியைக் கேட்டு மருத்தன் என்னும் மன்னன் இவர்களை யழைத்து ஒரு வேள்வியைச் செய்தான். அபரிமிதமான பொருள்களை அளித்தான். அதுவரை ஒன்றாக இருந்த இவர்கள், பொருள்களைப் பிரித்துக்கொள்ள வேண்டும் என்று ஆரம்பித்தார்கள். இதில் சிறிது குறைவாகத் தக்ஷிணை பெற்றவர், அதிகம் பெற்றவரது பொருளை ஒன்றாகச் சேர்த்து ஸம பாகமாகப் பங்கிட வேண்டும் என்றார். மற்றவரோ அவரவர்களுக்குக் கிடைத்த பொருள் அவரவருக்கே சொந்தம் என்று கூற வாதம் பலத்தது. கோபம் மிகுந்தது. சாபத்தில் முடிந்தது.

பணத்தை பிடுங்கிக்கொண்டு எனக்குக் கொடுக்க மாட்டேன் என்றதால் நீ முதலை ஆவாய் என்று சபித்தார் ஒருவர். எவ்வளவு கூறியும் கேளாமல் மதம் பிடித்த யானைபோல் உள்ளதால் நீ மதயானை ஆவாய் என்று சபித்தார் மற்றவர். த்ரிவேணியில் முதலை தங்கி நின்றது. கஜராஜன் தனது மனைவிகளுடன் ஆங்கு இறங்கி ஜலக்ரீடை செய்தான். பூர்வஜன்ம துவேஷத்தால் யானை யின் காலைப் பிடித்து உள்ளே இழுத்தது. யானை முதலை யைக் கரைக்கு இழுக்க முயற்சித்தது. நாட்கள் பல சென்றும் ஒருவரும் தோற்கவுமில்லை ஜயிக்கவுமில்லை. இங்ஙனம் பல்லாண்டுகள் யானைக்கும் முதலைக்கும் போர் நடந்தது. அதனால் ஜலத்தில் உள்ள ஜந்துக்களும் கரை யிலுள்ள பிராணிகளும் அநேகம் இறந்தன. ஆங்குள்ள ஜலேச்வரன் எனும் அரசன் பகவானிடம் முறையிட் டான். பகவான் தனது சுதர்சனத்தை விட்டு அம் முதலை யைக் கொன்றார். கரை ஏறிய கரீந்த்ரனும் முதலையும் பழைய ஜயவிஜயர் ஆனார்கள்.

சுதர்சனம் எனும் பகவானது சக்கரம் மிகக் கடின மான தோல் உடைய முதலையை நறுக்கும் பொழுது சக்ரத்தின நுனிகள் ஆங்குள்ள கற்களில் உறைந்தன. ஆதலால் ஒவ்வொரு கல்லிலும் சக்ரத்தின் அடையாள மிருக்கும். வஜ்ரகீடம் எனும் புழுக்கள் அந்த சிலைகளில்

துவாரம் செய்யும். துவாரமும் சக்ரமும் உள்ள ஸால க்ராமமே பூஜைக்கு ஏற்றதாம். பரதன் எனும் அரசன் த்ரிவேணியின் கரையிலுள்ள த்ரிஜலேச்வரனைப் பூஜித்து மான் பிறவி எடுத்தாலும் த்ரிஜலேச்வரனது மஹிமையால் பூர்வ ஞானத்தைப் பெற்று ஜடபரதனைகப் பிறந்து முக்தி பெற்ருன். இரு காக்கைகள் அன்னத்திற் காக சண்டையிட்டு த்ரிவேணியில் விழுந்து இறந்து ஹம் ஸங்களாக ஆயின. ஆதலால் ஹம்ஸ தீர்த்தம் எனப் பெயர் தோன்றிற்று. ஸாலங்காயனர் ஆங்குள்ள ஸால மரத்தினருகே இளைத்த சரீரத்தை இளைப்பாரும்படி செய்த தால் ஸாலங்காயனர் எனப் பெயர் பெற்ருர். அவர் அந்த க்ஷேத்ரத்தில் விஷ்ணுவைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணத்தினுல் மதுரையில் இருந்து வந்தார். நந்தியையும், ஆமுஷ்யாணனையும் கண்டு ஸந்தோஷித்து வந்த கோக் களைத் தானம் செய்தார். பகவான் சங்க சக்ர கதாபாணி யாக அவருக்குத் தரிசனம் அளித்து முனிவரே ! இதோ தரிசனம் தந்தேன் ! நீர் விரும்பியபடி எனது அம்சமான புத்திரனையும் தந்தேன். ஈச்வரனது சிறந்த சரீரமான இவர் நந்திகேச்வரன் எனப் பெயரால் மாத்திரம் மாறு பட்டு உனக்குப் புதல்வரானர். நீ இங்கிருந்து எனது ஸாயுஜ்ய பதவியைப் பெறுவாய், என்று கூறி மறைந் தார். ஆங்குள்ள வடவிருக்ஷம் விஷ்ணு ரூபமானது என் பதைச் சிவனே அறிவார்.

நேபாளம் ஹரிஹர க்ஷேத்ரம்.

இந்த உத்தமக்ஷேத்ரத்தில் சிவ விஷ்ணு ஸந்நதி இருப் பதால் தேவர், கந்தர்வர் முதலிய அனைவரும் வந்து வசிக் கின்றனர். மகாதேவனது ஜடையிலிருந்து சுவேத கங்கையும் கண்ணிற்கு தெரிந்ததும் தெரியாததுமான எண்ணிறந்த நதிகள் இருக்கின்றன. நீலகண்டன் என்று சிவாலயம் மிகப்பிரசித்தமானது. சிவராத்திரி தரிசந மும் பூஜையும் மிகச்சிறந்தது. கைலாசத்தை அளிக்க வல்லது. கண்டகீ, கிருஷ்ணை சிவ சரீரத்திலிருந்து உண் டான திரிசூல கங்கா என்ற நதிகள் மிகப் பாவன மானவை. சிவன் தவம்புரிந்த சித்தாச்ரமம் அங்கிருக் கின்றது. மூன்று நாள் அங்கே வசித்தால் ராஜஸூய பலனை அடையலாம். அங்கே நான் கிழக்கு முகமாக

ஸாலக்ராமத்தில் அமர்ந்திருக்கின்றேன். மிக ரகஸ்யமான விஷயத்தைச் சாமான்யமானவர் அறிய முடியாததைக் கூறுகிறேன். எனது தக்ஷிண புறத்தில் மிகச் சிறந்தவருன சிவன் தங்கி இருக்கின்ருர். அவரை நமஸ்கரிப்பவர் என்னை நமஸ்கரிப்பவராவர். என்னை வணங்கியவர் அவரை வணங்கியவராவர். நான் உள்ள இடத்தில் சிவனும் சிவன் உள்ள இடத்தில் நானும் இருக்கின்ரேம். சிவனை நிந்தித்தவன் என்னை நிந்தித்தவனுவன். என்னை நிந்தித்தவர் சிவனை நிந்தித்தவன் ஆவான். ஆதலின் ஹரிஹர வடிவமான இந்த திவ்ய க்ஷேத்திரம் முக்தி க்ஷேத்திரமெனப்படும். ஆங்குள்ள கண்டகி மிக உத்தமமான நதி.

குருக்ஷேத்ரமும் ஹ்ரிஷீகேசமும்.

பிருகுவம்சத்தில் தோன்றிய தேவதத்தர் என்ற மகரிஷி நீண்டகாலம் கடும் தவம் புரிந்தார். தனது பதவிக்கு ஆபத்து வருமோ என அஞ்சிய தேவேந்திரன், வஸந்தன், மன்மதன் இவர்களுடன் பிரம்லோசா என்ற அப்ஸரஸ்ஸை அனுப்பினுன். முனிவர்மீது காமன் சரம் விழுந்தவுடன் மனம் கலங்கிற்று. கண்ணைத்திறந்தார். அழகிய உருவம் தோன்றிற்று. இனிய சங்கீதமும் முனிவரைப் பரவசப்படுத்தியது. பந்தாடும் அவள் கடாக்ஷம் அவர் மனதைத் துளைத்தது. தவத்தை இழந்தார். மாயையால் மயங்கினுர். நீயே சரணம் என்று அவளடி பற்றினுர் முனிவர்.

முற்றும் துறந்த முனிவரையே காமவசப்படுத்தியது மாயை. மாயைக்கு ஸகாயமாக பெண்மக்கள் படைக்கப்பட்டுள்ளார்கள். அக்னி கும்பத்திற்கு சமம் நாரீ. நெய் கும்பத்திற்கு சமம் புருஷர் என்பார்கள் சிலர். அது சரியானது அல்ல. அக்னி கும்பம் நெய் கும்பத்தை அணுகினுல்தான் நெய் உருகும். பெண்கள் வெகு தூரே இருந்தாலும் கடைக்கண் பட்டவுடனே புருஷன் உருகுகிருன்.

மஹரிஷி மதிமயங்கி ஆண்டுகள் பல சென்றதை அறியாமல் இரவும் பகலும் பிரம்லோசா என்ற தேவ வேசியுடன் காலத்தைக் கழித்தார். பூர்வ வாஸனையினுல்

திடீரென ஒருநாள் வெறுப்பு தோன்றி அவளை விட்டுப் பிரிந்தார். இந்திரன் தூண்டினலும் தான் புலன்களுக்கு அடிமையானதால் குற்றம் தன்மீதுதான் என்று கருதி வெட்கித் தலைகுனிந்து அவளைத்திரும்பிப் பாராமல் பிருகுவின் ஆச்ரமத்திற்கு சென்று தவம் செய்தார். பிருகுதுங்கம் என்ற அவ்விடத்தில் லிங்க உருவத்துடன் சிவன் தோன்றி தன்னிடமிருந்த கங்கா ஜலதாரையால் அவருக்கும் உலகுக்கும் உண்டான தாபத்தை விலக்கி முனிவரே! என்னைப்பாரும், நான் தான் விஷ்ணு. சிவன் வேறு, விஷ்ணுவேறு. என்று எண்ணியதால் உமது தவத்திற்கு பங்கம் நேர்ந்தது. தவத்தை இழந்தீர்! உமது பேதபுத்தியை அகற்ற இங்கு எண்ணிறந்த சிவலிங்கங்கள் தோன்றின. ஆதலால் இவ்விடம் ஸமங்கமென அழைக்கப்படும். என்று கூறி அவருக்கு முக்தியை அளித்தார். பிரம்லோசா முனிவரிடமிருந்து ஒருபெண் குழந்தையைப் பெற்று அதை அங்கேயே விட்டுச் சென்றுள். ருரு என்ற மிருகங்கள் அதை வளர்த்ததால் ருரு என்ற பெயரையே பெற்றுள் அவள். தேவதத்தர் ஆச்ரமத்தில் வளர்ந்து அவளும் கடும்தவம் புரிந்தாள்.

ஹ்ரிஷீகேசம் என்பதன் பொருள்.

இந்திரியங்களை அடக்கி விட்டு ருரு ஆகாரங்களையும் உடலையும் உலகையும் மறந்து விஷ்ணுவின் திருவடியை தியானம் செய்து கடும் தவம் புரிந்தாள். அசைவற்ற கட்டைபோல் நிற்கும் அவளது எதிரிலே தோன்றினர் பகவான். அவரையும் கண்திறந்து பாராமல் தவம் செய்யும் அவளது இந்திரியங்கள் (ஹ்ரிஷீகங்கள்) வழியாக நுழைந்து மனதில் புகுந்து. அவள் கண்ணுல் தன்னைப் பார்க்கும்படிச் செய்தார். உடனே விழுந்து வணங்கி என்னைப் போற்றினுள். உனக்கு யாதுவரம் வேண்டும் என்று கேழ்க்கும்பொழுது, தாங்கள் எனக்கு தரிசனம் அளித்த ரூபத்தோடு என்றைக்கும் பிரத்யக்ஷமாக இருந்து இங்கு தவம் செய்பவர்களுக்கு முக்தி அளிக்கவேண்டும். எனது உடல் ஓர் புண்ய நதியாகவேண்டும் என்று கூறினுள். உன்பெயராலேயே ருரு க்ஷேத்ரம் என்று இது அழைக்கப்படும். என்று அவள் கேளாமலே அதிகமான வரத்தைக் கொடுத்து அவள் கேட்ட எல்லாவரத்தையும்

தந்தருளினர். ஹ்ரிஷீகா என்ற புலன்களில் நுழைந்து பகவான் வெளி வந்ததால் அப்பெயருண்டானது.

பசும் பாலால் அபிஷேகம் செய்வதேன்?

ஔர்வர் எனும் மஹரிஷி பல்லாண்டுகாலம் ஹிமய மலையில் கடும் தவம்புரிந்தார். ஆகாயத்திலிருந்து கங்கை வந்த இடமானதால் கங்காத்வாரம் என்று அவ்விடம் அழைக்கப்படும். ஒருவித காமனையும் இன்றி பல்லாண்டு அவர் செய்த தவத்தினல் அவ்வுலகமெலாம் தாபமடைந்தது. ஒருநாள் அவர் புஷ்பம் பறிப்பதற்கு வெளியில் சென்றபொழுது தற்செயலாக ஔர்வர் ஆச்ரமத்திற்கு வந்தார் பரமசிவன். அவருடைய தேஜஸ்ஸினல் ஔர்வரின் ஆச்ரமம் பற்றி எரிந்து சாம்பலானது. புஷ்பத்துடன் வந்த மகரிஷி அழகிய தனதாச்ரமம் சிவனல் எரிக்கப்பட்டதைக் கண்டு கடும் கோபங்கொண்டார். சிவனும் தாபத்தை அடைந்து உலகெலாம் திரியட்டும் என்று அவருக்கு சாபத்தைக் கொடுத்தார். சிவனுக்கு உண்டான தாபம் உலகிற்கெல்லாம் உண்டாயிற்று, என் செய்வது என்று தேவர் ஔர்வர் திருவடியில் வணங்கி வேண்டினர். நானளித்த சாபம் கோகர்ணத்தில் நிவர்த்தியாகும் என்று அருள்புரிந்தார். பரமசிவனுடன் தேவரனைவரும் வைகுண்டம் சென்று இந்த விஷயத்தைத் தெரிவித்தார்கள். மஹாவிஷ்ணு கோலோகத்திலுள்ள தேனுக்களை வரவழைக்க அவைகளுடைய பாலைக் கொண்டு சிவனுக்கு அபிஷேகம் செய்தார். உடனே சிவனது தாபம் அகல உலகெலாம் தாபம் அகன்று ஆநந்தம் உண்டாயிற்று. இன்றும் சிவலிங்கத்திற்கு கோக்ஷீரத்தினல் அபிஷேகம் செய்தால் அபிஷேகம் செய்பவரது தாபமும் அவரது குடும்ப தாபமும் உலக தாபமும் அகலும் என்று மஹாவிஷ்ணு வரமளித்தார். கோ - பசுவின் பாலை கவயம் என்ற பசுபோன்ற ஒரு பிராணியின் கொம்பினல் அபிஷேகம் செய்வது அதிவிரைவில் தாபங்களை அகற்றி இன்பத்தைத் தரக்கூடியதாம்.

ஸ்துதஸ்வாமி என்ற க்ஷேத்ரத்தில் வாசுதேவன் ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற பெயர்களோடு பகவான் அவதாரம் செய்து பல லீலைகளைச்

செய்வார். அங்கு ஸ்துதஸ்வாமி என்ற குரு, சாண்டில்யன், ஜாஜலி, கபிலர், உபஸாயகர், பிருகு என்ற சிஷ்யர்களுடன் ஞானமார்க்கத்தைப் பிரசாரம் செய்வார். விசேஷமாக வராஹபுராணத்தைச் சிஷ்யர்களுக்கும் உலகிலுள்ள மற்றவர்களுக்கும் உபதேசிப்பார். தயிரிலிருந்து வெண்ணெய் கடைந்து எடுப்பதுபோல் ஸகல புராணங்களின் ஸாரமாக உள்ளது வராஹ புராணம். பூதகிரி என்ற இடத்தில் எனது விக்ரஹத்தை அவர் பிரதிஷ்டை செய்தார். அது இரும்பினால் ஆகியதா? வெண்கலத்தினால் ஆகியதா? சிலையினால் ஆகியதா? என்று பிற்காலத்தவர் அறியாதபடி அமைந்துள்ளது. மணிபூரகிரி என்ற இடத்தில் உள்ள எனது ஆலயத்தைத் தரிசிப்பவர் உத்தம கதி அடைவார்.

துவாரகா மாஹாத்மியம்.

கிருஷ்ணன் பூமியில் அவதரித்து கோகுல பிருந்தாவனத்தில் வளர்ந்து மதுரைசென்று கம்ஸனை வதம்செய்து உக்ரஸேனனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். கிருஷ்ணனிடமுள்ள துவேஷத்தினால் ஜராஸந்தன் முதலிய அசுரர்கள் மதுரைமீது படையெடுத்து வந்தனர். ஆங்குள்ள பக்தர்களைக் காப்பதற்காக வாசுதேவன் கடலின் நடுவில் துவாரகை எனும் அரியதோர் தேவ நகரத்தைப் படைத்தார். அங்கு எல்லோரும் ஆநந்தமாக வசிக்கும் பொழுது ஒரு ஸமயம் தூர்வாஸர் அங்கு வந்து உத்யான வனத்தில் தங்கினார். ஜாம்பவதியிடம் பிறந்த ஸாம்பன் என்பவன் பெண் வேடம் தரித்து தான் பூர்ண கர்பிணி என்றும் தனக்கு என்ன குழந்தை பிறக்கும் என்றும் ஞானதிருஷ்டியால் அறிந்து கூறும்படி வேண்டினான். அவர் இவனது துஷ்டசெயலை அறிந்து உன் குலத்தை அழிக்கும் கோடாலி பிறக்கும் எனக் கூறினார்.

இதைப் பகவானிடம் அறிவிக்க பெரியோர் சாபத்தை அனுபவிக்கத்தான் வேண்டும். ஆனாலும் ஸாம்பன் பெண்ணாகி பிரஸவித்த கோடாலியை அணு அணுவாகச்செய்து ஜலத்தில் எறியுங்கள் என்றார். அங்ஙனம் செய்தபின் அவைகள் கோரைப் புற்களாக முளைக்க பிரபாஸ தீர்த்தம் சென்ற யாதவர் அனைவரும் வாதம் செய்து சண்டையிட்டுக் கோரைப்புற்களால் அடித்துக்கொண்டு இறந்தார்கள்.

அங்கு பகவான் வசித்ததால் அது மிகப் பவித்ரமானது. பகவான் வைகுண்டம் சென்றபின் அதைக் கடல் விழுங்கினுலும் துவாரகை என்ற பெயரோடு பூமியில் இன்றும் ஓர் க்ஷேத்திரமிருக்கின்றது. அங்கு பஞ்சஸரஸ் முதலிய எண்ணிறந்த தீர்த்தங்கள் இருக்கின்றன. அங்கே செல்வோர் ஸங்கமன, ஹம்ஸகுண்ட, சக்ரதீர்த்த முதலிய புண்ய தீர்த்தங்களேயும் காணலாம். அங்குள்ள கடல் அர்த்த ராத்ரியிலிருந்து குறைந்து பகலுக்குள் விருத்தியாகின்றது. ஸானக்தூர் என்ற இடத்திலும் பகவானது விக்ரஹம் மிகப் பழமையாகக் காணப்படுகிறது. சித்த வடம் என்ற இடத்தில் லோஹார்களம் எனும் க்ஷேத்ரம் அமைந்துள்ளது. நாலுபுறமும் மிலேச்சர்களால் சூழப்பட்ட இடமிது. அங்கு எனது மூர்த்தி மிக விசேஷமானது. அங்கு நாரதகுண்டம், வஸிஷ்டகுண்டம், ஸப்தரிஷி குண்டம் முதலிய எண்ணிறந்த குண்டங்கள் இருக்கின்றன.

மதுரை மஹிமை.

பகவான் வஸித்த வடமதுரையில் மதுராதீர்த்தம், விச்ராந்த தீர்த்தம் முதலிய பல புண்ய தீர்த்தங்களிருக்கின்றன. பிரம்மதத்தன் என்ற அரசனுல் காக்கப்பட்ட பிரயாக தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தால் ஸோமயாகம் செய்த பயன் உண்டாகும். காம்பில்ய நகரத்தில் உள்ள பிரயாகத்தில் தீந்துகன் எனும் ஓர் நாவிதன் இருந்தான். அவனது மனேவி மக்கள் இறந்து வம்சம் அழிந்த பொழுது சிறிது வைராக்யம் உண்டானது. வீட்டையும் ஊரையும் விட்டுவிட்டு ஒரு பிராம்மணனது வீட்டில் தொண்டுசெய்து ஜீவித்துவந்தான். அச்சமயம் பிராம்மணர்களனேவரும் ஆங்குள்ள நர்மதாதீரம் சென்று ஸ்நானம் செய்தபோது இவனும் ஸ்நானம் செய்தான். அந்த புண்ய விசேஷத்தால் யோகிகளுக்கும் கிட்டாத வைகுண்டத்தை அடைந்தான். விரோசனனது புதல்வனுன பலிசக்ரவர்த்தி ராஜ்யத்தை இழந்தபின் செல்வத்தைப் பெற சூர்யனே நாடித் தவம் செய்தான். சூரியன் இவனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யத் தனது கிரீடத்திலிருந்து ஒரு சிந்தாமணியைத் தந்தருளினுர். அவ்விடம் சூர்ய தீர்த்தம் எனப்படும்.

அக்ரூர தீர்த்தம்.

சுதனன் என்ற பக்தன் தினமும் பக்தியுடன் புஷ்பம் தீபம் முதலியவைகளால் விஷ்ணுவை ஆராதித்து வந்தான். ஒவ்வொரு ஏகாதசிகளிலும் உபவாஸம் இருந்து கண் விழித்து எனது ஸன்னதியில் நடனமாடுவான். ஒரு ஸமயம் ஓர் பிரம்மரக்ஷஸ் அவன் காலைப்பிடித்துக்கொண்டு உன்னை இப்பொழுது பக்ஷிக்கப்போகிறேன் என்றது. அவன் ஏகாதசீ விரத பங்கம் செய்யாதே. விரதத்தை முடித்து நான் உன்னிடம் வருவேன் என்றான். உன்னை எப்படி நம்புவது என்று கேட்டபொழுது நான் காலையில் வராவிட்டால் பர ஸ்த்ரீயைக் கெடுத்தவன், நம்பியவரைக் கைவிட்டவன், ஒரே பங்க்தியில் பக்ஷபாதகமாக அன்னமளிப்பவன், அமாவாஸ்யை முதலிய நிஷித்த நாட்களில் ஸ்த்ரீ ஸங்கமனம் செய்தவன், பிராதஸ்நானம் செய்யாதவன், கன்னிகையை இருமுறை இருபுருஷருக்குத் தானம் செய்தவன் முதலிய பாபிகள் எந்த நரகம் அடைவார்களோ அந்த நரகமடைவேன் என்று சபதம் செய்தான். பிரம்மரக்ஷஸ் அவனை விட்டுவிட்டது. ஆலயம் சென்று கண் விழித்து ஆடிப் பாடி ஸ்துதிசெய்து திரும்பினான். அவனைக்கண்டு பிரம்மரக்ஷஸ் கொல்லாமல் அவனன்று செய்த புண்யத்தைத் தனுக்குத் தரும்படிக் கேட்டது. அவன் இதை முதலில் மறுத்து நீ யார்? எதனால் ராக்ஷஸனானாய்? என்று கேட்டான். நான் முற்பிறவியில் **அக்னிதத்தன்** என்ற வைதிக பிராம்மணன். எனது வீட்டைக்கட்ட அக்கம்பக்கத்தில் உள்ள செங்கல்களைத் திருடினேன். அதனால் இப் பிறவி கிடைத்தது என்று கூறி ஒரு நர்த்தனத்தின் புண்யத்தையாவது கொடுக்கும் படிவேண்டினான். அவனங்ஙனமே அளிக்க உடனே மஹா விஷ்ணு எதிரில் தோன்றி இருவருக்கும் முக்திதந்தார். அந்த இடம் க்ரூரமான பாபத்தை அகற்றியதால் **அக்ரூர தீர்த்தம்** எனப்படும்.

மதுரை பிரதக்ஷிண பலன்.

தாங்கள் எண்ணிறந்த க்ஷேத்ரங்களையும் தீர்த்தங்களையும் கூறினீர்கள். இந்த இடமெல்லாம் சென்று தரிசனம் செய்து ஸ்நானம் செய்துவர, தேஹபலமும் நீண்ட

ஆயுளும் நிறைந்த செல்வமும் இருந்தால்கூட ஒரே பிறவியில் ஒருவனால் இவைகளைச் சாதிக்க முடியும் என்று தோன்றவில்லை. எந்த ஒரு க்ஷேத்ரத்தைத் தரிசித்து ஸ்நாநம் செய்து பிரதக்ஷிணம் செய்தால் ஸகல பாபங்களுமகன்று ஸத்கதி உண்டாகும்? என்று பூமி கேழ்க்க பகவான் கூறினார்: ஸகல லோக நன்மையை நாடி நன்றாகக் கேட்டாய்! நான் கிருஷ்ணனாக இருந்து வசித்து வந்த மதுரமான மதுரா நகரத்தை வலம் வந்தால் (பிரதக்ஷிணம் செய்தால்) ஏழு த்வீபங்களைப் பிரதக்ஷிணம் செய்து தீர்த்தங்களில் எல்லாம் ஸ்நானம் செய்த பலனைப் பெறலாம். போகமும் யோகமும் முக்தியும் உண்டாகும்.

சக்ரதீர்த்த கல்பக்ராம மஹிமை.

மகாக்ருஹோதயம் என்ற ஊரில் இருந்த ஒரு வேதியன் தீர்த்தயாத்ரைக்குச் சென்று தேவதைகளைத் தரிசனம் செய்துகொண்டு ஸாலக்ராமம் என்ற இடத்திற்கு வந்தார். ஆங்கு ஸதா விஷ்ணுபூஜை செய்யும் **சித்தர்** என்ற முனிவரை வணங்கி, கல்பக்ராம மஹிமையை விசாரித்தார். தன்னை அங்கு அழைத்து தரிசனம்செய்து வைக்கவேண்டுமென்று வேண்டினார். அவர் 3 சித்தரைத்தவிர்த்து எவரும் அங்கு போகமுடியாது. ஆயினும் எனது மஹிமையால் உன்னை அழைத்துச் செல்லுகிறேன் என்று அவரையும் அவருடைய புத்திரனையும் இரு கரங்களால் பிடித்துக் கொண்டு ஆகாயமார்க்கமாக கல்பக்ராமம் வந்து சேர்ந்தார். தந்தைக்கு நோய் உண்டாகி மரணம் நேரிடும்போல் இருக்க அவர் தன் புத்ரனை அழைத்து என்னைக் கங்கா தீரத்தில் கொண்டுபோய் விடு என்றார். என் செய்வது என்று தெரியாமல் தங்களை அழைத்துவந்த கான்யகுப்ஜ வாசியான ஸித்தரது வீட்டிற்குச் சென்றான். கல்பக்ராம வாசத்தினால் சுத்தனாகி தேஜஸ்வியாய் விளங்கும் அந்த பிரம்மசாரியைக் கண்டு ஸித்தர் அவனுக்குத் தன் பெண்ணைக் கன்னிகாதானம் செய்தார். தந்தையினது நோய் நாளுக்கு நாள் அதிகரித்து இறக்காமலும் அவர் துன்பப்படுவதைக்கண்டு ஸித்தரை வணங்கி தந்தை எப்பொழுது இறப்பார்? என்று கேட்டான். ஸித்தர் உனது தந்தை, நீசரின் அன்னத்தைப் புசித்தவர். ஆதலால் மரணம் வெகு தூரம் சென்று யாதனை மாத்திரம் அவ்வுடலில் தங்கி

இருக்கின்றது. கல்பக்ராம வாஸத்தினால் அந்த தோஷம் தலையிலிருந்து இறங்கிவந்து அவர் காலில் தங்கி இருக்கின்றது என்றார். இதைத் தந்தையினிடத்தில் அறிவிக்க அவர் பெரிய கல்லைக்கொண்டு தன் கால்களை நசுக்கி அந்த பீடையினால் இறந்தார். இதை அறிந்த புதல்வன் கதறி அழுது, ஆத்மஹத்தி செய்துகொண்ட தந்தைக்குப் பரலோக கார்யத்தைச் செய்யக்கூடாது என்பதை உணர்ந்து உடலைமட்டும் எரித்து மாமனாரிடம் வந்தான். அவர் தற்கொலை செய்துகொள்ளும்படியான விஷயத்தை நீ தந்தையிடம் கூறியதால் நீ பிரம்மஹத்தி செய்த பாபத்திற்கு ஆளானாய். பிரம்மஹத்தி செய்தவருடன் சேர்ந்திருப்பதும் மகாபாதகம். ஆனதால் நீ இங்கு தங்காதே என்றார்.

இனி யான் என்ன செய்வது என்று கதறும்பொழுது கல்பக்ராமத்தை விட்டு மதுராபுரம் சென்று பிராம்மணர் உள்ள இடத்திற்கு வெகு தூரத்தில் நீ வாஸம் செய். உசிதமான பிராயச்சித்தத்தைச் செய்துகொள் என்றார். கன்னியாகுபுர வாசியான குசிகராஜன் மதுரையில் வந்து ஓர் ஸத்திரம் கட்டி இருந்தார். பிரதிதினம் இரண்டாயிரம் பிராம்மணர்கள் அங்கு சாப்பிட்டு வந்தார்கள். அவர்களுடைய எச்சில் இலையை எடுத்துச் சுத்தம் செய்து சக்ர தீர்த்தத்தில் நீராடி உபவாஸமிருந்தான். இதை ஞான த்ருஷ்டியாலறிந்த ஸித்தர் பெண்ணை அழைத்து உனது புருஷனுக்குத் தினந்தோறும் இங்கிருந்து உணவு கொண்டு கொடு. அவனுடன் பேசாமல் திரும்பிவிடு என்று கூறினார். அவளளித்த அன்னத்தைப் புசித்து தனது கடமையை ஆறுமாத காலம் ஒழுங்காகச் செய்தான். ஒரு நாள் பிராம்மணர்களனைவரும் இவனைப் பார்த்து நீ யார்? எங்கு புசிக்கிறாய் என்று கேட்டனர். இவர் உண்மையைச் சொல்ல, சக்ரதீர்த்த ஸ்நானத்தினால் நீ சுத்தனாக ஆகிவிட்டாய். பிராம்மணர்களுடைய வசனத்தினாலும் அதிகம் சுத்தனாகிவிட்டாய் என்றார்கள். வழக்கப்படி அன்று உணவு கொண்டுவந்த அவன் மனைவி இவனது முகத்தைப் பார்த்து நாதா! உணவை ஏற்றுக்கொள்ளும். பாபம் உம்மைவிட்டு அகன்றது என்றாள். இதுவரை உம்மிடம் தோஷமிருந்ததால் உம்முடன் நான் பேசவில்லை. இருவரும் கல்பக்ராமம் செல்வோம் என்று கூற அங்ஙனமே

அங்குவந்து, தற்கொலை செய்துகொண்ட தந்தைக்குப் பிராயச்சித்தம் செய்து பரலோக கர்மாவைச் செய்து முடித்தார்.

பிரம்மஹத்தியும் போக்க வல்லது சக்ர தீர்த்தம்! ஸித்தரது சக்தி அளவு கடந்தது!

கபில வராஹ தீர்த்தம்.

க்ருத யுகத்தில் மாந்தாதா என்ற அரசன் என்னை உபாசித்ததால் அழகிய ஓர் வராஹவிக்ரஹத்தை அவருக் களித்தேன். அவரதை பிரதிஷ்டை செய்தார். சத்ருக்னன் லவணாசுரனைக் கொன்று மதுரா நகரத்தை பிரதிஷ்டை செய்த பொழுது கபிலர் எனும் மகரிஷி என்னிடம் பக்தியினால் மானசிகமாகப் படைத்த விக்ரஹமது. இந்திரன் அவரைப் பூஜித்தபொழுது கபிலர் அந்த விக்ரஹத்தை இந்திரனுக் களித்தார். இராவணன் இந்திரனை வென்று அதை இலங்கைக்குக் கொண்டு செல்ல முயற்சித்தான். அது அந்த இடத்தை விட்டுக் கிளம்பாமல்—போகவே கைலாஸ மலையையும் பெயர்த்த எனக்கு இதை அசைக்க முடியவில்லையே! என்று மனங்கலங்கினான். "பக்தி இல்லாத நீ அதை எடுக்க முடியாது என்று ஒரு சொல் கிளம்பிற்று" இராவணன் வராஹ மூர்த்தியின் அழகைக் கண்டு அதனிடம் அன்பு கொண்டு தோத்திரம் செய்தான். பக்திக்கு இரங்கிய பகவான் அவனுக்கு வசப்பட்டார். புஷ்பகவிமானத்தில் வைத்து இலங்கைக்குக் கொண்டுவந்தான் ராவணனதை. விபீஷணன் ராகவனிடம் அதை அளிக்க இராகன் பத்தாயிரம் ஆண்டு அதை அயோத்தியில் பூஜித்தான். சத்ருக்னன் லவணாசுரனைக் கொன்று மதுரையில் இருபத்தாறாயிரம் பிராம்மணர்களுக்கு கிருஹ தானம் செய்து பிராம்மண பிரதிஷ்டை செய்தான். ஒவ்வொருவரும் மஹா புண்யம் செய்தவர்கள். ஆதலால், ஒருவருக்கு அன்னம் அளித்தாலும் கோடி பிராம்மணர்களுக்கு அன்னமளித்த புண்யம் உண்டாகும். இதைச் செய்த சத்ருக்னனிடம் ஸந்தோஷங்கொண்ட இராமன் உனக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்க, அழகிய சுவேத வராஹ மூர்த்தியைக் கேட்டானவன். அதை மதுரையில் விதிப்படி பிரதிஷ்டை செய்தான். அதைத்

தரிசித்தால் கயை சென்று பிண்டதானம் செய்த புண்யம் ஏற்படும்.

சதுஸ்ஸமுத்ர கூப மஹிமை.

ஆங்கு பற்பல புண்ய தீர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளுடைய பெருமை அளவிட முடியாதது. ஒரு கிணறு நாலு ஸமுத்ரங்களிலும் ஸ்நானம் செய்தால் என்ன புண்யம் உண்டாகுமோ அந்த பலனைத்தரும். தக்ஷிணை பதம் என்ற இடத்தில் உள்ள அதன் மஹிமையை ஒரு கதையால் விளக்குகிறார் பகவான் பாதராயணர்.

சுசீலன் எனும் ஒரு வைசியன் அளவு கடந்த தனம் பெற்றிருந்தும் தான தருமங்களைச் செய்யாமல் குடும்ப கார்யத்திலீடுபட்டிருந்தான். அவன் இறந்தபொழுது ப்ரேத சரீரத்தைப்பெற்று வனத்தில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான். ஆங்கு ஓர் வியாபாரி மரத்தடியில் படுத்திருக்க, அவனைப் புசிக்க ஆரம்பித்தான். வயதான பெற்றோரையும் குழந்தைகளையும் இளம் மனைவியையும் காக்க வெளியூர் செல்லுகிறேன் நான். எனது பொருள் களையெல்லாம் திருடர்கள் கொள்ளைகொண்டனர். என்னைக் கொல்லாமல் விட்டால் என்னைச் சார்ந்த அனைவரையும் ரக்ஷித்த புண்யம் உனக்கு வரும் என்றான் வியாபாரி. நான் கூறியபடி செய்தால் உன்னைக் கொல்லாமல் விடுவேன் என்றது பிரேதம். நான் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டபொழுது மதுராபுரி சென்று சதுஸ் ஸமுத்ரகூபத்தில் ஸ்நானம் செய்து விதிப்படி எனக்கு ஒரு சிராத்தம் செய்து என்னைக் கரை ஏற்று என்றது பிரேதம். சிராத்தம் செய்ய எனக்குப் பொருள் இல்லையே என்று அவன் கூறியபொழுது உனது வீட்டில் உனது முன்னோர்கள் தேடிய பொருள் சுவர்ணமாக பூமிக்குள் வைக்கப்பட்டிருக்கின்றது. அதைக் கொண்டு சிராத்தம் செய் என்றது. விபு என்ற அவன், இது உனக்கு எங்ஙனம் தெரிந்தது? என்று கேழ்க்க நான் உன்னைப் போல் வைச்யனே! ஒரு ஸமயம் பிரதிஷ்டான நகரத்தில் விஷ்ணு ஆலயத்தில் ஒருவர் புராணம் சொல்லிக்கொண்டிருந்தார். எனது நண்பன் விடாது அங்கு சென்று கதை கேட்பான். ஒரு நாள் என்னை நிர்ப்பந்தம் செய்து

அழைத்துச் சென்றான். பலரும் அவருக்குத் தக்ஷிணை தர நான் ஒன்றும் தரவில்லை. எனது நண்பனது நிர்ப்பந்தத்தாலும் தாக்ஷிண்யத்தினாலும் பெருமைக்கு ஆசைப்பட்டு உளுந்தளவு சுவர்ணத்தை அளித்தேன். அந்த புண்யத்தினால் சுவர்ணம் இருப்பிடமு மறிந்தேன். எனது பாபம் எதனால் அகலும்? என்பதையும் அறிந்தேன். அந்த சுவர்ண தானத்தினால் இதுவரை பிரேத சரீரத்திற்கேற்ற உணவும் தட்டில்லாமல் கிடைத்தது என்றது அது. அங்ஙனமே விபு செய்து முடிக்க சுசிலன் பிரேத சரீரமகன்று வைகுண்டம் சென்றான்.

சதுஸ்ஸமுத்ர கூப மஹிமை இவ்வாறிருக்க தேடிய பொருளைக் கொண்டு தானதர்மம் செய்யாதவர் பிரேத சரீரம் பெறுவர். சிறிதேனும் விருப்பமில்லாமல் தானம் செய்தாலும் அது சிறந்த புண்யத்தின் பலனை அளிக்கிறது என்ற நீதியை இதனால் அறியலாம்.

மதுராபுரி ஹரிஹர ஸ்வரூபமானது.

மதுரையில் கர்தேச்வரன் என்ற ஈச்வரனும் கிருஷ்ணனும் இரு கோடிகளிலும் இருக்கின்றார்கள். பகவான் மதுராநகர வடிவமாகவும் ஆங்குள்ள சராசர வஸ்துக்கள் ரூபமாகவும் இருக்கின்றார். மதுரையில் உள்ளோரைத் தரிசித்தாலும் பூஜித்தாலும் பகவானையே தரிசித்ததாகவும் நமஸ்கரித்ததாகவுமாகும்.

ஒரு ஸமயம் கருடன் மதுராபுரியில் கிருஷ்ணனைக் காணவந்தார். ஆங்குள்ள அனைத்தும் கிருஷ்ண வடிவமாகக் காணப்பட்டதே அல்லாமல் தனிக் கிருஷ்ணன் காணப்படவில்லை. கருடன் வருந்தி பகவானைத் துதிசெய்தார். பகவான் எதிரில் தோன்றி, உனது மோகம் அகல வேண்டும். இங்குள்ள எல்லாம் கிருஷ்ண ஸ்வரூபமே என்பதைக் காட்டவே இங்ஙனம் தோன்றினேன். பாபிகள் இதை அறியமாட்டார்கள். ஈ, எறும்பு முதல் எல்லாம் என்னைப்போல் நான்கு கைகளுடன் சங்க, சக்ர, கதா பாணியாக இருப்பதைப் பக்தர்களே அறிவர். அன்றியும் ஆச்வினசுக்ல ஏகாதசியில் உபவாஸம் இருப்பவர் துவாதசியில் சிவனும் விஷ்ணுவும் ஒன்றாய் இருப்பதைக் காண்பர். யமுனையில் ஸ்நாநம் செய்து ஏகாம்சா,

யசோதா, தேவகி, மஹா வித்யேச்வரீ என்பவர்களை அங்கு தரிசித்தால் பிரம்மஹத்தி முதலிய ஸகல பாபங்களும் அகலும், நற்கதி பெறலாம்.

கோகர்ண சரிதம்.

மதுரையில் வசுகர்ணன் என்ற வைச்யன் சுசிலா என்ற மனைவியுடன் பல்லாண்டு இல்லறத்தைச் செவ்வனே நடத்தினன். அவர்களுக்கு புத்திரபாக்யம் இல்லாததால் சுசிலா புத்ரவதிகளைக்கண்டு துக்கம்மேலிட மரத்து அடியில் அமர்ந்து கதறி அழுதாள். ஒரு முனிவர் இதைக் கண்டு மனமிரங்கி "கோகர்ணம் எனும் சிவாலயத்தை மெழுகி தீபம் ஏற்றி பூஜை செய். சிவனருளால் புத்திரனைப் பெறுவாய்" என்றார். அங்ஙனமே தம்பதிகளாகச் சென்று சிவகைங்கர்யம் செய்து தங்கள் தனத்தையெல்லாம் தானதர்மத்தில் செலவழித்தார்கள். ஆயிரம் பசு தானம்செய்தார்கள். இறைவன் அருளால் ஒரு புத்திரனும் பிறந்தான். அவனுக்குக் கோகர்ணன் என்று பெயரிட்டார்கள். காலத்தில் உசிதமான ஜாதகர்ம முதலிய கர்மாக்களைச் செய்து விவாஹமும் செய்வித்தார்கள். அவனுக்கும் புத்ரனில்லாமல்போகவே நாலு மனைவிகளை விவாஹம் செய்வித்தார்கள். பல ஆலயங்களை பிரதிஷ்டை செய்தானவன். தடாகங்களையும், பல உத்யான வனங்களையும் அமைத்தான்.

பொருள் எல்லாம் செலவழிந்தபிறகு வயதான தாய் தந்தையர்களையும், நான்கு மனைவிகளையும் காக்க வியாபாரம் செய்வதென தூரதேசம் சென்றான். வழியில் ஒரு மலைமீதேறி அழகிய ஒரு இடத்தைக்கண்டு அங்குள்ள குகையினருகே சென்றான். வருக! வரவு நல்வரவாகுக!! இதோ கந்தமூலங்களிருக்கின்றன! அதைப் புசித்து பசி ஆறுங்கள்! என்று கூட்டில் உள்ள கிளி கூறியதைக்கேட்டு ஆச்சர்யமடைந்தான். நீர் யார்? முனிவரா? பௌராணிகரா? நீர் ஏன் கிளி சரீரம் பெற்றீர்? என்று கோகர்ணன் கேட்க்க கிளி கூறியது, ஐயா,! மேரு மலையில் வியாச புத்திரரான சுகர் தவம் செய்துகொண்டிருந்தார். அவரிடம் பற்பல புராணங்கள் கேட்க்கலாமென்று மார்க்கண்டேயர், பரத்வாஜர், வாமதேவர் முதலிய சிஷ்யர்களங்கு

சென்றனர். எல்லோரையும் வரவேற்று அவர் பற்பல தர்மங்களையும், இதிகாஸ புராணங்களையும் கூறிக்கொண்டிருக்கும் பொழுது வாமதேவருடைய சிஷ்யனும், **சுகோதரன்** என்ற பெயருடையவனுமான நான் பெரியோர் பேசும்பொழுது இடையிடையே பல ஆக்ஷேபங்களைக் கிளப்பி உரக்கப் பேசினேன். என் குருவும் பெரியோர்களும் பலமுறை கூறியும் கேளாமல் அடிக்கடி பேசினேன். கதைக்கு இடையூறு நேர்ந்ததால் பல மகரிஷிகள் வருந்தி என்னை அடக்கும்படி அவரிடம் கூறினர்கள். அவர் பயமாகவும், நயமாகவும் பேசியதைக் கேளாமல் மறுபடியும் நான் தொந்தரவு செய்ததால் என்னை ஓயாமல் பேசும் கிளியாகும்படி சபித்தார். கருணைகொண்ட முனிவர் மதுராபுரம் சென்று சாபமகலும், பிரம்மலோகம் சேருவாய் என்றும் அருளினர். நான் கிளியானபின் ஒரு வேடன் என்னை வளர்த்தான். மஹரிஷியின் அருளால் எனக்குப் பூர்வ ஜன்ம வாஸனையும் மறக்கவில்லை.

அதனல் பெரியோரை வரவேற்றேன்" என்றது. கோகர்ணன் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்து நான் மதுராபுரியை சார்ந்தவன். உன்னை அங்கே அழைத்துச் சென்று சாபம் அகலும்படி செய்கிறேன் என்ருன். இதைக் கேட்டிருந்த வேடதம்பதிகள் புத்திரனைப்போன்ற கிளியைவிட்டுப் பிரிய மனமில்லாமல் உள்ளேயிருந்து வெளியே வந்தார்கள். அதிதிபூஜை செய்வது கிருஹஸ்த தர்மத்தில் சிறந்தது. கோகர்ணன் எனும் உத்தமனுக்கு அதிதி பூஜைசெய்யுங்கள் என்றது கிளி. அவர்கள் கந்தமூலபக்ஷயங்களைத் தரும்பொழுது இதை யான்வேண்டேன். நான் விரும்பியதைக் கொடுத்தால் பிறகு உண்பதைச் சொல்வேன் என்ருர். உமக்கு வேண்டியது யாது? என்று அவர் கேழ்க்க கிளியை எனக்குப் புத்திரனகத் தரவேண்டுமென்ருர். கிளியின் மூலமாக மதுரை யமுனை ஸ்நான பயன் முதலியவைகளை அடிக்கடி கேட்டிருப்பதால் யமுன ஸ்நான பலத்தை அளித்தால் கிளியைத் தருவோம் என்ருர்கள். அங்ஙனமே அளித்து கனிகளை உண்டு கிளியைப் பெற்று மதுரைக்குத் திரும்பினன் கோகர்ணன். சில காலமங்கு தங்கி பெற்ருேரையும் மனைவியையும் காத்து தான தர்மங்களைச் செய்தான். கையிலுள்ள பொருள்கள்

ஆனபின் மறுபடியும் பொருள்தேட பெற்றோரிடம் உத்தரவு பெற்று கடல் கடந்து செல்ல கப்பல் ஏறினன். சிறிது தூரம் சென்றதும் எதிர்காற்றினல் தாக்கப்பட்ட கப்பல் கடல்நீரில் கவிழ்ந்து விழ ஆரம்பித்தது. கப்பலோட்டிகள் நாங்கள் எவ்வளவு முயற்சித்தும் தெய்வத்தை வேண்டியும் யாரோ ஒரு பாபி கப்பலில் இருப்பதால் எல்லோருக்கும் நாசமேற்படுகிறது என்று கத்தினர்கள். இதைக் கேட்டு நான் புத்திரன் இல்லாத பாபி. என்னல்தான் மற்றவர்களுக்குத் தீங்கோ என எண்ணி கிளியுடன் கடலில் குதித்தான் கோகர்ணன். கூண்டில் இருந்த பக்ஷி வெளியில் சென்று நீண்ட நேரம் பறக்க முடியாவிடினும் கோகர்ணனைப் பார்த்து எதிரில் காணும் மலைக்குச் சென்று உம்மைக் காப்பதற்கேற்ற முயற்சி செய்கிறேனென்று பறந்து சென்றது. கோகர்ணன் சிறிது நீந்தி தத்தளிக்கும்பொழுது ஆங்கு சென்ற கிளி ஒரு திவ்ய ஆலயத்தையும் அங்கு அநேகம் தேவஸ்த்ரீகள் வந்து ஆடிப்பாடி தேவியைப் பூஜிப்பதையும் கண்டது. தன் இனத்தவரை கோவில் கோபுரத்தில் இருக்கக்கண்டு தனது பாஷையில் கூறிற்று. "நீங்கள் உங்களினத்தைச் சார்ந்த என்னைக் காக்கவேண்டும். என்னை ரக்ஷித்து என்னைத் தந்தைபோல் காக்கும் கோகர்ணனையும் காக்க வேண்டும்" என்று சொன்னவுடன் அனைவரும் ஒன்று கூடி யோசித்து பக்ஷிகளிற் சிறந்த ஜடாயுவினிடம் இதை முறையிட்டார்கள். வந்த கிளியுடன் அவர் பறந்துசென்று கடலிலே தத்தளிக்கும் கோகர்ணனைத் தூக்கித் தன் முதுகில் வைத்து இம்மலைக்குக் கொண்டுவந்து சேர்த்தது. அவனுக்கேற்றதான உணவுகளை அளிக்க அவன் களைதிர்ந்து அங்கு தங்கினன். அன்றும் வழக்கப்படி தேவஸ்த்ரீகள் வந்து தேவியைப் பூஜித்து ஆடிப்பாடி சென்றதை கிளியும் கோகர்ணனும் ரஹஸ்யமாக அங்கிருந்து பார்த்தார்கள். இதற்குள் கோகர்ணனுடன் சென்ற வியாபாரிகள் பிழைத்து தேசாந்தரம்சென்று பொருள்தேடி வந்தார்கள். கோகர்ணன் தந்தையிடம் சென்று உமது புதல்வன், கப்பலோட்டி சொன்ன சொல்லைக் கேட்டுத் தானே பாபி என்றெண்ணி கடலில் குதித்தான். அவன் கதி யாதென அறியோம். அவனுடைய உயர் குணத்தையும் தான தர்மத்தையும் மெச்சி அவனுக்காக அவன் தந்தையான

உமக்குச் சிறுபொருள் தருகிறோம் என்றனைவரும் அவரிடம் பொருள் தந்தார்கள்.

வசுகர்ணன் எனும் கோகர்ணனது தந்தை புத்திரனை நினைத்து வருந்தி அவன் கதி என்ன ஆனது என்று தெரியாததால் ஒரு ஸமயம் ஜீவித்து வரலாமென்ற ஆசையுடன் காலங்கழித்து வந்தார். இதனிடையில் கோகர்ணன் தனது பெற்றோரையும் மனைவிகளையும் நினைத்துத் தனக்காகவும், பொருள் இல்லாமலும், என்ன கஷ்டப்படுகிறார்களோ? என்று ஏங்கி வருந்தினன். உன் தந்தைக்கு நீ உதவி செய்ததுபோல் என்னைப் புத்திரன் போல் எண்ணும் உமக்கு யான் உதவாமல் இருப்பது தகுதி இல்லை. ஆதலால் எப்படியேனும் கடலைக் கடந்து அவர்களுக்கு உமது நலனைத் தெரிவிக்கிறேன் என்றுகூறி கடல் கடந்து மதுராபுரி சென்றது. வசுகர்ணனது வீட்டைத்தேடி அலைந்து உமது புத்ரனை கோகர்ணன் கடல் நடுவில் உள்ள ஓர் மலையில் வசிக்கின்றான். ஆங்குள்ள தேவியின் அருளால் பக்தர்கள் ஸகாயத்தைக் கொண்டு விரைவில் வருவான் என்று அவர்களுக்குச் ஸமாதானம் செய்துவந்தது. அவர்களும் கிளியின் விருத்தாந்தத்தைக் கேட்டு வியப்படைந்து புத்திரன் வரவை எதிர் பார்த்து இருந்தனர்.

இதனிடையில் கோகர்ணன் வழக்கப்படி ஆலயம் சென்று பகவானைத் தரிசித்து மறைந்திருந்து தேவஸ்த்ரீகள் செய்யும் பூஜையைப் பார்த்து கந்த மூலங்களை உண்டு காலம் கழித்துவந்தான். பக்தன்மீது இறைவனுக்குக் கருணை தோன்றிற்று. ஒரு நாள் மிக அழகாகக் காணப்பட்ட தேவஸ்த்ரீகள் மிக விகாரமான சரீரத்துடனும் அங்க பங்கத்துடனும் காணப்பட்டார்கள். கோகர்ணன் அவர்களெதிரே சென்று வணங்கி இதுவரை மிக அழகாக இருந்த உங்களது உருவம் மாறியதேன்? புத்திரன் இல்லாத பாபியான எனது சேர்க்கையினால் உங்களுக்கு இந்த கதி நேர்ந்ததா? தாங்கள் யார்! என்பதைக் கூறமுடியுமானால் தயவுசெய்து கூறுங்கள் என்று வேண்டினன். இதைக் கேட்ட கன்னிகைகள் நாங்கள் மதுராபுரியில் கோகர்ணத்தில் உள்ள வனதேவதைகள். இதுவரை அந்த வனம் மிக அழகாக ரக்ஷிக்கப்பட்டு

வந்தது. இப்பொழுது அதனருகில் அயோத்யாதிபதி அரசன் வந்திருக்கிறான். அவனது ஸேனைகள் அந்த உத்யானத்தில் நுழைந்து கிளைகளை முறித்து உத்யானத்தைச் சின்னபின்னமாகச்செய்ததால் எங்களது உடல் இங்ஙனம் ஆகிவிட்டது என்று கூறி வருந்தினார்கள். இதைக் கேட்ட கோகர்ணன் தேவிமார்களே! மதுரை கோகர்ண க்ஷேத்ரத்தில் உள்ள உத்யான வனத்தை வைத்து ரக்ஷித்தது நானும் என் தந்தையும் ஆவோம் என்றான். இதைக் கேட்டு தேவதைகளின் மூத்தவளான ஒருவள் கூறினாள்: மனிதர் நன்மைபெற பகவான் பற்பல வழிகளைக் காட்டி இருக்கின்றார். அவைகளில் இஷ்டாபூர்த்தம் என்பது ஒன்று. இஷ்டம் என்ற யாகாதிகளால் ஸ்வர்கத்தைப் பெறலாம். பூர்த்தம் என்ற குளம் வெட்டுவது, மரங்கள் வைப்பது முதலியவைகளால் மோக்ஷத்தையும் பெறலாம். கிணறு வெட்டுவது, கோவில் கட்டுவது, உத்யானம் அமைப்பது முதலியவைகள் பாபிகளைப் பாபத்திலிருந்து விடுவித்து கோதானம் பூதானம் முதலியவைகளின் புண்யத்தையும் தருகின்றது.

अश्वत्थमेकं पिचुमन्दमेकं न्यग्रोधमेकं दशपुष्प जातीः ।
द्वे द्वे तथा दाडिम मातुलिंगे पंचाम्ररोपी नरकं नयाति ॥

ஓர் அரசமரம், ஓர் வேப்பமரம், ஓர் ஆலமரம், பத்து புஷ்பஜாதிச் செடிகள், புளிப்பு தித்திப்பான இரண்டு இரண்டு மாதுளைகள், ஐந்து மாமரம் இவைகளை வைப்பவன் நரகத்தை அடையமாட்டான். நற்புத்திரன் பெற்றோர்களையும் குலத்தையும் நரகத்திலிருந்து கரை ஏற்றுவதுபோல் பூத்து காய்த்தபின் தன்னை வைத்து வளர்த்துவந்தவனையும் அவன் குலத்தையும் நரகம் செல்லாதபடி காக்கும் மரங்கள் என்றாள். இதைக்கேட்டு ஆனந்தமடைந்த கோகர்ணன் நீங்கள் கூறுவது உண்மையே! அது மாத்திரமல்ல. மரங்கள் அக்னிஹோத்ரம் முதலிய வைதிக கர்மாக்களுக்கு விறகைத் தருகின்றன. வழிப்போக்கர்களுக்கு நிழல் தருகின்றன. பக்ஷிகளுக்கு வீடாகின்றன. இனிய கனிகளைத் தந்து பசியாற்றுகின்றன. இலை வேர் முதலியவைகளைத் தந்து மருந்து செய்யப் பயன்படுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறையும் சிலது

பலமுறையும் பழுத்து பக்ஷிகளுக்கு உணவு அளிக்கின்றன. புத்திரன் ஆண்டுக் கோர்முறையே பெற்றோர்களுக்கு சிராத்தம் செய்கிறுன். இங்ஙனம் புத்திரனைவிட அதிக பயனைத் தரும் மரங்களையும் வளர்த்தேன்! அதற்கா இந்த கதி! என்று கோகர்ணன் மூர்ச்சையாகி கீழே விழுந்தான். வனதேவதைகள் அவனை ஆச்வாசப்படுத்தி உனக்கு என்ன வரம் வேண்டும்? என்று கேட்டபொழுது என்னை மதுராபுரி கோகர்ணத்தில் உள்ள அயோத்தியாதிபதியையும் என் பெற்றோரையும் தரிசிக்கும்படி செய்தால் உத்தியான வனம் அழியாதபடி காப்பேன் என்றுர். அவர்கள் இவனை விமானத்தின் மீது ஏற்றி விரைவில் அங்கு கொண்டுவிட்டார்கள். முதலில் பெற்றோரை வணங்கி கிளியைக் கொண்டாடி அரசனைக் காணச்சென்றுன். கோகர்ணன் காணிக்கையாக அளித்த பட்டு பீதாம்பரங்களையும் நவரத்னங்களையும் கண்டு அரசன் ஆச்சர்யமடைந்தான். கோகர்ண ஆலயத்தையும் மற்றும் பல ஆலயங்களையும் நன்றுக ரக்ஷித்து உத்யானத்தையும் அமைத்து தேவ கைங்கர்யம் ~~செய்யும்~~ கோகர்ணனை அரசன் மிகக் கொண்டாடினுன். அவன் விரும்பியபடி உத்யானத்தில் உள்ள ஸேனைகளை அப்புறப்படுத்தி அதைக் காத்தான். எண்ணிறந்த ரத்னங்களையும் பல கிராமங்களையும் அவனுக் களித்து அயோத்திக்குச் சென்றுன் அரசன்.

கோகர்ணனுக்கு உத்தம தர்மத்தினுல் பல ஆண் குழந்தைகள் பிறந்து ஸந்ததி வளர்ந்தது. கிளி அந்த க்ஷேத்ர மஹிமையால் உடலை விட்டு சாபம் நீங்கி பிரம்ம லோகம் சென்றது. கோகர்ணன் ஆராத் துயரமடைந்து அதற்கு வேண்டிய கர்மங்களைச் செய்து அதன் பெயரால் சுகேச்வரம் என்ற ஒரு ஆலயத்தையும் பிரதிஷ்டை செய்தான். வனதேவதைகள் செழிப்பான உத்தியானத்தைக் கண்டு களிப்படைந்து பூர்ணமான அங்கங்களுடன் சேர்ந்து கோகர்ணனுக்கு ஸகலவிதமான ஸம்பத்தும் மோக்ஷமும் உண்டாகும்படி இறைவனை வேண்டினுர்கள். அந்த கிளியை வளர்த்துவந்த வேட தம்பதிகளும் வசுகர்ணனும் கைலாஸம் சென்றுர்கள். கோகர்ணனது ஸந்ததி வளர்ந்த பிறகு அவனும் கோகர்ணேச்வரனருளால் கைலாஸம் சென்றுன்.

பிரேத உடல் அகலும் வழி.

மஹாநாமா என்ற பிராம்மணர் பரம தார்மிகர். அத்யயனம், ஜபம், ஹோமம், முதலிய வைதிக கர்மாக்களில் மிகவும் ஈடுபட்டவர். மனச்சாந்தி உண்டாவதற்காக தீர்த்தயாத்திரை செய்யக்கிளம்பினார். ஒவ்வொரு தீர்த்தங்களாகச் சென்ற பொழுது ஒருவனத்தில் முற்கள் சூழ்ந்த புதரில் ஐந்து பிரேத சரீரமுள்ள பூதங்களைக் கண்டார். அவர்களைக்கண்டும் அஞ்சாமல் பரிதாபத்துடன் நீங்கள் யார்? எதனால் இவ்வுடலைப்பெற்றீர்கள்? என்று கேட்டார். 1. பர்யுஷிதர், 2. ஸூசீமுகர், 3. சீக்ரகர், 4. ரோதகர், 5. லேககர், என்ற ஐவரும் தங்களது பாபத்தைக்கூறி தங்களுக்கு நற்கதி அளிக்க வேண்டும் என்று வேண்டினார்கள். 1, லோபத்தினாலும் ருசியாக இருக்கின்றது என்ற எண்ணத்தாலும் பழைய அன்னத்தையே நானும் புசித்து விருந்தினருக்கும் அளித்து வந்தேன். ஆதலால் என்னைப் **பர்யுஷிதம்** என்ற பிரேத ரூபமாகச் செய்தார்கள். 2. பசியுடன் விருந்தாளிகள் அன்னம் கேட்கும் பொழுது முகத்தினாலும் கரத்தினாலும் அங்குபோ, அன்னம் கிடைக்கும் என்று ஸூசனை செய்ததால் **ஸூசீமுகம்** என்ற பிரேதரூபமாகச் செய்தார்கள். 3. யாசகர்கள் (அல்லது) விருந்தாளிகள் என்னை அணுகிவரும்பொழுது அதிவேகமாக யான் ஓடி ஒளிந்ததால் என்னை **சீக்ரகர்** என்ற பிரேதரூபியாகச்செய்தார்கள். 4. யாசகர் அல்லது விருந்தாளிகள் உள்ளே நுழைந்து அன்னம் கேழ்ப்பார்களோ என்று அஞ்சி கதவை எப்பொழுதும் தாளிட்டு உள்ளே வராமல் தடுத்ததால் **ரோதக** என்ற பிரேத ரூபியாகச் செய்தார்கள். 5. யாசகர்கள் வந்து கேழ்க்கும்பொழுது கொடுக்கமனமில்லாமல் மௌனியாய் காலால் பூமியை கீரிக்கொண்டு இருந்ததால் **லேககர்** என்ற பிரேதரூபமாகச்செய்தார்கள். இந்த பாபங்களால் மிககோரமான சரீரம் வாய்ந்து இங்கு தங்கி பகவான் எங்களுக்கு அளித்த அன்னத்தை புசித்து காலத்தை கடத்துகின்றோம் என்றனர்.

உங்களுக்கு அளிக்கப்பட்ட அன்னம் யாது? என்று கேழ்க்கும் பொழுது ஸ்திரீகளுடைய கோழை மூத்திரம், ஆசாரமில்லாத வீட்டிலுள்ள பொருள்களும் தேவ பூஜை,

தானதருமம் இல்லாதவரின் அன்னம், குருவுக்கு பூஜை செய்யாதவன், பெண்களுக்கு அடிமையானவன் பாத்திரங்களையும் அன்னத்தையும் இறைத்து இருக்கும் வீட்டில் உள்ள அன்னம், நித்யம் சண்டையிடுபவர், அபாத்ரதானம் செய்பவர் முதலியவர்களின் அன்னமும் பிரேதங்களுக்கு ஏற்பட்ட ஆகாரமாகும் என்றனர். எதனால் பிரேத ஜன்மா கிடைக்கின்றது என்று கேழ்க்க நீசான்னத்தை உண்பது, அதிதிகளுக்கு அன்னமளிக்காமல் புஜிப்பது, தேவ பிராம்மண, குரு முதலியவர்களின் பொருளை அபகரிப்பது பெற்றோரையும் குருவையும் காரணமின்றி தியாகம் செய்தவர், காரணமின்றி சிகை, நகங்களை வளர்ப்பவர், நாஸ்திகர், தர்மத்தை வெறுக்கின்றவர், முதலியவர் பிரேத ஜன்மாவை எடுப்பார். இதற்கு பரிஹாரம் செய்யும்படிவேண்ட சிரவணதுவாதசி விரதத்தினால் இவர்களை நற்கதி அடையும்படிச் செய்தார்.

கிருஷ்ணகங்கா பிரபாவம்.

மதுரையில் கிருஷ்ணத்வைபாயனர் என்னும் வேத வியாஸர் தவம் செய்த இடம் **கிருஷ்ணகங்கா** எனப்படும். அதன் மகிமையால் பரம பாபியான **பாஞ்சாலனும்** சுத்தனானான். ஓர் துர்பிக்ஷ காலத்தில் பாஞ்சால தேசத்தில் தோன்றிய ஒரு பிராம்மணன் தனது ஐந்து புத்திரர்களோடு ஆங்காங்கு சஞ்சாரம் செய்து **வரபட்டிணம்** என்ற விடத்தில் வந்து தங்கினார். அழகிற்சிறந்த, தனது கன்னிகையை ஒரு பிராம்மணனுக்கு கன்னிகாதானம் செய்தார். பூர்வஜன்ம பாபத்தினால் அவளது கணவன் உடனே இறக்க பாலவிதவையானாள் அவள் துக்கம் தாளாமல் அவளது பெற்றோர் இறந்தனர். கணவனுடைய அஸ்தியையும் பெற்றோருடைய அஸ்தியையும் மதுரையில் உள்ள புண்ய தீர்த்தத்தில் போடுவதற்காகக் கிளம்பினாள். ஆங்கு கர்த்தேச்வரர் என்ற ஆலயத்தில் தாஸிகள் ஆடுவதையும் பாடுவதையும் கண்டாள். பெற்றோர் இறந்ததாலும் ஸகோதரர் பிரிந்ததாலும் ஜீவனத்திற்கு தானே வழிதேடநேர்ந்தது. தாஸிகளுடன் சேர்ந்து ஆடினாள் பாடினாள். முறையே அவர்கள் தொழிலிலும் இறங்கினாள்.

இவனது கடைசீ சகோதரன் தேசாந்தரம் சென்று பொருள்தேடி மதுரையில் வந்து தங்கினுன். தாஸிகளிடையே உள்ளவள் தன் சகோதரி என்றறியாமல் அவளிடம் சேர்ந்து வந்தான். காலையில் கிருஷ்ணகங்கா தீர்த்தத்தில் நீராடச்சென்ருன். அவனது உடலில் லக்ஷக்கணக்கான புழுக்கள் தோன்றி ஸ்நானம் செய்தவுடன் அவைகள் மறைகின்றன. இங்ஙனம் ஒவ்வொருநாளும் நடப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்த **சுமந்து** என்பவர் அவனை அண்டி உன்னிடமுள்ள மஹாபாபத்தைக்கூறு என்ருர். அவன் தான் சேர்ந்த தாஸியை உண்மையைக்கூறு என்று கேட்டு தனது சகோதரியே அவள் என்று உணர்ந்து கதறினுன். அதையறிந்த அவள் தனது மிகக் கொடிய பாபத்தை நினைத்து தீயில் விழுந்தாள். பாஞ்சாலனும் தீயில்விழ ஆரம்பிக்கும்பொழுது ஸாகஸம் செய்யாதே! உனது உடலில் உள்ள பாபமெல்லாம் கிருஷ்ண கங்கா ஸ்நானத்திஞல் புழுவடிவமாகக் கிளம்பிவிட்டன. ஆதலால் நீ தீயில் விழாதே என்று ஓர் சொல் ஆகாயத்தில் தோன்றியது. அதைக்கேட்டும் சுமந்துவைச் சரணமடைந்து தீயில் விழுவது சிறந்ததா? அல்லது அசரீரி சொற்படி கிருஷ்ண கங்காஸ்நானத்தால் சுத்தன் ஆவேனு? என்றுவினவினுன் கிருஷ்ண கங்கா ஸ்நானமும் ஏகாதசி விரதமும் உன்னைச் சுத்தப்படுத்தும் என்று கூற அங்ஙனமே பிரதிதினமும் அங்கு ஸ்நானம் செய்து கர்த்தேச்வரரைத் தரிசித்து ஏகாதசியில் விரதம் இருந்து தனது பாபத்தை அகற்றிக்கொண்டான். தகாதவரைப் புணர்ந்த பாபத்தையும் போக்கவல்லது கிருஷ்ண கங்கா தீர்த்தம்.

விக்ரஹ பிரதிஷ்டை.

சீதாதேவி தனக்கு பேருதவி செய்த திரிஜடையிடம் சந்தோஷமடைந்து இராகவனிடம்கூறி அவளுக்கேதேனும் உபகாரம் செய்யும்படி வேண்டினுள். தேவர்களுக்கே யக்ஞபாகம், உண்டு என்ருலும் திரிஜடைக்கும் அத்தகைய ஹவிஸ்ஸைக் கொடுக்கக் கருதி தக்ஷிணை இல்லாத யாகமும் அன்னதானமில்லாததும், கோபித்துக் கொண்டளிக்கும் தானமும் எண்ணைத் தேய்க்காமல் அதிதிக்கு அன்னமளிப்பதும் உனக்கு உணவாகும் என்றருள் புரிந்தார்.

கோவில்களில் தேவதா விக்ரஹங்களைச்செய்து வைப்பது சிறந்த புண்யம். இலுப்பைமரத்தினலும், மண்ணினலும் தாம்பரம் முதலிய லோகங்களினலும் விக்ரஹங்களைச் செய்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தால் பிரதிஷ்டை செய்தவருடன் அவரது இருபத்தோறு தலைமுறை முன்னேர்களும் மிகக்கொடிய பாபத்தைச்செய்து நரகத்தில் இருந்தாலும் அவர்களை சுவர்க்கத்திற்குக் கொண்டுசெல்லும். ஒவ்வொரு தாதுக்களாலும் செய்யும் விக்ரஹ பிரதிஷ்டையினல் என்ன என்ன புண்யம் உண்டாகும்? என விரிவாகக்கூறி சிஷ்யனுக்கு, குருவும், பெண்களுக்கு பதியும், எல்லோருக்கும் பிராம்மண சரீரமும் தேவதா விக்ரஹமாகும். அவர்களை அர்ச்சித்தால் என்னை அர்ச்சித்ததைவிட அதிக பலனைப் பெறலாம். என்ருர் வராஹ மூர்த்தி.

வீட்டுப்பூஜையில் கவனிக்க வேண்டியவை.

வீட்டில் இரண்டு லிங்கங்களையும் மூன்று சாலக்ராமங்களையும் இரண்டு சூரியனையும் மூன்று கணேசனையும் மூன்று சக்திகளையும் பூஜிக்கலாகாது. பின்னமான மூர்த்திகளைப் பூஜித்தால் நோயும் ஏழ்மையும் உண்டாகும். சாலக்ராமம் உடைந்திருந்தாலும் சக்ரம் இருந்தால் அதைப் பூஜிக்கலாம். பன்னிரண்டு சாலக்ராமங்களை வீட்டில் வைத்துப் பூஜித்தால் கோடிலிங்கங்களைக் கோடி ஸுவர்ணதாமரைகளால் பன்னிரண்டு கல்பங்களில் செய்த பூஜாபலனை ஒரு நாளில் பெறலாம். விக்ரஹத்தை ஸ்திரீகளும் மற்றவர்களும் தொட்டுப்பூஜிக்கலாம். ஸ்திரீ சூத்ரர்கள் சாலக்ராமத்தைத் தொட்டால் கோரமான நரகத்தை அடைவர். சிவனுக்கு நிவேதனம் செய்தது சண்டிகேஸ்வரனுக்கே ஏற்றது. மற்றவர்கள் அதைப் புசிக்கலாகாது. இருந்தாலும் சாலக்ராமத்துடன் சேர்ந்த சிவனுக்கு அர்ப்பணம் செய்த சிவ நிர்மால்யத்தை எல்லோரும் புசிக்கலாம். சாலக்ராமத்திற்கு அபிஷேகம் செய்த தீர்த்தம் ஸர்வ நோய்களையும் அகற்றி வைகுண்டத்தையும் அளிக்கும். சாலக்ராமமுள்ள இடத்தில் அபமிருத்யு தலை காட்டாது. சாலக்ராமத்தை விற்பவனும் விலைக்கு வாங்குபவனும் நரகம் செல்வான். சாலக்ராமத்தைப் பூஜை செய்பவருக்கு தானம் செய்பவர்

வைகுண்டம் செல்வர். எப்பொழுதும் சாலக்ராமத்தில் மஹாவிஷ்ணு ஸான்னித்யத்துடனிருப்பதால் அதில் ஆவாஹனம் செய்யவேண்டியது அவசியமில்லை.

அஸத் பிராம்மணனால் சிராத்தம் கெடும்.

இறந்தது முதல் பன்னிரண்டு நாள் செய்யவேண்டிய கர்மாக்களையும் ஆப்திகம் வரை மாதம் மாதம் செய்ய வேண்டிய சிராத்தங்களையும் விரிவாகக்கூறினர். சிராத்தத்தில் பிராம்மணனுக வரிக்கப்பட்டவர் இந்த இந்த யோக்யதை உடையவர்களாக இருக்கவேண்டுமென்பதை ஸகல புராணங்களும் சிராத்தகாண்டமும் விரிவாகவர்ணிக்கின்றன. தகாத பிராம்மணனை வரிப்பதால் சிராத்தம் வீணுகும் என்பதைக்காட்ட ஒரு கதையைக் கூறுகிறார்.

அவந்தி தேசத்தில் **மேதாதிதி** என்றோர் அரசனிருந்தான். ஆத்ரேய கோத்திரத்தில் பிறந்த **சந்திர சர்மா** என்ற வேதியரிவருக்குப் புரோஹிதராவர். அரசன் விதிவழுவாமல் வைதிக கர்மாக்களை செவ்வனே செய்து வந்தான். ஒருசமயம் அவனது தந்தை சிராத்தம் வந்தது. சிரத்தையுடன் பிராம்மணர்களை வரித்து ஒழுங்காகச்செய்தான். பிராம்மணர்கள் இடையில் ஒரு பிராம்மணன் தந்தை இறந்தபின் அன்யனால் உண்டுபண்ணப் பட்ட **கோளகனுக** இருந்தான். சிலநாள் சென்றதும் அரசன் வேட்டையாட வனம் சென்றபொழுது தனது பித்ருக்கள் தலைகீழாக மேலிருந்து விழுவதைக்கண்டு வருந்தினன். தன் புரோஹிதரிடம் வந்து அதைக்கூறி அதற்குப் பரிஹாரம் யாதென விசாரித்தான். சிராத்தத்தில் இத்தகைய தோஷம் தோன்றினுல் அந்த சிராத்தம் நஷ்டமாகும் ஆதலால் மறுமுறை சிராத்தம் செய்யவேண்டியது எனக் கூறி நல்ல பிராம்மணர்களைக் கொண்டு சிராத்தத்தை ஒழுங்காக நடத்திவைத்தார். பித்ருக்கள் ஸந்தோஷம் அடைந்து கனவில் வந்து அரசனை ஆசீர்வதித்தார்கள்.

சிராத்தம்.

அக்னியில் பித்ருக்களுக்கு ஹோமம்செய்து ஆஹாரம் அளிப்பதைவிட ஸத் பிராம்மணனது வயிற்றில் அன்னமிடுவதே பித்ருக்களுக்கு அதிக ஆனந்தம். ஹோமம், பிராம்மண போஜனம், பிண்டதானம், தர்ப்பணம், என்ற

நான்கு வகைகளாலும் பித்ருக்களுக்கு சந்தோஷம் அளிக்கவேண்டும். பித்ரு, பிதாமஹ, பிரபிதாமஹன் ஆகிய இவர்கள் வஸு, ருத்ர, ஆதித்ய என்ற தேவர்களோடு சேர்ந்து புசிக்கிருர்கள். இம்மூவரும் பிரம்ம, விஷ்ணு ருத்திரர் என்ற தேவதா வடிவமாகவும் இருக்கிருர்கள். வஸுருத்ர ஆதித்யர்கள், நால்வகையாக பல பித்ருக்களுக்கும் அன்னத்தைத் தாங்கள் புசிப்பதால் தங்களுக்கு அஜீர்ணநோய் உண்டாவதாகமுறையிட பகவான் அந்நோயை யகற்ற சோம என்ற தேவரை ஸஹாயமாக அனுப்பினர். ஆதலால் "சோம: பித்ருமான்" என்று மந்திரம் கூறப்படுகிறது. ராக்ஷஸர்கள் அசுத்தமான பிராம்மணர்களது உடலில் புகுந்து சிராத்தான்னம் நமது பித்ருக்களுக்குக் கிடைக்காமல் உண்ணுகிருர்கள். அவர்களைப்போக்கி நமது பிதுருக்களுக்கன்னமளிக்க, தர்ப்பம், எள்ளு முதலியவைகளை உபயோகப்படுத்துவது போல் நல்ல பிராம்மணர்களுக்கு அன்னமிட்டால்தான் பித்ருக்கள் பசி ஆறி சந்தோஷமடைவார்கள். குற்றம் உள்ள இடத்தில் ராக்ஷஸர்கள் உள்ளே புகுவார்கள். ஆதலால் அவர்களை வரவிடாமல்தடுக்க ரக்ஷாக்ன என்ற அபிசிரவண மந்திரங்களையும் கூறவேண்டும்.

மதுபர்க்க மஹிமை.

தேன், தயிர், நெய் ஆகிய மூன்றையும் கொண்டு மும்மூர்த்தி வடிவமாக தியானம்செய்து விவாஹத்தில் விஷ்ணுவாக வரிக்கப்படும் வரனுக்கும் நமது புரோஹிதருக்கும், அரசனுக்கும், நமது குருவுக்கும் அளிக்க வேண்டும். மும்மூர்த்திகளைப் போல் பரமனிடமிருந்து நான்காவது புருஷராகத் தோன்றியவர் மதுபர்க்கதேவர். தக்கவர்களுக்கு மதுபர்க்கம் தருவதால் அந்த தேவர் சந்தோஷமடைந்து மதுபர்க்கம் தந்தவர்களை ஆசீர்வதிக்கின்ருர். மதுபர்க்கமளித்து ஆரம்பிக்கும் கர்மா நமக்கு ஸித்தியை அளிக்கும். ஆதலால் விவாஹம், யக்ஞம் முதலிய காரியங்களில் தப்பாமல் மதுபர்க்க மளிக்க வேண்டும்.

நாசிகேத சரிதம்.

ஜனமேஜயன் வைசம்பாயனரைக் கேட்டு அவர் பதில் கூறும்வகையில் நாசிகேத சரிதத்தில் யமபுரி,

ஸ்வர்க்க நரகங்களைக் கொடுக்கும் புண்ய பாப கர்மாக்கள் முதலியவைகளையே மிகமிக விஸ்தாரமாக இங்கு வர்ணிக்கிறார். இக்கதை இதர புராணங்களில் வருவதால் கதாபாகத்தைக் குறைத்து மற்ற விஷயங்களையே வர்ணிக்கிறார். அவரது தந்தை பல யாகங்களைச் செய்து எல்லா பசுக்களையும் தானம் செய்து பாக்கியுள்ள சில வயதான பசுக்களையும் தானம் செய்யும்பொழுது பயனில்லாத பசுக்களைக் கொடுத்தால் பாபம் நேரிடுமென்று எண்ணி அஞ்சி இங்கிதமாக அவரதைத் தெரிந்து கொள்ளட்டும் என்றெண்ணி என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர் என்று மும்முறை கேட்டான். கோபங்கொண்டு பிதா யமனுக்கே உன்னைத் தருகிறேன் என்றார். அவன் யமலோகம் சென்று மூன்றுநாள் உபவாசமிருந்து மூன்று வரங்களைப் பெற்று பூலோகம் திரும்பினான் என்பது யஜுர்வேத காடகத்திலும் உபநிஷத்துக்களிலுமுள்ள கதாஸாரம். யமலோகம் சென்று திரும்பிய நசிகேதனிடம் யமலோக விஷயங்களை நன்கு அறிய ~~...~~பல ரிஷிகள் வந்து கேட்டார்கள். புண்ய சிலர்களுக்கு யமதர்ம ராஜன் க்ரூரமாகத் தோன்றவில்லை. நாலு கோபுரமுள்ள அழகிய பட்டணத்தில் ஸாதுக்களை வரவேற்று அரண்மனையிலும் உத்தியானத்திலும் நன்கு உபசரிக்கிறார் யமன். புஷ்போதகா என்ற நதியும் இஷ்டத்தை அளிக்கும் மரங்களும் சங்கீத நாட்டியமும் எப்பொழுதும் நிறைந்திருக்கிறது அங்கு. சில சமயம் சிற்சில பிரம்மரிஷிகள் வந்து வேதாந்த விசாரம் செய்கின்றார்கள். தெற்கு கோபுர வழியாக வைதரணீ நதியைத் தாண்டி வரும் பாபிகளை சியாம சபல என்ற இரு நாய்களும் பல நோய்களும் பல கிங்கரர்களும் பல வகையாக ஹிம்ஸை செய்து வரவேற்கின்றார்கள். பல ஸாக்ஷிகளையும், சித்ர குப்தனையும், நீதிமான்களையும் கொண்டு விசாரித்துபாபத்துக் கேற்ற சிக்ஷையளிக்கின்றார் யமதர்மராஜன்.

நரகத்தில் உள்ளோரது உடலை எவ்வளவு முறை வெட்டினாலும் தீயில் எரித்தாலும் உயிர் போவதில்லை. யம தூதர்கள் பயங்கரமான உருவமுள்ளவர்கள். நோய் வடிவமாக வெளியில் சென்று பிராணிகளைத் தூக்கிவருகின்றார்கள். இன்ன இன்னபாபம் செய்தவர் இந்த இந்த

நரகத்திற்குச் செல்லவேண்டுமென்று யாதனை விதிக்கப் படுகின்றது. தப்தம், மஹாதப்தம், ரௌரவம், மஹா ரௌரவம், ஸப்ததாளம், காலசூத்ரம், அந்தகாரம், அந்த காரவரம் என்ற எட்டு நரகங்கள் மிக முக்யமானவை. பயங்கரமானவை. ஆங்குள்ளவர் கடுமையாக சிக்ஷிக்கப் படுவதால் ஐயோ! ஐயோ! காப்பாற்று! காப்பாற்று! பசி! தாகம்! என்று கதருகின்றூர்கள். சித்ரகுப்தனுல் தூண்டப்பட்ட கிங்கரர்கள் அடிப்பதும், சிக்ஷிப்பதும், காதினுல் கேட்கக்கூட பயங்கரமானது. நரக அனுபவத் துடன் மறுபிறவியிலும் பற்பல நோய்வாய்பட்டு தரித்ர ராகவும், அங்க ஹீனர்களாகவும் பிறக்கின்றூர்கள் பாபிகள்.

ஸ்வதர்மத்தைச் செய்பவர்கள், பகவத் பக்தி உள்ள வர்கள், தானம் செய்பவர்கள் நரகத்தைக் கண்ணுலும் காண்பதில்லை. குரு பணிவிடையாலும் பித்ருக்களுடைய அருளாலும் ஸந்ததியுண்டாகும் என்று நசிகேதர் கூறினுர்.

கற்பின் மஹிமையும் பாதுகாதி தானமும்.

கிருதயுகத்தில் மிதி என்றூர் அரசனிருந்தான். அவனது மனைவி ரூபவதி என்ற பெயருள்ளவள். அவர் சக்ரவர்த்தியாயினும் தனது வேலைகளைத் தானே செய்து வந்தார். ஒரு நாள் ரூபவதி அரசனைப்போல் தானும் கடுமையாக வெய்யிலில் வேலைசெய்தாள். சூரிய தாபத்தினுல்வாடி மூர்ச்சையாகிக் கீழே விழுந்தாளவள். அரசன் தீர்த்தமளித்து களையகற்றினுன். அவள் சிறிது வருத்தத் துடன் சூரியனைப் பார்க்க அவர் மண்டலத்தை விட்டு பூமியில் வந்து விழுந்தார். எழுந்து விநயத்துடன் அரச தம்பதிகளிடம் வந்து ஒரு குடை, ஒரு தீர்த்த பாத்திரம், பாதுகை இவைகளை அவர்களுக் களித்தார். அதைக் கண்டு களிப்படைந்த ராஜபத்னி உமக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டாள். கற்பரசிகளிடமிருந்து தனக்கு அபயம் வேண்டுமென்ற வரத்தைக் கேட்டான். அது முதல் உலகில் குடை, பாதுகை, தீர்த்தபாத்திரம் முதலிய தானங்கள் செய்பவருக்குப் பூமியிலும், மறு உலகிலும், தாபமும் தாகமும் அகலுமென்ற வரத்தை அளித்தார் சூரியன். ரூபவதியின் வரத்தால் சூரியனுக் குக் கற்பரசிகளிடமிருந்து அபயமேற்பட்டது.

ஸம்ஸாரசக்ரம் என்ற தலைப்பில் அரிய பல தத்துவங்களைக் கூறுகின்றார். வலம்புரி சங்கம், பிரபோதினி ஏகாதசி, பரிவர்த்தன ஏகாதசீ, உத்தான ஏகாதசீ, துவாதசீ மஹிமை, சுக்லபக்ஷ ஏகாதசி பக்தியையும், கிருஷ்ண பக்ஷ ஏகாதசி முக்தியையும் அளிக்கும். மூன்று கோடி ருத்ர ஜபத்தினால் ஸாலங்காயனரின் புத்திரன் நந்தீச்வரன் ஆனான். இராவணனால் தக்ஷிணகோகர்ணம் ஏற்பட்டது முதலிய விஷயங்களை விரிவாக வர்ணிக்கின்றார்.

வராஹ புராண சிரவண படந பலன்.

இந்த புராணத்தைப் படித்தாலும் படிக்கக் கேட்டாலும் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபட்டு உயர்ந்த கதியை அடைவர். நைமிசாரண்யம், கங்கா துவாரம், புஷ்கரம், பிரயாகம், பிரம்ம தீர்த்தம், அமரகண்டகம் முதலிய இடங்களில் ஸ்நானம் செய்த புண்யத்தைப்போல் நூறுமடங்கு அதிக பலனைத்தரும். கபிலா தேனுவை ஸத்பிராம்மணனுக்குத் தானம் செய்த புண்யம் உண்டாகும். பத்து அத்யாயங்களின் கதையைக் கேட்டாலும் ஸோமயாக பலனைப் பெறுவர். பௌராணிகரைச் சந்தன புஷ்பங்களாலும் பொருளாலும் பூஜித்தால் ஸகல பாபங்களும் அகன்று நற்கதி பெறுவர்.

"ஓம் நமோ பகவதே யக்ஞ வராஹ மூர்த்தயே."

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ வராஹ புராணச் சுருக்கம் முற்றிற்று.

14. உத்தர ஸ்காந்தம்.

பாலஸுப்ரமண்யன் (த. ஸ்காந்தம்).

மாம்பலம் குருகுல வெளியீடு.

உத்தர ஸ்காந்த மூலக்ரந்த அநுக்ர மணிகா.

மாஹேச்வர கேதார கண்டம்.

1 நைமிசாரண்யத்தில் சௌநகாதி ரிஷிகள் சூதரைக் கண்டு சிவ மாகாத்மியம் கேழ்ப்பது. தக்ஷயாகம் அழித்தல், தக்ஷன் சிவ நிந்தை செய்த காரணம். 2, தக்ஷன் யாகம். வசிஷ்டர் முதலிய மகரிஷிகளும், விஷ்ணு முதலிய தேவதைகளும் வருகை. ததிசி மஹரிஷி சங்கரனை அழைக்க உபதேசித்தல், வெளிக்கிளம்புதல், தாக்ஷாயணி நாயகனை வேண்டுதல். சிவாக்ஞை மீறி கநகலம் சென்று தக்ஷன் அவமானத்தால் திரும்புதல். நந்தி முதலியவருடன் அவளை அனுப்புதல். 3 ஸதி உடலை விட்டதைக் கண்டு சிவ கணங்கள் தானே உடலை விடல். 4 வீரபத்திரர்களின் வெற்றி. விஷ்ணுமுதலிய தேவர்கள் தோல்வி. 5 தக்ஷன் தலையை வீரபத்ரர் வெட்டி அக்னியில் எறிதல். பிரம்மா சிவனைத் துதித்தல். சிவனருளால் ஆட்டின் தலையை அடைதல். தக்ஷ ஸ்துதி, இந்திரஸேனன் கதை, சிவநாம, பஸ்ம, ருத்ராக்ஷ, திரிபுண்ட்ர மஹிமை, வைச்ய கிராத உபாக்யானம். 6 லிங்க பூஜைக்குக் காரணம் தாருகாவனத்தில் சிவனுக்கு ரிஷிகள் சாபம்.

7 சிவபக்தி மாகாத்மியம். பசு, புழு, பக்ஷிகளுக்கும் நற்கதி. சிவாலயத்தைப் பெருக்கி சுத்தப்படுத்தியதால் வேலைக்காரி ராஜ குமாரியாதல். உத்தாலக காசி ராஜன் பெண் ஸம்வாதம். 8 திருடன் சிவலோகமடைதல், ராவணனுக்குச் சாபம். ராவணனுக்குச் சிவஸாயுஜ்யம். சிவலிங்கார்ச்சனை மஹிமை. 9 பிரஹஸ்பதியை அவமதித்ததால் ராஜ்யத்தை இழந்தான் இந்திரன். பாற்கடல் கடைதல், ஹாலாஹம். 10 ஹேரம்போத்பத்தி, கால கூடத்தை விழுங்குதல், கணேச பூஜை முக்யம்.

11 ஸமுத்திரத்திலிருந்து அநேக பொருள்கள் உத்பத்தி. லக்ஷ்மி விஷ்ணுவை வரித்தல். 12 ராஹுவிற்குத் தலை அழிய காரணம்? 13 காலநேமிக்கும் விஷ்ணுவுக்கும் யுத்தம். 14 அரக்கர்களின் வெற்றிக்காக சுக்கிரர் தவம்புரிதல். 15 இந்திரனுக்குப் பிரம்மஹத்தி, நகுஷன் பாம்பானது. யயாதி இந்திரனுகி பூமியில் விழுந்தது. 16 இந்திரன் பாபத்தை நால்வருக்கு அளித்தல். விருத்தாசுரனைக் கொல்ல ததிசியின் எலும்பை வேண்டுதல். ததிசி யோகத்தினுல் உடலை விடுதல். 17 சனி பிரதோஷ மஹிமையால் விருத்ரனைக்கொன்று தேவேந்திரன், தனது ஸுவர்க்கம் அடைதல். பலி சக்ரவர்த்தி யாகம் செய்து ஒரு திவ்ய தேர் அடைந்தான். அதன் மீதேறிவர இந்திரன் வெட்கம் அடைதல். 18-19 இந்திராதி தேவர்கள் மயில் வடிவமாகி தங்கள் தாயாராகிய அதிதியிடம் துக்கத்தை தெரிவிக்க அதிதி சிரவண துவாதசி விரதத்தால் விஷ்ணுவைப் புத்திரனுகபெற்றது. வாமநன் பலியிடம் யாசித்தது. பலியின் பூர்வ ஜன்மம். 20 லும்பிகையின் ஆவிர்பாவம். 21 மன்மத தஹநம். ரதி பிரலாபம். சம்பராஸுரன் ரதியை அழைத்துக் கொண்டு வருதல். பார்வதீ சிவனை அடைய தவம்புரிதல். 22 பிரம்மசாரி வேஷத்துடன் சிவன் பார்வதியை அடைதல். பார்வதியைப் பரீக்ஷிக்க சிவ நிந்தையைச் செய்தல். தேவி தோழிகள் மூலம் பிரம்மசாரியை விரட்ட அவர் மறைதல். சிவ பார்வதி ஸம்பாஷணம். 23 சிவன் ஹிமாலயத்தினிடம் ஸப்தரிஷிகளை அனுப்புதல். ஸப்தரிஷிகளுக்கும் ஹிமவானுக்கும் ஸம்வாதம். 24 விவாஹ மண்டப நிர்மாணம். சிவன் முதலிய தேவர்களுக்கு அத்புதமான ஸ்தானங்கள் அமைத்தல்.

25 பார்வதீ கல்யாணம். கோத்ர பெருமை. 26 கன்யாதானம், 6000 வாலகில்யர் உற்பத்தி. 27 கந்தமாதன பர்வதத்தில் ஏகாந்தமாய் பார்வதியும் பரமேச்வரனும் இருக்கும்பொழுது அக்னி தேவன் செல்வது பார்வதீ சாபம். குஹாவதாரம். 28-29 30 தாரகாசுரனைக் குறித்துச் செல்லுதல். யுத்தம் ஜயம். 31 குமாரஸ்வாமியைக் காண்பது முக்தியைத் தரும். 32 சுவேதன் எனும் அரசனின் சரித்ரம். 33 சிவராத்ரி

விரதமகிமா. சண்டன் எனும் வேடனின் சரிதம். 34. சிவன் பந்தயத்தில் தோல்வியடைந்து கைலாயத்தை விட்டு கானகம் செல்லுதல். 35 பார்வதி மான் வடிவம் கொள்ளல். கேதாரநாத மாகாத்மியம். எல்லா சிவதர்மங்களின் பிரபெருமையைக் கூறுதல்.

2. கௌமாரிகா கண்டம்.

1 அர்ச்சுனன் ஸௌபத்ர தீர்த்தத்தில் அப்ரஸ்திரீகளை அடைதல். அவர்கள் பிராம்மணர் சாபத்தால் முதலை ஆனார்கள். அர்ச்சுனன் ஸ்வர்க்கலோகம் செல்லுதல். 2 அர்ச்சுனன் நாரதரை ஸந்தித்து தீர்த்தயாத்ரைபற்றி கேட்டது. பிரம்மலோக வர்ணனை. சாரஸ்வத ரிஷியினால் காத்யாயனருக்குத் தர்மோபதேசம் செய்தல். 3 மஹீ ஸமுத்ர ஸங்கத்தில் தான மகிமை. 4 தர்மவர்ம அரசனிடம் சென்று "துவிஹேது ஷடதிஷ்டானம்" என்ற சுலோகத்திற்குப் பொருள் கூறி தானதர்மத்திற்காக தனம் ஸம்பாதித்தது. 5 நாரதர் பிராம்மணர்களை பிரக்ஞம் செய்வது. எட்டுவயது பாலகன் பொருள்கூறுவது.

6 நாரதர் 8000 பிராம்மணர்களுக்குச் சாபமிடுதல். பிரதி சாபமிடல். மஹீ நகர ஸ்தாபனம். 7 இந்த்ரத்யும்னனின் சரிதம். 8 பில்வதள மாகாத்மிய வர்ணனம். 9 கோட்டான் கந்தமாதனத்தில் கழுகுனிடம் சென்றது. 10 கழுகு மானஸ ஸரஸ்ஸில் இருக்கும் ஆமையினிடம் சென்றது. 11–12 கூர்மத்தின் பூர்வஜன்ம, லோமசர் லிங்க பூஜை கூறுதல். 13 மஹீஸாகர ஸங்கதீர்த்த மாகாத்மியம். கொக்கு, கோட்டான், கழுகு, ஆமை, இந்த்ரத்யும்னன் ஐவரும் மஹீஸாகர ஸங்கமத்தில் சிவலிங்கபிரதிஷ்டைசெய்து முக்தி. லோமசரும் மார்க்கண்டேயரும். ஜீவன் முக்தர்கள். இந்த்ரத்யும்ன லிங்க மாகாத்மியம். 14 குமாரநாத மாகாத்மியம். திதியினிடம் வஜ்ராங்கன் எனும் பிள்ளை உண்டானது. அவன் தாயின் ஆக்ஞையால் இந்திரனை இழுத்து வந்தது. பிரம்ம கச்யபர்களின் வேண்டுகோளால் அவனை விடுவித்தது. வஜ்ராங்கன் தன் பத்னியான வராங்கி என்பவளிடம் பயந்த காரணம். 15–17 தாரகாசுர உற்பத்தி. யுத்தம், யமனது தோல்வி. 18–19 தேவதானவர்கள் உருவ மாற்றம். அஸுர நாசம். 20 விஷ்ணு காலநேமியுத்தம்

ஜம்பன்வெற்றி. 21 ஜம்பாசுரவதம். இந்திர தாரகாசுர யுத்தம். 22–23 தேவர்கள் பிரம்மாவை அடைதல். அன்னை அவதாரம், மன்மத தகநம். 24–26 பார்வதி விவாஹம். மங்களோத்ஸவம். 27 பார்வதி அங்கத்திலிருந்து கணபதியை உண்டுபண்ணி தேவஸகாயம். 28. பார்வதி கணபதியுடன் தவம் புரிய ஹிமயத்திற்குச் செல்லுதல். 29 கௌசிகி தேவி அவதாரம். குமாரோத்பத்தி, விச்வாமித்ரர் ஜாத கர்மம் ஜாதகாதி செய்தல்.

30 தாரகனைக் கொல்வதற்காகக் குமாரனை மஹீஸாகர ஸங்கமத்தில் அபிஷேகம்செய்தல். 31–32 தாரகனைக்கொல்ல பிரதிக்ஞை, வதம். 33 சிவ பக்தனைக் கொன்ற பாபமகல குமாரன் மூன்று லிங்க பிரதிஷ்டை செய்தது. 34 குமாரேச்வர ஸேவையின் மஹிமை. 35 ஸ்தம்பேச்வர மஹிமை. 36 ஸித்தாம்பிகா ஸித்த கூப ஸித்தேச்வர மஹிமை. பஞ்சலிங்க உபாக்யானம். 37–41 கன்யாகுமாரிகா சரித்திரம். கபோலர் பார்க்கேச்வர மஹிமை. காலபீத சரிதம். 42–45 ஐதரேய பிராம்மண சரிதம். சூர்ய பூஜை. நந்த பத்ர சரிதம். 46–47 பாலாதித்யர், ஸித்தாம்பிகாதி பதிநான்கு மகா சக்தி பிரதிஷ்டை. 48 ஸோமநாத மாகாத்மியம். ஜயந்த ப்ராஸேய சரிதம். 49 நாரதரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஜயாதித்ய மஹிமை. 50–51 சூரியன் கேட்ட சரீர லக்ஷண விஷயமான கேள்விக்கு கமடன் எனும் பாலன் பதில் கூறல். சூரியன் வரமளித்தல்.

52 அஹல்யா ஸரோ மாகாத்மியம். அஹல்யை சரிதம். 53–54 உத்தர துவாரகா மாகாத்ம்யம். நாரத மாகாத்ம்யம். 55–56 யோகதத்வ லக்ஷணம். மோக்ஷேச்வர லிங்கமஹிமை. 57–58, கேதாரேச்வர நீலகண்ட மஹிமை, அர்ஜுன தீர்த்த யாத்ரை முடிவு. 59–61. கடோத்கசன் காம கடங்கடா விவாஹம். தேவீ பூஜை. 62. கணேச க்ஷேத்ரபாலோற்பத்தி. 63. மஹா ஜிஹ்வா ராக்ஷஸீ, ரேபலேந்திரன், துஹத்ருஹன், பலாசி இவர்களைக் கொல்லுதல். 64–65 பீமேச்வர லிங்க மஹிமை. ஸித்தாம்பிகா ஸ்துதி. 66 கிருஷ்ணன் பர்பரகன் சிரத்தை அறுத்தல்.

3. அருணாசல மகிமை.

1 சிவனடி முடிகளைத்தேட ஹரி வராஹ மாதல். பிரம்மா ஹம்ஸமாதல். 2 பரமசிவன் பிரம்மனுக்கும், விஷ்ணுவிற்கும் வரமளித்தல். 3-4 பார்வதி தேவி தவம்புரிய காஞ்சி வருதல், தபஸ். 5-6 அருணாசல மகிமை, தீர்த்த மகிமை, 7-8. சிவார்ச்சன விதியைப்பற்றி கௌதமரைக்கேட்டல். சிவாராதன மகிமை. 9-11 தர்மகேது ராஜன். மகிஷா ஸுரவதம். 12 கார்த்திகை மாதத்தில் கிருத்திகை நக்ஷத்திரத்தில் ஜ்யோதிஸ்வரூபம் காண்பித்தல். 13. புலக சரித்திரம்.

உத்தரார்த்தம்.

1 நந்தி, மார்க்கண்டேய ஸம்வாதம். 2-4 தீர்த்த, ஸ்தலவர்ணனம். 5-7. கர்ம விபாகம். தர்மம், காம்ய கர்மா. 8-9. பிரம்ம விஷ்ணு கர்வம், ஷை விவாதம், 10-11 பிரம்மாவும் விஷ்ணுவும் பகவானுடைய பாதத்தைத் தேடுதல். 12-13 தாழம்பூ பிரம்மாவிடம் சிநேகம். பொய்சாக்ஷி கூறுதல். நட்புகொள்ளுதல். 14 விஷ்ணுவினால் சிவ ஸ்துதி செய்யப்பட்டது. 15 தாழம்பூவுக்கும் பிரம்மாவுக்கும் சாபமளித்தல். 16 அருணாசலேச்வர கோவில் கட்டுதல். 17 திருமால், நான்முகன், கணேசன், முருகன் இவர்களின் விருத்தாந்தம். 18-19 தேவீ கௌதமரால் உபதேசிக்கப்பட்டு தவம் புரிதல். மஹிஷா ஸுரவதம். 20 பௌர்ணமீவரை தவம் புரிந்து பார்வதி பாபமகலுதல். 21 அபீதகுசாம்பாள் எனப்பெயரிடுகை. 22-23 அருணாசல பிரதக்ஷிண மாகாத்மியம், வஜ்ராங்கதன் சக்ரவர்த்தியாதல்.

மாஹேச்வர கண்டம் முற்றிற்று.

---

2. வைஷ்ணவ கண்டம். வெங்கடாசல மகிமை.

1-3 தும்ப தீர்த்த மாகாத்மியம், வராஹ மந்த்ர, பத்மாவதீ ஜநநம். 4-5 பத்மாவதியை ஸ்ரீனிவாஸன் உத்யானவனத்தில் பார்த்தல், அன்புகொள்ளல். 6-7 பாகவத லக்ஷணம். பத்மாவதி விவாஹம்.

9–10 தொண்டமான் எனும் அரசனின் அஸ்தி. ஸரோவர மஹிமை. 11–12 சாகல்யர் கூறிய தர்மம், புஷ்கரணீ ஸ்நான மகிமை. 13–14 தர்மகுப்த சரித்திரம். ஸுமதி சரிதம். 15 ராமகிருஷ்ண மஹரிஷியின் தவத்தினல் பிரஸன்னமானுர் பகவான்? 16–17 ஹேமாங்க சரித்திரம். வேங்கடாசல மஹிமை. 18–20 த்ருடமதி, பத்ரமதி, ராமாநுஜர் சரிதம். 21–22 ஆகாச கங்கா மாகாத்மியம். பத்மநாபன் சரிதம். 23 சுந்தரன் எனும் கந்தர்வன், வஸிஷ்டர் சாபத்தால் ராக்ஷஸனுகி ஸ்வரூப மடைதல். 24–26 ஜாபால தீர்த்த மஹிமை, தும்புரு சரிதம். புராணச்ரவண பலன். 27–29 கேசவ கதை, அர்ஜுனன் தீர்த்தயாத்ரை. பரத்வாஜர் விருந்து. 30 பூமியை ஸமமாக்க அகஸ்த்யரைத் தென் திக்கிற்கு அனுப்புதல். 31–33 ஸுவர்ணமுகீ நதி உற்பத்தி, பிரதிமா தானவிதி, சங்கதீர்த்த வர்ணனம். 34–37 பூத ஸிருஷ்டி, சுவேத வராஹாவதாரம், சங்கன் எனும் அரசனின் சரித்திரம். 38 வேங்கடாசல மஹிமை. 39 புத்ரனுக்காக அஞ்ஜநாதேவி தவம். 40 வியாஸர் கூறிய ஆகாச கங்கா ஸ்நான கால நிர்ணயம்.

பூரி ஜகந்நாத க்ஷேத்ர மாகாத்மியம்.

1 தென்கடலுக்கு வடக்கில் உள்ள நில பர்வதத்தில் சக்கர அடையாளமுள்ள என்னை காண்பவன் பாபத்திலிருந்து விடுபடுவான் என பிரம்மாவுக்கு விஷ்ணு கூறல். 2 புருஷோத்தம க்ஷேத்ரத்திற்கு நான்முகன் வருகை, காகம் முக்தியடைதல். 3 யமலிங்க ஸ்தாபனம். 4 இந்த்ரத்யும்னன். 5 புண்டரீகன், அம்பரீஷன். 6 மஹா புண்யத்தை அளிக்கும் புருஷோத்தம க்ஷேத்ரம் எங்குள்ளது? 7–8 வித்யாபதிக்கு சபர தர்சநம்.

9 குண்ட தீர்த்த மகிமை. 10 வைஷ்ணவ மகிமை, 11 சர்சிகாதேவியைக் காணுதல் ஓட்ரராஜனும், இந்த்ரத்யும்னனும் ஸம்பாஷித்தல். 12 விஷ்ணு காசி ராஜ யுத்தம். 13 பில்வ க்ஷேத்ர மகிமை. 14 இந்த்ரத்யும்னனுக்கு அபசகுனம். 15 அச்வமேதயாக ஆரம்பம். 16 நரசிம்ஹமூர்த்தி ஸ்தாபனம், நரசிம்ஹ மகிமை. 17 இந்திரத்யும்னன் கனவு. 18 விஷ்ணுரூபமமைப்பதற்கேற்ற விருக்ஷ தர்சநம். 19 ராமகிருஷ்ண, சுபத்ரா,

ஸுதர்சனர்களின் தரிசனம். 20 கத்ய ரூபமாக பரம சிவன் ஸ்துதி. 21 ருக்வேதபாடியான அந்தணர் சரித்திரம். 22–25 இந்த்ரத்யும்னனின் சரித்திரம்.

26. இந்திரத்யும்னனுக்கும் காலன் எனும் அரசனுக்கும் யுத்தம். 27 சுபத்ராஸ்துதி வர்ணனம். 28 நரசிம்ஹப்ரபாவம். 29 ஜப, தான பலன். 30 ஆனி மாதத்தில் ஸ்நானம், தான மகிமை. 31 புருஷோத்தம மகிமை. 32 தக்ஷிணாமூர்த்தி தர்சன மாகாத்மியம். 33 ஸஹஸ்ரதீபம். 34 பிந்து தீர்த்த மாகாத்மியம் 35–36 சயனோத்ஸவ விரத விதி. சாதுர்மாஸ்ய புண்ய காலம். 37 இந்திரத்யும்னன் நூறு ஆண்டிற்குப் பின் நரசிம்மரைக்காணுதல். 38–39 நிர்மால்யம் உண்பதின் மகிமை. 40 பிராவரணோற்சவ விரதம். 41 புஷ்யமாஸ மகிமை. 42 மகர ஸங்க்ரமணம். 43 டோலாரோஹணம். 44 ஜ்யேஷ்ட பஞ்சக விரதம். 45–48 வாஸந்திகா தமனபஞ்ஜிகா யாத்ரை. 49 புராணமாகாத்மியம்.

பதரிகாச்ரம மஹிமை.

1 பதரிகா க்ஷேத்ர, அயோத்யா க்ஷேத்ர மாகாத்மியம். 2 பரமசிவன் பிரம்மஹத்தி தோஷத்திற்கு ஆளாகி வியாஸருடைய வார்த்தையால் அக்னி தீர்த்தத்திற்கு வருகை. 3 அக்னி தீர்த்தம். 4 கருட, வாராஹி, நாரசிம்ஹி, சிலா மஹிமை. 5 பகவத் பிரதக்ஷிண பலன். 6 பிரம்ம தீர்த்தத்தில் நான்முகன் தவம். 7 பிரபாஸம் முதலிய தீர்த்த மகிமை. 8 தர்ம க்ஷேத்திரம்.

1–3 ஸத்யகேது சரிதம். 4 துலாமாத காவேரீ ஸ்நான பலன், பஞ்சநதீ தீர்த்தமகிமை. 5 நித்யகடமை. 6 கார்த்திகை மாதம் செய்யத்தக்கவை முப்பத்தெட்டு. தகாதவை நாற்பத்தொன்று. 7 குத்ஸ பிராம்மணன் கதை, இந்துமதி, பக்ஷி, பூனை, இவைகளின்கதை. 8 ஹரிமேதஸ், சுமேதஸ். இதிகாஸம். 9 நரகசதுர்தசீ. 10 த்யூத பிரதிபத்வர்ணனம்.

11 யமத்விதியா விரதம். 12 நெல்லி மகிமை. எலியின் முக்தி, வநபோஜனநம். 13 ஸத்யபாமா பூர்வ ஜன்மம். 14 ஜலந்தரோத்பத்தி. 15 திக்விஜயம். 16 விஷ்ணு

ஜலந்தர யுத்தம். 17 ராகுவை அனுப்புதல். 18 ருத்ர ஸேனை தோல்வி. 19–20 ஜலந்தர சிவ யுத்தம், 21 விஷ்ணு சாபம் ஏற்றல். 22 ஜலந்தராஸுர வதம். 23 நெல்லி, மாலதி, துளஸி உத்பத்தி. 24 கலஹா எனும் ஸ்த்ரீக்கு ராக்ஷஸப் பிறவியிலிருந்து விடுதலை. 25 தர்ம தத்தருக்கு வரமளித்தல். 26–27 விஷ்ணு தாஸ சரிதம். 28 ஜய விஜயர்கள் துவாரபாலகர்களானது. 29 குபேரன் யக்ஷனுதல். 30 பதிவிரதை சரிதம். 31 துளஸீ விவாஹம். 32 பீஷ்ம பஞ்சக விரதம். 33 ஏகாதசீ மாகாத்மியம். 34 கார்த்திகா விரதோத்யாபனம்.

35 வைகுண்ட சதுர்தசீ மாகாத்மியம், த்ரிபுரோத்ஸவம். 36 புராண ச்ரவண பலன்.

கார்த்திக மாகாத்மியம்.

1 ப்ராதஸ்நான புண்யத்தினுல் கோபிகள் கிருஷ்ணனைப் பதியாக அடைதல். 2–3 த்ரிபுண்ட்ரதாரண விதி. 4 துளஸீ மாலா மாகாத்மியம். 5 சங்க பூஜை. 6 மணி அடித்தல் மஹிமை. 7 ஜாதி புஷ்ப மகிமை. 8 துளஸீ மகிமை. 9 நைவேத்திய பாத்ர விதி. 10 விஷ்ணு ஸஹஸ்ர நாம பலன்.

11–12 வீரபாகு சரிதம். 13 துவாதசீ விரதம். 14 மத்ஸ்யோற்சவ மகிமை. 15–16 பகவந்நாம ஸ்மரண த்யாந மஹிமை. 17 மதுரை மகிமை, மதுரை மாகாத்மியம்.

1 கிருஷ்ணலீலை. 2 சிவலிங்க ஸ்தாபனம். 3–4 பாகவத ஸப்தாஹ ச்ரவண பலன்.

வைசாக மாஹாத்மியம்.

1 வைசாக ஸ்நான மகிமை. 2 அன்னதானம். 3 கம்பளி, வஸ்த்ரம், படுக்கை, கற்பூரம், புஷ்பம், குங்குமம், சந்தனம், கோரோசனம், தாம்பூலம், பழம், இளைப்பாறுவதற்காக மண்டபம் அமைத்தல் இது முதலிய தானங்களின் மஹிமை. 4–11 வைசாக மாஸ மாஹாத்மியம், ஹேமாங்கதன் கதை. 12 யமன் பிரம்மாவிடம் தன் துக்கத்தை அறிவித்தல். 13 யமனுடன் அவர்

திருமாலிடம் செல்லுதல். 14 விஷ்ணு யமனுக்கு வரமளித்து வைகாசி மாதத்தின் பலனைக்கூறுவது. 15–16 புருயசஸ். 17 சங்கன் எனும் அந்தணரின் சரிதம். 18 வேடனின் முற்பிறவி. 19 கன்வரின் சாபம். 20 ப்ரளயவர்ணநம். 21 வைசாக மகிமை கேட்டதால் பாம்புக்கு முக்தி. 22 கலிதர்மம். 23 அக்ஷய திருதியா மகிமை. 24 தேவத்விஜ கதை. 25 வைகாச மாகாத்மிய சிரவண பலன்.

1 அயோத்யா மாஹாத்மியம். 2 பிரம்மா அயோத்யைக்கு வருதல். 3 ஸஹஸ்ர சந்த்ர தர்சனம். 4 தர்ம ஹரி மாஹாத்மியம். 5 கௌத்ஸ குரு தக்ஷிணை. 6 சீதா குண்ட மாகாத்மியம், ராம வைகுண்ட கமனம். 7 புத்ர காமேஷ்டி. 8 ரதிகுண்ட மகிமை, மன்மதகுண்ட மகிமை. 9 கயா மகிமை, 10 ஸரயூ, விக்னேச்வர ஸ்தாந மகிமை, அயோத்யா மகிமை, சிரவண பலன்.

இரண்டாவது வைஷ்ணகண்டம் முற்றிற்று.

---

3. பிராம்ம கண்டம்.

1 ராமேச்வரலிங்கம். ஸேதுமகிமை. 2–3 இராமாயணம். 4 துர்தமன் ராக்ஷஸனானன். 5 சக்ர தீர்த்தம். 6 நவபாஷாணம், தேவிபட்டிணம், மஹிஷாஸுர உத்பத்தி. 7 மஹிஷாஸுர யுத்தம். நளன் மூலமாக ஸேதுவைக் கட்டுதல். 8 வேதாள வரத தீர்த்தம். 9 காலவ மஹரிஷியின் பெண் காந்திமதியின் கேசங்களைப் பிடித்த ஸுதர்சன வித்தியாதரன் வேதாளமானது. 10 சூத்ர தர்மம், சூத்ரனுக்கு யாகம் செய்வித்த சுமதி எனும் அந்தணர் தென் ஸமுத்திரக் கரையில் தீர்த்தத்தில் மூழ்கி பாபத்திலிருந்து விடுபட்டது.

11 ஸீதா ஸரஸ் தீர்த்தம். 12 மனோஜவன் எனும் ராஜன் சரிதம். 13 ஸமுத்திரத்தைத் தாண்ட உபாய சிந்தனை. 14 பிரம்மாவிற்கு பூஜையில்லாத காரணம். 15 தர்ம ஸகன் எனும் ராஜ சரித்திரம், அவனது புத்திரனுக்குத் தேள் கொட்டியது. ஹநுமத் குண்ட தீர்த்த மகிமையால் நூறு பத்தினிகளிடத்தில் நூறு பிள்ளைகளைப்

பெறுதல். ஹநுமத் குண்டம். 16–17 கக்ஷீவத சரிதம். அகஸ்த்ய தீர்த்தம். 18 அகஸ்த்ய சீடரான ஸுதீக்ஷ்ண முனி. 19 லக்ஷ்மண தீர்த்தம். 20 சுகாசார்யர்.

21 யுதிஷ்டிரன். 22 அக்னி தீர்த்தம். 23 சக்ர தீர்த்த மகிமை. 24 கால பைரவர் சரிதம். 25 சங்க முனி சரிதம். 26 கங்கா, யமுனா, கயா தீர்த்தங்களின் மகிமை. 27 கோடி தீர்த்தம், ராமனும் கிருஷ்ணனும் நீராடியது. 28 புரூரவஸ் சரிதம். 29 ஸுசரிதனின் சரிதம். 30 மாகமாஸத்தில் தநுஷ்கோடி தீர்த்த ஸ்நான மகிமை. 31 அச்வத்தாமர் சரிதம். 32 சந்திர வம்ச தர்மகுப்தரின் சரிதம்.

33 பராவஸு சரிதம். 34 நரி, குரங்கு ஸம்வாதம் 35 துர்விநீதன் சரிதம். 36 துராசார சரிதம். 37 முத்கல சரிதம். 38 விநதாகத்ரு கதை. 39 கபி தீர்த்தம், 40 காயத்ரி ஸரஸ்வதி தீர்த்த மகிமை. 41 காச்யபரின் சரிதம். 42 ருணமோசன, பஞ்சபாண்டவ, தேவ, சுக்ரீவ, நள, கவாக்ஷ முதலிய தீர்த்தங்களின் மகிமை. 43 ராமேச்வர லிங்க மகிமை. 44 ராமச்சந்திர சரிதம். 45 ஹநுமான் ராமர் பிரதிஷ்டை செய்த மணல் லிங்கத்தைப் பிடுங்க முயற்சித்தல். 46 ராமர் ஹநுமானுக்கு சிவ பக்தி உபதேசித்தல். 47 ராவண ஜனனம். 48 சங்கர ராஜ சரிதம். 49 வரமளித்தல். 50 புண்ய நிதி சரிதம். 51 ஸேது யாத்ரா விதி. 52 ஸேது மாகாத்மிய சிரவண பலன்.

தர்மாரண்யம்.

1 வியாஸர் பிரம்ம ஸபையில் தர்மாரண்ய கதை கூறுதல். 2 தர்மராஜன் தர்மாரண்ய மகிமையைக் கேட்டல். 3 தர்மம் தவம் ஸ்திரீ ஸ்வபாவ தோஷங்கள். 4 வர்தநீ எனும் அப்ஸரஸ்ஸோடு தர்ம ராஜ ஸம்வாதம். 5 நித்யாஹ்நிகம். 6 கிருஹஸ்தாச்ரம தர்மம். ஸதசார லக்ஷணம், அதிதிபூஜை, எட்டுவித விவாஹம், பஞ்ச யக்ஞம், பெரியோர்களை வணங்கும் விதி. 7 சிராத்த மஹிமை. 8 ஸிருஷ்டி. 9 ஜ்ரும்பகன் எனும் யக்ஷ சரிதம். 10 பிராம்மண ஸேவை. 11 லோல ஜிஹ்வ ராக்ஷஸனின் கதை. 12 கணேசோத்பத்தி. 13 நாஸத்யாச்வியின்

உத்பத்தி. 14–15 ஹயக்ரீவரின் கதை. 16 தர்மாரண்யத்தில் ஸ்ரீ மாதா முதலிய தேவிகளை ஸ்தாபித்தல். 17 ஸ்ரீ மாதாதேவி மகிமை. தேவீ மாகாத்ம்யம். 18 மாதங்கி கர்நாடகன் ராக்ஷஸ யுத்தம். 19 ஐயந்தேச்வர மகிமை. 20 சங்கரரின் முற்பிறவி. 21–22 கோத்ரப்ரவரம். 23 தேவாஸுர யுத்தம். 24 தர்மாரண்ய தீர்த்த மகிமை. 25 மஹரிஷிகள் மார்க்கண்டேயரை வினவுதல். 26 துவாரகா க்ஷேத்ர மகிமை. 27 கோவத்ஸ லிங்க மகிமை. 28 ஸ்வயம்பு லிங்க மகிமை. 29 லோகாஸுர சரிதம். 30–33 ஸ்ரீராமயாத்ரை. 34 இராமராஜ்யம். 35 வஸிஷ்டரிடம் தர்மாரண்ய மகிமை கேட்பது. 36–38 நாரதர் பிரம்ம ஸம்வாதம். 39 பிரம்ம விஷ்ணு ருத்திரர்கள் தர்மாரண்யத்தை அடைதல்.

பிரம்மோத்தர கண்டம்.

1 பஞ்சாக்ஷர மந்திரம். 2 சிவராத்ரி. 3 கோகர்ண மகிமை. 4 சிவபூஜா மகிமை. 5 சிவபக்தி மகிமை. 6 பிரதோஷ மகிமை. 7 தர்மகுப்த அம்சுமதீ விவாஹம் 8–9 ஸீமந்தினீ சரிதம். 10 மந்தர பிராம்மண கதை. 11 சிவஸேவையை உபதேசித்தல். 12–14 சித்ராங்கதன் சரிதம்.

15 வாமதேவரின் சரிதம். 16 த்ரிபுண்ட்ர தாரண மகிமை. 17 சபர விருத்தாந்தம். 18–19 உமாமகேச்வர விரதம். 20 ருத்ராக்ஷ மகிமை. 21 ருத்ராத்யாய பிரபாவம். 22 விதுரன், பிங்குலா கதை.

4. காசீகண்டம். பூர்வார்த்தம்.

1 விந்திய மலை. 2 காசி. 3 தேவர்கள் அகஸ்த்ய ஆச்ரமத்திற்கு வருகை. 4 லோபா முத்ரை. 5 விந்திய மலையை அடைதல். 6 பரோபகாரம். 7 பிரயாக மகிமை. 8 சிவசர்ம சரிதம். 9 ஸூர்யலோகம். 10 அபிலாஷாஷ்டக ஸ்துதி.

11 வைச்வாநரோத்பத்தி. 12 நிருருதி லோகம். 13 கந்தவதி பட்டிணம். 14 சந்திரலோகம். 15 நக்ஷத்ர லோகம். புதோத்பத்தி. 16 அந்தகாஸுர யுத்தம். 17 சனைச்சர உத்பத்தி. 18 ஸப்தரிஷி லோகம். 19 துருவதபஸ்·

20-21 தபஸ்ஸுக்கிடையூறுகள். துருவனால் செய்யப்பட்ட பகவத் ஸ்துதி. ஜ்யோதிஸ் சக்ரத்தின் ஆதார பாகம் உனக்குக் கொடுக்கப் போகிறேன் ஆயினும் என்னுடன் காசிக்குவா. ஆங்கு லிங்கத்தை அர்ச்சி என பகவான் அவனுடன் காசி செல்லுதல். 22 மஹர், ஜன தபோலோகம் ஸத்ய லோகம். 23 பூலோகம். 24 காசீ மரணம். 25 ஸ்கந்த தரிசனம். 26 மணி கர்ணிகா உத்பத்தி. 27 கங்காமகிமை. 28 கலிங்கநாட்டில் வாஹிகன் ஆசாரமற்றவன். அவன் ஒரு புலியால் கொல்லப் பட்டான். தெய்வாதீனமாக அவன் எலும்பு கங்காஜலத்தில் விழுந்தது. அதனால் அவன் கும்பீபாக நரகத்திலிருந்து விடுபட்டு ஸ்வர்க்கலோகம் சென்றான். 29 கங்கா ஸஹஸ்ரநாமம். 30 தனஞ்ஜய சரிதம். 31 காலராஜோத்பத்தி 32 ஞான வாபீ உத்பத்தி. 33 பூர்ணநாமயக்ஷ சரிதம். 34 மால்ய கேது கலாவதி சரிதம். 35-36 ஆசார தர்மங்கள். 37 ஸ்திரீ லக்ஷணம். 38 திவோதாஸன் சரிதம். 39 காசி க்ஷேத்ர பிரயாண விதி. 40 வானப்ரஸ்த தர்மம். 41 யமனை ஏமாத்தும் உபாயம். 42 திவோதாஸ ராஜ்ய பரிபாலனம். 43 காசீ வியோகம், 44 64-யோகினிகளின் பெயர். 45-47 உத்தரார்க்க குண்ட மகிமை. 48 ஸாம்பன் குஷ்டரோகமகல காசிக்கு வருகை. 49 திரௌபதி சூரியனைப்பூஜித்தல். 50 கருடன் அமிருதத்தைக்கொண்டு வருதல். 51 விநதை அடிமையான கதை. 52 பிரமன் 10 அச்வமேதயாகம் செய்தல். 53 காசீ பிரயாணம். 54 பிசாசமோசன தீர்த்தம். 55 பிங்கலர் முதலிய மஹரிஷிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்க மகிமை.

கணேசர் ஜ்யோதிஷர் வடிவமாக வந்தது.

56-57 கணேசருக்கு டுண்டிராஜர் எனப் பெயர்வரக் காரணம். 58 திவோதாஸன் கைலாஸம் செல்லுதல். 59 வேதசிரஸ் சரிதம். 60 பிந்து மாதவ மகிமை.

61 ஸுதர்சன சக்ரத்தைத் தொட்டால், ஸாயுஜ்ய முக்தி. 62 விருஷத்வஜர் தோற்றம். 63 ஜைகிஷவ்ய முனி தபஸ். 64 சிவதர்மம். 65-66 பலவித சிவலிங்க மகிமை. 67 தாக்ஷாயணீச்வர மஹிமை. 68 கஜாஸுர வதம். 69-70 கோடி சண்டிகள். 71 துர்க்காஸுர

யுத்தம். 72 துர்கா பைரவ பூஜை. 73 ஓங்காரேச்வர பூஜை. 74 கர்கரின் சரிதம். 75 ஈச்வரன் தோற்றம். 76 த்விஜதார சரிதம். 77 கேதாரேச்வர மாகாத்மியம். 78-79 தர்மேச்வர லிங்க மகிமை. 80 திருதியா விரதம்.

81 துர்தம ராஜன் சரிதம். 82 மித்ரஜித் பராக்ரமம். 83 மார்கசீர்ஷ சுக்ல திருதியா விரதம். 84 கங்கா மகிமை. 85 காமேச்வர லிங்க மகிமை. 86 விச்வகர்ம லிங்கம். 87 தக்ஷன் சிவனை விட்டு யாகம் செய்தல். 88 ஸதி உடலை விடல். 89 தக்ஷனின் தலை எரிதல். 90 பார்வதி சிவலிங்க ஸ்தாபனம். 91 கங்கேச லிங்க மகிமை. 92-93 ரேவாலிங்கம். 94 அமிருதேச்வர கருணேச்வர லிங்க மகிமை. 95 சிவஸ்துதி. 96 வியாஸ சாப மோசனம். 97 காசி க்ஷேத்திரத்தில் உள்ள ஸகல தீர்த்த மகிமை. 98 காசீ முக்திமண்டபத்தில் விச்வேச்வரர் வருகை. 99 விச்வேச்வர லிங்க மகிமை. 100 காசி கண்ட ச்ரவண பயன்.

5. அவந்தி கண்டம்.

1 மஹாகாலவன மகிமை. 2 மும்மூர்த்திகளின் உத்பத்தி, 3 குண்டலி புருஷோத்பத்தி. 4 வைச்வாநரோத்பத்தி. 5 நரநாராயணர் தவம். 6 தேவதைகள் சிவனைக் காண யாகம், 7 மகாகால்வநத்தில் வஸிக்கும் முறை. 8 கலகலேச்வர உத்பத்தி. 9 ஹாலாஹல யுத்தம்.

10-11 கௌடும்பிகேச்வர மகிமை. 12 மர்கடேச்வர மகிமை. 13 ஸ்வர்க துவார மகிமை. 14 சதுஸ் ஸமுத்ர மகிமை. 15 சங்கராதித்ய மகிமை. 16 நீலகந்தவதி மகிமை. 17 தசாச்வமேத மகிமை. 18 ஏகாநம்சாதேவீ, சிவனும் உமையும் சொக்கட்டான் ஆடுதல், 19 சண்ட பிரசண்டர் வருகை. 20 வடயக்ஷிணீ மகிமை.

21 ஹநுமத்கேச்வர தீர்த்த மகிமை. 22 ருத்ரஸரோ மகிமை. 23 யாத்ரா மகிமை. 24 வால்மீகீச்வர மகிமை. 25 சுக்ரேச்வர, சண்டீச்வர தீர்த்த மகிமை. 26 காலவனத்தினழகு. 27 ராம கிருஷ்ணர் ஜனனம். 28 சந்திராதித்ய மகிமை. 29 நரக வர்ணனம். 30 தீபதான மகிமை. 31 கேதாரேச்வர தீர்த்த மகிமை. 32 கிருஷ்ணன் சொல்லால் சூர்ய ஸ்தம்பனம். 33 சூர்ய ஸ்துதி.

34 ஸ்கந்த ஜனனம். 35 அகஸ்த்யேச்வர மகிமை. 36 நரதிப தீர்த்த மகிமை. 37 ஓங்காரேச்வர மகிமை. 38 மாதுருகா பூஜாவிதி. 39 மகாகால வனம். 40 கநகச்ருங்க பட்டணம். 41 குசஸ்தலீ மகிமை. 42 அவந்தீ பட்டணம். 43 திருபுராஸுரன் உஜ்ஜயினியில் தவம். 44 ஸமுத்ரத்தைக் கடைதல். 45 குமுத்வதி பட்டணம். 46 காமதேனு. 47 விசாலா பட்டணம். 48 காலப்ரமாணம். 49 கபாலத்தை ஏந்தி பிக்ஷைக்காக வைகுண்டம் போதல். 50 சிப்ராநதீ 51 அமிருதோற்பத்தி. 52 ஹிரண்யாக்ஷன். 53 தேவலன் சரித்திரம். 54-55 ரேவாஜலத்தில் மூழ்கிய பூமியை உத்தாரணம் செய்ய அகஸ்த்யர் தவம். 56 யமன் யமுனநதி உத்பத்தி. 57 கயா தீர்த்தம். 58 கயா தீர்த்தத்தில் சிராத்த விதி. 59 பல்கு நதியின் மஹிமை. 60 மலமாஸ மகிமை. 61 அதிமாஸத்தில் விரத நியமவிதி. 62 கோமதீ குண்ட மகிமை. 63 பலி சக்ரவர்த்தி. 64 பைரவாஷ்டகம். 65 ஜனமேஜய, ஆஸ்தீகர் கதை. 66 நிருசிம்ஹ கதை. 67 தக்ஷர்; மகாதேவர் தபஸ். 68 ஸரஸ்வதி தீர்த்த மகிமை. 69 சாதுர் மாஸ்ய பலன். 70-71 அவந்தி க்ஷேத்ர மாஹாத்மிய சிராவண பலன்.

84 லிங்க மஹிமை.

1 அகஸ்த்யேச்வர லிங்கம். 2 மங்கணக ரிஷி முக்தியடைதல். 3 டுண்டேச்வரர். 4 டமருகேச்வரர். 5. அனுநிகல்பேச்வர லிங்கம். 6 ஸுவர்ண ஜாலேச்வரர். 7 த்ரிவிஷ்டபேச்வர லிங்கம். 8 கபாலேச்வரம். 9 ஸ்வர்கத்வார லிங்கம். 10 கார்க்கோடகேச்வரர். 11 சித்தேச்வரர். 12 லோக பாலேச்வரர். 13 காமேச்வரர். 14 குடும்பகேச்வரர். 15 இந்த்ரத்யும்ன லிங்கம். 16 ஈசாநேச்வரர். 17 அப்ஸரஸ் ஈச்வரலிங்கம். 18 கலகலேச்வரர். 19 நாகசண்டேச்வரர். 20 ப்ரதிஹாரேச்வரர். 21 குக்குடேச்வரர். 22 கர்கடேச்வரர் லிங்க மகிமை. 23 மேகநாதேச்வர லிங்க மகிமை. 24 மகாளயேச்வர லிங்கம். 25 மூக்திச்வரர். 26 ஸோமேச்வரர். 27 அநரகேச்வரர். 28 ஜடேச்வரர். 29 ராமேச்வர லிங்கம். 30 ச்யவனேச்வரர். 31 கண்டேச்வரர். 32 பத்ரேச்வரர். 33 ஆநந்தேச்வரர். 34 கந்தடேச்வரர்.

35 இந்த்ரேச்வரர். 36 மார்க்கண்டேய சரிதம் 37 ரிபுஞ்ஜயன் கதை. 38 குஸுமேச்வரர். 39 அக்ரூரேச்வரர். 40 குண்டேச்வரர். 41 லும்பேச்வரர். 42 கங்கேச்வரர். 43 அங்காரகேச்வரர். 44 உத்தரேச்வரர். 45 த்ரிலோசனேச்வரர். 46 வீரேச்வரர். 47 நூபுரேச்வரர். 48 அபயேச்வரர். 49 ப்ருநுகேச்வரர். 50 ஸ்தாவரேச்வரர். 51 சூலேச்வரர். 52 ஓங்காரேச்வரர். 53 விச்வேச்வரர். 54 கண்டேச்வரர். 55 சிம்ஹேச்வரர்.

56 ரேவதேச்வரர். 57 கண்டேச்வரர். 58 ப்ரயாகேச்வரர். 59 சித்தேச்வரர். 60 மதங்கேச்வரர். 61 ஸௌபாக்யேச்வரர். 62 ரூபேச்வரர். 63 ஸாஹஸ்ரேச்வரர். 64 பசுபதீச்வரர். 65 ப்ரம்மேச்வரர்.

66 ஜல்பேச்வரர். 67 கேதாரேச்வரர். 68 பிசாசேச்வரர். 69 ஸங்கமேச்வரர். 70 துர்தர்ஷேச்வரர். 71 பிரயாகேச்வரர். 72 சந்த்ராதித்யேச்வரர். 73 கரபேச்வரர். 74 ராஜஸ்தலேச்வரர். 75 வடலேச்வரர். 76 அருணேச்வரர். 77 புஷ்பதந்தேச்வரர். 78 அவிமுக்தேச்வரர். 79 ஹநுமான் லீலை. 80 கல்மாஷபாதன் கதை. 81 பிங்கலேச்வரர். 82 காயாவரோஹணேச்வரர். 83 பில்வேச்வரர். 84 உத்தரேச்வரர் என்ற 84 லிங்க மகிமை வர்ணிக்கப்பட்டது.

ரேவாகண்டம்.

1. 18 புராண உபபுராணங்களின் பெயர். 2 கங்கை மகிமை. 3 பிரளய காலம். 4 நர்மதோத்பத்தி. 5 ஸப்த கல்பம். 6 மாயூர. 7 கூர்ம கல்பங்களில் உண்டான நதிகள் உத்பத்தி. 8 பக (கொக்கு) மார்க்கண்டேய ஸம்வாதம். 9-12 நர்மதா ஸ்நான பலன். 13. 21 கல்பங்களின் பெயர். 14 காலராத்ரியினுல் செய்யப்பட்ட ஸ்திதி ஸம்ஹாரம். 15, 16-17 ஜகத் ஸம்ஹாரம். 18 நான்கு ஸமுத்ரங்களும் ஒரே இடத்தை அடைந்தது. 19 நர்மதா ஸ்துதி. 20-21 கபிலா நதி. 22 விசல்யா. 23 கபிலா விசல்யா நதிகளின் ஸங்கமத்தில் ஸ்நான தான பலன். 24 கரா நர்மதா ஸங்கம மகிமை. 25 நீலகங்கா ஸங்கமம். 26 பாஞசுர சரிதம். 27 திரிபுர ஸம்ஹாரம். 28 அமரேச்வர தீர்த்தம். 29 காவேரீ.

30 தாரு. 31 பிரம்மாவர்த்தம் தீர்த்தம். 32 பத்ரேச்வரம். 33 அக்னி. 34 ரவி தீர்த்தம். 35 மேகநாத தீர்த்தம். 36 தாரு தீர்த்தம். 37 தேவ தீர்த்த மகிமை.

38 தாரு வனம். 39 கபிலா, 40 கரஞ்ஜேச்வர, 41 பிப்பலாத, 42 விமலேச்வர தீர்த்த மகிமை. 43 சூலபேத பிரசம்ஸா. 44–49 அந்தகாசுர சரிதம். 50 பாத்ரா பாத்ரதான பரீக்ஷை. 51 தான மகிமை. 52 தீர்க்கதபோ முனி. 53 ருச்யச்ருங்கர் ஸ்வர்கம் செல்லுதல். 54 தீர்க்க தபஸ் ஸ்வர்க்கமடைதல். 55 காசீ ராஜ மோக்ஷம். 56, 57–58 பானுமதீ சரிதம். 59 புஷ்கரணீ. 60 ரேவா. 61 சக்ரேச்வர 62 கரோடீச்வர 63 குமாரேச்வர 64 அகஸ்த்யேச்வர 65 ஆனந்தேச்வர 66 மாத்ரு 67 இலங்கேச்வர 68 குபேர தீர்த்த மகிமை, 69 மங்களேச்வர மகிமை. 70 ரவி. 71 காமேச்வர. 72 மணிநாகேச்வர. 73 கோபாரேச்வர 74 கௌதமேச்வர 75 சங்கசூட 76 பாரேச்வர 77 பீமேச்வர தீர்த்தங்களின் மகிமை. 78 ரேவாநதியின் வடக்கில் நாரத தபஸ். 79–80 ததிஸ்கந்த, மதுஸ்கந்த, 81 வருணேச்வர, 82 வன்னி தீர்த்த மகிமை.

83 ஹநுமந்தேச்வர மகிமை. 84 கபிதீர்த்த மகிமை. 85 ஸோமநாத லிங்க மகிமை. 86 பிங்கலேச்வர 87 ரிணத்ரய விமோசனம். 88 கபிலேச்வர 89 பூதிகேச்வர 90 சக்ர 91 சண்டாதித்ய 92 யமஹாஸ்ய 93 கல்ஹோடீ 94 நந்திகேச்வர 95 நாராயண 96 கோடீச்வர தீர்த்த மகிமை. 97 பராசர சரிதம். 98 பிரபாஸ 99 நாகேச்வர தீர்த்தம். 100 மார்க்கண்டேய மகிமை.

101 ஸங்கர்ஷண தீர்த்தம். 102 மன்மதேச்வரம். 103 ஏரண்டீ சங்கம். 104 சுவர்ண சிலா தீர்த்தம், 105 கரஞ்ச, 106 காமத, 107 பண்டாரீ, 108 ரோஹிணீ. 109 சக்ர, 110 தௌதபாப, 111 ஸ்கந்த, 112 அக்னிரஸ, 113 அயோனி ஸம்பவ, 114 அங்காரக, 115 கோடி, 116 பாண்டு, 117 த்ரிலோசன, 118 இந்த்ர, 119 கல்ஹோடீ, 120 கம்புகேச்வர, 121 ஸோம, 122 கோஹனஸ்வ, 123 கர்மதேச்வர, 124 நர்மதேச்வர, 125 ரவி, 126 அயோநிப்ரபவ, 127 அக்னி தீர்த்த,

128 பிருகுடேச்வர, 129 பிரம்ம, 130 தேவ, 131 நாக, 132 ஆதிவராஹ தீர்த்தமிவைகளின் மகிமை.

133 லோக பாலர்களால் செய்யப்பட்ட லிங்க மகிமை, 134 ராமேச்வர, 135 ஸித்தேச்வர, 136 அகல்யேச்வர தீர்த்த மகிமை. 137 கர்கடேச்வர மகிமை. 138 இந்திரன் கௌதம சாபமகல தவம், சிவலிங்க பிரதிஷ்டை. 139 சோமதீர்த்த, 140 நந்தாதேவியின் உற்பத்தி. 141 தாபேச்வர, 142 ருக்மிணீ, 143 யோஜனேச்வர, 144 த்வாதசி தீர்த்த, 145 சிவ, 146 அச்மாஹக, 147 ஸித்தேச்வர, 148 மங்களேச்வர, 149 லிங்க வாராஹ தீர்த்த மகிமை. 150 குஸுமேச்வர லிங்க, 151 ச்வேதவராஹ, 152 பார்க்கவேச்வர, 153 ஆதித்யேச்வர, 154 கலகலேச்வர தீர்த்தமகிமை. 155 சாணக்ய சரிதம், 156 சுக்ல, 157 ஹுங்கார ஸ்வாமி, 158 ஸங்கமேச்வர, 159 அநர்க்கேச்வர, 160 மோக்ஷ, 161 ஸர்ப்ப, 162 கோபேச்வர, 163 நாக, 164 ஸாம்வௌரேச்வர, 165–166 ஸித்தேச்வர, 167 ஸித்தேச்வரீ, 168 மார்க்கண்டேச்வர, 169–172 மாண்டவ்ய, 173 சுத்தேச்வர, 174 கோபேச்வர, 175 கபிலேச்வர, 176 பிங்கலேச்வர, 177 பூதீச்வர, 178–179 கௌதமேச்வர, 180 தசாச்வமேதிக, 181 பிருகு.

182–183 கேதாரேச்வர, 184 தௌதபாப, 185 ஏரண்டி தீர்த்த மஹிமை. 186 சாமுண்டா ஸ்துதி, 187 காலாக்னி ருத்ர, 188 சாலக்ராம, 189 வராஹ, 190 ப்ரபாஸ, 191 துவாதசாதித்ய தீர்த்தம், 192–193 ஸ்ரீபதிக்ஷேத்ர மஹிமை. 194 லக்ஷ்மீ விவாஹம், 195 ஹம்ஸ, 196–197 மூலஸ்தான தீர்த்த மகிமை.

198 சூலேச்வர லிங்க மகிமை. 199 ஆச்வின, 200 ஸாவித்ரீ, 201 தேவ, 202 சிகிதீர்த்த, 203 கோடி, 204 பைதாமஹ, 205 குர்குரீ, 206 தசகன்யா, 207 ஸுவர்ண பிந்து, 208 ரிணமோசன, 209 புஷ்கல, 210 புங்கில, 211 முண்டி, 212 டிண்டிமேச்வர, 213 அமலேச்வர, 214 ஸ்ரீகபால, 215 ச்ருங்கி, 216 ஆஷாட், 217 ஏரண்டி, 218 ஜாமதக்னி, 219 கோடி, 220 லோடணேச்வர, 221 ஹம்ஸேச்வர, 222 திலோதேச்வர,

223 வாஸேச்வர, 224 கோடீச்வர, 225 அளிகேச்வர. 226 விமலேச்வர தீர்த்த மகிமை. 227 நர்மதா தீரத்தில் கிழக்கில் உள்ள தீர்த்தங்களின் யாத்ரை.

228 பரார்த்த தீர்த்த யாத்ரை, 229 ரேவாகண்ட சிரவண பலன். 230 தீர்த்தங்களின் வரிசை. 231 தீர்த்தங்களின் எண்ணிக்கை. 232 ரேவாகண்ட புஸ்தக தான பலன்.

6 நாகர கண்டம்.

1 லிங்கோத்பத்தி. 2–7 த்ரிசங்கு சரிதம். 8 ஹாடகேச்வரர். 9–12 சமத்கார அரசனின் சரிதம். 13 அசலேச்வரர். 14–15 சமத்கார நகர பிரதக்ஷிண பலன். 16 ரக்தச்ருங்க ஸேவை. 17 ஷை தீர்த்தம். 18 ஸாயங்கால விதி. 19 பித்ரு கூபிகா தீர்த்தம். 20 பாலமண்டந தீர்த்தம். 21 பாலசக்ய, 22–23 மிருக தீர்த்தம், 24–25 கங்கா தீர்த்த, 26 கோகர்ண, 27 கலிகால, 28–29 ஸர்வ தீர்த்த மகிமை. 30–31 ஸித்தேச்வர உத்பத்தி. 32 ஸப்தரிஷி தீர்த்தோத்பத்தி. 33 அகஸ்த்யாச்ரமம். 34–35 அகஸ்த்யர் ஸமுத்ரத்தைக் குடித்தல். 36 சித்ரேச்வர பீட மகிமை. 37 துச்சீல எனும் பிராஸாதோத்பத்தி. 38 துந்துமாரேச்வரர். 39 யாகநீச்வரர். 40 மங்களேச்வர லிங்கம். 41 ஸ்த்ரீ தர்மம்.

42–44 விச்வாமித்ர லிங்கம். 45 த்ரிபுஷ்கர தீர்த்தம். 46 ஸரஸ்வதீ தீர்த்தம். 47 மஹாகால மகிமை. 48 உமாமகேச்வர லிங்கம். 49 கலசேச்வர லிங்கம். 50 நந்தினியிடம் புலி சபதம். 51-52 ருத்ரகோடி மகிமை. 53 ப்ரூணகர்த்த மகிமை. 54 நளன் கதை. 55 நளேச்வர மகிமை. 56 ஸாம்பாதித்ய மகிமை. 57 பீஷ்ம யாத்ரை. 58 சிவகங்கா மகிமை. 59 விதுரேச்வர மகிமை. 60 நராதித்யேச்வர மகிமை. 61 விஷகன்யோத்பத்தி.

62 சர்மிஷ்டா தீர்த்த மகிமை. 63 சோமநாதேச்வர மகிமை. 64 துர்க்காதேவீ மாகாத்மியம். 65 ஆனந்தகேச்வர சூத்ரேச்வர உத்பத்தி. 66 ஜமதக்னி வதம். 67 கார்த்தவீர்யார்ஜுன வதம். 68 பரசுராமன் தானம்.

69 ராமஹ்ரத மகிமை. 70 ஸாத்யந்தோத்பத்தி. 71 சக்தி மகிமை. 72 ஹாடகேச்வர க்ஷேத்ரம். 73 துர்யோதன விவாஹம். 74 கௌரவ, பாண்டவ, யாதவ லிங்க பிரதிஷ்டை. 75 யக்ஞ பூமி மகிமை. 76 பாஸ்கர தீர்த்த மகிமை. 77 பார்வதியின் அழகைக் கண்டு நான்முகன் மயங்கிய தோஷமகல ஈசனை ஆராதித்தல், 78 ருத்ர சீர்ஷ மகிமை. 79 வாலகில்யாச்ரமம். 80 சுபர்ணு மகிமை. 81 கருடன் இறக்கை சாம்பலானது. 82 சுபர்ணேச்வர மகிமை. 83 வேனு என்ற அரசன் சரிதம். 84 சுபத்ரா ஜனனம், 85 மஹா லக்ஷ்மீ மகிமை. 86 இருபத்தேழு காளிங்க மகிமை. 87 ஸோம பிராஸாத மகிமை. 88 அம்பாவ்ருத்தா மகிமை. 89 பாதுகா மகிமை, 90–91 அக்னிதீர்த்த மகிமை, உத்பத்தி. 92 பிரம்மகுண்ட மகிமை. 93 கோமுக தீர்த்தம். 94 லோகயஷ்டி மகிமை.

95 அஜாபாலேச்வரீ மகிமை. 96–97 தசரத சனைச்சர ஸம்வாதம். 98 ராஜஸ்வாமி ராஜவாபீ மகிமை. 99 தூர்வாஸ ராம ஸம்வாதம். 100 லக்ஷ்மணன் யோக ஸாதனம். 101 ராமேச்வர லிங்க பிரதிஷ்டை. 102 லக்ஷ்மண பிராஸாத பஞ்சகப் பிரதிஷ்டை. 103 ஆனர்த்த தீர்த்த கூபிகா மகிமை. 104-105 குசலவேச்வர பிரதிஷ்டை, 106 லுப்ததீர்த்த மகிமை. 107 சித்ரசர்மாவால் லிங்க பிரதிஷ்டை. 108 வாராணஸீ முதலிய 86 தீர்த்தங்கள். 109 ஷை மகிமை. 110 லிங்க மகிமை. 111–114 ஆனர்த்தனின் சரிதம், 115 முனிகோத்ர வ்யவஸ்தை. 116 அம்பாரேவதி, தீர்த்தோத்பத்தி. 117–118 பட்டிகோபாக்யானம். 119 தீர்க்கபாகுவிற்கு தூர்வாஸர் சாபமளித்தல். 120 காத்யாயனீ ஜனனம். 121 காத்யாயனீ மகிமை. 122 கேதார மகிமை. 123 சுக்ல தீர்த்த மகிமை. 124 வால்மீகி ஜனனம். 125 கர்ணோத்பலா ஜனனம். 126 ஸத்யஸந்தேச்வர மகிமை. 127 கர்ணோத்பலா விவாஹம். 128 அமேச்வர மகிமை.

129 யாக்ஞவல்க்யாச்ரம தீர்த்த மகிமை. 130 பஞ்சபிண்டா கௌரீ உத்பத்தி. 131 கணபதி மகிமை. 132 வாஸ்துபத தீர்த்த மகிமை. 133 அஜாகிருஹோத்பத்தி மகிமை. 134 ஸௌபாக்ய கூபிகோத்பத்தி. 135–136 தீர்க்கிகோத்பத்தி. 137 மாண்டவ்ய சூல ப்ராப்தி.

138 தர்ம ராஜேச்வ ரோத்பத்தி. 139 தர்ம ராஜேச்வர மஹிமை. 140 தர்மராஜபுத்ர கதை. 141 மிஷ்டாந்நதேச்வர மகிமை. 142 கணபதி த்ரய மகிமை. 143 ஜாபாலியின் தபஸ்ஸைக் கலைக்க இந்திரன் ரம்பையை அனுப்புதல். 144 ஜாபாலீச்வர, சித்வராங்க தேச்வர யோகிநீச்வரர் 145 அமரேச்வர லிங்கம் 146 அமரேச்வர குண்ட மகிமை. 147 சுகர் அவதாரம், சுக வியாஸ ஸம்வாதம். 148 வடிகேச்வர மகிமை. 149 அந்தகாஸுரப் பிறவி. 150 கேளீச்வர.

151 சக்ரபாணி மகிமை. 152 திலோத்தமையின் பிறவி 153 சித்ரேச்வர பீட மகிமை. 154-160 மணிபத்ர சரிதம் 161 புஷ்பாதித்ய மாஹிகாதுர்கோத்பத்தி 162 ஸப்தமீவ்ருத கதா. 163 பிரம்ம நகர உத்பத்தி. 164 சாகம்பரீ உத்பத்தி. 165 அச்வதீர்த்தோத்பத்தி. 166 பரசுராம ஜனனம். 167 விச்வாமித்ர ஜனனம். 168 விச்வாமித்ர தபஸ். 169 தாரா தேவீ. 170 தாரா தீர்த்த மகிமை. 171 விச்வாமித்ர வஸிஷ்ட யுத்தம். 172-173 விச்வாமித்ரர் ஸரஸ்வதிக்கு சாபமளித்தல். 174 பிப்பலாதோத்பத்தி. 175 யாக்ஞவல்கேச்வர மகிமை. 176 கம்ஸாரேச்வரர். 177 பஞ்சபிண்டிகோத்பத்தி. 178 பஞ்ச பிண்டாகௌரீ மகிமை. 179 புஷ்கர த்ரய மகிமை. 180 யாகாரம்பம். 181 காயத்ரீ தீர்த்த மகிமை. 182 ரூபதீர்த்தோத்பத்தி. 183 நாக தீர்த்தம் 184 எவ்வாறு ஞானம் அடையலாம்? 185 அதிதி தீர்த்தோத்பத்தி. 186 அதிதி ஸத்காரம். 187 பிரும்மா தன் பேரனுக்கு ச்ராத்தம் செய்தல். 188-189 ஔதும்பரீ உத்காத்ரு ஸம்வாதம். 190 யக்ஷ்ம தீர்த்தோத்பத்தி.

191-192 ஸாவித்ரீ மகிமை. 193-194 குமாரிகா தீர்த்த திவ்யகர்த்த க்ஷேத்ரத்தில் உள்ள பாதுகா மகிமை. 195-196 ஆநர்த்தாதிபனின் சரிதம். 197 பராவஸு சரிதம். 198 ப்ராம்மணீ தீர்த்த மகிமை. 199 காடு மலை நிலம், நீர், நகரம், இவைகளின் உத்பத்தி. 200 ஞாதிவ்யவஸ்தை. 201-202 விச்வாமித்ர பர்த்ருயக்ஞ ஸம்வாதம். 203 தேசதேசாந்தரத்தில் உள்ள நகர சுத்தி.

204 ஆனர்த்த விச்வாமித்ர ஸம்வாதம். 205 கயா ச்ராத்த பலன். 206 பாலமண்டனக தீர்த்தம். 207 பஞ்ச ராத்ரேந்திர மஹோத்சவம் 208 கௌதமேச்வர அஹல்யேச்வர, சதாநந்தேச்வர மகிமை. 209 சங்க தீர்த்த மகிமை. 210 தாம்பூலம் தரித்தல். 211–212 ரத்னாதித்ய தீர்த்தம். 213 ஸாம்பாதித்ய மகிமை. 214 கணநாதோத்பத்தி. 215–224 சிராத்த காலம். சிராத்தோத்பத்தி, நியமம், காம்ய சிராத்தம். 225 ஏகோத்திஷ்ட விதி. 226 யுதிஷ்டிர பீஷ்ம ஸம்வாதம். 227–229 பிருங்கிரிடர் உத்பத்தி. 230–231 கார்த்திக சுக்ல ஏகாதசீ விரதம். 232 சாதுர்மாஸ்யத்தில் செய்யவேண்டிய வ்ரத, ஹோம, ஜப, தானங்கள். 233–240 தீபதான மகிமை. 241 ஸத்சூத்ரகதை. 242 விஷ்ணு பக்தி மகிமை. 243 சாலிக்ராம பூஜை. 244 மூர்த்தி உத்பத்தி. 245–246 தேவதைகள் கல்லானது.

247 அச்வத்த மகிமை. 248 பலாச மகிமை. 249 துளசீ மகிமை. 250 பில்வம். 251 சாலிக்ராம மகிமை. 252 விருக்ஷமகிமை. 253 பார்வதி ஸமாதாநம். 254 சிவதாண்டவ நர்த்தனம். 255 லக்ஷ்மீ நாராயண மகிமை. 256 ராமநாம மகிமை. 257 பார்வதீ தபஸ். 258 தேவீ ஸ்துதி. 259 நீலவ்ருஷ ஸ்துதி. 260 சாதுர்மாஸ்ய கதா. 261 கார்திக ஸ்வாமி ஜன்ம. 262 ஞான யோகம். 263 மத்ஸ்யேந்திரோத்பத்தி. 264 அசூன்ய சயனவிரதம். 265 சிவராத்திரி மகிமை. 266 துலா புருஷ தானம். 267 கௌதமேச்வர மகிமை. 268-269 காபாலேச்வர மகிமை. 270 பாபபிண்ட தானம். 271 ஸப்த லிங்கோத்பத்தி. 272 கலிகால நிர்ணயம். 273 யுக அளவு. 274 துச்சிலேச்வர துர்வாஸேச்வர மகிமை. 275 துச்சிலேச்வரோத் பத்தி. 276 ஏகாதசருத்ரோத்பத்தி. 277 ஏகாதச ருத்ரர்களின் பெயர். 278 யாக்ஞவல்க்ய சரிதம். 279 நாகரகண்ட உபஸம்ஹாரம்.

7 ப்ரபாஸ கண்டம்.

1 கதை கேட்கத்தக்கவர். 2 கதா லக்ஷணம். 3 கைலாஸ பர்வதம். 4 சிவகணங்களின் மகிமை. 5 பிரபாஸத்தில் உள்ள தேவ, ரிஷி கணங்களின் மகிமை.

6 ஸோமேச மகிமை. 7–8 ஸோமநாதர் தோன்றுதல். 9 ஹரியின் நிலை. 10 லிங்க மகிமை. 11 ஜம்பூத்வீபம். 12 யமன் உத்பத்தி, 13 ஸௌர்யஸ்தம். 14 ஸித்தேச்வர மகிமை. 15 பாபத்தை அழிக்கும் மகிமை. 16–17 அர்க்க ஸ்தல பூஜாவிதி. 18 வராஹ கல்பம்.

19 வியாஸ ஜனனம். 20 அவபிரத ஸ்நானம். 21 தக்ஷோத்பத்தி. 22 ஸோமேச்வர லிங்க ஸ்தாபனம். 23–24 ஸோமவார விரதம். 25–26 கந்தர்வேச்வர மகிமை. 27 கந்தர்வ ஸேனேச்வர லிங்க மகிமை. 28 தீர்த்த யாத்ரா விதி, 29 வடவானல தீர்த்தம். 30 அக்னி தீர்த்த யாத்ரை. 31-32 ததீசி ஆச்ரமத்திற்கு தேவர்கள் செல்லுதல். 33 வடவானலம் என்ற அக்னியை ஸமுத்ரத்தில் கொண்டு விடல். 34 ஸரஸ்வதீ அவதாரம். 35 ஸரஸ்வதியும் அக்னிதீரமும் ஸமம். 36 கிழக்கு ஸரஸ்வதீ மகிமை. 37 இந்துமதீ சரிதம். 38 கபர்தி விநாயகர். 39 கேதாரேச்வர லிங்கம். 40 பீமேச்வர, 41 தேவமாதா பைரவேச்வரர் மகிமை. 42 சண்டீச பூஜா விதி. 43 ஆதித்யேச்வர மகிமை. 44–45 அங்காரகோத்பத்தி. 46 பூதலிங்கம். 47 பிரஹஸ்பதீச்வரம்.

48 சுக்ரலிங்கம். 49 சனைச்வரலிங்கம். 50 ராஹு லிங்கம். 51 கேது லிங்கம். 52 அஷ்டஸித்தி லிங்கம், 53 கபிலேச்வர லிங்கம். 54 கந்தர்வேச்வர லிங்கம். 55 விமலேச்வர, 56 தனதேச்வர, 57–58 அஜாபலேச்வர மகிமை. 59 அஜாதேவீ மகிமை. 60 பிராம்மீ மங்களாதேவீ. 61 லலிதா வைஷ்ணவீ, 62 உமாவிசாலாக்ஷி மகிமை. 63 ரௌத்ரீ ஸத்வராதேவீ மகிமை. 64 பைரவேச்வர, 65 லக்ஷ்மீச்வர, 66 வடவேச்வர, 67 காமேச்வர மகிமை. 68 கௌரீ தபோவன மகிமை. 69 கௌரீச்வர, 70 வருணேச்வர, 71 உஷேச்வர லிங்க மகிமை.

72 ஜலவாஸ கணபதி மகிமை. 73 ஷண்முகேச்வர, 74 கலகலேச்வர, 75 சாகல்யேச்வர, 76 லகுலீச. 77 உத்தங்கேச்வரர். 78 வைச்வாநரேச்வரர். 79–81 தைத்ய ஸூதன மகிமை. 82 சக்ரதீர்த்தோத்பத்தி. 83 யோகீச்வரீ மகிமை. 84 ஆதி நாராயண மகிமை. 85 சந்நிஹிதா நதி உத்பத்தி. 86 பாண்டவேச்வரம். 87 பூதேசருத்ரம், 88 நீலருத்ர, 89 கபாலீச்வர

ருத்ர, 90 விருஷபேச்வர, 91 த்ரயம்பகேச்வர, 92 அகோரேச்வர, 93 மகாகாலேச்வர, 94 பைரவேச்வர மகிமை. 95 மிருத்யுஞ்ஜய, 96 காமேச்வர. 97 யோகிச்வர, 98 சந்த்ரேச்வர மகிமை. 99 தண்ட பாணி 'சக்ரதர மகிமை. 100 துர்வாஸர் ஸாம்பனைக் குஷ்டியாக்கியது. 101 ஸாம்பாதித்யேச்வர, 102 சோதினி தேவி, 103 கபாலேச்வர, 104 கோடீச்வர, 105 பிரம்மேச்வர லிங்க மகிமை.

106–107 பிராம்மண ப்ரசம்ஸை. 108–109 அநிலேச்வர, 110 சரபேச்வர மகிமை. 111 ராமேச்வர மகிமை. 112 லக்ஷ்மணேச்வர, 113 ஜானகிச்வர, 114 புஷ்கர மகிமை. 115 புஷ்கரேச்வர, 116 குண்டீச்வரீ கௌரீ, 117 பூதநாதேச்வர, 118 கோப்யாதித்யேச்வர மகிமை, 119 பலன், அதிபலன் எனும் அரக்கர்கள், 120 கோபீச்வர, 121 ஜாமதக்னீச்வர, 122 சித்ராங்கதேச்வர, 123 ராவணேச்வர, 124 ஸௌபாக்யேச்வரீ, 125–126 பௌலோமீச்வர, 127 க்ஷேமங்கரேச்வர, 128 ஸாம்பாதித்ய, 129 அக்ஷமாலேச்வர, 130 பாசுபதேச்வர, 131 துருவேச்வர, 132 ஸித்தலக்ஷ்மீ பீட, 133 மகாகாளீபீட, 134 புஷ்கராவர்த்தக நதீ, 135 சீதளா கௌரீ, 136 கங்காலபைரவ, 137 த்ருணபிந்து ஈச்வர, 138 சித்ராதித்ய, 139 சித்ரபதாநதீ, 140–141 கபர்தி சிந்தாமணி, 142 சித்ரேச்வர, 143 விசித்ரேச்வர. 144 புஷ்கரகுண்ட, 145 கஜகும்போதர, 146 யமேச்வர, 147 பிரம்மகுண்ட மகிமை.

148 குண்டகூப, 149 பைரவேச்வர, 150 பிரம்மேச்வர, 151 ஸாவித்ரேச்வர, 152 நாரதேச்வர பைரவ, 153 ஹிரண்யேச்வர, 154 காயத்ரீச்வர, 155 ரத்னேச்வர, 156 கருடேச்வர, 157 ஸத்யபாமேச்வர, 158 அனங்கேச்வர, 159 ரத்னகுண்ட மகிமை, 160 ரைவந்தகராஜபட்டாரக மகிமை 161 அனந்தேச்வர, 162 அஷ்டகுலேச்வர, 163 நாஸத்யேச்வர, 164 அச்வினீச்வர லிங்க மகிமை. 165 ஸாவித்ரீ மகிமை. 166 வடஸாவித்ரீ விரத மகிமை. 167 பூதமாதுருகா, 168 சாலகடங்கடா, 169 வைவஸ்வதேச்வர, 170 மாத்ருகணபலதேவி, 171 தசரதேச்வரர், 172 பரதேச்வர,

173 மைத்ரேயேச்வர, 174 குந்திச்வர, 175 அர்க்கஸ்தல, 176 சித்தேச்வர, 177 லகுலீச, 178 பார்க்கவேச்வர, 179 மாண்டவ்யேச்வர, 180 புஷ்பதந்தேச்வர மகிமை.

181 க்ஷேத்ரபாலேச்வர மகிமை. 182 வஸுநந்தர, மாதுருகண, ஸ்ரீமுக விவர மகிமை. 183 த்ரிஸங்கம, 184 மங்கிச்வர. 185 தேவமாத்ரு கௌரீ, 186 நாகேச்வர, 187 ப்ரபாஸ பஞ்சகம், 188 ருத்ரேச்வர, 189 கர்ம மோக்ஷ, 190 மோக்ஷ ஸ்வாமீ, 191 அஜீ கர்த்தேச்வர, 192 விச்வகர்மேச்வர, 193 யமேச்வர, 194 அமரேச்வர 195 ஜலப்ரபாஸலிங்க, 196–197 ஜமதக்னிச்வர லிங்க மகிமை. 198 பஞ்சப்ரபாஸ க்ஷேத்திர மகிமை. 199 தக்ஷயக்ஞ வித்வத் ஸம்வாதம். 200 ஸ்வரமகிமை.

201 கால, பைரவ ச்மசான மகிமை. 202 ராமேச்வர லிங்கம், 203 மங்கிச்வர லிங்க மகிமை. 204 ஸரஸ்வதீ ஸாகர ஸங்கமம். 205 ஸப்த த்ரவ்ய சுத்தி, 206 சிராத்த விதி. 207 ஷட்பிண்டாதி நிர்ணயம். 208–209 மார்க்கண்டேயேச்வர, 210 புலஸ்த்யேச்வர, 211 புலஹேச்வர, 212 க்ரதுஈச்வர, 213 கச்யபேச்வர, 214 கௌசிகேச்வர, 215 குமாரேச்வர, 216 கௌதமேச்வர, 217 தேவராஜேச்வர, 218 மாநவேச்வர, 219 நீலகண்டேச்வர, 220 வ்ருஷப த்வஜேச்வர, 221 ப்ரேத தீர்த்த மகிமை, 222–225 அநர்கேச்வரமகிமை.

226 மேகேச்வர, 227 பலபத்ரேச்வர, 228 பைரவேச்வர மகிமை. 229 கங்கா, 230 கணபதி, 231 ஜாம்பவதி நதி, 232 பாண்டவ கூப, 233 பாண்டவேச்வர, 234 தசாச்வமேத லிங்க, 235 சதமேதாதி லிங்கத்ரய, 236 துர்வாஸேச்வர லிங்க, 237 வஜ்ரேச்வர லிங்க மகிமை. 238 ஹிரண்யா நதி. 239 ஸ்யமந்தகா த்யானம். 240 பலபத்ர ஸுபத்ரா கிருஷ்ண மகிமை. 241 சேஷ மகிமை. 242 குமாரீ மகிமை. 243 மந்த்ராவளி க்ஷேத்ர பால, 244 விசித்ரேச்வர, 245 ப்ரம்மேச்வர, 246 பிங்கா நதி 247-248 சுக்ரேச்வர, 249 ஸங்கமேச்வர, 250 கங்கேச்வர, 251 சங்கராதித்ய. 252 சங்கரநாத, 253 குபேரேச்வர, 254 கண்டேச்வர, 255 ரிஷிதீர்த்த, 256 நந்தாதித்ய, 257 த்ரிதகூப, 258 சசாபாந மாகாத்மியம்.

259 பர்ணாதித்ய, 260 சித்தேச்வர, 261 நயங்கு மதீ, 262 வராஹஸ்வாமி, 263 சாயாலிங்க, 264 ஆநந்தினிகுபா, 265 கனகநந்தா. 266 கும்பீச்வர, 267 கங்கா பதங்கேச்வர, 268 சமஸோத்பேத மகிமை. 269 விதுராச்ரமம். 270 மங்கேச்வரலிங்கம், 271 ஜாலேச்வரம், 272 த்ரிபுராலிங்கம், 273 சண்டதீர்த்தம், 274 ஸௌர்யப்ராசி மகிமை. 275 த்ரிணேத்ரேச்வர மகிமை, 276 உமாபதி மகிமை. 277 யக்ஞ வராஹ மகிமை. 278 தேவிகா மகிமை. 279 ஸௌர்யாஷ்டோத்ரம். 280–283 ச்யவனேச்வர மகிமை. 284 ஸுகந்யாஸரோ மகிமை. 285 கங்கேச்வர மகிமை.

286–288 பாலார்க்க மகிமை. 289 பாதலகங்கேச்வர. விச்வாமித்ரேச்வர, பாலேச்வர எனும் மூன்று லிங்கங்களின் மகிமை. 290 குபேர நகரோத்பத்தி, புஷ்பேச்வர, இந்த்ரேச்வர, ரிஷிதோய, குப்தப்ரயாக, மாதவ, ஸங்கா லேச்வர, ஸித்தேச்வர, கந்தர்வேச்வர, உத்தரேச்வர, கங்கா, நாரதாதித்ய, ஸாம்பாதித்ய, அபர நாராயண, மூலசண்டீசோத்பத்தி, சதுர்முக விநாயக, கம்பலேச்வர, கோபாலஸ்வாமி, ஹரி, வகுலஸ்வாமி, உத்தரார்க்க, ரிஷிதீர்த்த ஸங்கம, மருதார்யா தேவி, க்ஷேமாதித்ய, கண்டகசோக்ஷணீ, ப்ரம்மேச்வர, உந்நதஸ்தான, லிங்க த்வய, பிரம்ஹ, துர்காதித்ய, க்ஷேமேச்வர, கணநாத, உன்னதஸ்வாமி, மஹாகால, மஹோதய, ஸங்கமேச்வர, உன்னத விநாயக, தலஸ்வாமி, காலமேக, ருக்மிணி, பிங்கேச்வர பத்ரா, தலஸ்வாமி, சங்கவர்த்த தீர்த்த, கோஷ்பதீ தீர்த்த, நாராயண க்ருஹம், ஜாலேச்வர லிங்க, ஹுங்கார கூப, சண்டீச்வர, ஆசாபூரவிக்னராஜ, சந்த்ரேச்வர, கலாகுண்ட தீர்த்த, ஷஷ்டீ விரத விதான. ஜரத்கவேச்வர, நலேச்வர, ஹாடகேச்வர, நாரதேச்வரீ, மந்த்ர விபூஷண கௌரீ, துர்ககூட கணபதி, கௌரவேச்வரீ, கருட இளா, பல்வதீர்த்த, கர்த்தமால, குப்தேச்வர, பகுஸுவர்ணேச்வர, ச்ருங்கேச்வர, கோடீச்வர, நாராயண தீர்த்த, மார்க்கண்டேயேச்வர, மண்டுகேச்வர, ஏகாதச ருத்ர லிங்க, கந்தேச்வர, ஸம்வர்தேச்வர, ப்ரகீர்ண ஸ்தான லிங்கங்களின் மகிமை.

வஸ்த்ராபத மஹிமை.

1 தாமோதர மகிமை. 2 பவநாம மகிமை. 3 ஸ்வர்ண ரேகாநதீ மகிமை. 4 துந்நாவள்ளி ஹ்ருத் கிரிஸ்தான மகிமை. 5 கஙகேச்வர மகிமை. 6 சக்ர தீர்த்த யாத்ராவிதி. 7–8 பிரம்ம ருத்ர விவாதம். 9 பவோத்பத்தி. 10–11 ஸாரஸ்வதமுனி உபதேசம். 12 தீர்த்த ஸ்மரண பலன். 13 ஹரிஹர பூஜா பலன். 14 ஸோமேச்வரோத்பத்தி. 15–16 சிவ வாமன ஸம்வாதம். 17 பலியாக பிரபாவம். 18-19 பலி நிக்ரஹம். 20 வஸ்த்ராபத க்ஷேத்ர மாஹாத்மிய ச்ரவண பலன்.

அற்புத கண்டம்.

1 சிவப்ரோத்பத்தி. 2 உத்தங்க சரித்ரம். 3 அசலேச்வர மகிமை. 4 நாகதீர்த்த மகிமை. 5 வசிஷ்டாச்ரமம். 6 த்ரிணேத்ர மகிமை 7 கேதாரேச்வர மகிமை. 8 சதுர்யுக தர்மாதர்மம். 9–11 கோடீச்வர மகிமை. 12 ரூப தீர்த்த மகிமை. 13 ஸித்தேச்வர லிங்கம். 14 அக்ரேச்வர லிங்க மகிமை. 15–16 மணிகர்ணிகேச்வர மகிமை. 17 பல்கு தீர்த்த, 18 யமதீர்த்த, 19 வாராஹதீர்த்த, 20 பிண்டோதகதீர்த்த, 21 ஸ்ரீமாதா, 22 சுக்லதீர்த்த மகிமை. 23 காத்யாயனீ மகிமை. 24–25 பிண்டாரக தீர்த்த, 26 கநகல தீர்த்த, 27 சக்ர தீர்த்த, 28 மநுஷ்ய தீர்த்த, 29 கபிலா தீர்த்த, 30 அக்னி தீர்த்த, 31 ரக்தானுபந்த தீர்த்த, 32 மஹா விநாயக, 33 பார்த்தேச்வர, 34 கிருஷ்ண தீர்த்த, 35 மாமுஹ்ரதோத்பத்தி, 36 சண்டிகாச்ரம மகிமை. 37 நாகோத்பவ தீர்த்த, 38 சிவகங்காகுண்டோத்பத்தி, 39 ஸக்துதான மகிமை. 40 காமேச்வர மகிமை. 41 மார்க்கண்டேய ஜனனம். 42 உத்தாலகேச்வர, 43–44 கஜதீர்த்த பிரபாவம். 45 தேவகாதோத்பத்தி. 46 வியாஸ தீர்த்த, 47 கௌதமாச்ரம தீர்த்த, 48 குலஸந்தாரண தீர்த்த, 49 பரசுராம தீர்த்த, 50 கோடி தீர்த்த, 51 சந்த்ரோத்பவதீர்த்த, 52 ஈசானீசிகர, 53 பிரம்மபதோத்பத்தி, 54 த்ரிபுஷ்கர, 55 ருத்ரஹ்ரத, 56 குஹேச்வர, 57 அவியுக்த க்ஷேத்ர, 58 உமாமஹேச்வர தீர்த்த, 59 ஜம்பு தீர்த்த, 60 கங்காதர தீர்த்த, 61-62 கடேச்வர மகிமை. 63 அற்புதகண்ட மாஹாத்மிய பலச்ருதி.

துவாரகா மாஹாத்மியம்.

1 பகவத் ஸ்துதி. 2 ஸ்வதேஹ க்ருதார்த்தீ கரணம். 3 ருக்மணிக்கு தூர்வாஸர் சாபமளித்தல். 4 துவாரகா யாத்ரா விதி, 5 கோமதீ உத்பத்தி. 6 கிருஷ்ண பூஜை. 7 ஷோடசோபசாரம். 8 பகவத் ஸ்வரூபம். 9 ருக்மிணி வ்ரத மகிமை. 10 க்ருகலாஸ தீர்த்தம். 11 விஷ்ணு பத தீர்த்தம். 12 கோப்ரசார தீர்த்தம். 13 கோபீ ஸரஸ் தீர்த்தம். 14 பஞ்சநத தீர்த்தம். 15 ரிஷி தீர்த்தம். 16 தீர்த்த பிருந்த மகிமை. 17 ருக்மிணீ கர்வபங்கம். 18–19 ஆஹ்னிக விதானம். 20 சிவலிங்க ஸ்தாபனம். 21 பகவத் பூஜை. 22 ருக்மிணீ பூஜை. 23 கிருஷ்ண கதா பலச்ருதி. 24 துவாரகையின் சிறப்பு. 25 பகவத் பக்த லக்ஷணம். 26—27 துவாதசி ஜாக்ரத்தின் மகிமை. 28–29 கோமதீ வர்ணனம். 30 யாத்ரா வர்ணனம். 31 துவாரகையைக் காணுதல், 32 துவாரகையின் மகிமை, 33 துவாரகாநாம மாகாத்மிய வர்ணனம். 34 கோமதி நதியில் நீராடும் விதி. 53 துவாரகா க்ஷேத்ரத்தில் செய்யும் பூஜை, 36 தர்னம், 37 ஜபம் இவைகளின் பலன். 38–39 துவாதசீ விரதம். 40 கார்த்திகையில் சக்ரதீர்த்த ஸ்நான தான சிராத்தங்களின் மகிமை. 41–42 துவாரகா மாகாத்மிய ச்ரவண பலன். 43 துளஸீ காஷ்ட மகிமை. பலி சக்ரவர்த்தியோடும் பிராமணர்களோடும் செய்யப்பட்ட துவாரகா யாத்ராவிதி. 44 ஸ்காந்த புராண தான பலன்.

உத்தர ஸ்காந்த அநுக்ர மணிகா முற்றிற்று.

* வந்த விஷயமே தீர்த்தங்களே க்ஷேத்ரங்களே ரிஷிகளின் சரிதமே பலவிடங்களில் வருகின்றன. ஒரே பெயருள்ள தீர்த்தங்களும் சிவலிங்கங்களும் பற்பல க்ஷேத்ரங்களில் காணப்படுவது ஸஹஜம். ரிஷிசரிதங்களும் தேவ சரிதங்களும் பலமுறை பலவிடங்களில் வர்ணிக்கப் படுகின்றன. சிலவிடங்களில் சிலமாறுதல்களும் இருக்கின்றன. அந்தந்த இடங்களில் உள்ளவர் கேட்டதால் மறுபடி அவர்களுக்காக இரண்டு அல்லது மும்முறை வர்ணிக்கப்படுகின்றன. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவிதமான ருசி காணப்படுகிறது.

உத்தர, தக்ஷிண ஸ்காந்த அவதாரிகை.

புராணங்கள் பிரசாரத்திலிருந்து எல்லோராலும் கொண்டாடப்பட்ட காலம் ஒன்றிருந்தது. அச்சமயம் ஆஸ்திகர்களுக்குள்ளும் பண்டிதர்களுக்குள்ளும் ஸ்காந்த புராண விஷயமான சர்ச்சை மிக பலமாக இருந்தது. மஹா புராணம் அது வேத புருஷனின் ஸாக்ஷாத் அங்கமாகும். உப புராணமெனில் அது ஸாக்ஷாத் அங்கமாகாமல் உப அங்கமாகும். ஆதலால் தக்ஷிண தேசத்திலுள்ளவர் ஒருவகையான ஸ்காந்தத்தை இதுதான் மஹாபுராணம் என்றனர். அங்ஙனமே வடதேசத்தவர் ஒரு ஸ்காந்தத்தை இதுதான் மஹாபுராணம் மற்றது உபபுராணம் என வாதித்தனர். இரண்டையும் இயற்றியவர் ஸ்ரீ வேத வியாஸர் என்பதை இருசாராரும் ஏற்கின்றனர். மறுக்கவில்லை.

புராணங்களின் ஸ்வரூபத்தை நிர்ணயிக்கும் நாரத புராணம் முதலியதற்கு சில நெருங்கிய பிரமாணங்கள் உண்டு. வக்கீல்கள் தனது கக்ஷிக்கு அநுகூலமாக சட்டங்களுக்குப் பொருள் கூறுவதுபோல் வடதேசத்தவரும் தென்தேசத்தவரும் தம் தம் வாதத்திற்கு அநுகூலமாக அவைகளுக்கு உரை கூறி அரும்பாடு பட்டு தம் கக்ஷியை ஸ்தாபிக்கின்றனர். 13வது மஹா ஸ்காந்தம் என்றும் உப புராணங்களில் 3வது ஸ்காந்த புராணமென்றும் காட்டுகின்றனர். சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் திருவையாற்றில் அச்சிட்ட கிரந்தாக்ஷர தக்ஷிண ஸ்காந்தத்தில் "இதுதான் மஹா ஸ்காந்தம்" என்ற நிச்சயத்தினுல் போலும் இந்த விவாதத்தில் இறங்கவில்லை. அவதாரிகையே இல்லை. மஹா ஸ்காந்தாதி சர்ச்சையுமில்லை.

கச்சியப்ப சிவாசார்யர் எனும் மிகச் சிறந்த வித்வான் ஸ்காந்தத்தைத் தமிழில் 10346 பாடல்களாகப் பாடினர். அவர் கைகொண்டது தென்னுட்டில் அச்சிட்ட ஸ்காந்தத்தையே ஒட்டி இருக்கின்றது. 51 ஆண்டுகளுக்குமுன் சென்னையில் பதிப்பிக்கப்பட்ட ஷை ஸ்காந்தத்திலும் 1952ல் அச்சிட்ட திருப்பநந்தாள் மடத்துப்

பிரசுரத்திலும் வடநாட்டு ஸ்காந்தம் தென்னாட்டு ஸ்காந்தம் அல்லது மஹா புராண உபபுராண ஸ்காந்தம் என்ற சர்ச்சையே காணப்படவில்லை.

பாம்பே வெங்கடேச்வரா ஸ்டீம் பிரஸில் 1910ம் ஆண்டில் அச்சிட்ட ஸ்காந்தத்தில் மிக விரிவாக இந்த சர்ச்சை செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஸ்ரீ கேமராஜ் கிருஷ்ணதாஸ், உத்தர ஸ்காந்தமே மஹா புராணம் என ஸ்திரப்படுத்த பெரும்பாடுபட்டிருக்கிறார். பற்பல மேற்கோள்களைத் தனக்குப் பிரமாணமாகக் கூறுகிறார். நாஸ்திகம் வளர்ந்து ஆஸ்திக்யம் மங்கிநிற்கும் இச்சமயம் "சைவமே சிறந்தது, வைஷ்ணவமே உயர்ந்தது" என்ற வாதம்போல் புராணங்களை எல்லாம் மறந்து நாவலில் மூழ்கியுள்ள இக்காலத்தில் எது மகா புராணம்? எது உபபுராணம்? என்ற வாதத்திற்கு இடமேது? வேதார்த்தங்களை விளக்கும் புராண நோக்கம் இரண்டிலும் இருக்கிறது. இரண்டும் பகவான் வேதவ்யாஸரது அரும் பெரும் வாக்கு. ஆதலின் இரண்டையும் 18 புராண உபன்யாஸங்களில் கூறிவந்தோம். அதேபோல் புராண வெளியீட்டிலும் இரண்டையுமே பிரசுரிக்கின்றோம்.

தக்ஷிண ஸ்காந்தம்.

50 கண்ட வடிவமாகவும் 6 ஸம்ஹிதா வடிவமாகவும் உள்ளது தென்னாட்டு ஸ்காந்தம். ஆனால் இவைகளில் சங்கர ஸம்ஹிதையும் ஸூதஸம்ஹிதையுமே அச்சிடப்பட்டன. ஸநத்குமார ஸம்ஹிதையில் பற்பல க்ஷேத்ர மாஹாத்மியம் இருப்பதாக மற்ற இடங்களிலிருந்து அறியப்படுகிறது. அதை ஓலைச்சுவடிகள் உள்ள எல்லா புத்தகசாலைகளிலும் தேடியும் துண்டு துண்டாக 20, 30 அத்யாயங்கள் கிடைத்தனவே அன்றி பூர்ணமாகக் கிடைக்கவில்லை. கல்வி விஷயத்தில் பூர்ண ஆதரவளிக்கும் **ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய மஹா ஸன்னிதானம்** ஸ்ரீ மடத்திலுள்ள லண்டன் இந்தியன் ஹௌஸ் கேட்லாக் ஒன்றை அளித்து இதைப் பார் என அருள்புரிந்தார்கள். அங்கு ஓலைச் சுவடியில் ஸநத்குமார ஸம்ஹிதை இருப்பதாகக் கண்டேன் அதை எப்படிப் பெறுவது?

தென் தேச ஸ்காந்தத்தில் இருப்பதாகக் கூறப்படும் ஸம்ஹிதை 6. கண்டம் 50. சுலோகம் 81000.

1.	ஸ்ரீ ஸநத்குமார ஸம்ஹிதை	36000.
2.	ஸூத ஸம்ஹிதை	6000.
3.	சங்கர ஸம்ஹிதை	30000.
4.	வைஷ்ணவ ஸம்ஹிதை	5000.
5.	பிராம்ஹீ ஸம்ஹிதை	3000.
6.	ஸௌர ஸம்ஹிதை	1000.

*ஹாலாஸ்ய மாஹாத்மியம் எனும் திருவிளையாடல் புராணம் சங்கர ஸம்ஹிதையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. சங்கர ஸம்ஹிதையும் பூர்ணமாக இல்லை. அதில் சிவரகஸ்ய கண்டம் என்பது 13 ஆயிரம் சுலோகம் உள்ளது. 7 காண்டம் உள்ளது.

1. ஸம்பவ காண்டம். 2. ஆஸுர காண்டம். 3. யுத்த காண்டம். 4. மஹேந்த்ர காண்டம். 5. தேவ காண்டம் 6. தக்ஷ காண்டம். 7. உபதேச காண்டம். இது பெரும்பாலும் ராமாயணத்தை ஒத்திருக்கிறது.

உத்தர ஸ்காந்தமும் 81000 சுலோகம் உள்ளது. 7 கண்டங்களும் 1694 அத்தியாயங்களும் உள்ளது.

1 மஹேச்வர கண்டம்:– 135 அத்தியாயம். இதில் கேதார கண்டம் 35. கௌமார கண்டம் 63. அருணாசல மாஹாத்மியம் 37.

2 வைஷ்ணவ கண்டம்:– 189 அத்யாயங்கள். 1. வேங்கடாசல மாஹாத்மியம் 40. 2. ஜகன்னாத மாஹாத்மியம் 49. 3. பதரீ மாஹாத்மியம் 8. 4. கார்த்திக மாஹாத்மியம் 36. 5. மார்க்கசீர்ஷ மாஹாத்மியம் 17. 6. பாகவத மாஹாத்மியம் 4 அத்தியாயம். 7. வைசாக மாஹாத்மியம். 25 அத்தியாயம் 8. அயோத்யா மாஹாத்மியம் 10 அத்தியாயம்.

பிராம்ம கண்டம்: 1. ஸேதுமாஹாத்மியம் 52 அத்தியாயம். 2. தர்மாரண்ய மாஹாத்மியம் 40. 3. பிரும்மோத்ர கண்டம் 22 அத்தியாயம்.

4 காசீ கண்டம்:– 100 அத்தியாயங்கள்.

5 ஆவந்த்ய கண்டம்:- 387 அத்யாயங்கள். 1. ஆவந்த்யக்ஷேத்ரமாஹாத்மியம். 2. 84 லிங்கமகிமை. 3. ரேவா மாஹாத்மியம்.

6 நாகர கண்டம்:- 219 அத்யாயங்கள்.

7 பிரபாஸ கண்டம்:- 491 அத்யாயங்கள்.

இந்த கண்டங்களின் பெயரே பெரும்பாலும் இதில் உள்ள விஷயம் யாதெனக் குறிக்கும். கௌமார கண்டமெனும் 63 அத்யாயங்களில் ஸுப்ரமண்யனுடைய சரிதம் வர்ணிக்கப் படுகிறது. ஸ்கந்தன் கூறியதால் ஸ்காந்தமென இது கூறப்படுகிறது. ஸ்கந்தனது சரிதம் விரிவாகக் கூறப்படுவதால் தக்ஷிண ஸ்காந்தம் ஸ்காந்தமெனப் பெயர் பெற்றது.

வடநாட்டிலோ கார்த்திகேயன் என்ற பெயரே பிரஸித்தமானது. அடுத்தபடி குமரன் ஸ்கந்தன் என பெயரை அறிவார்கள். ஸுப்ரமண்யன் என்ற பெயர் அங்கு பிரஸித்தமில்லை. அவருக்குத் தென்னாட்டிலுள்ளது போல் தனிச்சிறப்பான ஆலயங்களில்லை. சிவாலயங்களிலும் இங்குளதுபோல் ஸ்கந்தனுக்குத் தனி ஸன்னதி கிடையாது. சிலவிடங்களில் ஸ்கந்தன் பிரும்மசர்ரி என்றே கூறப்படுகிறார்.

வல்லிதேவயானிகளுடன்கூட ஸுப்ரமண்யன் இங்கு பூஜிக்கப்படுகிறார். ஆங்கு சிலவிடத்தில் தேவஸேநாபதி என்று மாத்ரம் அறிவர். இங்கு தாரகன் சூரபத்மன் ஸிம்மவக்த்ரன் என்ற மூவரையும் வதைத்ததாகக் கதை. அங்கு தாரகனை மாத்ரம் கொன்றதாகக் காணப்படுகிறது. வல்லீ தேவஸேநா விவாஹம் தென் தேசத்தில் தான் விரிவாக இருக்கின்றது. காளிதாஸன் எனும் மகாகவி எழுதிய குமார ஸம்பவம் என்ற மகாகாவ்யத்தில் தாரகனைக் கொன்ற கதையையே விரிவாக வர்ணிக்கிறார். விவாஹத்தைப் பற்றி வர்ணிக்கவில்லை.

எது பிரமாணம் ?

இங்ஙனம் மாறுதல் காணப்படுவதால் புராணம் அனைத்தும் பொய்க்கதை. கல்பனைக் கதை என்று கூறுபவர் கூற்றுக்கு மிகப்பேருதவியாகும். இதன் உண்மை

என்ன? காலமும் உலகமும் அநாதியானது. நாம் திநந்தோறும் செய்ததையே செய்து வருவதுபோல் விசாலமான உலகிலும் நடந்ததே நடந்துவருகிறது. நித்ய வாழ்க்கையில் சில நாட்களில் சில மாறுதல் இருக்கும். பெரும்பாலானவை நடந்ததே நடக்கின்றது. அங்ஙனமே பாரத ராமாயண பாகவத ஸ்காந்த சரிதங்கள் ஒவ்வொரு கல்பத்திலும் நடந்துவருகின்றன. அவைகளில் சிலமாறுதல்கள் இருக்கலாம். அதனுல் சரிதங்களிலும் சிறிது மாறுபாடுகள் இருக்கும். ஆதலால் எதையும் பிரமாணமல்ல என்று கூறத் துணியலாகாது. ஒரு கல்பத்தில் ஸ்கந்தன் ஒரு பத்நியுடனும் ஒரு கல்பத்தில் இரு மனைவிகளுடனும் மற்ருேர் கல்பத்தில் பிரும்மசாரியாகவும் இருந்திருக்கலாம். ஆதலால் எல்லாம் பிரமாணமேயாகும்.

18 மஹாபுராணங்கள் :		18 உபபுராணங்கள் :	
1	பிராம்மம்	1	ஸநத்குமார புராணம்
2	பாத்மம்	2	நாரஸிம்மம்
3	வைஷ்ணவம்	3	ஸ்காந்தம்
4	சைவம்	4	சிவதர்மம்
5	பாகவதம்	5	தூர்வாஸ புராணம்
6	பவிஷ்யம்	6	நாரதம்
7	நாரதீயம்	7	காபிலம்
8	மார்க்கண்டேயம்	8	வாமநம்
9	ஆக்நேயம்	9	உசிநரம்
10	பிரும்மவைவர்த்தம்	10	பிரும்மாண்டம்
11	லிங்கம்	11	வாருணம்
12	வாராஹம்	12	காலிகா புராணம்
13	ஸ்காந்தம்	13	மாகேச்வரம்
14	வாமநம்	14	ஸாம்ப புராணம்
15	கூர்மம்	15	ஸெளர ,,
16	மாத்ஸ்யம்	16	பாராசர ,,
17	காருடம்	17	மாரீச ,,
18	பிரும்மாண்டம்	18	பார்க்கவ புராணம்

நாரத வாமந பிரும்மாண்ட ஸ்காந்த என்ற புராணங்கள் மஹாபுராணங்களிலும் உபபுராணங்களிலும் காணப்படுகின்றன. மஹா புராணத்தில் உள்ள நாரதபுராணம்

பிருஹந் நாரதீபம் என கூறப்படும். பாகவதத்தில் ஒன்றுதான் மஹா புராணத்தில் இருக்கின்றது. ஆதலால் தான் ஸ்காந்த சர்ச்சையை விட தேவீபாகவதம் பாகவதமா ?. விஷ்ணு பாகவதம் பாகவதமா ? என்ற சர்ச்சை அதிகம். அதில் உபபுராணமா ? மஹா புராணமா ? என்ற சர்சையைவிட வியாஸர் இயற்றியதா ? இல்லையா ? என்ற வாதமே அதிகம் இடம் பெற்றது. இதுதான் பாகவதமா ? அதுதான் பாகவதமா? என்ற சர்ச்சை ஓங்கிற்று.

இங்கு உத்தர ஸ்காந்த கதை.

உத்தர ஸ்காந்தம் தக்ஷிண ஸ்காந்தமென்றே நாம் வியவஹாரம் செய்கிறோம். மஹாபுராண உபபுராண ஸ்காந்தம் என நம்மால் நிர்ணயிக்க முடியவில்லை. இரண்டிலும் புராணம் பஞ்சலக்ஷணம் தசலக்ஷணம் என்ற இரண்டும் இரு புராணங்களிலும் இருக்கின்றன. இரண்டையும் வழக்கப்படி 75, 75 பக்கம் எழுதுவதாகக் கருதினோம். ஆனால் உத்தர ஸ்காந்த விஷயானுக்ரமணிகை என்ற அட்டவணையில் அவதாரிகையும் 30 பக்கத்திற்கு மேல் போய்விட்டதால் ஏழுகண்டங்களில் உள்ள கதைகளை மிகச் சுருக்கி எழுதினாலும் கண்டத்திற்கு ஒரு கதையேனும் முடியுமா என்று ஸந்தேகமே! பல நண்பர்கள் உத்தர ஸ்காந்தத்தை விட்டே விடலாமென்று கூறினாலும் 18 புராண பிரவசன காலங்களில் இதையும் சேர்த்து சொன்னமையினால் அதை அடியோடு விடுவதைவிட சிறு தளவாவது கூறவேண்டுமென நினைக்கின்றோம். மற்ற புராணங்களில் எங்கும் காணப்படாத—எவருமே கேட்டிராத—சில சரிதங்களை மட்டிலும் எழுதுகின்றோம்.

காசி கண்டம், பிரமோத்தர கண்டம் இவ்விரண்டும் தமிழ் நாட்டில் பல்லாண்டுகளுக்குமுன் தமிழ் பாக்களாக பாடப்பட்டிருக்கின்றன. ஆனால் தக்ஷிணதேசத்து ஸ்காந்தத்திலும் இவ்விரண்டும் இருக்கின்றன எனக் கூறவும் இடமுண்டு. அதில் சிற்சில விரதங்களும், விரதத்தைப் பலப்படுத்தும் சரிதங்களும் ரஸமானவை. பிரம்மோத்தர கண்டம் என்ற பகுதியை நமது வைதிக தர்ம வர்த்தினியில் வெகு விரிவாக எழுதி வருகின்றோம்.

18 (20) புராணங்கள் முடிந்ததும் இறைவன் அருளும், ஆஸ்திகர் ஆதரவும் இருந்தால் உபபுராணங்களில் மிக முக்யமான அம்சங்கள் வெளியிடலாம். அச்சமயம் இதிலுள்ள விஷயங்களைப்பற்றி யோசிப்போம். தக்ஷிண ஸ்காந்தத்தில் வழக்கப்படி 75 பக்கம் வெளிவரும். வராஹ புராணத்தில் நினைத்ததைவிட பக்கங்கள் அதிகமாய் விட்டன. ஆதலின் இதில் சிலகதைகள் வரமுடியாததற்கு வருந்துகின்றோம்.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா,
பதினெண் புராண பிரசுர கர்த்தா.

14. உத்தர ஸ்காந்தம்.

यस्याज्ञया जगत्स्रष्टा विरिञ्चिः पालको हरिः ।
संहर्ता कालरुद्राख्यः नमस्तस्मै पिनाकिने ॥

எவருடைய ஆக்ஞையால் பிரம்மா உலகைப் படைக்கின்றாரோ, விஷ்ணு பரிபாலிக்கின்றாரோ, காலருத்ரன் ஒடுக்குகின்றாரோ அந்த பிநாகியெனும் துரீய மூர்த்தியை நமஸ்கரிக்கின்றேன். நைமிசாரண்யத்தில் சூதபுராணிகர் கூறுவதாக ஸ்காந்தம் ஆரம்பமாகின்றது. மாகேச்வர கண்டத்தில் மஹேசன் பெருமையைக்கூறி இடையே பற்பல் அரிய கதைகளேயும் தர்மங்களேயும் கூறி விஷ்ணுவினுடைய பெருமையையும் வர்ணிக்கின்றது.

நமோருத்ராய பீமாய என்ற **சிவநாமாஷ்டோத்தரம்** அர்ச்சனைக் கேற்றவாறே அமைந்திருக்கிறது. நாடீஜங்கன், கோட்டான், கழுகு, ஆமை முதலியவைகள் சிவ பூஜையின் மகிமையால் பல கல்பகாலம் ஜீவித்து வந்தன. நாரதர் கூறிய **சூர்யாஷ்டோத்தர சதநாம** மிகச் சிறந்தது. ஓம் ஹ்ரீம் விச்வமூர்த்தயே சிவாய நம: என்ற சிவ த்வாதசாக்ஷரியைக் கூறி சிவ ஆவரண பூஜையை மிக விரிவாகக் கூறுகின்றார். ஆர்த்தோஜிக்ஞாஸு: என்பதுபோன்ற கீதா சுலோகங்களும் எண்ணிறந்த நீதி சுலோகங்களுமிங்கு நிரம்பி இருக்கின்றன. கும்பகோணம் முதலிய சில தக்ஷிணதேச சிவக்ஷேத்ரங்களும் இங்கு சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

கடோத்கசனும் காமகடங்கடையும்.

தேவியின் மகிமையை விளக்க ஒரு விசித்ரமான கதை வர்ணிக்கப்படுகின்றது. பாண்டவர்கள் த்ரௌபதியை மணந்து இந்த்ரப்ரஸ்தத்தில் ராஜ்ய பரிபாலனம்

செய்து கொண்டிருக்கும் பொழுது பீமஸேனனுக்கு இடிம்பியினிடம் உண்டான கடோத்கசன் வந்து எல்லோரையும் வணங்கினன். அவர்கள் அவனைக் குசலப்ரச்னம் செய்தபின் "தந்தைக்குப் பணிவிடைசெய்" என்று கூறி தவம் செய்ய வனம் சென்றாள் என்தாய். ஆதலால் நீங்கள்தான் என்னை ஏற்று அருளவேண்டுமென்றனவன். பிறந்தவுடன் வாலிபப் பருவத்தைப்பெற்ற இவனுக்கு விவாஹம் செய்து வைப்பது நலமென்று தர்மராஜன் கிருஷ்ணனிடம் கூறினர். கிருஷ்ணன் இவனுக்கேற்ற மனைவி காமகடங்கடா என்பவள். இவள் முரன் எனும் அரக்கனது பெண். நான், முரனைக்கொன்றபின் கோபங்கொண்டு அவள் என்னோடு போருக்கு வந்தாள். மிக பராக்ரமம் வாய்ந்த அவள் எனது வாஹனமான கருடனை மூர்ச்சையாகும்படி அடித்து எனது பாணங்களையும் தவடு பொடியாக்கினள்.

இவளையான் சக்ராயுதத்தினல் கொல்ல ஆரம்பிக்கும் பொழுது காமாக்ஷீதேவி என்னைத் தடுத்து அவளையும் ஸமாதானம் செய்தாள். கடோத்கசன் உன்னை மணக்கப் போகிறன். உனது மாமனரின் பந்துவும் தெய்வமும் ஆவார் கிருஷ்ணன். அவரோடு போர் புரியாதே! உனது தந்தையை அவர் வைகுண்டத்திற்கு அனுப்பிவிட்டார். நீ பகதத்த புரத்தில் ஸகோதரனுடன் வாஸம் செய் என்றாள் தேவி. ஆதலால் காமகடங்கடை போரை நிறுத்தி என்னைச் சரணமடைந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினள். அங்கு வசிக்கும் அவளே கடோத்கசனுக்கு ஏற்ற மனைவி. அவள் வரத்தினல் மிக பலசாலியானதால் வாதத்திலும் சக்தியிலும் போரிலும் தன்னை ஜயிப்பவனே தனக்குப் பதி என்று பிரதிக்ஞை செய்திருக்கின்றாள். பலத்திலும் அழகிலும் ஸமமான அவளைக் கடோத்கசன் மணக்கலாம் என்று கிருஷ்ணன் கூறினர்.

இதைக்கேட்ட தர்மராஜன் கணவனையே போருக்கு அழைக்கும் கன்னிகையே நமக்கு வேண்டாமென்றார். பீமன் அத்தகைய ஒரு வீர கன்னிகையை ஜயித்து மணம் புரிவது கீர்த்தியைத்தரும். பெண்ணை ஜயிக்க முடியாதவனுக்கு மணம் ஏன்? ஆதலால் அவளை ஜயித்து மணந்துகொள்ளட்டும் என்றான். கிருஷ்ணன்

அதை ஆமோதித்து கடோத் கசனைத் தூண்ட அவன் தனது தந்தை தாய் இருவரும் மிக பராக்ரமம் வாய்ந்த வர்கள். ஆதலால் அப்பெண்ணை ஜயித்து அவளையும் கீர்த்தியையும் பெறுவேன் என்று கிளம்பினான். கிருஷ் ணன் நீ அவளோடு போர் புரியும் பொழுது எனது பாதத்தை நினைத்துக்கொள். உனக்கு ஜயமுண்டாகும் என்று கூறி அனுப்பினார். கடோத்கசன் அதிவேகமாக பகதத்தபுரம் சென்ற பொழுது மிக்க பலமும் அழகும் வாய்ந்த அவளது துவார பாலகியான ஒரு ஸ்திரீ தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டினாள். கடோத் கசன் அழகில் மயங்கி தன்னையும் யஜமானியையும் மறந்து வேண்டினாள். புஜபல பராக்ரமம் வாய்ந்த உன் யஜமானி காமகடங்கடையிடம் என் மநம் சென்றதால் அவளிடம் செல்கிறேன் என்று உள்ளே நுழைந்தான். இவனது அழகைக்கண்டு கிருஷ்ணன் எனக்கேற்ற பதி யையே தேடி அனுப்பி இருக்கின்றார் என்று எண்ணி அகமகிழ்ந்தாள். கடோத்கசன் அவளை நோக்கி மிகக் குரூரமான குணம் வாய்ந்தவளே ! விருந்தினனாக வந்த என்னைப் பூஜிப்பது உன் கடமை அல்லவா ? என் றான். அவனது அழகினாலும் திரச்செயலினாலும் மெய் மறந்த அவள் நான் ஏன் என்னை ஜயிப்பவரையே மணப்பதென்று பிரதிக்ஞை செய்தேன்? இவர் என்னை வாக்கினாலும் சக்தியினாலும் பலத்தினாலும் ஜயிப்பாரா? என்று சிந்தை கலங்கி நின்றாள். சிறிது நேரமான பின் அவளது பிரதிக்ஞையை நிறைவேற்ற முதலில் வாதம் இடும்படிக் கூறினாள். அதைக்கேட்டு கடோத்கசன் எனது கேள்விக்கு பதில் கூறு என ஒரு கேள்வி கேட் டான்? "ஒரு புருஷன் ஒரு பெண்ணை மணந்து ஒரு கன்னிகையைப் பெற்றான். அவன் மனைவி இளமை யிலேயே இறந்தாள். தானே பெண்ணை வளர்த்து வந் தான் பிதா. பெண்ணுக்குத் தக்கவயது வந்தபின் அவளை வேறு ஒரு புருஷனுக்கும் அளிக்காமல் தானே அவளை மணந்து ஒரு குழந்தையைப் பெற்றான். பிறந்த குழந்தை அவரைத் தந்தை என்று அழைப்பதா ? அல்லது தாதா என்றழைப்பதா"? என்ற இக்கேள்விக்கு பதில்சொல்ல முடியாமல் வாதத்தில் தோல்வி அடைந்தேன் என்று. சொல்லி சக்தியில் ஒருமுறை பார்ப்போம் என்று

ஊஞ்ஜல் சங்கிலியைத் தங்கத்தடியால் அடித்தாள். அதிலிருந்து கோடிக்கணக்கான இராக்ஷஸர்களும் சிம்மம் புலி முதலிய பிராணிகளும் தோன்றின. இதைக்கண்டு கடோத்கசன் அஞ்சாமல் இருகரங்களிலுமுள்ள நகங்களை ஒன்ருேடொன்று உரையும்படி செய்தான். அதிலிருந்து இரண்டுமடங்கு ராக்ஷஸர்களும், பூதங்களும் தோன்றி முன்தோன்றிய அனைத்தையும் பக்ஷித்தார்கள். இதிலும் தோல்வி அடைந்த கடங்கடை பாகு யுத்தம் செய்தாள். அவளது பராக்ரமத்தைக்கண்டு ஆச்சர்யமடைந்து தனக்குத் தோல்வி உண்டாகுமோ என்று அஞ்சி பகவானைத் தியானம் செய்து தனது கைவரிசையைக் காண்பித்தான். இருவருக்கும் வெற்றி தோல்வி காணமுடியாதபடி பயங்கரமான மல்ல யுத்தம் நடந்தது. பகவானது தியானத்திஞல் கடோத்கசன் கை ஓங்கிற்று. அவளைக் கீழேதள்ளி கத்தியிஞல் அவளது மூக்கை அறுக்க ஆரம்பித்தான். இதைக்கண்டு பயந்த கடங்கடா அவனை நமஸ்கரித்து நீர் மூன்று வகையிலும் என்னை வென்று விட்டீர். உமக்கு அடிமை நான். நீர் முற்பிறவியில் குஹ்யர்களுக்குத் தலைவனை காலநாபன் என்ற அரசன். ஆதலால் என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளவேண்டும். உம்மைத் தூக்கிச்சென்று வனங்களில் ஸந்தோஷமனுபவிப்பேன் என்ருள். கடோத்கசன் அது உசிதமேயாஞலும் என் தந்தையின் உத்தரவின்றி யான் ஒன்றும்செய்யேன். ஆதலால் இந்த்ரப்ரஸ்தத்திற்கு என்னைத் தூக்கிச்செல் என்ருன்.

தனது ஸகோதரனை பகதத்தன் தந்த சீர்களை ஏற்று அவைகளை அவனிடமே அளித்து விடைபெற்றுக் கொண்டு கடோத்கசனைத் தோளில் தூக்கிச் சென்ருள். வாஸுதேவனும் பாண்டவனும் சேர்ந்து இவர்களுக்கும் விவாஹம் செய்வித்தார்கள். குந்தி, திரௌபதி முதலியவர்களனைவரும் கடங்கடையைக் கண்டுகளித்து ஆசிர்வதித்தார்கள். கடோத்கசன் தந்தை உத்தரவுபடி ஹிடிம்பவநத்தில் மனைவியுடன் ஆனந்தமாக இல்லற சுகத்தை அனுபவித்து வந்தான். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தைப் பிறந்தது. அஸுர ஜாதிக்கேற்றபடி உடனே வளர்ந்து யௌவந பிராயத்தை அடைந்தான். பெற்ருேரைப் பணிந்து நின்ருன். அவனைப் பெற்ருேர்

ஆலிங்கனம் செய்து பர்பரீகன் எனப் பெயரிட்டார்கள். பர்பரனுடன்கூட கடோத்கசனும் காலகடங்கடையும் ஸ்ரீ கிருஷ்ணனைத் தர்சிக்க துவாரகைக்கு வந்தார்கள். இவர்களைப் பார்த்தவுடன் நகர வாஸிகள் அனைவரும் திடுக்கிட்டு பயந்து பகவானிடத்தில் முறையிட்டார்கள்.

இவர்கள் உக்ரஸேனன், வஸுதேவன், முதலியவர்களை நமஸ்கரித்துப் பகவானுடைய பாதாரவிந்தத்தில் பணிந்து நின்றார்கள். பகவான் க்ஷேம ஸமாசாரம் விசாரித்தார். பர்பரீகன் பகவானைத் தனியாகப் பணிந்து நற்கதியை அளிக்கக்கூடிய புண்ய கர்மங்கள் யாவை? என்றான். வர்ணாச்ரம தர்மமே உயர்ந்த வழி என்றுகூறி குப்த க்ஷேத்ரத்தின் மகிமையையும் கூறினார் பகவான். அவனது ஹிருதயம் நல்லதாக இருந்ததால் சுஹ்ருதயன் என்று மற்றொரு பெயர் வைத்தார். அவன் கிருஷ்ணன் சொற்படி குப்த க்ஷேத்ரம் சென்று தக்தஸ்தலீ என்ற விடத்தில் ஆச்ரமம் அமைத்துக்கொண்டு மூன்று ஆண்டுகள் அங்கு தேவியை நாடித் தவம் செய்தான். தேவி சந்தோஷமடைந்து அபரிமிதமான பலத்தை அளித்தாள். அவள் உத்தரவுபடி மற்ற கிங்கரிகளுடன்கூட காசீ க்ஷேத்ரத்தில் வசித்து வந்தான். மகத தேசத்தில் தோன்றிய ஓர் பிராம்மணன் ஆங்கு சென்று தேவியை நாடித் தவம் செய்தான்.

அவனுக்கு தேவி ஸ்வப்பனத்தில் தோன்றி பர்பரீகனை ஸகாயமாகக் கொண்டு **ஸித்தாம்பிகையைப்** பூஜை செய் என்று கூறினாள்.

அங்ஙனமே அவர் தவம்செய்யும் பொழுது தாருகாசுரனிடம் பயந்த தேவரனைவரும் சிவனைச் சரணமடைந்தார்கள். சிவன் தனது கழுத்திலிருந்து காளியைப் படைத்து அனுப்பினார். அவள் தாருகனையும் மற்றுமுள்ளோர்களையும் பக்ஷித்து கோபமடங்காமல் அட்டகாசம் செய்துக் கொண்டிருந்தாள். மறுபடியும் வானவர்கள் சிவனைச் சரணமடைந்தார்கள். அவர் ஓர் குழந்தை உருவமெடுத்து காளியின் அருகே சென்றார். குழந்தையின் அழகைக்கண்டு காளி அவரை மார்போடு அணைத்துப் பால் அளித்தாள். பரமசிவன் பாலுடன் அவளது சினத்தையும் அருந்தினார். பகவான் தன் நிஜ உருவை எடுக்கும்

பொழுது மறுபடியும் காளி அட்டகாஸம் செய்தாள். என் செய்வோமென்றஞ்சினர்கள். தேவர்கள் பகவான் நீங்கள் அஞ்சவேண்டாம்! என்னைப்போல், அறுபத்தி நான்கு குழந்தைகளைப் படைக்கிறேன். க்ஷேத்ரபாலர் எனும் அவர்கள் காளியின் கோபத்தை அடக்குவது மாத்திரமல்லாமல் ஒவ்வொரு க்ஷேத்ரத்தையும் நன்கு காப்பாற்றுவார்கள் என்றுஅறுபத்துநான்கு பாலக்ஷேத்ர பாலர்களைப் படைத்தார். அவர்களுக்கு அரிசியுடன் மொச்சைக் கொட்டையை நிவேதனம் செய்து பூசிக்க வேண்டும். அவர்களை அனுசரித்து காளியும் 64 சக்தி களைப் படைத்தாள். அதில் ஒருவள் விஜயன் எனும் அந்தணரின் எதிரில் வந்து அழ ஆரம்பித்தாள். அவருக்கு நண்பனை பர்பரீகன் அச்சக்தியின் அருகே வந்து அவளை ஜெயித்து விஜயனுக்கு சித்தி உண்டாகும்படிச் செய்தான்.

ஸித்தி பெற்ற விஜயன் தேவலோகம் செல்லும் பொழுது பர்பரீகனைஅழைத்து உனது ஸகாயத்தினுல் சித்தி பெற்றேன். நான் ஹோமம் செய்த இடத்தில் உள்ள சிவப்பான பஸ்மாவை நீ எடுத்துக் கொள். போரில் அதை முதலில் பிரயோகம் செய்தால் நீ எங் கும் வெற்றி பெறுவாய்! என்று கூறினர். பர்பரீகன் உபகாரம் செய்த உம்மிடமிருந்து எதையும் யான் பெற மாட்டேன். இதை வேறு எவருக்கேனும் அளியுங்கள் என்று கூறினன். தேவர்கள் பர்பரீகா! பாண்டவர்களுக்கு கௌரவர்களுடன் போர் நிகழப் போகின்றது. அச்சம யம் இது உனக்கு பேர் உதவியாக இருக்கலாம். இதை நீ ஏற்றுகொள் என்று கூறினர்கள். அதை ஏற்று பர் பரீகன் தேவியினிடம் அபரிமிதமான பக்தி கொண்டு தேவி கூறியபடி தேவீ குண்டம் எனும் தீர்த்தத்தைக் காவல் புரிந்து வந்தான். அச்சமயம் கௌரவர்களோடு சூதாடி ராஜ்யத்தை இழந்து வனவாஸம் செய்கின்ற பாண்டவர்கள் தற்செயலாக அங்கு சென்றனர். கிங்கரி களுடன்கூட பர்பரீகன் தேவீ குண்டத்தின் அருகே அமர்ந்திருந்தான். தாகம்கொண்ட பீமன் அந்த குண்டத் தில் இறங்கி தீர்த்தமருந்த ஆரம்பித்தான். தர்மராஜன் பீம! முதலில் பாத்திரத்திஞல் நீரை எடுத்து கால் கழுவி ஆசமனம் செய்து தலையில் தளித்துக்கொண்டு

பிறகு காலை வை. இல்லையேல் பெரும் தீங்கு ஏற்படும் என்றார்.

அதைக் கேளாமல் தாகத்தினால் குண்டத்தில் இறங்கி கரங்களைக் கழுவினான். அவரை இன்னாரென்று அறியாமல் பர்பரீகன் காலை அலம்பாமல் இக் குண்டத்தில் இறங்கும் நீ யார்? தேவிக்கு உபயோகமான இப்புண்ய தீர்த்தத்தைக் கால் அசுத்தத்தினால் கெடுக்கின்றாய்! வெளியே செல்! என்றான். தாகம் அதிகமானதால் அவன் வார்த்தையையும் அலக்ஷியம் செய்து ஜலத்தில் இறங்கி தீர்த்த மருந்தினான் பீமன். கோபங்கொண்டு பர்பரீகன் பீமனோடு போர்புரியத் துவக்கினான். இருவரும் மிக பயங்கரமாகப் போர் புரிந்தனர். பர்பரீகனிடம் அடிபட்டு பீமன் மூர்ச்சையாகி கீழே விழுந்தான். அவரைக் கடலில் தூக்கி எறிவதற்காகத் தூக்கிச் சென்றான் பர்பரீகன். தற்செயலாய் விருஷபாரூடராகச் சென்ற சிவன் இதைக் கண்டு பர்பரீக! உனது தந்தையின் தந்தை இவர். பீமஸேனன் எனப் பிரசித்தி பெற்றவர். அவரைக் கடலில் கொண்டு எறிவது பாபமாகும் என்றார். இதைக் கேட்டுத் திடுக்கிட்ட பர்பரீகன் இத்தகைய மாபாபத்தைச் செய்த யான் இனி உலகில் வசிக்க விரும்பவில்லை! ஆதலால் எனது சிரஸ்ஸை தேவிக்குப் பலியாகத் தருகிறேன்! என்று தன் தலையை அறுக்க ஆரம்பித்தான். ருத்ரன் அதைத் தடுத்து! இப்பொழுது உனக்கு மரணமில்லை! கிருஷ்ணனால்தான் மரணமுண்டாகும்! தெரியாமல் செய்த குற்றத்திற்காக நீ உயிரை விடவேண்டாம். அப்பாபமகல நீயும் தேவிகுண்டத்தை அசுத்தம்செய்த பீமனும் ஒரு லிங்கப் பிரதிஷ்டை செய்யுங்கள் எனக்கூறி மறைந்தார்.

தனது புத்திரனின் புத்திரன் இவன் என்றுணர்ந்து பீமன் மூர்ச்சை தெளிந்து எழுந்தபின் பர்பரீகனை மிக மிகக் கொண்டாடி அவனை ஆலிங்கனம் செய்துகொண்டான். இவ் விருத்தாந்தத்தை அறிந்த தருமராஜன் வியப்பை யடைந்து தேவிக்குச் செய்த அபசாரத்தை மன்னிக்கும்படி அவளது திருவடியில் சரண்புகுவோமென்றார். இதைக் கேட்டு நகைத்த பீமன், அண்ணா! ஜடப் பிரகிருதியான கேவலம் ஒருஸ்திரீயையா வீரன் சரணம்

அடைவது? பிராணனே போனாலும் நான் பெண்ணின் காலில் விழமாட்டேன்! என்றான். அன்றியும் ஜராஸந்தன், பகன், இடும்பன் முதலிய மகா வீரர்களைக்கொன்ற நானோ பெண்ணைச் சரணமடைவேன்? என்று மறுத்தான். அடுத்த நிமிஷத்தில் பீமனிடமிருந்த வீர்யமகன்று நடக்கக் கூடச் சக்தி இல்லாமல் தடுமாறி கீழே விழுந்தான். இரு கண்களுமவிந்தன. இதைக் கண்டு தர்மராஜன் சக்தி வடிவமான தேவியைத் துதித்தாலன்றி உனக்கு சக்தி உண்டாகாது! ஆகவே அவளைத் தோத்திரம் செய் என்றார். அண்ணா! இதை யான் முன்னமே அறிவேன்! ஆனாலும் இதை நிச்சயம் செய்துகொள்வதற்காக அங்ஙனம் கூறினேன்! எனக்கூறி தேவியைத் துதித்தான். தேவி எதிரில் தோன்றி இரு கண்களுடன் மூன்றாவதான ஞானக்கண்ணையும் தந்தாள் பீமனுக்கு.

தத்வமுணர்ந்த பீமன் பன்முறை தேவியைப் பணிந்தான். கௌரவர்கள் பாண்டவர்களை வெல்ல யார் யாருக்கு எவ்வளவு சக்தி இருக்கின்றது என்றும், எத்தனை நாளில் யார் யார் ஜயிப்பார் என்றும் திட்டமிட்ட விஷயம் பாண்டவர்களுக் கெட்டியது. கிருபரும், பீஷ்மரும் ஒரு மாதத்திற்குள் பகைவர்களைக் கொல்லுவதாகக் கூறினார்கள். துரோணர் பதினைந்து நாள் என்றும், அச்வத்தாமா பத்து நாளென்றும், கர்ணன் ஆறு நாளில் ஜயிப்பேன் என்றும் கூறினார்கள். இதைக் கேட்டு அர்ஜுநன் ஒரே நாளில் கௌரவர்களைக் கொல்வதாகக் கூறினான். பர்பரீகன் எழுந்து ஒரே முஹூர்த்தத்தில் தேவியளித்த கத்தியினால் பீஷ்மர் முதலிய அனைவரையும் கொல்வேன் என்றான். இதைக் கேட்ட அர்ஜுநன் வெட்கமடைந்து கிருஷ்ணனைக் கடைக் கண்ணால் நோக்கினான். அதைக் கண்டு கிருஷ்ணன் அர்ஜுந! பந்தொன்பதுகோடி ராக்ஷஸர்களை ஒரு க்ஷணத்தில் கொன்றவனிவன், என்று கூறி எந்த உபாயத்தினால் கொல்வாய் என்று பர்பரீகனைக் கேட்டார். அதை நிதர்சனமாகக் காட்டு என பகவான் கூறியபடி பர்பரீகன் விஜயன் எனும் பிராம்மணனளித்த சிவந்த பஸ்மாவை நாண் கயிற்றில் வைத்து இழுத்து விட்டான். அது துரியோதனனது துடையிலும் சல்யனது மார்பிலும் சகுனியின் கழுத்திலும் பகதத்தன் கழுத்திலும் கிருஷ்ணனது உள்ளங்காலிலும் துருபதன், மத்ஸ்யன் இவர்களது

கழுத்திலும் சிகண்டியின் இடுப்பிலும் விழுந்தது. பாண்டவர், கிருபர், அச்வத்தாமா இவர்களைத் தவிர பாண்டவ கௌரவ சேனை அனைவர் மீதும் விழுந்தது. அந்தந்த மர்மஸ்தானத்தில் அடித்தால் தான் அவரவர்கள் இறப்பார்கள். இதை உணர்ந்த கிருஷ்ணன் என்னசெய்வதென்று யோசித்துக்கொண்டிருக்கும் பொழுது பர்பரீகன் பாண்டவர்களைப் பார்த்து நீங்கள் அஸ்த்ரம் எடுக்கவேண்டாம். ஒரு முஹூர்த்தத்தில் நான் கௌரவர்களைக் கொல்லாவிடில் நரகம் செல்வேன் என்று சபதம் செய்தான்.

இதைக் கேட்டு கோபம்கொண்ட கிருஷ்ணன் சக்ரத்தினால் அவன் சிரத்தை அறுத்துத் தள்ளினார். உடனே சித்தாம்பிகா முதலிய பதினான்கு தேவிகளும் ஓடிவந்து வருந்தி பாண்டவர்களைப் பார்த்து கூறினார்கள்: அரசர்களே! ஒரு ஸமயம் மேருமலையின் சிகரத்தில் தேவரனைவரும் ஒன்று கூடினர். அங்குவந்து பூதேவி தன் பாரத்தைக் குறைக்க வேண்டுமென பிரம்மாவிடத்தில் பிரார்த்தித்தாள். மஹாவிஷ்ணுவைச் சரணமடைவோம் என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது சூர்யவர்ச்சஸ் என்ற யக்ஷேந்திரன் ஏன் நீங்கள் வருந்துகின்றீர்கள்? பகவான் தான் ஏன் அவதரிக்க வேண்டும்? நான் பூமியில் சென்று துஷ்டர்களைக் கொன்று பாரத்தைக் குறைக்கின்றேன் என்றான். அதனால் கோபங்கொண்ட பிரம்மா நீ பூமியில் அரக்கனாய்ப் பிறப்பாய். பூபாரத்தைக் குறைக்க வரும் கிருஷ்ணனே உன்னைக் கொல்வார் என்று சாபமளித்தார். சூர்யவர்ச்சஸ் என்பவனே பர்பரீகனாகப் பிறந்து கிருஷ்ணனால் கொல்லப்பட்டான் என்று கூறி அவன் தலையை அமிருதத்தினால் புரோக்ஷித்து உயிருள்ளதாகச் செய்தார்கள். அவனது உடல் விதிப்படி எரிக்கப் பட்டது. அந்த தலையே பாண்டவ, கௌரவ யுத்தத்தைக் குதூஹலமாகப் பார்த்துக்கொண்டிருந்தது.

பாரதயுத்தம் முடிந்தபின் தர்மராஜன் கிருஷ்ணனை நோக்கி நீ தான் சத்ருக்களைக் கொன்றாய் என்று துதித்தான். அதைக் கேட்டு பீமன், ஆயுதம் எடுக்காத கிருஷ்ணனா கௌரவர்களைக் கொன்றார்? இந்த புஜமன்றோ கௌரவர்களில் நூறுபேரையும் கொன்றது! என்றான்.

பகவான், நீயும் நானும் பகைவர்களைக் கொல்லவில்லை. யார் கொன்றது? என்று உன்னை மூர்ச்சையாக்கிய பர்பரீகன் தலையைக் கேள் என்றார். ஒரே புருஷன் இடது புறம் ஐந்து தலையும் பத்து கைகளுடனும் வலது புறம் ஒரு முகம் நான்கு கைகளுடனும் இடதுபுறம் ஜடை, பஸ்ம, சந்திரன் முதலியனவும் தென்புறம் சங்க, சக்ரம், மகுடம், சந்தனம், கௌஸ்துபம் முதலியவைகளையும் தரித்தவனுமாக இருந்து போரில் அனைவரையும் வென்றான். ஹரிஹர வடிவமான அவ்வொருவனே உங்கள் வெற்றிக்குக் காரணமென்றது பர்பரீகன் தலை. இதைச் செவியுற்ற பீமன், சிவனிடம் பாசுபதம் பெற்றவனும் பகவானைச் சாரதியாகக் கொண்டவனுமான அர்ஜுனனே ஹரிஹர வடிவமாகத் தோன்றினான் போலும் என்று கிருஷ்ணனுடைய திருவடியில் வணங்கி தனது அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டினான். கிருஷ்ணன் பீமனைக் கருடன் மீதேற்றி இருவருமாக இலங்கைக் கருகே சென்றார்கள். அங்கு பன்னிரண்டு யோஜனை தூரம் விசாலமாயுள்ள ஸரஸ்ஸைக் காட்டி வீரனை நீ இதனருகிலிருந்து சிறிது மண்ணை எடுத்துவா என்றார். பீமன் பர்வதம்போலமைந்த மண்ணைச் சிறிது தோண்டி எடுக்க முயற்சித்தான். சிறிதளவும் எடுக்க முடியாததுடன் பல பூதங்கள் ஓடிவந்து இவனைப் பக்ஷிக்க ஆரம்பித்தன. இதைக் கண்டு நடுங்கின பீமன் கிருஷ்ணனைச் சரணமடைந்து இது என்ன ஆச்சர்ய மென்று வினவினான்.

இது ராமனால் அடித்துக் கொல்லப்பட்ட கும்பகர்ணனுடைய தலை. அது மண்மேடிட்டு மண்ணாக இருக்கிறது. பாரத யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் ராக்ஷஸவடிவமாக ஆகி உன்னைப் பக்ஷிக்க வந்தார்கள் எனக்கூறி ஹஸ்தினபுரத்திற்கு திரும்பினார். பீமன் கர்வமகன்றது. பர்பரீகனுடைய சிரஸ் பகவானை வணங்கி, பீமனிடம் விடைபெற்று மஹீஸாகர ஸங்கமத்திற்குச் சென்றது. இதுபோன்ற பற்பல அரிய சரிதங்கள் இதில் இருக்கின்றன. பானைக்கு ஓர் அரிசி பதம் பார்ப்பது என்ற நியாயத்தைத்தழுவி மாஹேச்வர கண்டத்திற்கு ஓர் கதை எழுதினோம்.

2. வைஷ்ணவ கண்டம்.

சிற்சில அரிய விஷயங்கள்.

இதில் பேதமில்லாமல் சிவ விஷ்ணு ஸ்வரூபம் வர்ணிக்கப்படுகின்றது. வேங்கடாசல மாகாத்மியம் என்பதில் அருணாசலம், ஹஸ்திகிரி என்ற காஞ்சி வரதராஜனின் ஸன்னதி, வேதகிரி அல்லது திருக்கழுக்குன்றம், தணிகாசலம் என்ற திருத்தணிகை முதலிய க்ஷேத்ரங்களை வர்ணிக்கும் பொழுது சிவன், விஷ்ணு, சுப்ரமண்யன் என்ற மூவரையும் ஸமமாக வர்ணிக்கின்றார். வேங்கடாசலம் அல்லது திருப்பதியில் இரண்டு நாழிகை நேரம் தியானம் செய்தால் நமது குலம் இருபத்தோறு தலைமுறை நற்கதிபெறும்.

இங்கு சகுனங்களைப் பார்த்துக் குறி சொல்வது என்பதும், அதிலும் விசேஷமாக சில ஜாதி ஸ்திரீகள் (குறத்திகள்) வேங்கடாசலபதிக்கும் பத்மாவதிக்கும் குறி சொன்னதாகவும் வர்ணிக்கப்படுகிறது. ரேணுகாதேவியின் க்ஷேத்ரமும் பரீக்ஷித் மகாராஜன் தக்ஷகனுக்குப் பயந்து கங்கையில் ஒத்தக்கால் மண்டபமமைத்து தங்கினதாகவும் வர்ணிக்கிறார் வியாஸர்.

மிகத்தாழ்ந்தவரால் பிரதிஷ்டை செய்த ஆலயத்தில் ஸேவிப்பது, ஸகோதரன் மனைவியுடன் சேருவது, நன்றி மறப்பது இவை மிகக் கொடிய பாபங்களாம். இவைகளுக்குப் பிராயச்சித்தமே இல்லை. தியானம், ஞானம், யோகம், யாகம், முதலியவைகளைச் செய்ய முடியாத இக்கலியில் புராணத்தைப் படிப்பதும் கேட்பதுமே முக்திக்குக் காரணமாம். புராணம் சொல்லுபவர் அது முடியும் வரை எழுந்திருக்கலாகாது. வேறு ஒருவரையும் அவர் நமஸ்கரிக்கலாகாது. பேசலாகாது.

ஒரே பகவான் ஸத்வரஜஸ் தமோ பேதங்களால் மும்மூர்த்திகளாக ஆகி உலகைப்படைத்துக் காத்துத் தனக்குள் லயப்படுத்திக் கொள்ளுகின்றார் என்ற விஷயத்தை பல முறைப் பலவகையாக வர்ணிக்கின்றார். இது ஓர் அரிய சுலோகம்.

सृजति विधिसमाख्यः राजसेनात्मनासौ - वहतिहरिसमाख्यः सत्वनिष्ठः प्रपञ्चं । हरति हरसमाख्यः तामसीं एत्य वृत्तिं- मधुमदनमहिम्नां अस्तिवेत्ता नकोपि ॥

நரசிம்ஹனைத் துதிக்கும்பொழுது மூன்று கண்களை உடையவன் என்று வர்ணிக்கின்றார். ஆகமங்களிலும் மாலை வேளையில் ராமனையும் நரசிம்ஹனையும் தவிர மற்ற விஷ்ணு ஸன்னதியைத் தரிசிக்கக்கூடாது என்று விதியுள்ளது.

உக்ரம்த்ரிணேத்ரம் தைத்யஸ்ய—ஸ்வெளரெள உத்தாந சாயிந: |
வக்ஷஸ் ஸ்தலம் தாரயந்தம்—நகைரர் வஜ்ர தாருணை: ||

ச்யாமளா தண்டகம், ரகுவீரகத்யம், முதலிய வசன நடையில் ஏற்பட்ட ஸ்தோத்ரங்களுக்கும் வழிகாட்டியது புராணமே. இங்கு நாரதர் பகவானை "ஜய ஜய நாராயண அபார பவஸாகர உத்தார பராயண என்று ஆரம்பித்து 'நகஸ்யாபி ஞான கோசர நமஸ்தே நமஸ்தே" என்று கத்யரூபமாக முடிக்கின்றார். அங்ஙனமே கருடன் பகவானைக் கத்யரூபமாக ஒரு ஸ்தோத்திரத்தினால் துதிக்கின்றார்.

கந்தர்வர்கள் பகவானது பெருமையைக் கூறும் பொழுது கந்தர்வ கானத்திற்கும் நாட்டியத்திற்கும் ஏற்ற படித் துதித்தார்கள். அழகிய விருத்தத்தில் அமைந்த சுலோகம் இது.

पिबन्तियेहरेः पदांबु संगलेशतः - पयः पयोनते पुनः पुनः पिबंति मातुरंकतः । प्रसंगतोयदाभिधासुधां निपीय मानवाः - मृता मृतं व्रजन्त्यधो नजातु यांत्यशङ्किताः ॥

பிபந்தியே ஹரே: பதாம்பு ஸங்கலேயத: பய:—
பயோநதேபுந: புந: பிபந்தி மாதுரங்கத: |
ப்ரஸங்கதோயதாபிதா ஸுதாம்நிபீய மாநவா:
மிருதாமிருதம் வ்ரஜந்த்யதோ நஜாதுயாந்த்ய சங்கிதா: ||

கருத்து:- மஹா விஷ்ணுவினுடைய அபிஷேக தீர்த்தத்தை அல்லது கங்கா ஜலத்தை ஓர் துளி அருந்தினாலும்

தாயினுடைய மடியில் படுத்துத் தாய்ப்பாலே அடிக்கடி சாப்பிடமாட்டார்கள். இந்த பகவானுடைய நாமாமிருதத்தை ஏதேனும் ஒரு வியாஜத்தினுல் கூறினுலும் பயமின்றி தேவர்களாகி மறுபடி கீழே இறங்காமல் வாழ்வார்கள் என்று கந்தர்வர்கள் கானம் செய்கின்றூர்கள்.

சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி இரண்டையும்கூறி இரண்டையும் ஸமமாகப் பூஜைசெய்யும்படி உபதேசிக்கின்றூர். கலி பிறந்து பத்தாயிரமாண்டுக்குப்பின் விக்ரஹங்களிலிருந்து **பகவான் மறைந்து விடுவார்.** ஐயாயிரமாண்டுகளான பின் **கங்காதேவி** பூமியை விட்டுச் செல்வாள். அதாவது நமது பாபங்களை போக்கடிக்கக்கூடிய சக்தி கங்கா ஜலத்திற்கு இராது. இரண்டாயிரம் வருஷத்திற்கு பிறகு கிராம தேவதைகள் பூமியைவிட்டுச்செல்வார்கள். பேய்கள் நோய்களாகும்.

கைலாஸ நாதன் **சங்கராசார்யர்** என்ற ஸன்யாஸி ரூபத்தோடு பூமியில் அவதரித்து ஞானம், வைராக்யம், பக்தி, கர்மா முதலியவைகளைப் பிரசாரம் செய்வதாக கூறுகின்றூர். "பெண்கள் எவ்வளவு நேரம் **குங்குமம்** அணியாமல் இருக்கின்றூர்களோ அவ்வளவு நேரம் புருஷனின் **ஆயுள் குறைகின்றது.**

கார்த்திகை மாதம் லக்ஷம் முறை அச்வத்த பிரதக்ஷிணம் செய்தால் மலடியாகக் கூடிய எத்தகைய பாபங்களைச் செய்திருந்தாலும் அவைகளை அகற்றி ஸத்புத்ரனை உண்டுபண்ணும். நரக சதுர்தசி அல்லது தீபாவளி ஸ்நானம் கங்கா ஸ்நான பலனைத்தருமாதலால் ஸன்னியாஸிகளும் விதவைகளும் ஆசை அற்றவர்களும் கூட எண்ணெய் ஸ்நானம் செய்யவேண்டும். இல்லையேல் நரகம் அடைவார்கள். (இது திபாவாளி தைலஸ்நானத்தின் பெருமையை விளக்கவந்த சொல் என்று நம் நாட்டில் விதவைகளும் ஸன்னியாஸிகளும் தைலஸ்நானம் செய்வதில்லை.)

கார்த்திகை பௌர்ணிமியில் மகாபலி சக்ரவர்த்தி வாமனருக்கு ராஜ்யத்தை அளித்தான். அதைக் கொண்டாட குழந்தைகள் கார்த்தி சுத்துவது என்ற விளையாட்டின் மூலம் அந்த தினத்தைக் கொண்டாட

வேண்டும். பெண்கள் எண்ணெய் தேய்த்துக்கொள்ள வேண்டும். அரசர்கள் மல்லயுத்தம், விருஷபயுத்தம், முதலியவைகளுடன் மூன்று நாளாவது அதைக்கொண் டாடவேண்டும். (பலியினிடமிருந்து பெற்ற சுவர்க்க ராஜ்யத்தைத் தேவர்கள் அக்னியினுல் சுத்தம் செய்தார்கள். அந்த அக்னி நாற்புறமும் பொரி பொரி யாக எரிந்து விழுந்தது அந்த ஐதிகத்தை காட்ட) விஷ்ணு கார்த்தி அன்று விஷ்ணு ஆலயத்தின் எதிரில் சொக்கபானை என்ற முறை கொண்டாடப்படுகின்றது. சிறுவர்கள் தீ பொரிப் பொரியாக விழும்படி கார்த்தி என்பதை ஆடுவார்கள். அச்சமயம் "கார்த்தியோ, கார்த்தி, மாவலியோ, மாவலி, (மகாபலியோ, மகாபலி) மாவலிக்காரன் பெண்டாட்டி மரக்கா பிள்ளை பெத்தா ளாம்" என்பது போன்ற சில கிராமிய பாட்டுக்களைப் பாடுவார்கள். இவை மகாபலி சக்ரவர்த்தியின் கதையை நினைவூட்ட அந்த நாளிலிருந்து கொண்டாடப்படுகிறது. இது புராண ஸம்பந்தமான ஆசாரமாம்.

கோவர்த்தன பர்வதத்தைத்தூக்கி கோக்களைக்காத்த ஸங்க்ராந்தி காலத்தில் காளைப்பந்தயம், பசுக்களை விரட்டு வது, கயிற்றை ஒருபுரம் ஒருசாராரும் மற்றொருபக்கம் மற்றொரு சாராரும் இழுப்பதுபோன்ற பந்தயங்கள் முதலியவைகளை நடத்தவேண்டுமென வர்ணிக்கின்றார்.

கிருதயுக ஆரம்பதினத்தில் கூச்மாண்டன் எனும் ஓர் அசுரன் தோன்றி உலகிற்குத் தீங்கு இழைத்து வந் தான். பரிபாலன கர்த்தாவான மஹாவிஷ்ணு அவனைக் கொன்றார். அவனது ரோமங்களிலிருந்து கூச்மாண்டம் என்ற கொடிகள் உண்டாகி காய்களும் தோன்றின. அத்தகைய கூச்மாண்டத்தைத் தக்ஷிணையுடன் தானம் செய்வோமாஞல் நமது அரிஷ்டங்கள் அகலும். ராக்ஷஸ னிடமிருந்து உண்டான பூசனிக்காயை புதிய கட்டடங் களில் கட்டித் தொங்கவிட்டால் அவ்விட்டில் உள்ள துஷ்ட பூதப்ரேத பிசாசங்கள் அதனிடம் பூர்ணமாக குடிகொள் ளும். பிறகு அதைத் தெருவில் உடைத்துவிட்டால் அவை கள் வீட்டை விட்டு தெருவில் சென்றுவிடும் என்று இப்புராணத்தில் கண்ட முறை இன்னும் சிலவிடங்களில் கொண்டாடப்படுகின்றது.

தசாங்கம்;- 1 ஜாதீ புஷ்பம், 2 ஏலக்காய், 3 குக்குலு, (குங்கலியம்,) 4 ஹரிதகீ (கடுக்காய்) 5 கூட. 6 ஸர்ஜரஸ, 7 குல, 8 ஸைலா, 9 சட, 10 நக. இப்பத்துக்களையும் சேர்த்து செய்யும் தூபம் பூதப்ரேத பிசாசங்களை அகற்றுவதுடன் துஷ்க்ருமிகளையும் அகற்றும். [இதிலுள்ள ஸம்ஸ்கிருதத்திற்குச் சரியானபடி தமிழ் தெரியாததால் அப்படியே அதை எழுதினோம். ஆயுர்வேத வைத்தியர்களின் மூலம் அதைத்தெரிந்து செய்வது நலம்].

பாகவத மகிமை.

பாகவத கிரந்தத்தை எடுத்து வரும்பொழுது எழுந்து நின்று மரியாதைசெய்யாமல் உட்கார்ந்திருந்தால் ஓராண்டு செய்த புண்யமகன்றுவிடும். ஸப்தாஹம் என்பது பாராயணம் பூஜை முதலியவைகளுக்கே சிறந்ததாகும். ஏழு நாட்களில் கேழ்ப்பது ராஜஸமாகும். பரீக்ஷித் அரசனுக்கு ஆயுள் ஏழே நாளாக இருந்ததால் அவன் ஏழு நாட்களில் கேட்டான். ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் கேழ்ப்பது ஸாத்விக சிரவணமாகும். ஓராண்டில் கேழ்ப்பதும், நியமமில்லாமல் கேழ்ப்பதும் தாமஸ சிரவணமாகும். பாகவதம் சொல்பவரும் கேழ்ப்பவரும் கிருஷ்ணார்த்தி, தனார்த்தி என இருவகைப்படுவர். பொருளை விரும்பாமல் கிருஷ்ண அருளையே விரும்புவர் கிருஷ்ணார்த்தி ஆவர். பொருளை விரும்புபவர் தனார்த்தியாவர். கிருஷ்ணார்த்திக்குப் பிரேமபக்தியே முக்யமான நியமமாகும். தனார்த்தி ஆசாரத்துடன் நித்ய கர்மாக்களை முடித்து புஸ்தகத்தையும் குருவையும் விதிப்படி பூஜை செய்து மௌனமாக கேழ்க்க வேண்டும். பால் பழம், அல்லது உப்பு, புளி, காரம் இல்லாத அன்னம் இவைகளைப் புசித்து முதலில் ஸாளக்கிராம தீர்த்தத்தை அருந்தி கேழ்க்கவேண்டும். முடியும்வரை காமக்ரோதங்களை விட்டு பிரும்மசர்ய நியமத்துடனிருந்து முடிவன்று இரவு கண்விழித்து மறுநாள் பிராம்மண போஜனம் செய்விக்கவேண்டும். இந்த நியமத்துடன் இருந்தால்தான் பொருள் கிட்டும். கண் விழிக்கும் காலத்தில் விஷ்ணு ஸகஸ்ரநாம பாராயணம் செய்யவேண்டும்.

பகவன் நாமாவைக் கூறாத நாக்கு பாபக்கொடியாம். புராணத்தைக் கேழ்ப்பதால் நற்கதி உண்டாகும் என்பதற்கு உதாரணமாக ஓர் ஆலமரம் புராண சிரவணத்தினால் திவ்ய ரூபமடைந்த கதையை வர்ணிக்கிறார். எண்பத்து மூன்றாவது வயதில் ஆயிரம் பூர்ணிமா சந்திரனைக் காண்கின்றோம். ஆனதால் **சதாபிஷேகம்** என்ற பெயருடன் பதினாறு கலசங்கள் வைத்து ஜபித்து அபிஷேகம் செய்துகொள்ள வேண்டும். ரகுவம்சத்தில் காணப்படும் கௌத்ஸனது கதை இங்கு விரிவாகக் கூறப்படுகிறது.

3. பிரும்ம கண்டம்.

சில அரிய விஷயங்கள்.

பூர்வபக்ஷமெனும் முதலை ஸித்தாந்தமெனும் திமிங்கிலம் நிறைந்த வேதாந்தக் கடலில் அநுபவ க்ஞானமின்றி வாதமிடும் சிலர் முழுகி மோஹமடைகின்றனர்.

குதிரை இல்லாத வண்டிபோலாகும் தக்ஷிணை தராத கர்மா. மஹ எனில் கல்யாணம். ஆலயம் எனில் வீடு. ஸகல விதமான மங்களங்களையும் அளிப்பதால் மஹாலயம் என்று பெயர் உண்டானது.

தன் தாயைத்தவிர மற்ற **விதவைகளுக்கு** நமஸ்காரம் செய்யக் கூடாது.

விஷ்ணுவைவிடச் சிறந்த சிவபக்தனில்லை.

தம்பதிகளைச் சேரவிடாமல் கலைக்கும் ஸ்த்ரீ இருபத்தோரு தலைமுறை பாலவிதவை யாவாள். அத்தகைய புருஷன் பல தலைமுறை பல மனைவிகளை இழப்பான்.

ஸ்ரீராமனுக்கு விவாஹமாகும்போது வயது பதினைந்து. ஸீதாதேவிக்கு ஐந்து வயது. எழுபத்திரண்டு நாட்கள் ராம ராவண யுத்தம் நடந்தன. நானூற்றுநான்கு கிராமங்களை ஸ்ரீ ராமன் பிராம்மணர்களுக்கு ஸர்வமான்யமாகத் தந்தார்.

புராணம் கேட்டபின் எல்லோரும் சேர்ந்து "ஜய கிருஷ்ண ஜகன்நாத ஹரே" என கையால் தாளம் போட்டுக் கூறவேண்டும்.

சிவயோகி அல்லது பத்ராயு சரிதம்.

அடியார் பெருமை ! ஈச்வரன் கருணை ! சிவபக்தியின் மேன்மை முதலியவைகளை ஒருமிக்க விளக்கும் கதை. அவந்தி தேசத்திலே மந்திரன் என்றோர் வேதியன் இருந்தான். வேதியர் குலத்தில் உதித்ததால்தான் வேதியன் எனப் பெயர் உண்டானது. நீசரும் செய்யாத பல பாபங்களைச் செய்தான். பிங்களை எனும் வேசிக்கு அடிமையாகித் திருடுவான், மது மாம்ஸம் அருந்துவான். தாசி வீடே கதி. ஒரு நாள் ரிஷபர் எனும் சிவயோகி தாசி வீட்டு வழியாக வந்தார். களைத்து வந்த யோகியைப் பிங்களை அவருக்கேற்ற உணவளித்து நடையால் களைத்த அவர் கால்களைப் பிடித்து உபசாரம் செய்தாள். அவர்கள் யார் என உணர்ந்த யோகி களைப்பு தீர்ந்தவுடன் அங்கிருந்து கிளம்பிவிட்டார். வேதியனும் வேசியும் காலகதி அடைந்தார்கள்.

சிவயோகியை உபசரித்த புண்யத்தால் மந்தரன் தாசார்ண தேசாதிபதியான வஜ்ரபாகுவின் மூத்த மனைவியின் கர்ப்பத்தில் கருவானான். இவளது பூர்வகர்ம வினையால் மற்ற ராஜபத்னிகள் பொறாமைகொண்டு கர்ப்பிணியான மூத்தவளுக்குப் பாலுடன் விஷத்தை அளித்தனர். அவ் விஷம் அவளையும் கருவையும் கொல்லாமல், சிறங்கு சொறி முதலிய நோயை உண்டுபண்ணிற்று. நோயுடன் பிறந்த குழந்தையைக் கண்டு மன்னன் வருந்தினான். வேண்டிய அளவு மந்த்ர தந்த்ர சிகித்ஸைகளைச் செய்து பார்த்தான். நாளுக்குநாள் இருவர்க்கும் நோய் வளர்ந்தது. வெறுப்புகொண்ட வேந்தன் அவர்களை அரண்யத்தில் கொண்டு விட்டுவந்தான். பேய் பிசாசுகள் புலி கரடி பாம்பு தேள் முதலியவை நடமாடும் வநாந்தரத்திலே தவித்தாள் ராணி.

யாருக்கு என்ன வினை செய்தேனோ என ஏங்கி குழந்தையைத் தோளில் சாற்றிக்கொண்டு காட்டைத் தாண்டிச் சென்றாள். நோய் ஒருபுறம். நோய்வாய்ப்பட்டு அழும் சேய் ஒருபுறம். கால்வலி ஒருபுறம். பசி தாஹம் ஒரு புறம். கட்டிய கணவன் கைவிட்டாரே என்ற ஏக்கம் ஒரு புறம். ஒரு க்ஷணம் செல்வது ஒரு யுகம்போலிருந்தது.

கண்ணீரும் கம்பலையுமாகக் கதறிக்கொண்டே வழி நடந்தாள். பதுமாகரன் என்ற வைச்யனது நகரத்தை அடைந்தாள். இவள் நிலையைக்கண்டு சரிதத்தைக் கேட்டு மனம் இளகிய வைச்யன் தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். வேண்டிய வைத்யம் செய்தான். மருந்து நோயுக்கு உறம்போலானது. தாய் மடியில் படுத்து மெரள மெரள விழித்துக்கொண்டு நோய் பாதையால் வீலிட்டு குழந்தை உயிரை விட்டது.

கதறினாள் ராஜபத்நி! உன்னை நம்பி அல்லவோ உயிர்வைத்திருக்கிறேன். மற்ற கஷ்டங்களை மறந்தேன். உன்னைக் கொண்டு துக்கக் கடலிலிருந்து கரை ஏறக் கருதினேனே! என்னை நட்டாற்றில் விட்டுவிட்டாயே! ஆ! எங்கு செல்வேன்? என் செய்வேன்? ஹா! தெய்வமே! இப்பாவி உமக்குக் கூட பிடிக்கவில்லையோ! இளங் குழந்தையை விட்டு என்னைக்கொண்டு செல்லலாகாதா? என மூர்ச்சித்து விழுந்தாள். வைச்யன் அழுதான்! ஊரெல்லாம் அழுதார்கள்! சிவ! சிவ! என்ற சப்தம் செவியில் நுழைந்தது. அனைவரும் அழுகையை நிறுத்தி எதிரே நோக்கினர்! சிவயோகமே! சிவபக்தியே உருவெடுத்ததுபோல் ஒரு உடல் தோன்றிற்று! எங்கும் ஒரே வெண்நீறு! அங்கமெலாம் ருத்ராக்ஷ மாலை! நாவு ஓயாமல் சிவநாமத்தை உச்சரிக்கின்றது! அவர் திருவடியே சரணமென எல்லோரும் வணங்கினர். சிறுவனுக்கு உயிர்பிச்சை அளிக்கும்படி வேண்டினர்.

உடல் நிலையாதது! நீர்மேல் குமிழி போன்றது! மின்னல் போன்றது உயிர்! எத்தனை உடலெடுத்தோம்? பிறப்பும் இறப்பும் ஆணலை பெண்ணலையாம்! என பல தத்வங்களைக் கூறினார். அவ்வளவும் சாம்பலில் செய்த ஹோமம் போலானது ராணியினிடம். தங்கள் எதிரிலே உயிரை விடுகிறேனென்றாள் அவள். முன் அவன் செய்த உபகாரத்தை நினைத்தார். அவனை எழுப்ப எண்ணினார். சிவ பஞ்சாக்ஷரியைக் கூறி அவன்மீது விபூதியைத் தெளித்தார். உறங்கி எழுந்தவன்போல் குழந்தை கண்ணைத் திறந்தான்! அவன் மீதிருந்த நோயும் சென்றவிடம் தெரியாமல் மறைந்தது! ராணியும், சொறி சிறங்கு அகன்று பழைய

ராஜபத்நியானுள். அவனது ஆயுள் பத்ரமாக (மங்களமாக) இருந்ததால் பத்ராயு என பெயரிட்டார்! விரைந்தார் யோகி!

பிங்களேயோ அடியாருக்கு ஆதரவு அளித்த புண்யத்தால் சந்த்ராங்கதன் எனும் வேந்தன் மனேவியான ஸீமந்தினியிடம் பெண்ணுகத் தோன்றினுள். சிவனடியாருக்கு உதவிய ஒருவனேக் காத்த புண்யத்தால் நீண்டநாள் புத்ரபாக்ய மில்லாத பத்மாகரனுக்கு ஓர் புத்ரன் பிறந்தான். பத்ராயுவும் ஸுநயன் எனும் வைச்யராஜ குமாரனும் அண்ணன் தம்பிபோல் பழகினர். ஒன்ருகவே விளேயாடுவர். வயதுவந்தவுடன் வைச்யன் அவரவர் வர்ணத்திற்கேற்ற வண்ணம் வைதிக கார்யங்களேச் செய்வித்தான். கல்வி கற்பித்தான். இருவர்களும் காளேப் பருவமடைந்தனர். சிவயோகி வந்தார். ராஜபத்நி அவரை வணங்கி அவர்களுக்கு நல்லுபதேசம் கூறும்படி வேண்டினுள்.

அரிய உபதேசம்.

வேதசாஸ்த்ர புராணங்கள் காட்டிய வர்ணுச்ரம தர்மங்களால் பகவானே ஆராதி. ஸன்மார்க்கத்தை விடாதே. ஸத்துக்களுடன் சேர். தேவ குரு மாதா பிதாக்கள் ஆக்ஞையை மீருதே. வந்த அதிதி எவராயினும் விருந்தளி. உயிருக்கு ஆபத்து வந்தாலும் ஸத்யத்தை விடாதே. கோபிராம்மணர்களேக்காக்க அஸத்யம் சொல்வதும் ஸத்யமாகும். பிறர்பொருள், மனேவி, தேவ பிராம்மணர் பொருள் இவைகளே இச்சிக்காதே. ஸத்கதை ஸதாசாரம் ஸத்விரதம் ஸத்ஸங்கம் தர்மம் இவைகளில் ஆசைகொள். ஸ்நாநம் ஜபம் ஹோமம் கல்வி சிராத்தம் தேவாதி பூஜை இவைகளில் சோம்பல் கூடாது.

வீண் துவேஷம் வீண்பேச்சு பர நிந்தை இவைகளே விடு. ஆஹாரம் கோபம் தூக்கம் பேச்சு விளேயாட்டு இவைகளில் அதி கூடாது. வித்யை சிரத்தை புண்யம் உத்ஸாஹம் கீர்த்தி தைர்யம் இவைகளில் அதிகயத்நம் செய். தன் மனேவியிடம் ஆசை, பகைவனிடம் கோபம், புண்யத்தில் லோபம், பாபிகளிடம் அஸூயை, நாஸ்திகனிடம் துவேஷம், ஸத்துக்களிடம் ஆசை இருக்கட்டும்.

துராலோசனையில் மூடனைக இரு. கோள் சொல்லும்போது செவிடனைக இரு. ஆத்மஸ்துதி செய்யாதே. குரு ஸ்துதி செய். பொருளிலும் குடும்பத்திலும் அதிக அன்பு வைக்காதே. இங்கிதமறிந்து நட. பெரியோர் சொல்லை மதி.

உன்னை முதலில் காப்பாற்று. அண்டியவரனைவரையும் ரக்ஷி. எவரிடமும் அதிக நம்பிக்கை வைக்காதே. எவரையும் நம்பாததாகக் காட்டாதே. அநாதைகளைக் காப்பாற்று. நம்பினவனைக் கெடுக்காதே. சத்ருவாயினும் சரணமடைந்தவனைக் கைவிடாதே. ஸத்பாத்ரத்தில் தாநம் செய். எவராயினும் கேட்டவருக் கில்லை என்று கூறுமல் தருவது சிறந்த தபஸ். அது கீர்த்தியையும் லக்ஷ்மியையும் உண்டுபண்ணும். தாநம் செய். தலையைக் கேட்டாலும் தயங்காதே. பெரியோர் கோபத்தையும் சிறுவர் பிராம்மணர் செய்த அபராதத்தையும் பொறு. பிராம்மணரை அவமதிக்காதே. அவரிடம் கல்வி ஆசாரமில்லாவிடினும் காயத்ரி எனும் தீ மறைந்திருக்கிறது. அவசரப்பட்டு ஒரு கார்யத்தைச் செய்யாதே. பேசாதே. இருமுறை யோசித்துச் செய். பேசு.

ஸ்நாநம் ஜபம் ஹோமம் தேவ பித்ருகார்யம் இவைகளை நிதாநமாகச் செய். நித்ரை உணவு இவைகளை விரைவாகச்செய். தர்மமான கோஷ்டி வித்யை இவைகளை விடாதே. பெண்களையும் தாஸிகளையும் பகைவர்களையும் நம்பாதே. இரு கரங்களிலும் ருத்ராக்ஷம் அணி. நெற்றியில் மூன்று ரேகையாக நீறு அணி. மந்த்ர ராஜமான பஞ்சாக்ஷரியை ஜபி. பசுபதியின் பாதாரவிந்தத்தில் அன்புகொள். தியாகம் செய்.

रुद्राक्ष कंकणलसत्कर दण्डयुग्मः । फालान्तराळ धृतभस्म सित त्रिपुण्ड्रः । पंचाक्षरं परिपठन्पर मन्त्रराजं ध्यायन्सदा पशुपते श्चरणं रमेथाः ॥

என சுருக்கமாகக்கூறி உலகம் போற்றும் சிவகவசமெனும் மகா மந்த்ரத்தை உபதேசித்தார். சிவயோகி சங்கம் கத்தி விபூதி இவைகளைப் பத்ராயுவுக்களித்தார். பன்னிரு ஆயிரம் ஸேனை பலமளித்தார். விரைவில் தந்தை ஸிம்மாஸனத்தில் ஏறுவாய் என ஆசீர்வதித்துச் சென்றூர். இதே சிவகவசமாம்.

பத்ராயுவின் தந்தையான வஜ்ரபாகுவின் மீது விதர்ப்ப நாட்டரசன் ஹேமரதன் படை எடுத்து வந்தான். வஜ்ரபாகுவின் ஸேனையை முறியடித்து விதர்ப்பன் வெற்றி பெற்ருன். வஜ்ரபாகுவின் பொருளைக்கவர்ந்து அவனையும் கட்டிச் சிறையில் அடைத்தான். அவனது சிம்மாஸநத்தையும், ஏற்ருன். இதை அறிந்த பத்ராயு அன்னையையும் ஆசார்யனையும் வணங்கி சேனையுடன் கிளம்பினன். சிவயோகி தந்த சங்கத்தை ஊதினன். பகைவர் மூர்ச்சையாகி விழுந்தனர். அவர்தந்த கத்தியால் ஒன்பது அக்ஷௌஹிணீ சேனையை ஜயித்தான். சிவகவச மஹிமையாலும் விபூதியின் மஹிமையாலும் பகைவனைக் கட்டி தந்தையை விடுவித்தான். இவனது இளமை! அழகு! வீர்யம்! இவைகளைக்கண்டு இவன் தேவஸேநா பதியே! என கொண்டாடினர்.

பத்ராயுவால் விடுவிக்கப்பட்ட வஜ்ரபாகு அவனை மகன் என அறியான். ஆயினும் ரக்த பாசத்தினல் அவனிடம் அளவு கடந்த அன்பு கொண்டான். இருகக் கட்டி மகிழ்ந்தான். இளம் வீர சிங்கமே! நீ யார்? உன் தந்தையார்? ஊர் எது? பேருதவி புரிந்த உத்தம! உயிரையளித்த மஹா வீர! என்னை அறியாமல் என் மநம் உன்னிடம் பரவசமாகிறது? என்று வினவினன் வேந்தன். மகாராஜ! பத்மாகரன் வீட்டிலே வசிக்கிறேன் நான். மற்றதைப் பின்னர் அறிவீர் என்றுகூறி விரைந்து சென்ருன். வைச்யரிடமும் தாயிடமும் நடந்ததைக் கூறி னன். வெற்றியைக்கேட்டு அவர்கள் மகிழ்ந்து கொண் டாடினர். இளமை அழகு வீரலக்ஷ்மி நற்கீர்த்தி பிறர் கொண்டாடுவது இவைகளால் சிறிதும் கர்வம் உண்டாக வில்லை உத்தம பத்ராயுவுக்கு.

இவ்வகைளைக் கண்டுகளித்தார் சிவயோகி. தனக்கு உபசாரம் செய்த வேசியை நினைத்தார். அவள் சந்த்ராங்கத ராஜன் பெண்ணுகி தக்க வயது பெற்றிருந் தாள். அவனிடம் சென்று உனது பெண்ணை பத்ராயுவுக் களி. அவனை ஸ்வதேச ராஜனுகச் செய் என்ருர். அவரிட முள்ள அளவுகடந்த அன்பினல் உடனே நல்ல தினத்தில் மணம் செய்வித்தான். அவன் தந்தையான வஜ்ரபாகுவை அழைத்தான் மணத்திற்கு. தன்னை விடுவித்த இவ்வீர

புருஷன் யார் என வினவினான் அவன். உனது மகனே என்று நடந்த ஸகல விஷயங்களையும் அறிவித்தான் சந்த்ராங்கதன். வெட்கமடைந்த வஜ்ரபாகு மனைவியையும் மகனையுமழைத்துத் தனது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினான். பத்ராயுவிடம் ராஜ்யத்தை அளித்தான். பத்ராயு சிறைபட்ட சத்ரு ராஜனுக்கு உயிர் பிச்சை தந்து ஊருக்கனுப்பினான். தந்தை ஸுவர்க்கம் சென்றார். விதிப்படி மறுமை கர்மாக்களைச் செய்து முடித்து பத்ராயு சிவயோகியையும் அவர் கூறிய தர்மத்தையும் சிந்தையில் வைத்து ராஜ்ய பரிபாலநம் செய்து வந்தான்.

அடியாருக்குச் செய்த உபசாரம் ஆண்டவனையே சாரும். பிரஷ்ட பிராம்மணனுக்கு இவ்வளவு இன்பம் அளித்ததோடு நிற்காமல் நற்கதியையும் அளிக்க எண்ணினார் இறைவன். அவன் அருள் அன்பரிடம் அரிய அறிவு வடிவமாகவே செல்லும் என்கின்றது உபநிஷத். பத்ராயு வநத்திலுள்ள முநிவர்க்குத் தீங்கு நேரா வண்ணம் துஷ்ட மிருகங்களைக் கொல்ல வநம் சென்றான்.

சிவ லீலையும் அருளும்.

கிழ பிராம்மண வேடம் தரிப்பது சிவன் திருவிளையாடலில் ஒன்று. கிழவனுக்கேற்ற கிழவியாக வந்தாள் அன்னை. நடக்கவும் சக்தி இல்லாத கிழ தம்பதிகள் ஓடோடி வருகின்றனர். பேசவும் தடமாடுமிவர், ரக்ஷி! ரக்ஷி!! என வானளாவச் சத்தமிட்டனர். பத்ராயுவின் செவி கண் மநம் எல்லாம் ஒருமிக்கச் சென்றது இவர்களிடம். அபயம்! அஞ்சாதீர்! என்று அம்பை வில்லில் பூட்டினான், அவன் வாய் ஓய்வதற்குள் கடும்புலி வந்தது. கிழவி மீது பாய்ந்து அறைந்து அவளைக் கீழே தள்ளி மாயமாய் மறைந்தது. ஐயோ! என் செய்வேன்! என அலறி கிழவனார் கிழவியருகே ஓடி விழுந்தார். கண் சுழள நாவு உலர உடல் பதைக்க உயிரிழந்தாள். இளம் பாலசுந்தரியை இழந்த பாலன் போல் கதறினார். அவரது துக்கம் அரசனிடம் கோபமாகப் பாய்ந்தது. புலம்பல் கடுஞ்சொற்களாயின.

அரசே! நீயும் அரசனோ! பெண் உயிரைக்காக்காத நீயும் வீரனோ! சரணடைந்தவரைக் கைவிட்ட நீ ஜீவிப்பதிலும் பிணமாவது மேல்! குடிகளைக் காக்காதவனுக்கு

ராஜ்யமெதற்கு? உன்னால் முடியாதென்று கூறியிருந்தால் என் மனைவியை யான் தவ வலிமையால் காத்திருப்பேனே! புலியல்ல என்னருமை மனைவியைக்கொன்றது! நீ தான் கொன்றாய். ஸ்த்ரீஹத்தி செய்த நீ என்ன கதிக்கு ஆளாகப் போகிறாயோ! என சொல்லம்பால் சுட சுடத்தாக்கினார். பத்ராயு மகம் நடுங்கிற்று. உடல் பதைத்தது. அவனது ஆயுளில் இதே முதல் அவமானம்! முதல் தோல்வி! கடுஞ் சொற்கள் காது வழியே சென்று மர்மங்களைப் பிளந்தன. எப்படி அவரை ஸமாதானம் செய்வது? தீப்பட்ட புழுபோல் துடித்தான்! தன் தவறை உணர்ந்து தவித்தான். விழுந்தான் அவர் திருவடியில்! எழுந்தான். கரத்தைச் சிரத்தின்மீது குவித்தான். தழதழத்த நாவுடன் மஹர்ஷே! மன்னிக்க வேண்டும். மனைவிமக்களும் நானும் ராஜ்யமும் உமக்கே அடிமை. தவறு நேர்ந்துவிட்டது. க்ஷமித்து என்ன செய்வதென ஆணையிடுங்கள் என்றான் பத்ராயு.

ராஜ அதம! செய்வது உண்மையானால் உனது மனைவியை எனக்கு மனைவியாக அளி என்றார் கிழவர். முன்னிலும் பன் மடங்கு நடுங்கினான் வேந்தன். யான் தந்தாலும் பர ஸ்திரீயை ஏற்பது பாபமன்றோ என்றான் பார்த்திபன். பாபி! ஏன் வீணாகப் பேசுகிறாய்! ஆயிரம் பிரும்மஹத்திதோஷத்தையும் பதினாயிரம் குரு ஸ்த்ரீ ஸங்கதோஷத்தையும் தவத்தால் அகற்றுவேன். மனைவியைத் தருகிறாயா? நரகம் செல்கிறாயா என்றார் வேதியர். பத்நியை அவருக்கு அளித்த க்ஷணத்தில் தீயில் குதிப்பதாக எண்ணி மனைவியின் கரத்தைப் பிடித்து கண்ணீர் பெறுக ஜலதாரையுடன் கிழவருக்கு தானம் செய்தான். அக்நியை வலம் வந்து சிவனை நினைத்து தீயில் குதிக்க ஆரம்பித்தான். தீமறைந்து எதிரில் விருஷபம் தோன்றிற்று! உமயவளுடன் சிவனைக் கண்டான். அப்ஸரஸ் ஆட கந்தர்வர் கானம் செய்ய துந்துபி முழங்க சிவ நாமம் செவியைப் பிளக்க ஆச்சர்யத்தில் அமிழ்ந்தான் அரசன். வணங்கி எழுந்து பகவானைப் போற்றினான். ராஜன்! ஒப்பற்ற உனது பக்திக்கு மகிழ்ந்தேன்.

புலியால் அடிக்கப்பட்டவளே உமயவள். உன்னைச் சோதிக்க வந்த கிழவன் யானே. பிங்களா எனும்

வேசியே உன் மனைவியான ராணி. சிவயோகிக்கு உபசாரம் செய்த பயன் உனக்கு எனது தர்சநம். முன் மந்தரனெனும் பிரஷ்ட பிராம்மணன் நீ. வேண்டிய வரத்தைக்கேள் என்றார் பரமசிவன். என் பெற்றோரும் மற்ற பந்துக்களும் எங்களுடன் கைலாஸத்தில் உமது ஸன்னதியில் ஸதா வஸிக்க வரமருளும் என்றான் பத்ராயு. யோகிக்கும் ஞானிக்கும் கிட்டாதபதம் அடியாரை ஆராதித்ததால் கிட்டியது. என்னே அடியார் தம் பெருமை!

காசீ கண்டம். விசேஷ விஷயங்கள்.

நூறு அத்யாயம் உள்ள காசி கண்டத்திற்கு ஸ்ரீ ராமேந்த்ரவனர் என்பவருடைய சீடர் ஸ்ரீ ராமாநந்தமுனி ஓர் சிறந்த வியாக்யானம் எழுதியிருக்கின்றார்.

. கங்கை முதலிய புண்ய நதிகளுடன் பற்பல தர்மங்களையும் உபதேசிக்கின்றார். மோக்ஷ லக்ஷ்மியின் பாத கமலத்தின் கர்ணிகையை போன்றது மணிகர்ணிகா கட்டம். இங்கு அறுபத்து நான்கு கலைகளும் காணப் படுகின்றன. மதுவை அருந்துபவர். மறுபிறவியில் வண்டாகப் பிறப்பர். ஸோமவாரத்தில் சந்த்ரக்ரஹணமும், பானு வாரத்தில் சூரியக்ரஹணமும் ஏற்பட்டால் அது சூடாமணி பர்வா எனப்படும். கங்கா ஸஹஸ்ர நாமமும் அகஸ்த்யர் செய்த ஸ்கந்தஸ்துதியும் விசேஷ மானது. அ முதல் க்ஷ காரம் வரையில் உள்ள எழுத்துக் களால் கங்கா ஸஹஸ்ரநாமம். ஸ்திரீகளின் முக்ய அங்க லக்ஷணம். ரதிகாலத்தில் மாத்திரம் கறுப்பு வஸ்த்ரம் தரிக்கலாம். ரதிகாலத்தில் தும்பல் தோன்றினல் ஐந்து மாதத்தில் மரணமேற்படும். அருந்ததியை நினைத்தால் கங்காஸ்நானபலன் கிடைக்கும். ஹரிஹர அஷ்டோத்தரமும் அபிலாஷாஷ்டகம் என்பதும் மிகரஸமான ஸ்தோத்ரங்கள். தலையை மூடிக்கொண்டு ஆசமனம் செய்தாலும் கால் அலம்பாமல் ஆசமனம் செய்தாலும் ஆசமன பலனைப் பெறமுடியாது. காசியில். இறந்தவருக்கு விச்வேசன் தாரக மந்திரத்தை உபதேசித்து மறுபிறவி இல்லாமல் செய்கின்றார். பற்பல யோகிகளும் ஞானிகளும் கல்விமான்களும் முக்தி மண்டபத்தில் அமர்ந்து மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைந்தார்கள். பதினெண்

புராணங்களை இயற்றிய வியாஸாசார்யரை அன்னமில்லாமல் பரீக்ஷித்து அவர் கோபங்கொண்டு காசியைச் சபிக்கின்றேன் என்றபொழுது அன்னபூர்ணி அவருக்கு அன்னமளித்து காசியை விட்டு வெளியில் செல் என்று கூற அவர் சென்று தங்கிய இடமே வியாஸ காசி எனப்படும். ஒவ்வொருவரும் காசி யாத்ரை சென்று, அங்கும், கயையிலும், பிரயாகத்திலும் சிராத்தம் முதலிய ஸகல கர்மாக்களையும் அவச்யம் செய்யவேண்டும் என இங்கு விரிவாகக் கூறப்படுகிறது. கயாபிண்டம், பிரயாக முண்டம், காசி தண்டம் எனப்படும்.

அவந்தி கண்டம். அரிய விஷயங்கள்.

அவந்தி க்ஷேத்ர மகிமையைக் கூறும்பொழுது எண்பத்துநான்கு லிங்கங்களின் பெருமையை மார்க்கண்டேயர் கூறியதாக வர்ணிக்கின்றார்.— விஷ்ணு ஸஹஸ்ர நாமம். "விச்வம் விஷ்ணுர் ஹ்ருஷீகேஶ: ஸர்வாத்மா ஸர்வ பாவந:" என்று ஆரம்பித்து, "மங்களோ மங்களாகார: மாங்கல்யஸ் ஸர்வ மங்கள:" என்று மங்களமாக முடிக்கின்றார். ஸஹஸ்ரநாமத்திற்குப் பிரதிநிதியாகக் கீழ்கண்ட ஒரு சுலோகத்தை ஜபித்தால் போதும் என்கின்றார்.

सहस्राक्षस्सहस्रपात् - सहस्रवदनोज्वलः ।
सहस्रनामानन्ताक्षः - सहस्रबाहुर्नमोस्तुते ॥

ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத் – ஸஹஸ்ரவதநோஜ்வல: |
ஸஹஸ்ரநாமா நந்தாக்ஷ:–ஸஹஸ்ர பாஹுர்நமோஸ்துதே

கற்பூர நீராஜனம் செய்த அந்த ஜ்யோதிஸ்ஸை ஒரு சில வகுப்பாரே கண்ணில் ஒத்திக்கொள்வதில்லை. ஒத்திக்கொள்ள பிரமாணம் கூறுகின்றார். "அந்த ஜ்வாலையை இரு கரங்களாலும் ஒத்திக்கொண்டால் கண்ணில் உண்டான நோயும் அக்ஞானமும் அகலும்." மாவினால் தீபம் போல் செய்து வைசாக மாதம் அஷ்டமியிலும் சதுர்தசியிலும் பூஜை செய்தால் பித்ருக்களுக்கு முக்தி ஏற்படும் என வர்ணிக்கின்றார்.

நாகரகண்டம். அரிய விசேஷங்கள்.

கரமென்றால் விஷமென்று பொருள். ந என்றால் இல்லை என்று பொருள். இரண்டையும் சேர்த்து விஷம் இல்லாத இடம் என்ற பொருளைக்கொண்டு நகரம் என்ற

பெயர் அமைந்தது. அதிலிருந்து எல்லா பட்டணங்களுமே நகரம் எனப்பெயர் தோன்றி வழங்குகிறது. நகரம் என்ற சப்தத்தைப் பாம்புகள் இருக்குமிடத்திற்கூறினல் உடனே அவ்விடத்தை விட்டு சர்ப்பம் அகலவேண்டும். அப்படி அகலாவிடில் அந்த பாம்பைக் கொல்வதினல் யாதொரு தோஷமுமில்லை. அக்னி பகவான் தேவர்களுக்கு ஹவிஸ்ஸைக் கொடுக்கும் வேலையில் வெறுப்பை அடைந்து மூங்கிலிலும் சமீ மரத்திலும், ஜலத்திலும் புகுந்தார். முறையே ஆங்கிருந்து யானை, கிளி தவளை ஆகியவைகள் அவர் இருப்பிடத்தை தேவர்க்கு கூறிவிட்டதால் கோபங்கொண்ட அக்நி யானையை விபரீதமான நாக்கை உடையதாகவும், கிளியை ஸ்பஷ்டமான வாக்கில்லாததாகவும், தவளையை இரு நாக்கை உடையதாகவும் சபித்தார். இக்கதை தைத்தரீய, யஜுர்வேதத்தில் உள்ளதாகும். அநேக கவிகள் இதனைத் தங்கள் காவ்யத்தில் சூசிக்கின்றூர்கள். அந்தணரை அடிப்பதாலும், கொல்வதாலும் குஷ்ட நோய் உண்டாகும். வான்மீகி பிராம்மணனுகப் பிறந்தவர். ஆசாரத்திஞல் வேடனைப்போல் ஆனுர். அவருக்கு ஸப்த ரிஷிகளில் ஒருவரான புலஹர் விளையாட்டாக **ஜாடகோடா** எனக்கூறி இந்த மகாமந்திரத்திஞல் உனக்கு சித்தி உண்டாகும் என்ருர். அவரதில் திருடமான நம்பிக்கை கொண்டு ஜபித்ததால் "வான்மீகி மஹரிஷி" யாக ஆனுர். தாம்பூலம் உண்டான வகையைக் கூறி அதைத் தரிக்க வேண்டிய முறையையும் அதனல் உண்டாகும் பயனையும் அதிகமாக அதை உபயோகிப்பதினல் உண்டாகும் தீமையையும் வர்ணிக்கின்ருர். **சமீமரத்துடன் அச்வத்த விருக்ஷத்திற்கு விவாஹம்** செய்து வைக்கவேண்டும். அச்வத்த பிரதிஷ்டையும், உபநயனமும், பிரதக்ஷிணமும் எத்தகைய பலனை கொடுக்கும் என்று இங்கு காணப்படுகின்றது.

துளசியின் கதிரைக்கொண்டே பூஜை, தானம் முதலியவைகளைச் செய்யவேண்டும். அதில் மும்மூர்த்திகளும் தங்கி இருக்கின்றனர். பெண்கள் தனியாகவோ அல்லது மந்திரத்துடன் சேர்த்தோ பிரணவத்தை ஜபிக்கக்கூடாது. அஷ்டாக்ஷரீ பஞ்சாக்ஷரீ முதலிய விடங்களிலும் ஓங்காரத்தை விலக்கியே சொல்ல வேண்டும்.

7. பிரபாஸ கண்டம். அரிய விஷயங்கள்.

பிராம்மண மஹிமை, சிவ விஷ்ணுக்களில் மேன்மை, தாழ்மை உண்டா? என்பது, சிவனுக்கு ஏழு முகங்கள் உண்டு. ஸத்யோஜாதம் முதலிய ஐந்து முகங்களுடன் கூட நான்முகனும் திருமாலும் தந்த முகங்கள் இரண்டு. அருந்ததிதேவி பஹிஷ்டையாக இருக்கும்பொழுது அதை அறியாமல் சிவார்ச்சனை செய்ததால் சக்கிலி ஜாதியில் பெண்ணுகப் பிறந்தாள். ஒரு துர்பிக்ஷகாலத்தில் அவளது தந்தையிட முள்ள பொருளை ஸப்தரிஷிகள் கேழ்க்கத் தன் பெண்ணை மணந்துகொண்டால் பொருள் தருவதாகக் கூறினார். வஸிஷ்டர் அவளது சரித்தத்தை உணர்ந்து அவளைத் தீயில் இறங்கி வரும்படிக் கூறி அவளையும் தனத்தையும் ஏற்றுக் கொண்டார். ஜலத்தினால் சுவர்ணம் செய்வது, உடலுக்கு கிழத்தனமும் மரணமும் வராமல் நித்ய யுவாவாகச் செய்யும் கல்பம். ஸகல வித்யைகளையும் ஒரே மந்த்ரத்தினால் கற்கும் வழி, உற்சவங்கள், அச்சமயம் பாபிகளுக் குண்டாகும் தீமையைக் காட்டக் கூடிய நாடகங்களை நடித்தல், முறைப்படி நற்பாத்திரத்தில் கோதானம்செய்தவன் தன் ஆயுள் முடியும் வரை ஏகாதசி உபவாஸமில்லாமலேயே ஏகாதசி விரதபலனைப் பெறுவான். ஒருவன் இறப்பதற்குள் நூறு ஏகாதசிகளிலாவது நியமத்துடன் விரதமனுஷ்டித்தால் ஆயுள்வரையுள்ள சகல ஏகாதசி விரதங்களின் பலனையும் பெற்றதாகும். ஒரு சக்ரம் முதல் பன்னிரண்டு சக்ரம் வரையில் உள்ள ஸாலக்ராமங்கள், ஸகல வேதசாஸ்த்ர உபநிஷத் புராணங்களின் ஸாரமே. "**பஞ்சாக்ஷரீ**" மஹா மந்த்ரமாம். கங்கை ஜலம் ஆகும் வரையிலும் பர்வதம்போன்ற மண் கரையும் வரையிலும் மண்ணினாலும் நீராலும் சரீரத்தைச் சுத்தம் செய்துகொண்டாலும் மநம் சுத்தமில்லாவிடின் சரீரம் சுத்தமாகாது. ரதியுடன் கூட ரஜஸ்வலா காலத்தில் தெரியாமல் ஸங்கமம் செய்ததால் மன்மதன்தேஹத்தை இழக்க நேர்ந்தது.

கட்டைவிரல் மிக நீளமாய் இருந்தாலும் ஒவ்வொரு ரோம கூபத்திலும் மூன்று ரோமங்களிருந்தாலும் பெண் தீர்க்க சுமங்கலியாகவும் கற்புடையவளாகவு மிருக்கமாட்டாள். தனம் இல்லாதவன் துக்கத்தை அடைவான்.

அத்துடன் கடனுமுள்ளவன் அதிக துக்கத்தையடைவான். இவ்விருவர்களையும் விட நோயுள்ளவன் அதிக துக்கமடைவான். இம் மூவரையும்விட துஷ்டபார்யை உடையவன் அதிக துக்கமடைவான். பாகவதம் கேளாதவன் ஆத்மஹத்தி செய்துகொண்ட பாபியாவான். வேத அத்யயனம் உபவாஸம் மந்த்ரம் ஜபம் முதலியவைகளால் மனஸ்சுத்தி ஏற்படுகின்றது. பசுவையும், தங்கத்தையும் தானம் செய்யாதவனே உலகில் ஏழையாகப் பிறக்கின்றான்.

காசிகண்டத்தில் 24 வது அத்யாயத்தில் சில அழகான வர்ணனைகளைச் செய்கின்றார். இதைக்கொண்டே காதம்பரியில் பாணகவி சில கற்பனைகளையும் பதரசனைகளையும் செய்திருக்கின்றார். இரண்டு பொருள்களை உடைய ஒரு சொல்லைக்கொண்டு முதலில் விரோதம்போல் காண்பித்து, அதைப் பரிஹரிப்பது இதில் ஒன்று, உதாரணம்.

1. விப்ரமம் உள்ளவர்களாயினும் விப்ரமம் இல்லாதவர். விப்ரமம் என்பது விசேஷமான பிரமம் என்றும் விலாஸ லீலை என்றும் இருபொருள்களுள்ளது. விசேஷ பிராந்தி உள்ளவர்களாய் இருந்தும் விசேஷ பிராந்தி இல்லாதவர் என்றபோது விரோதமாகத் தோன்றும். அதை அகற்ற விலாஸ முள்ளவர்களா யிருந்தும் விசேஷ பிராந்தி இல்லாதவர் என்று பொருள்கொள்ள வேண்டும்.

2. நதிகளே கோணலாகச் செல்பவை. மனிதரல்ல. இரவே தமஸ் உள்ளது. மனிதரல்ல என்றவிடங்களிலும் குடில என்பதற்கு பாபம், கோணல். தமஸ் என்பதற்கு இருள், அக்ஞானம் என்று பொருள் கொள்ளவேண்டும்.

ஸ்ரீ ஸுப்ரம்மண்யனால் கூறப்பட்ட இந்த ஸ்காந்தத்தைப் படிப்போரும் கேட்போரும் ஆயுஸ் ஸந்ததி ஆரோக்யம் முதலிய பாக்யங்களைப் பெறுவதுடன் ஸகல சாஸ்த்ர க்ஞானத்தையும் பெறுவர்.

ஸ்ரீ மஹா ஸ்காந்த சுருக்கம் முற்றிற்று.

15. தக்ஷிண ஸ்காந்தம்.

ஸுப்ரமண்யன் (த. ஸ்காந்தம்).

மாம்பலம் குருகுல வெளியீடு.

ஸ்ரீ தக்ஷிண ஸ்காந்த மூலக்ரந்த அநுக்ர மணிகா.

ஸம்பவ காண்டம்.

1 சூதருக்கும் முனிவர்களுக்கும் ஸம்பாஷணை. 2 புராணாதி விருத்தாந்தம். 3 பார்வதி தேவியின் உத்பத்தி. 4 சிவன் தக்ஷிணாமூர்த்தியா யிருந்து ஸனகாதிகளுக்கு உபதேசித்தல். 5 தேவர்கள் அசுரர்களின் ஹிம்ஸையைப்பற்றிப் பிரம்மனிடத்தில் முறையிடல். 6 பிரம்மன் முதலிய வானவர்கள் திருமாலிடம் முறையிடல்.

7-10 மன்மதன் தேவர்களாலனுப்பப்பட்டு சிவனிடம் போய் எரிக்கப்பட்டது. 11 வானவர்கள் சிவனைத் துதித்து குமரனை உண்டுபண்ண வேண்டுகோள். 12 ரதி புலம்பல். 13-14 சிவன் கிழவேடம் பூண்டு பார்வதியிடம் வாதித்தல். 15-16 ஸப்த ரிஷிகள் ஹிமயமலையிடம் சென்று கல்யாணம் நிச்சயித்தல். 17-24 திருக்கல்யாணம். 25-26 ஸ்ரீ குமாரஜனனம். 27 வீரபாகு முதலிய நவவீரர்களின் உற்பத்தி. 28-29 ஸ்ரீ பால குமாரன் லீலைகள். 30 குமாரன் இந்திரன் முதலிய வானவர்களுடன் யுத்தம் செய்தது. 31 ஸ்கந்தன் தேவர்களுக்குத் தம் விசுவ ரூப தரிசனத்தை அருளல். 32 குமரனுக்கு ஸேனாதிபத்ய முடி சூட்டல். 33 குமாரனுக்கு ஆட்டுக்கடா வாஹனம் கிடைத்தல். 34 பிரம்மாவை குஹன் சிறையில் அடைத்து விடுபடுதல். 35 மகேசுவரன் ஸ்கந்தனுடைய பெருமைகளைப் பார்வதிக் குரைத்தல். 36 அமிருதவல்லி, ஸௌந்தர்யவல்லி என்னும் பெண்களுக்கு சுப்ரமண்யன் வரம் அளித்தல்.

37-46 தாரகாசுர வதம். 47 சூரபத்மன் மந்திரிகளோடு ஆலோசனை செய்தல். 48-49 ஸ்கந்தன் சிவஸ்தலங்கள்தோறும் யாத்ரை செய்துகொண்டு தக்ஷிண தேசத்திற்கருளல். 50 சுப்ரமண்யன் திருச்செந்தூருக்கெழுந்தருளியது.

ஆசுர காண்டம்.

1 சூரபத்மன் முதலிய அசுரர்களின் உற்பத்தி. 2 சூரன் ஸகோதரர்களோடு கூட வேள்வி செய்தது.

3 அசுரர்களுக்கு வரமளித்தது. 4 சூரனுக்கு சுக்ராசாரியர் துர்புத்தி கூறல். 5 தாரகன் திக்விஜம் செய்தது. 6 சூரன் தம்பிகளோடுகூடச் சிவலோகத்திற்குச் சென்று சுவாமியைத் தரிசித்தல். 7 விஷ்ணு வணக்கத்துடன் சூரனிடம்போய் சம்பாஷித்தல். 8 அசுரர்களுக்காக வீரமாகேந்திரபுரம் முதலிய பட்டணங்கள் அமைக்கப்பட்டன. 9 சூரன் தேவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊழியமேற்படுத்தினது. அசுரர்கள் மணம் புரிந்ததும் தேவர்கள் மீன் பிடித்ததும், அஜாமுகி இல்வல வாதாபிகளைப் பெறுதல். 10 இந்திரன் இந்திராணியுடன் சீர்காழியில் ஒளிந்திருந்தது. 11 அகஸ்த்யர் இல்வல வாதாபிகளைக் கண்டித்தது. 12 இந்திரன் விக்னேச்வரன் அருளினால் காவேரி நதியைத் தருவித்தது. 13 சாஸ்தாவின் உற்பத்தி. 14 அஜாமுகி மகாகாளர் காவலிலிருந்த இந்திராணியைப் பிடிக்கப் போய் கை வெட்டுண்டது. 15 பானுகோபன் இந்திரன் பட்டணத்தைக் கொள்ளையிட்டு ஜயந்தன் முதலிய தேவர்களைச் சிறையில் அடைத்தது.

வீர்மாகேந்திர காண்டம்.

1–5 வீரபாகு தூதுசென்று திரும்புதல். 6 சூரன் தன் வேவுகாரர்களால் சுப்ரமண்யன் யுத்தத்திற்காகப் புறப்படச் சித்தமாயிருப்பதைக் கேட்டு பிள்ளைகள், தம்பி, மந்திரிமார்கள் இவர்களோடு மந்திராலோசனை செய்தல். 7 ஸ்கந்தன் சகல ஸைனியங்களுடனும் திருச்செந்தூரிலிருந்து புறப்பட்டு வீரமாகேந்திரப்பட்டணத்துக் கருகில் விஜயமாகி அங்கோர் பட்டணத்தை அமைத்துத் தங்கியிருந்தது.

யுத்த காண்டம்.

1–6 பானுகோபன் வீரபாகுவோடு முதல்முறை யுத்தம் செய்தது. 7–12 சூரன் முதல்முறை யுத்தம். 13–14 பானுகோபன் இரண்டாம் முறை யுத்தத்தில் தோல்வியடைந்து, பிறகு மாயையால் மறைந்து மாயாஸ்திரத்தைப் பிரயோகித்து வீரபாகு முதலியவர்களைச் சுத்த நீர்க்கடலில் கொண்டு போட்டது. 15 குஹன் வேலாயுதத்தை அனுப்பி வீரர்களை மீட்டல். 16 சூரன் புத்ரனை இரணியன் ஸ்கந்தனை வணங்கும்படித் தந்தைக்குப் புத்திகூறல். 17 நீலனுக்கும் இரணியனுக்கும் யுத்தம். 18 அக்னிமுகன் யுத்தத்தில் மடிந்தது. 19 வீர

பாகு தன் தம்பிகள் இறந்ததைச் செவியுற்று காலனுக்குச் சீட்டெழுதி அவர்களைப் பிழைப்பித்தது. 20 தருமகோபன் எனும் அமைச்சன் வீரபாகுவால் வதையுண்டது. 21–23 பானுகோபன் மூன்றும்முறை யுத்தமும் வதமும். 24–27 சிம்மவக்த்ரன் யுத்தமும் வதமும். 28–35 சூர பத்மன் சண்டையும் வதமும்.

தேவ காண்டம்.

1–2 தேவசேனு கலியாணம். 3–6 வள்ளி பரிணயம். 7 முசுகுந்தன் தியாகராஜனைக் கொண்டுவந்தது.

தக்ஷ காண்டம்.

1 சிவபிரானே பரப்பிரும்மம். 2 தக்ஷன் சிவபிரானிடமிருந்து வரமடைந்தது. 3 சந்திரன் சாபமடைந்து விடுபடல். 4 தேவியின் கர்வபங்கம். 5–6 தாக்ஷாயணீ தேவியின் உத்பத்தி. 7 கலியாணத்தின் நடுவில் ஈசன் மறைந்துவிட்டதனுல் தக்ஷன் அவரை இகழ்ந்தது. 8 தவம் செய்துகொண்டிருந்த தேவியைக் கைலைக் கழைத்து போனது. 9 தக்ஷன் பலவாருக ஈசனை நிந்தித்து கைலைக்குப்போகுங்கால் துவாரபாலகர்களால் தடுக்கப்பட்டான். 10 தக்ஷ யாகத்திற்குத் ததீசி முனிவர் வந்தது. 11-12 ததீசி முனிவர் தக்ஷனுக்கு ஈச்வரன் பரப்ரும்மம் என்று உபதேசித்தல். 13–14 தாருகாவனத்தில் சிவன் பிக்ஷாடனம் செய்தது. 15 கஜாசுர ஸம்ஹாரம். 16 பரமசிவன் விஷமுண்டது. 17–19 பைரவர் பிரும்மனுடைய ஒரு தலையை வெட்டுதல். 20 தருமமும் விஷ்ணுவும் சிவபிரானுக்கு விருஷபவாகனமானது. 21 மகா பிரளய காலத்தில் பரமேசுவரன் எலும்பு சாம்பற்களைத் தரித்தும், விஷ்ணு முதலியவர்கள் சம்ஹாரகாலத்தில் தங்கள் எலும்பு சாம்பற்களைத் தரித்து அருளும்படியும் சிவனை வேண்டுதலும்.

22 ஜலந்தராசுரன் வதை. 23 ஜலந்தரன் மனைவியோடு விஷ்ணு கபடமாய் சேர்ந்ததும் அவர் பைத்தியம் பிடித்துத் தெளிந்ததும். 24 சிவன் கங்கையைத் தரித்தல். 25–28 விநாயகர் உற்பத்தி. கஜாமுகாசுரன் வதம். 29 சிவன் குணத்தைக் கடந்தவர். 30 ஸதீ தன் தந்தை வீட்டிற்கு சென்று அவமானமடைந்தது. 31–35 வீரபத்திரர் யாகசாலையில் தோன்றி விஷ்ணு முதலிய தேவர்

களையும் தக்ஷனையும் கண்டித்தது. 36–37 சிவன் லிங்க வடிவமானதும், விஷ்ணுபிரமர்கள் அவரடிமுடிகளைக்காண முடியாததும். 38–41 அண்ட பரிமாணத்தின் விளக்கம்.

உபதேச காண்டம்.

1–2 மகாகைலாஸத்தின் விளக்கம். 3–5 சூரன் முதலியவர்களின் பூர்வ ஜன்மம். 6–7 அஜாமுகியின் ஜந்மாந்தர விவரம். 8 மாயையின் விவரம். 9–12 விபூதி மகிமை. 13-17 ருத்ராக்ஷ மகிமை. 18-19 விபூதி ருத்ராக்ஷம் அவசியம் அணிந்து கொள்ளவேண்டியது. 20–24 பஞ்சாக்ஷர மகிமை. 25–26 சிவநாம மகிமை. 27–37 சிவன் ஸ்கந்தன், விநாயகர், வீரபத்ரர், இவர்களின் விரதங்கள். 38 பார்வதீ தேவிக்குரிய விரதங்கள். 39–47 சிவ புண்யங்களின் மகிமையும் சரித்திரங்களும். 48 சிவ புராண சிரவண பலன். 49–59 சிவத்ரோஹங்களின் கொடுமையும், சரித்திரங்களும். 60 அறியாமற் செய்யப்பட்ட சிவத்ரோகங்களைப் பற்றிய விஷயம். 61 சிவலிங்கத்தின் மகிமை. 62–63 விஷ்ணு முதலிய ஒவ்வொரு தேவரும் சிவ பூஜையால் அவரவர் பதவியை அடைதல். 64–69 விஷ்ணு, பிரம்மா, இந்திரன் முதலிய தேவர்கள் சிவபூஜையால் பற்பல இஷ்டங்களைப் பெற்றது. 70–72 திரிபுரஸம்ஹாரம். 73 அந்தகாசுர ஸம்ஹாரம். 74 பண்டாசுர ஸம்ஹாரம். 75 மகிஷ வியாக்கிராசுரர்களின் ஸம்ஹாரம். 76 ரக்தாசுரன், ரத்த பீஜன், பஞ்சராவணர்கள் இவர்களின் வதம். 77 வியாஸ முனிவர் விஷ்ணுவே பரப்பிரம்மமென்று சொல்லி பங்கப்பட்டது. 78–82 வஸிஷ்டர், உபமன்யு, மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கள் சிவபூஜையால் பயனடைந்தது, க்ஷுபராஜனுக்கும், ததீசி முனிவருக்கும் நடந்த யுத்தம். 83 ஸர்வஸார ஸஹஸ்ர நாமம்.

84 ஸஹஸ்ர நாமங்களின் மகிமை. 85 ஸ்வயம்பு லிங்கங்களின் மகிமை, அதன் வித்யாசங்கள். 86 ஆசார்யர்களின் உற்பத்தி. 87 சிவயோகம். 88–89 சிவ ஞானம். 90 சிவனுடைய இருபத்தைந்து திருமூர்த்திகள். 91 சௌனகாதி முனிவர்கள் முன்பாக ஸ்ரீ ஜகதீசன் ஸான்னித்திய மருளியதும் புராணம் கேட்பதின் முறையும் பயனும்.

முற்றிற்று.

15. தக்ஷிண ஸ்காந்தம்.

मङ्गलं दिशतु मे विनायको - मङ्गलं दिशतु मे षडाननः ।
मङ्गलं दिशतु मे महेश्वरी - मङ्गलं दिशतु मे महेश्वरः ॥

மங்களம் திசதுமே விநாயகோ—மங்களம் திசதுமே ஷடாநந: |
மங்களம் திசதுமே மஹேச்வரீ—மங்களம் திசதுமே மஹேஸ்வர: ||

सुमुखश्चैक दन्तश्च - कपिलो गजकर्णकः ।
लम्बोदरश्च विकटो - विघ्नराजो विनायकः ॥
धूमकेतुर्गणाध्यक्षः - फालश्चन्द्रो गजाननः ।
वक्रतुण्डश्शूर्पकर्णो - हेरम्बः स्कन्दपूर्वजः ॥
षोडशैतानि नामानि - यःपठेत् शृणुयादपिः ।
विद्यारम्भे विवाहे च - प्रवेशे निर्गमे तथा ।
सङ्ग्रामे सङ्कटे चैव - विघ्नस्तस्य नजायते ॥

ஸுமுகச் சைகதந்தச்ச கபிலோ கஜகர்ணக:
லம்போதரச்ச விகடோ விக்ந ராஜோ விநாயக:
தூமகேதுர் கணுத்யக்ஷ: பாலஸ் சந்த்ரோகஜாநந:
வக்ர துண்டச் சூர்ப்ப கர்ணோ ஹேரம்ப: ஸ்கந்தபூர்வஜ:
ஷோடசைதாநி நாமாநி ய:படேத் ச்ருணுயாதபி:
வித்யாரம்பே விவாஹே ச ப்ரவேசே நிர்கமேததா
ஸங்க்ராமே ஸங்கடே சைவ விக்நஸ்தஸ்ய நஜாயதே ||

விக்னேச்வருடைய 16 நாமாக்களை வித்யாரம்பத்திலும், கலியாண காலத்திலும், வீட்டிற்குள் நுழையும் பொழுதும் வெளியில் கிளம்பும்பொழுதும், யுத்த காலத்திலும் ஸங்கட காலத்திலும் சொன்னால் எல்லா இடையூறுகளும் போய்விடும். இதேபோல் ஞானசக்தி,

ஸ்கந்தன், அக்னி, பூ, பாகுலேயன், காங்கேயன், சரவ ஷோத்பவன், கார்த்திகேயன், குமாரன், ஷண்முகன், குக்குடத்வஜன், சக்திதரன், குஹன், பிரம்மசாரீ, ஷாண் மாதுரன் கிரௌஞ்சபித், சிகிவாஹனன் என்ற சுப்ரமண் யருடைய 16 நாமாக்களை ஜபம் செய்பவர்கள் ஸகலவித மான சித்திகளையும் பெறுவார்கள்.

முன்னொரு ஸமயம் நான்முகன் படைக்கும் சக்தி யைப் பெற காஞ்சிமா நகரத்தில் கடுந்தவம் புரிந்தார். அவரையண்டி பல மஹரிஷிகள் நாங்கள் புண்யம் செய் வதற்கேற்ற உயர்ந்த இடம் எது ? என்று கேட்டார்கள். அவர் முஹூர்த்த காலம் யோசனை செய்து நைமிசாரண் யமே மிகச்சிறந்த இடமென்றார். மஹரிஷிகள் அங்கு சென்று ஸத்ரமெனும் யாகத்தைத் தொடங்கினார்கள். அதைக்கேட்டு சூதபுராணிகர் அங்குசென்றார். அவரை மஹரிஷிகள் வரவேற்று ஸ்கந்தரது பெருமையைக்கூறும் படி வேண்டினார்கள். தம் குருவையும், ஸ்கந்தனையும் வணங்கி பதினெண் புராணங்களிலும் ஸாரமான ஸ்காந் தத்தைக் கூறினார்.

பதினெண் புராணங்களிலே பத்து புராணங்கள் சிவனைப் பற்றியும் நான்கு விஷ்ணுவையும் இரண்டு பிரம்மாவையும் ஒன்று அக்னியையும் ஒன்று சூரியனை யும் பற்றி கூறுகின்றது. பதிமூன்றாவதான ஆறு ஸம்ஹிதா வடிவமான ஸாத்விக புராணம் ஸ்காந்தம். அதில் மூன்றாவதான முப்பதாயிரம் சுலோகமுள்ள சங்கர சம்ஹிதையில் சிவரஹஸ்ய கண்டமென்பது பதின்மூன் றாயிரம் சுலோகமும் ஏழு காண்டமும் உள்ளது. இங்கு ஸ்கந்தனது பெருமை விரிவாக உளது.

ஒரு ஸமயம் கைலாஸத்தில் உள்ள பரமசிவனை நாடி தாக்ஷாயணி சிவநிந்தை செய்யும் தக்ஷன் மகளாகயிருந்த நான் சிவபக்தனிடம் பெண்ணாகப்பிறந்து உம்மைமணக்க வேண்டுமென்று வேண்டினாள். உன்னைப் பெண்ணாகப் பெற ஹிமவான் ஸதா தேவீஸூக்த பாராயணம்செய்து கொண்டிருக்கிறான். இவ்வுடலை விட்டபின் நீ அவன் பெண் ணாகப்பிறக்கலாம் என்றார் சிவன். தாக்ஷாயணீ தக்ஷயக் ஞத்தில் உடலை விட்டபின் ஹிமவான் கங்கைக்கு செல்லும்

பொழுது ஆங்கோர் தாமரைமீது பெண்ணுகத்தோன் றினள் தேவி. மிக ஆச்சர்யமான அக் குழந்தையைக் கையில் ஏந்தி தேவியே தன் குழந்தையாக வந்தாள் என மிகவும் சந்தோஷமடைந்தான். அச்சமயம் ஆகாயத்தில் துந்துபி முழங்கிற்று. புஷ்பவருஷம் வர்ஷித்தது. தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தேவியைத் துதித்தார்கள்.

பன்னிரண்டாவது நாளில் விதிப்படி நாமகரணம் செய்தார் தந்தை. பந்துக்களிடம் பிரியமுள்ளதால் பார்வதி எனும் முதல் நாமகரணம் செய்யப்பட்டது. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக தேவி வளர்ந்து வந்தாள். ஐந்தாவது வயதிலே பரமனை நாடி தவம் செய்ய ஆரம்பித்தாள். அழகிய திவ்ய சரீரம் வாய்ந்த தேவி சுகுமாரமான உடலை தவத்தினுல் வாட்டு வதைக்கண்டு தாய் தவத்தை அனுமதிக்காமல் "குழந் தாய் வேண்டாம்" என்று தடுத்தாள். அது முதற் கொண்டு உமா என்ற பெயர் வழங்கலாயிற்று. அச் சமயம் பரமசிவன் கல்லால மரத்தின் அடியில் தக்ஷிணு மூர்த்தியாக அமர்ந்து ஸனகாதிகளுக்கு சின்முத்ரையினுல் வேதாந்த விசாரத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்தை உத்தேசித்தே-

चित्रं वटतरोर्मूले - वृद्धाःशिष्या गुरुर्युवा ।
गुरोस्तु मौनं व्याख्यानं - शिष्यास्तु छिन्नसंशयाः ॥

சித்ரம் வடதரோர் மூலே விருத்தாச் சிஷ்யா குருர்யுவா |
குரோஸ்து மௌநம் வ்யாக்யானம் சிஷ்யாஸ்து சிந்நசம்சயா: ||

அக்ஞானத்திற்குமேல் வலதுகாலை வைத்துக்கொண்டு யோகப்பட்டமான இடதுகாலை அதன்மேல் போட்டுக் கொண்டு சுத்த ஸ்படிகம்போல் பிரகாசமான சரீரத் துடன் விளங்கினுர். சின்முத்ரையினுல் ஜீவ பிரம்ம ஐக்யத்தை மௌனமாய் உபதேசித்து வந்தார். குரு வான தக்ஷிணுமூர்த்தி சிறுவராகவும் சீடர்களான ஸன காதிகள் வயது முதிர்ந்தவர்களாகவும் இருந்தார்கள். அச்சமயம் உலகெலாம் ஆண், பெண் சேர்க்கை இல்லா மலும் உலக சிருஷ்டி இல்லாமலுமிருந்தது. அச்சமயம் எவரையும் உள்ளேவிடக் கூடாதென நந்திக்கு உத்திர

விட்டார் பகவான். ஸனகாதிகள் தத்வ விஷயத்தில் ஸந்தேகமற்று ஆனந்தமடைந்தார்கள். இதைக் கண்ட தேவர்கள் அனைவரும் வருந்தி உலகசிருஷ்டி விருத்தியாகவேண்டும் என்றும் தங்களுக்குத் தாரகன் முதலிய அசுரர்களால் ஏற்படும் துன்பத்தை அகற்றவேண்டும் என்றும் பிரம்மாவினிடம் முறையிட்டார்கள்.

பிரஹஸ்பதி, அசுரர்கள் இந்திராதி தேவர்களை ஜயித்து ஸ்வர்க்கத்தை அபகரித்து தேவர்களைத் துன்புறுத்தப்படுத்துவதையும் தெரிவித்தார். தேவேந்திரனை பிரதிதினம் அசுர ஸபையைக் கோமயத்தினுல் சுத்தம் செய்யும்படியும்; அக்னிகளைத் தீபமாக இருக்கும்படியும், யமனை ராஜயக்ஷ்மா முதலிய வியாதிகளுடன் கூட, அச்வினிகளை சகாயமாகக்கொண்டு வைத்யனுக இருக்கும்படியும், வாயுவை ஆங்குள்ள குப்பைகளைப் பெருக்கும்படியும், சூரியனைத் தாமரையை மலர்த்துமளவிற்கு மாத்திரம் பிரகாசிக்கும்படியும், மற்ற தேவர்களுக்கு மற்ற நீசமான பணிகளையும் கொடுத்தும் அடிமையாக்கி இருக்கின்றுன். பன்னிரண்டு ஆதித்தியர்களைத் தீபமாலையாகவும், நாகர்களைத் தனது சிம்ஹாசனத்தின் அடியில் இருந்து தனதுபடத்திலுள்ள மணிகளால் ஒளிவீசும்படியும் செய்கிறுன். எவ்வளவு சமாதானப் படுத்தினுலும் அதை ஏற்காமல் ஹிம்சித்துக்கொண்டிருக்கிறுன். அதற்குத் தக்க பரிஹாரம் தாங்களே செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார். நானே அவனுக்கு வரம் கொடுத்தேன். ஆதலால் நானே அவர்களைக் கொல்வது என்பது நியாயமில்லை. விஷ விருக்ஷமாயினும் நாமே வைத்து வளர்த்த மரத்தை நாமே வெட்டலாகாது. ஆதலால் வைகுண்டம் செல்வோம், பரிபாலன கர்த்தாவான அவரே தக்க வழி தேடுவார்! என்று சொல்லி எல்லோரையும் அழைத்துக்கொண்டு வைகுண்டத்திற்குச் சென்றுர்.

நவரத்னங்களால் பிரகாசிக்கின்ற வைகுண்டத்தின் மகிமையைக்கண்டு வானவர் வியந்தனர். திவ்ய ஸ்தோத்ரங்களால் மஹாவிஷ்ணுவைத் துதித்தனர். பகவான் இவர்களுக்கு நல்வரவு கூறி சூரனது வர பலத்தினுல் நானே பயந்து மேருவின் குகையில் பதுங்கினேன். நம் யாவருக்கும் பரமசிவன் ஒருவனே ரக்ஷகன் என்று கூறி

மேருமலையில் தவம் செய்யும் பரமசிவனைத் துதிப்போம் என்றார். பரமசிவன் சந்தோஷமடைந்து விரைவில் உங்கள் இஷ்டம் பூர்த்தியாகும் என்றுகூறி மறைந்தார். பிரம்மாதி தேவர்கள் ஒன்றுகூடி ஒரு ஸேனாதிபதியை உண்டுபண்ணி அவன் மூலமாகவே தாரகாதிகளைக் கொல்லவேண்டும். சிவகுமாரனன்றி வேறு எவராலும் அவனைக் கொல்லமுடியாது. சிவனே தாக்ஷாயணீ உடலை விட்டபிறகு இல்லறத்தை வெறுத்துத் துறவறத்தில் ஈடு பட்டிருக்கிறார். அவரைப் பர்வதராஜ குமாரியாகப் பிறந்திருக்கும் பார்வதியை மணக்கும்படிச் செய்யவேண்டும் என்று கூறினார். தம்பதிகளைச் சேர்த்துவைத்து இல்லற சுகத்தில் ஈடுபடுத்திவைக்கும் மன்மதனை மனதில் நினைத்தார். நினைத்த ஸமயத்திலேயே மன்மதன் தேவ ஸபைக்கு வந்துசேர்ந்தான். மூவுலகில் யாரைப் பெண்களுக்கு அடிமையாகச் செய்ய வேண்டும்? என வினவினான்.

உலக சிருஷ்டிக்குக் காரணமாயும் தாய் தந்தையாயுமுள்ள பார்வதி பரமேச்வரர்கள் தனித்திருப்பதால் அவர்களைச் சேர்த்துவைத்து உலக சிருஷ்டியை விருத்திசெய்ய வேண்டுமென்று கூறினார். எல்லோரையும் ஜயிப்பேன்! சிவனிடம் மாத்திரம் என் சக்தி செல்லாது! சிவாபசாரம் செய்வது மகா பாவம்! வேறு எண்ணத்தோடு புஷ்பத்தையே அர்ச்சனை செய்தாலும், பாலையே அபிஷேகம் செய்தாலும் சிவ கோபத்திற்கு ஆளாக வேண்டும்! முன்னர் சிவன் தாக்ஷாயணியோடு கைலாஸத்தில் வீற்றிருக்கும் பொழுது திதி அதிதிகளின் பிராத்தனைக்கிணங்கி கச்யபர் வருணனிடமிருந்து பல பசுக்களைப் பெற்றுவந்தார். அவை அங்குமிங்கும் ஓடிவரும்பொழுது பால் பெருகிச் சிவசிரஸ்ஸில் விழுந்தது. அதனால் மேலே பார்க்க பசுக்கள் தீப்பற்றி எரிந்தன! நல்லெண்ணத்துடன் கல்லால் அடித்தாலும் பொறுத்துக்கொள்வர்! ஆதலால் அவரருகே செல்லமாட்டேன்! என்றான். இதைக் கேட்ட திருமால், ஓ மன்மத! உன்னைப் பிரார்த்திப்பவர்களோ தேவர்கள்! கார்யமோ மூவுலகிற்கும் ஹிதமானது! ஜகத்சிருஷ்டியை விருத்திசெய்யும்படி உனக்கு சிவனே ஆணையிட்டிருக்கின்றார்! ஆதலால் நீ இக்காரியத்தில் ஈடுபட வேண்டும் என்றார்.

மஹாவிஷ்ணோ ! தங்களைப் பிருந்தையினிடமும், நாரதரையும் பர்வதரையும் ஏமாற்றி ஸ்ரீமதியினிடமும், இந்திரனை அகல்யையிடமும், நான்முகனைத் தன் பெண்ணினிடமும் காமனைகொள்ளும்படி யான் செய்யவில்லையா ? விச்வாமித்ரர் முதலிய மஹரிஷிகளைக் காமுகராகசெய்யவில்லையா? சிவன் என்னைக் கொளுத்திவிடுவார்! பயமாக இருக்கின்றது ! என்னை அவரிடமனுப்பாதீர்கள்! என்ருன் மன்மதன். பிரும்மாவுக்குக் கோபம் பொங்கிற்று. பரோபகாரத்திற்காக ததீசி தனது எலும்பைத் தந்தார். சிபிசக்ரவர்த்தித் தனது மாம்ஸத்தைத் தந்தார். கர்ணன் உடன்பிறந்த கவசத்தை அளித்தான். தேவனுகத் தோன்றிய நீ தேவகார்யத்தைச் செய்ய தயங்குகிருய் ! உன்னை நானே சபித்துவிடுகிறேன் ! உனக்கு எவரும் பந்துக்கள் இல்லை! என்ருர். ஸர்வக்ஞனை சிவனிடம் என் அம்பைச் செலுத்தேன் ! நான், யார் சபித்தாலும் சரி ! சிவாபசாரம் செய்யமாட்டேன் ! என்ருன் மன்மதன், பிரும்மாதி தேவர் சபித்தால் அதற்கு ஒரு முடிவு உண்டு ! சிவ கோபத்திற்கு ஆளானவர் மீள்வதேது ? என்ருள் ரதி.

புத்தி காலாநுஸாரியாக ஆகும் என்றபடி காமன் பிரும்ம சாபத்தைவிட சிவகோபம் சிறந்ததெனக் கிளம்பினுன். எல்லோரும் அவனைக் கொண்டாடினுர்கள். ரதி மட்டிலும் அன்பினுல் புருஷனைத் தடுத்தாள். அதை மதியாமல் காமன் சிவனது தபோவநம் சென்று ஒரு புஷ்ப பாணத்தை தொடுத்தார். ஏககாலத்தில் எல்லா மரங்களும் பூத்து கமகமவென மணப்பது பழக்கம். நந்தியின் ஆக்ஞையால் அந்த பாணம் பயனற்றதாயிற்று. இதைக் கண்டு ஏமார்ந்த காமன் நந்தியின் திருவடியை வணங்கி சூரபத்மன் கொடுமையால் தேவர்க்குண்டான தீங்கை அகற்றவே நான் பார்வதி பர்மேச்வரர்களை ஒன்றுசேர்க்க வந்தேன் என்ருன்.

இதைக்கேட்டு நந்தி தேவகார்யத்தை விரைவில் முடித்துச்செல் என்று ஆணையிட்டார். காமன் வேருெரு பாணத்தைத்தொடுத்துச் சிவனை அதற்கு இலக்காக்கினுன். சிவன் சித்தம் கலங்கி சிறிது கோபங்கொண்டு நெற்றிக் கண்ணினுல் அவனை எறித்துச் சாம்பலாக்கினுர். தேவர் அனைவரும் கோபத்தை அடக்கும் அடக்கும் என்று

வேண்டிக்கொண்டிருக்கும் பொழுதே மன்மதன் இறந்தான். தேவர் அனைவரும் நந்தியை வணங்கி உத்தரவு பெற்று சிவனைத் துதித்தார்கள். ஸேனாதிபதியாகத் தம்மிடமிருந்து ஒரு புதல்வன் உண்டாகவேண்டும் என்று வேண்ட விரைவில் உண்டாவான் என அருள்புரிந்தார். பதியைத் தெய்வமாகக் கொண்ட எனக்கு கதி என்ன? என்று ரதி கதறினாள். உடலற்றவனாக இருந்து எனது விவாஹகாலத்தில் உடலைப் பெறட்டும் என ஆசீர்வதித்தார். இதன் பிறகு ஸர்வக்ஞனாய் இருந்தும் உமையாளது உள்ளத்தை அறிந்தும் அவளைப் பரீக்ஷிக்கக்கருதினார். மிகத் தொண்டு கிழவனின் உருவை எடுத்தார். கால் தடுமாறுகின்றது! ஜடை அலைகின்றது! இடுப்பில் வஸ்த்ரம் நிற்கவில்லை! நரையினால் உடலெலாம் ஒரே வெளுப்பாகக் காணப்பட்டது! விபூதி, ருத்ராக்ஷ மணிந்தார்! வேத மோதிக்கொண்டே பார்வதி தவம்புரியும் இடத்திற்கு வந்தார். முறைப்படி அவள் அவருக்கு அர்க்ய, பாத்யங்களைக் கொடுத்தாள். கந்தமூலங்களைத் தந்தாள். சேடிகளைக்கொண்டு சைத்ய உபசாரம் செய்தாள். ஒன்றுமறியாதவரைப்போல், மிக அழகு வாய்ந்தவளும் மஹரிஷிகளால் பூஜிக்கத்தக்கவளுமான நீ தான் பர்வத ராஜ கும்ாரியோ? எதற்காக இங்ஙனம் கடுந்தவம் புரிகின்றாய்? என்று கேட்டார்.

இதைக்கேட்ட தேவி தனது விருத்தாந்தத்தைக் கூறும்படி தோழிகளிடம் கூறினாள். அவர்கள் சிவனையே பதியாக பெறவேண்டுமென பார்வதி கடுந்தவம் புரிகின்றாள். ஓய்மல் அவர் நாமாவை ஜபித்து அவர் கதையைக் கேட்டு கனவிலாவது சிவனைக்காண்பேனா? அவர் என்னை ஏற்பாரா எனக்கதறுகின்றாள். சிவனருள் உண்டாகுபடி தாங்கள் தான் தயை புரியவேண்டும் என்று வேண்டினர். இதைக்கேட்ட கிழவர் பெண்ணே! இது ஸத்யம் தானா? என்றுகேட்க, ஆம்! ஆசைக்கோர் அளவில்லை! பகவான் பக்தரிடம் அன்புகொண்டவர்! என்னாசை பூர்த்தியாக அருள் புரியும் என்றாள்.

ஆஹா! கஷ்டம்! கஷ்டம்! என்ன அறியாமை! இந்த பாபத்திற்கு நான் வேறு உதவி செய்யவோ? நீ குற்றமற்ற சரீரம் வாய்ந்தவள்! ஸர்வ மங்கள வடிவ

மானவள்! சிவனே சுடுகாட்டில் இருப்பவர்! உக்ரமான வர். பாம்பையும் எலும்பையும் அணியாகக்கொண்டவர். அவரை நீ மணக்க மனதினுல் கூட அனுமதிதர நினைக்க மாட்டேன். மங்களமான சிம்ஹாஸனத்தில் அமரவேண் டிய நீ அபஸ்மார ஆசனத்தில் எவ்வாறு அமருவாய்? பட்டு சூத்ரத்தினுல் கங்கணம் கட்டவேண்டிய கையில் ஸர்ப்ப கங்கணத்தை எங்ஙனம் கட்டிக்கொள்வாய்? பட்டு உடுத்தும் நீ இரத்தம் சிந்தும் புலித்தோலை எப்படி உடுத்துவாய். விவாஹாக்னியில் பொரி முதலிய ஹோமங்களைச் செய்வது உலக இயல்பு. சிவனுக்கோ சுடுகாட்டுத் தீதான் பிரியமானது. கிழக்காளையின் மீதமரும் தம்பதிகளைச் சூழ்ந்து பூதப்ரேத பிசாசங்களே தொடர்ந்துவரும். வித்யை, செல்வம், அழகு முதலிய வைகளில் உனக்குச் சமமாக ஒரு வரன் கிடைக்கவில்லையா? கிழவனுயினும் ஸதாசாரமும் தவமுமுள்ள என்னை மணந்துகொள்! என்றூர். இதைக்கேட்டு சிவ சிவ என்று காதை மூடிக்கொண்டாள். தோழிகளே! குணங் களைக் கடந்த்வரும் பிரம்ம விஷ்ணுக்களாலறிய முடியாத வருமான சிவனை நிந்தித்தது போதாதென இன்னும் ஏதோ பேச ஆரம்பிக்கின்றூர் கிழவர்! இவரை அப்புறப் படுத்துங்கள். வேண்டாம்! வேண்டாம்! நாமே அப்புறம் செல்வோம் என்று கோபம் கொண்டு வேறிடம் செல்லக் கிளம்பினுள் பார்வதி.

இதைக்கண்டு பரமசிவன் பரம ஸந்தோஷத்துடன் கூட தனது நிஜ உருவத்துடன் தோன்றி தேவி! உனது தவத்தினுல் என்னை விலைக்கு வாங்கி விட்டாய்! உனக்கு யாது உத்தமவரம் வேண்டும்? என்றூர்? தேவி, அவர் திருவடியை வணங்கி என்னை அங்கீகரித்து அருள்புரிய வேண்டும் என வேண்டினுள். விவாஹ மஹோத்ஸவத்தில் உன் பெற்றோர் எனக்கு உன்னை அளிக்கும்படிச்செய்து விரைவில் உன்னை மணந்து கொள்கிறேன் என்று கூறி ஸப்தரிஷிகளை மனதில் நினைத்தார். உடனே அவர்கள் வந்து பணிந்து நிற்க, தேவகார்யத்திற்காக பார்வதியை மணந்துகொள்ள கருதியுள்ளேன். அவளைப் பெற் றெடுத்து வளர்த்து வந்த ஹிமயமலையினிடம் சென்று பெண்ணை நான் கேட்பதாகச் சொல்லி விவாஹத்திற்கு

ஏற்பாடு செய்யுங்கள் என்ருர். ரிஷிகளங்ஙனமே அங்கு சென்று ஆங்குள்ள தேவியைத் தர்சித்து மனதிஞல் வணங்கி ஹிமவானிடம் ஜகன்மாதாவை ஜகத்பிதாவிற்களி என்று வேண்டிஞர்கள். அன்றியும் பெற்ற தாயின் ஸம்மதத்தைப் பெற்றே கன்னிகையை வரனுக்களிக்கவேண்டும். எல்லேயில்லா மகிமை உள்ளவன் சிவன். உலகுக்கெல்லாம் தந்தையான அவருக்குத் தாய் தந்தையோ உடன் பிறந்தவரோ கிடையாது. ஆதலால் நன்ருக யோசித்து கன்னிகையை இறைவனுக்களியுங்கள் என்ருர்கள். அருந்ததி தக்ஷனது சிக்ஷையைக்கூறி உங்களேப் பெற்ருேராகப் பெற்று சிவனேயே பதியாக அடைய விரும்புகிருள் தேவீ. இயற்கையிலேயே ஸதிபதியாய் உள்ள இவர்களுக்கு மணம் செய்விக்கும் பாக்யம் உங்களுக்குக் கிடைத்தது என்ருள். இதைக் கேட்ட பர்வதராஜன் எல்லோரையும் கலந்து அங்ஙனமே ஆகுக என்றுகூறி த்வஷ்டாவை அழைத்து விவாஹமண்டபம் நிர்மாணம் செய்யும்படி கூறிஞன். அவனும் சிவ கைங்கர்யம் புரிய ஓர் அரிய அவகாசம் கிடைத்ததே என மிக ஆச்சர்யமான அரண்மனேயை அமைத்தான். அதில் ஜலமுள்ள இடம் ஸ்தலம் போலவும் ஸ்தலமுள்ள இடம் ஜலம் போலவும் காணப்பட்டது. உத்தர பல்குனியில் கல்யாணம் செய்விக்க மண்டபத்தில் உமையை அலங்காரம் செய்து அமர்த்தினர். முறைப்படி மங்கள ஸ்நானம் செய்வித்து தேவீ ஸூக்தத்தைக் கூறிஞர்கள். ரிஷி பத்னிகளுடன், திதி, அதிதி, ஸ்வாஹா, ஸ்வதா முதலிய அனேவரும் வந்து சூழ்ந்தனர். பாதம் முதல் தலேவரை திவ்ய ஆபரணங்களால் பார்வதியை அலங்கரித்தனர். ஆபரணத்திற்கு ஆபரணமாய் இருந்தாள் தேவீ. வரனே அழைத்துக் கன்னிகாதானம் செய்வது பிராம்ஹ முறை என நந்தியை நமஸ்கரித்து பகவானே வரும்படி பிரார்த்தித்தான் பர்வதராஜன். நந்தி நினேத்தமாத்திரத்தில் பதிநாலு லோகத்திலுமுள்ள தேவாசுரர் அனேவரும் உருண்டு திரண்டு வந்தனர் அங்கே.

லக்ஷ்மியுடன் விஷ்ணுவும் கலேமகளுடன் நான்முகனும் அங்ஙனமே இந்திரனும் எண் திசை பாலகர்களும் அஷ்ட வஸுக்களும் வந்து சேர்ந்தனர். எங்கும் ஒரே மங்களத்வனி. கௌரீ கல்யாணத்தைப் பாடிக்கொண்டு

அனைவரும் விரைந்துவர, நந்தி வந்தவரில் முக்யமான சிலரை ஒவ்வொருவராக சிவனிடம் அறிமுகப் படுத்தினன். அனைவரும் பகவானை வணங்கி நந்தி காட்டிய இடத்தில் அமர்ந்தனர். அவரவர் கொண்டுவந்த காணிக்கையை ஏற்று விவாஹத்துக்கேற்றபடி சிவன் அலங்காரம் செய்து கொண்டார். அவரது சுந்தர வடிவத்தைக்கண்டு அனைவரும் மோஹமடைந்தனர். தேவர்கள் அனைவரும் அலங்கரித்துக் கொண்டு கைலாசம் முதல் ஹிமவத் பர்வதம் வரை சிவ குணங்களைப்பாடிக் கொண்டிருந்தனர். பகவான் நந்தியின் மீதமர, வேதத்வனி, ஜய சப்தம் ஸ்த்ரீகள் கானம் நாற்புறமும் சூழ கும்போதரன் குடை பிடிக்க பரமசிவன் ஹிமயமலைக்கு வந்து ராஜ மார்க்க வழியாக பவநிவந்தார். திருமால் அளித்த ரத்னபாதுகைகளில் காலை வைத்து இறங்கி உள்ளே நுழைந்தார். புஷ்பங்களையும், பொரியையும் பகவான் மீது இரைத்து சிவனை வரவேற்றார்கள். உமையவளுக்கேற்றவன் சிவன். சிவனுக்கேற்றவள் உமை என்று எல்லோரும் கொண்டாடினர்கள். பலவகையான அலங்காரம் நிறைந்த ரத்ன சிம்மாஸனத்தில் பகவானை முதலில் அமர்த்தினர்கள். பிறகு "கௌரீ கல்யாணம் வைபோகம்" என்ற பாட்டு எங்கும் முழங்க ஸ்வர்ண ஊஞ்சலில் உட்காரவைத்து தும்புரு நாரதர்கள் கானம் செய்ய மங்கள தீபம் ஏற்றி சுற்றி வந்தனர். ஹிமவான் சிவபாதத்திற்கு அபிஷேகம் செய்து அர்ச்சனை செய்தான். மதுபர்க்கமளித்தான்.

कन्यां कनकसंपन्नां सर्वाभरण भूषितां ।
दास्यामि शंभवे तुभ्यं सर्वमङ्गल शोभनाम् ॥

கனகாபரணம் பூண்ட ஸர்வமங்களையான தேவியை சம்புவான உமக்கு அளிக்கின்றேன் என்று கன்னிகா தானம் செய்தான். அச்சமயம் உலகெலாம் உருண்டு திரண்டு வந்ததால் பூமி வடபுறம் தாழ்ந்து தென்புறம் தூக்க ஆரம்பித்தது. ஸகல தேவர்களும் பூமியைக்காக்க வேண்டுமென வேண்ட தனக்கு நிகரான அகஸ்த்யரைத் தென் கோடிக்கனுப்பி விதிப்படி விவாஹ ஹோமம், லாஜ ஹோமம், அம்மிமிதித்தல், முதலிய ஸகல கார்யங்களையும் செய்து முடித்தார். விவாஹத்திற்கு வந்த

அனைவரையும் அவரவர்குத் தகுந்தபடி மரியாதை செய்து ரதீ தேவிக்கு மட்டும் கண்ணில் புலப்படும்படியாக மன்மதனை அளித்தார். மதுபர்க்க சேஷத்தை ஆத்மசுத்திக்காக அமரர் அனைவரும் வாங்கி புசித்தனர். பகவான் பார்வதியுடன் விருஷபாரூடனாக கைலாஸம் சென்றார். பகவானது விவாஹத்தினால் உலகெலாம் வைராக்யத்தை விட்டு இல்லற மார்க்கத்தில் ஈடுபட்டது. பகவான் தேவியுடன் கூட ஏகாந்தமாக பல்லாண்டு காலம் ரமித்துக்கொண்டு இருந்தார். அமரர் அனைவரும் மேருமலையில் கூடி தாரகனை கொல்வதற்கேற்ற சிவ குமாரன் இன்னும் உண்டாகவில்லையே என வருந்தினர். பிரம்மாவின் சொற்படி இந்திரன் வாயுவை அழைத்து தம்பதிகள் என்ன செய்கின்றார்கள் என்று பார்த்துவா என்றனுப்பினான். வாயு அது சிவாபசாரமாகும் என்று சொல்லி மறுத்தார். சிவனது அஷ்டமூர்த்திகளில் நீ ஒருவன் ஆதலாலும் உனக்கு உருவமில்லாததாலும் நீ தான் போக வேண்டுமென்று வாயுவை வற்புறுத்தி அனுப்பினான் இந்திரன். வாயு அங்குசென்று நந்தியைக்கண்டு பயந்து கொண்டே மெதுவாக உள்ளே செல்ல முயற்சித்தார். நில்! உள்ளே நுழையாதே! வெளியில் செல் என்று நந்தி கூறியதைக்கேட்டு நடுங்கி திரும்பிவிட்டார். எல்லோரும் கைலாஸம் சென்று நந்தியை பிரதக்ஷண ஸ்தோத்ரங்களால் அர்ச்சித்து, உள்ளே செல்ல உத்தரவு கேட்டனர். பகவானது உத்தரவை ஞானதிருஷ்டியாலறிந்த நந்தி அவர்களை உள்ளே அனுப்பினார். எல்லோரும் உள்ளே சென்று ஸ்தோத்ரம் செய்து ஸேனாதிபதியை உண்டு பண்ணும்படி வேண்டினர்.

சிவன், ஸ்கந்தன் உண்டாகவேண்டும் என்ற எண்ணத்தோடு தனது ஆறுமுகங்களால் மடியில் உள்ள அம்பிகையைப் பார்த்தார். அந்த க்ஷணத்தில் ஊர்த்தரேதஸ்ஸான சிவனது நெற்றிக் கண்களிலிருந்து ஆறுபொறிகள் கிளம்பின. அவைகளின் வேகத்தைத் தாளாமல் தேவர்கள் சிவனைச் சரண்புகுந்தார்கள். அவர் வாயுவையும் அக்னியையும் அழைத்து கங்கையில் கொண்டு விடும்படி உத்தரவிட்டார். அவர்களும் அதை வஹிக்க சக்தி இல்லாமல் சிவனை வேண்ட அவர்களுக்குச் சக்தியளித்தார். இரு

வரும் மிகசிரமத்துடன் கங்கையில் கொண்டுவந்து சேர்த்தனர். கங்கையின் ஜலம் இந்த தேஜஸ்ஸால் விழுங்கப்பட்டு ஜலம் குறைந்தது. ஆங்குள்ள சரவணத் தடாகத்தில் தங்கிய சிவசக்தி ஆறுமுகமும் பன்னிரண்டு புஜங்களும் இரு கால்களுமுள்ள ஒரு குழந்தையாகத் தோன்றிற்று. கோடி சூர்யப்பிரகாசமான அழகிய குழந்தை தோன்றியபொழுது ஆகாயத்திலிருந்து பூமாரி பொழிந்தனர் தேவர்! துந்துபி முழங்க! அப்ஸரஸ்ஸுகள் ஆட! கந்தர்வர் கான்ம்பாட! திக்குகள் தெளிய! சாதுக்கள் மனம் ஸந்தோஷம் அடைய! எங்கும் ஆனந்தமயமாய் இருந்தது! தாரகாதிகளைக் கொன்று வானவருக்கு வெற்றி அளிக்கவந்த வீரன் என்று ஆகாயத்தில் சூழ்ந்து நின்றனர் விண்ணவர்.

திருமால், ஆறு கிருத்திகளை அழைத்து அவருக்குப் பால் அளிக்கும்படிக் கூறினார். அவர்களங்கு வந்தவுடன் ஆறுபேரையும் சந்தோஷப்படுத்த ஆறுமுகன் ஆறு குழந்தைகளாகத் தோன்றி பாலை அருந்த லீலை செய்தார். ஒருவனையே வேண்டினோம். ஆறு குழந்தைகள் கிடைத்தனர் என்றனைவரும் அகமகிழ்ந்தனர். முன் தேவர்கள் உள்ளே வந்தவுடனே சிவனது மடியிலிருந்த உமை பறபறப்புடன் அவரது மடியைவிட்டு இறங்கி வேகமாகச் சென்றாள். அச்சமயம் அவளது பாதசரத்திலிருந்து நவரத்னங்கள் சிந்தின. என்னிடம் சிவகுமாரன் உண்டாகாதபடி செய்ததால் கோபங்கொண்ட தேவி இனி தேவர்களுக்குத் தன் பத்னிகளிடம் குழந்தை பிறக்காது எனச் சபித்தாள். நவரத்தினங்களிலும் தேவியினது நிழல் பட அந்த ஒன்பதும் ஒன்பது கன்னிகைகளாகக் கிளம்பின. அவர்கள் மிகசுந்தரவடிவனான சிவமுகத்தை ஆசையுடன் நோக்க உடனே கர்பிணியாக ஆனார்கள். இதைக்கண்டு தேவி தன்னிடம் சந்ததி உண்டாகாமல் இவர்களிடம் சந்ததி தோன்றிற்றே என்று அவர்களைப் பிரசவிக்காமல் இருக்கும்படிச் சபித்தாள். இதைக்கேட்டு வருந்திய நவகன்னிகைகளின் வேர்வையிலிருந்து நூறு லக்ஷம் வீரர்கள் உண்டானார்கள். ஈசன் ஆணையினால் நவகன்னிகைகள் தேவிக்குப் பணிவிடை செய்தார்கள். பரமசிவனது கருத்தை உணர்ந்து பார்வதி அவர்களுக்கு

விரைவில் பிரசவமாகும்படி அருள்புரிந்தார். அதனால் சிவந்த ரத்னத்திலிருந்து ஜனித்த ரக்தவல்லி என்பவள் வீரபாகுவை உண்டு பண்ணினாள். 2. முக்தாமணியிலிருந்து உண்டான தரலவல்லி என்பவள் வீரகேஸரியை உண்டுபண்ணினாள். 3. புஷ்யராகத்திலிருந்து உண்டான பௌஷ்யவல்லி வீர மாகேந்திரனுக்குத் தாயானாள். 4. கோமேதகத்தில் இருந்து உண்டான கோமேத திலகா வீரமாஹேச்வரனைப் பெற்றாள். 5 வைடூரியத்திலிருந்து உண்டானவள் வீர புரந்தரனையும், 6 வஜ்ர மணியிலிருந்து பிறந்தவள் வீரராக்ஷஸனையும், 7 மரகதத்திலிருந்து உண்டானவள் வீரமார்த்தாண்டனையும், 8 பவழவல்லியிலிருந்து தோன்றியவள் வீராந்தகனையும், 9 இந்த்ர நீலத்தில் இருந்து தோன்றிய நீலவல்லி வீரதீரனையும் உண்டு பண்ணினாள். இந்த நவ வீரர்களும் தங்கள் தாய்மாருடன் தேவனையும் தேவியையும் வணங்கிப் போற்றினார்கள். உங்களுக்குத் தலைவனாக வரும் ஸ்கந்தனை அடுத்துப் போரில் அவனுக்கு உதவி புரிந்து தேவகாரியத்தைச் செய்யுங்கள் என உத்தரவளித்தார். சரவணப் பொய்கையில் ஸுப்ரமண்யன் ஜனித்ததையும் தேவர்கள் உற்சாகத்துடன் உற்சவம் கொண்டாடுவதையும் ருத்ர கன்னிகைகள் சிவதம்பதிகளிடம் தெரிவித்தனர். பார்வதி பரமேச்வரர் அங்கு கிளம்ப தேவர்களனைவரும் முன்னே சென்று வரவேற்றனர். இருவரும் அங்கு சென்று தாமரைமலரில் தனித்தனி உருவத்துடன் விளையாடும் குமாரர்களைக்கண்டு ஆனந்தமடைந்தார்கள். பரவசமானார்கள்.

விருஷபத்திலிருந்திறங்கிவந்து தேவி இக்குழந்தைகளனைவரையும் இரு கரங்களாலும் ஆசையுடன் ஆலிங்கனம் செய்துகொண்டாள். ஆறும் ஒன்றுசேர்ந்து முன் போலவே ஆறு முகங்களும், இரு கால்களும், பன்னிரு கரங்களும், பதினெட்டு கண்களுமாகத் தோன்றினார் சிவ குமாரன். தாய் அன்போடணைத்து பாலளித்தாள். ஆறு முகங்களால் வித்யாமயமானதும், க்ஞானமயமானதும், பவித்ரமாயும் உள்ளதுமான தாயின் பாலைப் பருகினார். அவர் முக கமலத்திருந்து சிந்திய பால் திவலைகளை அருந்திய மீன்கள் முனிவடிவம் தாங்கி குமரனையும் பார்வதி

பரமசிவனையும் வணங்கித் துதித்தார்கள். அவர்கள் பராசராது புதல்வர்கள். மத்ஸ்யங்களை ஹிம்ஸை செய்து தந்தையினாலேயே மத்ஸ்யமாகும்படிச் சபிக்கப்பட்டவர்கள். குகனது அருளால் தன்னுருவத்தை அடைந்தார்கள். பார்வதிதேவி சிவனுடன் குழந்தையை மடியில் ஏற்றி விருஷபாரூடராகக் கிளம்பும் பொழுது கிருத்திகைகளை நோக்கி நீங்கள் பால்கொடுத்த தினத்தில் உங்களை உபாசிக்கின்றவர்களுக்கு ஸத்புத்ரன் உண்டாவான் என ஆசீர்வதித்தார்கள். அதே கிருத்திகை விரதமாம்.

இந்த குமார ஸம்பவ அத்யாயத்தைப் படித்தாலும் கேட்டாலும் மலடியும் கூட குழந்தையைப் பெறுவாள்.

குமார லீலை.

பிரணவப் பொருளாகத் தோன்றிய பரமன் பெற்றோருக்கும் மற்றோருக்கும் மனங்களிக்குமாறு எண்ணிறந்த லீலைகளைச் செய்தார். இளமைப்பருவமே அழகுள்ளது என்றும் குமரனாய் உள்ள முருகனழகை வர்ணிக்க ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனும் அசக்தனாவன். இயற்கை அழகுபெற்ற ஸ்கந்தனுக்கு ஆபரணங்களால் அழகுபடுத்தி கண்ணாரக்கண்டு களித்தாள் உலகமாதா. காலில் பாதஸரமும், இடுப்பில் கிங்கிணீ நாதமுள்ள சலங்கையும் இரு கரங்களிலும் அணிந்த கங்கணமும் மார்பில் அணிந்த நவரத்னமாலையும் குழந்தையை அழகுபடுத்துவதற்குப் பதிலாகத் தாங்களே அழகாயின.

முதலில் திருவிளையாடல் தந்தையிடமிருந்தே துவக்கப்பட்டது. தந்தையின் வாஹனமான விருஷபம் எதிரில் நிற்க அதன் தினவை அகற்ற கரங்களால் சொறிந்தார். அது மெய்மறந்து கழுத்தைத் தூக்கிக்காட்டி காலைப் பரப்பி வாலைத் தூக்கி இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும்பொழுது தன் காலால் அதன் காலைத் தட்டிவிட்டார் குழந்தை குமரன். அது உடனே பூமியில் விழ எல்லோரும் சிரிக்க ! குழந்தை ஓடி ஒளிந்தான்.

ஒரு வீட்டில் நுழைந்து மற்றொரு வீட்டில் தோன்றுவார். ஒரு நிமிஷத்தில் வீட்டிலும் மரத்தின் மீதும் வனத்திலும் கடலிலும் விண்ணிலும் மண்ணிலும் தோன்றித் தான் எங்குமுள்ளவன், எல்லாமாயுமுள்ளவன் என்பதை

என்பித்தான். ஏழு கடற்கரைகளையும் காலால் உதைத்து ஏழுகடலையும் ஒருகடலாக ஆக்கினர். மலையிலிருந்து மலைக்குத் தாவுவார். ஜ்யோதிச் சக்ரங்களையும் நக்ஷத்ர மண்டலங்களையும் கையால் உலுக்குவார். லோகாலோக பர்வதத்திலே தாவுவார். வைகுண்டம்சென்று கருடனையும் சேஷனையும் யுத்தம் செய்யச் சொல்லி பார்ப்பார். இரு கரங்களாலும் மாட்டையும் சிம்ஹத்தையும் பிடித்துச் சண்டையிடச் செய்வார். ஸத்யலோகம் சென்று பிரம்மாவின் சிகையையும் யக்ஞோபவீதத்தையும் முடிந்து விளையாடுவார். யானைமீதும் சிம்ஹத்தின்மீதும் மான்மீதும் புலிமீதும் சரபத்தின் மீதும் பக்ஷிகள் மீது மேறி சவாரி செய்வார். ஒரு ஸமயம் ராஜ புத்ரனைப்போல் காணப் படுவார். வீணை வேணு முதலிய வாத்தியங்களைக் கொண்டு விளையாடுவார். இங்ஙனம் அத்புதமாய்ச் செய்த லீலைகளைக் கண்டு தேவர் அஞ்சினர்.

முறையே இந்திரனிடம் சென்று முறையிட்டனர். இந்திரன் ஐராவதத்தின்மீது ஏறிவந்து, அச்சமயம் மேரு மலையின் சிகரத்தைக் கையால் பிடுங்கி பந்தாடுவதைக் கண்டான். அவர் பரமன் தங்களுக்கு உதவ வந்தவர் என்பதை மறந்து அவர்மீது அக்ஞானத்தால் சரவர்ஷங்களை வர்ஷித்தான். அவைகள் அனைத்தும் அவரிடம் புஷ்ப வர்ஷமாகச்சென்றன. ஒப்பற்ற வஜ்ராயுதமும் அவரிடம் சென்றவுடன் தூள் தூளானது. பாலசுப்ரமண்யன் ஒரே சரத்தினால் ஐராவதத்தை அடித்து வீழ்த்தினன். இந்திரன் சக்தி ஆயுதத்தைக் குமரன்மீது விட அது ஓர் புல்போல் அவர்மீது வீழ்ந்தது. குமரனது சரத்தால் இந்திரன் மூர்ச்சையாகிக் கீழே விழ அவனுக்குச் சகாயமாக யமன் வருணன் வாயு முதலிய அஷ்டதிக் பாலகர்களும் வந்தார்கள். அனைவரையும் வென்று கீழேவிழும்படிச்செய்தார். நாரதர் பிருஹஸ்பதியிடம் இதை முறையிட அவர் ஓடிவந்து பகவானைத் துதித்து பக்தர்களை மன்னித்து எழுப்பும்படி வேண்டினர். அங்ஙனமே அவரருளால் எழுந்த அமரர் அவரைத் துதித்தனர். அவர்களுக்குப் பக்தியையளித்து தனது விச்வரூபத்தையும் காட்டினர் கருணாமூர்த்தியான ஸ்கந்தன்.

விச்வரூப தரிசநம்.

தன்னுருவத்தைப் பார்ப்பதற்கேற்ற திவ்ய கண்களைத்தந்து உலகெலாம் வியாபித்திருக்கும் தனது விச்வரூபத்தையும் காண்பித்தார். அதில் கீழேழு லோகமும் பாதமாம். ஏழுத்வீபங்களோடு கூடிய பூமி முழங்கால். ஏழு கடலும் உடை. பத்து திசைகளும் கால்கள். ஆகாயம் நாபி. தியுலோகம் தலை. சந்த்ர சூர்ய அக்னிகள் கண்கள். மேகமே கேசம். நக்ஷத்திரங்கள் புஷ்பங்களாயின. சிவன் ஆத்மா. கௌரீபுத்தி. இடதுபுறம் திருமால், வலதுபுறம் நான்முகன். ஸரஸ்வதியே வாக் லக்ஷ்மி அழகானுள். வாயு பிராணன். கோபம் காலாக்னி ருத்ரன். அக்னி ஜாடராக்னி. அனந்தன் முதலிய ஸர்ப்பங்கள் பாதசலங்கை சங்கிலிகள். ஓஷதிகள் ரோமங்கள். ரோமத்திலுள்ள ஈறுகள் அண்டங்கள். கோடி சூர்ய பிரகாசமான ரூபம், கோடி சந்திரன்போல் குளுமையானது. இத்தகைய விச்வ ரூபத்தைக் கண்டு அமரர்களது கண் விழிகள் மழுங்கின. அனைவரும் நடுங்கி பகவானைத் தோத்திரம் செய்தார்கள். பழைய அழகிய உருவம் எடுக்கும்படி வேண்டினார்கள். கோடி மன்மதனுக்கு ஒப்பான உருவத்தை எடுத்து காக்ஷி அளித்தார். தாரகனால் சிறையிடப்பட்ட ஜயந்தன் முதலிய அனைவரையும் விடுவித்து அரக்கர்களையும் கொன்று சுவர்க்கத்தை அளிக்கும்படி வேண்டினார்கள். அங்ஙனமே ஆகட்டும் என்று கைலாஸம் சென்றார். ஸ்கந்தனுக்கு ஸேனாதிபதி பட்டாபிஷேகம் செய்ய அரிய நகரமைக்கும்படி த்வஷ்டாவுக்கு உத்திரவிட்டார்கள்.

ஸேநாதிபதி பட்டாபிஷேகம்.

ஸ்கந்தபுரம் என்ற அநேக யோஜனை தூரம் விசாலமான ஓர் நகரமமைக்கப்பட்டது. கொடி ஸ்தம்பமண்டபமும் ஆகாயமளாவிய கூட கோபுரமும் மாட மாளிகைகளும் நிறைந்திருந்த அந்த நகரம் ஸகல லோகங்களுக்கும் மேலாக இருந்தது. ரத்ன மண்டபத்தில் நவரத்னங்கள் இழைத்த சிம்மாஸனம் கோடி சூர்யப் பிரகாசமாக இருந்தது. அதில் சுப்ரமண்யனை அமரச் செய்தார்கள். பிரும்மா முதலிய தேவர்களும், மஹரிஷிகளும் பிராம்மாண்டத்திற் கிடையில் உள்ள ஸகல புண்ய தீர்த்தங்

களையும் கொண்டு வரும்படிச் செய்தார்கள். வஸிஷ்டர் முதலிய பிரம்மரிஷிகள் நவரத்னங்களும் ஔஷதி ரஸங்களும் நிறைந்த புண்ய தீர்த்தங்களால் ஸேநாபதியாக குஹனுக்கு அபிஷேகம் செய்தார்கள். அஷ்டாதச வாத்யங்களும் முழங்க, பாரிஜாதமலர் மழைபொழிய, தேவர்களின் ஆடல் பாடலுடன் ஷோடசோபசார பூஜையையும் செய்தார்கள். விஷ்ணுமுதலிய தேவர்கள் தங்கள் தங்கள் ஸேனைகளை அவர் முன்னே நிறுத்தி காணிக்கைகளைத் தந்து ஸேநாநாயகனை வணங்கினர்கள். ஸ்கந்தன் ஸேனாதிபதியாக வந்தபின் தன் பகைவர் அனைவரும் அந்த க்ஷணமே அழிந்ததாகவே எண்ணி தேவர் ஆனந்தமடைந்தனர்! போற்றினர்.

ஆடு வாஹனமானது.

நாரதர் எனும் ஓர் மஹரிஷி அரிய வேள்வியைச் செய்யத் துவக்கினர். அதிலுள்ள ஆடானது துள்ளிக் குதித்து வேள்வியில் ஈடுபட்ட முனிவர்கள் எல்லோரையும் முட்டித்தள்ளி ஹிம்ஸித்தது. அதை அடக்க எவராலும் முடியவில்லை. யாகசாலையில் மட்டுமல்லாமல் பூமியில் உள்ள அனைவரையும் ஹிம்சித்தது. ஆகாயத்திலும் கிளம்பி திக்கஜங்களை எல்லாம் கீழே தள்ளிற்று. மேகமண்டலத்திற்குச் சென்று கர்ஜித்தது. இந்திரன், திக்பாலர், பிரும்மா, விஷ்ணு முதலியவர்களின் உலகங்களில் சஞ்சாரம் செய்து ஆங்குள்ளவர்களையும் நடுங்கும்படிச்செய்தது. இதைக்கண்டு அனைவரும் பயந்து நடுங்கி ஸேனாதிபதியின் திருவடிகளில் சரண்புகுந்தார்கள்.

அந்த அஜத்தைப் பிடித்துவா என அவர் வீரபாகுவுக்குக் கட்டளையிட்டார். அவர் எங்கும் அதைத் தேடி வைகுண்டத்தில் கண்டுபிடித்து குஹனிடம் இழுத்து வந்தார். அதன் மீதேறி சாட்டையால் அடிக்க பதினன்கு உலகிலும் பகவானுடன் சுற்றிற்று அது. அதன் பலம் ஒடுங்கிற்று. அஹங்காரம் அகன்றது. பகவானைச் சுமந்ததால் நல்லறிவும் உண்டானது. அவரைத் துதித்தது. ஸந்தோஷமடைந்து அக்கிபோல் தானும் ஆட்டை வாஹனமாகக்கொண்டார். இது இல்லாமலே வேள்வி பூர்த்தியாகி நூறுயாக பலனைத் தரும் என நாரதரை அநுக்கிரஹித்தார்.

பிரும்மனுக்குச் சிக்ஷை.

வழக்கப்படி சதுர்முகன் தன் பரிவாரத்துடன் கைலாஸ நாதனை ஸேவிக்க ஆலயம் வந்தார். குஹன் தோழர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார். பிரும்மா, அவர் பரமாத்மா என்பதை மறந்து கவனியாமல் சிவ தர்சநம் செய்துவிட்டுக் கிளம்பினர். குஹன் விளையாட்டாக நீ யார்? என்று வினவினர். உடனே அவர் ஸ்வரூபத்தைச் சிறிது உணர்ந்து நான் பிரும்மா என நமஸ்காரம் செய்து அன்போடு என்னை அழைத்து என் நமஸ்காரத்தை ஏற்றீர்கள்! நான் போய்வருகிறேன் என்றார். போகலாம்! தங்களுக்கு என்ன யோக்யதை? கூறுங்கள் என்றார் ஸேநாபதி. ஸமஸ்த வஸ்துக்களையும் படைப்பவன் நான். வேதம் முதலிய பதினெட்டு வித்யைகளையும் அறிவேன் என்று அவர் கூற ஆனால் முதல் வித்யையைச் சிறிது கூறுங்கள். உங்களது ரூபமே மஹிமையை வெளியிடுகிறது. தோழர்களே! என்னுடன் கேளுங்களதை என்று கூறினர். பிரும்மா, ஓம் என்று ஆரம்பித்தார். உடனே போதும்! போதும்! அதன் கருத்தைச் சிறிது கூறுங்கள் கேட்போமென்றார் சரவணபவன். அதன் பொருள், நானே! என்று பிரும்மா கூறினர். தவறான இதைக் கேட்ட ஸ்கந்தன் நினைத்தபடி வீரபாகு பிரும்மாவைக் கன்னத்திலறைந்து ஸ்கந்தகிரியிலுள்ள சிறையில் அடைத்துவிட்டார்.

உலகஸ்ருஷ்டியைத் தானே செய்துவந்தார் ஸ்கந்தன். தேவரனைவரும் சிவனைச் சரணம் அடைந்து பிரும்மனை விடுவிக்கும்படி வேண்டினர்கள். அவர் நந்தியிடம் அவரை விடும்படி கூறியனுப்ப நந்தி வணங்கி பயத்துடன் சிவாக்ஞையைக் குஹனிடம் தெரிவித்தார். கோபங்கொண்ட பாலஸுப்ரமண்யன், வந்த வழியே செல்! என்று மிரட்டி விரட்டினர். இதைக் கேட்ட சிவன் பார்வதியுடன் தானே ஸ்கந்தகிரிக்குச் சென்றார். தந்தையைக் கண்டவுடன் ஓடிவந்து அவர் திருவடியை வணங்கினர் ஸ்கந்தன். சிவன் இருகரங்களாலும் அவரைத் தழுவி உச்சி முகர்ந்தார். எனினும் அவர் சிறிது கோபத்துடன், குழந்தாய்! என் ஆக்ஞைப்படி ஏன் பிரும்மாவைச் சிறையிலிருந்து விடவில்லை? என்றார். தனது கணத்தில் ஒரு

வனை அனுப்பி சிவனெதிரே கொண்டுவந்து பிரும்மாவைக் கட்டவிழ்த்து விட்டார் குஹன். சிவன் குழந்தையை மடிமீது வைத்து முத்தமிட்டு ஏனவரைச் சிறையிலடைத்தாய்? என, பதினான்கு உலகிற்கும் நான் அதிபன் என்ற. அதிகாரமலத்தால் பிரணவார்த்தத்தை விபரீதமாகக் கூறினர் அவர் என்றார் ஷண்முகன்.

ஆனல் நீ சரியாகக் கூறு என சிவன் கேட்க, ரஹஸ்யமான மஹாமந்த்ரார்த்தத்தை எப்படிப் பலர் முன்னிலையில் கூறுவது? என்றார் குஹன். ஆனல் என் காதில் ரஹஸ்யமாகக் கூறென சிவன் அவரை மார்மீதணைக்க, சிவன் மநங்குளிர அழகாக உரைத்தார். இதைக் கற்க அகஸ்த்தியர் ஒருவரே யோக்யர். அவரைச் சிஷ்யனாகக்கொண்டு உபதேசம் செய் என்றார். உமைக்குச் சிவன் குஹனது மஹிமையையும் அவனது நாமத்தின் பொருளையும் அவன் ஆக்ஞையால் ஐந்துபூதங்களும் தத்தம் வேலைகளைச் செய்கின்றன என்றும் வர்ணித்தார். குஹனது விபூதியை வர்ணிக்கும் பொழுது, தேவரில் விஷ்ணு, அவதாரங்களில் ராமன், பாண்டவரில் தநஞ்ஜயன், பலமுள்ளவரில் வாயு, தைத்யரில் ப்ரஹ்லாதன், மிருகங்களில் ஸிம்மம், மரங்களில் அச்வத்தம், பக்ஷியில் கருடன் என்பதுபோல் பல விஷயங்களைக் கூறினர். பெரும்பாலும் இது கீதையிலுள்ள விபூதி அத்யாயத்தை ஒத்திருக்கிறது.

குஹனது பெருமை பதினான்கு உலகிலும் பாடப்பட்டது. உபேந்த்ரருடைய கண்களிலிருந்து உண்டான அமிருதவல்லீ ஸௌந்தர்யவல்லீ என்ற இருவர்களும் அதைக்கேட்டு குஹனைப் பதியாகப் பெற ஆசைகொண்டனர். விபூதி ருத்ராக்ஷ மணிந்து சரவணபவனது ஷடக்ஷரியை ஜபித்தனர். ஸுப்ரமண்யன் அவர்கள் எதிரே தோன்றி அமிருதவல்லியை இந்த்ரனிடமிருக்கும்படியும், ஸௌந்தர்யவல்லியைப் பூமியில் சிவமுநிவரிடம் இருக்கும்படியும் ஸமயத்தில் அவர்களை மணப்பதாகவும் கூறினர். சிவனும் பார்வதியும் ஸ்கந்தனை அருகிலமைத்து அவனழகில் மூழ்கிகின்றனர். அதே ஸோமாஸ்கந்தமூர்த்தி எனப்படும். அச்சமயம் தேவர் வந்து நந்தியின் உத்தரவு பெற்று ஸோமாஸ்கந்தனை வணங்கித் துதித்து சூரன் தாரகன் முதலிய அஸுரர்களைக் கொன்று தங்களுக்கு தேவராஜ்யத்தைத் தரவேண்டும் என வேண்டினர்.

சிவாக்ஞை பெற்று பெற்றோரைப் பணிந்து கோடிக் கணக்கான கணங்களும் லக்ஷக்கணக்கான ஸேனைகளும் நூற்றெட்டு ஸேனாபதிகளும் சூழ முநிவர்களின் ஆசிர்வாதத்துடன் அஷ்டாதச வாத்யங்கள் முழங்க ஸ்கந்தன் கிளம்பினார் போர் கோலத்துடன். தேவர் பூமாரிப் பொழிந்து ஜய கோஷம் செய்தனர். பிரும்மாவின் உத்தரவுபடி த்வஷ்டா அனைவர்க்கும் திவ்ய ரதங்களையும் அரிய ஆயுதங்களையும் படைத்து அளித்தார். ஸேனைகளின் பாததூளி ஸூர்ய மண்டலத்தை மறைத்தது. வீரபாஹு முதலிய கணங்களும் விஷ்ணு முதலிய தேவர்களும் முநிகணங்களும் கோஷ்டி கோஷ்டியாகப் பின் தொடர்ந்தனர். ஜய கோஷமும் வீரநாதமும் வானைப் பிளந்தது.

தாரகவதம், கிரௌஞ்சனைப் பிளத்தல்.

வீணாபாணியாக நாரதர் வந்து ஸ்கந்தனை வணங்கி பிரபோ! கிரௌஞ்சனெனும் கொடிய அரக்கன் அகஸ்த்தியரது சாபத்தால் மலையாகி நிற்கின்றான். அவனருகே சூரபத்மனது ஸஹோதரனான தாரகனும் ஸிம்மவக்த்ரனும் வஸிக்கின்றனர். முதலில் கிரௌஞ்சனைப் பிளந்தெறிந்து பிறகு மற்றவர்களைக் கொல்லுங்கள் என்று விக்ஞாபித்தார். வீரபாகுவுடன் சிறிது ஸேனையை அனுப்பி அவனுடன் யுத்தம் செய், பின்னால் நான் வருகிறேன் என்றார் குஹன். அஸுரர் நகரமான மாயாபுரியில் ரக்த மழை, அரண்மனை கோபுரம் இடிந்து விழுதல் கொடி அறுந்து விழுவது, கொள்ளிக்கட்டை விழுவது, வீரர் தலையில் ஓணான் விழுவது, ஜலத்தில் இந்த்ர தநுஸ் தோன்றல் முதலிய பற்பல அபசகுநங்கள் தோன்றின. அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் தாரகன் பல்லாயிரம் ஸேனைகளுடன் போருக்குக் கிளம்பினான். இரு ஸேனைகளும் கைகலந்தன. வீரவாதம் செய்து கடும்போர் புரிந்தன. இருபுறத்திலும் ஜயமோ அபஜயமோ தோன்றவில்லை. நாட்கள் பல ஆயின.

முடிவில் வீரபாகுவின் வீர்யத்தைக் கண்டு தாரக ஸேனைப் பயந்து ஓடிற்று. கோபங்கொண்டு தாரகன் கதை ஏந்தி குஹன் படையில் புகுந்தான். பாணவர்ஷந்

தாலும் கதையாலும் கையாலும் காலாலும் பலரைக் கொன்று குவித்தான். கதையால் பூமியை ஓரடி அடிக்க பூமியே இரண்டாகப் பிளந்தது. ஓடிவந்தான் வீரகேஸரி. தாரகனை எதிர்த்து நின்ருன். மன்மதனும் சம்பரனும் போரிடுவது போலிருந்தது. வீரகேஸரி சரவர்ஷத்தால் தாரகன் கிரீடத்தை அடித்து தாரகனுடனதைக் கீழே வீழ்த்தினர். எழுந்து வீராவேசத்துடன் வந்து வீரகேஸரியை மூர்ச்சையாக்கிக் கீழே தள்ளினன். வீரபாகு ஓடிவந்து தாரகனை எதிர்த்தார். அவரையும் அடித்து மூர்ச்சை யாக்கினன் அஸுரன். மற்ற வீரேந்திரன் முதலிய வீரர்கள் வந்து தாரகனுடன் யுத்தம் செய்தனர். அவர்களேயும் அடித்து வீழ்த்தினனவன். வீரபாகு மறுபடியும் வந்து யுத்தம் செய்யும் பொழுது தாரகன் விஷ்ணு சக்ரத்தை விழுங்கி விட்டவனை என்னேடு போர் புரிந்து எவர் பிழைப்பர்? என வீரவாதம் செய்தான்.

இருவரும் திவ்யாஸ்த்ரங்களால் திவ்யாஸ்த்ரங்களை அடக்கினர். தாரகன் மாயாஸ்த்ரத்தால் குஹ ஸேனையை மயக்கிக் கிரௌஞ்ச மலையில் புகுந்தான். கிரௌஞ்சன் மாயையால் அங்கு எண்ணிறந்த வழிகள் காணப்பட்டன. எந்த வழியாகச் சென்ருலும் வெளிவர முடியாமல் மலைக்குள் சுற்றிக்கொண்டிருந்தது. வீரபாகு ஸேனை நவவீரரும் ஐம்பத்துநான்கு ஸேநாபதிகளும் இங்ஙனம் சுற்றும் போது தாரகன் வெளியிலிருந்து அவர்களது ஸேனையை நாசம் செய்தான். நாயகனின்றி நாசமடையும் தேவ ஸேனையைக்கண்டு நாரதர் குஹனிடம் தெரிவித்தார். ஸ்கந்தன் அதிவேகமாக தேவ ஸேனையுடன் வந்து அஸுர ஸேனையைத் தாக்கினர். தாரகன் அவர் யாரென அறிய தூதனை அனுப்ப அவன் வந்து "அவர் சிவகுமாரன். மஹாவீரன். தந்தைக்கே குருவாய் பிரணவப் பொருள் கூறியவன். சிவனும் மற்றெவனும் அவனை ஜயிக்க முடியாது" என்ருன்.

தாரகன் ஸ்கந்தனை நேரில் தர்சித்து பக்தனைப்போல் பரவசப்பட்டான். மெய்மறந்தான். குமரா! தேவாஸுரர்க்குப் பிறப்புமுதல் தாயாதிச்சண்டை உண்டு. தேவர்க்குப் பரிந்துவரும் விஷ்ணுவே எங்கள் பகைவன். பரம சிவனை நாங்கள் பூஜிக்கின்ருேம். சிவகுமாரனை

உன்னையும் அர்ச்சிப்போம். ஆனால் நீர் யுத்தரங்கத்தை விட்டகலும் என்றான். சரணமடைந்தவரைக் காப்பதும் துஷ்டரைச் சிக்ஷிப்பதும் எமது தர்மம். சிறையிலுள்ள தேவர்களைவிட்டு பாதாளம் சென்றால் பிழைக்கலாம். என்னைச் சிறுவனென்று அவமதிக்காதே! என்றார் குமரன். குழந்தாய்? பிரும்மா விஷ்ணு முதலிய அனைவரையும் ஜயித்தவன் நான். விஷ்ணு சக்ரத்தையும் நுணிமழுங்கச் செய்தேன். மிக க்ரூரகுணமுள்ள எங்களிடம் சிக்காதே. தாயிடம் செல் என்றான் தாரகன். தாரக! எங்கள் வீரபத்ரர் அணிந்திருக்கும் முண்டமாலை விஷ்ணு சக்ரத்தை விழுங்கிற்று. சக்ரத்தை ஜயித்தது ஒரு பெருமையா?

சிவ பக்தரான ததீசிமுனிவர் எலும்பாலாகியது தான் அது எனக்கூறி பகைவன் மீது பாணத்தை விட்டார். தாரகனும் பற்பல திவ்யாஸ்த்ரங்களை விட்டான். அவை அஞ்ஜலி செய்து குஹனைப் போற்றிச் சென்றன.

பிரும்மாஸ்த்ரம் அடிக்கோர் நமஸ்காரம் செய்து மறைந்தது. குஹன் ஒரே நிமிஷத்தில் அவனைக் கொல்லக் கூடுமானாலும் லீலையாக அவனுடன் யுத்தம் செய்தார். அவன் வில்லையும் தேரையும் முறித்தார். யானை முகத்துடன் வந்த அவன் துதிக்கையை அறுத்தார். மாயையால் மறைந்து கிரௌஞ்சனுடன் சேர்ந்து முப்புர அஸுரனாகி யுத்தம் செய்தான். குஹன் த்ரிபுராந்தனாகி சிக்ஷித்தார். மேகமாகவந்தவனை வாயுவாகிக் கலைத்தார். கடலாகவந்தவனை படபாக்நியாகி விழுங்கினார். அந்தகாரவடிவனான அவனைச் சூர்யனாகி நீக்கினார். ஏழுமலை வடிவமான அவனைத் திக்கஜமாகி வஜ்ரத்தாலும் தாக்கினார். தீயாக வந்த அவனை வாயுவாகி அவித்தார். முடிவில் சக்தி ஆயுதத்தால் கிரௌஞ்சனையும் தாரகனையும் பிளந்தார். மாயை அகன்றது. நவவீரரும் மற்றோரும் குஹனைப் பணிந்துத் துதித்தார்கள். தாரகன் ஏவிய பாசுபத அஸ்த்ரத்தைக் கரத்தால் பிடித்து வீரபாகுவிடமளித்தார்.

விச்வகர்மாவைக் கொண்டு அங்கு ஒரு ஸ்கந்த ஆலய நிர்மாணம் செய்து ஆயிரம் மாடியுள்ள ஓர் ராஜகிருஹம் அமைத்து ஸப்தரிஷிகள், வீரபாகு முதலிய ஆவரண தேவதைகளுடன் குஹனைப் பூஜித்தார்கள். தாரகனது

மனைவி கௌரி என்பாள் கதறி அழுதாள். புத்ரனை அஸுரேந்த்ரன் ஸிம்மவக்த்ர நகரத்திலிருந்து வரும் வழியில் இதைக் கேட்டான். எனது வீர தந்தை பால்நாற்றம் மாறுப் பாலகனாலா கொல்லப்பட்டார்? என வருந்தினுள். தாய்மார்கள் பதியுடன் தீயிலிறங்க அவர்களுக்கும் தந்தைக்கும் மறுமைக் கடனைச் செய்துமுடித்து சூரன் உள்ள வீரமாஹேந்த்ர நகரம் வந்து சூரனிடம் முறையிட்டான். கனவிலும் நினைக்காத இச் செய்தியைக் கேட்டு சூரன் இதை நம்பவில்லை. இது உண்மைதானு? கனவா? ப்ராந்தியா? என்ருன் பலமுறை. உண்மைதான் என்று அறிந்தபின் சூரனும் ஸிம்மவக்த்ரனும் கதறி அழுதார்கள்.

வீரர்க்கு இது அழகல்ல என மந்திரிகள் கூறியதைக் கேட்டு துக்கம் கோபமாக மாறியது. ஸ்கந்தனைக் கொல்வேன். அல்லது இறப்பேன் என சபதம் செய்தான். யுத்தத்திற்குத் தான் வருவதாக தூதன் மூலம் தெரிவித்து ஆயிரம் கழுதைகள் பூட்டிய தேரிலேறிக் கிளம்பினுன் சூரன். அமோகன் எனும் மந்திரி ராஜநீதியைக் கூறி சிவனோடும் சிவகுமாரனோடும் நமக்குத் துவேஷம் வேண்டாம். பகன் சாரன் முதலிய ஒற்றர் சென்று குமாரன் தேவர்கள் விஷயத்தை நன்கு அறிந்து வரட்டும் என்ருன்.

ஸுப்ரமண்யன் தேவகிரியை விட்டு கேதாரம் காசீ ஸ்ரீபர்வதம் காளஹஸ்தி வேங்கடாசலம் ஊர்த்வ தாண்டவ மாடும் திருவாலங்காடு காஞ்சி அருணசலம் திரு வெண்ணைநல்லூர் விருத்தாசலம் மாயவரம் ஸங்கமுகம் முதலிய க்ஷேத்ரங்களுக்குச் சென்று பார்வதீ பரமேச்வரர்களைப் பூஜித்தார். ஆங்காங்கு த்வஷ்டா குஹனுக்கு ஒரு திவ்ய ஆலயத்தை அமைக்க அமரர் அனைவரும் அவரை அர்ச்சித்தனர். மணிநதிக்கரையில் குமாரபுரம் ஒன்றை அமைத்தான். ஸ்ரீகாழியிலிருந்து வநதேவதை இந்த்ரன் ரக்ஷிக்கும்படி அளித்த ஆபரணப் பெட்டியை அவனிடமளித்தாள். அதில் இந்திராணியின் நகைகளைக் கண்டு பத்நியின் பிரிவினுல் துக்கமடைந்துக் கதறினுன். ஸ்கந்தனங்கு சிவனைப் பூஜைசெய்ய சிவன் குஹனுக்குத் தனது அஸ்த்ரங்களைத் தந்தார்.

மதுரைக் கருகில் மரம் செடிகளில்லா பாலைவனத்திற்குச் சென்ருர் பகவான். அவர் திருவடி பட்டவுடன்

அவ்விடம் ஸுபிக்ஷமாகி நல்ல பூமியானது. அது பராசலமெனும் திருப்பரம்குன்றமாம். ஆங்கு தப்தன் அநந்தன் நந்தீ சதுர்முகன் சக்ரபாணீ மாலீ என்ற ஆறு முனிவர் தந்தை பராசுரர் அளித்த சாபமகன்று தவம் செய்தனர். தேவேந்திரன் அவர்களைப் பகவானுக்கு அறிவிக்க அவர்களுக்கு ஸ்வர்க்கமளித்தார். அங்கிருந்து செந்திமா நகரமெனும் திருச்செந்தூருக்குச் சென்றார். ஆங்கு ஓர் ஆலயமமைத்துத் தந்தார் விச்வகர்மா. தேவர் அவரை அர்ச்சிக்கக் கந்தர்வர் அவர் சரிதத்தைப் பாடினார்கள். ஸகல தேவர்களும் பகவானைப் பணிந்து பூஜித்தார்கள்.

ஸம்பவகாண்டம் முற்றிற்று.

ஆஸுர காண்டம்.

அஸுரர்கள் வரலாற்றை முனிவர்கள் கேட்க சூத புராணிகர் கூறுகிறார். அறுபத்தாறுகோடி அஸுரர்கள் இருக்கின்றனர். பிரும்ம புத்ரரான காச்யபர் என்ற அஸுரகுரு மங்களகேசினி என்ற மனைவியிடம் ஸுரஸா எனும் பெண்ணை உண்டுபண்ணினார். சுக்ரர் அவளுக்கு ஸகல வித்யைகளையும் கற்பித்து மாயா எனப் பெயரிட்டார். அச்சமயம் தக்ஷ யக்ஞம் நடந்து நந்தி சிவனில்லாத யாகத்திற்குச் சென்ற தேவர்களை ராஜ்யத்தை விட்டுத் துன்பமடையும்படிச் சபித்தார். இதே தக்க சமயமென்று சுக்ரர் மாயையை அழைத்து காச்யபர் என்ற முனிவர் மூலமாக ராக்ஷஸ புத்ரர்களைப் பெற்று உன் வம்சத்தை ரக்ஷி என்றார். அங்ஙனமே மாயை மாயையால் காச்யப முனிவர் ஆச்ரமத்தில் அழகிய அரண்மனை உத்யானம் விளையாட்டுமலை முதலியவைகளைப் படைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவளைக்கண்டு மதிமயங்கிய முனிவர் அவள் கோரியபடி மன்மதனைப் போன்ற உருவெடுத்து அவளுடன் கூடினார். முதல் யாமத்தில் சூரன் என்ற வீரனும் அவள் வியர்வையிலிருந்து முப்பதாயிரம் வீரர்களும் உண்டானார்கள். இரண்டாவது யாமத்தில் இருவரும் ஸிம்மரூபமெடுத்து ஸிம்மவக்த்ரனையும் நாற்பதாயிரம் ராக்ஷஸ வீரர்களையும் உண்டுபண்ணினார்கள். மூன்றுவது யாமத்தில் கஜரூபமெடுத்துத் தாரகனெனும் கஜ

முகனையும் நாற்பது ஆயிரம் வீரர்களையும் உண்டுபண்ணி னார்கள். நான்காவது யாமத்தில் ஆட்டின் உருவமெடுத்து அஜாமுகீ என்பவளையும் முப்பதாயிரம் அஜவீரர்களையும் உண்டுபண்ணினார்கள். காலையில் அழகிய சிருங்கார உருவெடுத்து சிவிங்கி புலி கரடி பன்றி ஒட்டை கழுதை குறங்கு நரி முதலிய அறுபதாயிரம் துஷ்டப் பிராணிகளை உண்டுபண்ணினார்கள்.

சூராதிகள் வரம் பெறல்.

காச்யபர் சிவபெருமையைக் கூறினார். சிவனருளால் குத்ஸா எனும் இறந்த கன்யகையை ஒரு முனிவர் எழுப் பினார். மார்க்கண்டேயன் யமனை ஜயித்தான். ஆதலால் புத்ரர்களே சிவனை ஆராதியுங்கள் என்றார். எல் லோரும் பெற்றோரிடம் விடைபெற்றுப் புறப்படும் பொழுது சுக்ரர் வந்து மந்த்ர தந்த்ரங்களை உபதே தேசித்தார். வடத்விபத்தில் நூற்றெட்டு முக்ய குண் டங்களையும் ஆயிரம் உப குண்டங்களையும் அமைத்து பத்தாயிரமாண்டுகள் சிவமந்த்ரத்தைக்கூறி எள்ளு ரக்தம் மாம்ஸம் முதலியவைகளால் ஹோமம் செய்தார்கள். சிவன் பிரத்யக்ஷமாகவில்லை. சூரன் தனது மாம்ஸத்தை அறுத்து ஹோமம் செய்தான். அப்பொழுதும் சிவன் வரவில்லை. தன் உடலையே சிவார்ப்பணமென ஹோமம் செய்துவிட்டான். ஸிம்மவக்த்ரனும் தனது தலையை அறுத்து ஹோமம் செய்தான். தாரகனும் தீயில் விழ ஆரம்பிக்க சிவன் கிழவேஷத்துடன் வந்து நீங்கள் யார்? ஏன் தீயில் விழுகிறீர்கள்? என்றார்.

தாரகன் நடந்ததைக் கூற பகவான் கங்காஜலத்தால் அவர்களை எழுப்பி நிஜரூபத்தைக் காட்டி வேண்டிய வரத் தைக் கேளுங்கள் என்றார். ஆயிரத்தெட்டு அண்டங் களுக்குச் சக்ரவர்த்தியாகயிருத்தல்! நூற்றெட்டு யுகம் ஜீவித்தல்! இந்த்ர விமானம், ஸிம்மவாஹனம், பாசு பதாஸ்த்ரம், வஜ்ரதேஹம், பத்துகோடிஆயிரம் ஸேனை, சிவகுமாரனைத் தவிர மற்றவரால் மரணமில்லாமை! ஆகிய வரங்களைப்பெற்றான். அட்டஹாஸத்தால் உலகை நடுங்கும்படிச் செய்து சுக்ரரை நன்மதி கூறவேண்டினான். சிவனே லீலையாக உலகைப் படைத்துப் பரிபாலித்துத் தன்னிடம் லயப்படுத்துகிறார். உலகமாக இருப்பதும்

அவரே ! பானை உடைந்தால் ஆங்குள்ள ஆகாசம் வெளி ஆகாசத்துடன் ஒன்றுவதுபோல் ஜீவன் உடலை விட்டபின் சிவனுடன் சேரும். உன்னையே பிரும்மம், சிவன் என நினை. தேவர்களை வென்று அஸுரருக்குப் பதவியைத் தா. கொல்வது ஏமாற்றுவது திருடுவது த்வேஷம் முதலிய அஸுர ஸ்வபாவ குணங்களைக் கைவிடாதே! இல்லையேல் எவரும் உன்னை மதியார் என்றார்.

சூராதி திக்விஜயம்.

வாத்ய கோஷத்துடன் தாரகனை எண்ணிறந்த ஸேனை பின் தொடர திக்விஜயத்திற்கு அனுப்பினான். அளகாபுரி சென்றதும் குபேரன் அவனைச் சரணமடைந்தான். இங்ஙனமே எண்திசை பாலர்களும் வணங்கினர். தேவஸ்திரீகளைச் சிறைபடுத்தி தேவரது செல்வங்களை அபகரித்தான். பாற்கடலுக்குச் சென்றான். விஷ்ணு தைர்யமாகப் போர்புரிந்தார். பலமுறை இருவர் கவசங்களும் ரதங்களும் ஆயுதங்களும் முறிந்தன. விஷ்ணுவின் சக்ரம் கதை கத்தி முதலிய ஐந்து ஆயுதங்களும் அவனிடம் சென்று ஆபரணம் போலிருந்தன. அவர் தாரகனைப் போற்றி சிவன் ஒருவனே உனக்கு ஸமமான பலம் உள்ளவர் என்றார். வெற்றியுடன் சக்ரவாக மலைக்குச் சென்றான். இவனைக் கண்டு நடுங்கி இந்திரன் மனைவியுடன் குயிலாகி மறைந்தான். பிரும்மலோகம் சென்றான். அவர் பிரும்மாஸ்த்ரமளித்துப் பூஜித்தார். வைகுண்டம் சென்றான். பகவான் தனது லோகத்தைச் சுற்றிக் காட்டி இங்கு உனக்கு வேண்டிய பொருளை எடுத்துச்செல் என்றார். இதைக்கேட்டு ஸந்தோஷித்து சூரனும் தம்பிகளுடன் கைலாஸம் சென்றான்.

நந்தி உத்தரவு பெற்று இருபத்தெட்டு ஆகமங்களும் நான்கு வேதங்களும் போற்றும் சிவன் திருவடியில் வணங்கி துதித்தான். ஆயிரத்தெட்டு அண்டங்களையும் தனது ஆட்களை அதிகாரிகளாக அமைத்து அண்டசுவர்களை உடைத்து வழிவைத்துக் கொண்டு எல்லா அண்டங்களையும் ஆண்டு வந்தான். சிவாக்ஞையால் அகில அண்ட அதிகாரிகளும் பதவியிலிருந்து விலகினர். சூரனது தாயின் தந்தையான அஸுரேந்த்ரனைக் கண்டு களித்து பூலோகம் சென்றான்.

தேவர்கள் பதவியிழந்து அஸுரர் கொடுமையும் பொறுக்க முடியாமல் மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்தார்கள். சிவனில்லாத தக்ஷயக்ஞத்திற்குச் சென்ற பயனிது என்று கூறி முப்பத்துமுக்கோடி தேவர்களுடன் சூரபத்மனிடம் சென்று மரியாதை செய்து சென்றார்கள்.

சுக்ராசாரியரின் உத்தரவுபடி உப்புக்கடலில் எண்பதாயிரம் யோஜனை விசாலமான வீரமாஹேந்திரம் என்ற நகரத்தை அமைத்தான். வானளாவும் கோபுரங்களும் சிறந்த உத்தியானங்களும் கடல்போன்ற தடாகங்களும் இடையில் நூறு யோஜனை தூரம் விசாலமான அரண்மனையும் நவரத்நங்களிழைத்த ரத்ந ஸிம்மாஸனமும் யாகசாலை போகசாலை பாகசாலை பூஷணசாலை ஆயுதசாலை யுத்தசாலை வித்யாசாலை போஜநசாலை ஆஸ்தாநமண்டபம் ஏகாந்த மண்டபம் மந்த்ராலோசனை மண்டபம் முதலியவைகளும் மிக ஆச்சர்யமாக நிர்மாணம் செய்யப்பட்டன. வீரமாஹேந்திர நகரத்திற்கு உபநகரங்களாக ஹேமபுரம், தேவபுரம், லங்காபுரம், நீலபுரம், சுவேதபுரம், வாமபுரம், பத்மபுரம், ஆஸுரபுரம் இவைகள் அமைக்கப்பட்டன. இதற்கு வடக்கில் ஆஸுரபுரமும் தெற்கில் மாயாபுரமும் தாரகனுக்கும் ஸிம்மவர்த்தனுக்கும் அமைக்கப்பட்டன. நல்ல நாளிலே பிரும்மாவையும் விஷ்ணுவையும் அழைத்துச் சுக்ராசார்யர் சூரனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்தார்.

இந்திரன் தாம்பூல பாத்திரம் தரிக்கவும் அக்நியும் யமனும் தீர்த்தம் கொண்டுவரவும் வாயுவும் குபேரனும் சாமரம் வீசவும் சந்திரர் சூர்யர் கொடைபிடிக்கவும் வேலைக்காரர்களாக அமர்த்தப்பட்டனர். பிரும்மா நித்யம் வந்து பஞ்சாங்கம் படிக்கவேண்டும். த்வஷ்டாவின் பெண்ணை மனோரமையை மணந்தான். பானுகோபன் அக்நிகோபன் ஹிரண்யன் வஜ்ரபாகு என நான்கு புதல்வர்களைப் பெற்றான். தேவ கந்தர்வ அஸுர ஸித்த நாக கிம்புருஷ ஆகிய வகுப்பைச்சார்ந்த பல பெண்களை மணந்து முப்பதாயிரம் புத்ரர்களைப் பெற்றான். மாயாபுரியில் தாரகன் யமபுத்ரியான விபீதகா என்பவளை மணந்து மஹாசூரன் என்ற புத்ரனை உண்டு பண்ணினான். தாரகன் ஆஸுர புரத்தில் நிரிருதியின் புத்ரியான

ஸௌரிகா என்பவளை மணந்து அஸுரேந்த்ரன் என்ற புதல்வனைப் பெற்றான்.

சூரன் ஒவ்வொரு அண்டத்திலும் இரண்டுகோடி வீரர்களையும் தனது நகரத்தில் ஆறுகோடி வீரர்களையும் காவலுக்காக வைத்திருந்தான். உப நகரங்களில் கஜாநநன் ரங்காஸ்யன், யாளிவக்த்ரன் பல்லூகவக்த்ரன் வ்யாக்ர வக்த்ரன் வராஹமுகன் ஸிம்மவக்த்ரன் கவயாஸ்யன் என்பவர்களைத் தலைவனாக அமர்த்தினான். அங்கு தனித் தனி எண்பது அக்ஷௌஹிணி ஸேனைகளை வைத்தான். துர்கணன் தர்மகோபன் துர்முகன் சங்கபாலன் வஜ்ர பாலன் மர்மக்ஞன் மஹிஷன் என்ற ஏழு மந்திரிகளை யும் அமர்த்தி அரசாண்டான். கருடனைக் கண்ட ஸர்ப் பம்போல் சூரனைக்கண்டு அமரர் நடுங்கினர். உயிருடன் மத்ஸ்யத்தைப் பிரதிதினம் கொண்டுவரும்படி இந்திரன் முதலிய தேவர்க்கு ஆணையிட்டான். அதே பின்னர் மத்ஸ் யாதி காவடி எடுக்கக் காரணமானது. வருணன் திமிங் கலம் முதலியவைகளைக் கொண்டுவரவேண்டும். சூர்யன் அதை உலர்த்துவான். யமன் அதன் உயிரை அகற்று வான்.

அஜாவக்த்ரீ எனும் சூரனது ஸஹோதரி எதிரில் தோன்றிய ஸகல புருஷர்களுடனும் பலாத்காரமாகச் சேர்ந்து பல புத்ரர்களை உண்டுபண்ணினாள். கண்ணில் அகப்படும் அழகிய பெண்களைத் தூக்கிவந்து சூரனுக்கு அளிப்பாள். தூர்வாஸமுனிவரைப் பலாத்காரம் செய்து இல்வலன் வாதாபி என்ற இருவரைப் பெற்றாள். ஒரு ஸமயம் இவர்கள் தூர்வாஸரை வழிமறித்து உமது புண்யமனைத்தையும் எங்களுக்குத் தரவேண்டும் என்று நிர்பந்தித்து அவரைக் கொல்ல முயற்சித்தார்கள். அவர் ஒரு முனிவர் மூலமாகவே நீங்கள் இறபீர்கள் என சாபம் அளித்தார். இல்வலன் வாதாபியின் உடலை நறுக்கி பிரும் மனை நாடி யாகம் செய்தான். இந்த ராக்ஷஸ யாகத்திலும் திருப்தியடைந்த சதுர்முகன் அவன் கோரியபடி வாதா பியை ஆடாக்கி பாகம் செய்தாலும் வாதாபி என்றழைத் தாலும் அவன் எழுந்து வரவேண்டும் என்று வரமளித் தார்.

இருவரும் ஒரு ஆச்ரமம் அமைத்து அவ்வழியாக வருபவரை விருந்துக்கழைப்பர். ஆடான வாதாபியை சமயல் செய்து விருந்தளிப்பர். பிறகு வாதாபி வா என்று இல்வலன் அழைப்பான். அதிதியின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வாதாபி வருவான். இருவரும் அவர் மாம்ஸத்தை உண்டு பொருளையும் அபஹரிப்பர். அகஸ்தியர் வாதாபியை ஜீர்ணமாகும்படிச் செய்தார். இது இவ்வாறிருக்க சூரன் மத்தியான்னத்தில் பாதாளத்திலும், இரவில் வீர மாஹேந்திர நகரிலும் காலங்கழிப்பான். நவக்ரஹ மண்டலங்களில் நடமாடுவான். ஒரு ஸமயம் காமவெறி கொண்டு இந்திராணியை அழைத்துவரும்படிக் கட்டளை இட்டான். இதைக் கேட்டு பயந்த சக்ரன் இந்திராணியுடன் ஒடி ஒளிந்தான். சாரர்கள் அவர்களைத் தேடி எங்கும் காணுமல் திரும்பினர். உபேந்திரருடன் வைகுண்டத்திலுள்ள இந்திர புத்திரனை ஜயந்தனை அழைத்து ஸ்வர்க்கத் தலைவனுகச் செய்தனர் தேவர்.

காவேரி வருகை.

இந்திரன் சீர்காழியில் பகவானை ஆராதித்து மூங்கில் மரமாகி நின்றுன். அன்றுமுதல் அங்கு மழை பொழியாமல் செடிகொடிகள் வாடின. சக்ரன் வருந்தி சிவனை வேண்டினுன். விரைவில் ஸுபிக்ஷமுண்டாகுமென அசரீரி வாக்கு தோன்றிற்று. அதே ஸமயத்தில் நாரதர் விந்தியமலையிடம் சென்று கைலாச மலை சிவனுக்குப் பெண்ணையளித்து சீர்பெற்றுன். மேருவோ சிவனுக்கு வில்லாகி பெருமைப் பெற்றது. அதனுல் அதைச் சூர்யன் சுற்றி வருகிறுர். நீயும் மலையாக இருந்து பெருமை இல்லாமலிருக்கிறுயே! என்றுர். உடனே அது ஆகாய மளாவக் கிளம்பி சூர்யன் வழியைத் தடுத்தது.

ஒரே இரவாகி பகலில்லாமல் இருப்பதைக்கண்டு தேவரும் ரிஷிகளும் சிவனைச் சரணம் அடைந்தனர். அவர் அகஸ்தியரை அனுப்பி விந்திய மலையை அடக்கும்படி கூறினுர். சிவனை மநதில் தியாநம் செய்து பலத்தையும் உலகைக் காக்க புண்யதீர்த்தத்தையும் தரவேண்டுமென பிரார்த்தித்தார். அங்ஙனமே பலமளித்து தீர்த்த பாத்ரத்தில் காவேரி எனும் புண்யநதியையும் தந்தார் சிவன்.

அகஸ்தியர் மகிமை.

அகஸ்தியர் தென்திசையை நாடிவரும்போது க்ரௌஞ்சன் எனும் அசுரன் அவர் வழியில்நின்று மேட்டைப் பள்ளமாகவும் பள்ளத்தை மேடாகவும் ஜலத்தை ஸ்தலமாகவும் ஸ்தலத்தை ஜலமாகவும் காட்டி அவரை வழி தெரியாமல் மயங்கும்படிச் செய்தான். அதனால் அவர் க்ரௌஞ்சனை மலையாக்கி ஷண்முகனது சக்தியினலடிபட்டு இறப்பாய் எனசாபமளித்தார். காசி சென்று சிவனை வணங்கி விந்தியமலையின் அருகே வந்தார். விந்தியமலை வழியளிக்காமல் போகவே தன்கையினலதைப் பூமியில் அழுத்திவிட்டு இல்வலனது ஆச்ரமத்திற்கு வந்தார். வாதாபியை ஜீர்ணம் செய்து இல்வலனைக்கொன்று கொடகு மலைக்கு வந்து கோங்குதேசத்தை அடைந்தார். தேவேந்திரன் அவரை அர்ச்சித்துத் தன்றல் தக்ஷிணதேசம் துர்பிக்ஷமடைந்திருப்பதால் ஆங்கு ஜலம் உண்டாகும்படி வேண்டினன். அவர் கணநாதனைப் பூஜிக்கும்படிக்கூற அங்ஙனமே பூஜித்தார். விக்நேச்வரர் அகஸ்தியர் கொண்டு வந்த காவேரீ கலசத்தின்மீது காக்கை உருவம் கொண்டு அமர்ந்தார். அவர் கையைத் தட்டி அதை ஓட்ட காகம் காலால் அதை கவிழ்த்துவிட்டுச் சென்றது. காக்கையைக் காணமல் ஒரு பிரம்மசாரியைக்கண்டு அவன்தான் கவிழ்த்தான் என அவன் தலையில் குட்ட ஆரம்பிக்கும்பொழுது கணநாதன் பிரத்யக்ஷமானர். அகஸ்தியர் அவரை வணங்கி தனது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினர். அவர் வேண்டியபடி காவேரி ஜலம் மிகபவித்ரமாகி சிவ பூஜைக்கு ஏற்றதாகும்படியும் தன் ஸன்னதியில் பக்தர்கள் இருகரங்களாலும் தலையில் குட்டிக்கொண்டால் வேண்டிய வரமளிப்பதாகவும் விநாயகர் அருள் புரிந்தார். தனது துதிக்கையால் காவேரி ஜலத்தை மொண்டு பாத்ரத்தில் விட ரிஷி குத்தால க்ஷேத்திரத்திற்குச் சென்றர்.

விஷ்ணு லிங்கமானர்.

விபூதி ருத்ராக்ஷதாரியான அகஸ்தியரைக் குற்றலத்திலும் விஷ்ணு ஆலயத்திலும் நுழையக் கூடாதென வைஷ்ணவர் தடுத்தனர். அகஸ்தியர் வைஷ்ணவவேடம் பூண்டு ஆங்குவர அனைவரும் அவரை வரவேற்று ஆலயத்திற்கு அனுப்பினர்கள். உட்சென்று விஷ்ணுவை இருகரங்

களாலும் தழுவி சிவலிங்கமாகும்படிச் செய்து பூஜித்தார். இதைக்கண்ட வைஷ்ணவர் சினம்கொண்டு அவரை துன்புறுத்த ஆரம்பித்தனர். அனைவருக்கும் சாபமளித்து அகஸ்தியர் சீர்காழி க்ஷேத்ரம் வந்தார். அங்கு இந்திராதிகள் தங்கள் துயரத்தைக்கூற இந்திராணியைக் காக்கும்படி சாஸ்த்தாவிற்கு உத்தரவிட்டு அங்கிருந்து கிளம்பினார். இந்திரன் கைலைக்குச் சென்று சிவதரிசனம் செய்தார்.

அஜாவக்த்ரீ இந்திராணியிடம் வந்து சூரனை மணக்கும்படிக் கூறினாள். அவள் அதற்கிணங்காமல் போகவே பலாத்காரமாகத் தூக்க முயர்ச்சித்தாள். சாஸ்தாவினால் தூண்டப்பட்ட மஹாகாலன் அவளுடன் சிறிது யுத்தம் செய்து அவள் இருகரங்களையும் வெட்டினான். அவள் சூரபத்மனிடம் முறையிட சூரன் பிரும்மாவை அழைத்து அவள் கைகள் வளரும்படிச் செய்தான். சூரனது புத்திரனை பானுகோபன் இந்திர நகரத்தை நாசம் செய்து ஜயந்தனோடு யுத்தம் செய்தான். மாயையினால் ஜயித்து அவனைச் சிறைப்படுத்தினான்.

ஆஸுர காண்டம் முற்றிற்று.

வீரமாகேந்த்ர காண்டம்.

வீரபாகு தூதனாகச் செல்லுதல்.

சூரனது ஸகல விருத்தாந்தங்களையும் அறியவும் ஜயந்தன் முதலிய தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்கும்படிக் கூறவும் சுப்ரமண்யன் தனது ஸகோதரனை வீரபாகுவைச் சூரபத்மனிடம் தூதனாக அனுப்பினார். வீரபாகு, குகனை வணங்கி ஆகாயமார்க்கமாகச் சென்று எட்டு பட்டணங்களால் சூழப்பெற்று கந்தமாதன மலையில் அமைந்துள்ள சூர நகரத்தைக் கண்டார், கடலைக்கடந்து போகும்பொழுது வாயுவேகத்தினால் கடலில் உள்ள வடபாக்னி அவிந்தது. யாளிவக்த்ரனது நகரமான இலங்கையில் சென்று அட்டகாசம்செய்தார். இவரைக் கொல்ல வந்த அஸுரர்களுடன் போர்புரிந்து சூரர்களைக் கொன்று வீரமாகேந்த்ர பட்டணத்தின் வடக்குக் கோபுரத்தின் வழியாக உள்ளே நுழைந்தார். ஆங்காங்கு அளவுகடந்த

வீரர்கள் காவல் காத்து வழியைத்தடுக்க அவர்களைக் கொன்றுவிட்டு சிறிய உருவம் தாங்கிக் கோபுரத்தின் மீதேறி நகர அமைப்பைப் பார்த்து சூரனது அரண்மனைக் குச்சென்றார். ஒவ்வொரு வீட்டிலும் கற்பக விருக்ஷமும் காமதேனுவு மிருப்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்தார். இந்திராணி எங்கு சென்றாள்? இருப்பிடத்தைக் கூறு? என்று அசுரர் ஜயந்தனை அடிப்பதைக் கண்டார்.

ஆங்குள்ள தேவர் இக்கஷ்டம் எப்பொழுது அகலும் என்று சிவனை தியானம் செய்துகொண்டு உறங்கினார்கள். ஷண்முகன் மயில் வாஹனமேறி கனவில் தோன்றி எனது தூதன் விரைவில் வருவான். உங்கள் துன்பம் அகலும் என்றார். காலையில் எழுந்தவுடன் வீரபாகு ஜயந்தனிடம் சென்று உனது தாய் தந்தை கைலாயத்தில் சுகமாக இருக்கின்றனர். அவரது குமாரனை சுப்ரமண்யன் கிரௌஞ்சனையும் தாரகனையும் கொன்று "திருச்செந்தூரில்" தங்கி இருக்கின்றார். அவர் விரைவில் வந்து உங்களை விடுவிப்பார் என்று கூறி சிறிய உருவத்துடன் நகரமெல்லாம் சுற்றிவந்து ஆயிரம் யோஜனை தூரமுள்ள மண்டபத்தில் நவரத்ன சிம்மாஸனத்தில் வீற்றிருக்கும் சூரபத்மனைக் கண்டார். குஹனை நினைத்தவுடன் மிகப் பெரியதோர் ரத்ன ஸிம்மாஸனம் தோன்ற அதிலமர்ந்தார் வீரபாகு.

திரிமூர்த்திகளும் நுழைய முடியாத எனது ஸபையில் இந்திரஜால வித்தைக்காரன்போல் இங்கு வந்த நீ யார்? என்று கேட்டான் சூரன். தாரகன் முதலிய அசுரர்களைக் கொன்று வானவர்களைக் காக்கவேண்டி சிவனது வீர்யத்தால் உண்டான சுப்ரமண்யனது தூதன் யான்! ஜயந்தன் முதலியவர்களை விடு! அல்லது போருக்குவா! என்று தேவ ஸேனாதிபதி கூறினார்! என்றார். என் சகோதரனை தாரகனைக் கொன்றபொழுதே குஹனைக் கொல்ல நினைத்தேன்! பாலனைக் கொல்லலாகாதென நினைத்து சும்மா விட்டேன்! நாளையதினம் அவனைக் கொல்ல வருகிறேன்! என்றான் சூரன். குழந்தை என்று பரமனை அவமதித்த நீ விரைவில் அடிபட்டு இறப்பாய்! என்று வீரபாகு கூறினார். அவனைக் கொல்லுங்கள் என சூரன் உத்தரவிட அருகில் வந்த யோதர்களைக் கொன்று

வீரபாகு அங்கிருந்து கிளம்பி நூறு கலசமுள்ள கோபுரத்தை முறித்து பலவீரர்களைக் கொன்றார். சூரன் அனுப்பிய எண்ணிறந்த ஸேனாதிபதிகளையும் லக்ஷக்கணக்கான ஸேனைகளையும் கொன்றார். கோபமும் துக்கமும் கொண்ட சூரன் எண்ணிறந்த ஸேனைகளுடன் ஸஹஸ்ர பாஹுவை அனுப்பினான். அரை க்ஷணத்தில் அனைவரையும் வீரபாகு கொல்ல, சூரன் தனது புதல்வனான வஜ்ரபாகுவை அனுப்ப ஐநூறு ஸேனாதிபதிகளும், ஐந்து லக்ஷம் வீரர்களும் வந்தனர். வீரபாகு சிலரைக் காலாலும் கையாலும் உதைத்துச் சிலரைப் பிண்டமாகப் பிடித்தார். வஜ்ரபாகுவின் தேரையும் வில்லையும் முறித்தார். மற்றொரு ரதத்துடன் வந்த வஜ்ரபாகுவை லக்ஷயோஜனை தூரத்தில் ரதத்துடன் தூக்கி எறிந்தார். மறுபடியும் அவன் வர அவனது கழுத்தை அறுத்துத் தள்ளினார். நகரமனைத்தையும் காலாலிடித்து அழித்தார். அருமைப்புதல்வன் இறந்ததைக் கேட்டு ஆராத்துயரமடைந்து ஸஹஸ்ர யாளிமுகனை அனுப்பினான் சூரன். அவனையும் ஒரு நிமிஷத்தில் கொன்று திரும்பி செந்திமாநகரம் வந்து சேர்ந்தார் வீரபாகு. பிரம்மாதி தேவர்கள் அவரைத் துதிக்க வீரபாகு ஸ்கந்தனிடம் வந்து வணங்கி நடந்த விருத்தாந்தமனைத்தையும் கூறினார்.

புத்ர மரணத்தினால் துக்கத்துடன் கதறும் சூரனைத் தர்மகோபன் எனும் மந்திரி ஸமாதானம் செய்தான். பிரம்மாவை அழைத்துவரும்படிக் கூற அவர் ஸ்கந்தனிடமிருப்பதாகக் கூறவே மற்றொரு அண்டத்தில் உள்ள பிரம்மாவை வரவழைத்து வீரபாகுவால் அழிக்கப்பட்ட தனது நகரத்தைப் புதிப்பித்தான். சூரனது தூதர்கள் செந்தி நகரம் சென்று ஸ்கந்தனது மகிமையையும் பெருமையையும் பார்த்துவந்து கூறினார்கள். சூரன் மந்திரி ஸபையைக் கூட்டி மந்திராலோசனை செய்தான். அவனது உள்ளத்தை அறிந்த அமைச்சர்களனைவரும் வஜ்ரபாகுவும் தாரகனும் ஆயுட்காலம் முடிந்ததால் இறந்தார்கள். மிகச் சிறுவனான ஸ்கந்தன் உம்முடன் போர்புரிவது பகற் கனவே யாகும்: நாங்களே சென்று தேவர்களையும் தேவஸேனாபதியையும் கொன்றுவருகிறோமென்று பேசினார்கள்.

சிம்ஹமுகன் எழுந்து அஸுரேந்த்ர! குஹனைச் சிறுவன் என்று நினையாதே! அவன் சிவகுமாரன்! தேவரை ரக்ஷித்து அசுரர்களைக் கொல்ல அவதரித்த ஸேனாதிபதி அவர்! நூற்றெட்டு யுகம்வரை உமக்கு ஆயுள்! அது பூர்த்தியாயிற்று! சிவ புத்ரனாலேயே உமக்கு மரணம்! ஸ்கந்தன் சிவகுமாரன்! ஆதலால், ஜயந்தன் முதலியவர்களை விட்டுவிட்டு அவரைச் சரணமடையும்! என்றான். இதைக் கேட்டு கோபங்கொண்ட சூரன் சிம்ஹமுகனை நீ எனது மந்திரியல்ல! சிறுவனிடம் பயப்படுகின்றாய்! நீ ஒரு வீரனுமல்ல! சத்ருவின் பக்ஷத்தைச் சேர்ந்தவன் போலிருக்கின்றாய்! நீ அவ்விடமே செல்! என்று கடிந்து பேசினான்.

சிம்ஹமுகன் ஹிதத்தைக் கூறியும் இவன் கேளாததால் மரணமடையப் போகிறான். இவனிடம் நமக்குத் துவேஷம் ஏன்? என்று எண்ணி, அஸுரேந்த்ர! உம்மைப் பரீக்ஷிக்கவே கூறினேன். நான் ஒருவனே சென்று அச்சிறுவனை ஜயிக்கின்றேன்! உத்தரவளியும்! என்று கூறினான்.

ஸ்கந்தன் ஒன்பதுலக்ஷம் ஸேனைகளுடன்கூட கிளம்ப பிரும்மாதி தேவர்கள் அவரவர் வாஹனத்தின்மீது கிளம்பிக் கடலைக் கடந்து வீரமாகேந்த்ர நகரம் வந்தார்கள். அங்கு தங்கி பகைவனைக் கொல்லவேண்டும். அவனிருப்பிடம் நாம் செல்லவேண்டாம் என்று கூறி விஷ்ணுவும் சிவனும் விச்வகர்மாவைக் கொண்டு அங்கோர் அழகிய நகரம் படைத்து அங்கு தங்கினார்கள். நாரதர் வந்து சூரனிடம் சுக்ரர் உபதேசித்த வண்ணம் யுத்தம் செய்வதே சிறந்தது! சிறுவனுக் கஞ்சாதே! என்று கூறிச்சென்றார். சூரன் கடலை அழைத்து நீ பகைவர்களுக்கு ஏன் இடமளித்தாய்? என்று கேட்டான். ஸ்கந்தன் தனது ஜலத்தை உலர்த்தி வந்ததாகக் கூறினான் சமுத்ரன். இதற்குள் தன் அருகில் பகைவர்கள் வந்தார்கள் எனக் கேழ்வியுற்று பானுகோபனை ஸ்கந்தனுடன் போருக்கு அனுப்பினான் சூரன். பானுகோபன், ஸ்கந்தனை கட்டிப் பிடித்துக் கொண்டுவருகிறேன் என்று கிளம்பினான்.

வீரமாகேந்த்ர காண்டம் முற்றிற்று.

யுத்த காண்டம்.

பானுகோபன் ஸேனைகளுடன் வருகிறான். அவன் மாயா யுத்தத்தில் நிபுணன். பிரும்மாதி தேவர்களை ஜயித்து அவரவர்களிடமிருந்து திவ்யாஸ்த்ரங்களைப் பெற்றவன். அவனை முதலில் கொல்லவேண்டும் என நாரதர் ஸ்கந்தனிடம் விக்ஞாபனம் செய்தார். அவர் வீரபாகுவை எட்டுலக்ஷம் ஸேனையுடன் அஸுர நகரத்தைத் தாக்கும்படி அனுப்பினார். மூவுலகும் நடுங்கும்படி போர் நடந்தது. அஸுர ஸேநாபதி அநலன் வீரபாகுவின் வீர்யத்தைக் கண்டு கோபங்கொண்டான். தேவஸேனையில் புகுந்து யானையைத் தூக்கி யானைமேலடித்தான், குதிரையைக் குதிரையாலும் ரதத்தை ரதத்தாலும் வீரரை வீரராலும் அடித்துக் கொன்றான்.

ஸிம்மனெனும் தேவஸேனாபதி அநலனைக் கொன்று சண்டன் கரத்தை அறுத்தார். அறுந்த கையாலவன் பலரைக் கொன்றான். ஸிம்மன் அவனை அடித்து வீழ்த்த யமகிங்கரர் அவன் உயிரைப் பயந்துகொண்டே எடுத்துச் சென்றனர். மதுவெனும் தேவஸேநாபதி மஹா மாயாவியான அஜமுகனைக் கொன்றார். தண்டகனெனும் தேவ ஸேநாபதி இருபது ஆயிரம் ராக்ஷஸ ஸேனைகளைக் கொன்றார். பானுகோபன் கோபங்கொண்டு தேவஸேனையை அழித்தான். இதைக் கண்ட வீரபாகு தண்டனெனும் வீரனை அனுப்ப அவன் பானுகோபனது வில், கொடி, குதிரை, ஸாரதி, ரதம் முதலியவைகளை அறுத்து எல்லோரும் ஆச்சர்யப்படும்படி யுத்தம் செய்தான். வேறோர் தேரிலேறி வந்த பானுகோபனை ரதத்துடன் ஸெளர்யமண்டலம்வரைத் தூக்கி எறிந்தான். பானுவை ஜயித்து காரணப் பெயர் பெற்ற பானுகோபனைக் கண்டு பானு நடுங்கினான். பானுகோபன் மறுபடியும் பூமிக்கு வர அவனைச் சரவர்ஷங்களால் மோஹிக்கும்படி அடித்து அவன் சேனைகளையெல்லாம் நாசம் செய்தான் வீரபாகு.

பூமி எல்லாம் ஒரே ராக்ஷஸத் தலை! கபந்தநடனம்! கழுகுக் கூட்டம்! வீரனைக் கொல்வேன்! அல்லது தியில் இறங்குவேன்! என வீராவேசத்துடன் வீரன் ஸேனையில் புகுந்து அட்டஹாஸம் செய்தான். மோஹநாஸ்த்ரத்தால் அனைவரையும் உறங்குவதுபோல் செய்து சரவர்ஷத்தால்

கொன்றான். இதை அறிந்த குஹன் அமோஹாஸ்தரத்தால் எல்லோரையும் எழுப்பினர். வீரபாகு லஜ்ஜையும் கோபமும் கொண்டு பாசுபதாஸ்த்ரத்தை எடுத்தார். பானுகோபன் அதைக்கண்டு நடுங்கி மாறு உருகொண்டு ஓடி ஒளிந்தான். சூரன் மற்றோர் அண்டத்திலிருந்து வீரர்களை அழைத்து ஸிம்மவக்த்ர தாரக புதல்வர்களை ஸேனாபதிகளாகச் செய்து இந்திர ரதத்திலேறி சூரன் யுத்தத்திற்குக் கிளம்பினன். வாயுவை ஸாரதியாகக் கொண்டு ஸ்கந்தன் தேவஸேனைகளுடன் கிளம்பினர். இரு ஸேனைகளும் பயங்கரமாக யுத்தம் செய்தன. உக்ரனெனும் ஸ்கந்த ஸேனைத் தலைவன் சூரனது கவசத்தைப் பிளந்தான். அவன் தேரையும் முறித்தான். மற்றோர் ரதத்தில் வரும்போது உக்ரன் காலாலுதைத்து அந்த தேரையும் முறித்தான்.

சூரன் ஏவிய பிரும்மாஸ்த்ரம் நாராயணாஸ்த்ரம் முதலிய திவ்யாஸ்த்ரங்களை லீலையாக விழுங்கினன். குஹனை தியானம்செய்வதால் இத்தகைய சக்திபெற்றான் உக்ரன். இதைக் கண்டு ஆச்சர்யமடைந்த சூரன் சிவனைத் தியானம் செய்து மஹா சிவாஸ்த்ரத்தை உக்ரன் மீது ஏவினன். அது பயங்கரமாக பலவகை ஆயுதங்களையும் விஷ ஜ்வாலையையும் கக்கிக்கொண்டு உலகையெலாம் அழிப்பது போல் ஜ்வலித்துக்கொண்டு உக்ரனிடம் வந்தது. அவன் ஸகல ஆயுதங்களையும் எறிந்துவிட்டு சிரஸின்மீது கரங்களைக் கூப்பி பஞ்சாக்ஷரியை ஜபித்தான். உடனே அது அவனை விட்டுவிட்டு சிவனிடமே சேர்ந்தது. எல்லோரும் ஆச்சர்யம் அடைந்தனர். வீரபாகு அஸுரேந்த்ரன் அதிசூரன் எனும் சூரனுடைய ஸஹோதர புத்ரர்களைக்கொன்றார். கநகன் உன்மத்தன் ஸோமகன் முதலிய குஹ வீரர்கள் சூரன் ஸேனையுடன் போர்புரிந்து ராக்ஷஸ ஸேனைகளை நாசம்செய்தனர். மஹா கோபத்துடன் சூரன் தேவஸேனையைத் தாக்கினன்.

சுப்ரமண்யனது ஸஹோதரர்களான நவவீரர்களும் சூரனுடன் போர்புரிந்து மூர்ச்சையாகி விழுந்தனர். தங்களது சக்தி ஆயுதத்தாலன்றி வேறு எதனாலும் அவனைக் கொல்லமுடியாது என்று குஹனிடத்தில் தேவர் விக்ஞாபனம் செய்தனர். இதற்குள் வீரபாகு மூர்ச்சை தெளிந்தெழுந்துவந்து சூரன் மீது பிரம்மாஸ்த்ரம் முதலிய ஸகல

திவ்ய அஸ்த்ரங்களையும் ஏவ அவைகள் சூரனிடம் லயித்தன. அவனைத் துன்புறுத்தவில்லை. பிறகு பாசுபதாஸ்திரத்தை இருவரும் ஒருவர்க்கொருவர் மீதும் பிரயோஹித்தனர். இரண்டும் சிறிதுநேரம் யுத்தம் செய்து அவரவர்களிடமே வந்து சேர்ந்தன. சூரனது தண்டாயுதத்தால் வீரபாகுவும் மோஹமடைய சுப்ரமண்யன் சூரனுடன் போருக்குவந்தார். சூரன் அவரை நோக்கி, குழந்தையான நீ எனது பலத்தை அறியமாட்டாய்! வீணே உயிரை இழக்காதே! தாயினிடம் செல்! என்றான் ஷண்முகன் புன்னகைப் புரிந்து, சூர! அக்னி மிகச் சிறியதாய் இருந்தாலும் பெரிய வனத்தை எரிக்கும்! என்பதை அறியாயா? வீண் பேச்சை நிறுத்திப் போருக்கு வா! என்றார். இருவரும் நாணை இழுத்து அம்பைப் பூட்டிக் கடும்போர் புரிந்தனர். அசுராஸ்த்ரங்களனைத்தையும் குஹன் ஒரு நிமிஷத்தில் நாசம்செய்தார். சூரனது குடை கிரீடம் கவசம் ஸாரதி குதிரை முதலியவைகளை அடித்துத் தள்ளி சூரனைத் தரித்திரனைப் போல் செய்தார். சூரன் வேறு ரதத்தின் மீதேறி வருவதற்குள் குஹன் அசுரஸேனைகளை நாசம் செய்தார். சூரன் அதிவிரைவில் வந்து மிகப் பயங்கரமான பிரம்மாஸ்த்ரத்தைப் பிரயோகம் செய்தான். குஹனது கரத்தில் உள்ள சக்தி அதை விழுங்கிவிட்டது.

அங்ஙனமே நாராயணாஸ்த்ரமும் வீணானபொழுது மஹா பாசுபதாஸ்த்ரத்தைச் சூரன் பிரயோகிக்கத் தனது தந்தையைக் கௌரவிக்க குஹன் இரு கரங்களாலும் அதை மரியாதையுடன் ஏற்றார். லக்ஷ ஸேனைகள் நாசமாகித் தனது அஸ்த்ரங்களும் பாழாகித் தன்னந்தனியே நிற்கும் சூரனைப் பார்த்துக் கருணாமூர்த்தியான சுப்ரமண்யன், என் வீர்யத்தைக் கண்டாய்! பலமிழந்து நிற்கும் உன்னை இப்பொழுது நான் அடிப்பது நியாயமல்ல! வீட்டிற்குச் சென்று நன்கு யோசனை செய்து தைர்ய மிருந்தால் நாளைக்கு வா! என்றனுப்பினார். குஹனது சேனையில் உள்ளோர் சூரனது நகரத்தைத் தாக்கினர். கோபுரங்களை இடித்துக் கடலில் தள்ளினார்கள். சூரன் திவ்யரதத்திலேறி, வந்திகள் பாட, துந்துபி முழங்க, யுத்தம் செய்வதே சரி என்று தீர்மானித்துப் போருக்கு வந்தான். இதைச் செவியுற்ற பானுகோபனும் தந்தைக்கு ஜயம்

உண்டாக வேண்டும் என பல ஆபிசாரப் பிரயோகங்களைச் செய்து, நானவனைக் கொல்லாமல் வருவதில்லை! என்று பிரதிக்ஞை செய்து போருக்குக் கிளம்பினான். சூரன் மயனை அழைத்து அழிக்கப்பட்ட தன் நகரத்தைப் புதிதாக அமைக்கும்படிச் செய்தான். பானுகோபனை, நீ குஹனோடு போர் புரியவேண்டாம்! அவனைக் கொல்ல எவராலு மியலா! அவனது சேனைகளை ஜெயித்துவா! என்றனுப்பினான்.

மகாகாயனை நகரத்தைக் காக்கும்படிச் செய்து தன் அரண்மனைக்குச் சென்றான். பானுகோபன் தவம்செய்துகொண்டிருக்கிற மாயையை அழைத்து வீரபாகுவையேனும் கொல்ல சக்தியும் ஆயுதத்தையும் எனக்களிக்கவேண்டும் என வேண்டினான். ஓர் மாயா அஸ்த்ரத்தை யளித்து, இன்று மாத்திரம் உனக்கு வெற்றியை அளிக்கு மிது! என்றாள். அவன் யுத்தரங்கத்தில் வந்து வீரபாகுவுடன் மிகக் கடுமையாக யுத்தம் செய்தான். இருவரும் நிலத்திலும் வானிலும் நின்று இதுவரை எவரும் கண்டிராதபடி கடும்போர் புரிந்தனர். ஆக்னேயாஸ்த்ரம், வாருணாஸ்த்ரம், வாயவ்யம், காருடம், ஸர்ப்பம், யமாஸ்த்ரம் முதலிய பற்பல அஸ்த்ரங்களைப் பிரயோகித்தார்கள். பிரம்மாஸ்த்ரம், நாராயணாஸ்த்ரம் முதலிய மிக உயர்ந்த அஸ்த்ரங்களையும் பிரயோகித்தனர். பதினன்கு லோகங்களும் பயந்து நடுங்கின. இச் சப்தத்தைச் செவியுற்று சூரனும் திடுக்கிட்டான். உலகத்தையே அழிக்கும்படியான பாசுபதாஸ்த்ரத்தை இருவரும் திரும்பப் பெற்றனர். பானுகோபன் மாயையினால் மறைந்திருந்து மாயாஸ்த்ரத்தினால் வீரபாகு முதலிய அனைவரையும் மயக்கிச் சுத்தோக ஸமுத்திரத்தில் கொண்டெறிந்தான்.

நாரதர் விக்ஞாபனம் செய்துகொள்ள ஸ்கந்தன் சக்தி ஆயுதத்தினால் அவர்களைத் திரும்பக் கொண்டு வந்தார். அவர்களுடன் அந்த ஸமுத்ரமும் ஸ்கந்தனிடம் வந்து தான் யாதொரு அபசாரமும் செய்யவில்லை! என்று வணங்கிச்சென்றது. வீரபாகு சூரனது நகரத்தை தீயினால் எரித்தார். தீயிலகப்பட்ட அனைவரும் கூக்குரலிட்டனர். சூரனது ஆக்ஞையினால் மேகங்கள் தீயை அவித்தன.

வீரபாகு பாடவ அஸ்திரத்தினுல் மறுபடியும் நகரத்தை எரித்தான். சூரனது புதல்வனுன ஹிரண்யன் தந்தையை வணங்கி தர்மமான சில சொற்களைக் கூறி பரமசிவனது பெருமைகளையும்! குஹனது வீர்யத்தையும் கொண்டாடி! அவரைச் சரணமடைவதே நல்லது! என்முன். சூரன் சினங்கொண்டு யாரோ உனது புத்தியைக் கெடுத்துவிட்டார்கள்! என்று கடிந்து கூற, யான் யுத்தத்திற்குச் செல்கிறேன். அஞ்ச வேண்டாமென்று கூறி தேவஸேனையை அழித்தான். பன்முறை மூர்ச்சை அடைந்தும் சளைக்காமல் நீலன் என்ற தேவஸேனுதிபதியுடன் பயங்கரமாகப் போர்புரிந்து தானிறப்பது நிச்சயமென்று தெரிந்தவுடன் தன் தந்தைக்கு மறுமைக் கடனைச் செய்ய தான் ஒருவனேனும் ஜீவித்திருக்க வேண்டும் என்று போரை விட்டு மீன் உருவங்கொண்டு ஸமுத்திரத்தில் இறங்கினுன். அக்னிமுகன் எனும் புத்திரன் வந்து நான் பகைவர்களனைவரையும் வென்று வருகின்றேனென்று கிளம்பினுன். எண்ணிறந்த ஸேனைகளுடன்வந்து யுத்தம் செய்யும்பொழுது இருகட்சிகளிலும் பலவீரர்கள் கொல்லப்பட்டார்கள்.

வானையளாவ வீரவாதமும் ஆயுதத்வனியும்எழுந்தது. அக்னிமுகன் மகாகாளியை அழைத்து வீரபாகுவைக் கொல்லும்படிக் கூறினுன். அவள் வெகுநேரம் வீரபாகுவுடன் யுத்தம் செய்து களைத்து என் ஸஹோதரனை யான் கொல்வதா? என்று வீரபாகுவிற்கு ஆசீர்வாதம் செய்து சென்றுவிட்டாள். வீரபாகு அக்னி முகன் பிரயோகித்த பிரம்மாஸ்த்ரத்தை வீரபத்ராஸ்த்ரத்தினுல் அடக்கி அதனுலேயே அவனைக் கொன்முர். சிலர் வீரபாகுவின் வீர்யத்தைக் கண்டு அஞ்சி பிணத்தைத் தூக்கி தன்மீது போட்டுக்கொண்டு தங்களைக் காக்க எண்ணினுர்கள். ஆனுல் அதன் பாரம் தாங்காமல் அவர்கள் இறந்தார்கள். இதற்குள் நூறுயோஜனை தூரத்தில் உள்ள வடவிருக்ஷத்தினருகே சிவாஸ்த்ரத்தினுல் கொல்லப்பட்டுத் தனது ஸகோதரர்கள் இறந்தார்கள் எனக் கேட்ட வீரபாகு யமதர்மராஜனுக்கு சிவபக்தரை எப்படிக் கொண்டுசென்முய்? என்று எழுதிக் கேழ்க்க அவர் கைலாயத்தில் லீலை செய்து கொண்டிருந்த அவர்களை

அழைத்துவந்து இது என் செயலல்ல என்று விக்ஞாபித்துச் சென்றான். அக்னிமுகன் இறந்ததால் சோகக் கடலில் வீழ்ந்த சூரனை அவனது மூவாயிரம் புத்திரர்கள் ஸமாதானம் செய்து போருக்குக் கிளம்பினார்கள்.

விஜயன், அதிகோரன் முதலிய வீரர்கள் ஆக்நேய அஸ்த்திரத்தினால் இவர்கள் ஸேனையைக் கொன்று அவர்கள் சிரத்தை மலையிலும் வனத்திலும் கடலிலும் எறிந்தார்கள். ஜயன் எனும் தேவ ஸேனாபதி சிவனிடமிருந்து அழிவில்லாத பாணப் பெட்டியையும் பாணங்களையும் பெற்று குஹனைவணங்கி அவர்களைத் தான்கொல்ல அனுமதிக் கேட்டார். ஒரே நிமிஷத்தில் வீரபத்ராஸ்த்ரத்தினால் அவர்களைக் கொல் என உத்தரவிட்டார். அங்ஙனமே அவர் கொல்ல சூரன் அதைக்கண்டு கதறினான். தர்மகோபன் அவரைச் சமாதானப்படுத்தி தானே ஜயித்து வருவதாக யுத்தரங்கத்திற்கு வந்து தன் உயிரைப் பறிகொடுத்தான். பானுகோபன் அதிசூரனை சுப்பிரமண்யனைச் சரண்மடைவோம் என்று கூறினான். ஆரம்பித்த காரியத்தை இடையிலே நிறுத்தலாகாதென சூரன்கூற பானுகோபன் ரணகளத்திற்கு வந்து இறந்து கிடக்கும் தன் ஸகோதரர்களைக் கண்டு வருந்தினன். வீரபாஹுவுடன் யுத்தம்செய்து மாயையால் மறைந்து அனைவரும் ஆச்சர்யப்படும்படி வில் கத்தி பாஹுயுத்தம் முதலியவைகளைச் செய்தான். வீரபாஹு கத்தியினால் அவன் கரத்தையும் சிரத்தையும் அறுத்துத்தள்ளினான். இதைக் கண்டு களிப்புற்ற ஸ்கந்தன் வீரன் வேண்டியபடி ஆழ்ந்த ஸ்கந்தபக்தியையே வரமாக அளித்தார்.

இச்சரிதத்தைக் கேட்டு ஆஞ்ஜநேயர், வாலி, பாண்டவர், பரசுராமர், அனைவரும் வெற்றிபெற்றனர். பானுகோபனது தாயும், தந்தையும் ஆராத் துயரமடைந்து கதறினர். சிம்மவக்த்ரன் வந்து இவர்களைச் சமாதானப்படுத்தி எண்ணிறந்த ஸேனையுடன் யுத்தத்திற்குக் கிளம்பினான். மரணத்தைக் காட்டக்கூடிய அபசகுனங்கள் தோன்றியும் லக்ஷ்யம் செய்யாமல் அவன் வருவதைக் கண்டு பிரம்மாதிதேவர்கள் நடுங்க, ஸ்கந்தன் அபயம் அளித்து தனது ஸேனையை ஸந்நத்தப் படுத்தினார். தசவக்த்ரன் எனும் ராக்ஷஸஸேனாதிபன் தேவஸேனையின்

மீது சரவர்ஷங்களை வர்ஷித்தான். வீரபாஹு ஸ்கந்தன் திருவடியை வணங்கி சக்தியினால் அவனைக் கொன்றான். துர்முகன் எனும் ராக்ஷஸ வீரன் வர அவனையும் அறை க்ஷணத்திலே கொன்றான். சிம்மமுகன் பற்பல பர்வதங் களை எறிந்து தேவஸேனையை அழித்தான்.

அக்னிகோபன் அவனோடு யுத்தம்செய்து மலைக்கு, மலை மரத்திற்கு மரம் தாவி அசுரஸேனையை அழித்தான். சிம்ஹவக்த்ரன் அவனைப்பிடித்து கையினால் கசக்கி பூமியில்எறிந்தான். வீரபாஹு சிம்மவக்த்ரனது புதல்வரனை வரையும் கொன்றான். இருவர் பிரயோகம் செய்த பாசு பதாஸ்த்ரங்களும் ஒன்றோடொன்று கைகலந்து வெற்றியும் தோல்வியுமின்றி திரும்பின. குஹனே இவனைக் கொல்ல தக்கவனென்று அவனது ஸாரதிகளைக் கொன்று அவன் சென்றவிடமெலாம் துரத்திச் சென்றார். சிம்ம முகன் தேவஸேனைகளை மாயாபாசத்தினால் கட்டி இருள் சூழ்ந்த உதயகிரியில் கொண்டு தள்ளினான். சிம்மவக்த் ரன் ஸ்கந்தனைத் தேடிவரும் பொழுது பிரமன் அளித்த மணிபாதுகைகளில் கால் வைத்து ரதத்தின் மீதேறினார். சந்த்ர சூர்யர் குடைபிடிக்க அக்னி தீபம் ஏந்த மற்றதேவர் மற்ற உபசாரம் செய்ய வாத்யகோஷம் முழங்க ஸ்கந் தன் போர் முனைக்கு வந்தார்.

சிம்மவக்த்ரன் தேவ ஸேனைகளை உயிருடன் வாரி வாரி விழுங்கினான். பல ஸேனாபதிகள் விழுங்கப்பட்ட னர். சிலர் மூக்கின் வழியாகவும் காதின் வழியாகவும் வெளியே வந்தனர். தனது வீர ஸகோதரனுடைய ஒப் பற்ற வீர்யத்தைக்கான சூரன் கோபுரத்தில் ஏறி நின் றான். சிம்மன் குஹனைப்பார்த்து எங்கள் இயற்கைப் பகைவரான தேவர்களோடு நாங்கள் போர் புரிய நீஏன் யுத்தத்திற்கு வருகிறாய்? உன்னைச் சார்ந்த அனைவரை யும் கொன்று விட்டோம். சிறுவனை உன்னையும் கொல்லப் போகிறோம் என்றுகூற குஹன் ஒரு பாணத் தினால் அவனது வயிற்றைப் பிளந்தார். அங்கிருந்து பலஜீவர்கள் வெளிக்கிளம்பினார்கள். குஹன் ஒரு பாணத் தைவிட்டு உதயகிரியில் உறங்கும் தேவர் அனைவரையும் கொண்டுவந்தார். இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது.

ஸிம்ஹவக்த்ரன் தனது ஸேனைகளுடன் பற்பல அண்டங்களுக்குச் சென்று அங்குள்ள தேவர்களையும் ஹிம்சித்து ஆகாசத்திலும் மேகமண்டலத்திலும் பதுங்கி யுத்தம்செய்தான். இரண்டாயிரம் கைகொண்டு குஹனைக் கட்ட ஆரம்பித்தான். இவனது கரங்களை சரங்களால் அறுத்துத் தள்ளி ஆயிரம் தலைகளையும் கைகளையும் அறுக்க மேன்மேலும் அவை முளைத்துக் கொண்டிருந்தன. குஹன் மூக்கின் மீது விரலைவைத்து இனி கிளம்பாதே என ஒரே சிரஸ்ஸும் இருகரங்களுமாக நின்றான். வஜ்ராயுதத்தினால் அச்சிரத்தையும் அறுத்துத் தள்ளினார். தேவர்கள் ஆனந்தம் அடைந்து பூமாரிப் பொழிந்து போற்றினார்கள்.

இதைக் கேட்டுக் கதறிய சூரன் சகல அண்டங்களில் இருக்கும் ஸேனைகளையும் அழைத்தான். கங்காபிரவாகம் போல் வந்த ஸேனைகளுடன் சூரன் திவ்ய ரதத்தின் மீதேறி வர சுப்ரமண்யன் தனது ஸேனையுடன் கிளம்பி அவனுடன் யுத்தம் செய்யவந்தார். சூரனையும் அவன் ஸேனைகளையும் கண்டு வீரபாஹு முதலிய அனைவரும் நடுங்கி எப்படி ஜயமுண்டாகுமென பயந்தனர். குஹனது நாணோசையைக் கேட்டவுடனேயே பலர் இறந்தனர். வில்லை வளைத்து கோடிக்கணக்கான சரங்களை வர்ஷித்தார். அண்டங்களிலிருந்து வந்த பற்பல கோடி வீரர்களும் அடிபட்டு இறந்தார்கள். வாயு தேரோட்ட ஸ்கந்தனது தேர் பூமியிலும் ஆகாயத்திலும் கடலிலும் மலையிலும் அதிவேகமாக வாயுபோல் சென்றது. தேவர்கள் அவரவர் வாஹனங்களிலமர்ந்து குஹனைப் பின்தொடர்ந்து அவன் வீர்யத்தைக்கண்டு களித்தனர். சூரன் சிறுவனை உன்னை ஒரே பாணத்தினால் கொல்கிறேன் எனக்கூற வாயினால் பேசுவதைவிட கையினால் உனது ஸாமர்த்யத்தை காண்பி என்றார் ஷண்முகன். சூரன், வீரபாஹு முதலியவர்களின் மீது பாணங்களை வர்ஷிக்க அவர்களும் சூரன் மீது திவ்யாஸ்த்ரங்களை வர்ஷித்தார்கள். அவைகளை அவன் மதியாமல் சுப்பிரம்மண்யனையே எதிர்த்து ஓடி வந்தான். இருவரும் வீராவேசம் கொண்டு யுத்தம்செய்ய வீரலக்ஷ்மி எவரிடம் வந்து தங்குவது என கலங்கினாள். சூரன் ஷண்முகனது த்வஜத்தை அறுத்துக்கடலில் தள்ளினான். பானுகம்பன் எனும் தேவவீரன் ஆயிரம் முகங்களில் ஆயிரம் சங்கங்களை வைத்து ஊதினான். தேவர்

கள் கோரியபடி அக்னி கோழியாகி ஷண்முகனுக்கு த்வஜமாக நின்றான். இதைக்கண்டு களிக்கும் தேவர்மீது சூரன் சரவர்ஷங்களை வர்ஷித்தான். அவன் செல்லும் இடமெல்லாம் சென்று குஹன் அவனது தேரை முறித்தார்.

மாயையினால் சூரன் பிரம்மலோகம், வைகுண்டம், அண்டங்கள் முதலிய இடங்களுக்குச் செல்லும் பொழுது ஆங்காங்கு குஹன் போர்புரிந்தான். ஹுங்காரத்தினால் அண்டங்களிலிருந்து வரும் அஸுரர்களை எரித்தான். ஸர்வ ஸம்ஹாரமெனும் சிவாஸ்த்ரத்தை சூரன் விட குஹன் அதைக் கையில் ஏந்தி சாந்தமாக்கினார். மாயையினால் பற்பல ரூபங்களை சூரன் எடுக்க ஞானாஸ்த்ரத்தினால் அவைகளையகற்றி அவன் நிஜ உருவையே எடுக்கும்படிச் செய்தார். தேவர்கள் அவர்கள் எங்கு இருக்கின்றனர்? என் செய்கின்றனர்? குஹன் தனியாக இருக்கின்றாரே என வருந்த விஷ்ணு அவர்களை ஸமாதானப் படுத்தி சிவனே குஹன் ஆதலால் விரைவில் ஜயமுண்டாகும் என கூறும் பொழுது சூரனும் குஹனும் அங்கு வந்தார்கள்.

பலம் ஒடுங்கி மனம் தளர்ந்து சூரன் தன்தாயான மாயாதேவியினிடம் சென்று தனக்கு ஜயம் வேண்டும். இறந்தவர் எழுந்திருக்க வேண்டும் என வேண்டினான். மாயாதேவி நீ சிவத்வேஷம் செய்ததால் உனக்கு ஜயம் இல்லை. கடலிலுள்ள மந்தர மலையைக்கொண்டு இறந்தவரை எழுப்பென்றாள். இங்ஙனமே அனைவரையும் எழுப்ப எண்ணிறந்த வீரர்களைக்கண்ட தேவர்படை பயந்து பற்பல பக்ஷி உருவம்தாங்கி ஓடிற்று. இறந்த சிம்ஹவக்த்ரன் முதலியவர்கள் வந்து பற்பல கோர அஸ்த்ரங்களை வர்ஷிக்க பாசுபதாஸ்த்ரத்தினால் குஹன் அனைவரையும் கொன்றார். சூரன் இந்திர விமானத்தை அழைத்து தேவர் அனைவரையும் அண்டகோளங்களில் கொண்டுவை என்று உத்திரவிட்டான்.

குஹன் சிலபாணங்களை அனுப்பி அனைவரையும் அழைத்து வந்து இந்திர விமானத்தை அசையாமல் இருக்கும்படிச் செய்தார். சூரன் அனுப்பிய சூலம் அக்னி ஜ்வாலையைக் கக்கிக்கொண்டு வரும்பொழுது குஹன்து வஜ்ரம் விரைவிலதை அடக்கிற்று. தேவர்கள் சூரனைக்

கொல்லும்படி வேண்டினர். சூரன் சக்ரவாகப்பட்சியாகி கால்களாலும் இறக்கைகளாலும் மூக்கினுலும் ஸ்கந்தனது ஸாரதியையும் ரதத்தையும் அடித்து ஹிம்ஸித்தான். குஹன் சரவர்ஷங்களாலதை அடிக்க பாதாளம், ஸ்வர்க்கம், மலை, ஸமுத்ரம் முதலிய இடங்களில் சுற்றினன். ஸ்கந்தன் ரதத்தைவிட்டு சக்ரனை நோக்க அவன் மயிலாகி ஸ்கந்தனைச் சுமந்தான். சூரன் பூமி உருவம் எடுத்து ஸ்கந்தனை அழுத்த ஆரம்பிக்க, அவர் ஓர் பாணத்தினுல் கடல் நீரை உண்டுபண்ணி அவனை அமுக்கினூர். சூரன் ஸமுத்ரமாக ஸ்கந்தனது சரம் தீயாகி அதை உலற்றிற்று. அவன் அக்னியாக வரும்பொழுது வாயுவாகவும், மயிலானபொழுது ஸர்ப்பமாகவும் அவனைச் சிக்ஷித்தார். இங்ஙனம் நான்கு நாட்கள் பற்பல உருவெடுத்து யுத்தம் செய்தான். மும்மூர்த்திகள், இராக்ஷஸர், இந்திரன், பூதப்ரேத பிசாசங்கள், யமன், புயல்காற்று, ஸமுத்திரம். விஷம், விருஷபம், திக்கஜம், ஸிம்ஹம், பக்ஷி, மானிட உருவம், தாரகசிம்ஹவக்த்ர உருவம் முதலிய எண்ணிறந்த உருவங்களை எடுத்தான். பகவான் நீ மாயையால் இத்தனை உருவங்களை எடுத்தாய். எனது ரூபத்தைப் பார்! என விச்வரூபத்தை எடுத்தார். மலை, ரஸாதலம், கடல், நக்ஷத்ர மண்டலம், சந்திர சூர்யர், வித்யைகள், மிருத்யு முதலியவைகள் இவரது அவயவங்களாகக் காணப்பட்டன. ஞானமே யக்ஞோபவீதம். அக்ஷரங்கள் பற்கள். நாக்கு சிவாகமங்கள். ஏழுகோடி மகாமந்த்ரங்கள் உதடுகள். எண்ணிறந்த தலைகள், கரங்கள், ஆயுதங்கள், ஓரிடம் உக்ரம். ஓரிடம் சாந்தம். கோடி சூரிய ஒளி. இத்தகைய உருவத்தைக்கண்டு தேவர்கள் பயத்துடனும் ஆச்சர்யத்துடனும் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

சூரனுமிதைப் பார்த்தவுடன் மிகவும் பக்திகொண்டு ஆஹா! பிரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்திரங்களைச் செய்ய எண்ணமுண்டாகின்றதே! தேவர்களை நான் ஹிம்சிக்காவிடில் இத்தகைய ரூபத்தைக் காண்பேனே? என்று பலவாறு எண்ணினன். ஸ்கந்தன் தனது பழைய உருவத்தைக் காட்டியபோது அவனது ஞானமகன்று போருக்கு வந்தான். தேவர்கள் விரைவில் அஸுரனைக் கொல்லுங்கள் என வேண்டினர்கள். ஸ்கந்தன் அவன்மீது சக்தியை

ஏவினர். சூரன் லக்ஷயோஜனை தூரம் உயரமான மாமரமாக நின்றான். அதனால் ஆதிகூர்மமும் அஷ்டதிக் கஜங்களும் குல பர்வதங்களும் பொருக்கமுடியாத துன்பத்தை அனுபவித்தன, சக்தியும் சகல லோகங்களிலும் பரவி இம்மரத்தை இரண்டு துண்டாக்கிற்று. அவ்வேல் தனது நிஜ உருவத்தை எடுத்துக்கொள்ள அவன் மார்பை பிளந்து கடலில் மூழ்கி குஹனிடம் வந்தது. சூரபத்மன் ஒரு பாகத்தினால் மயிலாகவும் மற்றொன்றால் கோழியாகவும் உருவமெடுத்து பகவானது திருவடியில் விழுந்து துதித்தான். கருணாமூர்த்தியான ஸ்கந்தன் கோழியை த்வஜத்தில் அமர்த்தினர். இந்திரமயில் வாகனத்திலிருந்து இறங்கி அசுரமயில்மீதேறினர். அது பகவானை உலகெலாம் சுற்றி யுத்த பூமியில் கொண்டு விட்டது. அன்று முதல் ஸ்காந்தனுக்கு வாகனமாக அமைந்தது.

ஸகல தேவர்களும் ஸந்தோஷமடைந்து பூமாரிபொழிந்து பணிந்து பகவானைப் போற்றினர்கள். ஸ்கந்தனும் அவர்களுக்கு ஆசிர்வாதம் செய்தார். ஹிரண்யன் நிஜ உருவுடன் பெற்றோருக்கு ஈமைக்கடனைச் செய்து சுக்ரர் கூறியபடி முக்திபெற சிவனை நாடித் தவம் செய்தான். இச்சரிதத்தைக் கேட்போர் சத்ருபயமின்றி ஜயம் பெறுவர். இதைக்கேட்டு மஹாவிஷ்ணு முரனையும் காலநேமியையும் கொன்று வெற்றிபெற்றார். கிருஷ்ணன் இதனால் நரகாசுரனைக் கொன்றார். ததீசி இந்த சிரவணத்தினால் மஹாவிஷ்ணுவையும் ஜெயித்தார்.

யுத்த காண்டம் முற்றிற்று.

தேவ காண்டம்.

தேவயானை விவாஹம்.

ஸ்கந்தன் சிறையில் உள்ள ஜயந்தன் முதலியவர்களை விடுவித்தார். யுத்தத்தில் உயிரிழந்த தேவகணங்களை எழுப்பி சூரனது நகரத்தை விழுங்கும்படி கடலுக்குக் கட்டளையிட்டு திருசெந்தூர் வந்தார். ஆங்கு தந்தையைப் பூஜித்து திருப்பரங்குன்றம் வந்தார். தேவர்களை அவரவர் இருப்பிடம் அனுப்ப திருப்பரங்குன்றத்தில் சில காலம்தங்கி ஆறு முனிவரும் தாங்களும் செய்யும்

பூஜையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென வேண்டினர். தேவர்கள். விச்வகர்மாவை அழைத்து அத்புதமான கோபுரங்களும், மண்டபங்களும் பிராகாரங்களும், வீதிகளும் சூழ்ந்த அரண்மனையை அமைத்தார்கள். ஆங்கு பராசரரதுபுதல்வர்கள் முறைப்படி இறைவனை வழிப்பட்டு தத்வோபதேசம் செய்யும்படி வேண்ட பிரம்மாதி தேவர்களை அனுப்பிவிட்டு முனிவர்களுக்கு உபதேசம் செய்தார் க்ஞானமூர்த்தி.

இந்திரன் தனது பெண்ணுகை அமர்ந்த தேவயானையை ஸ்கந்தனுக்கு அளிக்க எண்ணி இந்திராணியை அழைத்தார். ஜயந்தன் இந்திராணி முதலிய அனைவரும் ஒன்று கூடி அஸுரர்களைக் கொன்று பேருதவிச் செய்த ஸ்கந்தனுக்குத் தேவயானியை அளிக்க தீர்மானித்து சுப்ரமண்யனிடம் வந்து வேண்டினர்கள். அவர் அதை ஏற்றுக் கொள்ள, தூதர்களை அனுப்பி தேவயானி சுப்ரமண்ய விவாஹத்திற்கு எல்லோரையும் அழைத்தான். அத்புதமான கல்யாண மண்டபத்தை அமைத்தான். முசுகுந்தன் முதலிய சக்ரவர்த்திகளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வந்துசேர்ந்தார்கள். இந்திராணி, கஜநாயகி எனும் தேவயானிக்குக் கலியாண அலங்காரம் செய்து அழைத்து வந்தாள். பிரம்மா நல்ல முகூர்த்தத்தில் குஹனை விவாஹத்திற்கு அழைக்க பிரம்மாவும் விஷ்ணுவும் கூடவர மண்டபத்திற்குக் கிளம்பினர். சந்திர சூர்யர்கள் குடை பிடிக்க, வருணனும் வாயுவும் சாமரம்வீச காலன் கத்தி ஏந்திவர வேதகோஷமும் வாத்ய கோஷமும் முழங்க ரிஷிகள் துதிக்க கோழிகூவ கின்னரர் கானம் செய்ய அப்ஸரஸ்ஸுக்கள் ஆட ஸரஸ்வதீ முதலிய தேவஸ்த்ரீகள் நீராஜனம் செய்ய வீதிவலம் வந்து விவாஹ மண்டபத்தில் நுழைந்தார். பதினெண் வாத்யங்கள் முழங்கின. தேவஸ்த்ரீகள் ஸ்கந்தனை ஊஞ்சலில் அமர்த்தி பாலால் பாதங்களை அலம்பி பட்டால் துவட்டி உள்ளே அழைத்துச் சென்றார்கள். அச்சமயம் விருஷபாரூடராக பார்வதீ பரமேச்வரர் வர எல்லோரும் எதிர்கொண்டு அழைத்து நமஸ்கரித்தார்கள்.

வெற்றிபெற்று வந்த சுப்ரமண்யனை மடிமீதமர்த்தி உச்சி முகந்தார். பிரம்மா முகூர்த்த காலம் வந்ததென விக்ஞாபனம் செய்துக்கொண்டார். லக்ஷ்மியும் வாணியும்

அழைத்துவர தேவயானி பார்வதி பரமேச்வரர்களை வணங்கி அவர்கள் உத்திரவுபடி குஹனுடன் ஒரே ஆசனத்தில் அமர்ந்தாள். இந்திரன் வரனை அர்ச்சித்து கன்னிகா தானம் செய்தார். பிரம்மா மங்கள சூத்ரத்தைத் தர குஹன் தேவயானையின் கழுத்தில் அதைக் கட்டினுர். வாத்திய கோஷமும் வேதகோஷமும் ஜயகோஷமும் முழங்கிற்று. புஷ்ப சந்தண வர்ஷமும் வர்ஷித்தது. விதிப்படி அக்னியில் ஹோமம் செய்து பாணிக்ரணம் செய்து அக்னியை வலம் வருவது அம்மி மிதிப்பது முதலியவைகளை முறைப்படிச்செய்து விவாஹத்தை முடித்தார். தம்பதிகளை வாழ்த்தி பெற்றோர் கைலாஸம் செல்ல தேவர்கள் துதி செய்து அபரிமிதமான காணிக்கைகளைச் செலுத்தினர். விவாஹத்திற்கு வந்த அனைவர்க்கும் தக்க ஸன்மானம் செய்து அனுப்பினுர். குஹன் சிறிது காலம் தேவயானையுடன் அங்கிருந்துவிட்டு சக்ரனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்க ஸ்வர்க்கத்திற்குக் கிளம்பினுர். சூன்யமான ஸ்வர்க்கத்தை விச்வகர்மாவைக் கொண்டு அத்புதமாக அமைத்து பிரம்மாவை அழைத்து ஸகல வைபவத்துடனும் பட்டாபிஷேகம் செய்வித்தார்.

ஸகல தேவர்களையும் ஆசிர்வதித்து மனைவியுடன் ஸ்கந்தகிரிக்குச் சென்றுர். வீரபாஹுவை ஸாரதியாகக் கொண்டு கைலாஸ நகரம்சென்று பெற்றோருக்குப் பூஜை செய்தார். தேவேந்திரன் சத்ரு பயத்தினுலும் அதுவரை பல கஷ்டங்களை அனுபவித்ததாலும் வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டான். பிரஹஸ்பதி தர்மத்துடன் காம சாஸ்ரத்தையும் அவனுக்குப் போதித்தார். இந்திரன் ஜயந்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்து இந்திராணியுடன் ஏகாந்தமாக ரமித்துக்கொண்டிருந்தார்.

வள்ளீ கல்யாணம்.

ஸௌந்தர்ய வல்லியைப் பூமியிலிருக்கச் சொன்னுரல்லவா ? காஞ்சீநகருக்கு அருகே மூர்த்தாஸ்பாடி என்றவிடத்தில் வள்ளிமலை என்றோர் குன்றிருக்கிறது. ஆங்கு ஓர் வேடராஜன் புத்ரனில்லாமல் வருந்தினுன். அவன் ஒருநாள் வேட்டைக்குச் செல்ல வள்ளிக்கொடி புதரில் ஒரு பெண் குழந்தையைக் கண்டான். அன்புடனதை எடுத்து வல்லி எனப் பெயரிட்டு வளர்த்தான். பனிரண்டு

வயதான அவளைத் தனது வயலில் பக்ஷிகள் கதிரைக் கொத்தாதபடி காவலாக அமர்த்தினான். ஆடிப்பாடி பக்ஷிகளை ஓட்டிக்கொண்டிருக்கும் வள்ளியை மணம் புரியக் கருதினார் ஷண்முகன். பரிபூர்ணமெனும் மலைக்கு வந்து வேட உருவத்துடன் அவளை அண்டி நீ யார்? பெண்ணே! உன் அருமை அறியாத வேடர் உன்னை இந்த வேலையில் அமர்த்தினார்! வெட்கத்தை விட்டுப் புன்னகையுடன் ஒரு பேச்சு பேசாயா? உனது அழகிய அதர அமிருதத்தை அருந்த அவா கொண்டுளேன்! என்றார்.

இதற்குள் வாத்ய கோஷத்துடன் வேடர் வருவதைக் கண்டார். அழகிய நிழலளிக்கும் வேதமரமாகி நின்றார் சரவணபவன். தினைமாவையும் தேனையும் தந்தை வல்லிக்குத் தர அவனுடன் வந்தவர் இதுவரை இல்லாத இந்த மரமேது? புதிதாக இருக்கின்றதே! என அதை வெட்ட ஆரம்பித்தனர். வேடராஜன் அதைத் தடுத்து குழந்தாய்! இந்த வர (சிறந்த மருமகனை) விருக்ஷத்தைக்கண்டு அஞ்சாதே! இது உனக்கு உதவியாகி நல்ல நிழலைத்தரும்! என்று கூறிச்சென்றார். மறுபடியும் வில்லேந்தி மிக ஸுந்தர ராஜரூபத்துடன் ஸ்கந்தன் வந்து முன்போன்ற சொற்களைக் கூறினார். ஐயா! தாங்கள் சிறந்த குலம்! நான் மிகத் தாழ்ந்தகுலம்! உமக்கும் எனக்கும் வெகு தூரம்! வந்தபடிச் செல்லும்! வேடர் வந்தால் உம்மைச் சிக்ஷிப்பர்! என்றாள். இதற்குள் மறுமுறை வேடர் வர ஸ்கந்தன் தொண்டு கிழவனாகித் தடிபிடித்துக் காக்ஷி அளித்தார். வேடராஜனுக்கு ஆசீர்வாதத்துடன் விபூதி அளித்தார். ஐயா! தாங்கள் எங்கு செல்ல இங்கு வந்தீர்? என இங்குள்ள குமரீ தீர்த்தத்தில் ஸ்நானம்செய்ய வந்தேன் என இரு பொருளாகக் கூறினார் கிழவர். எனது பெண் ஸஹாயம் செய்வாள். அங்ஙனமே ஸ்நாநம் செய்யும் என்று கூறிச்சென்றான் வேடராஜன்.

கிழவர் வல்லியுடன் தடாகஞ் சென்று நீரருந்தி, பெண்ணே! அந்த தாஹம் அகன்றது! என்னை ஏற்று மற்ற தாஹத்தையும் அகற்று! என்றார். ஐயா! நீர் வயதானவர்! நமஸ்காரம் செய்வதற்கே ஏற்றவர்! இப்படிப் பேசாதீர்! நான் முன்னே செல்கிறேன்! பின்னர் வாரும்! என்று வேகமாக நடந்தாள் வல்லி. ஷண்

முகன் விநாயகனை நினைக்க அவர் யானையாகி வர பயந்த வள்ளி ஓடிவந்து கிழவரை ஆலிங்கனம் செய்து என்னை ரக்ஷியும்! நீர் சொன்னபடிக் கேட்கிறேன்! என்றாள். பகவான் அவளை ஏற்று, தனது நிஜ உருவைக் காட்டி நீ விஷ்ணுவின் புத்ரி! உனது பக்திக்கு இணங்கி ஸ்நேஹத்தால் இப்படி லீலை செய்தேன்! என்றார் குஹன். வல்லி தோழிகளுடன் வயலுக்கு வந்தாள். இவ்விருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் ஒருக்ஷணமும் பிரிந்திருக்க முடியாமல் விரஹ துன்பத்தை அனுபவித்தார்கள்.

இரவில் ஒருநாள் வீட்டின் பின்புறமாகவந்து குஹன் வல்லியை அழைத்துச் சென்று ஆநந்தமளித்தார். வேடராஜன், மகளைக் காணுமல் வருந்தி ஸேனையுடன் அவளைத் தேடக் கிளம்பினன். வல்லியைப் பின்னர் நிறுத்தி வேடருடன் போர்புரிந்தார். ஸ்கந்தன் தனது கோழியை அழைத்தார். அது வந்து செய்த சப்தத்தால் எல்லோரும் மூர்ச்சையடைந்தனர். பிரும்மாவும் நாரதரும் வந்து வேடரை எழுப்பி வல்லியை விதிப்படி மணக்கும்படி வேண்டினர். குஹனது ஆணையால் வல்லி அனைவரையும் எழுப்பினள். நாரதர் சொற்படி வேடராஜன் கன்யாதானம் செய்தான். பார்வதீ பரமேச்வரரும் லக்ஷ்மீ நாராயணனும் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

வல்லியுடன் பரிபூர்ணசலம் வந்து அதன் மஹிமையை வல்லிக்குக் கூறினர். அங்கு குஹனைத் தர்சிப்பவர் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுவர். வல்லியுடன் ஸ்கந்தகிரிக்குவந்து, வல்லி தேவயானிகளுடன் அமர்ந்து அவர்களுக்கு உபேந்திர புத்ரியாக இருந்து தன்னை நாடித் தவம்செய்ததைக் கூறினர். அமிருதவல்லி எனும் நீ (வல்லி) அவ்வுடலை அக்நியில் விட்டாய். உபேந்திரர் கண்வரது சாபத்தினல் சிவமுநி என்ற பெயருடன் தோன்றி பூமியில் தவம் செய்தார். லக்ஷ்மீ மானுருவம் எடுத்து அங்குவர, முநிவர் அருளால் நீ அங்கு பிறந்தாய். கண்வர் சாபத்தால் மற்ருேர் உருவெடுத்த உபேந்திரர் வேடராஜனுகி உன்னை வளர்த்தார் என்று பகவான் கூறினர். தேவயானி விவாஹத்திற்கு வந்த முசுகுந்தர் யார் என ஸூதர் கூறினர். பார்வதீ பரமேச்வரர் பில்வமரத்தினடியில் வீற்றிருக்கும் பொழுது ஒரு குரங்கு பக்தியுடன்

பில்வ பத்திரத்தைப் பறித்து அவர்களுக்கு அர்ச்சனை செய்தது. இதனால் சிவன் அவரை முசுகுந்த சக்ரவர்த்தியாகச் செய்தார். அவர் குரு உபதேசித்தபடி குஹவிரதம் அனுஷ்டித்தார்.

குஹ விரதம் செய்தவர்.

பகீரதன் கோரனெனும் ராக்ஷஸனால் பீடிக்கப்பட்டு ராஜ்யத்தை இழந்து வனம் சென்றான். பிருகு கூறியபடி மூன்று ஆண்டு சுக்ரவாரத்தில் குஹவிரதம் செய்தான். குஹனது சக்தி கோரனைக் கொல்ல பகீரதன் ஸ்வராஜ்யமடைந்தான். கிருத்திகையில் குஹவிரதம் செய்து நாரதர் தேவரிஷியானார். ஏழைப் பிராம்மணன் ஒருவர் அதனால் த்ரிசங்கு ராஜனாகப் பிறந்தான். முசுகுந்தனது விரதத்தால் பிரத்யக்ஷமான பகவான் வரமளித்தபடி ஒன்பது லக்ஷம் குஹ ஸகோதரர்களைத் தன் ஸோதரர்களாகப் பெற்று அகண்ட பூமண்டலத்தை ஏக சக்ராதிபதியாக ஆண்டார். கற்பூரகிராமம் என்ற இடத்தில் ராஜகன்யகைகளாகத் தோன்றிய அப்ஸரஸ்ஸுகளை ஸகோதரருக்கு மணம் செய்வித்தார். வீரபாகு புஷ்பகந்தியிடம் கந்தன் அநகன் என்ற புத்ரர்களையும் சித்ரவல்லி எனும் புத்ரியையும் பெற்றார். அவள் வளர்த்த கிளியை யமபத்நி அபஹரித்துச் செல்ல வீரபாகு யமனை ஜயித்து அதை மீட்டு வந்தார். முசுகுந்தன் இந்திரனுக்கு ஸஹாயமாக ஸ்வர்க்கஞ்சென்று வலன் எனும் அஸுரனை அழித்தார். இந்திரன் அதுமுதல் வலாரி எனப்பட்டான்.

காமனுக்கு சாபம்.

வெற்றியளித்த முசுகுந்தனைத் தனது வீட்டில் அழைத்து உபசரித்தான் இந்திரன். அச்சமயம் அவனது பூஜையில் உள்ள ஸோமாஸ்கந்த மூர்த்தியைக் கண்டு ஆழ்ந்த பக்தியுடன் துதித்தான். பகவான் என்னை நீ பூலோகத்திற்கு எடுத்துச்சென்று பூஜி என்றார். இந்திரன் விருந்தளித்து திவ்யமான ஆடை ஆபரண ரத்னங்களைத் தந்து வேறென்ன வேண்டும்? என்று கேட்டார். இந்த ஸோமாஸ்கந்த மூர்த்தியை எனக் களி. அதை யான் அர்ச்சிக்க வேண்டுமென்று முசுகுந்தராஜன் கேட்டார். திருமால் தனக்குப் புத்ரபாக்யம் வேண்டுமென சிவனைப்

பூஜித்தார். பகவானும் அழகிய மன்மதன் உண்டாவான் என்றார். பார்வதி தன்னை விட்டுவிட்டு சிவனை மாத்திரம் பூஜித்ததால் பிறக்கும் புத்ரன் சிவன் கண் தீயாலே இறப்பானென சாபமளித்தாள். விஷ்ணு, க்ஷமிக்கும்படித் தேவியை வேண்ட மறுபடியும் அவன் ஜீவிப்பான் என்றாள். மன்மதன் பிறந்தபின் இந்த மூர்த்தியை எனக்களித்துப் பூஜிக்கும்படி கூறி பாற்கடலில் அவர் உறங்கினார்.

திருவாலூரில் ஸோமாஸ்கந்தப் பிரதிஷ்டை.

இதை யான் அவர் உத்தரவின்றி அளிப்பது தர்மம் அல்ல. அவர் உத்தரவு பெற்றுவா, தருகிறேன் என்றார். முசுகுந்தன் பாற்கடல் சென்று பன்னகசாயியிடம் உத்தரவு பெற்று வருவதற்குள் விச்வகர்மாவைக்கொண்டு அதேபோல் ஆறு விக்ரஹங்களை அமைத்து அவைகளை மன்னனிடம் அளித்தான். அவைகளுடன் முதல் மூர்த்தியையும் தனக்களிக்கும்படி வேண்டினான் அரசன். அதைத் திருவாலூர் என்ற திவ்ய க்ஷேத்ரத்திலும் மற்றவைகளை மற்ற ஆறு க்ஷேத்ரங்களிலும் முசுகுந்தன் பிரதிஷ்டை செய்தார். தான் பூஜிக்காத விக்ரஹங்களை அரசனுக்கு அளித்த பாபத்தால் இந்திரன் சண்டாளனாகி திருவாலூரில் பகவான் வீதி வலம் வரும்போது வாத்யம் வாசித்து முக்திபெற்றான். [அந்த பரம்பரை இன்றும் ஆங்குளது. பிரும்மோத்ஸவ ஆரம்பத்தில் கோவில் மரியாதையுடன் அவரை அழைத்துவந்தும் வீட்டில் கொண்டு விட்டும் மரியாதை செய்வது இன்றைக்கும் நடைபெறுகிறது].

தேவகாண்டம் முற்றிற்று.

தக்ஷ காண்டம்.

பத்து புத்ரர்களில் முதல்வனான தக்ஷன் தந்தையான பிரும்மாவை வணங்கி மும்மூர்த்திகளில் சிறந்தவர் யார்? என்று கேட்டார். விஷ்ணுவும் நானும் மோகம் கொண்டபொழுது ஜோதிர் லிங்கமாகத் தோன்றி அருள் புரிந்தவரும் ஸகல வேத வேதாந்த பொருளுமான சிவனே உயர்ந்தவர் என்றார். மாநஸஸரஸ்ஸில் பதினொரு

ஆயிரம் ஆண்டு சிவனை நாடித் தவம் புரிந்து பதினான்கு உலகங்களுக்கும் அதிபதியாக இருத்தல் பல புத்ரர்களைப் பெறல் தேவி தன் புத்ரியாதல் என வரங்களை வாங்கி வந்தார். மோக்ஷம் பெற வரம் கேட்கவில்லையே! அவன் என பிரும்மா வருந்தினர். பிரும்ம புத்ரியான தேவ வல்லியை மணந்து மாநஸிகமாக ஆயிரம் புத்ரர்களைப் பெற்று படைக்கும் சக்திபெற தவம் செய்யச்சொன்னர். நாரதர் அவர்களுக்குச் சிவபக்தியை ஊட்டி வைராக்யம் உள்ளவர்களாகச் செய்தார். மறுபடியும் ஆயிரம் புத்ரர்களைப் படைத்து தவத்திற்கனுப்பினர். நாரதர் அவர்களையும் துறவியாக்கினர்.

பெண் மூலமாக ஸிருஷ்டி.

கோபங்கொண்டதக்ஷன் நாரதரை ஓரிருப்பிடமின்றி எங்கும் திரியும்படி சபித்துவிட்டு மிதுநதர்மத்தால் - சுக்ல சோணிதஸம்பந்தத்தால் - ஐம்பது கன்யகைகளைப் படைத்தார். கச்யபருக்குப் பத்துப் பெண்களை அளித்து தேவர் அஸுரர் கருடர் பாம்பு முதலியவைகளைப் படைத்தார். இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்களித்தார். தர்மம் பிருகு மரீசி, புலஸ்த்யர், ஆங்கிரஸர், புலகர், புலஸ்த்யர், வஸிஷ்டர், அத்திரி முதலியவர்களுக்கு ஒவ்வொரு கன்யகையும் தந்தார். சந்திரன் கிருத்திகையிடம் அதிக அன்பு காட்டி மற்றவர்களை மதியாதிருந்ததால் தக்ஷன் சந்திரனுக்கு க்ஷயம் உண்டாகும்படிச் சபித்தார். ரோகிணியிடம் அன்புகொண்டது வேருெரு கல்பகதையாம். ஏற்கனவே விநாயகரைப் பார்த்துச் சிறித்து அவராலும் ஒரு சாபம் ஏற்பட்டது. விநாயக சதுர்த்தியில் மாத்ரம் எவரும் சந்திரனைப் பார்க்கலாகாது என்று விநாயகர் அருள் புரிந்தார்.

சந்திர சாபமகலல்.

சந்திரன் சிவனைச் சரணமடைய தேவர் வேண்டியபடி சிவன் சந்திரனைத் தலையில் பூஷணமாக அமைத்து ஒரு பக்ஷம் கலை குறையவும் அடுத்த பக்ஷம் வளரவும் அருள் புரிந்தார். தனது சாபத்தை வீணுக்கியதால் சிவன் மீது சிநம் கொண்டு தக்ஷன் சிவநிந்தை செய்தான். புலஸ்த்யர் சிவமகிமையை விளக்கி அவர் கோபத்தை அடக்கி

ஞர். சிவனே ஸகல உலக கர்த்தா. தேவி தன்ஞல்தான் ஜகத் ஸிருஸ்டி என்று கூற சிவன் தனது சக்தியைச் சுருக்கி ஸச்சிதானந்த ரூபமாக நின்ருர்.

உலகெலாம் அறிவிழந்து ஒரே இருள் மயமாயிற்று. உண்மையை உணர்ந்த தேவீ முன்போல் உலகம் உண்டாக வேண்டிஞள். பதிஞெரு கோடி ருத்ரர்களுக்கு அறிவையளித்து எழுப்பிஞர். அவர்கள் மத்யார்ஜுந க்ஷேத்ரத்தில் சிவராத்ரியில் பரமசிவனை உலக நன்மைக்காக அர்ச்சித்தார்கள். உலகெலாம் விழித்தெழுந்தது. தேவரிஷிகள் இதுவரை இருளில் ஸ்வதர்மத்தைச் செய்யாத தோஷம் நீங்க வகைக் கேட்டனர்.

சங்கம் தாக்ஷாயணியானது.

உலகம் இருளாகக் காரணமான தேவியே, பிராயச்சித்தம் செய்துக்கொள்ள வேண்டும் என்ருர். தேவி சிவனை வணங்கி எங்கே எப்படிச் செய்வது? என வினவ நர்மதா தீரத்தில் பத்மவநத்தில் வெண்தாமரை இதழில் சங்கமாக இரு. உன்னைத் தக்ஷன் எடுத்தபின் தர்க்ஷாயணி ஆவாய். பிறகு தவம் செய்யும் உன்னை ஏற்பேன் என்ருர். மகர மாதத்தில் மகா நக்ஷத்திரத்தில் தக்ஷன் மனைவியுடன் அந்த சங்கத்தைக்கண்டு கையிலெடுத்தான் உடனே அது அழகிய கன்னிகையாக வேதவல்லி பால் அளித்து வளர்த்தாள். ஐந்தாண்டுகள் சென்றபின் தாக்ஷாயணி சிவனை நாடித் தவம்செய்தாள். ஏழாண்டுகள் சென்றபின் சிவன் கிழ பிராம்மணஞக வந்து சிவன் உன்னை ஏற்பரா? நீ என்னை மணந்துகொள் என்ருர். காதில் கை வைத்து மூடி சிவ! சிவ! அவரைத்தவிர மற்றவரை மநதால் நினையேன். அவர் கிட்டாவிடில் உயிரை விடுவேன் என்ருள் தாக்ஷாயணீ.

தாக்ஷாயணீ விவாஹம்.

பகவான் தனது ஸ்வரூபத்தைக் காட்டிஞர். தாக்ஷாயணி தந்தையிடம் கூறி விவாஹத்திற்கு ஏற்பாடு செய்யச் சொன்ஞள். தக்ஷன் அத்புதமான மண்டபம் அமைத்து தோரணம் வாழைமரம் முதலியவைகளால் பந்தலை அலங்கரித்து ஸகல தேவர்களையும் அழைத்தான்.

லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் தாக்ஷாயணியை நன்ருக அலங்கரித்து அழைத்து வந்தார்கள். எங்கும் வாத்யகோஷம்! வேத கோஷம்! முழங்கிற்று. கந்தர்வர் காநம் செய்ய அப்ஸரஸ்ஸுகள் ஆடினூர்கள். ஆகாயத்திலிருந்து புஷ்ப மழை பொழிந்தது. தக்ஷன் சிவனது திருவடியை அபிஷேகாதிகளால் அர்ச்சித்தான். கன்யாதானம் செய்து பாணி கிரஹணம் செய்வித்தான். விஷ்ணு வேதங்கூற பிரும்மா ஹோமம் செய்வித்தார். சிவனே ஒப்பற்ற முழுமுதல் தெய்வம். தாக்ஷாயணியோ பதினூன்கு உலகத்திற்கும் தலைவனை தக்ஷனது புத்ரீ. உலகெலாம் உருண்டு திரண்டு வந்தது.

திடீரென சிவன் மறைந்தார். எல்லோரும் திகைத்தார்கள். தாக்ஷாயணி கதறினாள். வேதவல்லி நாங்கள் என்ன அபசாரம் செய்தோமோ? என ஏங்கினாள். மறுபடியும் தவம் செய்து சிவனருளைப் பெறு என்றுள். சிலர் தக்ஷனை நிந்தித்தனர், சிலர் நாம் செய்த பாபம் என்றனர். விவாஹ மண்டபம் ஒரே துக்கமயமாயிற்று. தக்ஷன் கோபங்கொண்டு ஒருவரும் ஒரு தவறும் செய்யவில்லை. பிரும்மசாரியாக வந்து என் பெண்ணை யாசித்தார். தாய் தந்தை தெரியாத இவருக்குப் பெண்ணை யான் தந்திருக்கக் கூடாது. ஸ்வபாவத்தை யார் மாற்றமுடியும்? என அன்று முதல் சிவத்வேஷம்கொண்டான். மறுபடியும் தவம்புரியும் தாக்ஷாயணியிடம் ஒரு துறவி வர அவள் அவரை அர்ச்சித்து சிவகிருபை என்றைக்கு வரும்? என பக்தியுடன் வேண்டினாள். சிவன் நிஜ ரூபத்தைக்காட்டி பார்வதியுடன் விருஷபாரூடராக கைலாஸம் சென்றுர்.

இதையறிந்த தக்ஷன் சிவன் திருடன். பிச்சைக்காரன். கல்யாணமறியாதவன் என நிந்தித்தான். தேவர் ஒன்று கூடி சிவநிந்தை மஹாபாவம், அவருடன் ஸந்தி செய்து கொள் என்றனர். தக்ஷன் தேவருடன் கைலை செல்ல சிவநிந்தை செய்த நீ சிவபக்தியால் பாபத்தை அகற்றி ஸமயம் பார்த்து சிவதர்சநம் செய்யலாம். அதுவரை உள்ளே செல்லக் கூடாதென நந்தி அவரைத்தடுத்தார். தக்ஷன் கோபம் அதிகமாயிற்று. இனி சிவனை வணங்குவதில்லை. தேவரும் வணங்காமல் செய்வேன்! என்று பிரும்மா விஷ்ணு முதலியவர்களை அழைத்துத் தன்னை அவ

மதித்த சிவனை எவரும் பூஜிக்கலாகாது. எனது உத்தரவை மீறி அர்ச்சிப்போர் தன் பதவியை இழப்பர். எனக் கடுமையாக உத்தரவிட்டார். பிரும்மா ஒருஸமயம் யக்ஞராஜனை சிவனை அழைத்து யாகம் செய்ய வேண்டும், என விரும்பினார். தக்ஷன் அதை ஏற்காவிடினும் நேரே சிவனிடம்சென்று தனது வேள்வியில் தானளிக்கும் ஹவிஸ்ஸை நேரில் வந்து பெற வேண்டுமென வேண்டிக்கொண்டார். சிவன் நந்தியை அனுப்புவதாகக்கூறினார். பிரும்மா மேரு மலையில் ஸகல தேவர்களையுமழைத்து யாகம் செய்ய ஆரம்பித்தார். தக்ஷனும் ஆங்கு வந்தான். நந்தியை சிவன்போல் கருதி உத்தம பூஜைசெய்து யாகஹவிஸ்ஸை அவரிடமளிக்க ஆரம்பித்தார்.

தக்ஷன் மிக்க கோபம்கொண்டு சிவனைச் சார்ந்தவர்க்கும் பூஜை செய்யலாகாது என தடுத்தான். அன்றியும் வேதங்களில் சிவ மகிமையைக் கூறும் இடங்கள் பிரமாணமல்ல. க்ரூரமான குணம் வாய்ந்த சிவனும் நந்தியும் சிவகணமும் மிக க்ரூரமானவர்கள் என்றான். இதைக் கேட்டு நந்தி காதுகளை மூடிக்கொண்டு மரணம் சமீபத்தில் இருப்பதால் இங்ஙனம் நீ உளருகின்றாய். உன் நாக்கை அறுத்து சிறத்தை அறுத்து காலால் உதைத்துக் கொல்வேன். ஆனால் சிவாக்ஞை இல்லையே என வருந்துகிறேன். சிவனை ஆராதிக்காத இடத்தில் செல்வமழியும். அதில் ஈடுபட்ட அனைவரும் பலவகை துன்பத்தை அனுபவிப்பார்களென்று கூறினார். தக்ஷனிடமுள்ள பயத்தினால் பிரும்மா யாகத்தைச் செய்யாமல் விட்டுவிட்டார். மற்றதேவர்களும் தக்ஷனுக்கும் நந்தி சாபத்திற்கும் அஞ்சி வேள்வி செய்யாதிருந்தனர். தக்ஷன் தானே சிவினில்லாமல் யாகம் செய்வதாக கங்கை கரையில் 'கனகலம்' எனுமிடத்தில் மிகவிசாலமாக ஓர் யாக சாலையை அமர்த்தினான். வந்தவர் அனைவருக்கும் தங்குவதற்கிடமும். அன்னமளிக்க முப்பதாயிரம் வேலைக்காரர்களும் பக்ஷியங்கள் செய்ய அறுபது ஆயிரம் பேர்களையும் அமர்த்தி தேவரிஷிகள் அனைவரும் வரவேண்டும் என அழைத்தான்.

தக்ஷனுக்கஞ்சி அனைவரும் பரிவாரத்துடன் வந்தனர். ஆனால் இதற்கு வராதவர் அகஸ்தியர், நாரதர், ஸனகாதிகள். ததீசி, அத்ரி, வஸிஷ்டர் பராசரர், பிருகு,

தூர்வாஸர் ஆகிய சிவபக்தர்களான இவர்களே. அதனால் சீடர்களுடன் ததீசி தக்ஷனுக்கு நற்புத்தி கூற வந்தார். தக்ஷன் சிவன் செய்த குற்றங்களைக் கூறினன். ததீசி புன்னகையுடன் கூறினார். சிவ நிந்தை செய்த உனது புண்யமெல்லாம் பாபமாக மாறியது. மும்மூர்த்திகளைப் படைத்த சிவன் பிராம்மணன். யாகபதி அவரே. அவன் இல்லாத யாகமும் அழியும். ஆங்குள்ளோரும் அழிவர் என்றார். ஈசான திக்கின் அதிபதியான ஈசானனை அர்ச்சிக்கிறேன் என்று தக்ஷன் கூற ஈச்வரனது ஸாரூப்யத்தை பெற்ற ஈசானன் சிவனல்ல. பரப்பிரும்மமானவன் சிவன். வேதத்தினால் போற்றப்படும் சிவனுக்கு மேலான தெய்வம் வேறு எவரும் இல்லை.

ஒரு நாள் மேருமலையில் தேவர் அனைவரும் ஒன்று கூடி தேவரில் உயர்ந்தவர் யார்? என்று விசாரிக்கும் பொழுது சாஸ்திர விசாரம் செய்து அனைவரும் சிவனே பரமாத்மா என்றனர். வேதங்கள் மும்முறை அதே சத்யம் என்று கூறின. என்று பற்பல வேதவாக்கியங்களைப் பிரமாணமாகக் காட்டினார். தக்ஷன் சிவனிடத்தில் பல குற்றங்களைக்கூறி சிவ நிந்தை செய்தான். அவனைப் பார்ப்பதும் அவனுடன் பேசுவதும் தகாதென்றாலும் அவனும் மற்றவருமறிய ரிஷி அவன் கூறிய தூஷணங்களைப் பூஷணங்களாகக் கூறினார். தாருகாவன மகரிஷிகள் சிவபக்தி இல்லாமல் இருக்க பக்தி புகட்டும்படி பிரும்மா சிவனை வேண்டினார். விஷ்ணுவை மோகினியாக்கி திகம்பரனாக தாருகாவனம் சென்றார். இச்சாசக்தி ஞான சக்தி கிரியா சக்தி எனும் சூலத்தையும் பரா சக்தி ரூபமான கபாலத்தையும் ஏந்தி, திரோதான சக்தி ரூபமான பாதுகையின் மீதேறி சென்றார்.

மோகினியான விஷ்ணு சிவனது சுந்தர ரூபத்தைக் கண்டு தன்னை மணக்கும்படி வேண்டினார். மற்றொரு ஸமயமாகட்டும் எனக்கூறி பிக்ஷாடனமூர்த்தியாக வேதங்களைப்பாடி வந்தார். ஒரு சமயம் வீணைமீட்டுவார்! ஒரு சமயம் வாயால் பாடுவார். இவரைக்கண்டு ரிஷிபத்னிகள் மோகித்தார்கள். இறைவனருளால் ரிஷிபத்னிகளுக்கு

உடனே குழந்தைகள் பிறந்தன. மோகினியைக் கண்டு ரிஷிகள் மோகமடைய, ஸ்த்ரீகள் சிவனைக்கண்டு மோகம் அடைந்தனர். சினங்கொண்ட கிழமுனிவர்களைக்கண்டஞ்சி விஷ்ணு சிவனைச் சரணமடைந்தார். பிரும்மாதி தேவர் களும் சிவனைத் துதித்தார்கள். கர்மிகளான அம்முனிவர், ஆபிசார ஹோமம் செய்து, புலி, கோடாலி, மான், ஸர்ப்பம், பூதங்கள், சிரோமுண்டம், அபஸ்மாரம் முதலிய வைகளை அனுப்பினர்கள். தேவர்கள் நடுங்கிஓட, சிவன் புலியைக்கொன்று தோலை யணிந்து கோடாலியை ஆயுத மாகவும், மானை கையில் அலங்காரமாகவும், ஸர்ப்பத்தை ஆபரணமாகவும் பூதங்களைச் சேனையாகவும் முண்ட மாலையை ஆபரணமாகவும் அணிந்து அபஸ்மாரத்தைக் காலால் அழுத்தினர். அக்னியைக் கையில் ஏந்தினர். மந்திரங்களை உடுக்கையாக ஆக்கிக் கொண்டார். முனிவ ரிட்டசாபமும் வீணாயிற்று. சிவன் அவர்களிடம் அன்பு கொண்டு தாண்டவமாடினர்.

அவர்களுக்கு நர்த்தனத்தினல் சிவனது தத்வம் விளங்கி பக்தியும் உண்டாயிற்று. பகவானைத் துதிக்க அவர் ரிஷிகளுக்கு விபூதி ருத்ராக்ஷ மகிமைகளைக்கூறி ஸ்வதர்மத்தை அனுஷ்டிக்கும்படி உபதேசித்துமறைந்தார். கஜாசுரனைக் கொன்று அவன் தோலையுமணிந்தார். திகம் பரனாய் இருக்கும் பொழுது அவரைத் தரிசிக்கவும் அஞ்சினர் தேவர்கள். யானைத்தோலையணிந்து "கிருத்தி வாஸஸ்" என்ற உருவத்துடன் வந்த சிவனை ஆனந்த மாகத் தரிசித்தார்கள். ஹிரண்யர்களைக் கொன்று வேகம் அடங்காமல் வெறிகொண்டு அட்டகாஸம் செய்த வரா ஹத்தைக் கொன்று நிருசிம்ஹனையும் சரபமாக வந்து சிக்ஷித்து அவர்கள் வேண்டிக்கொண்டபடி அவர்களது அஸ்தியை மாலையாக அணிந்து இருக்கின்றார். தேவர்களை ஹாலாஹலத்திலிருந்து காக்க அதனல் கருத்த திருமேனி வாய்ந்த விஷ்ணுவும் வேண்ட அதைத்தன் கழுத்தில் அணிந்து நீலகண்டன் ஆனர்.

அவ்விஷத்தின் உக்ர சக்தியை அடக்கி நாகக் கனி போல் சுந்தரர் எனும் சிவகணம் கொண்டுவந்தார். விஷ்ணுவும் பிரும்மனும் நானே பரபிரும்மம் என்று கூற பிரணவத்தை முன்னிட்டுக்கொண்டு வந்த வேதபுருஷன்

சிவனே பரபிரும்மம் என்றது. மறுபடியும் அவர்கள் வாதம் செய்ய லிங்கவடிவமாக நின்றார். விஷ்ணு அவரை வணங்கி வைகுண்டம் சென்றார். பிரும்மா மோஹத்தினால் ஐந்தாவது முகத்தினால் சிவநிந்தை செய்தார். பைரவர் தோன்றி அத் தலையைக் கிள்ள அங்கிருந்து ஒரே இரத்தப் பிரவாஹம் தோன்றிற்று. அதை நெற்றிக் கண்ணால் உலர்த்த, தனது கபாலத்தைக் கரத்தில் தரிக்க வேண்டும் என்று வேண்டினார் பிரும்மா. கால பைரவர் இரத்தபிக்ஷை எடுத்துக்கொண்டு வைகுண்டம் சென்றார். ஆங்கு விஷ்வக்ஸேனர் இவரைத் தடுக்க அவரைச் சூலத்தினால் குத்தித் தூக்கிக்கொண்டு விஷ்ணுவிடம் செல்ல அவர் ஆனந்தமடைந்து தன் நெற்றியை நகத்தினால் கீறி ரத்தத்தைத் தந்தார். ஸ்ரீதேவியும் பூதேவியும் பைரவரை வணங்கி மாங்கல்ய பிக்ஷைக் கேட்டனர். விஷ்ணுவிற்கு பலத்தை அளித்து விஷ்வக்ஸேனனையும் எழுப்பிச் சென்றார். கல்பத்தின் முடிவில் பைரவர் பிரும்மா விஷ்ணு முதலிய உலகையெல்லாம் எரித்து அந்த விபூதியை அணிந்து அந்த ச்மசானத்தில் வேதங்களை நாயாக்கி நிற்கின்றார்.

தர்மதேவதையும் மகா விஷ்ணுவும் விருஷபமாகித் தன்மீது அமரும்படி வேண்டினார்கள். கல்பகால முடிவில் இறந்த பிரும்ம விஷ்ணுக்களுடைய எலும்பை மாலையாகத் தரித்து கேசங்களைப் பூணலாக அமைத்துக்கொண்டார்.

ஜாலந்தர வதம்.

இந்திரன் விநயமில்லாமல் சிவ ஸேவைக்கு வர, சிவனே துவாரபாலகனாக ஆகி வழிமறித்தார். உள்ளே சிவன் என்ன செய்கிறார் என்று கேழ்க்க அவர் வாய் திறக்கவில்லை. கோபங்கொண்டு இந்திரன் வஜ்ரத்தை விட அது பொடிப்பொடியாய் ஆயிற்று. கர்வம் அகன்று சிவனை இந்திரன் துதிக்க, சிவன் தனது கோபத்தைக் கடலில் எறிந்து அவனுக்கருள் புரிந்தனுப்பினார். சிவ கோபம் கடலில் ஓர் அசுரக் குழந்தையாகத் தோன்றிற்று. வருணனதை வளர்த்து பிரும்மா மடியில் அக்குழந்தையை விட்டு அதற்குப் பெயரிட்டு ஆசீர்வதிக்கும்படி வேண்டினான். அது பிரும்மாவின் தாடியைப் பிடித்து இழுத்ததால்

அதற்கு ஜாலந்தரன் எனப் பெயரிட்டார். அவன் இந்திரன் முதலியவர் அனைவரையும் வென்று பல்லாயிரம் ஆண்டுகள்வரை விஷ்ணுவுடன் போர்புரிந்தான். விஷ்ணு களைத்து சிவனிடம் வந்து பிரார்த்தித்தார்.

அச்சமயம் ஜாலந்தரனும் கைலாஸம் வந்தான். சிவன் பிராம்மண வேஷம் கொண்டு நீ யார்? எங்கு வந்தாய்? என்றார். நான் ஜாலந்தரன்! எல்லோரையும் ஜயித்து, சிவனையும் ஜயிக்க வந்தேன்! என்றான். நீ சிவனை ஜயிப்பதற்குமுன் இந்த சக்ரத்தை எடு பார்ப்போமென்று காலால் ஒரு சக்ரத்தை வரைந்தார். அதை அவன் தூக்க அது அவனது சிரஸ்ஸை அறுத்துத் தள்ளிற்று. அவனது மனைவி பிருந்தா என்பவள் தன் கணவனது ஜயத்தை நாடி தேவபூஜைக்குப் புஷ்பம் எடுக்க வந்தாள். ஆங்கு விஷ்ணு இரு சிம்மங்களைப் படைத்து பிருந்தையை விரட்டும்படிச் செய்தார். அவள் சரணமடைய ரிஷி அவளைக் காத்தார். அவள் எனது கணவன் ஜீவித்திருக்கின்றாரா என்று கேழ்க்க இரு குரங்குகள் முனிவர் ஆணையால் ஜாலந்தரனது சவத்தைக் கொண்டு வந்தன. அவள் கதறிஅழுது அவரை எழுப்பும்படி வேண்ட முனிவர் எழுப்பினார். சந்தோஷத்துடன் அரண்மனைக்குச் சென்று அவள் கணவனுடன் வாழ்ந்து வந்தாள்.

ஓர் இரவு தனது படுக்கையில் சங்க சக்ர கதா பாணியான விஷ்ணுவைக்கண்டு திடுக்கிட்டு இவரே தனது கணவனாக வந்து தன் கற்பைக் கெடுத்தார் என உணர்ந்தாள். உமது மனைவியை அசுரன் அபகரிக்கட்டும். குரங்கே உமக்கு சஹாயமாக இருக்கட்டும் என சபித்து தீயில் இறங்கினாள். விஷ்ணு அவளிடமிருந்த அன்பினால் அச் சாம்பலைப் பூசிக்கொண்டு பித்தனைப்போல் பிருந்தே! பிருந்தே! என்று கூத்தாடினார். பார்வதிதேவி சில விதைகளை ஆங்கு விதைத்தாள். அது துளசியாய்வர அந்த மாலையை அணிந்து விஷ்ணு மோஹமகன்று பழைய நிலைக்கு வந்தார். சிவன் படைத்த சக்ரத்தை இராக்ஷதர்களைக் கொல்வதற்காகத் திருமால் வாங்கிக்கொண்டார். அதே சுதர்சனம் எனப்படும். கங்கையின் கர்வத்தை அடக்க அவளைத் தலையில் தரித்து கங்காதரன் ஆனார்.

கஜமுக அவதாரம்.

அசுரேந்திரன் தேவரிடம் தோல்வி அடைந்து சுக்ரரைச் சரணமடைந்தான். அவர் உனது பெண்ணான விபூதியை வஸிஷ்டகுலத்தில் பிறந்த மகதர் என்ற முனிவரிடம் அனுப்பித் தவத்தினால் அவரிடமிருந்து கஜமுகாசுரனை உண்டுபண்ணி ராக்ஷஸ குலம் ஜயம்பெறுமாறு செய்யும் என்றார். யானைவடிவமெடுத்த அவளுடன் யானையாகவே மாறி மரகதர் கஜாஸுரனையும் எண்ணிறந்த அசுரர்களை பெற்றார். அவன் சிவனை ஆராதித்துத் தேவராலும் மனிதராலும் ஆயுதத்தினாலும் மரணமில்லை என வரம் பெற்றான். இந்திராதிகளை அடிமையாக்கி நித்யம் தன்முன்னிலையில் தலையில் குட்டிக்கொண்டும் இரு காது கைகளையும் இரு கரங்களால் பிடித்துக் கொண்டு தோபகரணம் போடும்படியாகக் கூறினார். தேவர் சிவனிடம் முறையிட சித்ர மண்டபத்திலுள்ள இரு யானைகளையும் பார்வதி பரமேச்வரர்கள் பார்க்க அங்கிருந்து கஜமுகன் தோன்றி தனது தந்தத்தினால் கஜமுகாசுரனைக் கொன்றார். அவ்வசுரனது வேண்டுகோளின்படி அவர் சன்னதியில் குட்டிக் கொண்டு தோபகரணம் போடுகின்றோம்.

தக்ஷயாக நாசம்.

இங்ஙனம் சிவனது பெருமையைக்கூறி சிவனில்லாமல் யாகம் செய்தால் நீயும் அழிவாய். யாகமும் அழியும். இந்த தேவர்களும் சிவாபசாரத்தால் துன்பமடைவார்கள். வேதியர்களும் நரகத்தை அனுபவித்து வேதமில்லாதவர்களாகப் புவியில் பிறப்பார்கள், என்று சபித்துச் சென்றார். தக்ஷன் யாகத்தைத் ததிசி துவக்க தாக்ஷாயணி அங்கு செல்ல விரும்பினாள். அவளது நிர்ப்பந்தத்தினால் பூர்ண உபசாரத்துடனவளை அனுப்பினார். சுமாலினியும் மாலினியும் குடைப்பிடிக்க மங்களையும் சுமனஸ்ஸும் சாமரம் வீச நந்தி பத்னி சுகேசி பாதுகை அளிக்க தேவ ஸ்த்ரீகளுடன் தக்ஷயக்ஞம் சென்றாள் தாக்ஷாயணி.

தக்ஷன் அவளை என் இங்கு வந்தாய்? ஆசாரமற்ற சிவனிடம் செல். என்முன்னே நிற்காதே என அவமதித்தான். கோபத்துடன் கைலாஸத்திற்கு வந்து யக்ஞத்தையும் தக்ஷனையும் அழிக்கும்படி கூறினாள். வீரபத்ரனை

உண்டுபண்ணி அங்கு அனுப்பினார் சிவன். ஆயிரம் தலைகளும் முவ்வாயிரம் கண்களும் இரண்டாயிரம் கைகளில் ஆயுதங்களையும் ஏந்திக் கிளம்பினார். தாக்ஷாயணியின் கோபத்தினால் அத்தகைய பத்ரகாளியும் கிளம்பினாள். தக்ஷனிடம் சென்று சிவபாகத்தை ஒழுங்காக அளி. இல்லையேல் உன்னைக்கொல்வேன் எனக்கூறி அனுப்பினார். வீரபத்ரனைப்போல் எண்ணிறந்த வீரர்களும் காளியைப் போல் டாகினி சாகினி மோகினி என்ற உக்ரமான ஸ்த்ரீகளும் கிளம்பினார்கள். அவர்களைக் கண்டு பதினான்கு உலகும் நடுங்கிற்று. வீரரின் அட்டகாஸத்தினால் மேரு மலை பிளந்தது. கடல் கலங்கிற்று. மலைகள் சரிந்தன.

வீரபத்ரன் தக்ஷனிடம் சென்று சிவன்கூறியபடி சிவபாகத்தைக் கேட்டார். அவன் கொடுக்க மாட்டேனென்றபொழுது பிராம்மணர்களும் வேதமும் சிவனே யாகத்திற்கு அரசன், இது ஸத்யம் என்று மும்முறை கோஷம் செய்தனர். அப்படியும் ஹவிஸ்ஸைக் கொடுக்கமுடியாதெனப் பிடிவாதமாகக்கூறினான். தேவர்களை நோக்கி உங்களுக்கு சிவனில்லாத யாகம் ஸம்மதமா? என்று கேழ்க்க அனைவரும் மௌனமாய் இருந்ததால் வீரன் விஷ்ணுவின் மார்பிலடித்து பிரும்மாவின் தலையில்குட்டி காயத்ரி ஸாவித்ரி முதலியவர்களின் மூக்கையும் மார்பையுமறுத்து சந்திரன் தலையை வெட்டி சூர்யன் பல்லைத்தட்டி பகன் கண்ணைப் பிடுங்கி இந்திரனை உதைத்து அக்னியின் கைகளை வெட்டி வாயுவைக் கொன்றான். விஷ்ணு முதலியவரை அடித்து மூர்ச்சையாக்கினார். ஏகாதச ருத்ரர்கள் வீரபத்ரனைச் சரணம் அடைந்தார்கள். தக்ஷன் சிரத்தை வெட்டி அக்நியில் போட்டார். வேதவல்லியின் காதை அறுத்தார். அனைவருக்கும் ஒவ்வொரு வகையான சிக்ஷை கிடைத்தது.

அடிபட்டு மூர்ச்சையான விஷ்ணு களை தீர்ந்தெழுந்து கருடனை நினைத்தார். இறந்த கருடன் எப்படி வருவான்? மாயையால் மற்றொன்றைப் படைத்து அதன்மீதேறி போருக்கு வந்தார். சிவனருளால் வேதகுதிரை பூண்ட திவ்ய ரதமொன்று தோன்ற பிரும்மா ஸாரதியாகிவந்து வீரபத்ரனை அதில் அமரும்படியும், சிவநிந்தை செய்த தக்ஷனைச் சிக்ஷித்தது நியாயமே. மற்றவரைக் காக்க

வேண்டும். என்றும் வேண்டினர். விஷ்ணுவின் திவ்யாஸ்தரங்களும் சக்ரமும் வீணாயின. மாயையால் பல ரூபமெடுத்தார் விஷ்ணு. நெற்றிக் கண்ணாலவைகளை எரித்து விஷ்ணுவையும் ஹூங்காரத்தால் அசைவற்று நிற்கும்படிச் செய்தார். ஆகாசவாணி வீர! கோபத்தை அடக்கு என கூறிற்று. சிவாக்ஞை இது என வீரபத்ரர் சாந்தமானார். பிரும்மாவும் விஷ்ணுவும் அவரைப் பணிந்து போற்றி மன்னிக்கும்படி வேண்டினர்.

சிவன் தாக்ஷாயணியுடன் அங்கு வர எல்லோரும் அவர்களைப் பணிந்துத் துதித்தனர். தேவி தனக்காக உயிரை இழந்த அனைவரையும் எழுப்பும்படி கூறினாள். உயிர் பெற்ற அனைவரும் பகவானைத் துதிக்க எல்லோரையும் ஆசீர்வதித்து அவரவர் இருப்பிடம் அனுப்பினார். தக்ஷனையும் எழுப்பும்படி பிரும்மா வேண்ட ஆட்டின் தலையைத் தக்ஷன் கழுத்தில் சேர்த்து அவனையும் எழுப்பினார். தக்ஷனுக்குப் பிரும்மா, தானும் விஷ்ணுவும் நானே பெரியவன் என யுத்தம் செய்த பொழுது சிவ லிங்கம் தோன்றியதையும் அடிமுடி காணச்சென்ற தங்களை இதற்குமேல் சென்றால் இறப்பீர், என எச்சரித்துத் தங்களைக் காத்தார் என்பதையும் கூறி சிவனைப் பூஜை செய் என உபதேசித்தார்.

அண்டங்களையும் பதினான்கு லோகங்களையும் எழுத்வீபங்களையும் நரகங்களையும் பாரத வர்ஷத்தையும் மற்ற வர்ஷங்களையும் கண்டங்களையும் வர்ணித்து தக்ஷ காண்டத்தைப் பூர்த்தி செய்கிறார்.

தக்ஷகாண்டம் முற்றிற்று.

உபதேச காண்டம்.

மேருமலைக்கு வடபுறத்தில் அண்டச் சுவருக்கு அருகே கைலாஸ பர்வதமிருக்கின்றது. இருபதுகோடி யோஜனை விசாலமும் நாற்பதுகோடி உயரமுமுள்ளது அது. அங்கே நவரத்நங்களால் இழைக்கப்பட்ட சிவாலயமிருக்கின்றது. ரத்ந ஸிம்மாஸநத்தில் பரமசிவன் இருபத்தைந்து முகங்களுடனும் ஐம்பது கரங்களுடனும் வீற்றிருக்கிறார். அவரது உருவம் வாக்கிற்கும் மநதிற்கும்

எட்டாத ஆச்சரியமானதாம். ஐந்து சக்திகள் ஏகாதச ருத்ரர் எட்டு மூர்த்திகள் நவசக்திகள் ஐம்பத்தோரு மாத்ருகைகள் நூற்றெட்டு தாண்டவ மூர்த்திகள் ஏழுகோடி மஹாமந்திரங்கள் கணேசன் ஸ்கந்தன் துர்க்கை முதலிய சக்திகள் சூழ்ந்து பகவானை ஆராதித்துக்கொண்டிருக்கின்றனர். பற்பல அண்டங்களிலிருந்து பதவி முடிந்த பிரும்மாக்களும் விஷ்ணுக்களும் சிவனை ஆராதிக்கின்றனர். பிரணவ வடிவமான இரண்டாயிரம் யானைகளும் ஸிம்மம் கரடி முதலிய பிராணிகளும் சாந்தமாக சிவ தர்சநம் செய்கின்றன.

விக்நேசன் வீரபத்ரன் நந்தி பைரவர் ஸ்கந்தன் துர்க்கை மஹாகாலன் மாஹாசாஸ்தா முதலியவர் எட்டு கோபுரத் துவாரங்களையும் எண்ணிறந்த ஸேனைகளுடன் காவல் புரிகின்றனர். பூமியிலும் அண்டங்களுக்கு மேலும் உள்ள இரு கைலாஸங்களும் க்ஞாந வடிவமானவை. பூலோக மேருவிலுள்ள கைலாஸத்தில் நீல கண்டன் என்ற பெயருடன் பிரகாசிக்கின்றார்.

சூரபத்மாதிகளின் முற்பிறவி.

சூரபத்மாதிகளுடன் பிறந்த அஜாமுகி தாயான மாயையிடம் தன் ஸகோதரர் சரிதத்தைக் கேட்டாள். சாகத்வீபத்தில் பிரபாகரன் என்ற அரசனுக்கும் ஸுகுமாரீ என்ற மஹிஷிக்கும் இரட்டைப் பிள்ளையாக இருவரும், தனியாக இருபுத்ரர்களுமாக நாலு புத்ரர்கள் உண்டானார்கள். இவர்களிடம் ராஜ்யத்தைப் பிரித்தளித்துவிட்டு அரசன் தவம்செய்ய வநம் சென்றான். அகஸ்தியர் சூரபத்மரிடம் குஹன் பெருமையை வர்ணித்தார். திருணபிந்துவும் ததிசியும் மற்றிருவர்களிடம் துர்கை சாஸ்தா என்பவர்களைப்பற்றி வர்ணித்தார்கள். குஹனுக்குச் சூரன் மயில் வாகநமாகவும் பத்மன் கோழிக் கொடியாகவும் இருக்க விரும்பினர். ஸிம்மன் துர்க்கை வாஹனமாகவும் தாரகன் சாஸ்தாவின் வாஹனமான யானையாகவும் ஆக விரும்பித் தவம் செய்தார்கள்.

அச்சமயம் தேவர்கள் கைலாசநாதனைச் சேவிக்க வந்தனர். சுப்ரமண்யனது வாகனமான மயிலும் கொடியான கோழியும் துர்க்கை வாகனமான சிம்ஹமும் சாஸ்

தாவின் வாஹனமான யானையும் தனது பதவிக்குப் போட்டியாக வருகிறார்கள் சூராதிகள், என்பதை அறிந்து அவர்களைப் பூதமாகும்படிச் சபித்தார்கள். அவர்கள் பூதமாகி சிவ சன்னதியில் தங்கி இருக்கும்பொழுது அங்குவந்த வாஹனங்களில் முக்கியனும் முதல்வனுமான மயிலை மற்றவை நமஸ்கரிக்காததால் இந்த பூதங்கள் அந்த மயிலிடம் கலகம் செய்தன. மயிலும் கோழியும் நான்கு பூதங்களுடன் கூட சகல வாஹனங்களையும் அடித்துத் துறத்தி மூர்ச்சையாக்கிவிட்டன. தேவர்கள் வந்து தம் வாஹநங்களுக்கு நேர்ந்த கதியைக் கூற ஸ்கந்தன் அந்நால்வரையும் ராக்ஷஸர்களாகும்படிச் சபித்து அவைகளை எழுப்பினார். தன் மயிலையும் கோழியையும் தவம்செய்ய காஞ்சிக்கனுப்பினார். இவர்களே சூரபத்மன் தாரகன் ஸிம்மவக்த்ரன் என்ற அஸுரர்களாகி பகவானால் கொல்லப்பட்டு மயிலாகவும் கோழியாகவும் ஸிம்மமாகவும் யானையாகவும் உருவெடுத்து முன் வேண்டியபடி குஹாதிகளுக்கு வாஹநமானார்கள்.

அஜாமுகியின் பூர்வ ஜன்மா.

"கோமேத துவீபத்தில் வஸிஷ்டர் சுபதா என்ற வேதிய தம்பதிகளுக்குப் பெண்ணாகப் பிறந்தவள். சித்ரரேகை எனும் அவள் புண்டரீகன் என்ற பிராம்மணனை மணந்தாள். அவர் விஷ்ணுவை ஆராதித்து கோரிய ஸுவர்ணத்தைத் தரும் ஒரு மணியைப் பெற்றார். அதைக் கொண்டு எண்ணிறந்த சிஷ்யர்களுக்கு அன்னமிட்டு வேத சாஸ்த்திரம் கற்பித்துவந்தார். அவள் அழகான புருஷர் அனைவரிடமும் காமனை கொண்டாள். ஒருநாள் தூர்வாஸர் சிஷ்யருடன் வந்து இவள் மநம் சுத்தமில்லாததால் இவள் கையால் அன்னம் புஜிக்கமாட்டேன் என்றார். அவள் இவர் கண்ணில் படாமல் ஆட்டு மந்தையில் பதுங்கித் தன் மீது குற்றங்கூறிய முனிவரை நிந்தித்தாள். முனிவர் அவளை ஆங்குள்ள ஆலமரத்தின் மேலேயே ஏறி உட்கார்ந்திருக்கும்படிச் செய்தார். புண்டரீகன் தூர்வாஸரை நோக்கி ஒரு ஸ்திரியை இப்படிச் செய்வது நியாயமா? என வினவினார். அவள் உத்தமி அல்ல. அவள், யார் யாரை விரும்பினளோ அவர் அழைத்தால் இறங்கி வருவாள் என்றார். புண்டரீகன் அவளை அழைக்க, சிறிது

தூரம் இறங்கினாள். அவளையே பார்த்து தூர்வாஸர் யாரை நீ நினைத்தாயோ அவர் பெயரைக் கூறென்றார். அங்ஙனமே அவள் கூற மற்றும் கொஞ்சதூரம் இறங்கினாள். மற்றவர் பெயர்களைக் கூறென்றார். பெயர் தெரியாதென அவள் கூறவே, இத்தகையவளுடன் நீர் எப்படி இல்லற தர்மம் செய்வீர்? என்று கூறி அவளை ராக்ஷஸி யாகும்படிச் சபித்தார். அவள் அவரைப் பணிந்து வேண்ட, இல்வல வாதாபிகளைப் பெற்றபின் சாஸ்தா உன் கைகளை வெட்டுவார். பிறகு நீ கைலாஸத்தில் பார்வதிக்குத் தோழியாவாய் என்றார்.

விபூதி ருத்ராக்ஷ மகிமை.

ஸ்கந்தர் அகஸ்த்யருக்கு உபதேசித்தார். பாபங்களை எல்லாம் வருத்துச்சாம்பலாக்குவதால் பஸ்ம என்று பெயர். ஸத்யம் க்ஞாநம் தயை சிரத்தை முதலியவைகளை உண்டுபண்ணும். மும்மூர்த்தி வடிவமானது. எட்டு வகைச் செல்வத்தைத் தரும். பூதப்ரேத பிசாசங்களையும் நோயையும் அகற்றும். ஆதலால் பெண்கள் உள்பட அனைவரும் அதைத் தரித்துக் கொள்ளவேண்டும். ஜல மில்லாமல் இடுவது உத்தூளநம். ஜலத்தினால் குழைத்திடுவது த்ரிபுண்ட்ரம்.

தலை நெற்றி கழுத்து மார்பு நாபி இருபக்கங்கள் இரு புஜங்கள் இருகை நடுவு இருகரங்கள் பிருஷ்டம் பின் கழுத்து ஆகிய பதினைந்து இடங்களில் விபூதியைத் திரிபுண்டரமாகத் தரிக்கவேண்டும். இது அக்ஞானத்தை அகற்றி க்ஞாநத்தை அளிக்குமென சுவேதாச்வதர உபநிஷத் கூறுகிறது. பிரளய காலத்தில் மஹா விஷ்ணு கடலில் ஆலை இலையில் படுத்திருக்க பரமசிவன் அங்கு வந்தார். சிவனுக்குக் கணுக்கால் அளவிலிருந்தது கடலின் நீர். விஷ்ணு அவரைப்பார்த்து, நீ யார்? என்றார். சிவன் அவருக்கு விபூதி தர, அதனால் மோஹமகன்று அவரைப் பணிந்தார். விஷ்ணுவைப் பெண்ணாக்கி பிரும்மாவைப் படைத்தார் சிவன். ஸர்ப்பாஸுரன் பஞ்சமேட்ரன் அக்நி அஸுரன் முதலியவர்களால் கொல்லப்பட்ட பிராம்மணர்களை வீரபத்ரர் விபூதியைக்கொண்டு எழுப்பினார். வாமதேவரது உடலிலிருந்து சிந்திய விபூதி பட்டவுடன் ஒரு பிரும்மராக்ஷஸ் நற்கதி பெற்றது.

புஜபலனும் பஸ்மாவும்.

விதர்ப்பதேசத்தில் புஜபலன் என்ற அரசன் பல வகை தாந தர்மங்களைச் செய்துவந்தான். ஸுசீலர் என்ற உத்தமருக்குத் தாநம் செய்யும்பொழுது "விபூதி அணிந்து தாநம் செய்" என்றாரவர். அதை அணியா விடில் என்ன? என்றான் அரசன். செல்வம் அழியும்! மூதேவி அண்டுவாள்! ஆரோக்யம் குன்றும்! துக்கம் உண்டாகும்! என்றார் ஸுசீலர். மற்ற புண்யங்கள் என்னைக்காக்கும். இந்த தாநத்தைப் பெற்றுக்கொள்ளும் என்றான் அரசன். விபூதி அணியாதவ ரளிப்பது எனக்கு வேண்டாம் என்று கிளம்பினார் ஸாது. அரசன் மனைவி பரிஹாஸமாகத் தும்பி சகுநமாகவில்லை! போகாதீர்கள்! என்றாள். வியாதி மூதேவி வந்தால் உம்மிடம் பஸ்மா வாங்கிக்கொள்கிறேன் என்றானரசன்.

சிலநாட் சென்றபின் மஹாமாரி தோன்றி அரசன் ஸேனைகள் அழிந்தன. இதே தக்க ஸமயம் எனப் பகை வர் ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டனர். அரசனுக்கும் நோய் உண்டானது. பிழைக்க வழியின்றி இருவரும் அன்ய நாடுசென்று திருடினர். அரசன் காவலாளிகள் இவனது விரல்களையும் ராணியின் மூக்கையும் அறுத்து சிக்ஷித்தார்கள். பிறகு பிச்சை எடுத்து வாழ்ந்தனர். ஒருநாள் ஸுசீலரது வீட்டிற்கு வந்து பிச்சை கேட்டனர். ஸுசீலர் அவர்களைப் பார்த்து வருந்தி இப்போதாவது விபூதி தரியுங்கள் என்றார். அவர்களுக்கு முன் நடந்தது நியாபகம் வந்தது! கதறினர்! ஸுசீலர் சிவ நாமங்கூறி விபூதி அளித்தார். எல்லோரும் வியக்கும்படி மூக்கும் விரல்களும் வளர்ந்தன! நோயுமகன்றது! சிவனருளால் இழந்த ராஜ்யமும் கிட்டிற்று! இங்ஙனம் பற்பல கதை களை இங்கு காணலாம்.

ருத்ராக்ஷ மஹிமை.

ருத்ராக்ஷம் தரிப்பது மஹா விரதம் என்ற பிராயச் சித்தகர்மாவாகும். ஆயிரம்ருத்ராக்ஷம் தரிப்பவரைத் தேவ ரும் வணங்குவர். இரு பாகுக்களிலும் முப்பத்திரண்டு. சிகையில் ஒன்று, இரு கரங்களிலும் இருபத்திநான்கு, கழுத்தில் முப்பத்திரண்டு, இரு காதுகளிலும் பனிரண்டு.

ஆக நூற்றேரு ருத்ராக்ஷமாவது அணியவேண்டும். ருத்ராக்ஷமணியாதவர் செய்யும் பூஜையும் ஜபமும் தானமும் பயனற்றதாம். ருத்ராக்ஷம் கிடைக்காவிடில் முத்து பவழம் ஸ்படிகம் வெள்ளி வைடூர்யம் ஸுவர்ணம் இவைகளால் ருத்ராக்ஷமாலை செய்து அணியலாம். ஜபமும் செய்யலாம். தலையில் ருத்ராக்ஷத்தை வைத்துக்கொண்டு ஸ்நானம் செய்தால் கங்கா ஸ்நான பலன் உண்டாகும். ஒருமுகம், ஐந்து முகம், பதினேரு முகம், பதினான்கு முகம் உள்ளவைகள் மிகச் சிறந்தவைகளாகும்.

நந்திகிராமத்தில் மஹாநந்தா என்ற தாஸி ருத்ராக்ஷ மாலையால் அலங்கரித்து ஒரு குரங்கையும் ஒரு கோழியையும் வளர்த்தாள். அவைகளைச் சிவன் எதிரில் ஆட வைப்பாள். அவை இறந்தபின் ஸுதர்மா என்ற ராஜ புத்திரனுகவும் தாரகன் என்ற மந்திரி புத்திரனுகவும் பிறந்தன. அப்பிறவியிலும் ருத்ராக்ஷமணிந்து மிகச் சிறந்தவர்களாக வாழ்ந்து முடிவில் கைலாஸம் சென்றனர். இங்ஙனம் எண்ணிறந்த கதைகள் இங்கு கூறப்பட்டிருக்கின்றன.

பஞ்சாக்ஷரீ மகிமை.

வேதத்தின் ஸாரமானது பஞ்சாக்ஷரீ மந்திரம். ஏழு கோடி மந்திரங்களுக்கெல்லாம் அரசன் போன்றது. ஆதலினிது **மந்திர ராஜா** எனப்படும். பஞ்சமாபாதகங்களை போக்க வல்லது. சிவனது முகவடிவமாக உள்ளது. இதிலிருந்தே பஞ்சகிருத்யங்கள் நடக்கின்றன. நித்யமிதை ஜபிப்பவர் எல்லா பாபங்களும் அகல ஸகல போகங்களையும் அனுபவிப்பார். முடிவில் கைலாஸம் செல்வர். பஞ்சாக்ஷரீ ஜபமில்லாதவர் பவித்ரமாக மாட்டார். அது உடலில் ஒருசக்தியையும் தேஜஸ்ஸையும் அளிக்கின்றது.

வஜ்ரபாகு என்ற காசி ராஜனுக்குக் கலாவதி என்றோர் கன்யகை இருந்தாள். தூர்வாஸருக்கு அவள் பணிவிடை செய்ததால் அவர் பஞ்சாக்ஷரியை அவளுக்கு உபதேசித்துச் சென்றார். தாசரதன் என்ற பாண்டிய ராஜனுக்கு அவளை அளித்து திருமணம் நடந்தது. கணவன் அவளைத் தொடும்பொழுது அக்நிஜ்வாலைப்போல் அவள் கரத்தில் சுட்டது. என்ன காரணமென்று தெரியாமல்

அரசன் விழிக்கும்போது, நாத! பஞ்சாக்ஷரீ ஜபத்தால் என் உடலில் உண்டான தேஜஸ் அதில்லாத உமக்குத் தாபத்தை தந்தது என்றாள். கர்க முநிவரிடம் அரசன் பஞ்சாக்ஷரீ உபதேசம் பெற்றபின் தம்பதிகள் ஆனந்த மாக வாழ்ந்தனர். பாண்டியனது உடலிலிருந்த பாபம் பஞ்சாக்ஷரீ உபதேசமானவுடன் காக்கை வடிவமெடுத்து பறந்துச் சென்றது.

ஸந்யாஸமும் பஞ்சாக்ஷரியும்.

பலகோடி ஜன்மங்களில் செய்த புண்யமிருந்தால் தான் ஸந்யாஸம் கிடைக்கும். ஸன்யாஸம் செய்துக் கொண்டவரும், அவரது முன்னோர்களும்கூட கைலாஸம் செல்வர். ஸன்யாஸத்திற்குரிய மந்திரத்தைப் பெற்றுக் காஷாய தண்டம் தரித்தவுடன் அவனது பல்வகைப் பாபங்களுமகன்று ஸகல ஸித்திகளும் உண்டாகும். அத் தகைய பலனைப் பஞ்சாக்ஷரீ ஜபத்தாலும் பெறலாம்.

சந்திரஸேனன் தர்மன் என்ற இரு பிராம்மண பிரும்ம சாரிகள் ஒரே குரு குலத்தில் ஒன்றாகக் கல்வி கற்றனர். சந்திர ஸேநன் ஸன்யாஸம் செய்துக் கொண்டான். தர்ம னும் அவனைப் போல் துறவியாக விரும்பினான். ஏகபுத்ர னை இவனை விட்டு பிரிய மனமில்லாத தந்தை பிருகு முனிவரிடம் சென்று கதறினர், அவர் தர்மனை அழைத்து இல்லறத்திலிருந்து பஞ்சாக்ஷரீ ஜபம் செய்வோர் துற வியை விடச்சிறந்தவர் என்று பஞ்சாக்ஷரியைத் தர்ம னுக்கு உபதேசித்தார். சந்திரஸேனனும் தர்மனும் ஸந் தித்தப் பொழுது துறவியின் பெருமையை வெகுவாகக் கொண்டாடி அந்த மஹிமையால் ஓ இந்திர! இங்கு வா! என அழைத்தார். இந்திரன் வந்து அமர அவரைப் பூஜித் தார். அனைவரும் ஆச்சரியமடைந்தனர். இந்திரன் சென்ற பின், நீ கூப்பிடு வருகிறாரா பார்ப்போம் என்றார் துறவி. பஞ்சாக்ஷரியை மநதால் நினைத்து தர்மன் அழைக்க இந்தி ரன் வந்து சிவபக்தன் என அவரை நமஸ்கரித்து விடை பெற்றுச் சென்றான். உடனே பிரும்மாவையும் அழைக்க அவரும் வந்து தர்மனைக் கௌரவித்தார். துறவறத்தை விட பஞ்சாக்ஷரீ ஜபம் அதிக மகிமையுள்ளதென அறிந்து துறவி தர்மனிடமே பஞ்சாக்ஷரீ மந்திர உபதேசம்பெற்றார். இது போன்ற பற்பல கதை காணலாம்.

சிவநாம மஹிமை.

வேத சொற்களெல்லாம் சிவநாமாக்களே. அவைகளிலும் பத்தாயிரம் நாம சிறந்தது. அதனிலும் சிவ ஸஹஸ்ர நாம மிகச் சிறந்தது. அதலினும் நூற்றெட்டு நாம மிக மிகச்சிறந்தது. அதில் ஏதேனும் ஒரு நாமாவை நித்தியம் கூறிவந்தால் ஸகல பாபங்களும் அகலும். நாம மஹிமையையும் அதன் பொருளையும் அறியாமலே விளையாட்டாக அல்லது ஏதேனும் ஒரு வியாஜமாக அல்லது பரிஹாஸமாகக் கூறினாலும் அது முக்தி தரும், எனில் பக்தியுடன் அறிந்து ஜபிப்பவர் பற்றிகூறவேண்டுமா? அறியாமல் தீண்டினாலும் தீ சுடுகிறது. கருணைக் கடலான கைலாஸநாதன் நாமாவிற்கு அவ்வளவு அளவு கடந்த சக்தியைத் தந்துளார். அதைக் கூறியவுடன் ஸகல பாபங்களும் அகலும். மறுபடியும் பாபம் செய்யாதிருந்தால் கைலாஸம் கிட்டுவது நிச்சயம்.

கௌதம தேசத்தில் கந்துகபுரத்தில் வியாளன் என்று ஒரு வேதியனிருந்தான். அவன் செய்யாத பாபமே இல்லை. மது மாம்ஸ மருந்துவதுடன் வியாபாரமும் செய்வான். அவன் இறக்குந்தருவாயில் பிள்ளைகள் வந்து தந்தையே! யார் யார் நமக்குப் பொருள் தர வேண்டும்? என்று கேட்டனர். இவன் ஒரு படி மது தர வேண்டும். அவன் இரண்டுபடி பாக்கி. என்று கூறும் போது இவன் சிவம் என்று கூறிக்கொண்டே உயிரை விட்டான். சிவம் என்பது குருணி என்று ஓர் அளவு. அதை ஒருவன் தரவேண்டும் என்று கூற ஆரம்பிக்கும் போது சிவம் என்றவுடன் உயிரை விட்டான். சிவம் என்ற சொல்லைக் கேட்டவுடன் சிவன் உத்தரவுபடி சிவ லோக மழைத்துச் சென்றனர் சிவ கிங்கரர். மஹாபாவி வியாஜமாக சிவம் என்றதற்கே சிவலோகம் கிட்டியது.

இங்கும் இதைப்போல் எண்ணிறந்த கதைகள் இருக்கின்றன.

சிவ விரதங்கள்.

ஸோமவார விரதம் ஆர்த்ரா விரதம் உமாமஹேச்வர விரதம் சிவராத்ரி விரதம் கேதாரவிரதம் கல்யாண விரதம் சூல விரதம், விருஷபவிரதம் என்ற எட்டும் சிவனுக்குப்

பிரியமான விரதங்கள். சுக்ரவார விரதம், ஆச்வயுஜ பூர்வ பல்குநீ விரதம், நவமீ விரதம் என்ற மூன்றும் தேவிக்குப் பிரியமானவை. சுக்ரவார விரதம் சதுர்த்தி விரதம் மார்க்க சீர்ஷ ஷஷ்டி இவை விநாயகருக்கு மிகப் பிரியமானவை. சுக்ரவாரம் கிருத்திகை ஸ்கந்த ஷஷ்டி, ஆகியவை ஸ்கந்த னுக்குப் பிரியமானவை. பானுவாரம் சித்திரை அல்லது ஐப்பசி மாத பரணி செவ்வாய்க்கிழமை இவை வீரபத்ரர் அல்லது பைரவருக்குப் பிரியமான விரதங்கள். ஒவ்வொரு விரதத்தையும் அனுஷ்டித்து யார் யார் என்ன என்ன நன்மை பெற்றுளார் என்பது விரிவாக உளது.

சிவ கைங்கர்ய புண்யம்.

சிவாலயம் அமைப்பது மண்டபங்கட்டுவது, விக்ரகம் செய்து வைப்பது, மணி பூஜாபாத்ரமளிப்பது, ஸ்வாமிக்கு வஸ்த்ரமளிப்பது, தூபதிப நைவேத்யங்களுக்கு வேண்டிய தைத் தருவது, பசு காளை முதலியவைகளைக் கோவிலுக்கு அளிப்பது, பூமி தருவது, கிணறு குளம் வெட்டுவது, கோயிலிலுள்ள புற்பூண்டுகளை, குப்பைகளை அப்புறப் படுத்துவது, சாணி தளித்து கோலமிடுவது, பூஜா காலங்களிலும் காலை மாலைகளிலும் ஸ்வாமி தர்சநம் செய்வது, பிரதக்ஷிண நமஸ்காரம் செய்வது முதலிய சிவ கைங்கர்யம் மிகச் சிறந்த புண்யமாம். காமனையின்றி செய்தால் முக்தியும், காமனையுடன் செய்தால் இஷ்டமும் பூர்த்தியாகும்.

சிவபக்த லக்ஷணம்.

விபூதி, ருத்ராக்ஷமணிவது பஞ்சாக்ஷரீ குருவை ஸேவிப்பது சிவ ஸ்தோத்ரங்களைக் கூறுவது சிவ நாமா கூறுவது சிவபூஜை ஆலயஞ்செல்லுதல் புராணம் கேட்பது பக்தியுடன் நமஸ்காரம்செய்வது, பக்தருடன் ஸஹவாஸம் சிவ பக்தருக்குத் தானம் செய்வது இவை வெளியில் காணப்படும் பாஹ்ய லக்ஷணங்கள். **உள்முகமான பக்தி லக்ஷணம்,** மானஸிக ஜபம், பூஜை, தியானம், சிவஸன்னதியில் பக்தி பெருக்கால் கழுத்தில் கத்கதஸ்வரம் நாக்கு தழுதழுத்தல் உடல் கம்பம் மயிர் கூச்சல் கண்ணீர் பெருகுதல் மெய்மறந்து பரவசமாதல் இவை ஆந்தர மான சிவபக்தி லக்ஷணங்களாம்.

21-நாள் சிவ கைங்கர்ய பலன்.

கோஸல ராஜனுன அஜனுக்கு நான்கு புத்ரிகள் இருந்தார்கள். நான்குதேச அதிபரான நிஷாதராஜன் கம்புதேசாதிபன் காம்போஜ ராஜன் கோங்கணராஜன் ஆகியவர்களை மணந்து ஆநந்தமாக வாத்யகோஷத்துடன் அவரவர் நகரம் சென்றூர்கள். அச்சமயம் விச்வாமித்ரர் வந்தார். அவரை இவர்கள் வரவேற்று நமஸ்கரிக்காத துடன் அவர் கூப்பிட அவர்கள் பேசாமல்போய்விட்டனர் நீங்கள் குருடர்களாகவும் செவிடர்களாகவும் ஆவீர்கள் காமனையுடன் மனைவியைத்தொட்டால் இறப்பீர்கள் என சாபமளித்தார். அவர்கள் அகஸ்தியர் திருவடியை வணங்கி சாபமகலும்படி வேண்டினர். சிவகைங்கர்யமே சாபத்தையும் பாபத்தையும் அகற்றும். கீசகபுரத்தில் ஸாதாரணன் என்ற அரசன் மனைவியுடன் பேசிக்கொண் டிருந்தான். குரு வஸிஷ்டர் வந்து சிறிது நேரம் நின்றூர். அரசன் அவரை மதிக்கவில்லை. நீ வேடனுவாய் ராஜ்யம் காடாகும் என சபித்தார் வஸிஷ்டர். திருணபிந்து எனும் முநிவரைச் சரணமடைய அவர் உபதேசித்தபடி சிவாலயத் திலுள்ள புற்பூண்டுகளை அப்புறப்படுத்தி சிவ கைங் கர்யம் செய்து வந்தான். அந்த புண்யத்தால் அரசன் அரசனுக காடும் நாடாக ஆனது. ஆதலால் சிவபிரியர் என்பவர் சொற்படி நடவுங்கள் என்றூர். அவர்களை சிவால யத்தை மொழுகி கோலம் போடும்படியும் ஆங்குள்ள புற்களைப் பிடுங்கி அபிஷேகத்திற்கு ஜலம்கொண்டு வரும்படியும் கட்டளையிட்டார். அவர் சிவகைங்கர்யத்தின் மேன்மையைக்கூறி ஒரு கதையும் கூறினுர்.

முத்கலர் எருமையாகி நற்கதிபெற்றூர்.

கச்யபரது சிஷ்யர் முத்கலர். அவர் வேதங்கூறும் பொழுது அஜாக்ரதையால் குருமீது எச்சில் தளித்தது. அதனுல் அவர் சிஷ்யனை எருமையாகும்படி சபித்தார். அது தற்செயலாக ஒரு சிவாலயத்தின் பிராகாரத்திலும் மதலிலும் உள்ள புற்களை மேய்ந்து வலமாகச் சென்றது. அந்த புண்யத்தால் அது எருமை உருவமகன்று நற்கதி பெற்றது என்பதைக்கேட்ட ராஜ தம்பதிகள் சிவகைங் கர்யம் செய்து கண்ணையும் காதையும் ராஜ்யத்தையும். பெற்றூர்கள்.

(தமிழ் நாட்டில் இத்தகைய சிவ கைங்கர்யம் செய்து நன்மைபெற்ற நாயன்மார்களில் அப்பர் முதன்மையானவர். இதைக்கண்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி எனும் தற்கால ஜகத்குரு முத்ராதிகாரி சங்கம் தர்மத்தொண்டு ஸபை இவைகள் மூலமாக ஆலயங்களில் கோபுரம் மதில் முதலிய இடங்களில் உள்ள செடி கொடிகளை அப்புறப் படுத்தும்படியும் குளம்வெட்டும்படியும் உபதேசிக்கின்றார்கள்). ஆங்கிரஸ் கச்யபர் சதாநந்தர் வாமதேவர் முதலிய முனிவர்கள் சிவ தர்மத்தை விளக்கி மிகரஸமான சிறிய சிறிய கதைகளைக் கூறுகிறார்கள் இங்கு.

சிவ க்ஷேத்ர தர்சநம் வாஸம் மரணம் இவைகளால் உண்டாகும் புண்யத்தையும் கதை மூலமாக வர்ணிக்கும் பொழுது காசி கேதாரம் ஸ்ரீபர்வதம் கோகர்ணம் தக்ஷிண கைலாஸம் காஞ்சி அருணாசலம் சிதம்பரம் விருத்தாசலம் மத்யார்ஜுநம் கும்பகோணம் திருவாரூர் சீய்யாழி மாயூரம் முதலிய க்ஷேத்திரங்களைக் கூறுகிறார் வேத வியாஸர்.

சிவாலயம் செல்லாதவர் பஞ்சாக்ஷரி இல்லாதவர் சிவஸொத்தை அபஹரித்தவர் சிவபுராணம் கேளாதவர் சிவ ருத்ராக்ஷ விபூதிகளை நிந்திப்பவர் நரகம் செல்வர். யார் யார் எந்தெந்த க்ஷேத்திரத்தில் தவம்செய்து ஸித்தி பெற்றார்? அந்தகாஸுரன் முதலியவரின் வதம், சிவ ஸஹஸ்ரநாமம் முதலியன வர்ணிக்கப்பட்டுள. [ஹர: சம்புர்மஹாதேவ: நீலகண்டஸ் ஸதாசிவ:] என ஆரம்பித்து நூற்று எழுபத்துமூன்று சுலோகங்களால் ஸர்வ ஸார சிவஸஹஸ்ரநாமம் காணப்படுகிறது.

வியாஸர் தீர்மாநம்.

வேதபுராணங்களில் முக்ய தேவராகக் கருதப்படுவர் யார் என முனிவர் கேட்க விஷ்ணுவே என்று வியாஸர் கூறினர். இதை அறிந்த நந்தி சிவன் எதிரிலிதைக் கூறும்படி கேட்டார். அங்ஙனமே அவர் கூறும்பொழுது அவர் கைகள் அசைவற்று நின்றன. உண்மை உணர்ந்து சிவனே சிறந்தவர் என தீர்மானித்துத் துதித்தார். விஷ்ணுவும் பிரும்மாவுமிதை ஆமோதித்தனர். வியாஸர் கைகளும் ஸ்வாதீனமாயின.

சைவ ஸித்தாந்தம்.

சிவனே பரமாத்மா, ஸ்வதந்த்ரன், மற்றவரனைவரும் ஜீவர்கள். அவர்கள் பசு எனப்படுவார்கள். பாசம் என்ற மாயையால் கட்டுப்பட்டிருக்கும் ஜீவர்கள் சர்யை கிரியை யோகம் க்ஞானம் என்ற பாசுபத தர்மங்களைச் செய்து ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்ய என்ற முக்திகளைப் பெறலாம். சிவதீக்ஷை சிவபஞ்சாக்ஷரீ ஜபம் சிவாலய ஸேவை சிவபூஜை விபூதி ருத்ராக்ஷ தாரணம் சிவவிரதம் சிவபக்தி முதலியவைகள் கைலாஸம் செல்ல ஸாதநங்கள். ஐந்து ஸாதாக்யம் இருபத்தைந்து மூர்த்தி ஐந்து கிருத்யம் என்பவைகளை நன்கு உணர்ந்தவர் முக்திபெறுவர்.

சிவஸாதாக்யம், அமூர்த்தி ஸாதாக்யம், மூர்த்தி ஸாதாக்யம், கர்த்ருஸாதாக்யம், கர்ம ஸாதாக்யம் என்பவை **ஐந்து ஸாதாக்யங்களாம்**. ஸிருஷ்டி, ரக்ஷணம், ஸம்ஹாரம், திரோதாநம் அநுக்ரஹம் என்பவை ஐந்து **கிருத்யங்களாம்.**

இருபத்தைந்து மூர்த்திகள்.

1 லிங்கோத்பவ மூர்த்தி, 2 ஸுகாஸந மூர்த்தி, 3 உமாபரிணய மூர்த்தி, 4 கல்யாணமூர்த்தி, 5 அர்த்த நாரீச்வரமூர்த்தி, 6 ஸோமாஸ்கந்த மூர்த்தி, 7 சக்ரதாந மூர்த்தி, 8 திரிமூர்த்தி ஸ்வரூபமூர்த்தி, 9 ஹரிஹர மூர்த்தி, 10 தக்ஷிணமூர்த்தி, 11 பிக்ஷாடநமூர்த்தி, 12 கங்காள மூர்த்தி, 13 மந்மத தாஹ மூர்த்தி, 14 காலகால மூர்த்தி, 15 ஜாலந்தரவத மூர்த்தி, 16 திருபுர ஸம்ஹார மூர்த்தி, 17 சரப மூர்த்தி, 18 காலகூடஹர மூர்த்தி, 19 அஜைகபாத மூர்த்தி, 20 பைரவ மூர்த்தி, 21 விருஷபாரூட மூர்த்தி, 22 சந்திரசேகர மூர்த்தி, 23 நடராஜ மூர்த்தி, 24 கங்காதரமூர்த்தி, 25 ஹிருதயவாஸமூர்த்தி இவைகள் விரிவாக வர்ணிக்கப்பட்டுள.

இங்ஙனம் பிரும்ம ஸதஸ்ஸில் ஸூதபுராணிகர் கதை கூறி முடித்தவுடன் கைலாஸத்திலிருந்து பார்வதி பரமேச்வரர் ஸ்கந்தன் விநாயகர் நந்தி ஆகியவர் முப்பத்தி முக்கோடி தேவகணங்களுடன் வந்து தர்சநம் தந்தார். முனிவர்

ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து போற்ற அவர்கள் கேட்டுக்கொண்டபடி சிவபக்தியை அளித்துக் கைலாஸம் சென்றூர்.

தக்ஷிண ஸ்காந்தம் முற்றிற்று.

இந்த புராணம் உபதேச காண்டத்தில் சிவபெருமையே பெரும்பாலும் ஸ்கந்தனுல் வர்ணிக்கப்படுகிறது. ஸ்கந்தனைப் பற்றிய விஷயமில்லை. இதைக் கிரந்தத்தில் அச்சிட்டவர் எண்பத்திரண்டாம் அத்தியாயம் முதல் எண்பத்தாறு அத்தியாயம் வரைபல புத்தகங்களில் காணப்படவில்லை. ஒரே புத்தகத்தில் தானிருக்கிறது. அதிலும் அநேகம் பிழைகள் உள. கூடியவரை திருத்தி எழுதினேம் என தலைப்பில் கூறுகிறூர். சிலவிடங்களில் சுலோகம் அமைப்பு வியாஸர் வாக்குபோலில்லை. ஆதலால் பிற்காலத்தவர் சிலவைகளை எழுதிச் சேர்த்திருப்பர் என ஒரு அபிப்ராயம் உண்டு கச்சியப்ப சிவாசாரியர் பாடியதில் உபதேச காண்டமில்லை.

16. ஸ்ரீ வாமந புராணம்.

ஸ்ரீ வாமநமூர்த்தி.

மாம்பலம் குருகுல வெளியீடு.

ஸ்ரீ வாமந புராண
மூலக்ரந்த அநுக்ர மணிகா.

1 ஹரலலிதம். 2 நரசிருஷ்டி பிரளயம். 3 ஹரிஹர ஸம்வாதம். 4 ஹரிக்கும் வீரபத்ரருக்கும் யுத்தம்.

5 சிவன் காலஸ்வரூபமானது. 6 மன்மத தகநம்.

7 பிரஹ்லாத யுத்தம். 8 பிரஹ்லாதனுக்கு வரம் அளித்தல். 9 தேவாஸுர யுத்தம். 10 அந்தக சிக்ஷை. 11 புஷ்கரத்வீப வர்ணநம். 12 கர்மவிபாகம். 13 புவந கோசம். 14 சுகேசியின் கட்டளை. 15 சுகேசியின் சரிதம். லோலார்க்க ஜனனம். 16 அசூன்ய சயன த்விதியா, காலாஷ்டமீ விரதம். 17 மஹிஷாஸுர ஜனனம். 18-19 தேவீ மாஹாத்மியம். 20 மஹிஷாஸுர வதம். 21 உமா ஆவிர்பாவம். 22 ஸரோ மகிமை. 23 பலி எனும் அசுரனின் வம்சம். 24 பலியினுல் ஜயிக்கப்பட்ட தேவர்கள் காச்யபரைச் சரண்புகுந்து அதன்பின் நான் முகனை அடைந்தார்கள்.

25 காச்யபர் முதலானோர்கள் பாற்கடலுக்குச் செல்லுதல். 26 காச்யபர் செய்த பகவத்ஸ்துதி. 27 அதிதி பகவானைத் துதித்தல். 28 அதிதிக்கு வரமளித்தல்.

29 பிரஹ்லாதனுல் செய்யப்பட்ட பலி நிந்தையும் சாபமளித்தலும். 30 பிரும்மா செய்த வாமந ஸ்துதி. 31 வாமந பலி சரிதம். 32 ஸரஸ்வதீ ஸ்துதி.

33 ஸரஸ்வதீ மகிமை. 34 பலவித தீர்த்தங்களின் மகிமை. 35 பல தீர்த்த கானகங்களின் மகிமை.

36-37 தீர்த்த மகிமை. 38 மங்கணர் சிவனைத் துதித்தல். 39 உசநஸ் தீர்த்தம் முதல் வஸிஷ்ட தீர்த்தம் வரை. 40 அருணு ஸரஸ்வதீ ஸங்கம மகிமை.

41 ருணமோசன தீர்த்த மகிமை, காம்ய கானன மகிமை. 42 துர்க்கா தீர்த்த மகிமை ஸ்தாணுவடம்.

43 ஸிருஷ்டி வர்ணனை. தர்ம நிரூபணம். 44 பிரும்மா முதலிய தேவர்கள் சிவனைத் துதித்தல். 45 ஸ்தாணு லிங்கமகிமை. 46 நானுவித சிவலிங்கஸ்தான மகிமை. 47-48 வேநனின் சரிதம், அவன் செய்த சிவஸ்துதி. வரமளித்தல். 49 பிரும்மா கூறிய சிவஸ்துதி. 50 குரு க்ஷேத்திர மகிமை. 51 பிக்ஷு ரூபத்தைத் தரித்த சிவ பார்வதி ஸம்வாதம். 52 ஹிமவானைத் தேவர்கள் சிவனுக்கு தங்கள் பெண்ணைக்கொடு என்று வேண்டுதல்.

53 கௌரீ கல்யாணம். 54 விநாயகோத்பத்தி. 55 சண்டமுண்ட வதம். 56 சும்ப நிசும்ப வதம்.

57 கார்த்திகேய ஜனனம். 58 கிரௌஞ்சமலை பிளத்தல். 59 அந்தகாஸுரன் தோல்வி. 60–61 முரன். அவ்வஸுரன் சரிதமும் வதமும். 62 விஷ்ணுவின் ஹிருதயத்தில் தேவர்கள் சிவனைக் காணுதல். 63 அந்தக பிரஹ்லாத ஸம்வாதம். தண்ட சரிதம். 64 ஜாபா விமோசநம். 65 சித்ராங்கதா விவாஹம். 66 தண்டன் சாம்பலானது. 67 சதாசிவ தரிசனம். 68 அந்தக ஸைன்யத் தோல்வி. 69 ஜம்ப, குஜம்பவதம்.

70 அந்தகன் தோல்வி. அவனுக்கு வரமளித்தல். 71–72 வாயு உற்பத்தி, 73 காலநேமிவதம் 74 பிரஹ்லாதனுக்குப் பலி உபதேசித்தல். 75 பலியின் மகிமை. 76 அதிதி வரமளித்தல். 77 பலி பிரஹ்லாதனுக்குச் சிக்ஷை செய்தல்.

78 துந்து தைத்யன் தோல்வி. 79 புரூரவஸ் உபாக்யானம். 80 நக்ஷத்திர புருஷ விரதம். 81 ஜலோத்பவ வதம். 82 ஸ்ரீதாம சரிதம். 83–84 பிரஹ்லாத தீர்த்த யாத்திரை. 85 கஜேந்திர மோக்ஷணம். 86 ஸாரஸ்வத ஸ்தோத்திரம். 87–88 பாபத்தைப் போக்கும் துதி. 89 வாமந அவதாரம். 90 வாமநர் பலவகை இடம் செல்லுதல். 91 சுக்ரபலி ஸம்வாதம். 92 பலியைக்கட்டுதல். 93 வாமநாவிருத்தி. 94 பகவத் பிரசம்ஸை. 95 புராண முடிவு.

வாமந புராண மூலக்ரந்த அநுக்ர மணிகா முற்றிற்று.

ஸ்ரீ வாமந புராண அவதாரிகை.

ஸ்திதி கர்த்தாவான ஸ்ரீ பகவான் நாராயணன் வாமநராக வந்து அவச்யம் நேர்ந்தபோது திரிவிக்ரமராகத் தோன்றிய சரிதத்தை விரிவாகக் கூறுவது வாமந புராணம். கதா நாயகரைப்போல் புராணமும் உருவில் சிறியதே. விஷயத்திலோ மிகப் பெரியதெனலாம். ஏனைய புராணங்களைப்போல் உலக ஸிருஷ்டி, வர்ணாச்ரம தர்மம், தீர்த்த மஹிமை முதலிய விஷயங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. தேவர், ஸாத்யர், யக்ஷர், பித்ருக்கள் முதலிய தேவ ஜாதிக்குரிய தர்மங்கள் விசேஷமாக வர்ணிக்கப்படுகின்றன. சிவ விஷ்ணு பேதமின்றி கூறப்படும் இரு மூர்த்திகளைப்பற்றிய கதைகள் மிக ரஸமானவை.

ஜலோத்பவன் என்ற அஸுரனை வெல்ல பகவான் மற்றோர் வாமநாவதாரம் செய்த அபூர்வ கதையை இங்கு காணலாம். மிகவிசித்ரமான மற்றும் பலகதைகளுள்ளது.

பாபநாசன ஸ்துதி.

[இதை நித்யம் பாராயணம் செய்தால் ஸகல பாபங்களுமகலும்.]

1 மத்ஸ்யம் நமஸ்யே தேவேசம்—கூர்மம் தேவேச மேவச |
ஹயசீர்ஷம் நமஸ்யே ஹம்—பவம் விஷ்ணும் த்ரிவிக்ரமம் ||

2 நமஸ்யே மாதவே சாசெள—ஹ்ருஷீகேஶ குமாரி லெள |
நாராயணம் நமஸ்யேஹம்—நமஸ்தே கருடாஸநம் ||

3 ஜயேசம் நரசிம்ஹம் ச—ரூபதாரம் குருத்வஜம் |
காமபாலமகண்டம் ச—நமஸ்யே ப்ராம்ஹணப்ரியம் ||

4 சுஜிதம் விச்வகர்மாணம்—புண்டரீகம் த்விஜப்ரியம் |
ஹரிம் சம்பும் நமஸ்யேச—ப்ரம்ஹாணம் ஸப்ரஜாபதிம் ||

5 நமஸ்யே சூலபாஹூம்ச—தேவம் சக்ரதரம் ததா |
சிவம் விஷ்ணும் ஸுவர்ணாக்ஷம்—கோபதிம் பீதவாஸஸம் ||

6 நமஸ்யேச கதாபாணிம்—நமஸ்யேச குசேசயம் |
அர்த்தநாரீச்வரம் தேவம்—நமஸ்யே பாபநாசனம் ||

7 கோபாலஞ்ச ஸ வைகுண்டம்—நமஸ்யே சாபதாரிணம் |
நமஸ்யே விஷ்ணு ரூபம்ச—ஜ்யேஷ்டேசம் பஞ்சமம் ததா ||

8 உபசாந்தம் நமஸ்யேஹம்—மார்கண்டேயம் ஸஜம் புகம் |
நமஸ்யே பத்மகிரணம்—நமஸ்யே வடவாமுகம் ||

9 கார்த்திகேயம் நமஸ்யேஹம்—பால்ஹிகம் சங்கிநம் ததா |
நமஸ்யே பம்தகிரணம்—நமஸ்யேச குசேசயம் ||
10 நமஸ்யே ஸ்தாணு மநகம்—நமஸ்யே வநமாலிநம் |
நமஸ்யே லாங்கலீசம்ச—நமஸ்யே ஹம் ப்ரிய: பதிம் ||
11 நமஸ்யேச த்ரிணயநம்—நமஸ்யே ஹவ்யவாஹனம் |
நமஸ்யேச த்ரிஸௌவர்ணம்—நமஸ்யே தரணீதரம் ||
12 த்ரிஞசி கேதம் ப்ரம்ஹாணம்—நமஸ்யே சசிபூஷணம் |
கபர்திநம் நமஸ்யேச—ஸர்வா மய விநாசனம் ||
13 நமஸ்யே சசிநம் சூர்யம்—த்ருவம் ருத்ரம் மஹௌஜஸம் |
பத்மநாபம் ஹிரண்யாக்ஷம்—நமஸ்யே ஸ்கந்தமவ்யயம் ||
14 நமஸ்யேஹம் பீமஹம்ஸௌ—நமஸ்யே ஹாடகேச்வரம் |
ஸதா ஹம்ஸம் நமஸ்யேச—நமஸ்யே க்ராணதர்ப்பணம் ||
15 நமஸ்யே ருக்மகவசம்—மகாயோகிந மீச்வரம் |
நமஸ்யே ஸ்ரீனிவாஸம்ச—நமஸ்யே புருஷோத்தமம் ||
16 நமஸ்யேச சதுர்பாஹூம்—நமஸ்யேச ஸூதாதிபம் |
வநஸ்பதிம் மதுபதிம்—நமஸ்யே மநு மவ்யயம் ||
17 ஸ்ரீகண்டம் வாஸூதேவம்ச—நீலகண்டம் ஸதாசிவம் |
நமஸ்யே சர்வ மநகம்—கௌரீசம் லகுடேச்வரம் ||
18 மஹோஹரம்ச கிருஷ்ணேசம்—நமஸ்யே சக்ரபாணிநம் |
யசோதநம் மஹாபாஹூம்—நமஸ்யேச குசப்ரியம் ||
19 பூதரம் சாதிதசதம் ஸூநேத்ரம் ஸூரசம்விதம் |
பத்ராக்ஷம் வீரபத்ரம்ச—நமஸ்யே சங்கு கர்ணிநம் |
20 வ்ருஷத்வஜ மகேசம்ச—விச்வமித்ரம் சசிப்ரபம் |
உபேந்த்ரம்ச ஸகோவிந்தம்—நமஸ்யே பங்கஜப்ரியம் ||
21 ஸஹஸ்ர சிரஸம் தேவம்—நமஸ்யே குந்தமாலிநம் |
காலாக்னிம் ருத்ர தேவேசம்—நமஸ்யே க்ருத்திவாஸஸம் ||
22 நமஸ்யே சாகலேசம்ச—நமஸ்யே பங்கஜாஸநம் |
ஸஹஸ்ராக்ஷம் கோக நதம்—நமஸ்யே ஹரிசங்கரம் ||
23 அகஸ்தயம் கருடம் விஷ்ணும்—கபிலம் ப்ரம்ஹவாங்மயம் |
ஸநாதநம் சப்ரம்ஹாணம்—நமஸ்யே ப்ரம்ஹதத்பரம் ||
24 அப்ரதர்க்யம் சதுர்பாகும்—ஸஹஸ்ராம்ஸூம் தபோமயம் |
நமஸ்யே தர்ம ராஜாநம்—தேவம் கருட வாஹனம் ||
25 ஸர்வ பூதகதம் சாந்தம்—நிர்மலம் ஸர்வலக்ஷணம் |
மஹாயோகின மவ்யக்தம்—நமஸ்யே பாபநாசனம் ||
26 நிரஞ்ஜநம் நிராகாரம்—நிர்குணம் நிலயம் பதம் |
நமஸ்யே பாப ஹர்த்தாரம்-ஸரண்யம் சரணம் வ்ரஜே ||

வாமநம்.

௭

16. ஸ்ரீ வாமந புராணம்.

விணுபாணியாக வையகமெலாம் அலேந்து திரிந்து சிடுக்குகளே அறுத்து தர்ம நிர்ணயம் செய்து வரும் பாகவதோத்தமரான நாரதர், புலஸ்த்யரெனும் மஹரிஷியை அடுத்துப் பல கேள்விகளேக் கேட்டார். பதினெண் புராணங்களில் பதினுன்காவதான ஸ்ரீ வாமந புராணத்தின் ரஹஸ்யத்தை எனக்கெடுத்துரைக்க வேண்டும். பகவான் வாமனராகத் தோன்றியதேன்? பாகவதஞன பிரஹ்லாதன் தேவர்களுடன் போர் புரிந்ததேன்? ஸதி ஏன் தனது சரீரத்தை விட்டாள்? அவள் ஹிமவான் புத்ரியாகத் தோன்றியதேன்? தீர்த்த மகிமை தானங்களது பெருமையையும் விரதங்களேயும் கூறவேண்டுமென்ருர். புலஸ்தியர் கூறுகிருர்:

முன் ஒரு ஸமயம் தாக்ஷாயணி, மந்திரமலேயின்மீது உள்ள மஹேசனேப்பார்த்து உக்ரதாபமுள்ள இக்கோடைகாலத்தை எங்கிருந்து கழிப்பேன்? எனக்கோர் வீடில்லே! என் செய்வதென்ருள். புன்னகைக்கொண்ட சிவன் பார்வதியை நோக்கி எனக்கோ பொருளில்லே. வனத்தில் வஸிக்கும் யான் வீட்டிற்கு எங்கு செல்வேன்? என்ருர். பகவானது உள்ளத்தை அறிந்த உமாதேவி ஓர் மரத்தடியே தங்கி வஸித்தாள். உடனே மழை காலம் தோன்ற மழையும் குளிரும் தேவியை மரத்தடியில் தங்க முடியாமல் செய்தது. நாத! இப்பொழுதேனும் யான் வஸிக்க தக்கதோர் கிருகத்தை நிர்மாணம் செய்யலாகாதா? என்று தேவி வேண்டிஞள். ஸர்வேச்வரன், யான் நித்ய தரித்ரன். மிருகத் தோலேயே ஆடையாக அணிந்தவன். ஸர்பங்களே எனக்கு ஆபரணம். யான் எப்படி வீட்டைக் கட்டுவது என்ருர். தேவி, இக்குளிரால் தவிக்கும் பெண்ணேக்கண்டு தங்கள் மனம் இளகாதோ? என்ருள். பரமசிவன் தாக்ஷா

யணியுடன் மேகமண்டலத்தினுள்ளே வஸித்து வந்தார். சரத்ருதுவும் சென்றது. மேகமண்டலத்திலிருந்து மாதேவர் உமையுடன் மந்திரமலைக்குச் சென்றார். தக்ஷன் தேவர்களை அழைத்து ஆலோசனை செய்து ஓர் வேள்வி செய்ய ஆரம்பித்தான். ஸகல தேவர்களையும் மனைவியுடன் வரும்படி அழைத்து அஹிம்ஸையெனும் மனைவியுடன் தர்ம தேவரை யாகசாலையின் துவாரபாலகனாக அமர்த்தினார். அரிஷ்டநேமியை ஸமித்து முதலியதைக் கொண்டு வர ஏவினார். சந்திரையுடன் கூடிய ஆங்கீரஸரைப் பாக சாலையிலும் பிருகுவை யாகசாலையிலும் ரோஹிணியுடன் சந்திரனைப் பொக்கிஷத்திலும் தங்கி ஆங்குள்ள வேலையைக் கவனிக்கும்படிக் கூறினார். கையில் கபாலமும் சூலமும் ஏந்திய கைலாஸநாதனை அசுத்தமானவன் எனக் கருதி அவரை அழைக்கவில்லை.

வாலி ஸுக்ரீவர் முற்பிறவி.

பரமசிவனது கரத்தில் கபாலமிருக்கக் காரணம் யாதென்று புலஸ்தியர் கூறினார். ஒருசமயம் உலகெலாம் பரமனிடம் ஒடுங்கி ஆயிரமாண்டு பரமனது நித்ரையால் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. பிறகு ரஜோகுணத்தினால் ஐந்து முகமுள்ள பிரம்மன் தோன்றினான். தமோகுணம் நிறைந்த முக்கண்ணனும் அவனெதிரில் உதித்தார். பரமன் படைத்த அஹங்காரத்தினால் கர்வங்கொண்ட பிரம்மனும் சிவனும் நான் சிறந்தவன் நான் உயர்ந்தவன் எனக் கலகம் செய்தனர். பரமசிவன் தோல்வியடைந்து வெட்கத்தினால் தலை குனிந்து வாய்திறவாமல் நின்றார். பிரம்மனது ஐந்தாம்முகம் சிவனைப்பார்த்து உடுக்க உடையின்றி உண்ண வகையின்றி காளைமீது ஏறித்திரியும் நீயோ எனக்கு ஈடு? என்று அவரைப்பரிஹசித்தது. இதைக் கேட்டதும் ஒன்றாக இருந்த சிவனதுமுகம் ஐந்தாக ஆனது. கோபம்கொண்ட சிவன் பிரம்மனது ஐந்தாம் சிரத்தைத் தன் நகத்தினால் அறுத்தார். பிரம்மனது கோபத்தினால் ஆயுதம் தாங்கிய ஓர் புருஷன் தோன்றி சிவனை நிந்தித்தான். பரமசிவன் விரைவாக பதரிக்காசிரமம் சென்று தர்மரது புதல்வரான நாராயணரை அடுத்துக் கபாலத்தைக் காட்டி பிக்ஷை கேட்டார். அவர் தனது வலது கையை நீட்டி இதைச் சூலத்தினால் குத்தி வேண்டியதைப்

பெற்றுக் கொள் என்ருர். சூலத்தினது நுனிபட்ட இடங்களிலிருந்து மூன்று வகையாக இரத்ததாரை ஓடியது. ஒன்று நக்ஷத்திர மண்டலம் சென்றது. இரண்டாவது **தூர்வாஸராகத்** தோன்றி **அத்ரிரிஷியை** அடைந்தது. மூன்ருவது ஓர் வீரக் குழந்தையாகத் தோன்றியது. அதைப்பார்த்து சிவன் என்னை நிந்தித்த பிரம்ம புதல்வனை நீ கொல்! என்ருர். இவனும், பிரம்ம புதல்வனுமே வாலி ஸுக்ரீவர்களாகவும் கர்ணார்ஜுனர்களாகவும் தோன்றினர்.

தக்ஷயக்ஞம்.

பரமசிவன் பிரும்மாவினுடைய ஐந்தாம் தலையை அறுத்ததால் பயங்கரமான பிரம்மஹத்தி அவரை வந்தடைந்தது. ஆதலால் நர நாராயணர்களைக் கொண்டு இதை அகற்றலாமென்றெண்ணி பரமசிவன் பதரிகாசிரமம் சென்ருர். அவர்கள் இவரது கண்ணில் படவில்லை. யமுனையில் புனலாடி பாபமகற்றுவோமென்று சிவன் அங்கு செல்ல யமுனையில் ஜலம் உலர்ந்தது. புஷ்கரம், மரகதம், ஸைந்தவம், நிமிஷம் என்ற புண்யாரண்யங்களுக்குச் சென்ருர். அங்கும் பாபமகலவில்லை. குருஜாங்கலமெனும் க்ஷேத்திரம் சென்று மஹாவிஷ்ணுவைத் துதித்தார். அவர் பிரயாகை வரணு என்று இருநதிகளுக்கிடையிலுள்ள காசீ க்ஷேத்திரம் செல் என்ருர். சிவன் அங்கு சென்று கங்கா ஸ்நாநம் செய்தார். உடனே ஹத்திதோஷம் அகன்றது. கையிலுள்ள கபாலம்மட்டிலும் அகலாததைக் கண்டு விஷ்ணுவைத் துதித்து ஏன் இது அகலவில்லை என்று கேட்டார். எதிரிலுள்ள இத்தீர்த்தத்தில் ஸ்நாநம் செய் என்று விஷ்ணுகூற சிவன் அங்ஙனமே செய்தார். உடனே கையைவிட்டு கபாலம் அகன்றது. ஆதலின் கபாலமோசனி எனப்பட்டது.

ஜயை எனும் கன்யகை தாக்ஷாயணி இருப்பிடம் வந்தாள். விஜயை இன்றி நீ மாத்ரம் இங்கு வரக்காரணம் யாதென தேவி வினவினுள். அன்னையே! நீ அறியாயோ? உமது தந்தை ஓர் வேள்வி செய்கிருர்! உலகத்திலுள்ள அனைவரும் அழைக்கப்பட்டு ஆங்கு செல்ல தங்களை தக்ஷர் அழைக்க வில்லையா? அழைத்துத் தான் தாங்கள் செல்ல வில்லையா? விஜயையும் ஏனையோரும் அங்கே

சென்றிருக்கின்றனர் என்றாள். தேவி ஒன்றும் தோன்றாது திகைத்து திடுக்கிட்டுத் திடீரெனக் கீழே விழுந்து இறந்தாள்.

ஐயை தேவியின் மரணத்திற்கு யானே காரணமானேன் என்று உரத்த குரலில் கதறியழுதாள். சிவன் விஷயத்தை அறிந்து தக்ஷனிடம் கடுங்கோபம் கொண்டார். அவரது மயிர் கால்களிலிருந்து எண்ணிறந்த ஸிம்ம முகமுள்ள வீரர்கள் தோன்றினார்கள். ஐயை கதையை ஏந்திவர வீரபத்ரனும் பத்ரகாளியும் இருபுறமும் நிற்க ருத்ர மூர்த்தி இடையிலே நின்று போர் கோலத்துடன் தக்ஷனது யாகசாலைக்கு வந்தார். வாயிற் படியில் நின்று காவல் காக்கும் தர்மனை அடித்துத் தள்ளி யாகசாலையில் நுழைந்தார். இவரது பயங்கர உருவத்தைக் கண்டு முனிவர் ஓட்டமெடுத்தனர். தேவர்கள் ஆயுதம் தாங்கி வீரனுடன் போர் புரிந்தனர். வீரனது வீர்யத்தை ஸஹியாமல் விண்ணவர் பயந்து ஓடினர். விஷ்ணு ஸுதர்சனமெனும் சக்ரத்தைப் பிரயோகிக்க அது வீரனைக் கட்டிப் பிடித்து அவர் எதிரிலே கொண்டு நிறுத்தியது. அவர் சிவனது கிங்கரனென உணர்ந்து வீரனை விடுவித்து விட்டார். வீரன் விரூபாக்ஷனிடம் சென்று தனக்கு தோன்றிய தோல்வியைக்கூறி வெட்கித்து நின்றான். உடனே சிவன் ஆக்ரஹத்துடன் தானே யாகசாலைக்குச்சென்றார்.

இவரைக் கண்டவுடன் விஷ்ணு ஒரு மாமரத்தில் பதுங்கினார். அஷ்டவஸுக்களும் நதியாக மாறினர். கச்யபர் முதலிய முனிவர்கள் ருத்ரத்தால் பகவானைப் போற்றினர். பூஷா என்பவர் பரமனைப் பார்த்து பல்லைக் காட்டி போருக்கழைத்தார். பூதநாதன் பூஷாவின் பற்கள் உதிரும்படி கன்னத்தில் குத்தினார். அவரை எதிர்த்து நின்ற எல்லோரும் யமனுக்கு இறையாயினர். முக்கண்களாலும் மூன்று அக்நிகளையும் தஹித்தார். யக்ஞம் மான் உருவங்கொண்டு ஓடிற்று. பகவான் யாகசாலையில் ஓர் சரீரத்தை வைத்து மற்றோருடலைக் கொண்டு மானைப் பின்தொடர்ந்தார். காலஸ்வரூபியான சிவனை வணங்கித் துதித்து தக்ஷன் தனது யாகத்தைப் பூர்த்தி செய்தான். தாக்ஷாயணி தனது சரீரத்தை விட்டபின் சிவன் தனித்திருந்தார். இதே தக்க ஸமயம் என காமன்

அவர்மீது உந்மாதமெனும் அம்பைத் தொடுத்தான். பித்தனைப்போல் சிவன் மனைவியை நினைத்து அங்குமிங்கு மலைந்து திரிந்தார். மறுபடியும் மன்மதன் ஸந்தாபினீ என்ற சரத்தை விடுத்தான். மிகமிகத் துயருற்ற மாதேவன் தற்செயலாக எதிரில் வந்த குபேரனது புத்ரனை பாஞ்சாலனைக் கண்டார். இந்நிலையிலுள்ள சங்கரனைப் பார்த்து அவன் பிரமித்து நிற்க அவர், பாஞ்சால! எனது தாபத்தை நீ ஏற்றுக்கொள் என்றார். மறுமொழி கூறாது பாஞ்சாலனதை ஏற்க, மட்டில்லா மகிழ்ச்சி கொண்ட மஹேசன், காலஞ்சர க்ஷேத்ரத்திற்கருகே **பாஞ்சால கேசன்** எனப் பெயர்பெற்று நீ விளங்குவாய்! உன்னைப் பூஜிப்பவரது இஷ்டம் பூர்த்தியாகும் என ஆசீர்வதித்தார்.

சிவலிங்கம்.

மறுபடியும் மன்மதன் மலர் அம்பை ஏந்தி கைலாஸ நாதனைத் தொடர்ந்தான். அவர் தாருவனம் சென்றார். மஹரிஷிகள் அவரை வணங்கி வரவேற்றனர். அவர் பிக்ஷை கேட்கும்போது முநிவர் மௌநியாயிருந்தனர். அருந்ததியைத் தவிர ஆங்குள்ள முநி பத்னிகள் அனைவரும் அவர் அழகைக் கண்டு அவரைப் பின் தொடர்ந்தனர். தபோதநர் அனைவரும் சினங்கொண்டு சிவனது லிங்கம் கீழேவிழுமாறு சபித்தனர். அது விழுந்த அதிர்ச்சியால் பதினான்கு லோகமும் நடுநடுங்கிற்று. உடனே விஷ்ணுவும் பிரும்மாவும் வந்து லிங்கமான சிவன் அடிமுடிகளைக் காண கீழும் மேலும் சென்றனர். பலநாள் தேடியும் காணாது திரும்பிவந்து இருவரும் பரமனைத் துதித்தனர். பிரத்யக்ஷமாகத் தோன்றி பகவான் பிரஹ்மாதி தேவர்களுக்கு லிங்கபூஜையை உபதேசித்து மறைந்தார். பிறகு பிரும்மா, சைவம், பாசுபதம், காலதாமநம், கபாலிகம் என்ற நான்கு சிவபூஜா சாஸ்திரங்களை இயற்றினார். சிவனது அவதாரமான **சக்தி** முனிக்குக் **கோபாயநர், பரத்வாஜர்** என இரு சிஷ்யரிருந்தனர். பரத்வாஜரது சிஷ்யன் **ஸோமகேச்வரன்** என்ற அரசன், ஆபஸ்தம்பரது சிஷ்யனான **க்ரோதேச்வரன்** என்ற வைச்யன், **அர்ஜுநதரன்** என்ற நான்காவது வர்ணத்தான் ஆகிய இவர்கள் சைவ பூஜையின் ஸம்ப்ரதாயத்தை உலகில் ஆரம்பித்தார்கள். மூன்றும்முறை முக்கண்ணனை அடித்த

காமன் ருத்ரனது மூன்றும் கண்ணால் பற்றி எரிந்தான். அவனது அங்கங்கள் அழகிய மரமாயின.

பிரஹ்லாத யுத்தம்.

ஒரு ஸமயம் ச்யவநமுநி நர்மதா நதியில் ஸ்நாநம் செய்ய இறங்கினர். ஓர் நாகம் விளையாட்டாக அவரைக் கடித்து நாகலோகத்திற் கிழுத்துச் சென்றது. உடனே அவர் ஹரியை நினைக்க விஷமகன்றது. இதை அறிந்து அங்கு ஆட்சி புரியும் பிரஹ்லாதன் பகவானுக்குப் பிரிய மான பிராம்மணனைப் பூஜித்துத் தர்மோபதேசம் செய் யும்படி வேண்டினன். ச்யவநர் தீர்த்தங்களின் பெருமை யை விளக்கித் தீர்த்தயாத்ரையின் மஹிமையையும் உரைத்தார். பிரஹ்லாதன் பூலோகஞ் சென்று நைமி சாரண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தான். ஆங்கு அஸ் திரங்களைக் கையிலேந்தி ஜடாமகுடதாரிகளாய்த் தவம் புரியும் நரநாராயணர்களைப் பார்த்தான். வேஷதாரிக ளான நீங்கள் கையில் வில்லேந்திய காரணமென்ன? சக்தியிருந்தால் சண்டைக்கு வாருங்கள் என்றுரைத்தான். நரரும் பிரஹ்லாதனும் மிக பயங்கரமாக யுத்தம் செய் தனர். பல விற்கள் முறிந்தன. திவ்யாஸ்திரங்களெல் லாம் பயனற்றுப் போயின. பாணவர்ஷத்தால் சந்திர ஸூர்யரது ஒளி உலகில் உலவா தொழிந்தது. எண் ணிறந்த ஆயுதங்கள் தூள் தூளாயின. ஜய அபஜயம் எவருக்குமில்லை. யுத்தப் பிரியர்களான தேவர்கள் விமா னத்தின் மீதேறி வானத்தில் வட்டமிட்டனர். திவ்யாஸ் திரங்களின் ஜ்வாலை கொழுந்துவிட்டுக் கிளம்பும்போது ஹா! ஹா! என்ற சப்தமும் எழுந்தது. நாராயணரை யும் பிரஹ்லாதன் போருக் கழைக்க அவரும் யுத்தம் செய்தார். ஆயிரமாண்டுகள் சென்றன. நாராயணரது பாணத்தால் அஸுர ராஜன் பிரக்ஞையற்றுத் தேரில் விழுந்தான். அவனது ஸாரதி, ரதத்தை அப்புறப்படுத்தி அவனை ஆச்வாஸப்படுத்தினன். களை தீர்ந்ததும் கனல் போலெழுந்து பிரஹ்லாதன் எதிரியைச் சமருக் கழைத் தான். நாராயணர் அவனைப் பார்த்து மாலைக்கடனை முடித்துக் காலையில் வா! என்றார். அரக்கன் இரவெலாம் பகவானை நினைத்து எனக்கு ஏன் இன்னும் ஜயம் உண் டாகவில்லை? என்று வருந்தினன். பகவான் பிரத்யக்ஷ

மாக வந்து நரநாராயணர்கள் தர்மத்தின் அம்சமாதலால் அவர்களை ஜயிக்க எவராலும் முடியாது! வேண்டுமானல் பக்தியினல் அவர்களை ஜயி என்றுரைத்து மறைந்தார். உடனே பாதாளஞ்சென்று அந்தகனெனும் தனது ஸஹோதரனிடம் ராஜ்யபாரத்தை அளித்துப் பதரிகாச்ரமம் சென்று பிரஹ்லாதன் நரநாராயணர்களைத் துதித்தான். அவர்கள் அவனெதிரில் தோன்றி ஆசீர்வதித்து விஷ்ணு பக்தி பிராஹ்மணபக்தி முதலிய வரங்களைத் தந்தனர். பாதாளஞ் சென்று தைத்யர்களுக்குப் பக்தியை உபதேசிக்கும்படிக் கூறினர். அங்ஙனமே பிரஹ்லாதன் பாதாளம் சென்று ராஜ்யத்தை ஏற்காது ஆங்கோர் ஆச்ரமம் அமைத்து அதிலிருந்து அஸுரர்களுக்குப் பகவத் பக்தியைப் புகட்டிவந்தார்.

அந்தகன்.

ஹிரண்யாக்ஷன் புத்ரனன அந்தகன் கண்ணில்லாவிடினும் ஸஹோதரனளித்த ராஜ்யத்தை நன்கு பரிபாலித்து வந்தான். சிவனை நாடித் தவம் புரிந்து பல அரிய வரங்களைப் பெற்றான். முன்னவர்களைப்போல் சுக்ரரைப் புரோஹிதராகக் கொண்டு திக்விஜயம் செய்யக்கிளம்பினன். இதைக்கேட்டு இந்திரனும் தனது ஸேனையைப் போருக்கு ஸந்நத்தமாக்கினன். **தநுவினது கையிலிருந்து** பிறந்த **வெள்ளையானை** மீது வாஸவன் ஏறினன். **ருத்ரனது தேஜஸால் ஜநித்த** பௌண்ட்ரக மெனும் **மஹிஷத்தின்** மீது யமனும், **ருத்ரனது கர்ணமலத்தால் உண்டான கடலெனும்** பெயர் கொண்ட **சிம்சுமாரத்தின்** மீது வருணனும், **அம்பிகையின்** பாதகமல**த்திலிருந்து** பிறந்த **நரோத்தமத்தின்** மீதேறி குபேரனும் ரணகளம் சென்றனர்.

தேவ அஸுர ஸேனை ஒன்றுகூடி உலகெலாம் நடுங்கும்படி கடும்போர் செய்தது. ரக்தம் ஆருகப் பெருகிற்று. பிணங்கள் மலை மலையாகக் குவிந்தன. ஆயிரங் குதிரைகள் பூட்டிய ரதத்தின் மீதேறி அந்தகன் அமரர் படை அனைத்தையுமழித்தான். அஷ்டதிக் பாலர்களையும் மூர்ச்சையாகி விழும்படி அடித்தான். இவ்வந்தகனைச் சார்ந்த ஸுகேசி அவன் வாஹனமான பட்டணத்துடன் ஸூர்யனிடம் அடிபட்டு கீழே விழுந்தான். முடிவில்

அந்தகன் தேவரை முறியடித்து வெற்றி பெற்று மூவ்வுல கையும் தனதாளுகைக்குள்ளாக்கினான்.

தர்மமும் ஸுகேசியும்.

வித்யுத்கேசியின் புத்ரனான ஸுகேசி எனும் அரக்கன் சிவனைப் பல்லாண்டு பூஜித்து எங்கும் போகத்தக்க நகரையே வாஹனமாகப் பெற்றான். ஸுகேசி மாகத வனஞ்சென்று மஹரிஷிகளை வணங்கி தர்ம தத்துவத்தைக் கூறும்படி வேண்டினான். அவர்கள் தேவர் முதல் மனிதர் வரையிலுள்ள ஸகல ஜீவர்களுக்கும் உரிய தர்மங்களை விரிவாக விளக்கினர். யக்ஞம், வேதார்த்த விசாரம், விஷ்ணு பூஜை ஆகிய இவை தேவதர்மம். பலம், பொறாமை, சண்டை, நீதி அறிதல், சிவபக்தி இவை தைத்ய தர்மம். யோகஸித்தி, வேதம், பிரும்மக்ஞானம், விஷ்ணு பக்தி இவை ஸித்த தர்மம். உபாஸநம், நிருத்ய வாத்யம், ஸரஸ்வதீ பக்தி இவை கந்தர்வதர்மம். வித்யை, பௌருஷம், பவானீ பக்தி இவை வித்யாதர தர்மம். பிரும்மசர்யம், அடக்கம், யோகாப்யாஸம், எங்கும் ஸஞ் சரித்தல் இவை பித்ரு தர்மம். ஸத்யம், ஜபம், க்ஞானம், நியமம், தர்மமறிதல் இவை ரிஷி தர்மம். வேதம், தானம், யாகம், கார்ப்பண்யமில்லாமை, அநாயாஸம், தயை. அஹிம்ஸை, க்ஷமை, இந்திரிய ஜயம், சௌசம், விஷ்ணு சங்கரன் ஸூர்யன் அம்பிகை இவர்களிடம் பக்தி இவை மநுஷ்ய தர்மம். தநாதிபத்யம், போகம், வேதம், சிவ பக்தி, அஹங்காரம் இவை குஹ்ய தர்மம். பரதார பரத்ரவ்யத்தில் ஆசை, வேதம், சிவபக்தி இவை ராக்ஷஸ தர்மம். அவிவேகம், பொய், அநாசாரம், மாம்ஸத்தில் ஆசை இவை பிசாச தர்மம். இங்ஙனம் பன்னிருவர் களுக்கும் பிரும்மனால் தர்மங்கள் விதிக்கப்பட்டன.

கர்மவிபாகம். ஐம்பதுகோடி யோஜனை தூரம் விசால மாய் ஓர் தோணிபோல் ஜலத்தின்மீது மிதக்கும் இப்பூமி யில் ஜம்பூத்வீபம், பிலக்ஷம், சால்மலீ, குசம், க்ரௌஞ் சம், சாகம், புஷ்கரம் என ஏழு த்வீபங்களமைந்துள. பிலக்ஷம் முதல் சாகம் வரையிலுள்ள த்வீபங்களில் வஸிப்பவருக்குத் தேவ தர்மமே உரியது. புஷ்கரத்வீபத் தில் ரௌரவம், மகாரௌரவம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ் ரம், காலஸூத்ரம், அப்ரதிஷ்டம், கடீயந்த்ரம், அஸிபத்ர

வநம், தப்தகும்பம், கூடசால்மலி, கரபத்ரம், ச்வாந போஜநம், ஸந்தம்சம், லோஹபிண்டம், கரம்பஸிகதம், க்ஷாரநதி, கிரிமிபோஜநம், வைதரணீ, க்ஷுராக்ரதாரம், சக்ரம், ஸம்சோஷணம் என்ற இருபத்தோரு நகரங்கள் இருக்கின்றன.

தேவர், த்விஜர், வேதம், புராணம், குரு முதலியவர்களை நிந்தித்து யாகத்தைக் கெடுப்பவர், தாநம் செய்வோரைத் தடுப்பவர், ஸ்நேஹிதர் தம்பதி முதலியவர்களைச் சேரவிடாமல் செய்பவர், கன்யகையை ஒருவருக்கு அளித்து மறுபடி மற்றொருவருக்கு அளிப்பவர் முதலியவர் கத்தியால் இரண்டாகப் பிளக்கப்படுவர். பிறருக்குத் தாபத்தை அளிப்பவன், சந்தநம் சாமரம் முதலியவைகளைத் திருடுபவர் கரம்பஸிகதா நரகம் செல்வர். **தேவ பித்ரு கார்யத்திற்காக புஜிக்கும்படி அழைக்கப்பட்டவர் தநலோபத்தால் வேறிடம் சென்றால்** கழுகுகளால் இரண்டாகக் கிழிக்கப்படுவர். க்ரூரவாக்கால் ஸாதுக்களைத் துன்புறுத்துபவனது நாக்கைக் கழுகு பிளக்கும். தேவர் அதிதி பெற்றோர் சிறுவர் கர்ப்பிணி முதலியவர்கள் உண்ணுதபோது தான்மாத்திரம் புஜிப்பவன் மல மூத்ரங்களை உண்டு புழுவாய்ப் பிறப்பான். பங்தியில் வஞ்சனை செய்வோர் மலத்தைப்புஜிப்பர். எச்சிலோடு கோ பிராம்மணுக்நிகளைத் தொடுபவரது கை தப்தகும்பத்தில் காய்ச்சப்படும். எச்சிலோடு சந்திர ஸூர்ய நக்ஷத்ரங்களைப் பார்ப்பவரது கண் விழி பிடுங்கப்படும். பெரியோரைக் காலால்மிதிப்பவரது கால் கட்டப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவர். பாயஸம் பக்ஷ்யம் முதலியவைகளைப் பகவந் நிவேதநமில்லாமல் தனக்காகச் செய்து புஜிப்போரது வாயில் உருக்கிய இரும்பு விடப்படும். தண்ணீர்ப்பந்தல் மடம் தேவாலயம் உத்யாநம் தடாகம் முதலியவைகளை அழிப்பவரது தோல் கத்திரியால் கத்திரிக்கப்படும்.

கோபிராம்மணர் ஸூர்ய, அக்நிகளுக்கு எதிராக மல ஜலம் கழிப்போரது ஆஸந த்வாரத்தைக் காக்கைக் கொத்தும். பஞ்சகாலத்தில்கூட பந்து பரிவாரங்களைக் காக்காது தன்னைமாத்திரம் ரக்ஷித்துக்கொள்பவன் நாயாகப் பிறப்பான். சரணுகதனைக் கைவிட்டவர், யந்திர பீடத்தில் தள்ளப்படுபவர். புரோஹிதரைத் துன்புறுத்தியவர் கற்பாறையில் அடிக்கப்படுவர். கொடுத்த பொருளை இல்லை

என்போர் தேள் குழியில் விழுவர். சிராத்த தினத்தில் மறுமுறை புஜிக்கும் கர்த்தாவும் போக்தாவும் ஒருவரை யொருவர் அடித்துத் தின்பர். வேதம் அக்நி குரு இவர்களைத் தியாகம் செய்தவர் மலையிலிருந்து கீழே தள்ளப் படுவர். சண்டாளனிடம் தாநம் வாங்குபவர் கல்தேரையாக ஜநிப்பர். பிரம்மஹத்தி ஸுராபானம் ஸுவர்ண ஸ்தேயம் குருமனைவி ஸங்கம் இந்நால்வருடன் சேருதல் என்ற பஞ்சமஹாபாபம் செய்தோரும் கோ பூமிகளை அபஹரித்தவரும், கோ, வேத, ஸோம, விக்ரயம் செய்பவரும் நன்றி மறந்தவரும் பத்தாயிரமாண்டு தாமிஸ்ர நரகத்தை அனுபவிப்பர். அதேபோல் அந்த தாமிஸ்ரம் அஸிபத்ரவநம் கடீயந்த்ரம் தப்தகும்பம் என்ற இவை ஒவ்வொன்றிலும் பத்தாயிரமாண்டு வஸிப்பர்.

தேவரில் விஷ்ணுவும் நதிகளில் கங்கையும் க்ஷேத்ரத்தில் குருஜாங்கலமும் லோகங்களில் பிரும்மலோகமும் சாஸ்திரங்களில் வேதமும் ரிஷிகளில் அகஸ்தியரும், புராணங்களில் மாத்ஸ்யமும் ஸ்மிருதியில் மநுவும், நாற்கால் பிராணிகளில் கோவும் புஷ்பங்களில் ஜாதியும் நகரங்களில் காஞ்சியும் வியாதிகளில் அஜீர்ணமும் ரஸத்தில் உப்பும் பதிவ்ரதைகளில் பார்வதியும் நரகத்தில் வைதரணியும் சிறந்ததுபோல் பாபத்தில் நன்றிகொன்ற பாபம் சிறந்த பாபமாகும்.

ஆச்ரம தர்மம் : ஜம்பூத்வீபத்திலுள்ள கிரிநதீ பட்டணம் ஆங்கு வஸிப்பவர் முதலியவர்களை விளக்கி நான்கு ஆச்ரம தர்மங்களையும் முனிவர் நன்கு ராக்ஷஸனுக்கு உபதேசிக்கின்றனர். பிரும்மசாரி குருவிற்குக் காட்டாமல் எதையும் புஜிக்கலாகாது. குரு கூப்பிட்ட பிறகே வித்யைக் கற்கச் செல்லவேண்டும். குருவிற்கு விருப்பமான தக்ஷிணையை அளித்து, பரிபாகத்திற் கேற்றபடி இல்லறம் வாநப்ரஸ்தம் ஸந்யாஸம் இதில் ஒன்றை ஏற்கலாம். ஆசாரமில்லாமல் செய்யும் கர்மா வீணாகும். **ஆசார மரத்திற்கு தர்மம் வேர்; தனமே கிளை; காமமே புஷ்பம்; மோக்ஷமே பழமாகும்.** காலை எழுந்து ஸுப்ரபாத ஸ்தோத்ரம் சொல்லி வீட்டிற்கு வெகுதூரம்சென்று மல ஜலங்களைக் கழித்து மண்ணால் கைகால்களைச் சுத்தம் செய்து ஸ்நானம் செய்ய வேண்டும். வேலையில்லாமல்

வெளியில் செல்லக்கூடாது. தூரஸ்த்ரீகளுடன் பேசக் கூடாது. ஸகோதரியா யிருந்தாலும் எந்த ஸ்திரீயுடன் கூடவும் ஒரே ஆஸநத்தில் உட்காரலாகாது. வஸ்திரமில் லாமல் ஸ்நாநம் சயநம் கூடாது. பாநுவாரத்தில் அப் யங்கநமும் சுக்ரவாரத்தில் க்ஷௌரமும் நல்லதல்ல.

தெற்கு முகமாகவும் மேற்கு முகமாகவும் உட்கார்ந்து புஜிக்கலாகாது. பிறர் தரித்த புஷ்ப வஸ்திர சயந பாதுகை களையும், பிறர் உண்டு மிகுந்த அன்னபாநத்தையும் ஏற்க லாகாது. இரவில் கிரஹணம் தவிர மற்ற காலங்களில் ஸ்நாநம் செய்யக் கூடாது. ஸ்நாநம் செய்து மயிரை உதரக்கூடாது. வஸ்திரத்தால் உடலைத் தேய்க்கலாகாது. வீதியிலுள்ள ஜலமும் சேரும் ஸூர்யனால் சுத்தமாகிறது. ஆசௌசான்னம், தேவ பித்ரு கார்யம் செய்யாதவர் அந்நம், டம்பமாக அநுஷ்டாநம் செய்யும் மார்ஜாரரது அந்நம், பக்ஷபாதமாகப் பேசும் குக்குரரநு அந்நம், ஸ்வ தர்மத்தை விட்டு பரதர்மத்தைக் கைக்கொண்ட பதிதரது அந்நம், வேத சாஸ்திரமில்லாத நக்நரது அந்நம், ஆசை காட்டி மோசம் செய்யும் சண்டாளரது அந்நம் ஆகியவை கள் பாபகரமானதால் அவைகளைப் புஜிப்போர் சாந்த்ரா யண விரதத்தால் சுத்தமாவர். அறுவறுக்கத் தகாததும் பிறரைப் பார்த்து அச்சப்படத் தகாததுமான கார்யத் தையே செய்யவேண்டும்.

ஸுகேசியும் சூர்யனும்.

பிராம்மண க்ஷத்ரியர்களே வாந பிரஸ்தாச்ரமத்திற் கேற்றவர். வைச்யருக்கு பிரும்மசர்யம் இல்லறமென்ற இரண்டே ஆச்ரமங்களுண்டு. நான்காவது வர்ணத்தவருக்கு இல்லறம் மட்டும் தானுண்டு. ஸ்வதர்மத்தை நன்கு அனுஷ் டிப்பவர் பிரும்மலோகம் செல்வர். பரதர்மத்தைக் கைக்கொ ள்பவர் ஸூர்யனுடைய கோபத்திற்காளாவர். இங்ஙனம் மஹரிஷிகள் கூறிய உபதேசத்தைக் கேட்டு, ஸுகேசி ராக்ஷ ஸர்களிடம் சென்று, அஹிம்ஸை, ஸத்யம், களவாடாமை, சௌசம், இந்திரிய ஜயம், தாநம், தயை, கர்வமில்லாமை, மதுரமான வாக்கு முதலிய ஸதாசாரங்களை உபதேசித் தான். அவர்களும் அதை அநுஷ்டித்ததால் அவர்களது நகரம் ஜ்யோதிர்மயமாக விளங்கியது. சந்திர ஸூர்யர் களது ஒளி மழுங்கியது. ஸுகேசியினது கர்வத்தை

அடக்க யாது வழியென ஸூர்யன் யோசித்து, இவன் ஸ்வதர்மமான ராக்ஷஸதர்மத்தைக் கைவிட்டான்; என்பதை வியாஜமாகக்கொண்டு அவனை நகரத்துடன் கீழே தள்ளி விட்டார். தனது பக்தனுக்கு நேர்ந்த கதியைக் கண்டு ருத்ரன் பானுவைக் கோபத்துடன் விழித்துப்பார்க்க அவனும் கீழே விழுந்தான். பாஸ்கரனது ரதத்திலிருந்து மற்ற பானுக்களும் மஹரிஷிகளும் கீழே விழுந்து எழுந்து பிரும்மாவைச் சரணமடைந்தனர். அவர் காசியில் உள்ள விச்வநாதனைச் சரணமடைந்தார். தேவர்களது பிரார்த்தனைக் கிணங்கி பகவான் பானுவைக் கையிலேந்தி **லோலன்** என்ற நாமம்சூட்டி தேரோடு ஆகாசத்தில் தூக்கி எறிந்தார். முன்போலவே ஸூர்யன் தனது இடம்சென்று கடமையைச் செய்துவந்தான். ஸுகேசியைப் பிரும்மா முன்போலவே நகரத்துடன் ஆகாயத்தில் அமர்த்தினர்.

தேவர் உறங்கும் காலம்: ஆடி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசியில் பகவான் ஆதிசேஷ சயனத்தில் படுத்துக் கொள்கிறார். துவாதசியன்று பிராம்மணர்களிடம் விடை பெற்றுக்கொண்டு உறங்குகிறார். த்ரயோதசியில் மன்மதன் புஷ்ப சயனத்திலும், சதுர்த்தசியில் யக்ஷர்கள் ஸ்வர்ணத் தாமரையிலும், பூர்ணிமையில் பரமசிவன் புலித்தோலிலும், பிரதமையில் பிரும்மா நீலோத்பலத்திலும். துவிதீயையில் விச்வகர்மாவும், திருதீயையில் பார்வதியும், சதுர்த்தியில் விநாயகரும் பஞ்சமியில் யமனும், ஷஷ்டியில், ஸ்கந்தனும், ஸப்தமியில் ஸூர்யனும், அஷ்டமியில் காத்யாயனியும், நவமியில் லக்ஷ்மியும், தசமியில் பாம்புகளும் ஏகாதசியில் ஸாத்யர்களும் தூங்குகின்றனர். துவிதீயையில் பகவானை லக்ஷ்மியுடன் ஸ்வர்ணக் கட்டிலில் படுக்கவைத்துப் பூஜிப்பது அசூன்யசயநத்விதீயா விரதமாகும். ஆச்வயுஜ அஷ்டமியில் உபவாஸமிருந்து நவமியன்று சிவாராதநம் செய்வது **காலாஷ்டமீ** விரதமெனப்படும்.

காத்யாயநீ.

தேவர்கள் விஷ்ணுவையும் மஹாதேவனையும் சரணமடைந்தனர். இரு மூர்த்திகளும் கோபங்கொண்டனர். அக் கோபத்திலிருந்து ஓர் தேஜஸ் தோன்றிற்று. அதே போல் இந்திரன் முதலிய ஸகல தேவர்களது முகங்களி

லிருந்தும் தேஜஸ் தோன்றிற்று. இவை யனைத்தும் காத்யாயன மஹரிஷியின் அருகில் சென்று அவர் தேஜஸ் ஸுடன் கலந்து காத்யாயநீ எனும் தேவியாக நின்றது. ஸகல தேவர்களும் தத்தம் ஆயுதங்களையும் ஆபரணங் களையுமளித்து அம்பிகையைத் துதித்தனர். ஸந்தோஷ மடைந்த காத்யாயனீ அரக்கரைக் கொல்வதாகக் கூறி ஸிம்ஹத்தின் மீதேறி விந்தியமலைக்குச் சென்றாள். ஆங்கு தற்செயலாக வந்த சண்டமுண்டரெனும் இரு சகோதரர் கள் தேவியைக் கண்டு பயந்து ஓடி மஹிஷாஸுரனிடம் சென்றனர். அன்னையின் அழகையும் அபரிமிதமான சக்தியையும் வர்ணித்தனர். மஹிஷன் இதைக் கேட்டதும் தேவியை மணம்புரியக் கருதி ஸேனையுடன் விந்திய மலை யின் அடிவாரத்தில் வந்து தங்கினான். மயனுடைய புதல் வனை **துந்துபியைத்** தேவியினிடம் தூதனுப்பினான். அவன் மஹிஷாஸுரனுடைய பல பராக்ரமத்தை வர் ணித்து அவளை மணக்கும்படிக் கூறினான். தேவி புன் னகைகொண்டு என்னை எவர் யுத்தத்தில் ஜயிக்கிறாரோ அவருக்கே யான் மாலையிடுவதாக பிரதிக்ஞை செய்திருக்கி றேன்.

மஹிஷன் என்னை முதலில் ஜெயிக்கட்டுமென்றாள். இதைக் கேட்ட மஹிஷன், விக்ஷுரன் முதலிய ஸேனாதிபதி களை எண்ணிறந்த சேனையுடன் தேவியோடு போர்புரிய அனுப்பினான். காத்யாயனீ தனது உடலிலிருந்து பல சக்தி கணங்களைத் தோற்றிவைத்து அஸுர ஸேனையை அழித்தாள். தானே பல ஸேனாதிபதிகளைக் கொன்று வீணை டமருகம் என்ற வாத்யங்களை வாசித்தாள். சக்தி கணங்கள் தாண்டவமாடின. மஹிஷன் தானே போருக்கு வர தேவி அவனைக் காலாலுதைத்துக் கீழே தள்ளி சூலத் தால் குத்தினாள். அதிலிருந்து கிளம்பிய அஸுரனது தலையைக் கத்தியால் வெட்டினாள். இதைக்கண்டு தேவர்கள் புஷ்பமாரிப் பொழிந்து அன்னையைத் துதித்தனர். தேவி அந்தந்த ஸமயத்திற் கேற்றபடி அவதாரம் செய்து அஸு ரர்களைக் கொல்வதாகக் கூறி மறைந்தாள். சும்ப நிசும் பன் எனும் ராக்ஷஸர்கள் மறுபடியும் உலகை நாசம் செய்தனர். தேவர்கள் வைகுண்டநாதனைச் சரணமடைந் தனர். பகவான், தாக்ஷாயணி தன்னுடலை விட்டபிறகு

சங்கரன் தக்ஷிணாமூர்த்தியாக தவம்புரிகிறானன்றோ ? அத் தாக்ஷாயணி பர்வத ராஜகுமாரியாகத் தோன்றி அவரை மணந்து ஸுப்ரஹ்மண்யனெனும் ஸேநாதிபதியை உண்டு பண்ணுவாள். அவன் இவ் வஸுரர்களை வெல்வான். அச் சேனாதிபதி பிறப்பதற்காக நீங்கள் பூமியில் பரம பாவநமான குருக்ஷேத்ரம் சென்று தவம் செய்யுங்கள் என்றார். தேவர்களும் அங்ஙனமே அங்கு கிளம்பினர்.

குருக்ஷேத்ரமுண்டானது.

சந்திர வம்சத்தில் ரிக்ஷன் என்றோர் அரசனிருந்தான். அவன் சிறந்த விஷ்ணு பக்தன். அவனுக்கு **ஸம்வரணன்** என்றோர் குழந்தை பிறந்தான். அவனது குணத்தைக் கண்டு வியந்தார் வஸிஷ்டர். அவன் பிரார்த்தனைக் கிணங்கி புரோஹிதரானார். அவ்வரசன் ஒரு ஸமயம் வஸிஷ்டரிடம் ஸகல ராஜ்ய காரியங்களையும் ஒப்படைத்து **வைப்ராஜமெனும்** வனத்திற்குச் சென்றான். ஆங்கு பல அப்ஸரஸ்ஸுகள் ஒன்றாகக்கூடி விளையாடிக்கொண்டிருந் தனர். அரசன் அவர்களிடையில் மிக லாவண்யம் வாய்ந்த ஓர் கன்யகையைக் கண்டு காமபாணத்திற்கு இலக்கா னான். அப் பெண்மணியும் மன்மதன் போன்ற மன் னனைக்கண்டு மாரன் கணைக்கு இலக்காகி மதிமயங்கி நின்றாள். அப்ஸரஸ்ஸுகள் தேவலோகம் சென்றனர். அன்றுமுதல் அரசன் மற்ற விஷயங்களை மறந்து அவளையே நினைத்துக் காட்டில் திரிந்தான். பலநாட்கள் சென்றும் பார்த்திபன் வராத காரணம் யாதென வஸிஷ் டர் யோசித்தார். ஆங்கு நடந்ததை ஞானக்கண்ணால் உணர்ந்த முனிவர், தபோமஹிமையால் ஸூர்யனிடம் சென்றார். தக்கபடி அவரை வரவேற்று அர்ச்சித்தான். வஸிஷ்டரென உணர்ந்து, வந்த காரியத்தைக் கூறும்படி வேண்டினான். வஸிஷ்டர் எனது சிஷ்யரான ஸம்வரண ராஜன் உனது புத்ரியான **தபதியைக்** கண்டு மணக்க விரும்புகிறான். ஸத்பாத்ரமாதலின் அவனுக்குத் தப தியை விவாஹம் செய்து வைக்கலாம் என்ற எண்ணம் கொண்டு உம்மிடம் வந்தேன் என்றார். அதைக் கேட்ட பாஸ்கரன் யாதொரு பதிலும்கூறாது பெண்ணை அழைத்து வஸிஷ்டருடன் அனுப்பி விட்டான். மஹரிஷி அவளை அழைத்துவந்து ஸம்வரணனுக்கு விதிப்படி விவாஹம்

செய்துவைத்தார். இவர்களுக்கு குரு என்ற ஓர் குழந்தை பிறந்தது. அதற்குத் தக்க வயது வந்தவுடன் **ஸுதாம** ராஜனுடைய புதல்வியான **ஸௌதாமினியை** மணம் செய்துவைத்தான்.

குருராஜன் பல்லாண்டு நீதி தவருது பாரினை ஆண்டு வந்தான். அவ்வரசன் உலகமுள்ளவரையில் தனது பெயர் அழியாதிருக்க ஆசைகொண்டான். அவனி எல்லாம் சுற்றி **த்வைத வநம்** வந்தான். ஆங்கு பாபத்தை அகற்றும் பல நதிகளைக் கண்டான். அங்கே அரிய ஓர் வேள்வியைச் செய்யக் கருதினன். தங்கக் கலப்பை கொண்டு அரசன் தானே தரணியை உழுதான். தேவேந்திரன் அவ்வரசனை நோக்கி எதற்காக உழுகிறீர்? என்று கேட்டார். அரசன் தபஸ், ஸத்யம், க்ஷமை, தயை, சௌசம், தானம், யோகம், பிரம்மசர்யம் முதலியவைகளைப் பயிரிட உழுவதாக உரைத்தான். இதைக் கேட்டு வியந்த இந்திரன் புன்னகைகொண்டு இதற்கு விதை எங்கிருந்து தேடுவாய்? என்று கூறிச்சென்ருன். குரு மறுபடியும் திரும்பத் திரும்ப பூமியை உழுது கொண்டிருந்தான். மஹாவிஷ்ணு அவன் எதிரிற்ரேன்றி இதற்கு விதை எங்கிருந்து தேடுவாய்? என இந்திரனைப்போல் வினவினர். அரசன் தன் கையில் இருப்பதாகக் கூறினன். அதைக் காட்டு என்று பகவான் கூற, குரு வலது கையை நீட்டினன்.

அதைச் சக்ரபாணி சக்ரத்தினல் அறுக்க அரசன் இடது கையை நீட்டினன். அதையும் மாதவன் அறுத்துத் தள்ள அரசன் அங்ஙனமே ஸகல அவயவங்களையும் அளிக்க, ஸர்வேச்வரன் எல்லாவற்றையும் அறுத்துத் தள்ளி உயிர் நீங்கும் தருணத்தில் அரசனை யாது வரம் வேண்டும்? என்ருர். அரசன் தான் உழுத இடம் மிகப் புண்ய பூமியாக இருக்கவேண்டுமெனவும் தன் பெயரால் குருக்ஷேத்ரமென்று வழங்க வேண்டு மெனவும், இங்கு அனுஷ்டிக்கும் ஸத்கர்மா அபரிமிதமாக பலனை அளிக்க வேண்டு மெனவும் வரம் கேட்டான். அச்யுதன் அங்ஙனமே அரசனை ஆசிர்வதித்து உலகுள்ளவரை உன் கீர்த்தி அழியாதிருக்கும். இந்த க்ஷேத்ரத்தைக் காக்க யக்ஷன், வாஸுகி, சங்குகர்ணன் முதலியவர்களை நியமித்

திருக்கிறேன். **பிருதூதகமெனும்** நதியையும் இங்கு ஓடும்படி செய்கிறேன் என்று கூறி மறைந்தார்.

வாமநாவதாரம்.

தைத்யருக்கு ஆதியானவன் ஹிரண்யாக்ஷன். அவனது புதல்வனை பிரஹ்லாதனிடம் விரோசனன் தோன்றினன். விரோசனனது புதல்வன் பலிசக்ரவர்த்தியாவான். பிரஹ்லாதனது உபதேசத்தினல் பலிசக்ரவர்த்தி தேவதர்மத்தைக் கைகொண்டான். தவருது தானதர்மங்களைச் செய்வான். அவனைத் தழுவி மயன் சம்பரன் முதலியவர்களும் தர்மத்திலீடுபட்டனர். பாபம் செய்வோர் ராக்ஷஸரில் ஒருவருமில்லை. நான்கு பாதத்துடன் தர்மம் தழைத்தோங்கிற்று. லக்ஷ்மீதேவி தைத்யேந்திரனது எதிரில் தோன்றி! உனது வீர்யத்தைக் கண்டு களித்தேன். நீ அனுஷ்டிக்கும் தர்மத்தால் பேரானந்தம் பெற்றேன். இந்திரனைவிட்டு உன்னிடம் வஸிப்பேன் எனக்கூறி அவன் உடலில் மறைந்தாள்.

எனவே முவ்வுலக ஆக்ஷியும் பலியினிடம் சென்றது. இந்திரன் பதவியை இழந்தான். அவன் மேருமலையில் வஸிக்கும் தனது அன்னையான அதிதியைச் சரணமடைந்தான். தனக்கு நேர்ந்த துன்பத்தைக்கூறினன். அதிதி அவன் தந்தையான கச்யபரைச் சரணமடையும்படி மகனுக்கு உரைத்தாள். கச்யபரது திருவடியைத் தேவேந்திரன் சரண் புகுந்தான். அவர் மஹாவிஷ்ணுவைத் தவிர பலியினது பலத்தை அடக்க வேறு எவராலும் இயலாதெனக்கூறி அவரைச் சரணமடையக் கருதினர். புதல்வனுடனும் தேவகணங்களுடனும் கூடி பிரஹ்ம லோகம் சென்றார். அஜனைவணங்கிப் போற்றி இந்திரனது நிலையை எடுத்துக்கூறினர். அவர் சுவேதத்வீபம் சென்று பத்மநாபனைச் சரணமடையும்படிக் கூறினர். அங்ஙனமே தேவர்களுடன் கச்யபர் வைகுண்டம் சென்றார். கச்யபர் பகவானது அரும்பெரும் குணங்களைக் கூறித் துதித்தார். பிரத்யக்ஷமான அவரது திருவடியைப் பணிந்து அவரே தனக்குத் தனயனைகத் தோன்ற வேண்டுமென கச்யபர் பிரார்த்தித்தார். அச்சுதனும் அங்ஙனமே தோன்றி தேவேந்திரனுக்கு தேவராஜ்யத்தை அளிப்பதாக அருள் புரிந்தார். பின்னர் அதிதியினது கர்ப்பத்தில் பகவான்

கருவாகத் தோன்றினர். அத்தருணம் பூமி சலித்தது; பர்வதங்கள் அசைந்தன; கடல் கலங்கிற்று. அதிதி அடி வைக்கும் இடமெல்லாம் தாழ்ந்தது. இதைக்கண்டு மஹாபலி பிரஹ்லாதரை அடுத்து இதற்கு யாது காரணம் என வினவினர். அவர் கூறினர். தேவரது நன்மையை நாடி நாரணன் அதிதியின் வயிற்றில் சிசுவாகத் தோன்றியுள்ளார். அவர் வாமன வடிவத்துடன் வந்து உன்னிடமுள்ள ஸ்வர்க்கத்தை இந்திரனுக்கு அளிக்கப் போகிறார் என்று உரைத்தார். இதைக்கேட்டு அஸுரன் அடங்காச் சினங்கொண்டு தைத்யகுலத்தை அழிக்கும் தாமோதரனைக்கொல்ல தனது ஸேனைபதிகளை அனுப்புவதாகக் கூறி பகவானை நிந்தித்தான். பரம பாகவதனை பிரஹ்லாதன் மனதை அது புண்படுத்திற்று. ஹரி! ஹரி!! என்று காதைக் கைகளால் பொத்தினர். தனது இஷ்ட தேவதையை நிந்தித்த மஹா பலியிடம் மட்டில்லா சினங் கொண்டார். விரைவில் அவனை விட்டு ராஜ்யமகலுமென சபித்தார். தேவநிந்தை செய்யும் அவன் முகத்தில் விழிக்காது வெளியிற் புறப்பட்டார். பலி இதைக்கண்டு வருந்தி பிரஹ்லாதரைப் பணிந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். அவரும் வினையின் செயல்படி நடக்கும், எந்த பரம புருஷன் உனது கர்வத்தை அடக்க அவதரிக்கிறரோ அவரையே சரணமடை. ராஜ்யத்தில் ஆசை வைக்காதே என்று கூறி தீர்த்த யாத்ரைக்குச் சென்றார்.

இதனிடையில் பத்து மாதங்கள் சென்றன. அதிதி அற்புதமான வாமநரைப் பெற்றாள். அச்சமயம் அமரர் ஆநந்தமடைந்தனர். தேவ துந்துபி முழங்கிற்று. மந்த மாருதம் வீசியது. ஸாதுக்களுடைய உள்ளம் தெளிந்தது. ஜயஜய என்ற சப்தமும் புஷ்பமாரியும் தோன்றிற்று. தந்தை கச்யபர் மைந்தனுக்கு ஜாத கர்மம் முதலியவைகளைச் செய்தார். உடனே குழந்தைக்கு உபநயநம் செய்விக்கப்பட்டது. பிரம்மா மான்தோலை அளித்தார். பிரஹஸ்பதி யக்ஞோப வீதத்தையும் மரீசி தண்டத்தையும், வஸிஷ்டர் கமண்டலுவையும், ஆங்கிரஸர் தர்ப்பத்தையும், புலஹர் ஆஸனத்தையும் அளித்தார். மற்றும் பலர் பல பொருள்களையும் அளித்தனர். வேத சாஸ்திரங்கள் வடிவுடன் தோன்றி வாமநரைப் போற்றின. ஸகல முனிகணங்களுடன் ஸர்வேச்வரன்

பலியினது யாகசாலைக்குக் கிளம்பினார். பிரஹஸ்பதி வழிகாட்டிக்கொண்டு முன்னே சென்றார்.

அச்சமயம் பூமி அசைய, காரணம் யாதென பலி சுக்ரரை வினவினான். அவர் வாமனர் வருவதைக்கூறினார். அதைக்கேட்ட அஸுர ராஜன் தேவதேவன் தன்னிடம் வருவதைக்கண்டு பெருமை அடைந்தான். சுக்ரர், தேவர்களை நீக்கி செய்யும் வேள்வி வாமனருக்குப் பிரியமானதல்ல; இந்திரனுக்கு தேவராஜ்யத்தை அளிக்கவே அவர் இங்கு வருகிறார். ஆதலின் அவரைப் பூஜித்து நல்வார்த்தை கூறி அனுப்ப வேண்டுமேயல்லாது அவர் விரும்பும் அற்பப்பொருளையும் அளிப்பதாக பிரதிக்ஞை செய்யலாகாதென்றார். பலி, ஸாமான்யமானவர் விரும்பியதையே இல்லையென்று கூறுவது என் வழக்கமல்ல. விரதம், உபவாஸம், யக்ஞம் முதலியவைகளால் எவனைக் காண தவஸிகள் தவம் கிடக்கின்றனரோ? எவன் எல்லா ஜீவராசிகளுக்கும் அன்றன்று படி அளக்கிறானோ? அத்தகைய புருஷோத்தமன் என்னை யாசித்தால் இல்லையெனத்தகுமோ? உயிரையேனும் அளிப்பேன், இல்லையென்று சொல்லேன். அவர் கோரிய பொருளை அளிப்பதைவிட யான் விரும்பும் பொருள் உலகில் ஒன்றுமில்லை. உத்தமன், தான் அனுபவிப்பதைவிட நூறு மடங்கு தானம் செய்வதில் ஸந்தோஷமெய்துவான்.

என்னிடம் அருள்கொண்டு அவர் தானம் பெறின் யான் சிறந்தவனே! அல்லது சினம் கொண்டு என்னைக் கொல்வாராகில் அதுவும் உத்தமமே! என்று கூறினான். இதனிடையில் பகவான் யக்ஞ சாலையில் நுழைந்தார். வஸிஷ்டர் வாமதேவர் முதலிய மாமுனிவர் எழுந்து, வருக! வருக! என்று நல்வரவு கூறினர். அனைவரும் எழுந்து நின்று ஈசனைப் போற்றினர். அவரைக்கண்டவுடன் பலியும் மெய் மறந்து நின்றான். அர்க்யபாத்யம் அளித்து, ஆஸனத்தில் அமர்த்தி அவரடி பணிந்தான். ஐயனே! ரத்னராசிகளோ? நால்வகைச் சேனையோ? ஆபரணங்களோ? ஸகல ராஜ்யமுமோ? தங்களுக்களிக்க தகாதது ஒன்றுமில்லை. தங்களுக்கு யாது வேண்டும்? என்னிடமிருந்து எதையேனும் ஏற்று என்னைத் தன்யனாக்கவேண்டும் என்றான். அவர் அக்நி பூஜைக்குத் தன்

காலால் மூன்றடி மண் கொடு என்றூர். இதைக்கேட்டு நகைத்து பலி, வேறு ஏதேனும் அபரிமிதமான பொருளைக் கேட்கலாகாதோ என்றான். வேண்டியவரிடம் அதை அளி. எனக்கு வேண்டிய இதைக்கொடு போதும் என்றூர். இதைக்கேட்ட பலி அவர் விரும்பியபடியே தானம் செய்து அவரது கையில் தீர்த்தத்தை விட்டான். தத்க்ஷணமே பகவான் ஸர்வ தேவ மயமான சரீரத்தைக் காண்பித்தார்.

சந்திர ஸூர்யர்களே அவரது கண்கள். தியுலோகம் தலை. பூமி பாதம். பிசாசங்கள் கால் விரல்கள். விச்வே தேவர்கள் முழங்கால். ஸூர்யனது கிரணங்கள் கேசங்கள். அச்வினிகள் காதுகள். ஸரஸ்வதி நாக்கு. மற்றும்பல தேவர்கள் மற்ற அவயவங்களுமானூர்கள். இத்தகைய உடல் பெற்று, பகவான் முவ்வுலகையும் அளந்து தேவேந்திரனுக்கு அளித்தார். பலியை, நீ ஸுதலமெனும் பாதாளம் செல்வாயாக. எனக்கு அளித்த தாந மஹிமையால் ஒரு கல்பம் வரை உனது ஆயுள் நீண்டிருக்கும். ஸாவர்ணிக மன்வந்திரத்தில் நீ இந்திரனுவாய். தேவ பிராம்மணரிடம் பகைமை கொள்ளாதவரை போகத்தைப் பெறுவாய் என்று கூறினூர். பலி தான் உணவுக்கு என் செய்வதென்று வினவினூன். பகவான், விதிப்படி செய்யாத தானமும், சிரோத்திரியனில்லா சிராத்தமும், சிரத்தையில்லா ஹோமமும், தக்ஷிணையில்லா யாகமும், தீர்த்தமில்லா பூஜையும், ஆஜ்யமில்லா ஹோமமும், உனக்கு உணவாகும் என்றூர். அன்றியும் ஆடி மாதம் சுக்லபக்ஷம் ஏகாதசி உபவாஸமிருந்து துவாதசி அன்று வாமனரைப் பூஜிப்போர் வைகுண்டம் செல்வர் என்று கூறி மறைந்தார். இச்சரிதத்தைப் படிப்பவரது பாபமகலும்.

தீர்த்த மஹிமை. மார்க்கண்டேயர் துவைதவன ஸரஸ்வதி நதியில் புனலாடி அவளைத்துதித்தார். விஷ்ணுவின் நாவிலிருந்து பெருகிய ஸரஸ்வதி, அவர் அழைக்கும் இடமெல்லாம் தான் வருவதாகக் கூறினூள். அங்ஙனமே அவர் அவளைக் குருக்ஷேத்திரம் அழைத்துச் சென்றூர். அவளுடைய அருளால் பிரம்மஸரஸ், நாகஹ்ரதம், முதலிய ஆயிரம் தீர்த்தங்கள் குருக்ஷேத்திரத்தில் உண்டா

யின. அத்தகைய குருக்ஷேத்ரத்திற்குப் போவதாக நினைப்பவருக்கே நற்கதியுண்டாகும். ஆங்கு வஸிப்போர் பிரஹ்மஞானத்தைப் பெறுவர். அதனருகே **காம்யக வனம்**, அதிதி வனம், பலகீ வனம், ஸௌர்யவனம், மது வனம், புண்யசீத வனம் என்ற புண்ய வனங்கள் இருக்கின்றன. ஆங்கு ஸரஸ்வதீ, வைதரணீ, கங்கா, மந்தாகினீ, மதுச்ரவா, அம்லு, கௌசிகீ, என்ற ஏழு நதிகள் உள. புதிய பிரவாஹம் வரும்பொழுது மூன்று நாள் தீண்டத்தகாத ரஜஸ்வலாதோஷம் இவைகளுக்குக் கிடையாது.

அவகீர்ண தீர்த்தம். திருதராஷ்டிரனிடம் மஹரிஷிகள் யஜ்ஞ தக்ஷிணையை யாசித்தார்கள். அரசன் அவர்களை இகழ்ந்து பேசினன். தால்ப்யபகர் என்ற ரிஷி கோபங்கொண்டார். பிராம்மண அவமானம் செய்த மன்னனைச் சிக்ஷிக்கக் கருதினர். அருகிலிருந்த தீர்த்தத்தில் தனது சரீரத்திலுள்ள மாம்ஸத்தை அறுத்து ஹோமம் செய்தார். திருதராஷ்டிரனது நாடும் நகரமும் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்தது. தால்ப்யரது தாட்களில் விழுந்து தனது குற்றத்தை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான். அந்தணர்கள் அபேக்ஷித்ததைவிட அதிகமான பொருளை அளித்தான். தால்ப்யர் அரசனை க்ஷமித்து ஸாதுக்களை அவமதியாமல் இருக்கும்படி உபதேசித்தார். அவர் ஹோமம் செய்த தீர்த்தத்தில் அரசனை ஸ்நாநம் செய்யும்படி கூறினர். அதே அவகீர்ண என அழைக்கப்படுகிறது.

வஸிஷ்டோத்வாஹ தீர்த்தம். வஸிஷ்டரது ஆச்ரமத்திற்கருகே இருந்து விச்வாமித்ரர் பரமசிவனைப் பூஜித்துவந்தார். வஸிஷ்டர் தன்னருகே ஸரஸ்வதி நதியை ஓடும்படி செய்தார். வஸிஷ்டரது பெருமையைக்கண்டு விச்வாமித்ரருக்குப் பொறாமை உண்டாயிற்று. அவரது தவத்தால் தன் தபஸிற்குக் குறைவு வருகிறதென்று எண்ணினர். ஸரஸ்வதி நதியை அழைத்து வஸிஷ்டரை பிரவாஹத்தின் மூலமாக இங்கு கொண்டு வரும்படி கூறினர். இங்கே வரும் வஸிஷ்டரை விச்வாமித்ரர் ஹிம்ஸித்தால் அப்பாபம் தன்னைச் சாருமோ எனக் கருதி தயங்கினள். கோபங்கொண்டு விச்வாமித்ரர் வஸிஷ்டரை விரைவாகக்கொண்டுவா எனக் கட்டளையிட்டார். ஸரஸ்வதி நதி வஸிஷ்டரிடம் சென்று நடந்ததை அறிவித்தாள்.

வஸிஷ்டர் அஞ்சாதே! என்னை அழைத்துச் செல்! என்று கூற அங்ஙனமே அவள் வஸிஷ்டரைப் பிரவாஹத்தில் அடித்துச் சென்றாள். அவரைக்கண்டவுடன் கொல்வதற்கு ஆயுதந்தேடினார். அவரைக்காக்க ஸரஸ்வதியின் பிரவாஹம் பெருகிற்று. அதில் வஸிஷ்டர் சென்ற விடம் தெரியாமல் போய்விட்டது.

கோபங்கொண்ட விச்வாமித்ரர், ஸரஸ்வதியை ரக்த பிரவாஹமாக ஓடும்படி சபித்தார். அதைக் கண்டு ஸந்தோஷம் கொண்ட பூத, பிரேத, பிசாசங்களும், ராக்ஷஸர்களும், அதன் அருகே சென்று ரக்தபானம் செய்து அங்கேயே வஸித்தனர். தீர்த்த யாத்ரைக்கு வந்த மஹரிஷிகள் ஸரஸ்வதியின் ரக்தத்தைக் கண்டு திடுக்கிட்டனர். தங்களது தபோ மஹிமையால் அருணை நதியை ஆங்கு அழைத்தனர். அதன் பிரவாஹத்தால் ஸரஸ்வதியின் ரக்த ஜலம் அகன்று பரிசுத்தமானது. அரக்கரும் பூத பிரேதங்களும் முனிவர்களை எங்களது பசிக்கு யாது வழியென வினவினர். பிராம்மண துவேஷத்தினாலும் ஆசார்யனை அவமதித்ததாலும், தாய் தந்தைகளை துவேஷித்ததாலும், நாங்கள் ராக்ஷஸர்களாகவும் பேய்களாகவும் பிறந்தோம். எங்களுக்கு இதே உணவு. கருணைக்கடலான நீங்கள் எங்களுக்கேற்ற வேறு உணவை அளிக்கவேண்டும் என்றனர். தவஸிகள் புழுவும் மயிருமுள்ள அன்னம், ஆசார மற்றவன் உண்ட மிகுதி, முகர்ந்துப் பார்த்ததும், மூச்சுக் காற்று கலந்தது மான அன்னம் உங்களைச்சார்ந்தது என்று கூறினர். அன்றியும் அருணா ஸரஸ்வதி ஸங்கமத்தில் அவ்வரக்கர்களையும் மற்றவர்களையும் ஸ்நாநம் செய்வித்து அவர்களுக்கு நற்கதி அளித்தனர். அத்தீர்த்தம் **வஸிஷ்டோத்வாஹ** மெனப்படும்.

ஆத்மநதி:— உலகில் தோன்றிய ஏனைய நதிகளைப் போல் அல்லாது ஒவ்வொரு மனிதனது உடலிலும் பரம பாவனமான ஒரு நதி உளது. அது ஆத்மா எனப்படும். அடக்கமென்பது அதில் புண்ய கட்டமாம். சீலம் ஸத்தியம் என்பவை ஜலமாம். இதில் மூழ்குவோர் பாபமகலும். சித்தம் சுத்தமாகும். சுத்தமான மநதை ஆத்மாவிடம் அர்ப்பணம் செய்வதைவிட வேறு புண்ய ஸ்நாநம்

கிடையாது. வெளியிலுள்ள தீர்த்தங்களால் சரீர சுத்தி ஏற்படுவதே அல்லாது மனம் பாவனமாவதில்லை. ஸாதுக்களுக்களுக்கு ஸத்தியம், ஸமரஸம், சீலம், கபடமில்லாமை, விஷயத்திலிருந்து மனதைத் திருப்புவது ஆகிய இவைகளைவிட வேறு சிறந்த தானமில்லை.

லிங்க பூஜை.

எண்பத்தெட்டாயிரம் வாலகில்யமஹரிஷிகள் ஆயிரமாண்டு தவம் புரிந்தனர். அவர்களது உடல் ஒட்டி மாம்ஸம் உலர்ந்து எலும்பில் உயிர் ஒட்டிக்கொண்டிருந்தது. இதைக் கண்ட கருணாமூர்த்தியான உமாதேவி பரமசிவனைப் பணிந்து, பூதநாத! இச் சிறுவர்களுக்கு ஏன் இன்னமும் தயை புரியவில்லை என்றாள். அவர்களுக்குக் காமக்ரோதம் அகலவில்லை. ஆதலின் அருள்பெற அர்ஹரில்லை என்று சிவன் கூறினார். அன்னை உடனே அருளும்படி பகவானை வேண்ட ஸ்வாமி; திகம்பர ஸன்யாஸியாக வேடம் பூண்டு தாருகாவநத்தில் தவம் புரியும் அம்மஹரிஷிகளிடம் சென்று பிக்ஷை கேட்டார். அவர்கள் இவருக்கு ஒன்றும் கொடாதிருந்தனர். அவர்களது மனைவிகள் கந்த மூலங்களைக் கைலாஸ நாதனுக்கு அளித்து அவரது அழகிய ரூபத்திலீடுபட்டு மெய்மறந்து அவர் பின் சென்றனர். இதைக்கண்டு முனிவர் கோபங் கொண்டனர். அம்பிகாபதியின் ஓரங்கமறுந்து கீழே விழக்கடவதென சபித்தனர். அங்ஙனமே அங்கம் விழுந்தது. சராசர வஸ்துக்கள் பிரமித்து நிற்க பகவான் தேவியினிடம் சென்று காமக்ரோதமகலாத வாலகில்யர்களுக்கு எங்ஙனம் அருள் புரிவதென்று கேட்டார். தேவி வாய்திறவாது நின்றாள். முனிவர் தம் பத்னிகளது பக்தியைக்கண்டு வந்தவர் பரமசிவம் என்றுணர்ந்து வருந்தி பிரும்மனைச் சரணமடைந்தனர். அவர் சிவனைச் சரணமடையுங்கள் என்றார். தவஸிகள் பரமாத்மாவைப் பிரார்த்திக்க அவர் பிரத்யக்ஷமாகி சிவலிங்க பூஜையை உபதேசித்து மறைந்தார்.

தாருகாவநத்திலுள்ள சிவாங்கத்தை ஸ்தாணு ஆச்ரமத்தில் பிரதிஷ்டை செய்ய மஹரிஷிகள் முயன்றனர். அது அசைக்க முடியாமற் போகவே பிரும்மனைச் சரணம் அடைந்தனர். பிரும்மா தேவர்களுடன் கைலாஸஞ்

சென்று கைலாஸவாஸியைக் காணுமல் தியாகம்* செய்தார். அவர் யானை உருவெடுத்து ஸரஸிலிருக்கக் கண்டு அங்கு சென்று துதித்தார். அங்கும் பகவான் பிரத்யக்ஷமாகவில்லை. அம்பிகையைக் கண்டு பணிந்தனர். அன்னை அன்புடன் ஸுரருக்கு அமிருதத்தை அளிக்க, உடனே யானை ரூபமான சிவன் சிவலிங்கமாக நின்றார். அதை மனிதர் எடுத்துக்கொள்வர் என தேவரஞ்சினர். பிரும்மா இந்திரனை அழைத்து மருத்துக்களைக்கொண்டு சிவலிங்கத்தின் மேல் புழுதியை வர்ஷிக்கும்படி கூறினர். அங்கு ஸந்நிஹிதம் என்ற தீர்த்தமும் ஓர் வட விருக்ஷமும் உளது. லிங்கத்தின்மேல் படிந்த புழுதியும் ஓர் லிங்கமாக மாறியது. அதை முனிவர் எடுத்துச் செல்ல மறுமுறையும் மஹேந்திரன் ஏழுநாள் புழுதியைக்கொண்டு லிங்கத்தை மூடினன். அதையும் முனிவரெடுக்க இங்ஙனம் ஏழு லிங்கங்கள் உதித்தன. அதனருகே ராவணன் கோகர்ணத்தையும் மேகநாதன் ஸித்திதத்தையும் கும்பகர்ணன் விபீஷணன் கரதூஷணன் முதலியவர்கள் மற்ற லிங்கங்களையும் பிரதிஷ்டை செய்து பூஜித்தனர்.

ஸ்தாணு தீர்த்தம். மநுவினது முகத்திலிருந்து க்ஷுவதன் பிறந்தான். அவனது மனைவி பயை என்ற யமதர்மராஜனது புதல்வி. அதனல் இவ்விருவர்களுக்கும் வேநன் என்ற ஓர் துஷ்டபுத்ரன் ஜனித்தான். இவன் செய்யும் அநீதியைக் கண்டு மநம் நொந்து க்ஷுவதன் வநஞ்சென்றான். வேநன் அரசு புரியும்போது எவரும் யக்ஞம் தாநம் தவம் செய்யக்கூடாது. தன்னையே தைவமாகப் பூஜிக்க வேண்டுமென்று உத்திரவிட்டான். மஹரிஷிகள் நற்புத்தி புகட்ட, அதை ஏற்காது அவர்களை நிந்தித்தான். சாபத்தால் வேநனைக் கொன்று அவனது இடது கையைக் கடைந்தனர். அவனுடைய பாபத்தால் பயங்கரமாக ஓர் மனிதன் உண்டாக, அவனை நிஷாதனெனும் வேடனுக்கி வலது கையைக் கடைந்தனர். அதிலிருந்து ஸகல ஜனங்களுக்கும் ஹிதனுக ஒரு புதல்வன் உண்டானன். அவன் தந்தை மிக பாபியாயிருந்ததால் எச்சரீரத்தை எடுத்துத் துன்புறுகிருரோ என வருந்தினன். தற்செயலாக நாரதமுனி வந்து மிலேச்ச ஜாதியில் குஷ்டரோகியாக வேநன் பிறந்திருக்கிருனென்ருர். ராஜனும் அங்கு குஷ்டரோகியான மிலேச்சனைக் கண்டு தந்தை

என்றுணர்ந்து வருந்தினன். ஸ்தாணு தீர்த்தத்தில் அவருக்கு ஸ்நாநம் செய்துவைக்க ஆரம்பித்தான். ஆகாசத்தில் வேத நிந்தை செய்த மஹாபாபியான இவனைக் கொண்டு தீர்த்தத்தைக் கெடுக்காதே! என்று ஓர் சப்தங் கிளம்பியது. உடனே ராஜன் கண்ணீர் விட்டு என் தந்தையின் பாபமகல இங்கு அழைத்து வந்தேன். இங்கும் ஸ்நாநம் செய்யக் கூடாதெனில் அவர்கதியாது? என்று கதறினன். இதைக்கேட்ட தேவர்கள், ராஜனே! இத்தீர்த்தத்தில் நீ ஸ்நாநம் செய்து அவனுக்குக் கரையில் அபிஷேகம் செய்துவை ஸகல பாபமுமகன்றபின் அவன் நற்கதி பெறுவானென்று கூறினர்.

வேநன் அந்தகாசுரனானன்.

யம ஸபையிலிருந்து தேவர் ஸொத்தைக் காக்கும் ஸாரமேயனென்ற தாஸன், அஸுரர் அதைக்கொண்டு போகும் போது பேசாமலிருந்தான். அதைக்கண்டு சினங்கொண்ட யமன் நாயாகப் பிறக்கும்படி சபித்தார். அந்நாய் தாஹத்தால் வாடி ஸ்தாணு தீர்த்தத்தைப் பருகி அதன் கரையிலுள்ள மடத்தில் ஏதேனும் உணவு கிடைக்காதா என்று நுழைந்தது. வேநன் அதைத் தொட்டான். அது பயந்து ஸ்தாணு தீர்த்தத்தில் விழுந்து உடலை உதறியது. அதன் மேலிருந்த ஜலம் பட்டவுடன் வேநனுக்கு திவ்ய தேஹமுண்டானது. கைலாஸநாதனைப் பணிந்து துதித்தான். பகவான் நீ அடுத்தபிறவியில் ஹிரண்யாக்ஷனுக்கு அந்தகன் எனும் புதல்வனாகப் பிறந்து பூர்வ துர்வாஸனையால் அம்பிகையைக்கண்டு காமங்கொள்வாய். யான் சூலத்தால் உன்னைக்குத்திக்கொன்று பிரிங்கிரிடன் என்ற சிவகணமாக்கி என்னருகே நீ வசிக்கும்படி செய்வேன்! என்று அருள் புரிந்தார். வேநன் தனக்குப் பேருபகாரம் செய்த ஸாரமேயனுக்கும் ஸ்வர்க்கத்தை அளிக்கும்படி வேண்டினன். அங்ஙனமே அளித்து கைலாஸஞ்சென்றார். வேநன் தன் பொருட்டு ஸுகத்தை இழந்து தொண்டு புரியும் உத்தம புதல்வனை ஆசீர்வதித்து விமானமேறிச் சென்றான். ராஜனும் பல யாகங்களைச் செய்து குருக்ஷேத்திரம் சென்று தவத்தால் அழியாப் பதவி பெற்றான்.

உலகைப் படைக்கக் கருதிய நான்முகன் சில ஜீவ ராசிகளைப் படைத்து இன்னும் எதைப் படைப்பது என யோசித்திருந்தார். அவருடைய சரீரத்திலிருந்து ஓர் அழகிய கன்யகை தோன்ற, அவளிடம் காமனை கொண்டார். அவருடைய ஐந்தாவது தலை வெடித்தது. உடனே அவர் சிவனை நாடித் தவம் புரிந்தார். பகவான் "யான் வராஹ கல்பத்தில் உனது ஐந்தாம் சிரத்தை அறுத்தே ஞதலால் ஒவ்வொரு கல்பத்திலும் எக்காரணம் பற்றியாவது உனது ஐந்தாம் தலை அழியும்" என்றுகூறி மறைந்தார். பிறகு பிரும்மா குருக்ஷேத்ரத்திலும் மற்ற விடங்களிலும் லிங்க பிரதிஷ்டை செய்து பூஜித்தார்.

பார்வதீ பரிணயம்.

ஸகல தேவர்களும் குருவுடன் கூடி குருக்ஷேத்ரத்தில் புனலாடி சிராத்தம் செய்தனர். பித்ருக்களும் தேவ கார்யத்தை நாடி தங்கள் பெண் மேனையை ஹிமாலயத்திற் களித்தார்கள். மேனை ராகினீ குடிலா காலி என்ற மூன்று பெண்களையும் ஸுநாபனென்ற புதல்வனையும் பெற்ருள். அப்பெண்கள் ஆறு ஆண்டு ஆவதற்குள்ளாக தவம் செய்யச் சென்றனர். தேவர்கள் குடிலை என்பவளை பிரஹ்மலோகத்திற்கழைத்துச் சென்றனர். நான்முகன் இவளைப்பார்த்து இவளால் சிவ தேஜஸ்ஸை வஹிக்க முடியாதென்ருர். குடிலை கோபங்கொண்டு, நாராயணனை நாடித் தவம் புரிந்து சிவனது சக்தியை யான் வஹிக்கும் பலம் பெற்று அவர் தலை வணங்கும்படி செய்கிறேன் என்ருள். சதுர்முகன், பெண்ணே! என் சொல்லை மீறியதால் ஜலமாவாய் என்று சபித்தார். அவள் கோபித்து பிரும்மலோகத்தைத் தனது பிரவாஹத்தால் நாசம் செய்யக்கருதினள். நான்கு வேதங்களாலும் நான்முகன் அவளைக் கட்டி விட்டார். தேவர்கள் ராகினீ என்ற இரண்டாவது கன்யகையை அழைத்துவர இவளால் சிவ சக்தியைப் பரிக்க இயலாதென்று பிரும்மா கூறினர். ராகினீ மஹிஷனைக் கொல்லும் மாதேவன் புதல்வனை வஹிக்கத்தக்க சக்தி தவத்தால் பெறுவதாகக் கூறினள். தன் சொல்லை மீறிய அவளையும் ஸந்த்யையாகும்படி சபித்தார். அவள் கிருத்திகா நக்ஷத்ரமாகி தவம் புரிந்தாள். மூன்ருவது பெண்ணான காலி

கைலாஸநாதனைக் கணவனாகப் பெற கடுந்தவம் புரிந்தாள். அவளது தாய் உ-பெண்ணே! மா-வேண்டாம்! தபஸை நிறுத்து என்று அவளை அழைக்க அன்று முதல் தேவிக்கு உமா என்றோர் பெயர் வழங்கியது. தபஸை நிறுத்தி தேவியும் தன் வீடு வந்தாள். அம்பிகையைப் பிரும்ம லோகமழைத்துச் செல்ல தேவர் அவளது காந்தியால் கிட்டே நெருங்க முடியாமல் பிரும்மனைச் சரணமடைந்தனர். அவர் அம்பிகையினிடம் தாரகாதிகளைக் கொல்லும் அரனம்சம் ஜனிக்குமென்று கூறி தேவர்களை அனுப்பினர். தற்செயலாக சந்திரசூடன் ஹிமாலயம் வர கிரிராஜன் வரைப் பணிந்து இம்மலையிலேயே வஸிக்கும்படி வேண்டினர். அங்ஙனமே மாதேவன் வஸிக்கும் போது பார்வதி அவரை நமஸ்கரித்தாள். உடனே அவர் கணத்தோடு மறைந்து விட்டார்.

தேவி மிக்க மநம் நொந்து சிவனைப்போல் ஓர் விக்ரஹம் செய்து அவரை நாடி கடுமையாக தவம் புரிந்தாள். பகவான் பிரும்மசாரி வேடம்பூண்டு அவளை ஏன் தவம் புரிகிறாய் என்றார். ஸோம பிரபை எனும் ஸகி உண்மையைக்கூற பகவான், பிக்ஷுகனான சிவனோ உனக்கேற்ற கணவன்? என்றார். தேவி சிவநிந்தையைக் கேட்க மநமில்லாது எழுந்து செல்ல பகவான் பிரத்யக்ஷமாகி நீ அர்ச்சித்த எனது விக்ரஹம் **பத்ரேசம்** எனப்படும். உன்னை மணந்து கொள்கிறேன் என்று கூறி மறைந்தார். அவர் கைலாஸகிரி சென்று ஸப்தரிஷிகளை மநதால் நினைக்க அவர்கள் விரைவாக வந்து வணங்கி யாது ஆக்ஞை? என்றனர். சம்புவும் அவர்களை வரவேற்று ஆசிர்வதித்து ஹிமாலயனிடம் உமையை அளிக்கும்படி கேட்க ஆணையிட்டார். கச்யபர் அத்ரி வஸிஷ்டர் விச்வாமித்ரர் கௌதமர் பரத்வாஜர் ஆங்கிரஸர் என்ற மஹரிஷிகளும் வஸிஷ்ட பத்நியான அருந்ததியுடன் ஹிமாலயஞ் சென்றனர். ஹிமயகிரி அவர்களைத் தக்கபடி பூஜித்து ஆஸநத்திலமர்த்தி, வந்த விஷயத்தை அறிந்தான். உடனே ஸகல பர்வதங்களையு மழைத்து உமையைச் சிவனுக்கு அளிக்கலாமா? என யோசித்தான். உதயன் ஹேமகூடன் ரம்யகன் முதலியவைகள் ஏக மநதாக பார்வதியைப் பரமாத்மாவிற்களிக்க இசைந்தனர். பர்வதராஜன் மனை

வியான மேனையை அழைத்து அவளைக் கேட்டான். அவளுமதை ஆமோதிக்க விவாஹ திநத்தைக் குறிப்பிட்டு ரிஷிகள் சங்கரரிடம் இதை அறிவித்தனர்.

நந்தியினது ஆணையின்படி மஹாவிஷ்ணு முதலிய ஸகல தேவர்களும் மஹாதேவன் வஸிக்கும் மந்திர மலைக்கு வந்து சேர்ந்தனர். அதிதி ஸுரபி ஸுரமை என்பவர்கள் பரமாத்மாவிற்கு விவாஹத்திற் கேற்ற அலங்காரங்களைச் செய்தனர். விருஷபாரூடராகச் செல்லும் ஸுந்தரேசனுக்கு இருபுறத்திலும் விஷ்ணுவும் பிரும்மாவும் செல்ல ஐராவதத்தின் மீதிருந்து இந்திரன் பின்னின்று வெண்குடை பிடிக்க கங்கையும் யமுனையும் சாமரம் வீச கந்தர்வர் பாட கிந்நரர் வாத்யம் வாசிக்க அப்ஸரஸுகள் ஆட பகவான் புறப்பட்டார். பதினொரு கோடி ருத்ரரும் பனிரண்டுகோடி ஆதித்யரும் எட்டுகோடி வஸுக்களும் அறுபத்தேழுகோடி கணங்களும் இருபத்தி நான்கு சிவகணங்களும் பகவானுடன் கூட கிளம்பினர். ஹிமவான் ஸகல தேவர்களையும் மாதேவனோடு நன்கு வரவேற்று பூஜித்து ரத்நவேதியில் பார்வதியை அமர்த்தி வரனை அர்ச்சித்து, புலகன் பேத்தியும் என் கன்யகையும் பித்ருக்களின் தௌஹித்ரியும் மேனையின் பெண்ணுமான பார்வதியைத் தமக்குக் கன்யாதாநம் செய்கிறேன். அவளை ஏற்று அருள்புரியவேண்டும் என்றார்.

மஹாதேவர் தனக்குத் தாயுமில்லை தந்தையுமில்லை என்று கூறி தேவியை ஏற்றுக்கொண்டார். பிரும்மா ஸகல வைதிக கார்யங்களையும் செய்துவைத்தார். பார்வதி தோழியும் சிவனது பக்தையுமான **மாலினீ** சிவ பாதார விந்தங்களைப் பிடித்துக்கொண்டு தேவிக்குப் பூர்ண ஸம்பத்தை அளிக்க பிரார்த்தித்தாள். **பகவான் உமாதேவியைச் சங்க சக்ர கதாபாணியான மஹாவிஷ்ணுவாகச் செய்து போதுமா?** என்றார். அதைக்கண்டு எல்லோரும் ஆநந்தித்தனர். பகவானது மோஹிக்கும்படியான உருவைக்கண்டு சதுர்முகனது வீர்யம் மணலில் விழுந்தது. அதை அவர் ஒருவருமறியாமல் மணலில் மறைக்க ஆரம்பித்தார். கைலாஸநாதன், அதிலிருந்து எண்பத்தெட்டாயிரம் வாலகில்ய ரிஷிகள் ஜநிக்கப்போகின்றனர். அதைத் தடுக்காதே என்று கூறினார். அங்ஙனமே மஹரிஷிகள்

உண்டாகி கௌரீ கல்யாண வைபவத்தைக் கண்டு ஸந்தோஷித்தனர். உமாபதி விருஷபத்தின்மீதேறி கைலாஸஞ் சென்றார்.

விநாயகர் அவதாரம்.

சிவன் விச்வகர்மாவை மனதால் நினைத்தார். உடனே அவன் ஓடிவந்து வணங்கி யாது கார்யமென பிரார்த்தித்தான். உமையுடன் தான் வஸிப்பதற்கோர் வீடு நிர்மாணம் செய்யும்படி ஆக்ஞையிட்டார். நாற்பத்தாறு யோஜனை தூரம் விசாலமுள்ளதான ரத்னங்களாலாகிய அழகிய அரண்மனையைப் படைத்து மயன் பகவானுக்களித்தான். ஆங்கு ஆதிதம்பதிகள் வைதிக கர்மானுஷ்டானங்களைச் செய்து யௌவன ஸுகத்தை அனுபவித்தனர். ஒரு ஸமயம் அம்பிகாபதி அன்னையைப் பார்த்து கறுப்பாயிருக்கிறாயே என்றார். தேவி கோபங்கொண்டு ஹிமய சிகரத்திலமர்ந்து ஸகிகளை நினைத்தாள். உடனே ஜயா விஜயா ஜயந்தீ அபராஜிதா என்பவர்கள் அம்பிகையின் அருகில்வந்து தேவிக்குப் பணிவிடை செய்தனர். பார்வதி நூறாண்டு ஒரு காலால் நின்று கடுந்தவம் செய்தாள். ஓர் புலி தேவி கீழே விழுந்தால் அவளைத் தாங்கிப் பிடிப்பதற்காக அவளருகே ஏகாக்ரசித்தமாக நூறாண்டு நின்றுகொண்டிருந்தது. பிரும்மா தேவியினருகே வந்து யாது வரம் வேண்டுமென்றார். அம்பிகை முதலில் புலிக்கு வரமளியுமென்றாள். அங்ஙனமே அவர் அதைக் கணங்களுக்குப் பதியாகவும் பக்தனாகவும் செய்து தேவி கோரியபடி ஸ்வர்ணவர்ணமான சரீரத்தை அம்பிகைக்களித்தார். தேவியினது கறுப்பான உடல் கௌசிகீ என்ற பெயரோடு தனியாகக் கிளம்பியது.

அதைத் தேவேந்திரன் வணங்கி தங்களுக்கு ஸஹாயமாக விந்தியாசலத்தில் வஸிக்கும்படி பிரார்த்தித்தான். அங்ஙனமே தேவி உத்தரவிட கௌசிகி காத்யாயனி விந்தியாசல நிவாஸனீ என்று அதற்குப் பல நாமங்கள் உண்டாயின. பின்னர் பார்வதீ கௌரீ என்ற பெயருடன் சிவனிடம் சென்று ஆயிரமாண்டு ரமித்திருந்தனர். அதனால் பதினாலு லோகமும் நடுங்கிற்று. தேவர்கள் சதுர்முகனைச் சரணமடைந்தனர். தேவியின் வயிற்றில் சிவ அம்சத்தால் குழந்தை ஜநித்தால் தேவேந்திரப் பட்டத்தை அது அபஹரிக்கும் என்றார் நான்முகன். ஆதலால்

ஸகல தேவர்களும் ஒன்றுகூடி கைலாஸம் சென்றனர். வாயிற்படியிலுள்ள நந்தியைக் கண்டு அஞ்சி அக்நியை உள்ளே அனுப்பினர். அவர் ஹம்ஸவேடம் பூண்டு உள்ளே புகுந்து மஹாதேவரது தலையினருகே நின்று தேவர்கள் வாயிற்படியில் நிற்கின்றனர் என்றார். அதைக் கேட்ட கங்காதரன் அக்நியுடன் வெளியில் வந்து தேவரை நோக்கி யார் எனது சக்தியை வஹிக்கச் சக்தியுள்ளவர்? என்றார். அக்நி, தான் வஹிப்பதாகக் கூறினார். பகவான் அதை அக்நியினிடம் விட்டுத் தேவியிடம் நடந்ததைக் கூறினார். அம்பிகை தனக்குக் கர்ப்பமில்லாமல் செய்த தேவருக்கும் குழந்தைகள் பிறக்காதென சாபமளித்தாள்.

உடனே தேவி ஸ்நாநம் செய்ய மாலிநீ என்ற தோழியை அழைத்தாள் அவள் வாஸனைத் தைலத்தைக் கொண்டு தேவியின் தேஹத்தைப் பிடித்தாள். உமை தன் சரீரத்திலுள்ள வாஸனைப் பொடிகளை நாலுகையும் பெருத்த வயிறும் யானைமுகமுமுள்ள ஒரு விக்ரஹமாகச் செய்தாள் என்று கேட்டு உமைக்குச் சிசு பிறக்கப்போவதாக பகவான் கூறினார். அன்னையும் சிசு ஜநிக்கவேண்டுமென்ற ஆசையோடு ஸ்நாநம் செய்துவந்தாள். அம்பிகை உட்கார்ந்த இடத்தில் பரமசிவனும் அமர்ந்து எண்ணெய் தேய்த்துக்கொண்டே அம்பிகையின் தேஹப் பொடியால் செய்த உருவைத் தொட்டார். உடனே அது கணபதியாக வந்தது. அது நாயகனின்றி பிறந்ததால் விநாயகரெனப் பெயரிட்டு அவருக்கு ஸஹாயமாக பல கணங்களையும் படைத்துத் தேவியினிடம் உன் குழந்தையைப் பாரென்று பகவான் கூறினார். உடனே தேவி அன்புடன் குழந்தையைக் கட்டி முத்தமிட்டு உன்னை அர்ச்சிப்பவரது விக்நத்தை நீக்குவாயாக என்றாள்.

சண்ட முண்ட வதம்.

கச்யபருக்கு தநுவிடம் சும்பன் நிசும்பன் நமுசி என மூன்று ராக்ஷஸர்கள் உண்டானார்கள். மூவரும் பராக்ரம சாலிகள். பரமனை ஆராதித்துப் பல வரம் பெற்றனர். நமுசியைக் கொல்ல இந்திரன் வஜ்ராயுதத்தை எடுத்தான். நமுசி ஸூர்யனுடைய ரதத்தில் பதுங்கிக்கொண்டான்.

சதமகன் அவனை ஈரமான பொருளாலன்றி ஆயுதத்தால் கொல்வதில்லை என்று கூறிச் சென்றான். நமுசி தனக்குச் சாவில்லை என்றெண்ணி நீராடச் சென்று ஆங்குள்ள நுரையை எடுத்து இது ஈரமான பொருளே! இதனால் என்னை இந்திரன் கொல்வதானால் கொல்லட்டுமென்று தன்மேல் பூசிக்கொண்டான். உடனே அதில் இந்திரன் வஜ்ராயுதத்தை அனுப்ப நமுசி அதனாலடிபட்டிறந்தான். நமுசியைக் கொன்றதனால் உண்டான பாபத்தை அவன் நதீ ஸ்நாநங்களால் நிவர்த்தி செய்தான். இதைக் கண்ட சும்பநிசும்பர்கள் மிகக் கோபங்கொண்டு ஸ்வர்க்கத்தைக் கொள்ளை யடித்து தேவர்களை விறட்டி முவ்வுலகையும் ஆண்டனர். இச்சமயத்தில் பாதாளத்திலுள்ள ராக்ஷஸர்கள் வெளிவந்தனர். மஹிஷாஸுரனது மந்திரிகளான ரக்தபிந்து சண்ட முண்டன் ஆகிய மூவரும் சும்ப நிசும்பர்களுடன் சேர்ந்து மஹிஷாஸுரனைக் கொன்ற தேவியைச் சும்ப நிசும்பரில் ஒருவருக்கு மணம் செய்விப்பதென தீர்மானித்தனர். சும்பன் ஸுக்ரீவனெனும் தூதனையனுப்பி காத்யாயநியை தன்னை மணக்கும்படிச் சொன்னான்.

தேவி தன்னைப் போரில் வெல்பவரையே தான் மணப்பதாகக் கூற, தூம்ராக்ஷனை அம்பிகையைத் தூக்கிவரச் சொன்னான். தேவி அவனை ஹுங்காரத்தால் சாம்பலாக்கினாள். பிறகு சும்பன் சண்டமுண்டர்களை ஸேனையுடன் போர் புரிய அனுப்பினான். தேவியின் வாஹனமான ஸிம்ஹம் அரக்கர்படையை அறை க்ஷணத்தில் அழித்தது. தேவியினது புருவத்திலிருந்து ஓர் பயங்கரமான யோகினி கிளம்பி சண்ட முண்டர்களது ஸேனைகளுடன் சண்டையிட்டு பலரைக் கொன்றாள். சண்டமாரீ என்ற பெயர் பெற்று இவள் யமன் எருமையின் கொம்பை முறித்து அதைக் கையிலேந்தி சண்ட முண்டர்களைத் துறத்தினாள். வழியில் இவளைப் பார்த்து பயந்த கருடன் இறக்கைகள் உதிர்ந்தன. அவைகளைத் தொடுத்து மாலையாக அணிந்து கார்க்கோடகனைக் கயிறுகக்கொண்டு சண்ட முண்டர்களைக் கட்டி வந்தாள். கௌசிகி அவர்களுடன் போர்புரிந்து அவர்கள் தலையை வெட்டி மாலையாக அணிந்துகொண்டாள். அதுமுதல் அவள் சாமுண்டா என்றழைக்கப் பட்டாள்.

பிறகு சும்ப நிசும்பர் ரக்தபீஜனை முப்பதுகோடி ஸேனையுடன் போருக்கனுப்ப அம்பிகையின் அருளால் இந்திராணீ வாராஹீ நாரஸிம்ஹீ வைஷ்ணவீ கௌமாரீ மாஹேச்வரீ முதலிய சக்திகள் தோன்றிச் சேனைகளை அழித்தன. ரக்தபீஜன் வீராவேசங்கொண்டு மாத்ரு கணங்களை எதிர்க்க கௌசிகி அவனுடலிலிருந்து பெருகி வரும் ரத்தத்தை கீழேவிழுந்து ராக்ஷஸனாவதற்குள் குடித்து விடும்படி கட்டளையிட்டு பாணவர்ஷங்களால் அவனைக் கொன்று அட்டஹாஸம் செய்தாள். இந்த நிரத்வனியைக் கேட்டு பரமசிவனங்கு வர அவரையே சும்பநிசும்பர்களி டம் தூதனுப்பினாள். அவ்விருவரும் தேவியுடன் யுத்தத் திற்கு வந்து போர்செய்து மாண்டனர். தேவகணங்கள் பூமாரிபொழிந்து தேவியைத் துதித்தனர். அன்னை சாந்த வடிவமாகி அஸுரர்களால் துன்பம் நேரும்போது தேவர் களைக் காப்பதாக வாக்களித்தாள்.

குமார ஜநநம்.

அக்நி ஐயாயிரமாண்டு சிவ தேஜஸைச் சுமந்து அதனால் காந்தி குன்றி உடல் இளைத்து தேவர்களைச் சரணமடைந்தார். அமரரனைவரும் வந்நியுடன் ஸத்ய லோகம் சென்று பிரும்மனிடமிதை அறிவித்தனர். நடு வழியில் குடிலை எனும் பார்வதியின் ஸஹோதரியைக் கண்டு அக்னி "இச்சிவசக்தியை நீ வஹித்தால் அழகிய புதல்வனைப் பெறுவாய்" என்றார். அவள் ஏற்கனவே இதற்காகத் தவம் புரிந்தவளாதலால் அன்புடன் இதை ஏற்றுக்கொண்டாள். அக்நி சிவதேஜஸ்ஸைச் சுமந்ததால் அவன் உடலெல்லாம் ஸ்வர்ணவர்ணமானது. ஐயாயிர மாண்டு சுமந்தும் குழந்தை பிறக்காததால் குடிலை பிரும் மாவினிடஞ் சென்று கர்ப்பம் வெளியாக வழி என்ன? என்று வினவினாள். அவர் 'உதயகிரிக்குச் சென்று நூறு யோஜனை தூரம் விசாலமாயுள்ள சிவனுடைய சர வணத்திலிதை விடு' என்றார். அங்ஙனமே அவள் செய்ய ஆங்குள்ள புற்பூண்டுகளும் செடி கொடிகளும் ஸ்வர்ண மயமாக மாறின. அச்சரவணப் பொய்கையில் ஆயிர மாண்டு சென்றபின் கோடி ஸூர்யப் பிரகாசனாக ஓர் உத்தம குழந்தை உண்டாகி கால் கட்டவிரலை வாயில் வைத்துக்கொண்டு மிக அழகாக அழுதது. தற்செயலாக அங்குவந்த ஆறு கிருத்திகாநக்ஷத்ரங்கள் இக்குழந்தைக்குப்

பரிவுடன் பாலளிக்க நான் முன்னே! நான் முன்னே! என்று போட்டி போட்டனர். இவர்களிடம் கருணை கொண்ட குமரக்கடவுள் ஆறுமுகங்கொண்டு அறுவரிடமும் பாலருந்தினர். இதனிடையில் பிரும்மா அக்னியை குழந்தை எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறன் என்று கேட்டார். வன்னி, குழந்தை பிறந்தாலல்லவோ வளருதலை வினவவேண்டும்! என்றார். சதுர்முகன் சரவணத்தில் ஸுப்ரமண்யன் பிறந்ததைக் கூற அக்நி ஆவலுடன் அங்கு விரைவாக ஓடினர். இவரது வேகத்தைக் கண்ட குடிலை, கனவேகமாகச் செல்லும் காரணம் யாதோ? என்றாள். எனது குழந்தையைக் காண சரவணம் செல்கிறேனென்று அவர் கூற; குடிலை, ஆஹா! அவன் என் மகனன்றோ! என்று அவளும் அங்கு விரைந்து சென்றாள்.

குடிலையும் அக்நியும், என் மகன்! என் மகன்! என சண்டையிட்டோடுவதைக் கண்ட கமலாக்ஷன் அவர்களை நிறுத்தி, சிவனிடம் சென்று இவன் யார் புதல்வன் என்றறியுங்கள் எனக் கூறினர். இருவரும் கைலாஸநாதனிடம் வினவ அங்கும் சிவன், என் மகன்! என்றும், உமை, என் மகன்! என்றும் கூறி வாது செய்தனர். பார்வதி சிவனைப் பார்த்து, "தேவ! நாமெல்லோரும் அங்கு செல்வோம்! அக் குழந்தையையே கேட்போம்! அது சொல்வதுபோல் நடப்போம்!" என்றாள். அங்ஙனமே எல்லோரும் அங்கு சென்றனர். இவர்களது எண்ணத்தை அறிந்த யோகீச்வரனை குஹப்பெருமான் **நாலுருவ** மெடுத்து, வந்த **நால்வரிடமும்** சென்றார்! எல்லோரும் பேரன்புடன் சிசுவைக் கட்டி முத்தமிட்டனர். சங்கரன், கிருத்திகைகள் பால் கொடுத்ததால் கார்த்திகேயன், குடிலை சக்தியைச் சுமந்ததால் குமரன், கௌரியின் மூலமாகத் தோன்றியதால் ஸ்கந்தன், என் புதல்வனைபோது குகன், அக்நி சுமந்ததால் மஹாஸேனன், சரவணத்தி லிருந்ததால் ஸாரஸ்வதன் என்றும் இவனுக்குப் பெயர் என நாமகரணம் செய்தார். இந்த ஆறு ஸம்மந்தமிருந்ததால் ஷண்முகன் என்றும் அவருக்குப் பெயருண்டானது. மிக அற்புதமான இக் குழந்தையைக் கண்டு ஸகல தேவர்களும் ஸந்தோஷமடைந்து குருக்ஷேத்திரம் சென்று குழந்தைக்கு ஸேநாதிபதி பட்டாபிஷேகம் செய்வோமென ஈசனை வேண்டினர். குகனுக்குப் பட்டா

பிஷேகம் நடந்தது. சிவன், கண்டாகர்ணன் லோஹிதாக்ஷன் நந்திஷேணன் குமுதமாலி என்ற நான்கு பிரமத கணங்களைச் சரவணபவனுக்குக் காணிக்கையாக அளித்தார். அங்ஙனமே பிரும்மா முதலிய தேவர்களும் எண்ணிறந்த கணங்களை அவருக்களித்தனர். **கருடன் தன் புத்ரனை மயிலையும், அருணன் தாம்ப்ர சூடனையும், (கோழியை)** அளித்தனர். ஸேநாதிபதி போர்க்கோலத்துடன் தாரகன் மஹிஷன் முதலியவர்களை ஜயிக்கப் புறப்பட்டார்.

பிரயாண காலத்தில் ஸ்கந்தர், தந்தை தாய் முதலியவர்களை நமஸ்கரித்து உத்தரவு பெற்றார். உமை அன்புடன் குமரனைக் கட்டியணைத்து உச்சிமுகர்ந்து ஆசீர்வதித்து அச்யுதனை வணங்கி அவராசீர்வாதத்தைப் பெறு என்றாள். பால ஸுப்ரமண்யன் அன்னையைப் பார்த்து, இவர் யார்? என்று வினவ, தேவி, கார்யம் முடிந்தபின் பிரும்மா சொல்வார். உனது பிதா, 'நம்மைத்தவிர அவர் வேறில்லை' என்று எனக்குச் சொன்னார் என்றாள். உடனே பகவானை வணங்கினார். அவர் குழந்தையை ஜயத்துடன் திரும்பும்படி சொன்னார். பிறகு ஜயவிஜயீபவ என்று தேவர் கூறும் சப்தம் ஆகாயமளாவி நிற்க வாத்ய கோஷமும் ஸேனையின் சப்தமும் பதினான்கு லோகத்திலும் பரவ பகவான் கிளம்பினார். இச் சப்தத்தைக் கேட்ட மஹிஷன் தாரகன் விரோசனன் அந்தகன் கும்பன் நிகும்பன் முதலிய ராக்ஷஸர்கள் திடுக்கிட்டுப் பயந்து ஸபை கூடி இச் சப்தம் எங்கிருந்து உண்டானது என்று யோசித்தனர். அச் சமயத்தில் பாதாளகேது என்ற அரக்கன் வந்து தெரிவித்தான்: யான் பன்றி வேடம் பூண்டு காலவ ரிஷியினுடைய ஆச்ரமத்திற்குச் சென்றேன். முனிவரையும் ஆச்ரமத்தையும் நாசம் செய்ய ஆரம்பித்தபொழுது வில்லுங் கையுமாக என்னெதிரில் ஒருவன் தோன்றினான். அவன் யாரென யான் அறியவில்லை. அவனைக் கண்டு யான் பயந்தோட, அவன் என்னைத் துறத்திக்கொண்டே வந்தான். தென் ஸமுத்திரக்கரைக்கு வந்தேன். அங்கு பல பயங்கரமான ஸேனை ஒன்றுகூடி நான் மஹிஷனைக் கொல்கிறேன், நான் அந்தகனைக் கொல்கிறேன், நான் தாரகனை வதைக்கிறேன் என்று சப்தம் செய்துகொண்டிருக்கக் கண்டேன்.

அதை யான் கவனிப்பதற்குள் என்பின் வந்தவனது பாணம் என்மேல் விழ அந்த அடி பொறுக்காமல் எனது ஹிரண்யபுரத்தைவிட்டு உங்களைச் சரணமடைந்தேன் என்றான். இதைக்கேட்ட அந்தகாஸுரன், "அஞ்சாதே! இதோ ஒரு க்ஷணத்தில் அவனைக்கொன்று திரும்புகிறேன்!" என்று கூறி ராக்ஷஸ ஸேனையுடன் பூலோகம் சென்றான். ஆங்கு அரக்கருக்கும் அமரருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. மாத்ரு கணங்கள் ராக்ஷஸர்களைக் கொன்று குவித்ததைக் கண்ட மஹிஷன் கதையால் அவர்களை அடித்துக் கீழே தள்ளி ஸ்கந்தனிடம் போருக்கு வந்தான். சக்ராக்ஷன் எனும் கணாதிபன் அவனை வழிமறித்து அவனுடன் யுத்தம் செய்தான். கையில் கத்தி ஏந்தி வந்த தாரகனைக் குஹன் சக்தியால் கொன்றார். தனது ஸஹோதரன் இறக்கக் கண்டு மஹிஷன் பயந்து கிரௌஞ்ச மலையின் மீது ஏறி பதுங்கிக்கொண்டான். பாணன் முதலியவர் ஸமுத்ரத்தில் குதித்துப் பாதாளம் சென்றனர். மயூரவாஹநத்தின் மீதேறி சரவணபவன் மஹிஷன் பின் சென்றார். அவன் ஒவ்வொரு மலையாகச் சென்று ஸேநாபதியைப் பார்த்து நடுநடுங்கி முடிவில் கிரௌஞ்ச குஹையில் புகுந்தான். அம்மலை தனது தாயுடன் பிறந்த **ஸுநாபன்** என்ற மலையின் மகனாதலால், மஹிஷனை மாய்க்கும்பொழுது தனக்கும் அவனுக்கும் மனவருத்தமுண்டாகுமோ என்றஞ்சி ஸுப்ரமண்யன் அவனைக் கொல்லாமல் திரும்பினார். மும்மூர்த்திகளும் இந்திராதி தேவர்களுடன் குஹனருகே வந்து மலையுடன் மஹிஷாஸுரனைக் கொல் எனவேண்டினர். இதைக் கேட்ட காங்கேயன் நகைத்து, ஸ்வபந்துவைக் கொல்வது நியாயமா? பசு, பிராம்மணன், கிழவன், பாலன், ஸ்வபந்து, ஸ்த்ரீ ஆகியவர்கள் குற்றம் செய்தாலுங்கூட அவர்களைக் கொல்லக் கூடாதென சாஸ்த்ரங் கூறுகிறதன்றோ? யான் கிரௌஞ்சனைக் கொல்லமாட்டேன். அக்குஹையிலிருந்து எச்சமயம் மஹிஷன் வெளி வருகின்றானோ அப்பொழுது அவனைக் கட்டாயம் கொல்கிறேனென்றார்.

தேவேந்திரன் குஹனை வணங்கி "ஸ்வாமின்! பலருக்காக ஒருவனைக் கொல்வது நியாயமன்றோ? எனது ஸஹோதரனான நமுசியை யான் கொல்லவில்லையா? நீர் வீரனால் கிரௌஞ்சனுடன் மஹிஷனைக் கொல்லும்" என்றான். இதைக் கேட்டதும் ஸுப்ரமண்யனுக்கு மிகக்

கோபம் உதித்தது. இந்திரா! நீயே பலவான்! உனது பலத்தைப் பார்ப்போம்! வா யுத்தத்திற்கு! என்று அவர் அழைத்தார். இந்திரன், நமது பலத்தைச் சண்டையிட்டுப் பரீக்ஷிக்க வேண்டாம். இந்த கிரௌஞ்ச மலையைக் காலால் பிரதக்ஷிணம் செய்து எவர் முன் வருகிறரோ அவரே பலசாலி என்றறிவோம்! என்றான். அப்படியே ஆகட்டுமென ஸ்வாமி, மயூரத்தை விட்டிறங்கி பிரதக்ஷிணம் செய்தார். இந்திரனும் ஐராவதத்தை விட்டு சுற்றினான். இருவரும் தான் தான் முன் வந்தது என்று வாதமிடத் தொடங்கி மும்மூர்த்திகளிடம் வந்து, யார் முன் வந்ததெனக் கூறும்படி வேண்டினர். அவர்கள் சற்று யோசித்து தேவ காரியத்தைக் கருதி அந்த கிரௌஞ்ச கிரியையே கேளுங்கள்! என்றனர். இருவரும் அதை வினவ, அது இந்திரனே முன்வந்தான் என்றது. கோபங் கொண்ட ஸுப்ரமண்யன் சக்தி என்னும் ஆயுதத்தால் மஹிஷனுடன் அவனையும் கொன்றார். தேவர்கள் தங்கள் காரியம் முடிந்ததென பேரானந்தம் கொண்டு சென்றனர்.

பிறகு தன் புதல்வனைக் குஹன் கொன்றான் எனக் கேட்டு, ஸுநாபன் பரம ஆக்ரஹத்துடன் ஓடிவந்தான். அவனையும் கொல்ல குஹன் சக்தியை எடுத்தான். மஹாவிஷ்ணு ஓடிவந்து உனது மாமனைக் கொல்வது நியாயமா? வேண்டாம்! சக்தியை அடக்கு! என்றார். உடனே காங்கேயன், அங்ஙனமே சக்தியை நிறுத்தித் தான் தனது பந்துவைக் கொன்றதற்காக வருந்தினார். மோஹத்தினால் செய்யத் தகாத கார்யத்தைச் செய்தேன்! ஆதலால் உபவாஸமிருந்து அப்பாபத்தை அகற்றப்போகிறேனென்றார்! மஹாவிஷ்ணு, ஸ்வாமியைப் பார்த்து "உபவாஸம் செய்யாதே! பூவுலகில் ஸகல பாபத்தையும் போக்கத்தக்க பிருதூதகம் என்றோர் தீர்த்தமுளது. அங்கு ஸ்நாநம் செய்து, ஜகதீசனைப் பூஜி!" என்றார். அப்படியே பகவானை ஸ்கந்தன் பூஜித்தார். கைலாஸநாதன் விரைவாக வந்து வீரப் புதல்வனைத் தழுவி, அன்ப! உனக்கு யாது வரம் வேண்டும்? என்றார். அதைக் கேட்ட கார்த்திகேயன், ஐயனே! தங்களைப்போன்ற பலமுள்ளவனாயினும், அவன் கைகள் மலைபோல் வளர்ந்து வந்தாலும் அதை அறுக்கும் ஆற்றலை அடியேனுக் களிக்க வேண்டு

மென்றார். அரனும் அங்ஙனமே ஆகுக என்று அருள் புரிந்து சென்றார்.

***ரிதத்வஜன் :** ஸூர்ய வம்சத்தில் சத்ருஜித் என்றோர் அரசனிருந்தான். அவனுக்கு மிக சூரனான ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்குத் தந்தை ரிதத்வஜன் எனப் பெயரிட்டார். அவன் மிகப் பராக்ரமசாலி. அவ்வரசனது முன்னிலையில் காலவர் எனும் ரிஷி வந்து ஓர் குதிரையைக் கொடுத்துக் கூறினார்: "வேந்தே! பாதாளகேது என்ற அரக்கன் பன்றி உருவெடுத்து முனிவர்களைக் கொல்கிறான். யாகத்தை அழிக்கிறான். பரமாத்மாவை இவனைக் கொல்லும்படி வேண்டினோம். அவர் இக் குதிரையைத் தந்து, ரிதத்வஜனிடம் இதைக் கொடு. அதன் மீதேறி அவன் அஸுரனைக் கொல்வான் என்றார். இக் குதிரை விச்வாவஸு என்ற கந்தர்வ ராஜனால் அளிக்கப் பட்டது. அவனது பெண்ணான மதாலஸையைப் பாதாள கேது தூக்கிச் சென்று பாதாளத்தில் வைத்திருக்கிறான். ஆதலால் ஓர் பகலில் பதினாயிரம் யோஜனை தூரம் வேகமாக ஓடும் இக் குதிரையை அவன் தந்தான்" என்றார். ரிதத்வஜன் அதன் மீதேறி தன் மீது பாணத்தை விட்டதாக பின்னரறிந்தேனெனப் பாதாளகேது அந்தகனுக்குக் கூறினான்.

அரக்கர் படை குஹனால் அடிபட்டு ஓட ஸ்வல்ப ஸேனையுடன் அந்தகாஸுரன் பூலோகத்தில் ஸஞ்சரித்தான். ஒரு ஸமயம் அவன் மந்தர மலை மீதேறினான். அங்கு அன்னை பார்வதி தேவியைக் கண்டு இவளை அழைத்துவந்து அளிப்பவனே எனது நண்பனாவான். அவனுக்கு யான் கொடுக்கத்தகாத பொருளில்லை என அந்தகன் காமவெறி கொண்டு பேற்றினான். இதைக்கேட்டு அவனுடைய ஸஹோதரனான ப்ரஹ்லாதன் "பாபம்! பாபம்! அந்தகா! இங்ஙனம் பேசாதே! பிறர் மனைவியைப் பார்ப்பதே பாபம்! அதிலும் ஜகன்மாதாவைப் பார்த்து இவ்வெண்ணம் கொள்ளலாமோ? பிறரை ஹிம்ஸிப்பதைவிட தன்னுயிரை விடுவதும், பொய் சொல்வதைவிட பேடியாயிருத்தலும், பிறர் பொருளை அபஹரிப்

*மார்க்கண்டேய புராணத்தில் இக்கதை விரிவாக விளங்குகிறது.

பதைவிட உபவாஸமிருத்தலும் சிறந்தது" என்று உப தேசித்தார். அவன் இதைக் கேளாமல் தேவியிருக்கு மிடஞ் சென்ருன். இவனுடன் மயனும் தாரகனும் சென்று சிவகணங்களைக் கொன்ருர்கள். எதிர்த்து வந்த நந்தியை அந்தகன் கதையாலடித்துக் கீழே தள்ளினுன். இதைக் கண்ட உமை அருகில் வந்து அந்தகன் தன்னைத் தீண்டு வானே என்றஞ்சி தன்னைப்போல் நூறு உடலெடுத்து நின்ருள். அந்தகன், உமை யாரென்றறியாமல் திகைத்து நின்ருன். மனிதனது கண்ணை மறைப்பது, பிறவிக்குருடு காமம் மதம் லோபம் என்ற நால்வகை தோஷங்களாம். அந்தகன், அந்தகனைப்போல் அம்பிகையைக் காணுது விழிக்கும் ஸமயத்தில் **சதாவரீ** என்ற சக்தி இவனைத் தாக்கித் தள்ளினுள். அம்பிகை தனது பரிவாரத்துடன் மறைந்தாள். அந்தக சேனை கணங்களோடு போருக்கு வர, கணேச்வரர் அவர்களைக் கொன்று, அம்பிகை இருப் பிடம் சென்ருர். தேவி தான் படைத்த தன்னைப்போன்ற சரீரங்களைப் பூமியில் உத்யாநத்திலும் நதீ தடாகங்களி லும் வஸிக்கும்படி உத்தரவிட்டாள். மூர்ச்சை தெளிந் தெழுந்து அந்தகன் தனது ஸேனை அழிந்ததையும் தான் அடிபட்டதையும் நினைத்து வெட்கமடைந்து பாதாளஞ் சென்ருன். அங்கு இரவும் பகலும் அன்னையையே நினைத்து மற்றதை மறந்து தவித்தான்.

கேதாரம்.

ஸுப்ரமண்யனை உண்டுபண்ணுவதற்காக உமாபதி அன்னையுடன் ஆயிரமாண்டு ஏகாந்தமாக இருந்ததால் அவரது சக்தி சற்று குறைய அதை மீண்டும் பெருவதற்கு சிவன் நந்தியையும் கணேசனையும் அம்பிகையைக் கவ னிக்கும் படி கூறி தவசி வேடம் பூண்டு பூலோகம் சென் ருர். அவர் கந்த மூலங்களையும் ஜலத்தையும் வாயுவையும் உட்கொண்டு பல்லாண்டு ஏகாக்ரமாகத் தவம் புரிந்தார். அவரது தலையிலிருந்து அக்நி ஜுவாலை கிளம்பிற்று. அவரது சரீர பாரத்தைத் தாளாமல் மந்திரமலை பிளந்து பூமி மட்டத்திற்கு வந்தது. ஆங்கிருந்து ஓர் நதி பிர வஹித்தது. அதற்கு பகவான் கேதாரமெனப் பெயரிட் டார். அந்நதியில் புனலாடி விதிமுறை வழுவாது பித்ரு கார்யத்தைச் செய்வோர் கைலாஸஞ் செல்வாரென பக

வானதற்கு வரந் தந்தார். யமுனையில் ஸ்நானம் செய்து பகவான் ஜபம்செய்தார். ஸரஸ்வதி நதியில் மூழ்கி ஜலத்தில் நின்று ஒன்றரை ஆண்டு தவம் செய்தார். அதனால் முன் போலவே மலைகள் அசைந்தன. ஸமுத்திரங்கள் நடுங்கின. இதைக்கண்டு தேவர்கள் பயந்து பிரும்மாவிடஞ் சென்றனர். பிரும்மா தேவர்களுடன் வைகுண்டம் சென்று முராரியைத் தர்சித்தார்.

முராஸுர வதம்.

கச்யபருக்கு தநு என்ற மனைவியினிடம் முரன் என்றோர் அஸுரன் பிறந்தான். அவன் தேவர்கள், ராக்ஷஸர்களைக் கொன்றதைக் கேட்டு வருந்தி, தேவர்களை வெல்வதற்காக பிரும்மனை நாடித் தவம் செய்தான். சதுர்முகன் யாது வரம் வேண்டுமென்றார். முரன் தான் எவரைக் கையால் தொட்டாலும் அவர்இறக்க வேண்டும் என்று வரம் கேட்டான். அவரும் அங்ஙனமே ஆகட்டுமென்று கூறி மறைந்தார். முரன் இந்திரனை சண்டைக் கழைத்தான். இவன் வரம் பெற்றதை அறிந்த அவன் ராஜ்யத்தை விட்டு பூலோகஞ் சென்றான். முரன் ஐராவதத்தையும் வஜ்ராயுதத்தையு மெடுத்துக் கொண்டு திக்விஜயம் செய்தான். பாதாளத்தில் பதுங்கிக்கொண்டு இருந்த அஸுரர்களெல்லோரும் முரனிடம் வந்து சேர்ந்தனர். மூவுலகையும் முரனாண்டான். இவன் ஸரயூநதிக் கரையில் யாகம் செய்யும் ரகுவின் யாகசாலைக்குச் சென்றான். "என்னோடு யுத்தம் செய்! அல்லது தேவரைக் கருதி செய்யும் யாகத்தைச் செய்யாதே" என்றான். இதைக்கேட்ட அரசன் நடுநடுங்கி குருவான வஸிஷ்டரைச் சரணமடைந்தான். அவர் முரனை அழைத்து அஸுர ஸ்ரேஷ்டனே! இம்மனிதனை ஜயித்ததால் உமக்குப் பெருமை உண்டோ? ஸகல ஜீவராசிகளது உயிரைக்கொல்லும் யமனை ஜயித்தால் நீ எல்லோரையும் ஜயித்ததாகும் என்றார். முரன் யமலோகம் சென்றான். யமன் முன்னமே வைகுண்டநாதனைச் சரணமடைந்தார். அவர் அஸுரனை என்னிடமனுப்பு என்றார்.

யமனிடம் முராஸுரன் வந்து சண்டைக்கு வா அல்லது' ஜீவராசிகளைக் கொல்லாமலிரு என்றான். தர்மராஜன் ஐயனே! தங்களுடன் சமர் செய்ய எனக்குப் பல

மில்லை. ஜீவராசிகளைக் கொல்லாமலிருப்போமெனில் உம்மைவிட பலசாலியான வைகுண்டநாதன் என்னைச் சிக்ஷிப்பான். யாது செய்வேன் என்றான். முரன் அங்ஙன மாயின் வைகுண்டவாஸி இருப்பிடத்தைக் கூறு! அவனை வென்று வருகிறேன் என்றான். யமன் வைகுண்ட வழியைக் காட்ட முரனங்கு சென்றான். மிக வேகத்துடன் ஓடிவரும் முரனைப் பார்த்துப் பகவான், நீ யார்? எங்கு வந்தாய்? என்றார். முரனெனும் நான் உம்மோடு போர் புரிய வந்தேன். சக்திஇருந்தால் யுத்தம்செய். இல்லையேல் சரணாகதி செய் என்றான். இதைக் கேட்டு பகவான் நகைத்து முரா! நீ தீரனால் உன் மார்பு ஏன் அடித்துக் கொள்ளுகிறது? என்னிடம் பயமா? பயமானால் ஓடிப்போ என்றார். அஸுரன் என் மார்பு துடிக்கவில்லையே என்றான் பகவான் நீ தொட்டுப்பார்! என்றார். அவன் " தன் கையால் போரில் தொடப்பட்டவர் இறப்பர்'' என்று வரம் வாங்கியதை மறந்தான். தன் மார்பை தொட்டுப் பார்த்தான். உடனே கீழே விழுந்து இறந்தான். இதைக்கண்டு ஸகல தேவர்களும் வியந்து பகவானைப் போற்றினர்.

எது நரகம்?

பிறர் மனைவியைத் தீண்டுவது, பாபிகளுடன் சேருவது, க்ரூரமாக நடப்பது இவை முதல் நரகம். பழங்களைத் திருடுவது, வீணாகத் திரிவது, பச்சை மரங்களை வெட்டுவது இவை இரண்டாவது நரகம். தகாதவரிடம் தானம் வாங்குவது பிராணிகளைக் கூண்டிலடைப்பது கொல்வது அபந்துக்களுடன் மணம்செய்வது மூன்றாவது நரகம். எல்லோரையும் பயமுறுத்துதல் பகவத்குண நிந்தை, ஸ்வதர்மத்தை விடுவது நான்காம் நரகம். நண்பனிடத்தில் கபடம் வீணாக ஒருவர் மேல் அபவாதம் சொல்லல் ருசியுள்ள பொருளை ஒருவனாக புசித்தல் ஐந்தாம் நரகம். யாத்ரைக்கு வண்டியில் செல்லுதல் பழத்தை அபஹரித்தல் யோகத்தைக் கெடுத்தல் வண்டி மாட்டை அபஹரித்தல் ஆறும் நரகம். அரசனுக்குரிய பாகத்தைக் கொடாமை ராஜ ஸ்திரீயைக் கெடுத்தல் ராஜனுக்கு அஹிதத்தைச் செய்தல் ஏழாம் நரகம். லோபம், லோலனாயிருத்தல் வாயிலிருந்து ஸதா லாலாஜலத்தைப் பெருக்குவது எட்டாம் நரகம். வேதத்தைத் திருடல் பிராஹ்மண நிந்தை பந்து துவேஷம் ஒன்பதாம் நரகம். சிஷ்டாசாரத்தைக்

கெடுப்பது அதை நிந்திப்பது சிசுஹத்தி சாஸ்ரத்தைத் திருடல் பத்தாவது நரகமாம். வேதாங்கங்களை அழித்தல் பகவத் குணத்தை நிந்தித்தல் பதினோராவது நரகம். ஸாதுக்களையும் ஸதாசாரத்தையும் நிந்திப்பது துராசாரத்தைக் கைகொள்வது வைதிக ஸம்ஸ்காரமில்லாமை பனிரண்டாவது நரகம். தர்மார்த்த காமங்களை விடுவது ரஹஸ்யத்தை வெளியிடுவது பதிமூன்றும் நரகம். விதியைத் தழுவாது ஸந்யாஸம்செய்துகொள்ளல் வீட்டிற்கு நெருப்பு வைத்தல் பதிநான்காம் நரகம். அக்ஞானம் பொய் அஸூயை சுசி இல்லாமை பதினைந்தாம் நரகம்.

புத்ரர் சிஷ்யர் இதன் பொருள்.

ஆலஸ்யமும் கோபமும் பதினாறும் நரகம். இவைகளுக்கு புந்நரகம் என்று பெயர். இவைகளிலிருந்து ஸத்புத்ரன் பிதாவைக் காப்பான். ஆதலால் புத்ரன் என்று புதல்வனுக்குக் காரணப்பெயருண்டாயிற்று. தேவரிஷி பித்ருக்களை நாடிச் செய்யும் ஸத்காரியத்தைத் தடுப்பது பிறர் பொருளில் ஆசை, **ஸர்வ வர்ணத்தையும் ஸமானமாக எண்ணுதல்,** மந்திர ஜபமில்லாமை, குருவினிடம் வாதம் புரிதல், தன் தோஷத்தை மறைத்து பிறர் தோஷத்தை வெளியிடல், பொறாமை, க்ரூரமாகப் பேசுதல், முரட்டுத்தனம் முதலியவை சேஷ பாபங்கள் எனப்படும். இவைகளிலிருந்து குருவைக் காப்பதால் சிஷ்யனுக்குச் சிஷ்யன் என்று காரணப் பெயர் வந்தது.

தன் வயிற்றிற் பிறந்தவன் **ஔரஸ** புத்ரன். ஆபத்துக்காலத்தில் தன் பதி ஸோதரன் மூலமாக ஓர் குழந்தை பிறந்தால் அவன் **க்ஷேத்ரஜன்.** இது கலியில் கூடாதென தடுக்கப்பட்டுளது. தாய் தந்தைகள் தன் புத்ரனைப் புத்ரன் இல்லாதவருக்குத் தானம் செய்தால் அவன் **தத்தன்.** ஸ்நேஹிதனது புத்ரனைத் தன் புத்ரன்போல் பாராட்டினால் அவன் **க்ருத்ரிமன்.** விலைக்கு வாங்கியவன் **க்ரீதன்.** பிராம்மணனுக்கு நான்காவது வர்ண ஸ்த்ரீயினிடம் உண்டானவன் **பாரசவன்.** ஔரஸனும் தத்தனுமே கலியில் சிறந்த புத்ரனாக விதிக்கப்பட்டிருக்கிறான் என்றார். தர்மமும் அஹிம்ஸையும் எதிரிற்றோன்றி ஸநத்குமாரரை

பிரும்மாவுக்கு தத்த புத்ரனாக அளித்தார்கள். பிரும்மா யோகதத்துவங்களைக் கூறி ஸ்ரீ பகவானது ஸ்வரூபத்தை விளக்கினார்.

துவாதச தளம்.

பகவானான ஸ்ரீ வாஸுதேவன் பனிரண்டு மாதங்களிலும் பனிரண்டு ராசிகளிலும் அவரது பனிரண்டு அக்ஷரமுள்ள மந்திரத்திலும் தங்கி வஸிக்கிறார். அவரை நமது சரீரத்தில் பனிரண்டு அவயவங்களில் கீழ் கண்டபடி உபாஸித்தால் மறு பிறப்பு உண்டாகாது. சிகையில் ஓங்கார வடிவமாக மேஷராசியில் வைசாக மாதத்திலிருப்பதாக உபாஸிப்பது முதல் தளம். முகத்தில் நகார ரூபமாக விருஷப ராசியில் ஜ்யேஷ்ட மாதமாக இருத்தல் இரண்டாந்தளம் மோ, ப, க, வ, தே, வா, ஸு, தே, வா, ய என்று எழுத்துக்களை மிதுனம், கடகம், ஸிம்மம், கன்னி துலாம், விருச்சிகம், தநுஸ், மகரம், கும்பம், மீனம் என்ற ராசியுடன் ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி தை மாசி பங்குனி சித்திரை மாதங்களையும் சேர்த்து புஜம் கண் ஹிருதயம் வித்யாஸ்தானம் மநஸ் நாபி ஜகநம் கால் முழங்கால் பாதம் முதலிய இடங்களில் பரமாத்மா வஸிக்கிறார். இத்தகைய பகவத் ஸ்வரூபத்திற்க்கு **அவ்யக்தவாஸுதேவன்** என்று பெயர். நாலு வர்ணமுள்ள நான்கு முகங்களோடு கூடியது இரண்டாவது ரூபம். ஆயிரம் படத்துடன் உலகைச் சுமக்கும் ஆதி சேஷனாயிருத்தல் மூன்றாவது ரூபம். நான்முகமும் இரண்டு கையுமாம் உலகைப் படைப்பது பகவானது நாலாவது மூர்த்தியாம் என்று சதுர்முகனிடம் ஸநத்குமாரர் உபதேசம் பெற்றார்.

பாபமகல அபிஷேகம்.

ஒரு ஸமயம் உலகெலாம் தந்நிலையிலிருந்துத் தவறி ஆடிற்று. இதைக்கண்டு நடுங்கிய தேவர்கள் பிரும்மாவுடன்கூடி மகாவிஷ்ணுவைச் சரணமடைந்தனர். வாஸுதேவன் தேவருடன் கைலாஸம் சென்றார். தேவர்க்குப் பரமசிவன் தெரியாததால் துயர்கொண்டு பத்மநாபனை பகவானெங்கே? என்றனர். மாதவன் நீங்கள் பார்வதி தேவியின் கர்ப்பத்தில் குழந்தை உண்டாகாமல் செய்தீர்களல்லவா? அந்த பாபத்தால் உங்களுக்குப் பகவந் தர்சன

மாகவில்லை. பாபமகல தப்தக்ருச்ரமெனும் பிராயச்சித்தத்தை அனுஷ்டிக்க வேண்டும். முதல் மூன்றுநாள் பனிரண்டு பலம் உஷ்ண ஜலத்தையும் மறு மூன்று நாள் எட்டுபலம் பாலையும் மறு மூன்று தினம் ஆறு பலம் நெய்யையும் மறு மூன்று நாள் வாயுவையும் புஜித்திருங்கள். இதே தப்தகிருச்ரமாகும். பின்னர், நூறு குடம் பால் அறுபத்து நாலுகுடம் தயிர், முப்பத்திரண்டு குடம் ஹவிஸ், பதினாறு குடம் பஞ்சகவ்யம், எட்டு குடம் தேன், நூற்றெட்டு குடம் சந்தந ஜலம் முதலியவைகளைக் கொண்டு சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யுங்கள். உங்கள் பாபம் அகலும். பகவானைத் தர்ச்சிக்கலா மென்ருர். அங்ஙனமே அமரர் அநுஷ்டித்துப் பகவானைத் தர்ச்சிக்க அவர் ஒரு பக்கம் ஹரியாகவும், மற்ருேர் பாதியில் ஹரனுகவும் நின்று தேவர்களுக்கு ஹரிஹரனுகக் காக்ஷியளித்தார்.

தேவர்கள் அவரைப் பணிந்து துதித்தனர். பகவான் உங்களுக்கு யாதுவரம் வேண்டுமென்று வினவ உலகம் அசையாது முன்போல் தந்நிலையைப் பெற வேண்டும், என்று தேவர் வேண்டினர். பிறகு ஹரிஹரனுகத் தோன்றிய மூர்த்தி வைகுண்ட வாஸியாகவே தேவர்களது கண்ணுக்குப் புலப்பட்டது. தேவர்களவரை வணங்கி பகவன்! கைலாஸ நாதனெங்கே? அவர் செய்யும் கடுந்தவத்தாலன்ருே உலகம் நடுங்குகிறது. அவரிடம் எங்களை அழைத்துச் செல்லுங்களென்று வேண்ட பகவான் தேவர்களுடன் பூலோகம் வந்து ஸரஸ்வதீ நதியில் மூழ்கி தவம் செய்யும் மாதேவனைத் துதித்தார். அவர்களது நன்மையை நாடி பகவான் தவத்தை நிறுத்தி காக்ஷி அளித்தார். அமரர்கள் அவரைப் பணிந்து போற்றி தன்னிருப்பிடம் சென்றனர். மறுபடியும் உலகம் முன்போல் அசைந்தது. கைலாஸ நாதன இதன் காரணத்தை அறிந்து குருக்ஷேத்ரத்தில் தவம் புரியும் சுக்ராசாரியினிடம் சென்ருர். சுக்ரரே! உமது தவத்தால் மிகஸந்தோஷங் கொண்டோம்! வேண்டிய வரத்தைக் கேளும்! என்ருர். சுக்ரர் கண்விழித்தெழுந்து பகவானைப் பணிந்துத் துதித்து இறந்தவரைப் பிழைப்பிக்கும் ஸஞ்ஜீவினி வித்யையை எனக்களியுமென்ருர்.

அங்ஙனமே ஜகதீசனவருக்கு அருள் புரிந்தார். மூன்ரும் முறையும் உலகிலுள்ள ஸகல பொருள்களும் தன்னை

மறந்து தாண்டவமாடினை. இதைக்கண்டு ஸர்வேசன் ஸப்த ஸாரஸ்வதமெனும் க்ஷேத்திரத்தில் நர்த்தனம் புரியும் மங்கணரிஷியைக் கண்டு முநிவேடங்கொண்டு ஏன் கூத்தாடுகிறீர் என்று கேட்டார். அந்த முநி தனது கைவிரல் அறுபட அங்கிருந்து ரத்தம் வராமல் ஓர் வாஸனை ஜலம் வருகிறது. இது எனது தவத்தின் பெருமையைக் காட்டவில்லையா? என்னைவிட சிறந்த தபஸ்வி உலகிலுண்டோ? என்று ஆனந்த தாண்டவமாடுகிறேன் என்றார். இதைக் கேட்டு ஈசன் நகைத்து மஹர்ஷே! இதோ பாரும்! என்று கூறி தன் கையை ஓர் விரலாலடித்தார். அங்கிருந்து வாஸனை நிறைந்த வெண்மையான விபூதி வந்தது. இதைக் கண்ட மங்கணர், இவர் தனதுகர்வத்தை அடக்கவந்த ருத்ரமூர்த்தி என்றுணர்ந்து அவரைச் சரணமடைந்தார். பகவான் பிரத்யக்ஷமாகத் தோன்றி காக்ஷி அளித்து அவரது பிரார்த்தனைக் கிணங்கி ஸப்த ஸாரஸ்வதத்தில் ஸான்னித்யம் செய்தார். மங்கணரும் பிரும்மலோகம் சென்றார்.

அந்தகன் பிறப்பு.

அந்தகாஸுரன் மறுபடியும் தனது மந்திரிகளை அழைத்துத் தேவியைஸ்வாதீனப்படுத்த மந்திராலோசனை செய்தான். அச்சமயம் பிரஹ்லாதன் அந்தகனைப் பார்த்து, " அந்தக! அன்னையினிடம் ஆசைக் கொள்ளும் காமுகர் உலகிலுண்டோ? வேண்டாம்! இந்த துரெண்ணத்தை விடு! உமை உன் தாய்! உமாபதி உனது தந்தை! எங்ஙனமெனில்; மைந்தனில்லாமல் வருந்திய உன்தந்தை சிவனை நாடித் தவம் புரிந்தார்." சிவன் அவன் எதிரிற்றோன்றி "அஸுர! இக்குழந்தையை எடுத்துச்செல்! இது விளையாட்டாகப் பார்வதிதேவி என்கண்களை மூடியபோது இருளில் பிறந்த குழந்தை ஆதலால் தமோகுணங் கொண்டவனாக இருப்பான். இவனைக் கொல்ல எவனாலும் இயலாது. அன்னையையே இவன் பெண்டாடக் கருதும்போது யான் இவனைச் சூலத்தால் குத்திக்கொன்று நற்கதி அளிப்பேன்," என்று கூறிச் சென்றார். அன்னைப் பிதாவைத் தொடும்போது இருவர் உடலிலிருந்தும் நீ ஜநித்தாய். உலகிற்கே ஆதி தந்தைதாயான இவர்கள் உனக்கு விசேஷமாக குருவன்றோ? என்றார்.

அந்தகன், ஸுந்தனெனும் தோழனை அழைத்தான். பரமசிவனை ஜயிப்பது ஆகாத காரியம். விரைவில் அவர் என்னைக் கொன்ருல் எனது இஷ்டம் நிறைவேருதுபோகும். ஆதலின் யான் சிவவேடம் பூண்டு பார்வதியினருகே செல்கிறேன். நீ நந்தியாக என்னுடன் வா என்ருன். இருவரும் அங்ஙனமே அம்பிகை இருப்பிடம் சென்றனர். அஸுரன் அருகில் வர வர அம்பிகை அரக்கனெனக் கருதி வெள்ளை எருக்கில் புகுந்தாள். பார்வதியைக் காணுமல் வருந்தி அந்தகன் ரணகளத்திற்கு வந்தான். அச்சமயம் இந்திரன் ஜம்பன்மேல் வஜ்ராயுதத்தை பிரயோகித்தான். அது ஆயிரம் துண்டுகளாகச் சிதறி கீழே விழுந்தது. அஸுரன் அவனது ஐராவதத்தை அடித்துக் கீழே தள்ள இந்திரன் பூமியில் விழுந்தான். தேவர்கள் அவனுக்கோர் ரதமளித்து ரணகளத்திற்கு வரும்படி அழைத்தனர். சக்ரன் ஸாரதி இல்லாமல் எங்ஙனம் யுத்தம் செய்வதென்றுகூறி பூலோகம் சென்ருன்.

தன்னந்தனியே நின்று அந்தகனேடு சிவன் போர் செய்தார். உக்ரமான சூலத்தால் அந்தகன் மார்பைப் பிளந்தார். அதை அவன் மதியாமல் கதையால் ருத்ரனைத் தாக்கினுன். பகவான் தனதுசூலத்திஞல் அந்தகனைக்குத்தி கையிலேந்தி நின்ருர். அந்தகனது உடலிலிருந்து உதிரம் ஆருகப் பெருக அதை ஓர் சிவகணமருந்தியது. அந்தகணம் அங்காரம் (கட்டைத்தணல்) போலிருந்ததால் அதற்கு பகவான் அங்காரகன் எனப் பெயரிட்டார். நவ கிரஹங்களில் ஒன்ருக இருக்கும்படி அருள் செய்தார்.

தன் சூலத்திலுள்ள அந்தகனை ஆயிரமாண்டு முக்கண்ணன் மூன்ருவது கண்ணுல் கொளுத்திஞர். ரத்தம் குன்றி மாம்ஸம் உலர்ந்து அந்தகன் உடல் எலும்பும் தோலுமாக நின்றது. அவனது பாபமும் அகன்றது. அவன் பகவானது ஸ்வரூபத்தை உணர்ந்தான். தான் செய்த பாபத்தை எண்ணி வருந்திஞன். அங்கிருந்தவண்ணமே அஞ்ஜலி செய்து அரனைத் துதித்தான். அவனைக் கீழே இறக்கி தன் கையால் சூலத்திலிருந்து விடுவித்தார். அவன் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து போற்றிஞன். அவனைப் பிரிங்கிரிடர் என்ற பெயராலழைத்து ஓர் கணத்திற்குத் தலைவஞகச் செய்தார்.

துந்து பந்தநம்.

கச்யபருக்குத் துந்து என்ருேர் அஸுரன் பிறந்தான். அவன் பிரும்மனை நாடிப் பல்லாண்டு தவம் புரிந்து தேவரால் தனக்கு மரணமில்லை என வரம் பெற்ருன். துந்து இந்திரனை ஜயித்துத் தானே முவ்வுலகையும் ஆண்டு வந்தான். ஹிரண்யாக்ஷன் முதலிய பல அரக்கர்கள் துந்துவை அண்டி வாழ்ந்தனர். ஒருநாள் துந்து தம்மிடம் பயந்த தேவர் ஸத்யலோகத்தி லிருப்பதாய் தைத்யர் உரைக்க அங்குசென்று தேவரை ஜயிக்கக் கருதினுன். அஸுரர்கள் துந்துவை நோக்கி "மஹாராஜ! நாமங்கு செல்வதற்கில்லை. ஸுவர்க்கத்தி லிருந்து பல்லாயிரம் யோஜனை தூரத்தில் மஹர்லோக முளது. ஆங்குள்ள மஹரிஷிகள் அரக்கரை கண்ணுலேயே தஹித்துவிடுவர். ஆங்கிருந்து கோடி யோஜனை தூரத்தில் ஜநலோகமுளது. ஆங்கு கோமாதாக்கள் அஸுரரைக் கொன்று விடுவர். ஆங்கிருந்து முப்பதுகோடி யோஜனை தூரத்தில் ஸத்ய லோகமிருக்கிறது. அங்கு ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் வேதத்வநி நம்மைக்கொன்றுவிடும்" என்றனர். அப்படியாயின் அமரர் எங்ஙனம் அங்கு சென்றனர்? என்று சுக்ரரை அழைத்து வினவ, நூற்ருரு அச்வமேத யாகம் செய்தவர் அங்கு செல்லலாம் என்று அவர் பதில் விடுத்தார். தான் அச்வமேதங்களைச் செய்து பிரும்ம லோகம் செல்லக் கருதினுன். அவனியிற்சென்று தேவிகா நதிக்கரையில் பார்க்கவரிஷிகளை ஸதஸ்யராக வரித்தான். அஸுரர்களையே யாக தேவர்களாக நியமித்தான். அதைக் கண்டு அஞ்சி அமரர் அச்யுதனைச் சரணமடைந்தனர்.

இரண்டாவது வாமநர்.

அமரர்களைக் காப்பதாகக் கூறி பகவான் வாமநராக உருவெடுத்தார். தேவகீ ஜலத்தில் வந்துமிதந்தார். உள்ளே முழுகுவதுபோலும் வெளியில் வருவதுபோலும் யாகசாலையிலுள்ளோர் கண்களுக்குத் தோற்றினர். அநியாயமாக ஓர் அந்தணக் குழந்தை சாகிறதென்றெண்ணிக் கருணையோடு அதை வெளியில் எடுத்துப் போட்டனர். இக்குழந்தை யருகே எல்லோரும் சென்று, நீ யார்? உன் பெயர் யாது? உன்னை எவர் ஜலத்தில் தள்ளியவர்? என்று வினவினர். வாமநர் அவர்கள் கேள்விக்கு விடை

அளித்தார். "ப்ரபாஸன் என்ரோரந்தணரிருந்தார். அவர் வருண கோத்ரத்தில் பிறந்தவர். அவருக்கு இரு புதல்வருண்டு. மூத்தவன் பெயர் நேத்ரபாஸன். இளையவன் கதிபாஸன். யானே இளைய குமாரன். தந்தை பொருளை இருவரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டு மென்றேன். எனது ஸோதரன் கூன் குருடு வாமநன் நபும்ஸகன் பித்தன் குஷ்டரோகி ஆகியவர்களுக்குப் பங்கில்லை. வாமநனை உனக்கு இதில் பாகமில்லை என்ருர். யான் பாகமளிக்கும்படி வற்புறுத்தினேன். கோபங்கொண்ட மூத்தவன் என்னை நதியில் எறிந்தான். இறைவனருளால் ஓராண்டாக உயிர் நீங்காது ஜலத்தில் மிதக்கிறேன்" என்ருர். கச்யபருக்குப் புதல்வனாய் இந்திரனுக்கு ஸோதரனாய்ப் பிறந்து பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பதைக் கூறினர் வாமநர். நீங்கள் யார்? இந்திரனைப்போல் விளங்கும் இவ்வுத்தமன் யார்? என்று வினவினர். அவர்கள் தங்கள் வரலாற்றைக் கூறி துந்துவிடம் சென்று அதிதியைப் பூஜி என்றனர். அவரை அர்ச்சித்து வேண்டிய பொருளைத் தருவதாகக் கூறினன். "எனது பாதத்தையும் நன்ருக கவனித்துப் பார்த்து என் காலால் மூன்றடி மண் தந்தால் போதும் என்ருர்" வாமனர். அஸுரன் அதை அளித்தவுடன் பகவான் திரிவிக்ரமராகத் தோன்றி இரண்டடியால் உலகெலாமளந்து மூன்ருவ தடிக்கு இடமில்லையாதலால் கோபங்கொண்ட பகவான் துந்துவின் முதுகில் வேகமாக வந்து விழுந்தார். அந்த வேகத்தினல் முப்பதினுயிரம் அடி தூரம் பூமி உள்ளே சென்று த்வாரமுண்டாயிற்று. அதில் துந்துவைத் தள்ளி மணல் மழை பொழிந்தார். துந்து அதில் அமிழ்ந்து அழிய இந்திரனுக்கு ஸ்வர்க்கத்தை அளித்தார்.

நக்ஷத்ர புருஷ பூஜா.

பகவானது பாதாரவிந்தங்கள் மூலநக்ஷத்ரம், முழங்கால் ரோஹிணீ, தொடைகள் அச்விநீ, மலவழி பூராடம், ஜலவழி பூரம், இடை கிருத்திகை, இடையின் முன்புறம் அநுராதை, பின்புறம் அவிட்டம், தோள்கள் விசாகை, கைகள் ஹஸ்தம், புறங்கை புநர்வஸு, நகம் ஆச்லேஷா, கழுத்து கேட்டை, காதுகள் திருவோணம், உதடு பூசம், பற்கள் ஸ்வாதி, கன்னம் புநர்வஸு, மூக்கு மகம், கண்கள் மிருகசீர்ஷம், மயிர்கள் திருவாதிரை. இதில் கூறிய

நக்ஷத்ரம் எந்த மாத பௌர்ணமியில் வருகிறதோ அந்த மாதம் அந்த அவயவத்தை அர்ச்சித்து நியமத்துடன் பாரணை செய்யவேண்டும். இங்ஙனம் ஸகல அங்கங்களை யும் பூஜிப்போர் அழகிய ரூபத்தை அடைவர். ரம்பை இந்த பூஜையால் அழகையும், திலோத்தமை அழகிய வாக்கையும், பூரூரவஸ் அழகிய காந்தியையும் அகண்ட ராஜ்யத்தையும் அடைந்தார்கள்.

உபமன்யு.

வீதமன்யு என்ற வேதியர் தர்மசீலை என்ற பத்தினி யுடன் இல்லறத்தை இடைவிடாது அனுஷ்டித்து வந்தார். அவர்களுக்கு உபமன்யு என்றோர் குழந்தை பிறந்தான். தர்மானுஷ்டாநத்தில் ஈடுபட்டு பொருளாசை விட்டிருந்த தால் வீதமன்யுவை வறுமை வாட்டியது. அதை அவர் ஓர் குறையாக எண்ணுவதில்லை. பதியை ஒத்தே ஸதியு மிருந்தாள். பிறந்த பாலகனுக்குப் பால்வேண்டாமா? இவர்கள் பாலுக்கெங்கே செல்வார்? மாவை நீரில் கரைத்துப் பாலைப்போல் புகட்டிவந்தனர். இந்த தம்பதி கள் சிசுவுடன் வேறொரு வேதியர் வீட்டிற்குச் செல்ல வேண்டியிருந்தது. அங்கு மிக புண்யவான்களான இவர் களை நன்கு பூஜித்து உபமன்யுவுக்கு மிக ருசியாகக் காய்ச்சிய ஆவின்பாலளித்தனர். சென்றவிடத்தில் வேலை முடிந்தவுடன் வேதியர் தம்மிருப்பிடம் வந்தார். அன்றிரவு வழக்கப்படி மாவாலாகிய பால் பாலனுக் களிக்கப்பட் டது. மெய்ப்பாலின் சுவையை அறிந்த நாவு பொய்ப் பாலை ஏற்குமோ? குழந்தை அதைத் தூரே எறிந்து பாலுக் கழுதான். பெற்றோரின் வறுமையைப் பேதை பாலகனறிவ தெங்ஙனம்? என்ன ஸமாதானங் கூறியும் குழந்தை விம்மி விம்மி அழுதான். அன்னை ஆதரவுடன் குழந்தையைத் தழுவி, "கண்ணே! அழாதே! பசுபதியி னருளின்றி பால் கிடைக்குமோ? அன்னவனை அர்ச்சித் தால் பால் என்ன? அமிருதமே சுலபமாகும்!" என்றாள். இதைக் கேட்ட உபமன்யு தனக்கு அக்கணத்திலேயே அமிருதங்கிட்டியதாக எண்ணினான். அன்னையை நோக்கி, "அம்மா, பசுபதி யார்? எங்குளார்? அவரை எங்ஙனம் ஆராதிப்பது?" என்று கேட்டான். தர்மசீலை தநய னுக்கு அதை உரைக்கலானாள்.

சிவனளித்த சக்ரம்.

ஸ்ரீ தாமன் : ஸ்ரீதாமன் என்றோர் அரக்கனிருந்தான். அவன் மிக்க பலசாலி. மஹா க்ரூர குணமுள்ளவன். மூவுலகையும் பீடித்துவந்தான். ஸ்ரீவிஷ்ணுவின் ஸ்ரீவத்ஸத்தைக் கொள்ளை கொள்ளக் கருதினன். அச்யுதன் அதை அறிந்து ஹிமாலயஞ் சென்றார். தன்னைப் பரமசிவனுக எண்ணி ஆயிரமாண்டு ஒற்றைக் காலால் நின்று கடுந்தவம் புரிந்தார். ருத்ரன் அவரெதிற்றோன்றி ஸுதர்சநமெனும் சக்ரத்தைப் பகவானுக் களித்தார். அது ஸகல ஆயுதங்களையும் விட மிகச் சிறந்தது. பனிரண்டு மாதங்களும் ஆறு ருதுக்களும் அதில் ஆரக்கால்களாக அமைந்துள. சிஷ்டர்களை ரக்ஷிக்கவும் துஷ்டர்களைச் சிக்ஷிக்கவும் பகவானுக் களிக்கப்பட்டது. அதில் ஸகல தேவர்களது அம்சமும் அமைந்துளது. அது எப்போதும் வீணுகாது. இத்தகைய சிறந்த ஆயுதத்தைப் பெற்று விஷ்ணு அதன் திறமையைப் பரீக்ஷிக்கக் கருதினார். மஹேச்வரன் தன்னுடலில் சக்ராயுதத்தை விட்டு அதன் பெருமையை அறியும்படி கூறினார். அங்ஙனமே விட பகவானது உடலை மூன்றாக அது பிளந்துவிட்டது. இதைக் கண்டு நாராயணன், தனது அபசாரத்தை க்ஷமிக்கும்படி அவரடி பணிந்து போற்றினார். பிநாகி, தனக்கு என்றுமழிவில்லை; ஹிரண்யாக்ஷன், ஸுவர்ணாக்ஷன், விச்வரூபாக்ஷன் என்று தனது மூன்று மூர்த்திகள் தோன்றவே, மாதவனுக்கு இத்தகைய எண்ணம் உதித்தது என்று கூறி, ஸ்ரீ தாமனைக் கொல்லும்படி உத்திரவிட்டார். ஒப்பற்ற இச்சக்ராயுதத்தால் சக்கிரபாணி அவனது சிரத்தை அநாயாஸமாக அறுத்துத் தள்ளினார். இதைக் கேட்ட உபமன்யு பகவத் பக்தியால் மோக்ஷஸாம்ராஜ்ய மெய்தினன். அந்த இடத்தையும் ப்ரஹ்லாதன் தர்சித்து கஜேந்திரன் மோக்ஷமடைந்த விடம் சென்றான்.

விஷ்ணு ரக்ஷா.

க்ஷத்ரிய வம்சத்துதித்த ஒருவன் ஸ்வதர்மத்தைவிட்டு ஸாதுக்களை ஹிம்ஸித்துவந்தான். அவன் செய்யாத பாபமில்லை. இறந்தபின் அவன் நரகங்களை அனுபவித்து ராக்ஷஸனானன். ஒரு ஸமயம் முனிவரொருவரைப் புஜிக்க அவரருகே சென்றான். அவர் விஷ்ணுவின் மந்திரத்தைக்

கூறி தன்னருகே அவன் வரமுடியாமல் செய்தார். அவர் ஸமாதியைவிட்டு வரும்வரை காத்திருந்து தூரத்திலிருந்த படியே தனது பாபத்தை அகற்றி நற்கதி அளிக்கும்படி வேண்டினன். அவர் "தான் ராக்ஷஸர்களுக்கு உபதேசிப்ப தில்லை,' பெரியோரைச் சரணமடை" என்றார். அரக்கன் ஒரு ஸமயம் பசிமிகுதியால்; ஓர் பிரும்மசாரியைப் பிடித்துக்கொண்டான். அவன் தான் குருவிற்குக் கனிகளைக் கொடுத்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பின்னர் இவனுக்கு இறையாவதாகக் கூறினன். ராக்ஷஸன் தான் கூறியதைச் செய்வதானல் அவரை விடுவதாக உரைத்தான். அவர் ஆசார்யனுக்கும் தர்மத்திற்கும் விரோதமில்லாத எக்காரியத்தையும் செய்வதாகச் சொன்னர். தனது பாபத்தை அகற்றும்படி தைத்யன்வேண்ட பிரும்ம சாரி, தான் முக்கரணங்களாலும் ஆசார்யனுக்கு அபகாரம் செய்யாதிருந்தால் அரக்கனுக்கு அக்னி பகவான் அருள் புரியட்டும் என்றார். உடனே அக்னியின் கருத்துக்கிசைந்து ஸரஸ்வதி எதிரிற்தோன்றி விஷ்ணு ரக்ஷா மந்திரத்தைக் கூறினள். ராக்ஷஸனும் இந்த மந்திரத்தைக் கொண்டு பாபத்தை அகற்றி ஸ்வர்க்கம் சென்றான்.

கோசகார புத்ரன்: முத்கல முனிவருக்குக் கோசகாரன் என்றோர் புத்ரன் பிறந்தான். அவர் வாத்ஸ்யாயனரது புத்திரியான தர்மிஷ்டையை மணந்தார். இவர்களுக்கு ஓர் குழந்தை உண்டாயிற்று. அது அழவுமில்லை சிரிக்கவுமில்லை. அசையவுமில்லை. கண்ணைத் திறந்து பார்க்கவுமில்லை. இத்தகைய பிள்ளை இருப்பதைவிட புத்ரனில்லாமலிருப்பதே மேல் என்று தாய் கருதினள். ஆறு நாள் பொறுத்துப் பார்த்தும் அதேபோலிருந்ததால் அக்குழந்தையை வாயலில் எறிந்து விட்டாள். சூர்பாக்ஷி எனும் ராக்ஷஸி தற்செயலாக அங்கு வந்தாள். இளைத்திருக்கும் ஒரு குழந்தையை அங்கே விட்டுவிட்டு வாயலிலிருந்த அக்குழந்தையை எடுத்துச்சென்றாள். **சாலோதரம்** என்ற இடத்திலுள்ள **கடோதரன்** எனும் தன் கணவனிடம் இதை அளித்து இருவரும் இன்பமாக இதைப் புஜிக்கலாம் என்றாள். கண்ணில்லா கடோதரன் கையால் அக்குழவியைத் தொட்டுப் பார்த்து அது ஞானியான சிசுவானதால் அது தங்களைச் சபித்துவிடுமென்று கூறி வேறொரு குழந்தையை கொண்டுவரும்படிச் சொன்னன்.

இதற்குள் கோசகாரனது வீட்டு வாயலில்விட்ட ராக்ஷஸக் குழந்தை வீரிட்டு அழுதது. அதைக்கேட்ட அன்னை வாயலில் வந்து ராக்ஷஸ குழந்தையைக் கண்டாள். கணவனிடம் அதைவிரைந்து கூறினள். அவர் அதனருகே வந்து தர்ப்பையால் அதைச்சுற்றி கோடுபோட்டு ஏதோ மந்திரத்தை ஜபித்தார். இதற்குள் அந்த ராக்ஷஸி பிராம்மணக் குழந்தையைக் கொண்டுவந்து வாயலில் விட்டு அக்குழந்தை அருகேச் சென்றாள். முநிவர் செய்த மந்திர ஜபத்தால் அதைத் தொடமுடியவில்லை. முநிவர் தன் புதல்வனுக்கு நிசாகரனென்றும் ராக்ஷஸ குழந்தைக்குத் திவாகரனென்றும் நாமமிட்டார். கபிலையெனும் தேனுவின் தயிரைக் கொண்டு இரண்டு குழந்தைகளையும் வளர்த்தார். ஏழாவது வயது வந்ததும் உபநயநம் செய்து வைத்தார். வேதமும் ஓதி வைத்தார். நிசாகரன் வாயைத் திறவாதது கண்டு வருந்தினர். அந்த துக்கத்தைப் பொறுக்காது அவனை ஓர் பாழும் கிணற்றில் தள்ளி பாறையை மூடினர். அங்கு ஓர் நெல்லிமரத்தில் இனிய கனிகள் காணப்பட்டன. அதை உண்டு பத்தாண்டு நிசாகரன் ஜீவித்திருந்தான். அவனது தாய் ஒருநாள் அக்கிணற்றருகே வந்து யார் இக்கிணற்றை மூடியது? என்று தானே பேசிக் கொண்டாள். நிசாகரன், அன்னையே! தந்தையே மூடியவர் என்றான். எனது குமாரன் பேசாமடந்தை. அன்னை என்றழைக்கும் நீ யார்? என்றாள். நிசாகரன், தானே அவர் புதல்வன் என்றுரைக்க அவனைக் கணவனிடமழைத்துச் சென்றாள். இதுவரை ஊமைபோலிருந்து இப்போது பேசுங் காரணம் யாதென பெற்றோருக்குக் குழந்தை கூறுகிறான்.

விருஷாகபி என்ற தேவனுக்கு யான் புதல்வனாக இருந்தேன். என் தாய் பெயர் மாலா. ஸகல கலைகளையும் யான் கற்றுணர்ந்தேன். கர்வம் மோகமுண்டாகி விவேகமகன்றது. துராசாரங்களைக் கைக்கொண்டேன். பிறர் மனைவிகளை வசியம் செய்யப் பிறர் பொருளைக் களவாடினேன். துர்மரணத்தா லிறந்தேன். ரௌரவம் முதலிய நரகங்களில் துயருற்றேன். புலியாய்ப் பிறந்தேன். ஓர் அரசனது கண்காக்ஷி சாலைக்குக் கொண்டு சென்றான். என்னருகே அரசன் மனைவி வந்தாள். அவளைக் கண்டவுடன் எனக்குக் காமவிகாரமுண்டாயிற்று. அவள்

மேல் அன்புடன் பாய்ந்து கோரியபடி அனுபவித்துக் கொண்டிருந்தேன். அரசனது காவலாளிகள் என்னைக் கொன்றனர். பரஸ்திரீ கமந பாபத்தால் பல்லாயிரம் ஆண்டுகள் நரகயாதனையைப் பெற்றேன். ஓர் கழுதை யாகப் பிறந்தேன். கொஞ்சநாள் சென்று ஒரு மாதின் மீது விழுந்தேன். அருகிலுள்ளவர் என்னை யமனிடம் அனுப்பினர். அங்கு பல நரகங்களை அனுபவித்துக் கிளி யாகப் பிறந்தேன். சந்த்ராவளீ எனும் வைச்ய கன்யகை என்னை அன்போடு கூண்டிலடைத்து வளர்த்துவந்தாள்.

ஒரு ஸமயம் தன் தோளின்மீது அவள் என்னை வைத்து விளையாடினுள். யான் அவளது அழகிய மார்பைக் கொத்தினேன். அவள் என்னை அடிக்க, நான் ஓடினேன். ஓர் குரங்கு என்னைப் பிடித்துக் கொன்றது. யமலோகம் சென்று பல துன்பங்களை அனுபவித்து ஓர் சண்டாள னது வீட்டிலே காளையாகப் பிறந்தேன். என் மீதேறி உட்கார்ந்துகொண்டு சண்டாளனது மனைவி பாடினுள். அவளைக் கீழேதள்ளி துர்மார்க்கத்திற் காரம்பித்தேன். சண்டாளன் என்னைக் கொன்ருன். வழக்கப்படி நரக யாதனைகளைப் பெற்று உன் புத்திரனுகப் பிறந்தேன். எனது முற்பிறவிகளெல்லாம் நினைவுக்கு வந்தன. என் தந்தை தாய் என்று ஆசை கொள்வதும் இல்லறத்திலீடு படுவதும் துன்பக்கடலில் கொண்டுவிடும் என வாய் திறவாதிருந்தேன். பத்தாண்டு பாழுங் கிணற்றில் நெல் லிக்கனியை யுண்டு தவம் செய்தேன். இனி காமம் என்னை அணுகாதென்று பெரியோரை அடுத்துப் பேரின் பம் பெற ஆசைகொண்டேன். திவாகரனைக் கொண்டு புத்ர இன்பத்தைப் பெறுங்கள். பெற்றவர் மனங் குளிர் வதைவிட மற்ருேர் தவமில்லை. இத்துணைப் பிறவி எடுத் துக் காமவலையில் சிக்கிப் பட்ட துன்பம் போதும்! பதரிகாச்ரமம் செல்கிறேன்! எனக்கு விடையளியுங்கள்! என்று நிசாகரன் பெற்ருேரைப் பணிந்து சென்ருன்.

தாநம்.

பகவானை நினைத்து ஸத்பாத்ரத்தில் கோ பூமி வஸ்த் ரம் அன்னம் ஸ்வர்ணம் இவைகளை அளிப்பது சிறந்த தர்ம மாகும். மாசிமாதத்தில் திலதாநமும், விறகு தாநமும், பங் குனியில் தான்யம் கிருஷ்ணாஜிநம் வஸ்த்ரம் ஆகிய இவை

களை அளிப்பது உத்தமம். சித்திரையில் விசித்ர வஸ்த்ரமும் படுக்கை ஆஸநம் முதலியவைகளையும் அளித்தால் பகவான் சந்தோஷமடைகிறார். வையாசியில் வாஸனை வஸ்துக்களையும், ஜல பாத்ரம் தேனு விசிறி முதலியவைகளையும் அளித்தால் த்ரிவிக்ரமர் ஸந்தோஷிப்பார். ஆனியில் உப்பு நெல்லிக்கனி குடை செருப்பு முதலியவைகளை அளித்தால் வாமநர் அருள் பெருகும். ஆடியில் வெல்லம் விருஷபம் முதலியவைகளையும், ஆவணியில் பாயஸம் தேன் தயிர் முதலியவைகளையும், புரட்டாசியில் தாம்ரம் இரும்பு முதலியவைகளையும், ஐப்பசியில் வீடு குதிரை முதலியவைகளையும், கார்த்திகை மார்கழி தை மாதங்களில் அவரவருக்குப் பிரியமான பொருள்களையும் தானம் செய்தால் பரமாத்மா ஸந்தோஷமடைகிறார்.

பகவானுக்கு ஆலயம் கட்டுவதும், ஆலயத்தைப்பெருக்கி மொழுகி அலங்கரிப்பதும் உத்ஸவம் செய்துவைப்பதும், பகவானுக்குத் துவஜம் பல்லக்கு வாஹநம் முதலியவைகளைச்செய்து வைப்பதும் உத்தமமான தர்மம். இங்ஙனம் பிரஹ்லாதன் கூற பலி விந்த்யாவளியுடன் கூடி ஸகல தானங்களையும் செய்தான். பாதாளத்தில் மஹாவிஷ்ணுவுக்கோர் அழகிய ஆலயங்கட்டி அன்றன்றும் அவரை அர்ச்சித்து வந்தான். இங்ஙனம் பகவத் பக்தியிலீடுபட்டவரும் இந்த வாமநரது சரிதத்தைப் பக்தியுடன் கேட்டுத் தனது சக்திக் கேற்றபடி பௌராணிகரைப் பூஜிப்பவரும் ரோகத்திற்காளாக மாட்டார்கள்; வைகுண்டத்தில் வஸிப்பர் என்று புலஸ்த்யர் நாரதருக்குரைத்தார். அதைக் கேட்ட நாரதர் பகவானிடத்தில் அந்தரங்க பக்திகொண்டு அவர் திருநாமங்களைப் பாடிச் சென்றார். இங்ஙனம் இச் சரிதத்தைக் கேட்பவருக்கு ஸகல பாக்யமும் உண்டாகும்.

ஸ்ரீ வாமந புராணச் சுருக்கம் முற்றிற்று.

சுபம்.

கைவசமுள்ள எமது பிரசுரங்களின்

விலை விபர ஜாப்தா.

		ரூ.	அ.
	18 புராணம் 5-பாகமும் சேர்ந்து ரூ. 18.		
1.	தேவீ பாகவதம்	8	0
2.	18 புராணம் (2-ம் பாகம்)	4	0
3.	ஷை (3-ம் பாகம்)	4	0
4.	ஷை (முதல் பாகம்)	2	0
5.	லலிதோபாக்யானம்	2	8
6.	* ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாம பாஷ்யம்	2	8
7.	ஸந்த்யாவந்தனம்	1	4
8.	40 ஸம்ஸ்காரம்	1	4
9.	ஸதாசாரம்	0	10
10.	* ஆபஸ்தம்ப தர்ப்பணம் ஸ்வரத்துடன்	0	10
11.	* ஸ்ரீ புவனேச்வரீ த்ரிசதி நாமாவும் ஸ்தோத்ரமும் ...	0	8
12.	ஸ்துதி குஸுமாஞ்ஜலி 7வது பதிப்பு ..	0	4
13.	ஸ்தோத்திர சிந்தாமணி 3 ,, ,, ...	0	4
14.	துளஸீ சரிதமும்-பூஜா கல்பமும்	0	4
15.	ஸ்ரீ சிவராத்ரி பூஜையும் கதையும்	0	4
16.	ஸ்ரீ விநாயக சதுர்த்தியும் பூஜாகல்பமும்	0	4
17.	ஸ்ரீ சித்ரகுப்த, காமாக்ஷி, (காரடைநோன்பு ஸ்ரீ ராமநவமி பூஜாகல்பங்கள்	0	4
18.	ஸ்ரீவரலக்ஷ்மீ வ்ருதகதையும் பூஜாகல்பமும்	0	4
19.	வேதமும் வேதாங்கமும் 3வது பதிப்பு	0	3
20.	ஸ்ரீ சங்கர சரிதம் பூஜாகல்பத்துடன்	0	3
21.	ஸ்ரீ கோபிகா கீதமும்— ஸ்ரீபஜகோவிந்தமும் (2ம் பதிப்பு)	0	3
22.	* ஸௌபாக்ய அஷ்டோத்ர சதநாமஸ்துதி	0	3

ரூ. அ

23.	ஆதித்யஹ்ருதயமும் கனகதாராஸ்தவமும்	0	3
24.	வேங்கடேச பூஜையும், அஷ்டோத்ரமும்....	0	2
25.	ப்ரதோஷ பூஜை, கதை	0	2
26.	சங்கராந்தி பூஜையும், கோ பூஜையும்	0	2
27.	காவேரி பூஜை	0	2
28.	அஷ்டபதி தத்வார்த்த ஸாரம்	0	2
29.	ஸ்ரீ வ்யாஸ சரிதம்	0	2

கேட்லாக் புக்போஸ்ட்டுக்காக 0—1—0.

* **வைதிக தர்மவர்த்தனீ :**

(மாதப் பத்திரிகை) வருட சந்தா ரூ. 4.

* இக்குறியுள்ளவை நாகரமும், தமிழும்.

அச்சிலுள்ளவை.

1. 25 ஏகாதசி மஹிமை.
2. உபாகர்மா.
3. ஸரஸ்வதீ பூஜை.

குறிப்பு :

எல்லாவற்றிற்கும் தபால் சார்ஜ் வேறு.

சின்ன புஸ்தகத்திற்கு விலை தவிர புக்போஸ்டிற்கு 1அணா சேர்த்து ஸ்டாம்பாக அனுப்பினால் செலவு குறையும். V. P. செய்தால் அதிகம் செலவாகும். குருகுல தர்மத்திற்கே இது பயன்படுவதால் கமிஷன் கிடையாது.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா,
குருகுல ஸ்தாபகர் & பிரின்ஸிபால்,
சாந்தாச்ரமம்-குருகுலம்,
2. ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
T. நகர் போஸ்ட், சென்னை-17.

உ

ஸ்ரீ வேதவ்யாஸாய நம:

முக்ய விக்ஞாபனம்.

பல நேயர்களிடமிருந்து உப புராணங்களையும் அச்சிடும் படி தினம் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதுவும் என் கடமையே. ஆனால் அ "**புராணவாணீ**" என்ற பெயரில் 60 பக்கங்கள் ஒரு புராணமும், 4 பக்கங்கள் சில பொது விஷய முமாக 64-பக்கங்களில் தபால் வசதிக்காக ஒருவருஷ சந்தா ரூ. 6/- வைத்து, ஓராண்டு மாதப் பத்ரிகையாக நடத்தலாமா அல்லது தனி புத்தக மாக குறைந்த விலையில் போடலாமா என உத்தேசம். 800 பேர்களாவது கடிதம் எழுதி உறுதி அளித்தால் அது செலவுக்குக் கட்டிவரும். தைர்ய மாக ஆரம்பிக்கலாம் என்ற உங்கள் ஆதரவான கடிதங்களைப் பார்த்தே ஆரம்பிக்க வேண்டும். விருப்பமுள்ளோர் உடனே கீழ்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

குறிப்பு: வைதிக தர்மவர்த்தனீ தொடர்ந்து நடக்கும். அதற்கும் இதற்கும் யாதொரு ஸம்மந்தமுமில்லை.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவசர்மா,
18 புராண ஆசிரியர்,
2, ஸ்டேஷன் ரோடு, மேல்மாம்பலம்,
தி. நகர் P. O., சென்னை-17.

Printed at the "Sri Meenakshi Press," Sirkali.